வெளியீடு: 21-04-2008

Issued: 21-04-2008

1281
24.03.2008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 24, 2008—தொகுதி 39—எண் 1

Thursday, the 24th January, 2008—Volume 39—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai-600 009

V24, 31 P08
PCR.39.1.
228074.

[Price Rs. 3.00

**24–1–2008**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. | **இரங்கற் குறிப்புகள்—** | |
| | முன்னாள் உறுப்பினர்கள் மறைவு | 1-2 |
| 2. | **வினாக்கள்–விடைகள்—** | |
| | (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-40 |
| | (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 முதல் 6 வரை) | 41-431 |
| 3. | **அறிவிப்பு—** | |
| | அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு | 432 |
| 4. | **அறிக்கைகள் அளித்தல்—** | |
| | மனுக்கள் குழு | 432-433 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—** | 433-526 |
| *மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி | 433-445 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 445-450, 456-460 |
| *திரு. வை. சிவபுண்ணியம் | 460-471, 473-474 |
| திரு. சி. ஞானசேகரன் | 474-485, 487-490 |
| *திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் | 491-500 |
| செல்வி கே. பாலபாரதி | 500-507 |
| திரு. டி. செங்குட்டுவன் | 507-510, 513-515 |
| *திரு. வி.பி. கலைராஜன் | 516-526 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 526-531 |




**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control.

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

| | | |
|---|---|---|
| **18. Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| **19. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| **20. Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| **21. Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| **23. Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| **24. Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| **25. Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| **26. Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| **27. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| **28. Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **29. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| **30. Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| **31. Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## செயலாளர்

*திரு. மா. செல்வராஜ்*

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |

| | |
|---|---|
| செல்வி எஸ். பிலோமினா, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி—I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)
155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)
156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்
157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்
180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்—I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமச்சந்திரன், திரு. கா. - கடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. க.சி.க. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்—2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, தை 10

## 2008 ஜனவரி 24, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர்"*

ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.

### 1. இரங்கற் குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கு. தனுக்கோடித் தேவர் அவர்கள் 28-10-2007 அன்றும், திரு. கே. வேல்சாமி அவர்கள் 7-11-2007 அன்றும், திரு. டி.கே. கபாலி அவர்கள் 18-12-2007 அன்றும் மற்றும் திரு. சோ. இராசாராமன் அவர்கள் 17-1-2008 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. தனுக்கோடித் தேவர் அவர்கள் முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. வேல்சாமி அவர்கள் நாமக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1996 முதல் 2001 வரை பாராட்டத்தக்க முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. [illegible] அவர்கள் இரண்டு முறை மைலாப்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1977 முதல் 1980 வரை மற்றும் 1980 முதல் 1984 வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. சோ. இராசாராமன் அவர்கள் மூன்று முறை பாபநாசம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை, 1985 முதல் 1988 வரை மற்றும் 1991 முதல் 1996 வரை சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மறைந்த உறுப்பினர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள், வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



### தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***17591—திரு. ஞா. செந்தமிழன்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்கான பணிகளுக்குத் தடையில்லாச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு ஏற்படும்



காலதாமதத்தினால், புதிதாகத் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் தொடங்க முதலீட்டாளர்கள் முன்வருவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்திட கூடுதல் தரைதள அட்டவணைக்கு (Relaxation in Additional Floor Space Index) மறுப்பின்மைச் சான்றிதழ் (N.O.C) எல்காட் நிறுவனம் வழங்கி வருகிறது. இச்சான்றிதழ் வழங்க, கட்டுமான நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பம் பெற்றவுடன் 10–15 தினங்களுக்குள் எல்காட் நிறுவனத்தால் மறுப்பின்மைச் சான்றிதழ்கள் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே Single Window System மூலமாக ELCOT வாயிலாக I.T. Park சுமார் 2 கோடி சதுர அடி அளவில் கட்டடங்கள் கட்டப்பட்டு பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் இந்த அரசு வந்தபின் எத்தனை சதுர அடிகள் தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்காகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன; எத்தனை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பதனைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த ஆட்சி வந்து 1½ ஆண்டு காலத்தில்—மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள கேள்விக்கு அளிக்கின்ற விளக்கமாக—99 கம்பெனிகள் 3 கோடியே 42 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட அளவுக்குக் கட்டப்பட்டு உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், அவர்கள் குறிப்பிட்ட கடந்த ஆட்சியில் 3½ ஆண்டு காலத்தில் 107 N.O.C. 2 கோடியே 66 இலட்சம் சதுர

[2008 ஜனவரி 24

அடிக்குக் கொடுக்கப்பட்டது. இந்த ஆட்சியில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 3 கோடியே 42 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடிக்கு மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுப்பின்மைச் சான்றிதழ் வழங்குவது பற்றிக் கேட்கவில்லை. எத்தனை சதுர அடி நிலங்களில் கட்டப்பட்டுள்ளது? எத்தனை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழன், உங்கள் மூலக் கேள்விக்கு இது சம்பந்தம் இல்லை. நீங்கள் No Objection Certificate சம்பந்தமாகத்தான் கேட்டிருக்கிறீர்கள்.

**திரு. ஞா. செந்தமிழன்:** அதனுடைய துணைக் கேள்விதான் இது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் நீங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மூலக் கேள்விக்குத் தொடர்புள்ளதுதான் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை நீங்கள் கேட்பது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டுகின்ற வகையிலே மென்பொருள் ஏற்றுமதியிலே தமிழ்நாடு முதலிடத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு நல்ல செய்தியை நாம் தொடர்ந்து கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சூழ்நிலையில் தற்போது மிகப் பெரிய அளவிலே வெளிநாட்டிலிருந்து நமது நாட்டிற்கு தகவல் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட தொழிலைத் தொடங்குவதற்காக பல்வேறு பெரிய பன்னாட்டுக் குழுமங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே இந்தத் தடையில்லாச் சான்றிதழ் வேகமாக வழங்கப்படுகிறது என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை



2008 ஜனவரி 24]

என்று சொன்னாலும்கூட, தற்பொழுது அந்தக் கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதற்காக Infrastructure Development Fund என்கிற பெயரிலே ஒரு சதுர அடிக்கு 100 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு I.T. பார்க் கட்டடம் என்பது 3 இலட்சம், 4 இலட்சம் சதுர அடிகள் வருகின்றன. எனவே, ஒரு சதுர அடிக்கு 100 ரூபாய் அந்த Infrastructure Development Fund என்று வைத்தால், இரண்டு இலட்சம் சதுர அடியிலே அல்லது 3 இலட்சம் சதுர அடியிலே ஒரு கட்டடம் கட்டப்பட்டால், 3 கோடி ரூபாய் உடனடியாக அந்தக் கட்டடத்திற்கு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னாலேயே அந்தப் பணத்தை upfront charges-ஐக் கட்டினால்தான் அனுமதி என்கிற சூழ்நிலையிலே, அந்தக் கட்டடத்தினுடைய rate per sq.ft. —அதாவது ஏற்கெனவே நிலத்தின் விலை அந்தப் பகுதியிலே பல மடங்கு உயர்ந்து இருக்கிறது. கட்டட கட்டுமானப் பொருட்களின் விலை மூன்று மடங்கு, நான்கு மடங்கு உயர்ந்து இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சுமைகளுக்கு அதிகமாக இன்னும் சதுர அடிக்கு 100 ரூபாய் என்று சொல்லி ஒரு இலட்சம், 2 இலட்சம் sq.ft.—க்கு 2 கோடி, 3 கோடி ரூபாய் சுமத்துகின்றபோது வாடகை மிக அதிகமாக வருகின்ற காரணத்தினால் அநேக I.T. கம்பெனிகள் இங்கே வருவதற்கு தயங்குகின்றன என்கிற தகவல் வந்திருக்கிறது.

அதைப்போல SIPCOT பகுதியிலே I.T. Industry –க்கான கட்டடங்கள் கட்டுகின்றபோது புதியதாக N.O.C. charges என்கிற பெயரிலே அவர்களும் ஒரு பெரிய கட்டணத்தை வசூலிக்கிறார்கள். இப்படி எல்லாக் கட்டணங்களும், வசூலிக்கப்படுகின்றபோது இந்தக் கட்டணங்கள் முழுவதுமே அனுமதி வழங்குவதற்கு முன்னாலேயே கட்டவேண்டும் என்று அரசு நிர்ப்பந்திப்பதால் அந்தக் கட்டடத்தைக் கட்டுகின்றவர்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றார்கள். எனவே, அந்தக் கட்டணத்தை வசூலிக்கின்றபோதுகூட, முதலில் plan approval சமயத்திலே 10 விழுக்காடு அல்லது completion certificate கொடுக்கின்றபோது பாக்கி கட்டணம் என்கிற பெயரிலே அந்தச் சுமையைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா; Infrastructure கட்டணத்தையும் 100 ரூபாய் என்பதைக் குறைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டடம், கட்டணம் இவைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுபற்றிய மனு ஏற்கெனவே எனக்கு வரப்பெற்று அதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அவர்களிடத்திலே கூறியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால தி.மு.க. ஆட்சியில் தகவல் தொழில்நுட்பத் துறை முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** கடந்த காலத்தில் தகவல் தொழில்நுட்பத்திற்கு என்று தலைமைச் செயலகத்தில் தனியே ஒரு துறையே உருவாக்கப்பட்டது. முதலமைச்சருடைய தலைமையில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு பணி முனைப்புக் குழு—I.T. Task Force — ஒன்று உருவாக்கப்பட்டது. அரசுத் துறைகளை கம்ப்யூட்டர் மயமாக்கவும், பள்ளிக் கல்வியிலே தகவல் தொழில்நுட்பத்தை இணைக்கவும், தமிழ் மென்பொருளை உருவாக்கவும், டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலே குழு ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலில் தகவல் தொழில்நுட்பக் கொள்கை தமிழகத்திலேதான் வகுத்து அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 340 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 இலட்சம் சதுர அடி பரப்பளவு கொண்டதாக சென்னை தரமணியில் முதல் டைடல் பூங்கா உருவாக்கப்பட்டு அதன் திறப்பு விழாவும் நடைபெற்றது. சிறுசேரியில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மிகப் பெரிய வன்பொருள் மற்றும் மென்பொருள் வளர்ச்சிக்கு பன்னாட்டுத் தரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா உருவாக்கப்பட்டது. பூமிக்கு அடியில் Optic Fibre Cable பதித்திட தனிக் கொள்கை வகுத்துச் செயல்படுத்திய முதல் மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் தி.மு.க. ஆட்சியில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கவை. 'தமிழ்நெட் 1999' என்ற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்கு மாநாட்டை அப்பொழுது மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறனுடைய பெரு முயற்சியோடு சென்னையிலே நடத்தி, அந்த மாநாட்டில் ஒருமனதாக மேற்கொண்ட முடிவின்படி தமிழ்





விசைப்பலகையும், தமிழ்க் குறியீடுகளும் தரப்படுத்தப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்டன. உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் திரு. வ.செ. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் "1,200" மேல்நிலைப் பள்ளிகளிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப் பாடமாக வழங்கும் திட்டம் 182 கோடி ரூபாய் செலவில் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில்நுட்பப் பூங்கா மதுரையில் அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. நன்றி. இதனுடைய அடிப்படைப் பணிகள் நிறைவுபெற்று எப்போது பூங்கா இயங்கத் துவங்கும்; எப்போது மணம் பரப்பும் என்பதை மாண்புமிகு முதல்வர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்தப் பூங்காவை உருவாக்க முனைந்திருப்போர்கள் அதன் அடிக்கல் நாட்டுவிழாவுக்காக என்னிடத்திலே தேதி கேட்டிருக்கின்றார்கள். விரைவில் அளிக்கப்பட்டு அந்த அடிக்கல் நாட்டுவிழா ஆரம்பமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

## மின் உற்பத்தி

***2600—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீர், அனல், அணு மின்சாரம் தவிர பிற வழிகளில் மின்சாரம் தயாரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மின் சக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய மரபு சாரா எரிசக்திகளான காற்று சக்தி, சூரிய வெப்ப சக்தி, கரும்புச் சக்கைமூலம் மின் உற்பத்தி, தாவரக் கழிவுகள் மூலம் மின் உற்பத்தி போன்றவற்றின்மூலம் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. 31-3-2006 வரை காற்றாலைகள் மூலம் 2,898 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இன்று 3,676 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய வெளிச்சத்தின் மூலம் 3,387 தெரு விளக்குகளும், 551 வீட்டு விளக்குகளும் தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்துகளில் அமைக்கப்பட்டுள்ளன. கரும்புச் சக்கை மூலம் 315 மெகாவாட் அளவிற்கு இணை மின் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தாவரக் கழிவுகள் மூலம் 37.5 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தற்பொழுது கடுமையான மின் தட்டுப்பாட்டை எதிர்கொண்டிருக்கிற இந்த வேளையில், கடலோரம் காற்று அதிகம் உள்ள பகுதிகளிலும், மலைப் பிரதேசங்களில் காற்று அதிகம் உள்ள பகுதிகளிலும் காற்றாலைமூலம் மின்சாரம் தயாரிக்க ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் காற்றாலைகள்மூலம் மின் உற்பத்தி செய்வதற்காக இடங்கள் தேர்வு செய்யப்பட்டு 5,500 மெகாவாட் அளவிற்கு காற்றாலைகள்மூலம் மின் உற்பத்தி செய்ய முடியும் என்று இலாகா ஆய்வு செய்து வைத்திருக்கிறது. ஆனால், இன்றுவரையிலே 3,676 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இதிலே, ஒரே ஒரு சிக்கல் என்னவென்றால், இந்தக் காற்றாலைகள் வருடத்திலே 8 மாதங்கள்தான் காற்று வீசுகின்ற நேரத்திலே மின்சாரத்தை



2008 ஜனவரி 24]

உற்பத்தி செய்கின்றன. மீதி 4 மாதம் காற்று வீசாத நேரத்திலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதில்லை. அதனால்தான் தமிழ்நாட்டிலே இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து நான்கு மாதங்களாக காற்று வீசாமல் 1,500 மெகாவாட் மின்சாரமும் பற்றாக்குறை ஏற்பட்டது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லி சென்று அங்கே பிரதமரிடத்திலேயும், அன்னை சோனியா காந்தி அவர்களிடத்திலேயும் பேசி நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுவந்த காரணத்தினாலே இன்று தமிழகம் ஓரளவுக்கு மின்சாரப் பற்றாக்குறையைச் சமாளித்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவிக்கிற அதேவேளையில், சோலார் மின் விளக்கு பேட்டரி தகட்டின் விலை அதிகம் உள்ளதாகக் கூறப்படுகிறது. மின் தட்டுப்பாட்டைக் குறைக்க, மின் தகட்டின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மின் தட்டுப்பாட்டைக் குறைப்பதற்காக ஏற்கெனவே நெய்வேலியிலிருந்து நமக்குக் கிடைத்துக் கொண்டிருந்த மின்சாரத்தை முழுமையாக அளிக்க வேண்டுமென்றும், மத்திய தொகுப்பிலிருந்து நமக்குக் கிடைத்துக்கொண்டிருந்த மின்சாரத்திலே 350 மெகாவாட் மின்சாரம் இப்பொழுது பற்றாக்குறை இருக்கிறது. அதையும் இந்தக் கோடைகாலத்திலே வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கின்றோம். மத்திய அரசில் ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மின்சாரம் கிடைத்தவுடன் கோடைகாலத்திலே மின்சாரத் தடை இல்லாமல் இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் வரக்கூடிய மின் தேவையைப் பூர்த்தி

[2008 ஜனவரி 24

செய்யும் விதம் பல்வேறு திட்டங்களை மின் துறை அமைச்சர் அவர்கள் தீட்டி வருகிறார்கள் என்ற செய்தியினைச் செய்தித்தாள்களிலே பார்த்தோம். இப்போது தமிழ்நாடு மின்சார வாரியம் generation— உற்பத்தி செய்வதும், transmission என்று சொல்லப்படுகின்ற மின்கடவு என்பதையும், distribution என்று சொல்லப்படுகின்ற பகிர்மானத்தையும் maintenance என்று சொல்லக்கூடிய கையாளுவதையும் ஒருங்கே இணைத்துக் கையாண்டு கொண்டிருக்கிறது. அதனால், வரும் ஆண்டுகளிலே transmission மட்டும் தனியாக நிறுவப்பட்டு line loss என்று சொல்லப்படுகின்ற மின் இழப்பை ஈடு செய்யும்வண்ணம் தனியாக ஒரு துறை உருவாக்கப்படும் என்று மின் துறை அமைச்சர் அவர்கள் செய்தித்தாள்வாயிலாக அறிவித்திருக்கின்றார்கள். அந்த அறிவிப்பு எப்போது நடைமுறைக்கு வரும்' அதன்மூலமாக நம்முடைய மாநில மக்களுக்கு வரும் நன்மை என்ன என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கின்ற நேரத்திலே, ஏதோ நான் மின்சார உற்பத்தியிலே அதிகமாகக் கவனம் செலுத்தி வருவதாகச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மேட்டூரிலே 500 மெகாவாட் மின்சாரம் புதிதாக உற்பத்தி செய்யவும், வட சென்னையிலே 500 மெகாவாட் அதிகமாக மின் உற்பத்தி செய்யவும், உடன்குடியிலே 1,600 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும், தூத்துக்குடியிலே 1,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் திட்டங்களை அறிவித்தார்கள்.

வட சென்னையிலே 4 தினங்களுக்கு முன்னால் BHEL நிறுவனத்தின்மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9–50

அதைப்போலவே BHEL நிறுவனம் உடன்குடியிலேயும் 1,200 மெகாவாட் மின் உற்பத்தியை இன்னும் ஓரிரு மாதங்களிலே தொடங்க இருக்கிறார்கள். நம்முடைய நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தூத்துக்குடியிலே 1,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய



2008 ஜனவரி 24]

இருக்கிறார்கள். இப்படித் தமிழ்நாட்டிலேயே அரசாங்கம் அறிவித்த திட்டங்கள் தவிர, எதிர்காலத்திலே இந்தியாவினுடைய நன்மையைக் கருதி — நம்முடைய இந்தியாவினுடைய பிரதமர் மாண்புமிகு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் முதலமைச்சர் மாநாட்டிலே பேசுகின்ற நேரத்தில், 'இந்தியாவிலே 11–வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு ஒரு இலட்சம் மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறை ஏற்படும்; மத்திய அரசாங்கத்திலேயும் பணம் இல்லை, மாநில அரசுகளிடத்திலேயும் பணம் இல்லை, எனவே, தனியார்மூலமாக Merchant Power Project–ஐ ஊக்குவியுங்கள்' என்று அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே — நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே இதுவரையிலே வந்திருக்கின்ற விண்ணப்பங்களில் 18,000 மெகாவாட் மின்சாரம் தனியார்மூலமாக Merchant Power Project என்ற அடிப்படையில் மின்சார உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு மின்சாரத்தையும் நாம் உற்பத்தி செய்தால், இந்த மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு போகத் தேவையான grid facilities இப்போது நம்மிடத்திலே இல்லை. Transmission line நம்மிடத்திலே இல்லை. அதற்காகத்தான் இந்த மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு போவதற்காக நம்முடைய நிதித் துறைச் செயலாளரிடத்திலேயும், மின்சார வாரிய அதிகாரிகளிடத்திலேயும் கலந்து பேசி Transmission Corporation ஒன்றை உருவாக்கி அதன்மூலம் இந்த மின்சாரத்தை மற்ற மாநிலங்களுக்கு விநியோகிக்க முடியுமா என்பதைப்பற்றிப் பரிசீலித்து வருகிறோம். அப்படி இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் 25,000 கோடி ரூபாய் நமக்குத் தேவைப்படுகிறது. அந்த கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டால் தனியார் அதிலே முதலீடு செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு பெங்களூர் வரையிலே இருக்கக்கூடிய Southern Grid–லே போய் அந்த மின்சாரத்தை இணைப்பதற்கு நமக்கு வாய்ப்பு ஏற்படும். அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரிவாக இங்கே விளக்கம் அளித்தார்கள். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தோடு இணைந்து

[2008 ஜனவரி 24

பக்கத்திலேயே நிலக்கரி எடுப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. அதுபோலவே திருவாரூர் மாவட்டம் எங்களது மன்னார்குடி பகுதியிலே தரமான நிலக்கரி படிவம் இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி நிலக்கரி படிவங்கள் எடுப்பதன்மூலமாக மின்சார உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதை எடுப்பதற்கான முயற்சிகளைப் பற்றி இந்த அரசு ஏதாவது முயற்சிகள் எடுத்திருக்கிறதா?

அதைப்போல எங்களது ஒன்றுபட்ட தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் அதிகமாக எரிவாயு கிடைக்கிறது, எண்ணெய் எரிவாயுக் கழகத்தின்மூலமாக. அதிலேயும் மின் உற்பத்தி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றாலும், கூடுதலாக மின் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்புகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த எரிவாயுமூலமாகவும் மின் உற்பத்தி செய்வதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஜெயங்கொண்டம் பகுதியிலே இருக்கக்கூடிய நிலக்கரியை எடுத்து மின்சார உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளிலே மின்சார வாரியமும், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனும் இணைந்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல நாகப்பட்டினம் மாவட்டத்திலே எரிவாயு இருக்கிறது என்பதை ஏற்கெனவே கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசாங்கம் ONGC மூலமாக அந்த எரிவாயுவை எடுப்பதிலே காலதாமதம் செய்து வருகிறார்கள். மூன்று மாதங்களுக்கு முன்னாலே முதலமைச்சரோடு டெல்லிக்குச் சென்றிருந்தபோது நம்முடைய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து இந்த ONGC மூலமாக நாகப்பட்டினம் மாவட்டத்திலே மட்டுமல்ல, காவிரி டெல்டா பகுதிகளிலே நமக்குத் தேவையான அளவிற்கு எரிவாயு இருக்கிறது என்ற விவரம் கிடைத்திருக்கின்ற காரணத்தினாலே அங்கேயெல்லாம் எரிவாயுவை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். மாண்புமிகு மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர் மின்சாரம், அனல் மின்சாரம், அணு மின்சாரம், காற்றாலை மின்சாரம் போன்ற பல்வகைகளிலே நம்முடைய மின்சாரத் தேவையை ஈடுசெய்தாலும்கூட, Tamil Nadu Energy Development Ageny மூலமாக—மரபுசாரா எரிசக்திக்கு அதிமுக்கியத்துவத்தை நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். அந்த அடிப்படையிலே தாவரக் கழிவுகள்மூலமும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டது. என்னுடைய கேள்வி, அப்படி மிகக் குறைந்த உற்பத்தி செலவிலே, தாவரக் கழிவுகள் மற்றும் குப்பைகள்மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரம்—ஒவ்வொரு மாநகராட்சிப் பகுதிகளிலிருந்தும், நகராட்சிப் பகுதிகளிலிருந்தும் வருகின்ற குப்பைகள் மற்றும் தாவரக் கழிவுகளையெல்லாம் சேகரித்து, அதன்மூலம் மின் உற்பத்தியை நாம் தொடங்கினால், நிச்சயமாக வேலைவாய்ப்புகளும் பெருகுகின்ற ஒரு நிலைமை ஏற்படும்; குறைந்த விலையிலே மின்சார வாரியத்திற்கு மின்சாரம் கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையும் ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளிலிருந்து பெறப்படுகின்ற தாவரக் கழிவுகள் மற்றும் குப்பைகளிலிருந்து மரபு சாரா எரிசக்தியை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் *9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, நம்முடைய T.E.D.A. மூலமாக ஏற்கெனவே தாவரங்களிலிருந்து மின்சாரம் எடுப்பதற்காக, 13 இடங்களிலே சுமார் 135 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம். ஆனால், அவர்களுக்கு இயற்கைத் தாவரங்கள் ஆண்டு முழுவதும் கிடைப்பதில்லை. அதனாலே, பாதி அளவிற்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்கிறார்கள். நேற்றையதினம் T.E.D.A. Chairman அவர்களை அழைத்து, மீதி நேரத்திலே இயற்கைத் தாவரங்கள் கிடைக்காவிட்டால், நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அவர்களை ஊக்குவியுங்கள் என்று

சொல்லியிருக்கின்றோம். அதைப்போல, நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரோடும் கலந்துபேசி, நம்முடைய முதலமைச்சருடைய அனுமதியைப் பெற்று, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அனைத்து கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்மூலமாக, Co-generation மூலமாக, ஏறக்குறைய 9,000 கோடி ரூபாய் செலவிலே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான திட்டமும் தீட்டப்பட்டு, மின்சார இலாகா அந்த நடவடிக்கையிலே ஈடுபட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மின்சாரத் தேவை என்பது, ஆண்டிற்கு பத்திலிருந்து பதினைந்து சதமானம் அதிகரித்துக் கொண்டிருக்கிற சூழலில், கடந்த பல ஆண்டு காலமாக இந்தத் தேவையை ஈடுசெய்கிற அளவிற்கு, புதிய மின் உற்பத்தித் திட்டங்கள் போதுமான அளவிற்குத் தொடங்கப்படாத காரணத்தினாலேயே, இன்றைக்குத் தமிழகம் இந்தக் கடும் மின்வெட்டைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே இந்தப் பின்னணியில், கடந்த ஆண்டு பட்ஜெட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேநேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியார் நிறுவனங்கள்மூலமாக மின்சார உற்பத்திக்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற செய்தி பத்திரிகைகளிலேயும் ஏற்கெனவே வந்துகொண்டிருக்கிறது. மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய தனியார்கள், ஒரு யூனிட் மின்சாரத்தை சற்றேறக்குறைய 6 ரூபாயிலிருந்து 7½ ரூபாய் வரையில் நமக்கு விற்பனை செய்வதாகவும் செய்திகள் வருகின்றன. ஆகவே, அவ்வளவு அதிகத் தொகை கொடுத்து மின்சாரத்தை வாங்கி, 4 ரூபாய், 4½ ரூபாய்க்கு நம்முடைய மின்சார வாரியம் விநியோகிக்குமானால், நம்முடைய மின்சார வாரியம் தொடர்ந்து செயலாற்ற இயலுமா என்ற ஒரு கேள்வி அதோடு இணைகிறது. ஏற்கெனவே மகாராஷ்டிரா மாநில அரசு மின்சார வாரியம் தனியாருக்குக் கொடுத்து, அந்தத் திட்டம் தோல்வியில் முடிந்திருப்பதையும் நாம் அறிவோம். ஆகவே, தனியார்மூலம் உற்பத்தி செய்வதைத் தவிர்த்து, அரசாங்கமே இந்த மின் திட்டங்களை உருவாக்கி, மின் உற்பத்தியை அதிகரிக்க முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, தனியார்மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற நேரத்திலே, 6 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். 1996 ஆம் ஆண்டு நாப்தாவை அடிப்படையாகக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு இரண்டு நிறுவனங்கள் முன்வந்தன; ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனம் மற்றும் பிள்ளைபெருமாநல்லூரிலுள்ள நிறுவனம் ஆகிய இரண்டு நிறுவனங்கள் முன்வந்தன. அப்பொழுது ஒரு டன் நாப்தாவினுடைய விலை ஐயாயிரம் ரூபாயாக இருந்தது. ஆனால் இப்போது, ஒரு டன் நாப்தாவினுடைய விலை 45,000 ரூபாயாக உயர்ந்துவிட்ட காரணத்தால், எரிபொருள் எப்போதெல்லாம் விலை ஏறுகிறதோ, அதற்கேற்றாற்போல் மின் கட்டணத்தையும் உயர்த்தித்தர வேண்டுமென்று P.P.A. ஒப்பந்தம் செய்த நேரத்திலே கையெழுத்திட்டிருக்கின்றோம். இது மத்திய அரசாங்கத்தினுடைய ஆணை. எனவேதான், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

அதைக் கருத்திலேகொண்டு, இப்போது பிள்ளைபெருமாநல்லூரில் இருக்கக்கூடிய தனியார் நிறுவனம், நாங்கள் எரிவாயுவிற்குப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கான அனுமதி இந்த அரசாங்கத்தாலே வழங்கப்பட்டிருக்கிறது. அதனாலே இரண்டு ரூபாய், நாற்பது காசுக்கு எதிர்காலத்திலே அவர்கள் மின்சாரத்தை வழங்குவார்கள். அதைப்போல, ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தையும் மாற்றிக்கொள்ளச் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது நாம் அனுமதித்திருக்கின்ற Merchant Power Project என்பது, அப்படி 6 ரூபாய், 7 ரூபாய் கொடுத்து மின்சாரம் வாங்கக்கூடிய அளவிலே நாங்கள் அனுமதி தரவில்லை.

எந்தக் காரணத்தைக் கொண்டும் ஒரு யூனிட் மின்சாரம் இரண்டு ரூபாய் ஐம்பது காசுக்கு மேலே மின்சார இலாகாவிற்குக் கொடுக்கக்கூடாது; நீங்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடிய நிலக்கரியை அடிப்படையாக வைத்துத்தான் செய்ய வேண்டும் என்றெல்லாம் நிபந்தனைகள் போட்டு அவர்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்ற காரணத்தினாலே அப்படி அவர்கள் உற்பத்தி செய்கின்ற மின்சாரம் இரண்டு ரூபாய் ஐம்பது காசுக்கு மேலே போகாது. அதற்கான உத்தரவாதத்தை இந்த அரசாங்கம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஜனவரி 24

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின் பற்றாக்குறையைத் தீர்க்கும் வண்ணம் தமிழகத்தில் கூடங்குளத்தில் அணு மின் திட்டத்தின்மூலம் இரண்டு உலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு அது மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று ஏற்கெனவே அறிவித்தார்கள். பின்னர் 13,500 கோடி ரூபாய் செலவிலான அந்தத் திட்டம், 2008 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் டில்லிக்குச் சென்றபோதுகூட மாண்புமிகு பாரதப் பிரதமரைச் சந்தித்து இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டதை நான் நினைவுபடுத்தி, இப்பொழுது பரவலாகக் கேள்விப்படுவதெல்லாம் —1976 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகள்மூலம் International Atomic Energy Association அதாவது அந்தத் திட்டமானது—(மணியடிக்கப்பெற்றது) அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட அந்தத் திட்டத்தில் இந்தியா கையெழுத்திடாத காரணத்தினால், அந்தத் திட்டத்திற்கான உபகரணங்களோ அல்லது அதற்குத் தேவையான மூலப் பொருள்களோ வருவதில் தாமதம் ஏற்பட்டு 2010 ஆம் ஆண்டில்தான் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்றும், இன்னும் அதற்குப் பின்னால்கூட தொடங்கப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கின்றது, எப்பொழுது அது மின் உற்பத்தியைத் தொடங்கும் என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் செய்துகொண்ட அணு ஒப்பந்தத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லை. கூடங்குளத்திலே நாம் 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளித்தது ரஷியா அரசாங்கத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தம். அந்த ரஷியா அரசாங்கத்தினுடைய அதிபர் திரு. புதின் அவர்கள் ஆறு மாதத்திற்கு முன்னாலே நம்முடைய பிரதமரைச் சந்தித்து ஏற்கெனவே 2,000 மெகாவாட் மின்சாரம் கூடங்குளத்திலே உற்பத்தி செய்வதற்கு நாங்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துகொண்டிருக்கின்றோம். அந்த மின்சாரம் 2008 ஆம் ஆண்டு



2008 ஜனவரி 24]

டிசம்பர் அல்லது 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள்ளாகக் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்கிறோம். இப்பொழுது மேலும் ஒரு 4,000 மெகாவாட் மின்சாரம் ரஷியா அரசாங்கத்தின்மூலமாக அதே கூடங்குளம் பகுதியில் உற்பத்தி செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று பிரதமரைக் கேட்டார்கள். பிரதமரும் அதற்கு ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

***14090—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியில் காவிரி நீரை நம்பித்தான் வேளாண்மை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கீழ் ஊற்று உப்பு நீராக இருக்கின்ற காரணத்தினாலே இந்த ஒருபோக சாகுபடியைத் தவிர மாற்றுச் சாகுபடி செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, ஆடுதுறையில் இருப்பதைப்போல, வேப்பங்குளத்தில் ஆராய்ச்சி நிலையம்

[2008 ஜனவரி 24

இருப்பதைப்போல, திருத்துறைப்பூண்டி பகுதியிலும் கோடை காலங்களில் என்ன சாகுபடி செய்யலாம் என்பதைக் கண்டறிய ஒரு மண் ஆராய்ச்சி நிலையம் அமைக்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையமும், பட்டுக்கோட்டையில் ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையமும், காட்டுத்தோட்டத்தில் மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையமும், தஞ்சாவூர் மாவட்டம் வேப்பங்குளத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையமும், திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் ஒரு வேளாண்மை அறிவியல் நிலையமும், நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கலில் ஒரு வேளாண்மை அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஆராய்ச்சி நிலையங்களும், அறிவியல் நிலையங்களும் காவிரி பாசனப் பகுதி விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்பங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் மற்றும் தேவையான பயிற்சிகளையும் கொடுத்து வருகின்றன. திருத்துறைப்பூண்டி தொகுதிக்குட்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் பயிற்சிகள் திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையம்மூலம் வழங்கப்படுகின்றன. அந்தப் பகுதி விவசாயிகள் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

முற்பகல் *10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் அரசு வேளாண்மைத் துறையைச் சார்ந்த மூன்று விதைப் பண்ணைகள் இருக்கின்றன. கீராந்தி, நெடும்பளம், திருமால்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் திருத்துறைப்பூண்டி தொகுதி நெடும்பளத்தில் இந்த மண் பரிசோதனை நிலையத்தை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, அரசின் பரிசீலனையில் இல்லை. தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்தால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய போளூர் தொகுதியானது முழுக்க முழுக்க நூறு சதவிகிதமும் விவசாயிகள் நிறைந்த தொகுதி. அந்தத் தொகுதியிலே நீங்கள் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தந்தால் கடந்த காலத்திலே பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகள் அங்கே புனர்வாழ்வு பெறும் நிலை ஏற்படும். அந்தப் பகுதி விவசாய மக்கள் நெல்லையும், கரும்பையும் நம்பியே இருக்கிறார்கள். எனவே, அந்த விவசாயிகள் நலம்பெற வேண்டுமென்றால், அவர்களுடைய வாழ்வு ஒளிபெற வேண்டுமென்றால், அங்கே ஒரு வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தரவேண்டுமென்று தங்கள்வாயிலாக மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி திருத்துறைப்பூண்டியைப் பற்றிய கேள்வி. இருந்தாலும், அவருடைய இந்தக் கேள்வியைப் பயன்படுத்தி அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 5, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**5—**

## சொகுசுப் பேருந்து

***32813—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலையிலிருந்து சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட்மூலமாக தடம் எண் 469-ல் உடுமலையிலிருந்து சென்னைக்கு தினசரி இரண்டு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இரண்டு நடைகள்வீதம் இயக்கி வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் இரண்டு அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் இயங்குகின்றன என்று கூறினார். ஏற்கெனவே உடுமலைப்பேட்டையிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் ஒரு விரைவுப் பேருந்து தான் ஓடுகிறது. சேரன் கார்ப்பரேஷன் மூலம் பொள்ளாச்சியிலிருந்து ஒரு வண்டி போகிறது. ஆனால் அந்த வண்டிக்குப் போதிய வசதியில்லை. அங்கேயிருந்து நிறையப் பேர் சென்னைக்கு வருகிறார்கள். அது போதிய வசதியில்லாமல் இருக்கிறது. தனியார் பேருந்துகள் நான்கைந்து வண்டிகள் ஓடுகின்றன. ஆகவே, அரசு வண்டிகளைப் புதிதாக நீங்கள் அமைத்துக்கொடுத்தால் அங்கே இருக்கக்கூடிய மக்களின் போக்குவரத்திற்கு வசதியாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனை செய்து இன்னும் புதிய பேருந்துகளை விடவேண்டும். ஏற்கெனவே நிறைய வழித்தடங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், என்னுடைய உடுமலை தொகுதியிலிருந்து எந்தவிதமான புதிய வழித்தடங்களும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்து, சென்னைக்கு சொகுசுப் பேருந்து திரும்பவும் ஒன்றோ, இரண்டோ விடுவதற்குரிய முயற்சிகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலமாக இயக்குவதோடு, பொள்ளாச்சியிலேயிருந்து உடுமலைவழியாக சென்னைக்கு



2008 ஜனவரி 24]

கோவை போக்குவரத்துக் கழகம் ஒரு பேருந்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. இதிலே பயணிகள் அடர்வு என்று எடுத்துக்கொண்டால் 80 சதவிகிதம் அடர்வு வருவதாக கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சராசரி ஒரு வண்டிக்கு வருமானம் ரூ.8,575 என்று வந்து கொண்டிருக்கிறது. பயணிகளுடைய அடர்வு அதிகமாக இருக்குமானால், தேவையிருக்குமானால், புதிய வண்டி நிச்சயமாக உங்களுக்குத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயணிகளுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு புதிய தடங்களில் விடப்படும் என்று கூறினார்கள். ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பல்வேறு பேருந்துகளை விடக் கேட்டிருந்தோம். உடுமலையிலிருந்து பொள்ளாச்சி வழியாக ஊட்டிக்குக் கேட்டிருந்தோம். பழனி– கொழுமம் வழியாக ஆனைமலைக்குக் கேட்டிருந்தோம். உடுமலையிலிருந்து திருப்பூருக்குக் கூடுதலாகக் கேட்டிருந்தோம். உடுமலையிலிருந்து திருமூர்த்தி நகருக்கு, அது சுற்றுலாத் தலமாக இருப்பதால் அங்கேயிருந்து காங்கேயம் சென்னிமலை வழியாக ஈரோடுக்குக் கேட்டிருந்தோம்.

முற்பகல் 10–10

அதேபோல, உடுமலையிலிருந்து கோத்தகிரி வழியாக புதிய பேருந்து கேட்டிருந்தோம். உடுமலை, அமராவதி நகரிலிருந்து திருப்பூர்–தாராபுரம் வழியாக சத்திக்குக் கேட்டிருந்தோம்.

அதேபோல, உடுமலையிலிருந்து கோயில் தலங்களான கன்னியாகுமரி, இராமேஸ்வரத்திற்குக் கேட்டிருந்தோம். இந்தப் பகுதிகளுக்கு, புதிதாக விடக்கூடிய பேருந்துகளை 'ஏதாவது, அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களினுடைய நலன் கருதி விடுவதற்கு முன்வருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அந்தப் போக்குவரத்துக் கழகம் தனியார்மூலமாக, Agent-கள் மூலமாக திருவள்ளுவர் கார்ப்பரேஷன் Agent-கள் மூலமாகச் செய்கிறார்கள். அது மக்களுக்குப் பாதிப்பாக இருக்கிறது. அதிகமாக rate கேட்கிறார்கள். ஆகவே, அதையும் அரசே எடுத்து நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்களா என்று கேட்டுக்கொண்டு, மேலும் எங்களது பகுதியில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் புதிதாக அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கொண்டுவரப்பட்டது. அங்கு புதிதாக கட்டட வசதி ஏற்படுத்தித்

[2008 ஜனவரி 24

தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் இதோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க இந்த 18 மாதங்களில் கிட்டத்தட்ட ஆயிரம் புதிய வழித் தடங்களில் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. 1,200 வழித் தடங்களிலே வழி நீட்டிப்பு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த 18 மாதங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய நிதியிலிருந்து வழங்கி 6,000 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு, பழைய பேருந்துகளுக்குப் பதிலாக மாற்றமும் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கிட்டத்தட்ட 12 வழித் தடங்களுக்கு மேலாக வேண்டும் என்று இங்கு கேட்டிருக்கிறார். உரிய முறையிலே அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து எது முக்கியமோ, அது உடனடியாக உங்களுக்குத் தரப்படும்.

மேலும், R.T.O. அலுவலகம் கடந்த கால ஆட்சியிலே வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இடம் இருக்குமானால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த 18 மாதங்களில் மட்டும் 17 புதிய அலுவலகங்களைத் தந்திருக்கிறார்கள். 12 இடங்களிலே புதிய கட்டடங்கள் இப்போது கட்டிக் கொண்டிருக்கிறோம். இடம் இருக்குமானால், இந்த ஆண்டேகூட நாங்கள் அதைக் கருத்தில் எடுத்துக்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

**திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் தலங்களில் முக்கியப் பகுதியான குன்னூரிலிருந்து சென்னை செல்ல VOLVO வண்டிகள்—பெரும்பாலும் அனைத்துத் தொகுதிகளிலிருந்தும் VOLVO வண்டிகள் தற்போது சென்னைக்குச் செல்கின்ற காரணத்தினால், குன்னூரிலிருந்து சென்னை செல்வதற்கு பேருந்துகள்—இயக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் மொத்தம் 996 பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, 1,094 பேருந்துகள் இயங்குகின்றபோது விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்காக 40 புதிய வழித் தடங்களிலே பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. குன்னூருக்கு இந்த மாத இறுதிக்குள்ளாக இன்னும் ஏ.சி. வண்டி 43 வண்டிகளும், கோவைக்கு 25 வண்டிகளும், மதுரைக்கு 25 வண்டிகளும், கிட்டத்தட்ட 100 வண்டிகளுக்கு மேல் வர வேண்டி இருக்கின்றன. புதிய வண்டிகள் அங்கு body கட்டி வருமானால் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுச்சேரியிலிருந்து சென்னைக்கு வரும் பஸ்கள் கோயம்பேடு வரை சென்று வருகின்றன. மயிலாப்பூர் தொகுதி மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, இப்பொழுது அடையாறு வரைக்கும் அந்த பஸ்கள் நீட்டிக்கப்பட்டுள்ளன. அதையே பட்டினப்பாக்கம் bus terminus வரையிலும் விட்டால் இன்னும் தொகுதி மக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பது என்னுடைய கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு முக்கியக் காரணம் பட்டினப்பாக்கம் bus terminus-க்கு என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருந்து வருகின்ற நமது விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் சென்னைக்கு வருகின்ற மற்ற அத்தனை பேருந்துகளுமே கோயம்பேடு பேருந்து நிலையம் வருகின்றன. சரியான நேரத்தில்—7 மணி அளவிலே—அங்கேயிருந்து எடுக்கக்கூடிய பேருந்துகள்கூட நகரத்தைவிட்டு வெளியே செல்வதற்கு கிட்டத்தட்ட 2 மணி நேரம், 3 மணி நேரம் தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதனால்தான் ஒரு மாற்று வழியை உருவாக்க

[2008 ஜனவரி 24

வேண்டும் என்ற நோக்கத்தோடு நமது கடற்கரைச் சாலை வழியாக பட்டினப்பாக்கம் வரையிலே, திருவான்மியூர் terminus வரை இப்பொழுது பேருந்துகள் கொண்டுவந்திருக்கிறோம். மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, 2 பகுதியாகப் பிரிக்கலாமா, அப்படிப் பிரித்தால் அது சரியாக இருக்குமா என்பதை ஆராய்ந்து, பிரிக்கவும் இந்தத் துறை முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாணவ, மாணவிகள் காலை நேரங்களிலும், மாலை நேரங்களிலும் பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும்பொழுது சரியான நேரத்தில் பேருந்துகள் வரவில்லை என்ற ஒரு குறை என்னுடைய தொகுதியில் இருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் காலையும், மாலையும் பள்ளி மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் செல்லும்போதும், திரும்பும்போதும், சரியான நேரத்தில் பேருந்தை இயக்க முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய அதுபோன்ற கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இப்போது புதிய பேருந்துகளை விடுகின்றபோது எங்கு நிறையப் பயணிகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் தொடர் பேருந்து வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அனைத்து நகரங்களுக்கும் இப்போது வழங்கப்பட்டுவிட்டன. திருச்சி, தஞ்சை, கோவை மற்றும் மதுரை போன்ற நகரங்களுக்கு எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. காலை 8 மணி அளவிலே பேருந்துகளை அதிகமாக இயக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றபோது, அந்தத் தொடர் பேருந்துகள் என்றால், ஒரே பேருந்திலே கிட்டத்தட்ட 150 பேர், 160 பேர் ஏறக்கூடிய அளவிற்கு அதிலே இடம் இருக்கிற காரணத்தால் படிப்படியாக அதைச் செய்துகொண்டிருக்கிறோம். மேலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியிலே,



2008 ஜனவரி 24]

எந்தப் பகுதியிலே அப்படித் தேவை என்று நீங்கள் குறித்துச் சொல்வீர்களானால் உடனடியாக உங்களுக்கு அங்கே பஸ் விட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலே தஞ்சை மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அய்யம்பேட்டை, பாபநாசத்திலிருந்து ஒரு சொகுசுப் பேருந்தை விட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டிருந்தேன். அந்தப் பகுதி முஸ்லிம் மக்களும், வர்த்தகப் பெருமக்களும் நிறைந்து இருக்கிற பகுதி என்பதால் அய்யம்பேட்டையிலிருந்து ஒரு அல்ட்ரா டீலக்ஸ் பஸ் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கும்பகோணத்திலிருந்து கிட்டத்தட்ட 6 புதிய அல்ட்ரா டீலக்ஸ் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கும்பகோணம், ஆடுதுறை, மாயவரம் மற்றும் சிதம்பரம் போன்ற பகுதிகளிலிருந்து முழுமையாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும், புதிதாக இப்போது விடப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே நீங்கள் சொல்லியிருப்பது எங்கள் கவனத்தில் இருக்கிறது. விரைவில் பாபநாசத்திலிருந்து சென்னைக்கே பேருந்து விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**6—**

## சுற்றுலா மையம்

***29833—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

காவேரிப்பாக்கம் ஏரியைச் சுற்றுலா மையமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் துறையின் சார்பாக எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. இருப்பினும் வருகைதரும் பயணிகளுடைய எண்ணிக்கை மற்றும் அவ்விடத்தின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு துறையின்மூலமாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்த நிதி உதவி அளிக்கப்பட்டு வருகிறது. காவேரிப்பாக்கம் ஏரியைப் பொறுத்தமட்டில், சுற்றுலா மையம் சம்பந்தமான கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஏரி மிகவும் பழமை வாய்ந்ததும், தொன்மையான பல வரலாற்றுச் சிறப்புகளைக் கொண்டதுமான ஏரியாகும். கல்விக் கண் திறந்த காமராஜருக்கு வேலூர் மாவட்டம் என்றாலே காவேரிப்பாக்கம் ஏரிதான் நினைவுக்கு வரும் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர் வாரி உபயோகிக்கும் வகையில், சுற்றுலா மையமாக அரசு அறிவித்தால் அரசுக்கும் பெரிய வருவாயும் கூடுதலாகக் கிடைக்கும், அந்தப் பகுதியும் வளர்ச்சிபெறும். எனவே, அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஏரியைப் பொறுத்தமட்டில், அங்கே சுற்றுலாப் பயணிகளுடைய வருகை எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. அதிகமான பயணிகள் வருகின்றபோது அதனை நிச்சயமாகக் கருத்தில்கொண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும், அதேநேரத்தில், அந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், ஏலகிரிப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகள், இந்தத் துறையின் சார்பாகப் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 24]

7—

## சுற்றுலாப் பொருட்காட்சி

***35922—திரு. அ. ராஜன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் நகரில் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்துகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரைப் பொறுத்தவரை, குமரி மாவட்டத்தின் தலைநகரமாகும். இந்தியாவின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றான கன்னியாகுமரி, நாகர்கோவில் நகரின் அருகில் உள்ளது. கன்னியாகுமரிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளும், பொது மக்களும் நாகர்கோவில் வந்துதான் செல்ல வேண்டும். நாகர்கோவில் நகரிலும் இலட்சக்கணக்கில் மக்கள் வசிக்கின்றனர். இங்கு பொது மக்கள் பயனுள்ள வகையில் நேரத்தைச் செலவிட எந்தவித வாய்ப்பும் இல்லை. மேலும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் சில அரசுப் பொருட்காட்சிகள் நடந்தாலும், சிறிய அளவில்தான் நடைபெறுகிறது. எனவே, அரசின் சாதனைகளை விளக்குகின்ற வகையிலும், பொதுமக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலும், அரசின் சாதனைகளைத் தெரிவிக்கும் தனித் தனி ஸ்டால்கள், குறிப்பாக சென்னை மாநகரத்தில் நடைபெறுவதைப்போல தென்கோடி முனையின் தலைநகராம் நாகர்கோவில் நகரிலும் சுற்றுலாப் பொருட்காட்சியை நடத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பில் பொருட்காட்சிகள், மதுரை,

[2008 ஜனவரி 24

கோயம்புத்தூர், சேலம், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றிலே மதுரை மாவட்டத்தில் ஏப்ரல்-ஜூன் மாதங்களில் 45 நாட்கள் நடைபெறுகின்றது. அதேபோன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏப்ரல்-ஜூன் மாதங்களில் 60 நாட்களும் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்தப்படுகின்றது. அதேபோல சேலம், வேலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. மேலும், சென்னையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் ஆண்டுதோறும் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. தனியார் பொருட்காட்சியும் அந்தந்த மாவட்டங்களில் நடத்த அரசால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் நகராட்சிக்குச் சொந்தமான இந்துக் கல்லூரி மைதானத்தில் பொழுதுபோக்கு பொருட்காட்சி நிறுவனத்தாருக்கு 5-4-2007-லிருந்து 3-6-2007 வரை, 60 நாட்களுக்குத் தனியாக பொருட்காட்சி நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல, தனியார் நடத்துகின்ற பொருட்காட்சியானது ஒரு வியாபார நோக்கோடு நடத்தப்படுகின்றது. அதிலே பெரிய அளவில் பொதுமக்கள் கலந்துகொள்ள வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய தாயுள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களின் அரசின் சார்பில் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் பொருட்காட்சி நடத்தப்படுவதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நாகர்கோவில் இந்துக் கல்லூரி பக்கம் உள்ள அனாதை மட வளாகம் மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்டதாகும். எனவே அதோடு இணைத்து, இந்த ஆண்டு நம்முடைய அமைச்சரவர்கள், கருணையுள்ளத்தோடு அங்கே பொருட்காட்சியை நடத்த முன்வருவார்களா என்பதை விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பொருட்காட்சியோடு இணைந்த ஒரு கேள்வி என்ற முறையில், திருப்பூர் நகரம் வளர்ந்து வருகின்ற நகரம்; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் மாநகராட்சியாகவும் இப்போது நிலை உயர்த்தப்பட்டு, செயல்பட்டு வருகின்ற பெரு நகரம். பல இலட்சக்கணக்கான மக்கள் வசிக்கின்றார்கள். எந்தப் பொழுதுபோக்கு வசதியும் இல்லாத ஒரு சூழ்நிலை தொடர்ந்து இருக்கிறது. ஆகவே அரசின் சார்பில் அங்கு ஒரு பொருட்காட்சி நடத்தப்படுமானால் மக்களுக்கும் பயன்படும், அரசுக்கும் எதிர்பார்க்கின்ற வருவாயும் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் அரசின் சார்பில் அங்கே சுற்றுலாப் பொருட்காட்சியை நடத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருணையுள்ளத்தால் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. எனவே இதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் இப்பொழுது அரசுப் பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்ற இடங்களிலெல்லாம், வரக்கூடிய வருவாயில் இருந்து பாதியை நகராட்சிக்குக் கொடுப்பது ஒரு மரபாக இருந்து வருகின்றது. ஆனால், வேலூர் நகராட்சிக்கு அந்தப் பாதிப் பணம் கொடுக்கப்படுவதில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களிடம் அரசுப் பொருட்காட்சி திறக்கப்படும்போதே இந்த வேண்டுகோளை வைத்தேன். ஆகவே இந்த முறையாவது, அதில் வரக்கூடிய வருவாயிலிருந்து ஒரு பாதியை வேலூர் நகராட்சிக்கு அளிப்பதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சி நடத்தப்படுகின்ற இடம், எந்தத் துறைக்குச் சொந்தமானதாக இருக்கின்றதோ அந்தத் துறைக்கு பொருட்காட்சிமூலம் வருகின்ற வருவாயிலிருந்து பாதி வழங்கப்படுகின்றது. கோயம்புத்தூரில் சிறைத் துறைக்குச் சொந்தமான வளாகத்தில் நடைபெறுகின்ற காரணத்தால், அங்கு சிறைத் துறைக்கு அதை வழங்குகின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருப்பது, தொல்லியல் துறைக்குச் சொந்தமான இடம் என்பது அவருக்கே தெரியும். எனவே அது இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, திரு. ஜி.கே. மணி அவர்களுக்கு மாறாக, திரு. தி.க. ராஜா, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

8—

## விளையாட்டுத் துறை

***18563—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய இளைஞர்கள் சக்தியை, மிக அபரிமிதமான சக்தி என்று சொல்கின்றார்கள். 40 சதவிகிதம், இளைஞர்கள் இருப்பதாக ஒரு கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே அவர்களுக்கு பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதிய அளவு விளையாட்டுத் திடல்





இல்லாத காரணத்தினாலே, உடல் பருமன், நீரிழிவு, மன அழுத்தம் போன்ற பல்வேறு நோய்களுக்கும், உடல் உபாதைகளுக்கும் அவர்கள் ஆளாகின்றார்கள். எனவே அரசாங்கம் இதைக் கருத்தில்கொண்டு, விளையாட்டுத் துறையை மேம்படுத்தி, மாணவர்களை விளையாட்டுத் துறையில் ஊக்கப்படுத்துவதன்மூலம், பல்வேறு உடல் உபாதை நோய்களைக் கட்டுப்படுத்த முடியும். எனவே அரசாங்கம் இதற்கு நடவடிக்கை எடுக்குமா? பழைய காலங்களில் விளையாட்டுத் திடல் இருந்த காரணத்தால், அப்பொழுதெல்லாம் மாணவர்களுக்கு நோய்கள் வருவதில்லை. ஆனால், இப்போது எல்லோருக்கும் நோய் வருகின்றது. எனவே இதைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய விளையாட்டுத் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், 2000 ஆம் ஆண்டில்தான் முதன்முதலாக விளையாட்டுத் துறையைத் தனியாகப் பிரித்து மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிவித்துச் செயல்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு திறந்தவெளி விளையாட்டு அரங்கம், ஒரு உள் விளையாட்டு அரங்கம், ஒரு நீச்சல் குளம் உருவாக்கப்பட வேண்டுமென்பது அரசின் நோக்கம். திறமைமிக்க விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு தக்க பயிற்சி மற்றும் நிதியுதவி அளித்து, அவர்கள் தேசிய மற்றும் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை பெற தலைசிறந்த விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதுடன் அவர்கள் உயர்ந்த அளவில் சாதனைகள் புரிந்திடும் வகையில் விருதுகளும், பல்வேறு ஊக்கத் தொகைகளும் வழங்கப்படுகின்றன. இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் இப்பொழுது பல்வேறு துறைகளிலே வெற்றிபெற்று பதக்கம் பெற்றவர்கள், குறிப்பாக காமன்வெல்த் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், தெற்காசியப் போட்டிகளில் வெற்றிபெற்று பதக்கம் பெற்றவர்கள், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று பெற்றவர்கள், இன்னும் முதலமைச்சர் அவர்களுடைய பதக்கம் பெற்றவர்கள், உலக அளவில் விருதுகளைப் பெற்றவர்கள் மட்டுமல்லாமல், உலக அளவில்

[2008 ஜனவரி 24

வெற்றிவாகை சூடிய தமிழ்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் தினேஷ் கார்த்திக்கிற்கு ஐந்து இலட்சம் ரூபாயும், சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்திற்கு 25 இலட்சம் ரூபாயும், ஆசிய பெண்கள் கபடிப் போட்டியில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிதாவிற்கு ஐந்து இலட்சம் ரூபாயும் இப்படியாக இந்த ஆட்சியில் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக அறிவித்து விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்திக்கொண்டிருப்பது மட்டுமல்லாமல், இந்த அரசினுடைய உயர்ந்தபட்ச நோக்கமாக, இலக்காக, ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெறும் சாதனையை எதிர்நோக்கிச் செயல்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய வீர விளையாட்டாக இருக்கின்ற—பழங்காலத்தில் காளையை அடக்கினால்தான் பெண் கொடுப்பார்கள் என்று சொல்வார்கள். எனவே அப்படிப்பட்ட—ஜல்லிக்கட்டுக் காளையை அடக்குவதற்கான பயிற்சி தமிழக அரசின் விளையாட்டுத் துறையின்மூலமாக வழங்கப்படுமா? அதேபோல தமிழக பாரம்பரியக் கலைகளை, பாரம்பரிய நடனங்களை, வீர விளையாட்டுகளை, தற்காப்புக் கலைகளையெல்லாம் இளைஞர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதற்கு விளையாட்டுத் துறை நடவடிக்கை எடுக்குமா? அதேபோல மாவட்ட, வட்ட அளவிலான உள் விளையாட்டு, வெளி விளையாட்டு அரங்கங்களை உருவாக்கி அதி நவீன கருவிகளைக்கொண்டு பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டதுபோல தமிழ்நாட்டு பாரம்பரியமிக்க விளையாட்டினை தமிழ்நாடு அரசு ஊக்குவிப்பதற்கு உதாரணமாக இப்போது தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சமத்துவப் பொங்கலையொட்டி விளையாட்டு ஆணையத்தின்மூலமாக ஒவ்வொரு ஊராட்சியில், ஊராட்சி ஒன்றியங்களில், மாவட்ட அளவில் சமத்துவப் பொங்கல் விழாவில் கபடிப் போட்டி முடிந்து, மாநில அளவில் போட்டி நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2008 ஜனவரி 24]

அதேபோல நம்முடைய பாரம்பரிய விளையாட்டான கொக்கோ மற்றும் சிலம்பாட்டங்களின் விளையாட்டையும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய உயர்ந்த தலைவர்களுடைய பிறந்தநாள் அல்லது நல்ல விழாக்களில் நடத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று அதுவும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இப்போது தமிழ்நாட்டில் இதுவரை 27 மாவட்டங்களில், மாவட்ட அளவில் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 3 மாவட்டங்களில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுமட்டுமல்லாமல் வட்ட அளவில் Mini Stadium என்று சொல்லக்கூடிய 11 Stadium-களில்6-க்கான பணிகள் முடிந்திருக்கின்றன, 5 பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுடைய கலாச்சாரம், பாரம்பரியம் போன்றவற்றை உள்ளடக்கி பல நூறு ஆண்டுகளாக நடந்து வருகின்ற ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு போன்ற வீர விளையாட்டுகளுக்கு உச்ச நீதிமன்றம் விதித்திருந்த தடையினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் எடுத்து அந்த விளையாட்டுகள் திரும்பவும் நடைபெறுவதற்கு இந்த ஆண்டு ஏற்பாடு செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தென் மாவட்ட மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்ற அதேவேளையில், இதைப்போன்ற வீர விளையாட்டுகளைப் பாதுகாப்பதற்கும், இந்த வீர விளையாட்டுகளில் பங்கேற்கின்ற வீரர்கள் மற்றும் அதில் சம்பந்தப்பட்டுள்ள மாடுகள் போன்றவற்றிற்கு தகுந்த பாதுகாப்புகள் வழங்குகின்ற வகையிலும், இந்த வீர விளையாட்டுகள் காலம்காலமாக நமது மாநிலத்தில் நடைபெறுவதற்கு வகைசெய்கின்ற வகையிலும் ஒரு தனிச் சட்டத்தினை நிறைவேற்றி அதைச் சட்ட உரிமையாக்கிக் கொடுப்பதற்கு தமிழக அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த நோக்கம்

[2008 ஜனவரி 24

நியாயமான நோக்கம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய பாதுகாப்பு கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**வினா எண் 9,** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**9—**

**சாலை வசதி**

***27874—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர்-பொன்னாலம்மன்துறை சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கோட்டூர்-பொன்னாலம்மன்துறை சாலை என்பது அதனுடைய உண்மையான பெயர் கோட்டூர்-தேங்காய்பாறை சாலை ஆகும். இந்தச் சாலை சுமார் 5 கிலோ மீட்டர் 4 பர்லாங் நீளம் கொண்ட சாலையாகும். இந்தச் சாலையினுடைய துவக்கத்திலான 0/0-விருந்து 3-வது கிலோ மீட்டர் வரை நடப்பு நிதியாண்டில், அதாவது இந்த நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சுமார் 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் அந்தப் பணிகள் தேர்வு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன. மார்ச் 15 ஆம் தேதிக்குள் அந்தப் பணிகள் நிறைவேற இருக்கின்றன. மீதமிருக்கக்கூடிய 2½ கிலோ மீட்டர் நீளம் கொண்ட அந்தச் சாலையும் நொடிகள் சரிசெய்வதற்காக 13 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அதுவும் சரி செய்யப்பட்டிருக்கிறது. எனவே விரைவில் முழுமையாக போக்குவரத்திற்கு ஏற்றதாக அந்தச் சாலை செப்பனிடப்பட்டு அது



2008 ஜனவரி 24]

அந்தப் பகுதி பொதுமக்களுக்கு நன்மை தரும் வகையில் அந்தப் பணிகள் நிறைவேற இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல சாலைப் பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சாலைப் பணிகள் துரிதமாக, விரைவாக நடைபெறுவதற்கு மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு வால்பாறை-தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு கோவை மாவட்டத்தில் நீண்டகாலமாக—10 ஆண்டு காலமாகப் பொதுமக்கள் அவதிக்குள்ளாகி வந்த உக்கடம் மேம்பாலம், ஒண்டிப்புதூர் மேம்பாலம் இந்த இரண்டு மேம்பாலங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களுடைய உத்தரவின்பேரில் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு விரைவாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ததற்காக என்னுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து வால்பாறையிலே மழை பெய்து கொண்டிருந்ததால் அங்கே சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அந்தப் பழுதடைந்த சாலைகளைப் செப்பனிட்டுப் புதுப்பித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொள்ளாச்சி-வால்பாறை சாலை, வால்பாறை-மாணிக்கா குரங்குமுடி சாலை, மாநில எல்லையிலிருந்து பொள்ளாச்சி பிரதான சாலை, வால்பாறை-மாணிக்கா சாலை, வேட்டைக்காரன்புதூர், சமத்துவபுரம், அம்பராம்பாளையம் போன்ற சாலைகள் எல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. அந்தச் சாலைகளையும் செப்பனிட்டுத் தர மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 நாட்களுக்கு முன்பு பெய்த கன மழையின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டவற்றில் சாலைகளும் ஒன்று.

[2008 ஜனவரி 24

அந்த அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்ற மாண்புமிகு முதல்வர்களுடைய கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு சென்னை திரும்பியவுடன் எங்களை எல்லாம் அழைத்து உடனடியாக பாதிக்கப்பட்டிருக்கிற சாலைகள், பாலங்கள் போன்ற எல்லாப் பணிகளும் முழுமை பெற வேண்டும், விரைந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுங்கள் என்று உத்தரவிட்டு, அதேநேரத்திலே மைய அரசினுடைய நிதியை எதிர்பார்த்திருந்தாலும் அந்தப் பணிகள் நடைபெற வேண்டுமென்பதற்காக முதற்கட்டமாக அதற்குத் தேவையான நிதிகளையும் ஒதுக்கி அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

கடந்த வாரம்கூட கன்னியாகுமரி மாவட்டம் சென்றிருந்தேன். அங்கேகூட அதிக கன மழை பெய்த காரணத்தினால் அங்கேயும் சாலைகள் பாதிக்கப்பட்டு, அந்தப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. அந்தப் பாலம் திறப்பு விழா நிகழ்ச்சியிலே அங்கே வந்திருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம்கூட அந்தப் பணிகள் நடைபெற்று வருவதைப் பாராட்டி அரசிற்கு நன்றி தெரிவித்தும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் உரையாற்றினார்கள். அந்த அடிப்படையில் இதுபோன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நம்முடைய மாண்புமிகு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே வால்பாறை தொகுதியில் செப்பனிடப்பட்டு வருகின்ற பணிகள் இன்னும் முழு வேகத்தில் நடைபெற்று இன்னும் ஏறத்தாழ 20 நாட்களுக்குள் அந்தப் பணிகள் நிறைவேறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம்.

*முற்பகல் 10–35*

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பு கிடைத்தது. அங்கெல்லாம் 6 வழிச் சாலைகள், 4 வழிச் சாலைகள் எல்லாம் துரிதமாக நடைபெற்று வருவதைக் கண்டு, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்காட்டிலே, மலைப் பகுதியிலே சாலைகள் முழுவதும் அகலமான சாலைகளாக, பேருந்துகள் செல்வதற்கும், வருவதற்கும் நல்ல முறையிலே போடப்பட்டு இருக்கின்றன.



ஆனால் வால்பாறையைப் பொறுத்தவரையில் இது ஒரு வழிப் பாதை. மலைப் பகுதி, ஒரு வழிப் பாதை. அந்தப் பாதையில் குறுகிய அளவில்தான் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. பக்கத்திலே பாதாளம் – 1,500, 2,000 அடி பள்ளம் இருக்கிறது. ஒரு பேருந்து வருகின்றபோது அல்லது எதிரிலே வாகனம் வருகின்றபோது, எதிரிலே செல்கின்ற வாகனங்கள் ஒதுங்கி நிற்க வேண்டிய, பள்ளத்தில் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, அந்தச் சாலையை அகலப்படுத்தி விரிவுபடுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம், குறிப்பிட்ட சாலையை மாத்திரம் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல—ஏற்கெனவே அனுமதி கிடைத்த இடத்தில்—வனத் துறையினுடைய அனுமதி பெற வேண்டும். அதுவும் குறிப்பாக அவர் குறிப்பிடுவது காப்புக்காடு, மத்திய Reserve Forest என்கிற முறையில் அந்த சாலைகள் எல்லாம், முதலில் அனுமதி தந்த இடத்தில் மட்டும் தான், அது ஒரு வழிப் பாதையாக இருந்தால், அந்த ஒரு வழிப் பாதையைத்தான் தொடர்ந்து பராமரித்துக்கொள்ள வேண்டுமேயொழிய, அகலப்படுத்தும்போது வனத் துறையினுடைய அனுமதி பெற வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல குறுகிய சாலை இருப்பதும் நிச்சயமாக அது உண்மைதான். அதில் எதுவும் மாற்றம் இல்லை. இருந்தாலும் அதை இரு வழிச் சாலையாக மாற்றுகிற அளவிற்கு வனத் துறையின் அனுமதி பெறுவது கடினமான ஒரு சூழ்நிலை. அதற்கும் இந்தத் துறை முயற்சி செய்யும். இருந்தாலும், ஏற்கெனவே பராமரிக்கப்பட்டு வருகிற அந்த ஒரு வழிச் சாலையில் இருந்து, இடை வழிச் சாலையாக, இரண்டு வாகனங்கள் ஓரளவு தாராளமாக செல்லக்கூடிய அளவிற்கு வேண்டுமானால் மாற்றுவதற்கு, இந்தத் துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

[2008 ஜனவரி 24

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் இருந்து பரமத்தி வேலூர் செல்கின்ற சாலை, கிட்டத்தட்ட 2 ஆண்டு காலமாக மிகவும் பழுதடைந்து பல விபத்துகள் நடைபெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த வழியாகச் சென்று கொண்டிருக்கின்றார்கள்; நன்றாகத் தெரியும். நானும் பலமுறை கேள்விகள் கேட்டிருக்கின்றேன். அதை உடனடியாக பரிசீலித்து அதை புதுத் தார்ச் சாலையாக அமைத்துக் கொடுப்பாரா என்பதையும் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு திருச்செங்கோடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை, மாநில நெடுஞ்சாலை. அந்தச் சாலைக்கு உலக வங்கியினுடைய திட்டத்தில் அனுமதி பெறப்பட்டிருக்கிறது. பராமரிப்பிற்காக, நிதி ஒதுக்குவதற்காக அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். விரைவில் அந்தப் பணிகள் முழுமை பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. சபா. இராஜேந்திரன். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**10—**

## கால்நடை மருத்துவமனை

**•27423—திரு. சபா. இராஜேந்திரன்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, அண்ணாகிராம ஒன்றியம், திருத்துறையூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் தொகுதி, திருத்துறையூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிக வருமானம் வரக்கூடிய தொழிலாகக் கால்நடை வளர்ப்பைச் செய்து வருகின்றார்கள். அந்த வகையில், கால்நடை வளர்ப்பில் அதிக கவனம் செலுத்துகின்ற அந்த மக்களால் 2003 ஆம் ஆண்டு அரசின் கணக்கின்படி, திருத்துறையூர் கிராமத்தில் 1,392 கால்நடைகளும், கொறத்தி கிராமத்தில் 2,694 கால்நடைகளும், குச்சிப்பாளையம், கள்ளிப்பட்டு ஆகியவற்றில் 2,421 கால்நடைகளும், சின்னப்பேட்டையில் 680 கால்நடைகளும், ஓறையூரில் 1,50 கால்நடைகளும், பூண்டியில் 1,516 கால்நடைகளும், வறிஞ்சிப்பாக்கத்தில் 1,583 கால்நடைகளும், அக்கடவல்லியில் 1,461 கால்நடைகளும், ஆகமொத்தம் 13,297 கால்நடைகள் அந்தப் பகுதியிலே வளர்க்கப்படுகின்றன.

திருத்துறையூர் கிராமத்தில் குறிப்பாக கறவை மாடுகள் அதிகம் வளர்க்கப்படுகின்றன. அங்கிருந்து பால் தமிழக அரசின் நிறுவனமான ஆவின் மற்றும் தனியார் நிறுவனங்களான சுபிக்ஷா, Winner, E.I.D Parry confectionery chocolate தயாரிப்பதற்கும், கொள்முதல் செய்யப்படுகிறது. மேலும், அருகில் உள்ள, கால்நடை மருந்தகங்கள் உள்ள கன்றக்கோட்டை 10 கி.மீ. தூரத்திலும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சபா இராஜேந்திரன், கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** கரும்பூர் 8 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் அரசின் விதிமுறைக்குட்பட்டு, அனைத்து முறையிலும் தகுதியுடைய திருத்துறையூர் கிராமத்தில், மக்கள் தேவையை உணர்ந்து செயல்படுகின்ற தலைவர் கலைஞர் அரசு, அந்தக் கால்நடை மருத்துவமனையை அவசியம் அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்; அமைத்துத் தர அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

(முற்பகல் 10–40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சுமார் 10,000 –க்கும் மேற்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை கொண்டதும் மற்றும் அருகிலே எந்தவொரு கால்நடை மருத்துவ நிலையங்கள் அமையப்பெறாததுமான கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 40 புதிய கால்நடை மருந்தகங்கள் அமைக்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையின்படி தற்சமயம் வாய்ப்பு இல்லை. ஆனால் வரும் ஆண்டுகளில் உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல்கள் 1, 2, 3, 4, 5 மற்றும் 6)@

## பட்டியல் 1

**1—**

### கரும்புக் கசண்டிலிருந்து மதுபானம்

**வினா எண் 17727—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை கரும்புக் கசண்டிலிருந்து மதுபானம் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கோவை மாவட்டத்திலுள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் மதுபானம் (Indian Made Foreign Spirit) தயாரிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**2—**

### மின்சார வசதி

**வினா எண் 8824—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோயில் ஒன்றியம், ஆறுபாதியிலிருந்து மேலையூர் ஊராட்சி வரை மின்சார வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியத்திற்குட்பட்டுள்ள ஆறுபாதியிலிருந்து மேலையூர் ஊராட்சிவரை ஏற்கனவே மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. ஆறுபாதி மற்றும் மேலையூர் ஊராட்சித் தலைவர் அவர்களிடமிருந்து தெருவிளக்கு அமைப்பதற்கான விண்ணப்பங்கள் இதுவரை ஏதும் பெறப்படவில்லை. ஆறுபாதி கிராமத்தில் ஒரு தெருவிளக்கு மின் இணைப்பு உள்ளது. இதில் 28 தெருவிளக்குகள் உள்ளன. மேலையூர் கிராமத்திலும் ஒரு தெருவிளக்கு மின் இணைப்பு உள்ளது. இதில் இரண்டு தெருவிளக்குகள் உள்ளன. மேலும் ஆறுபாதி மற்றும் மேலையூர் ஊராட்சித் தலைவரிடமிருந்து தெருவிளக்கு மின் இணைப்புக் கேட்டு விண்ணப்பங்கள் பெறப்படின், மின் இணைப்புக்குண்டான மதிப்பீட்டுத் தொகை அந்தந்த ஊராட்சிகள் மூலம் பெறப்பட்ட பின், கூடுதலாகத் தெருவிளக்கு மின் இணைப்பு வழங்கப்படும்.

[2008 ஜனவரி 24

3—

**மின்சாரக் கம்பியை மாற்றுதல்**

**வினா எண் 8825—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோயில் ஒன்றியம், கீழையூர் ஊராட்சி, காமராஜர் காலனியில், கன்னிக்கோயில் தெருவில் குடிசை வீடுகளுக்கு மேல் செல்லும் மின்சார கம்பியை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், கீழையூர் ஊராட்சி, காமராஜர் காலனி, கன்னிக்கோயில் தெருவில் மின்கம்பி அமைக்கப்பட்டபின், மின்சாரக் கம்பியின்கீழ் ஒரு குடிசை வீடு கட்டப்பட்டுள்ளது. வாரிய விதிமுறைகளின்படி மின் கம்பியை மாற்றுவதற்கு விண்ணப்பம் அளித்து மதிப்பீட்டுத் தொகை செலுத்த முன்வந்தால் அத்தொகை செலுத்தப்பட்டவுடன் மின் கம்பியை மாற்ற ஆவன செய்யப்படும்.

4—

**மின்மாற்றி அமைத்தல்**

**வினா எண் 8901—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, வாடியக்காடு துணை மின் நிலையத்தில் புதியதாக 16 மெ.வா. மின்மாற்றி அமைத்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை தொகுதி, வாடியக்காடு 110/11 கி.வோ. துணை மின் நிலையத்தில் ஒரு 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றி இயங்கி வந்தது.



2008 ஜனவரி 24]

கூடுதலாக மற்றுமொரு 16 எம்.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றி 28-6-2006 முதல் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. இம்மின் நிலையத்தின் அதிகபட்ச மின் பளு 22.8 எம்.வி.ஏ. ஆகும். தற்போது வாடியக்காடு துணை மின் நிலையத்தில் உள்ள 2 x 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் அப்பகுதியில் சீரான மின் விநியோகத்தையும் எதிர்வரும் மின் தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் போதுமானதாகும். எனவே கூடுதலாக மின்மாற்றி அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

5—

**விடுகளுக்கு மின் இணைப்பு**

**வினா எண் 9993—திரு. ஜா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், வலிய ஏலா பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், களியல் கிராமம், வலிய ஏலா பகுதிக்கு மின் இணைப்பு வழங்கிட வன இலாகாவிற்குச் சொந்தமான நிலம் வழியே மின்பாதை அமைக்க வேண்டியுள்ளது. வன இலாகா, இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்க தடையில்லாச் சான்றிதழ் வழங்கினால், மனுதாரரின் மனுவின்பேரில் வாரிய விதிகளின்படி மின்சாரம் வழங்கப்படும்.

6—

**தடையின்றி மின்சாரம் வழங்குதல்**

**வினா எண் 15287—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புப், பகுதிகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு தடையின்றி மின்சாரம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

**7—**

## மின் இணைப்பு

**வினா எண் 18481—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்கு மின் திட்டத்திற்கு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளவர்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒரு வீடு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் 250 சதுரஅடிக்கு மிகாமல் இருக்கும் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் பிப்ரவரி 2007 வரை 40,900 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**8—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 19177—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பசுவபட்டி, புச்சகட்டுவலசு, குன்னாங்கல் காட்டுவலசு, முருகேஷ் வடக்கு பகுதி, தாண்டாங்காடு ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, பசுவபட்டி, புச்சக்கட்டுவலசு, குன்னாங்கல் காட்டுவலசு, முருகேஷ் வடக்கு பகுதி, தாண்டாங்காடு ஆகிய பகுதிகளில் ஏற்கெனவே 41 குழல் விளக்குகள அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பகுதிகளில் தெரு விளக்கு வேண்டி பசுவபட்டி ஊராட்சித் தலைவரிடமிருந்து விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 16,030 செலுத்தக் கோரி பசுவபட்டி ஊராட்சி தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. தொகை செலுத்தப்பட்டவுடன் வாரிய விதிமுறைகளின்படி மேற்கண்ட பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**9—**

## புதிய கம்பிவடம்

**வினா எண் 20076—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் கிழக்கு மாதா கோயில் தெரு, பாதாள விக்னேஸ்வரர் கோயில் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் கிழக்கு மாதா கோயில் தெரு மற்றும் பாதாள விக்னேஸ்வரர் கோயில் தெருவிற்கு புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகையால் புதிய புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

[2008 ஜனவரி 24

10—

## புதிய கம்பிவடம்

**வினா எண் 20090—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் மேற்கு மாதா கோயில் தெரு, வடக்கு மாதா கோயில் தெரு, திருவேங்கடம் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் உள்ள திருவேங்கடம் தெருவில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாதா கோயில் தெருவில் புதைவடம் மற்றும் மினி பில்லரும், மேற்கு மாதா கோயில் தெருவில் புதைவடம் மற்றும் ஆறுவழி மின்பெட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பகுதிகளில் புதிதாக புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

11—

## ஒருங்கிணைப்புக் குழு

**வினா எண் 18230—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தைக் கண்காணிக்கவும் மற்றும் அதன் செயல்பாடுகளை ஆய்வு



2008 ஜனவரி 24]

செய்யவும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில வேலை உறுதிக் குழு ஒன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசு ஆணை (நிலை) எண் 117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சி.ஜி.எஸ்.1) துறை, நாள் 14-09-2006-ல் அமைக்கப்பட்டு உள்ளது.

12—

## உரம், பூச்சி மருந்து விற்பனை

**வினா எண் 20428—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை விவசாய வேளாண்மைத் துறைமூலம் உரம், பூச்சி மருந்து விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 150, வேளாண்மைத் (TNADP) துறை, நாள் 9-3-1993-ன்படி வேளாண்மைத் துறையானது வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக பூச்சி மருந்துகள் விற்பனை செய்ய தடை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்கள்மூலம் உயிரியலில் பூச்சிக்கொல்லி/பூஞ்சான மருந்துகள் மட்டுமே மத்திய, மாநில அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்காக விநியோகம் செய்யப்படுகின்றன.

இரசாயன உரங்கள் வேளாண்மைத் துறைமூலம் விநியோகம் செய்யப்படுவதில்லை. உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா, ரைசோபியம் ஆகியவை வேளாண்மை விரிவாக்க மையம்மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

வேளாண்மை விரிவாக்க மையம்மூலம் பூச்சி மருந்துகள், உரம் விற்பனை செய்திடும் திட்டம் ஏதும் அரசிடம் தற்பொழுது இல்லை.

[2008 ஜனவரி 24

13—

## கிராம துணை விரிவாக்க மையம்

**வினா எண் 24176—திரு. கோ. எதிரொலி மணியன்**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, கொழப்பலூர் கிராம் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை மீண்டும் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, பெரிய கொழப்பலூர் கிராமத்தில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ் வேளாண்மை விரிவாக்க மையம்மூலம் விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. கிடங்கு மேலாளர், பணியிடம் காலியாக உள்ளதால், மாற்று ஏற்பாடு செய்து விவசாயிகளுக்கு இடுபொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

14—

## பி.டி. பருத்தி விதைகள்

**வினா எண் 26082—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அளவில் விவசாயிகளைப் பெரிதும் பாதித்த பி.டி. காட்டன் விதைகளைத் தனியார் நிறுவனங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்வதைத் தடுத்து நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட பி.டி. பருத்தி வீரிய இரகங்களை தமிழகத்தில் பரியிடுவதற்கு அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில்



2008 ஜனவரி 24]

பி.டி. பருத்தி உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் தமிழகத்தில் விதை விநியோகம் செய்து வருகின்றன. பி.டி. பருத்தி இரகம் சாகுபடி செய்ய அனுமதி வழங்குவதற்கு முன் பல்வேறு நிலைகளில் சோதனை செய்யப்படுகிறது.

பி.டி. பருத்தியைப் பொறுத்தவரை அப்பயிரின் காய்ப்புழுக்கள் எதிர்ப்புத் தன்மை நிரூபணமாகி உள்ளது. இதனால், பூச்சி மருந்து தெளிப்பது கணிசமான அளவில் குறைகிறது. பி.டி. பருத்தி சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதால் அதனை சாகுபடி செய்ய வேளாண்மைப் பல்கலைக் கழகமும் பரிந்துரை செய்கிறது. விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையில் விதை கிடைக்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து, ஒரு பாக்கெட்டிற்கு ரூ. 750 என்ற அளவில் விற்பனை செய்யுமாறு விதை உற்பத்தி நிறுவனங்களும் ஆணையிட்டு விவசாயிகள் பயனடைய வழி வகுத்தது. மேலும், தரமற்ற விதைகள் விநியோகம் செய்வதைத் தவிர்க்க விதைச் சான்று இயக்குநரால் தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

எனவே, பி.டி. பருத்திக்கு தடைவிதிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

## மானியம் வழங்குதல்

**வினா எண் 26443—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில், கோமல் சில்கி போன்ற புதியவகை நெற்பயிர்களை பயிர் செய்ய மானியமும், ஆலோசனையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கோமல் சில்கி இரகம் அறிவிப்பு செய்யப்பட்ட இரகம் இல்லை. இந்த இரக நெல் விதைகளுக்கு மானியம் வழங்க மத்திய அரசு திட்டத்தின் வழிமுறைகளின்படி சாத்தியமில்லை. நெல் பயிரில் அதிக

[2008 ஜனவரி 24

மகசூல் கொடுக்கக்கூடிய "திருந்திய நெல் சாகுபடி" தொழில் நுட்பத்தைக் கடைபிடிக்க பெருவிளக்கப் பண்ணைகள் காஞ்சிபுரம் மாவட்டம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்படுகின்றன. மேலும் நெல் உற்பத்தியை உயர்த்திட தக்க ஆலோசனைகள் வேளாண் களப் பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் "கோமல் சில்கி" என்ற நெல் இரகம் இதுவரை தமிழ்நாட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே இந்த இரகத்தின் மரபியல் பண்புகள், தோற்றம், உருவாக்கிய நிறுவனம் இவற்றை அறிந்து ஆராய்ச்சி செய்த பின்புதான் தமிழ்நாட்டில் சாகுபடிக்கு உகந்ததா என்பது குறித்து ஆலோசனை கூற இயலும்.

**16—**

## விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி

**வினா எண் 26545—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயப் பயிர்களில் வண்டுகளை அழிக்க விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு திட்டங்களின் மூலம் ஆண்டுதோறும் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாக செயல் விளக்கத் திட்டத்தின்மூலம் வயல்வெளிப்பள்ளி வாயிலாக விவசாயப் பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் நோய்களின் (வண்டுகளையும் சேர்த்து) இயற்கை எதிரிகள்மூலமும் இதர வழிமுறைகள்மூலமும் அழிப்பது தொடர்பாக ஏற்கெனவே சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர்.

**17—**

## தடுப்பணைகள் கட்டுதல்

**வினா எண் 9240—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) தருமபுரி தொகுதி, தொப்பூர் ஊராட்சி, தொப்பையாற்றின் குறுக்கே பெரிய தடுப்பணைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொப்பையாறு காவிரியின் உபநதியாகும், இந்த ஆற்றின் நீரோட்டம் வினாடிக்கு 36,300 கன அடி என்ற அளவில் உள்ளது. தொப்பையாற்றின் குறுக்கே பெரிய தடுப்பணை கட்டும் திட்டம் குறித்து தள ஆய்வு மேற்கொண்டதில் பெரிய தடுப்பணை அமைக்க இயலாது என கண்டறியப்பட்டுள்ளது. எனினும், தொப்பூர் அருகே சுமார் 3.5 மீட்டர் நீளத்தில் 1 மீட்டர் உயரத்தில் சிறிய தடுப்பணை அமைக்க சாத்தியமுள்ளது. இவ்வணைக்கு எதிர்பார்க்கப்படும் நீர்வரத்து 57.50 மி.க.அடி இத்திட்டத்திற்கான தோராய மதிப்பீடு ரூ.42 இலட்சம் ஆகும். இது குறித்து தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களால் ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும்.

**18—**

## தடுப்பணையை ஆழப்படுத்துதல்

**வினா எண் 10937—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணையை ஆழப்படுத்தி கரையை உயர்த்தி பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் கிராமம் கட்டைப்புளி ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 1-வது தடுப்பணையை ரூ.8.00 இலட்சம் செலவில் கசிவு நீர்க் குட்டையாக

மாற்றும் திட்டத்தினை 2006-2007 ஆம் ஆண்டிற்கான பகுதி II-திட்டத்தின்கீழ் செயல்படுத்த அரசாணை (நிலை) எண். 181, பொதுப் பணித் துறை, நாள் 16-10-2006-ல் நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இப்பணிக்கான விரிவான மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, 18-12-2006-ல் இம்மதிப்பீட்டிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர் ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டு திட்டப் பணிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**19—**

### குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 10946—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பரமேஸ்வரபுரத்தில் அரசனேரி குளத்தைத் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

அரசனேரி குளம், ராதாபுரம் கால்வாய்மூலம் நீர்வரத்தினைப் பெறும் குளமாகும். இக்குளத்தினை மேம்படுத்த சுமார் ரூ.5.00 இலட்சம் தேவைப்படுகிறது. ராதாபுரம் கால்வாய் மற்றும் அதிலுள்ள பிரிவு வாய்க்கால் குளங்களை நபார்டு வங்கி நிதியுதவியில் மேம்படுத்த ரூ. 750 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு வரும் மதிப்பீட்டில் இக்குளத்தினை சேர்த்து மேம்படுத்த மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**20—**

### கால்வாய் சீரமைப்பு

**வினா எண் 11298—திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், மேல்நிலைப்பட்டி கிராமத்தில் உள்ள கைலாசபுரம் அணைக்கட்டின் வலதுபுறக் கரையைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருமயம் தொகுதி, அரிமளம் ஒன்றியம், மேல்நிலைப்பட்டி கிராமத்திலுள்ள கைலாசபுரம் அணைக்கட்டு பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளது. தென், வலது, கரைகள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. இருப்பினும் இக்கரைகளை உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**21—**

### தூண்டில் வளைவுகள்

**வினா எண் 12673—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி மீனவ கிராமங்களுக்கு தூண்டில் வளைவுகள் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, கடற்கரைப் பகுதியில் கடலரிப்பைத் தடுப்பதற்காக தூண்டில் வளைவு அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

தற்பொழுது, தூண்டில் வளைவு அமைக்கப்பட்ட பகுதிகளில் பாதிக்கப்பட்ட பகுதிகள் பாதுகாக்கப்பட்டபோதிலும், கடல் நீரோட்ட வேகத்தினால் தூண்டில் வளைவிற்கு அருகில் உள்ள பிற பகுதிகள் பாதிப்புக்குள்ளாவதாக அப்பகுதி மக்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் தெரிவித்திருப்பதை அரசு கருத்தில் கொண்டு, தூண்டில்

வளைவு கட்டுவதைக் கைவிடலாமா என்பதை அரசு ஆலோசித்து வருகிறது. ஆகவே, இத்தகைய சூழ்நிலையில், தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணிகள் தற்போது எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**22—**

### கொள்ளிடக் கரையை உயர்த்துதல்

**வினா எண் 13178—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொள்ளிடத்திலிருந்து பொன்னாறு வாய்க்கால் பிரியும் குருவாடி கிராமத்தில் கொள்ளிடக் கரையை இருபக்கமும் உயர்த்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மழை வெள்ளப் பாதிப்பை நிலையாக தடுத்திட கரூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் கொள்ளிடக் கரையை உயர்த்தி சீரமைப்பு பணிகள் செய்து முடித்திட ஒருங்கிணைந்த மதிப்பீடு ரூ.230.05 கோடிக்கு தயார் செய்து நபார்டு வங்கி நிதி உதவி பெற அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கி ஒப்புதல் பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

### மழை நீர் ஓடைகளை மேம்படுத்துதல்

**வினா எண் 13771—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதியில் உள்ள மழை நீர் ஓடைகளை அகலப்படுத்தி கரைகளைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதியில் உள்ள மழை நீர் ஓடைகளில் (வரத்துக் கால்வாய்கள்) பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பாலான ஓடைகள் 'சம்பூர்ண கிராமின் ரோஸ்கார் யோஜனா' (SGRY) திட்டத்தின்மூலம் கீழ்க்கண்ட இடங்களில் தூர்வாரும் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன:-

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நிலக்கோட்டை வட்டம், நடக்கோட்டை கிராமம், புதுக்குளம் கண்மாய் வரத்து வாய்க்கால் ஆலங்குளத்திலிருந்து தூர் வாருதல் | 5.00 |
| 2. | நிலக்கோட்டை வட்டம், மல்லணம்பட்டி கிராமம், வஞ்சி ஓடை பகுதி-1 தூர் வாருதல் (எல்.எஸ். 0 மீ. முதல் 2000 மீ. வரை) | 5.00 |
| 3. | நிலக்கோட்டை வட்டம், மல்லணம்பட்டி கிராமம், வஞ்சி ஓடை பகுதி-2 தூர்வாருதல் (எல்.எஸ். 2005 மீ. முதல் 2830 மீ. வரை) | 2.00 |
| 4. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், வாடிகுளம் கண்மாய் வரத்து வாய்க்கால் போலசமுத்திரம் கண்மாயிலிருந்து தூர் வாருதல். | 3.00 |
| 5. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், சுந்தரராஜபுரம் ஓடை செங்காட்டான்குளம் வாத்து வாய்க்கால் தூர் வாருதல் | 2.00 |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 6. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், ஊத்து ஓடை செங்கட்டான் குளம் வரத்து வாய்க்கால் தூர் வாருதல் | 5.00 |
| 7. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், வாடிகுளம் கண்மாய் வழிந்தோடி வாய்க்கால் தூர் வாருதல் | 5.00 |
| 8. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், வாடிகுளம் கண்மாய் வரத்து வாய்க்கால் செங்கட்டான்காட்டு ஓடை தூர் வாருதல். | 5.00 |
| 9. | திண்டுக்கல் வட்டம், போடிகாமன் வாடி கிராமம், வீரசிங்கம் ஓடை தூர் வாருதல் | 5.00 |
| 10. | நிலக்கோட்டை வட்டம், கணவாய்ப்பட்டி கிராமம், கருவேலன்குளம் கண்மாய் மற்றும் வரத்துக் கால்வாய் தூர் வாருதல் | 4.00 |
| 11. | நிலக்கோட்டை வட்டம், கணவாய்ப்பட்டி கிராமம், கருவேலன்குளம் வரத்துக் கால்வாய் தூர் வாருதல் | 1.00 |
| 12. | நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு கிராமம், பெரியகுளம் கண்மாய் வரத்துக் கால்வாய் தூர் வாருதல் | 2.00 |
| 13. | நிலக்கோட்டை வட்டம், வத்தலக்குண்டு கிராமம், பிலாத்து அணைக்கட்டு கால்வாய் தூர் வாருதல் | 1.00 |



| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 14. | நிலக்கோட்டை வட்டம், குன்னவாராயன் கோட்டை கிராமம், குன்னவாராயன் கோட்டை வரத்துக் கால்வாய் தூர் வாருதல் | 3.00 |
| 15. | நிலக்கோட்டை வட்டம், சிவஞானபுரம் கிராமம், ஆலங்குளம் வாத்துக் கால்வாய் தூர் வாருதல் | 3.00 |
| | **மொத்தம்** | **51.00** |

எஞ்சியுள்ள பணிகளை நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**24—**

**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்**

**வினா எண் 14616—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குப் பதிலாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க ஏதுவாக நிலம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்திய பிறகுதான் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

[2008 ஜனவரி 24

**25—**

### ஏரி அமைத்தல்

**வினா எண் 14634—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, உரிகம் கிராமம் தொட்டமடுவு பள்ளம் என்ற இடத்தில் ஏரி கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டை வட்டம், உரிகம் தொட்டமடுவு பள்ளம் குறுக்கே ஏரி அமைக்க ரூ. 436 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு திட்ட உருவாக்க தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**26—**

### குளத்தைத் தூர்வாருதல்

**வினா எண் 18662—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பாம்பன்குளம் கிராமம் கைக்குளத்தை துர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், தண்டையார்குளம் கிராமம், பாம்பன்குளம் ஊரிலுள்ள கைக்குளத்தின் மொத்த ஆயக்கட்டு 113.30 ஏக்கர் ஆகும். இக்குளத்திற்கு 3 மடைகளும், 2 கலுங்குகளும் உள்ளன. மடைகளில் சிறிய பழுதுகள் உள்ளன. கலுங்கு நல்ல நிலையில் உள்ளது. இக்குளத்தின் கரை பலப்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளது. இக்குளம் ஆலந்துறையாறு திருப்புத் திட்டத்தின் மூலம் அனுமாநதியிலிருந்து நீர் வரத்து பெறும் குளமாகும். இக்குளத்தின் கரையினை பலப்படுத்த மற்றும் மராமத்து செய்ய ரூ.10 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணியினை நடப்பு (2007-2008) நிதியாண்டில் முறைசாரா கண்மாய் பராமரிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள மதுரை மண்டல நீர்வள ஆதார அமைப்புத் தலைமைப் பொறியாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 24]

**27—**

### தடுப்பணை கட்டுதல்

**வினா எண் 18706—திரு. ப. டில்லிபாபு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், அம்பேத்கர் நகர் அருகில் வரட்டாற்றிலும், பாவாப்பட்டி, கைலாவரம் அருகில் வாணியாற்றிலும் தடுப்பணை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம் அம்பேத்கர் நகர் அருகில் வரட்டாறும் மற்றும் வாணியாறும் சேரும் இடத்தில் ரூ.27.07 இலட்சத்தில் தடுப்பணை அமைக்கும் திட்ட மதிப்பீடு தற்போது பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

(2) தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பாவாப்பட்டி கைலாவரம் அருகில் வாணியாற்றில் தடுப்பணை அமைக்க திட்ட தளம் ஏதுவாக உள்ளதால், 2008-2009 ஆம் ஆண்டு திட்ட இலக்கில் சேர்க்கப்பட்டு, பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரால் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட உள்ளது.

[2008 ஜனவரி 24

**28—**

### உடற்பயிற்சி கல்வி இயக்குநர் நியமனம்

**வினா எண் 17496—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு உடற்பயிற்சி கல்வி இயக்குநர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்கு உடற்பயிற்சி கல்வி இயக்குநர் பணியிடம் உருவாக்கப்பட்டு, அதனை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**29—**

### பேருந்து வசதி

**வினா எண் 1260—திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதியில் ஐந்து ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ள பல பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது நிறுத்தப்பட்ட இவ்வழித்தடங்களில் சில நடைகள் கீழ்க்கண்டவாறு 19-9-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன:

பனையங்குறிச்சியை முக்கூடல் மற்றும் கடையம் ஆகிய ஊர்களுடன் தொடர்புபடுத்தி 1 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பாப்பான்குளம், முக்கூடல் வழியாக திருநெல்வேலிக்கு புதிய புறநகர் வழித்தடம் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. முக்கூடல்-சேரன்மகாதேவி- இடையன்குளம் என 4 தனி நடைகளில் நகரப் பேருந்து இயக்கப்படுகிறது.



2008 ஜனவரி 24]

சேரன்மகாதேவி-கோபாலசமுத்திரம்-திருநெல்வேலி சந்திப்பு என புதிய நகரப் பேருந்து மூலம் 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**30—**

### பேருந்து வசதி

**வினா எண் 2455—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலிருந்து பழவேலி, மேலமையூர் மற்றும் அமிஞ்சிக்கரை வழியாக புதுப்பட்டினம் வரை இயங்கி வந்த நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பழவேலி கிராமத்திற்கு நகரத் தடம் எண் டி5 மூலம் காலையிலும், மாலையிலும் 20-8-2006 முதல் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அமிஞ்சிக்கரை கிராமத்திற்கு பேருந்து வசதியைப் பொறுத்தவரையில் முன்பு குறிப்பிட்டிருந்தபடி, அமிஞ்சிகரைக்கும், பைராகிமடத்திற்கும் இடையில் உள்ள தரைப்பாலம் தற்பொழுதும் பேருந்துகள் இயக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது. பாலம் சீர் செய்யப்பட்டதும், இத்தடத்தில் இயக்கப்பட்ட 4 நடைகளும் இயக்கப்படும்.

**31—**

### பேருந்து வசதி

**வினா எண் 3236—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி அரசு போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து இயக்கி பின்னர் நிறுத்தப்பட்ட இருபத்தைந்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் மீண்டும் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மன்னார்குடி அரசுப் போக்குவரத்துக் கழக பணிமனையிலிருந்து வழித்தடங்கள் ஏதும் இயங்கி நிறுத்தப்படவில்லை. மன்னார்குடியை சுற்றி சாலை வசதி உள்ள அனைத்து கிராமங்களுக்கும் போதிய அளவு பேருந்து வசதி உள்ளது. மேலும் முக்கிய நகரங்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மே-2006-க்கு பிறகு மன்னார்குடி பகுதியில் கீழ்க்காணும் வழித்தடங்களில் தட நீட்டிப்பு செய்து இயக்கப்படுகிறது.

(அ) மன்னார்குடி-சென்னை தடப் பேருந்து முத்துப்பேட்டை-சென்னை என நீட்டித்து இயக்கப்படுகிறது.

(ஆ) மன்னார்குடி-பைங்காட்டூர் தடம் மன்னார்குடி-பைங்காட்டூர் கடைத் தெரு வரை 6 நடைகள் நீட்டித்து இயக்கப்படுகிறது.

**32—**

## பேருந்து வசதி

**வினா எண் 4897—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பெரியபுளியம்பாளையத்தில் (சி4, சி14) ஆகிய இரு பேருந்துகளில் ஒன்றை வேட்டைக்காரன்கோயில் வழியாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தடம் எண். சி4 பேருந்து, 6 தனி நடைகளும், சி14 பேருந்து, 4 தனிநடைகளும், ஆக 10 தனி நடைகள் வேட்டைக்காரன்கோயில் வழியாக சென்னிமலை-விஜயமங்கலம் வழித்தடத்தில் இயங்கி வருகின்றன.





**33—**

## பேருந்து வசதி

**வினா எண் 4898—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, நாகரசுநல்லூரிலிருந்து இயக்கப்படும் K5 அரசுப் பேருந்தை மீண்டும் (காங்கேயத்திலிருந்து குண்டடத்திற்கு) தொடர்ந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறுகிய கால இடைவெளியில் பலமுனை வழித்தடங்களில் இயங்கும் தடம் எண் கே. 5 இரு தனிநடைகள் பள்ளி நேரத்திற்கு நாகரசுநல்லூர் வழியே இயக்கப்படுகிறது. அனைத்து நடைகளும் நாகரசுநல்லூர் வழியே இயக்கினால் தனிநடைக்கு 5 கி.மீ. அதிகமாகி, இயக்க நேரம் 10 நிமிடங்கள் கூடுதலாகி, தற்பொழுது இயங்கும் தனிநடைகள் துண்டிப்பு ஏற்படுவதுடன் கால அட்டவணை மாறுபாட்டால், தாயம்பாளையம் பள்ளி குழந்தைகள் பாதிப்படைய நேரிடும்.

**34—**

## பேருந்து வசதி

**வினா எண் 4899—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி (பெருந்துறையிலிருந்து ஈரோடு செல்லும் நகரப் பேருந்து எண் 9-ஐ ஈங்கூர் வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள தடம் எண் 9 நகரப் பேருந்து தனியாருக்கு சொந்தமானதாகும்.

**35—**

**பேருந்து வசதி**

**வினா எண் 4901—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி (சென்னிமலை-ஈரோடு) செல்லும் நகர பேருந்து எண் 11-ஐ சென்னிமலை, ஈங்கூர், உருமாண்டபாளையம், பெருந்துறை ரயில் நிலையம், மேட்டுகடை திண்டல், ஈரோடு மார்க்கமாக இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இயங்கும் தடம் எண் 11-களில் ஒரு பேருந்தை கோரிக்கைப்படி இயக்கினால் தற்சமயம் பயனடைந்து வரும் முத்தையன்கோவில், அசோகபுரம், வெள்ளோடு, மேட்டுப்பாளையம், கவுண்டச்சிபாளையம், ரங்கப்பாளையம், கே. கே. நகர் சுற்றுப்புறப் பகுதி பள்ளிக் குழந்தைகளும், பொதுமக்களும் பாதிப்படைய நேரிடும்.

**36—**

**பேருந்து வசதி**

**வினா எண் 5249—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, கணபதிபாளையம் 14 எண் பேருந்தை வெனசப்பட்டி வரை வந்து செல்ல அரசு அனுமதி வழங்க முன்வருமா?



2008 ஜனவரி 24]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வழித்தட எண்-11 உடுமலை—கணபதிபாளையம் வழித்தடப் பேருந்தை வெனசப்பட்டி வரை நீட்டிக்கும் பட்சத்தில் இயக்க நேரம் மற்றும் நடைகளில் மாற்றங்கள் செய்ய நேரிடும். இதனால் தற்போது இப்பேருந்தினால் பயனடைந்து வரும் பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட நேரிடும் என்பதால் நீட்டித்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. வெனசப்பட்டி கிராமம் தற்போது தடம் எண்-17 மூலம் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது.

**37—**

**பேருந்து வசதி**

**வினா எண் 5257—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வல்லகுண்டாபுரம்-வலையபாளையத்திற்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வலையபாளையம் கிராமம், வல்லகுண்டாபுரத்திலிருந்து சுமார் 3.5 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் ஒரு பேருந்தின் மூலம் தினசரி தற்போது 2 நடைகள் இயக்கி வருகிறது. இக்கிராமம் மிகக் குறைவான மக்கள் தொகை கொண்ட சிறிய ஊராகும். இக்கிராமத்தில் போக்குவரத்து உள்ளாற்றல் அதிகரிக்கும்பட்சத்தில் புதிய வழித்தடங்கள் இயக்கும்போது இக்கிராமத்திற்கு சில நடைகள் கூடுதலாக இயக்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**38—**

## பேருந்து வசதி

**வினா எண் 5768—திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு முதல் சோழதரம் வழியாக ஸ்ரீமுஷ்ணம் செல்லும் பேருந்துகளில் கூட்டத்தைத் தவிர்க்க புதிய பேருந்தும் மற்றும் சேத்தியாதோப்பு, ஓரத்தூர் வழியாக சிதம்பரம் வழித்தடத்தில் புதியதாக பேருந்தும் விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிதம்பரம்-ஸ்ரீமுஷ்ணம் வழித்தடத்தில் 24 நடைகளில் பேருந்து வசதிகள் உள்ளன. மேலும் ஸ்ரீமுஷ்ணம்-சேத்தியாதோப்பு இடையே சோழதரம் வழியாக மேற்குறிப்பிட்டுள்ள 24 நடைகளுடன் சென்றுவரும் தடம் எண் 206, விருத்தாச்சலம்—கும்பகோணம் இடையே ஸ்ரீமுஷ்ணம், பாளையங்கோட்டை, சோழதரம் வழியாக கூடுதலாக 2 நடைகள் 2-9-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

சிதம்பரம், ஓரத்தூர் வழியாக சேத்தியாதோப்புக்கு தற்சமயம் 6 நகரப் பேருந்துகள்மூலம் 51 நடைகளும், 5 புறநகர் பேருந்துகள்மூலம் 15 நடைகளும், மேற்படி வழித்தடத்தில் விழுப்புரம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகத்தால் நாளொன்றுக்கு 66 நடைகளில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

எனவே புதிய பேருந்துகள் இயக்கப்படும்போது மேற்குறிப்பிட்ட தடங்களில் வரும் காலங்களில் கூடுதல் பேருந்து வசதி அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

## பேருந்து வசதி

**வினா எண் 6391—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி செல்லம்பட்டி வாலாந்தூர் வழியாக உச்சப்பட்டி (அழகப்பன் நகர்) செல்லும் பேருந்தை காலையில் பள்ளி நேரத்தில் உச்சப்பட்டிக்கு இயக்க அரசு முன் வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் :**

தற்போது மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி, வாலாந்தூர் வழியாக உச்சப்பட்டிக்கு 14 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நடைகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையினை கவனத்தில் கொள்ளும் போது இத்தடத்தில் மேலும் கூடுதல் நடைகள் இயக்கும் தேவை எழவில்லை. மேலும், இத்தடத்தில் ஒரு தனிப் பேருந்து மூலம் இயக்கப்பட்டு வரும் மேற்படி நடைகள் உச்சப்பட்டி கிராம மக்களின் வேண்டுகோளின்படி இயக்க நேரங்கள் அமைக்கப்பட்டு நீண்டகாலமாக இயக்கப்பட்டு வருகின்றன.

**40—**

## பேருந்து வசதி

**வினா எண் 6517—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மாட்டையாம்பட்டி வழியாக ஓமலூரிலிருந்து எளம்பிள்ளை வரை நங்கவள்ளிக்கும்—எளம்பிள்ளைக்கும், சின்னப்பம்பட்டி, மாட்டையாம்பட்டி வரையிலும் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர்—எளம்பிள்ளை (வழி) மாட்டையாம்பட்டி மற்றும் நங்கவள்ளி—எளம்பிள்ளை (வழி) சின்னப்பம்பட்டி, மாட்டையாம்பட்டி வழித்தடத்தில் தற்போதுள்ள பகுதிவாரியான பேருந்து விவரம் பின்வருமாறு:

[2008 ஜனவரி 24

| வ. எண் | வழித்தடம் | பேருந்துகள் எண்ணிக்கை | நடைகள் |
|---|---|---|---|
| 1. | ஓமலூர்-பாப்பம்பாடி (வழி) தாரமங்கலம் | 12 | 85 |
| 2. | பாப்பம்பாடி-கே.கே. நகர் (வழி) மாட்டையாம்பட்டி | 1 | 10 |
| 3. | கே.கே. நகர்-எளம்பிள்ளை | 2 | 16 |
| 4. | தாரமங்கலம்-நங்கவள்ளி | 7 | 44 |
| 5. | ஓமலூர்-தாரமங்கலம் | 17 | 132 |
| 6. | தாரமங்கலம்-பாப்பம்பாடி | 18 | 124 |

மேற்படி பகுதி வாரியான பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளதால் கூடுதல் நடைகள் இயக்க தேவை எழவில்லை.

**41—**

## பேருந்து வசதி

**வினா எண் 7047—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெவிஞ்சுபுரத்தில் விரைவுப் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிகை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், அஞ்சுகிராமம், விஸ்வநாதபுரம் கிராமங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ள பெவிஞ்சிபுரத்தில் அவ்வழியாக இயக்கப்படும் "வி" பாஸ்ட் உள்ளிட்ட விரைவுப் பேருந்துகளுக்கு நிறுத்தம் அனுமதிக்கப்பட்டு தற்போது அமலில் இருந்து வருகிறது.



2008 ஜனவரி 24]

**42—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 7127—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில், முத்துமுடி முதல்கோட்டத்திற்குக் கூடுதலாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வால்பாறை சோலையார் டேம் செல்லும் பிரதான சாலையில் முத்துமுடி பிரிவிலிருந்து சுமார் 1 கிமீ. தூரத்தில் முத்துமுடி முதல் கோட்டம் அமைந்துள்ளது. முத்துமுடி முதல்கோட்டத்திற்குச் செல்லும் சாலையானது தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமானதாகும். இச்சாலை குறுகியதாகவும், குறுகிய வளைவுகளைக் கொண்டதாகவும் உள்ளதால் பேருந்து இயக்குவதற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. தற்போது பிரதான சாலை வழியாக கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக 9 பேருந்துகள் தினசரி 22 நடைகள் இயங்கி வருகின்றன.

**43—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 7667—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி, நாச்சூர், கருங்கல்காட்டு வளவு, தளவாய்ப்பட்டி குண்டுரசம்பாளையம் வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியிலிருந்து நாச்சியூர், தளவாய்ப்பட்டி, குண்டுரசம்பாளையம் ஆகிய பகுதிகள் வழியாக அரசு நகரப் பேருந்து

[2008 ஜனவரி 24

தடம் எண் 2டி மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. கேட்கப்பட்டுள்ள வழித்தடத்தில் குறிப்பிட்டுள்ள கருங்கல்காட்டுவளவு பகுதியானது தற்போது பேருந்து வசதியுள்ள மேற்படி சாலையின் குருமப்பட்டி பிரிவிலிருந்து சுமார் 2. கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இப்பகுதிக்குச் செல்லும் சாலையானது மண்சாலையாகவும், எதிரே வாகனம் வந்தால் ஒதுங்கிட இயலாத அளவிற்கு குறுகலாகவும் உள்ளது. எனவே, இப்பகுதிக்கு பேருந்து இயக்கிட இயலாது.

**44—**

## பேருந்து வசதி

**வினா எண் 7817—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காளிகேசம், பாலமோர், மாறாமலை பகுதிகளுக்கு அரசுப் பேருந்துகள் இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாகர்கோவில் பாலமோர் சாலையில் தற்போது கீரிப்பாறை வரை பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கீரிப்பாறையிலிருந்து 0.5 கி.மீ. தூரத்திலுள்ள பாலத்தின் இருமருங்கிலும் தடுப்புச் சுவர்கள் கட்டப்பட்டு வரும் பணிகள் நடைபெறுவதால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது. பால வேலை முடிவுற்று சாலை சரிசெய்யப்பட்டு போக்குவரத்திற்கு உகந்ததாக செய்த பின்னர் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**45—**

## பேருந்து வசதி

**வினா எண் 8399—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டையிலிருந்து பத்திரக்கோட்டை பள்ளத் தெருவிற்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர்—பத்திரக்கோட்டை இடையே நகரப் பேருந்து எண் 37, ஆறு நடைகளும், நகரப் பேருந்து எண் 15, நான்கு நடைகளும், பண்ருட்டி—குள்ளஞ்சாவடி இடையே நகரப் பேருந்து எண் 18, பத்திரக்கோட்டை வழியாக 4 நடைகளுமாக இயக்கப்படுகிறது. பத்திரக்கோட்டைக்கும்—பத்திரக்கோட்டை பள்ளத்தெருவிற்கும் இடைப்பட்ட தூரம் 1 கி.மீ. இப்பகுதியில் அமைந்துள்ள சாலை குறுகலாகவும், 260 செ.மீ. அகலத்திற்கு குறைவாகவும் உள்ளதால் இச்சாலையில் பேருந்து சென்றுவர கடினமாகும். எனவே இச்சாலையை அகலப்படுத்தி பேருந்து செல்வதற்கு ஏற்றதாக செய்யப்பட்ட பின்பு பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 9412—திருமதி ஜி. லதா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம்—மொர்தானா 4—பி பேருந்து, குடியாத்தம்—அணைக்கட்டு பேருந்து, குடியாத்தம்—மேலாலாத்தூர் ஜி—14ஏ பேருந்து ஆகிய பேருந்துகளை முழு நேரமாக இயக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குடியாத்தம்—மொர்தானா என இயக்கப்பட்டு வரும் 4பி நகரப் பேருந்து இத்தடத்தில் தினசரி 6 நடைகள் இயக்கப்படுவதுடன் கொட்டரமடுகு, வளத்தூர், அனங்காநல்லூர் மற்றும் சைனகுண்டா ஆகிய கிராமங்களுக்கும் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் ஜி 4 நகர பேருந்தும் குடியாத்தம்—மொர்தானா என தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருவதால் இப்பகுதிக்கு தினசரி 12 நடைகள் பேருந்து வசதி கிடைக்கிறது. 4பி நகரப் பேருந்தை முழுநேரமாக இயக்கினால் மக்கள் பயன்பாடு போதிய அளவு இருக்காது என்பதாலும், தற்போது பயன்பெறும் கிராமங்கள் பேருந்து வசதியை இழக்க நேரிடும் என்பதாலும், இத்தடத்தில் முழுநேரப் பேருந்து இயக்கம்

[2008 ஜனவரி 24

அவசியமில்லை எனக் கருதப்படுகிறது. ஜி 10பி நகரப் பேருந்து குடியாத்தம்—அணைக்கட்டு (பின்னத்துறை) தினசரி 4 நடைகள் இயக்கப்படுவதுடன், ஒடுக்கத்தூருக்கும் இயக்கப்படுகிறது. மேலும், குடியாத்தம்—அணைக்கட்டு என ஜி7 நகரப் பேருந்து முழுநேரமாக தினசரி 16 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. குடியாத்தம்—மேல் ஆலத்தூர் என இயக்கப்படும் ஜி14ஏ/ஏ நகரத் தடம் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. இவ்வாறு இயக்கும்போது மக்கள் பயன்பாடின்றி மிகவும் குறைந்த அளவு வருவாய் ஈட்டியதால், இத்தடத்தில் இயக்கப்பட்டு வந்த 8 நடைகளும் 159பி, 23, 10பி, 4பி ஆகிய தடப் பேருந்துகளில் இரண்டு நடைகள் வீதம் கொடுக்கப்பட்டு 8 நடைகளும் அதே கால அட்டவணையின்படி இயக்கப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் 6 மினி பேருந்துகளும், 2 தனியார் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. எனவே, மக்கள் பயன்பாடு அடிப்படையில் ஜி14ஏ/ஏ நகரப் பேருந்து முழுநேரமாக இயக்கப்படுவது அவசியமில்லை என கருதப்படுகிறது.

47—

## அரசு விரைவுப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 9464—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையிலிருந்து—சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து ஒன்று இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் தற்போது பேருந்துகள் கீழ்க்காணும் வழித்தடம் மானாமதுரை வழியாகவும், அதன் அருகிலுள்ள சிவகங்கை வழியாகவும் சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | தடம் எண் | செல்லுமிடம் | வழி | மொத்த பேருந்துகள்/ நடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1. | 167 | சாயல்குடி-சென்னை | மானாமதுரை, சிவகங்கை | 2 | 2 |
| 2. | 162 | சிவகங்கை-சென்னை | திருப்பத்தூர் | 2 | 2 |



2008 ஜனவரி 24]

மானாமதுரை-சென்னை பயணிகள் மானாமதுரை வழியாக வரும் தடம் எண் 167-ஐப் பயன்படுத்தியோ அல்லது தடம் எண் 162 (சிவகங்கை-சென்னை) நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்திட அருகிலுள்ள சிவகங்கை சென்று அங்கிருந்து இயக்கப்படும் மேற்படி பேருந்து வசதியைப் பயன்படுத்தியோ சென்னை சென்றுவர ஏதுவாக உள்ளது. இந்நிலையில் மானாமதுரை-சென்னை தடத்தில் நேரடிப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

48—

## பேருந்து வசதி

**வினா எண் 9742—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் கிராமத்திலிருந்து கிருஷ்ணகிரி, கெலமங்கலம் ஒன்றியம், கூடூர் கிராமம், பன்னிஹள்ளி கிராமம், அத்தனூர் கிராமம், மிட்டஹள்ளி பஞ்சாயத்து, மோட்டுபட்டி கிராமம் மற்றும் குட்டிக்கவுண்டனூர் கிராமம் ஆகிய பகுதிகளில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி—பாரூர் வழித்தடத்தின் நீளம் 35 கி. மீட்டராகும். அவ்வழித்தடம் முழுவதும் நகரப் பேருந்து தடம் எண் கே.47, கே.50, கே. 31 மற்றும் கே.27—ன் மூலம் 22 நடைகளில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

கூடூர் கிராமம் கெலமங்கலத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் உள்ளது. கூடூர் கிராமத்தில் சுமார் 25 வீடுகளும், மக்கள் தொகை சுமார் 100 மட்டுமே உள்ளது. மேலும், நாகதோனை முதல் கூடூர் கிராமம் வரையுள்ள சாலை பேருந்து போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லை.

பன்னிஹள்ளி கிராமம், ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே. 33 மற்றும் கே. 24-ன் மூலம் பேருந்து நிறுத்தம் செய்து வரும் பன்னிஹள்ளி பிரிவு சாலையிலிருந்து 1 கி.மீ. நடைபயண தூரத்திலேயே உள்ளது. இதனால் அரசு ஆணைப்படி இக்கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது.

[2008 ஜனவரி 24

அத்தனூர் கிராமம், ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே 27 மற்றும் பி. 07-ன் மூலம் மொத்தம் 14 நடைகளில் பேருந்துகள் இயங்குவதால் அக்கிராமம் போதுமான அளவு பேருந்து வசதி பெற்றுள்ளது.

மோட்டுப்பட்டி கிராமம் காவேரிப்பட்டினத்திலிருந்து 6 கி.மீ. தூரத்தில் உள்ளது. இத்தடத்தில் நகரப் பேருந்து தடம் எண் கே 6ஏ மற்றும் கே 55-ன் மூலம் காலையும், மாலையும் பள்ளி மாணவர்களுக்கு ஏற்றவாறு தலா 2 நடைகள் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. குட்டிக்கவுண்டனூர் கிராமம் ஏற்கெனவே நகரப் பேருந்து தடம் எண் கே 57 மற்றும் பி 15-ன் மூலம் மொத்தம் 8 நடைகள் இயக்கப்படுகின்றன.

**49—**

## பேருந்து வசதி

**வினா எண் 11045—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் உள்ள நைனாக்காடு, கள்ளிக்காடு, சின்னேரிக்காடு, வெட்டுக்காடு, கரம்புக்காடு, விதைப்பண்ணை வழியாக டேனிஷ்பேட்டை வரை உள்ள வழித்தடத்தில பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசுப் பேருந்து தடம் ஓ 10-ன் மூலமாக சேலம் மாநகரிலிருந்து ஓமலூர், நைனாக்காடு, கள்ளிக்காடு, சின்னேரிக்காடு மற்றும் ஏரி ரோடு வரையிலும் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. கோரப்பட்டுள்ள தடத்தில் மேற்கொண்டு அமைந்துள்ள பகுதிகளான வெட்டுக்காடு முதல் கரம்புக்காடு வரையிலான பாதை மிகவும் குறுகலாகவும், மண் சாலையாகவும் இருப்பதால், இத்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாது.

**50—**

## பேருந்து வசதி

**வினா எண் 11994—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

*(அ)* ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சின்னப்பம்பட்டி, சங்ககிரி, ஈரோடு வழி கோயம்புத்தூருக்கும் மற்றும் முத்துநாயக்கன்பட்டி-கே.ஆர். தோப்பூர் வழி இளம்பிள்ளைக்கும் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஓமலூரிலிருந்து தாரமங்கலம், சின்னப்பம்பட்டி, சங்ககிரி வழியாக ஈரோடு வரை அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கொரு பேருந்து வசதியும், ஈரோடு முதல் கோயம்புத்தூர் வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம், ஈரோடு மற்றும் கோவை ஆகிய மண்டலங்களின் பேருந்துகள் மூலம் 5 நிமிடத்திற்கொரு பேருந்து வசதியென பகுதி வாரியாக போதியளவிற்கு இருப்பதால் நேரடிப் பேருந்து வசதி தேவை எழவில்லை.

ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி, கே.ஆர். தோப்பூர் பகுதிகளுக்கு அரசு நகரப் பேருந்துகள் 4-ன் மூலம் 26 நடைகள் மற்றும் தனியார் பேருந்துகள் 3-ன் மூலம் 54 நடைகளும் இயக்கப்படுகின்றன. கே.ஆர். தோப்பூர் முதல் இளம்பிள்ளை வரை தனியார் மினிப் பேருந்துகள் இரண்டின் மூலம் தினசரி 30 நடைகள் இயக்கி இவ்வழித்தடப் பகுதியினரின் போக்குவரத்து தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. எனவே, மேற்கண்ட இரு வழித்தடங்களிலும் புதிய மற்றும் நேரடிப் பேருந்து இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**51—**

## பேருந்து வசதி

**வினா எண் 13415—திருமதி ர. லீமா ரோஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமாரி மாவட்டம், அரசு போக்குவரத்துக் கழகம், திருவட்டாறு கிளை பணிமனையிலிருந்து மார்த்தாண்டம், புளிச்சிமாவிளை, அம்பாங்காலை கிராமம் வழியாக குலசேகரத்திற்கு இயங்கி வருகின்ற தடம் எண் பி.எச்.எஸ்.32 பேருந்தை சீராக இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை, நாகர்கோவில் வட்டாரம், திருவட்டாறு பணிமனையிலிருந்து இயக்கப்பட்டு வரும் தடம் எண் பி.எச்.எஸ். 38 பேருந்து தற்போது தடையின்றி மார்த்தாண்டம், புளிச்சிமாவிளை, அம்மாங்காலை வழியாக குலசேகரத்திற்கு சீராக இயக்கப்பட்டு வருகிறது.

**52—**

**கூடுதல் பேருந்து வசதி**

**வினா எண் 20528—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியிலிருந்து இனாம்குளத்தூர், பொருவாய் வழியாக விராலிமலைக்கு காலை 8.00 மணிக்கு வரும் எல்.எஸ்.எஸ். 120 நகரப் பேருந்தை காலை 7.00 மணிக்கு ஒரு நடை கூடுதலாக இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நகரப் பேருந்து மூலம் திருச்சியிலிருந்து இனாம்குளத்தூர், பொருவாய் வழியாக விராலிமலைக்கு 10 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. மணப்பாறையிலிருந்து விராலிமலை வழியாக இனாம்குளத்தூருக்கு 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்.எஸ்.எஸ். 120 நகரப் பேருந்து காலை 7.15 மணிக்கு விராலிமலையில் புறப்பட்டு தென்னம்பாடி வரை இயக்கப்படுவதால் இப்பேருந்தில் காலை 7.00 மணிக்கு கூடுதலாக நடை இயக்க வழி வகையில்லை.

**53—**

**பேருந்து வசதி**

**வினா எண் 21270—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) வால்பாறை தொகுதி, குரங்குமுடி முதல் பொள்ளாச்சி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது கோவை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் குரங்குமுடி முதல் பொள்ளாச்சி வரை 2 பேருந்துகளின் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கி வருகிறது. தற்போதைய நிலைக்கு, மேற்காண் பேருந்து வசதியே போதுமானதாகும்.

**54—**

**பேருந்து வசதி**

**வினா எண் 21272—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஹைபாரஸ்ட் முதல் பொள்ளாச்சி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், கோயம்புத்தூர், 3 பேருந்துகளின் மூலம் தினசரி 10 நடைகள் ஹைபாரஸ்ட் முதல் பொள்ளாச்சி வரை இயக்கி வருகிறது. தற்போதைய நிலைக்கு இப்பேருந்து வசதியே போதுமானதாகும்.

**55—**

**புதிய பேருந்து**

**வினா எண் 30737—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு-வெள்ளோடு சென்னிமலை வழி காங்கேயம் மற்றும் சென்னிமலை-பெருந்துறை சிப்காட் ஆகிய பகுதிகளுக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோட்டிலிருந்து வெள்ளோடு, சென்னிமலை, காங்கேயம் வழியாக புறநகர் பேருந்துகள் 22-4-2007 முதல் இயக்கப்படுகின்றன. சென்னிமலையிலிருந்து சிப்காட் வழியே பெருந்துறைக்கு 16-5-2007 முதல் நகரப் பேருந்து இயக்கப்படுகிறது.

**56—**

**குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 13327—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை, வட்டத்தில், திருமூர்த்தி நகரில், அகதிகள் முகாம் குடியிருப்பிலுள்ள வீடுகளைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில், திருமூர்த்தி நகரில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் உள்ள வீடுகளை பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(ஆ) ஆம், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் கட்டடங்கள் கட்டுமானம் மற்றும் பாரமரிப்புப் பிரிவு அவர்களிடமிருந்து திட்ட மதிப்பீடு பெற்று மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் அடிப்படையில் மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதலுக்குப் பின்னர் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



**57—**

**அலுவலகத்தைப் புதுப்பித்தல்**

**வினா எண் 17278—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள பத்திரப் பதிவு அலுவலகத்தை புதுப்பிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகரிலுள்ள (மாவட்டப் பதிவாளர் அலுவலகக் கட்டடம்) பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு பராமரிக்கும் பணிகளுக்கு ரூ. 6.00 இலட்சம் மதிப்பில் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டு, பராமரிப்பு பணிகள் பொதுப் பணித் துறையினரால் மேற்கொள்ளப்பட்டு தற்போது அப்பணிகள் முடிக்கப்பட்டு விட்டன.

**58—**

**பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 29993—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு அரசு ஒதுக்கியுள்ள நிலத்தில் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு 25 சென்ட் நிலம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் அரசு கட்டடம்

[2008 ஜனவரி 24

கட்டுவதற்கு பொதுப் பணித் துறையினரிடமிருந்து மதிப்பீட்டறிக்கை பெற நடவடிக்கையில் உள்ளது. மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டு அரசின் நிதி/நிர்வாக ஒப்புதலுக்குப் பிறகு கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**59—**

**மாற்று மின் இயக்கி வழங்குதல்**

**வினா எண் 34082—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்கு மாற்று மின் இயக்கி வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக்கு மாற்று மின் இயக்கி வழங்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* வினா எழாது.

**60—**

**எவர்சில்வர் தொழிற்சாலை**

**வினா எண் 22637—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரையில் எவர்சில்வர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை பகுதியில் எவர்சில்வர் உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்கள் ஏதும் தொடங்கப்படவில்லை. எவர்சில்வர் மூலப்பொருட்களைக் கொண்டு எவர்சில்வர் பாத்திரங்கள், எவர்சில்வர் பாலிசிங் தொழில் புரியும் ஆறு சிறு தொழில் நிறுவனங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன.

மானாமதுரை எவர்சில்வர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு மூலம் தொடங்க திட்டம் ஏதும் இல்லை. எனினும் தனியார் நிறுவனங்கள் எவர்சில்வர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன் வந்தால், வங்கிகள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்மூலம் நிதி உதவி பெற்றுத் தருவதுடன் தொழில் தொடங்கிட உரிய ஆலோசனைகளும் மாவட்டத் தொழில் மையம் மூலம் அளிக்கப்படும்.

**61—**

**சுற்றுலாத் தலமாக அறிவித்தல்**

**வினா எண் 33936—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* முகையூர் தொகுதி, அரகண்ட நல்லூர் ஈஸ்வரன் கோயிலைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

*(ஆ)* முகையூர் தொகுதி, அரகண்ட நல்லூர், ஈஸ்வரன் கோயில் பகுதியை சுற்றுலாத் தலமாக்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

[2008 ஜனவரி 24

62—

## சுற்றுலாத்தலமாக்குதல்

**வினா எண் 35036—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், பனங்குடி ஏரியை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் தமிழ்நாட்டின் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை.

(ஆ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், பனங்குடி ஏரிப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து சுற்றுலாத் தலமாக்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

63—

## பயணியர் சுற்றுலா விடுதி

**வினா எண் 35526—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூர் சுற்றுலாத் தலத்தில் பயணியர் சுற்றுலா விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, மாயனூர் சுற்றுலாத் தலத்தில் பயணியர் சுற்றுலா விடுதி அமைத்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2008 ஜனவரி 24]

64—

## படகு சவாரி

**வினா எண் 35546—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, சாவடியில் பயணிகள் தங்கும் விடுதியும், குறிஞ்சி குளத்தில் படகு சவாரி அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) பேரூர் தொகுதி, சாவடியில் பயணிகள் தங்கும் விடுதியும், குறிஞ்சி குளத்தில் படகு சவாரிக்கு ஏற்பாடு செய்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

65—

## கூடுதல் விடுதி அறைகள்

**வினா எண் 36511—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணை, நீரார் அணை, ஆழியார் அணை, பரம்பிக்குளம் அணை ஆகிய பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் கூடுதல் அறை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, சோலையார் அணை, நீரார் அணை, ஆழியார் அணை, பரம்பிக்குளம் அணை பகுதிகளில் தமிழ்நாடு அரசு

[2008 ஜனவரி 24

சுற்றுலாத் துறையின்மூலம் தங்கும் விடுதிகள் ஏதும் இதுவரை கட்டப்படவில்லை. எனவே கூடுதல் அறைகள் கட்டும் திட்டம் ஏதும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**66—**

## அரசு அச்சகம்

**வினா எண் 36185—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் கோணம் தொழிற்பேட்டையில் அரசு அச்சகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

இது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**67—**

## பொருட்காட்சி

**வினா எண் 37013—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் அரசின் சார்பில் பொருட்காட்சிகள் ஆண்டுக்கு ஒரு முறை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் அரசின் சார்பில் பொருட்காட்சி நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**68—**

## மருத்துவமனையை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 9812—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) பண்ருட்டி தொகுதி, நடுக்குப்பம் கிராம சுகாதார மருத்துவமனையை மீண்டும் இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், மருங்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட நடுக்குப்பம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. நடுக்குப்பம் துணை சுகாதார நிலையம் உபயோகப்படுத்த தகுதியற்ற நிலையில் உள்ளது. பொதுப் பணித் துறையிடம் கழிவு நீக்கச்சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. கழிவு நீக்கச்சான்றிதழ் பெறப்பட்டதும் புதிய துணை சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**69—**

## கட்டட வசதி

**வினா எண் 10926—திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீரங்கம் தொகுதி, அந்தநல்லூர் ஒன்றியம் அந்தநல்லூர் கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் முன்னாளில் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகமாக செயல்பட்டு வந்தது. இந்நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றம் செய்து, அதே ஊராட்சி ஒன்றிய மருந்தகக் கட்டடத்திலேயே இதுநாள்வரை அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றியக் கட்டடம், மற்றும்

அதனைச் சார்ந்த சுமார் 27.58 செண்ட் பரப்பளவு காலியிடம் ஊராட்சி ஒன்றிய பொறுப்பில் இருந்து பொதுச் சுகாதாரத் துறைக்கு மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் பெறுவது சம்பந்தமாக தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேவையான நிலம் கிடைத்தவுடன் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**70—**

## தாய்சேய் நல மருந்தகம்

**வினா எண் 13479—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், நம்பம்பட்டியில் செயல்பட்டு வந்த தாய்சேய் நல மருந்தகம் மீண்டும் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை சுகாதாரப் பகுதி மாவட்டம், கொடும்பாளூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட நம்பம்பட்டி துணை சுகாதார நிலைய கட்டடம் பஞ்சாயத்து யூனியனால் 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. தற்போது அக்கட்டடம் பழுதடைந்துள்ளது. தற்போது தனியார் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தாய்சேய் நல மருந்தகக் கட்டடத்தை பழுதுகள் சரி செய்ய பொதுப் பணித் துறையிடம் மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பெறப்பட்டதும் 2007-2008-ம் நிதி ஆண்டில் முன்னுரிமை கொடுத்து கட்டடப் பழுதுகள் சரி செய்யப்பட்டு அக்கட்டடத்தில் மீண்டும் துணை சுகாதார நிலையம் செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.



**71—**

## எய்ட்ஸ் குறித்து விளம்பரம்

**வினா எண் 17176—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்திரிக்கைகளில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றிய செய்திகளை தொடர்ந்து விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தின் 2007-2008ஆம் ஆண்டிற்கான செயல்முறைத் திட்டம் புது டெல்லியிலுள்ள தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன், எய்ட்ஸ் விழிப்புணர்வு பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் தொடர்ந்து விளம்பரம் செய்யப்படும்.

**72—**

## புகையிலையின் தீமை குறித்து விளம்பரம்

**வினா எண் 17177—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் புகையிலையினால் ஏற்படும் தீமைகளை செய்தித்தாள்கள், தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் புகையிலை மற்றும் சிகரெட் பிடிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்பட்டது. 20-3-2007 அன்று இச்செய்தி 21-3-2007 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 24

சினிமாத் துறை சார்ந்த முக்கியஸ்தர்கள் செய்தியாளர்கள், தொலைக்காட்சி மற்றும் பிற விளம்பர நிறுவனங்கள் ஆகியோருக்கு இந்த தடுப்புச் சட்டம் பற்றி விளம்பரம் கொடுக்க வேண்டுகோள் விடுத்துள்ளதுடன், புகையிலைப் பழக்கத்தை ஊக்குவிக்கும் விளம்பரங்களை விளம்பரப்படுத்தாமல் இருக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவை புகையிலைப் பழக்கம் இல்லாத நாடாக உருவாக்க ஒத்துழைக்கும்படி அனைத்து விளம்பர நிறுவனங்களும் வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளன.

பொது சுகாதாரத் துறையினால் நடத்தப்படும் நல முகாம் மற்றும் நல விழாக்களில், புகையிலையினால் விளையும் நலக்கேடுகளை விளக்கும் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு, 1329 "வரும் முன் காப்போம்" முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அம்முகாம்களில் கண்காட்சிகள் மூலமாகவும், அறிவுரை மூலமாகவும் புகையிலை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பள்ளி நலத் திட்டத்தின்கீழ் பள்ளி நலக் குழுவினர் மூலம் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பள்ளி மாணவர்களுக்கு புகையிலையினால் ஏற்படும் தீங்குகள் பற்றி நலக் கல்வி அளிக்கப்படுகிறது.

நலக் கல்வி அளித்தும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுத்தும் புகையிலை பழக்கத்தை ஒழிக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தற்போது இந்திய அரசும் பொது இடங்களில் புகைத்தல் மற்றும் புகையிலைப் பொருட்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைத் தடுக்க 1-5-2004 முதல் சட்டம் கொண்டு வந்துள்ளது.

**73—**

## செங்கண்நோய் தடுப்பு

**வினா எண் 17230—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தை அச்சுறுத்திவரும் சென்னை கண் நோய் என்கிற செங்கண் நோய் தடுப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை கண் நோய் என்கிற செங்கண் நோய், நுண்கிருமிகளால் வருகிறது. இந்த செங்கண் நோய் வருவதைத் தடுக்க இயலாது, ஆனால் இந்த நோய் வந்த பின் அதனை தக்க சிகிச்சை அளித்து குணமாக்கலாம். தமிழகத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் செங்கண் நோய் வந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

**74—**

## கட்டட வசதி

**வினா எண் 17704—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் பெத்தநாயக்கனூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஆழியார் நகர், ஆனைமலை, சேத்துமடை, டாப்சிலிப் ஆகிய கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும், பெரிய பொது முதன்மை ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்படுகின்றன. 2 ஏக்கர் 29 செண்ட் பரப்பளவு உள்ள இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3,817 சதுர அடி பரப்பளவில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. தற்போதுள்ள கட்டட வசதி போதுமானதாக உள்ளதால் கூடுதல் கட்டடங்கள் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 ஜனவரி 24

75—

### மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 3562—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூரில் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்கு போதுமான மருத்துவர்கள் நியமித்து தேவையான மருந்துகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் உள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட 55 மருத்துவர் பணியிடங்களில், தற்போது இரண்டு உதவி மருத்துவர் பணியிடங்கள் மட்டும் காலியாக உள்ளன. மேற்கண்ட காலியிடங்களை கலந்தாய்வின் வாயிலாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட மருந்தகங்களில் மருத்துவர் பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை. சிங்காநல்லூர் தொகுதியில் உள்ள அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையில் தற்போது போதுமான அளவில் மருந்துகள் இருப்பில் உள்ளன.

76—

### கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்

**வினா எண் 32293—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி மானாமதுரை, திருப்புவனம் பேரூராட்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி மானாமதுரை மற்றும் திருப்புவனம் பேரூராட்சி நகர்களில் இயங்கி வந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் நட்டத்தில் இயங்கிய காரணத்தினால் 1-5-1997 அன்று மூடப்பட்டன. மானாமதுரை, திருப்புவனம் பேரூராட்சிகளுக்கு அருகில் மதுரை, பரமக்குடி, சிவகங்கை ஆகிய நகரங்களில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் பண்டிகைக் காலங்களில் மானாமதுரை, திருப்புவனம் பேரூராட்சிகளில் வாடிக்கையாளர்களின் வசதிக்காக வளாக விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



2008 ஜனவரி 24]

77—

### கால்நடை மேய்ச்சல்

**வினா எண் 26619—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம் காடையாம்பட்டி வனத் துறை பகுதியில் கால்நடை மேய்வதற்கு அனுமதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

சேலம் மண்டலம், சேலம் வனக்கோட்டத்திற்குட்பட்ட காடையாம்பட்டி வனப்பகுதி காப்புக் காடுகளை உள்ளடக்கியது. இதை ஒட்டிய கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் வரும் பகுதிகளில் மேய்ச்சல் அனுமதிக்கப்பட்டால் நடப்பட்ட செடிகளுக்கும் புதியதாக தழைக்கும் செடிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதால் மேய்ச்சல் அனுமதிக்கப்படுவதில்லை. தோட்டங்கள் எழுப்பப்பட்டு ஐந்தாண்டுகள் கழிந்தபிறகு சம்பந்தப்பட்ட தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராம வனக் குழுக்களில் இது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில், கால்நடை மேய்ச்சலுக்கு அனுமதி அளிக்கப்படும்.

78—

### சத்துணவுத் திட்டம் தொடங்குதல்

**வினா எண் 13027—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) கபிலர் மலை ஒன்றியம், பெருங்குறிச்சி ஊராட்சி, உப்புபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் அமல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு கல்வி ஆண்டில் உப்புபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் வருகைப் பதிவேட்டின்படி மொத்தம் 20 பேர் வருகை புரிகின்றனர். பள்ளி வருகைப் பதிவேட்டின்படி மொத்தம் உள்ள 20 மாணவ, மாணவியருமே சத்துணவு உண்ண விருப்பம் தெரிவித்துள்ளதால், புதிய சத்துணவுக் கூடம் தொடங்க முன்மொழிவினை பரிசீலனை செய்ததில் அரசு விதிகளின்படி சத்துணவு மையங்களில் பயனடையும் பயனாளிகள் எண்ணிக்கை 25-க்கும் குறையுமானால் அந்த மையங்களை உடனடியாக மூடிவிட்டு அந்த மையத்தில் பயனடைந்து வந்த மாணவ மாணவியருக்கு அருகில் உள்ள சத்துணவு மையத்திலிருந்து உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்நிலையில் உப்புபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு அருகில் உள்ள சத்துணவு மையம் வீரக்குட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆகும். இப்பள்ளிக்கும் உப்புபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர். மேலும், வீரக்குட்டை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சமையலர் பணியிடமும் காலியாக இருப்பதால், Runner Service மூலமும் சத்துணவு வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, வரும் கல்வியாண்டில் உப்புபாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் மாணவ மாணவியர் எண்ணிக்கை 25-க்கு மேற்பட்டு இருக்குமானால் புதிதாக சத்துணவு மையம் தொடங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**79—**

### பழுதுபார்த்தல்

**வினா எண் 14483—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள சத்துணவுக் கூடத்தை பழுது பார்க்க அரசு முன்வருமா?



2008 ஜனவரி 24]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளி சத்துணவுக் கூடக் கட்டடம் 2004-2005ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சி பொது நிதி ரூ.1.25 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**80—**

### தரமான அரிசி வழங்குதல்

**வினா எண் 16064—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களுக்கு தரமான அரிசி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் (வால்பாறை தொகுதி உட்பட) உள்ள அனைத்து சத்துணவுக் கூடங்களுக்கும் முதல் தரமான (Grade 'A') அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

**81—**

### முதியோர் காப்பகம் அமைத்தல்

**வினா எண் 23770—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் முதியோர் காப்பகம் அமைக்க அரசு முன்வருமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் அரசு முதியோர் இல்லங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. மாநில அரசின் மானியத்துடன் 14 முதியோர் இல்லங்களும், மத்திய அரசு மானியத்துடன் 49 முதியோர் இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன.

கிருபா டிரஸ்ட், திருப்பாலை அஞ்சல், மதுரை என்ற தொண்டு நிறுவனம் மத்திய அரசின் மானியம் பெற்று முதியோர் இல்லத்தினை நடத்தி வருகிறது.

**82—**

**சலுகை விலையில் உணவுப் பொருட்கள்**

**வினா எண் 29873—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம், கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதரவற்ற மாணவ, மாணவியருக்கான விடுதிக்கு சலுகை விலையில் உணவுப் பொருள்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் தொகுதி, வடக்கன்குளம், கன்கார்டியா மேல்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதரவற்ற மாணவ, மாணவியருக்கான விடுதி, சலுகை விலையில் உணவுப் பொருள்கள் பெற அரசு விதித்துள்ள விதிமுறைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உரிய விவரங்கள், ஆவணங்கள் போன்றவற்றை அளித்து விண்ணப்பிக்கும் பட்சத்தில் சலுகை விலையில் உணவுப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யும்.



2008 ஜனவரி 24]

**83—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 3435—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்திலுள்ள மருங்கூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கவும், மருத்துவர்களை நியமனம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்தில் திருமருகல், ஏனங்குடி, ஆம்பல் ஆகிய கால்நடை மருந்தகங்களும் திட்டச்சேரி திருபையத்தான்குடி, திருடிகளூர், கங்களாஞ்சேரி, கணபதிபுரம் ஆகிய கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும் நாகப்பட்டினம் ஒன்றியத்தில் செயல்படும் பெருங்கடம்பனூர் கால்நடை கிளை நிலையம் மருங்கூர் கிராமத்திற்கு 7 கி.மீ. தொலைவில் செயல்படுகிறது. டானிடா திட்டத்தின் இணைப்புத் தம்பதியினர் மூலமும் கால்நடைகளுக்கு கருவூட்டல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆதலால் நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியத்திலுள்ள மருங்கூர் ஊராட்சியில் ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு மற்றும் மருத்துவர்கள் நியமனம் பற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**84—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 11415—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

*(அ) தருமபுரி தொகுதி, வெள்ளாளப்பட்டி ஊராட்சி, சவுக்குத் தோப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. சவுக்குத் தோப்பு கிராமத்திற்கு அருகில் கிருஷ்ணாபுரம் கால்நடை மருந்தகம் 6 கி.மீ. தொலைவிலும், செட்டிகரை கால்நடை மருந்தகம் 9 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழாது.

**85—**

### கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 11584—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் இராயபுரம் கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட தற்போது அரசிடம் ஏதும் செயற்குறிப்பு இல்லை.



2008 ஜனவரி 24]

**86—**

### கால்நடை பார்வை நிலையம்

**வினா எண் 11782—திரு. ஜ. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பத்மனாபபுரம் தொகுதி, ஆத்திவிளை ஊராட்சி நெல்லியார்கோணத்தில் கால்நடை பார்வை நிலையத்தை முழுநேரப் பார்வை அரசு மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பத்மனாபபுரம் தொகுதி ஆத்திவிளை ஊராட்சி நெல்லியார்கோணத்தில் கால்நடை பார்வை நிலையம் ஏதும் செயல்படவில்லை. அதனால் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வாய்ப்பில்லை. தக்கலை ஒன்றியத்தில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்கள்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுவதால், கால்நடை கிளை மருத்துவ நிலையம் தொடங்கவும் அரசு தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**87—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11822—திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், வையச்சேரி ஊராட்சி, புண்ணியநல்லூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த புண்ணியநல்லூரில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு

[2008 ஜனவரி 24

தரப்பில் செயற்குறிப்பு ஏதுமில்லை. அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சாலியமங்கலம், கீழகளக்குடி, அகரமான்குடி, அம்மாபேட்டை, புண்ணியநல்லூர் ஆகிய ஐந்து கால்நடை மருந்தகங்களும், இரும்புதலை, பூண்டி, புலவர்நத்தம், திருக்கருகாவூர், அருந்தவபுரம், அண்ணப்பன்பேட்டை ஆகிய ஆறு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், புண்ணியநல்லூரில் ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருவதாலும் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் அக்கிராமத்திற்கு புண்ணியநல்லூர் கால்நடை மருந்தகத்தின் மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக உள்ளது.

**88—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 12232—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், ஊதியூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* ஊதியூர் கிராமத்திற்கு அருகில் முதலிபாளையம் கால்நடை கிளை நிலையம் 2 கி.மீ. தொலைவிலும், குள்ளம்பாளையம் கால்நடை கிளை நிலையம் 3 கி.மீ. தொலைவிலும், பீலிக்காம்பட்டி கால்நடை கிளை நிலையம் 5 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

*(ஆ)* கேள்வி எழாது.



2008 ஜனவரி 24]

**89—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 14185—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, மடவிளாகம் கிராமத்திற்கு கால்நடை மருத்துவமனை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சியைச் சார்ந்தது மடவிளாகம் கிராமம் ஆகும். சேத்துப்பட்டு ஊராட்சியில் சேத்துப்பட்டு, முடையூர் மற்றும் தச்சாம்பாடி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்களும், உலகம்பட்டு, நம்பேடு, நரசிங்கபுரம் கொம்மனந்தல் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை (1083) குறைவாக உள்ளதாலும் வடமாதிமங்கலம் கால்நடை கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் வாரத்தில் 2 நாட்கள் இக்கிராமத்தை பார்வையிட்டு சிகிச்சைப் பணி மேற்கொண்டு வருவதாலும் திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த மடவிளாகம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**90—**

## கடனுதவி

**வினா எண் 16151—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில், கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகளுக்கு கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வாங்க கடனுதவி வழங்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இத்துறையின் மூலம் கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் எதுவும் செயல்பாட்டில் இல்லை. சிறு விவசாயிகள் கறவை மாடுகள் வாங்க வங்கிகளில் கடனுதவி பெறுவதற்காக அளிக்கும் விண்ணப்பம், பால்வள மேம்பாட்டு ஆணையரால் பரிந்துரைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்படுகிறது.

(ஆ) எழாது.

**91—**

**மானியத்துடன் கடனுதவி**

**வினா எண் 16175—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு கறவை மாடுகளும், ஆடுகளும் வாங்குவதற்கு மானியத்துடன் கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது கறவை மாடுகளும் ஆடுகளும் வாங்குவதற்கு மானியத்துடன் கடனுதவி வழங்கும் திட்டம் எதுவும் இத்துறையில் பரிசீலனையில் இல்லை. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு கறவை மாடுகள் வாங்க வங்கிகளில் கடனுதவி பெறுவதற்காக அளிக்கும் விண்ணப்பம், பால்வள மேம்பாட்டு ஆணையரால் பரிந்துரைக்கப்பட்டு சம்மந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பப்படுகிறது.

(ஆ) எழாது.



2008 ஜனவரி 24]

**92—**

**அதிக மானியத்துடன் கடன் வசதி**

**வினா எண் 30634—திரு. கு.ப. வேலுமணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி, கூட்டுறவு மற்றும் இதர வங்கிகளில் கால்நடைகளை வளர்க்க அதிக மானியத்துடன் கூடிய கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு மற்றும் இதர வங்கிகளில் கால்நடைகளை வளர்க்க அதிக மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் ஏதும் தற்போது செயல்பாட்டில் இல்லை.

(ஆ) வினா எழாது.

D V21,31 P08 P08.39.1

**93—**

**ஆடு, கோழிப் பண்ணைகள்**

**வினா எண் 30662—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, செங்கத்துறையில் ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை ஆகியவற்றை மீண்டும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே செங்கத்துறையில் [illegible] கோழிப்பண்ணைகள் நஷ்டமின்றி இயக்க இயலாத [illegible] எனவே



228094

[2008 ஜனவரி 24

பல்லடம் தொகுதி, செங்கத்துறையில் ஆட்டுப் பண்ணை மற்றும் கோழிப் பண்ணைகளை மீண்டும் அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

94—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 11713—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, குஞ்சபானை அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மேல்நிலைப் பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்து முன்மொழிவுகள் ஏதும் நிலுவையில் இல்லை. முன்மொழிவுகள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

95—

## உண்டு உறைவிடப் பள்ளி

**வினா எண் 12443—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருக்கழுக்குன்றம், மதுராந்தகம், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் பழங்குடியினரின் குழந்தைகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

இதுகுறித்து முன்மொழிவுகள் ஏதும் நிலுவையில் இல்லை. முன்மொழிவுகள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.



2008 ஜனவரி 24]

96—

## மாணவர் இல்லம் அமைத்தல்

**வினா எண் 12936—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் மாவடப்புப் பகுதியில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பழங்குடி மாணவர் தங்கிப் பயிலும் பள்ளியும், மாணவர் இல்லமும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதுகுறித்து முன்மொழிவுகள் ஏதும் நிலுவையில் இல்லை. முன்மொழிவுகள் வரப்பெற்றால் பரிசீலிக்கப்படும்.

97—

## பஞ்ச கால சேமிப்பு நிவாரண நிதி

**வினா எண் 23165—திரு. ஜா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மீனவப் பெண்களுக்கு இதுவரை வழங்கப்படாமலிருக்கும் 2005 ஆம் ஆண்டுக்கான பஞ்ச கால சேமிப்பு நிவாரண நிதியை விரைவாக வழங்கவும், இத்திட்டத்தை தொடர்ந்து அமல்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

ஆம். மைய அரசு வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளில், மீனவ மகளிர் முழுநேர மீன்பிடிப்பில், ஈடுபடுபவராக இருத்தல் வேண்டும் என்ற விதியைத் தவிர மற்ற நான்கு விதிகள் மட்டுமே மீனவ மகளிருக்கு பொருந்துகிறது. தற்போது இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவ மகளிர், சில்லரை மீன் விற்பனை, வலை பின்னுதல், கடல்பாசி சேகரித்தல் போன்ற மீன்பிடி தொழில் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுபவர்

[2008 ஜனவரி 24

என்பதால், இவ்வுறுப்பினர்கள், மைய அரசு வழங்கியுள்ள தெளிவுரையின்படி இத்திட்டத்தின் கீழான விதிமுறைகளுக்கு உட்பட்டவர்கள் அல்ல. அதனால்தான் 2005 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட மீனவ மகளிர் செலுத்திய சந்தாத் தொகை மட்டும் திரும்ப வழங்கப்பட்டுவிட்டது. இருப்பினும், தமிழ்நாடு அரசு, மீன்பிடிப்புத் தொழில் மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து கடல் மீனவ மகளிருக்கு, 2006-2007 ஆம் ஆண்டில் மாநில திட்டமாக செயல்படுத்த முடிவு செய்து அரசாணை (4டி) எண் 13, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (மீன் 3) துறை, நாள் 7-6-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் தொடர்ந்து மாநிலத் திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**98—**

## புதிய கட்டடம்

**வினா எண் 35574—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் மகளிர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், ஈங்கூர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காலிமனை இல்லாததால் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.

**99—**

## கூட்டுறவு சங்க வளர்ச்சி

**வினா எண் 32295—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, கண்ணார் தெருவில் உள்ள மரச்சாமான்கள் உற்பத்தி செய்யும் கூட்டுறவுச் சங்கம் வளர்ச்சி அடைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை மரச்சாமான்கள் கூட்டுறவுச் சங்கம் 21-7-1958-ல் பதிவு செய்யப்பட்டு 4-5-1959 முதல் நாளது தேதி வரையில் தொடர்ந்து 110 பேர்களுடன் செயல்பட்டு வருகிறது.

மேலும், சென்ற ஆண்டு (2006-2007) ரூ.2.00 இலட்சத்திற்கு உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது. தற்போது (2007-2008) 6-8-2007 முடிய உள்ள காலம் வரை ரூ. 5,44,520/-க்கு உற்பத்தி செய்து விற்பனை செய்துள்ளதால் மேற்படி சங்கம் வளர்ச்சி அடைந்துள்ளது.

(ஆ) இச்சங்கம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**100—**

## கைவினைப் பொருட்கள் மையம்

**வினா எண் 33595—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் சர்வோதய சங்கத்தின்மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) அனைத்து சர்வோதய சங்கங்களும் மும்பை, கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன. எனவே, சர்வோதய சங்கத்தின்மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி மையம் தொடங்க அரசு ஆவன செய்ய சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

பட்டியல் 2

1—

**அருங்காட்சியகங்கள்**

**வினா எண் 36501—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலை மற்றும் பண்பாட்டை வளர்க்க மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே 20 மாவட்டங்களில் மாவட்ட அருங்காட்சியகங்கள் செயல்படுகின்றன. மற்ற மாவட்டங்களில் அருங்காட்சியகங்கள் தொடங்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

2—

**மின்வசதி**

**வினா எண் 12272—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மூங்கில் ஊரணி, அம்பேத்கர் நகரில் மின்வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மூங்கில் ஊரணி, அம்பேத்கர் நகருக்கு மின்வசதி செய்வதற்கு ரூ. 25,500/- மதிப்பீட்டில் 3 எண்ணம் மின் கம்பங்கள் ஊன்றி மின் இணைப்பு வழங்கப்பட்டது.



3—

**சீரான மின்சாரம்**

**வினா எண் 19874—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் உள்ள பெரிய பாளையத்தம்மன் கோயில் தெரு, எல்லன் தெரு, புது அமரஞ்சிபுரம் தெரு, ஆதி திராவிடர் தெரு, ஜீவரத்தினம் சாலை, கும்மாளம்மன் கோயில் தெரு, சிங்கார வேலர் நகர், திடீர் நகர், பல்லவன் நகர் ஆகிய பகுதிகளில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் பெரிய பாளையத்தம்மன் கோயில் தெரு, எல்லன் தெரு, புது அமரஞ்சிபுரம் தெரு, ஆதி திராவிடர் தெரு, ஜீவரத்தினம் சாலை, கும்மாளம்மன் கோயில் தெரு, சிங்காரவேலர் நகர், திடீர் நகர், பல்லவன் நகர் ஆகிய பகுதிகளுக்கு புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

4—

**புதிய கம்பிவடம் பதித்தல்**

**வினா எண் 19891—திரு. டி. ஜெயக்குமார் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் தண்டையார் நகர் முதன்மைத் தெரு, 1, 2, 3, 4, 5, 6, 7-வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் உள்ள தண்டையார் நகர் முதன்மைத் தெரு, 1, 2, 3, 4, 5, 6, 7-வது தெருக்களில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

5—

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19899—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் ஐ.டி.எச். பின்புறத்திலுள்ள விநாயகபுரம், விநாயகபுரம் முதன்மைத் தெரு, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12-வது தெருக்களிலும், சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 14-ல் உள்ள விநாயகபுரம், விநாயகபுரம் முதன்மைத் தெரு, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 ஆகிய தெருக்களில் தேவையான அளவு புதைவடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

6—

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19932—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல், சஞ்சீவராயன் கோயில் தெரு, சின்னதம்பி 1, 2 தெருக்கள், தாண்டவராயன் தெரு,



புது தாண்டவராயன் தெரு, தணிகாசலம் தெரு, சோலையப்பன் தெரு, புது சோலையப்பன் தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல் எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக மாற்றப்பட்டுள்ளது. சஞ்சீவிராயன் கோயில் தெரு, சோலையப்பன் தெரு, தணிகாசலம் தெரு மற்றும் புது சோலையப்பன் தெருவிற்கு புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. அதோடு ஒரு பில்லரும் அமைக்கப்பட்டுள்ளது. சின்னதம்பி 1, 2 தெருக்கள், தாண்டவராயன் தெரு, புது தாண்டவராயன் தெரு ஆகிய பகுதிகளில் பில்லர்கள் மாற்றப்பட்டுள்ளன. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் இப்பகுதிகளில் புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

7—

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19950—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் புதுமனைக் குப்பம் 1, 2, 3-வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் புதுமனைக்குப்பம் 1, 2 மற்றும் 3-வது தெருக்களுக்குத் தேவையான புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆகையால் புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

[2008 ஜனவரி 24

**8—**

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19981—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் கிரேஸ் தோட்டம் பிரதான சாலையில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 16-ல் உள்ள கிரேஸ் தோட்டம் பிரதான சாலையில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதும் இல்லை.

**9—**

## புதிய கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 20104—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 19-ல் ஆதம் தெரு, முனுசாமி தோட்டம் 3, 4-வது தெருக்கள், இராமன் தெரு, வேலாயுத பாண்டியன் தெரு, மாடசாமி தெரு, ஆண்டியப்பன் தெரு, ரோப் கிடங்கு தெரு, பார்த்தசாரதி தெரு, மணிக்கார் சத்திர சாலையில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 19-ல் உள்ள ஆதம் தெரு, முனுசாமி தோட்டம் 3, 4-வது தெருக்கள், ராமன் தெரு, வேலாயுத பாண்டியன் தெரு, மாடசாமி தெரு, ஆண்டியப்பன் தெரு,



2008 ஜனவரி 24]

பார்த்தசாரதி தெரு மற்றும் மணிக்கார் சத்திர சாலை ஆகிய இடங்களில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது.

ரோப் குடோன் பகுதியில் புதைவடம் மற்றும் ஒரு மினி பில்லரும் நிறுவப்பட்டுள்ளன. மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், தற்போது புதியதாக புதைவடம் அமைக்கும் கருத்துரு ஏதுமில்லை.

**10—**

## புதிய கம்பிவடம்

**வினா எண் 20117—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 19-ல் ஜெகநாதன் தெரு, கல்லறை சாலை, தொப்பை தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 19-ல் உள்ள ஜெகநாதன் தெரு, கல்லறை தெரு, தொப்பை தெருக்களில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால் புதிய புதைவடம் பதிக்க தற்போது கருத்துரு ஏதும் இல்லை.

**11—**

## ஒருவிளக்கு மின் இணைப்பு

**வினா எண் 20774—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், பழையூர் கிராமத்தில் முத்துராசா தெரு குடிசை வீடுகளுக்கு ஒருவிளக்கு மின்வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், பழையூர் கிராமத்தில் முத்துராசா தெருவில் 25 வீடுகள் மற்றும் 35 குடிசைகள் உள்ளன. அவற்றுள் 25 வீடுகள் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளன.

ஒருவிளக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால், வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 20775—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், வானியம்பட்டி ஊராட்சி, ஆவுடையான் கோவில்பட்டி குடிசைகளுக்கு மின் விளக்கு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், வானியம்பட்டி ஊராட்சி, ஆவுடையான் கோவில்பட்டியில் 40 வீடுகள் மற்றும் 15 குடிசைகள் உள்ளன. அவற்றுள் 40 வீடுகள் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளன.

ஒருவிளக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால், வரிசைக் கிரமப்படி மின் இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2008 ஜனவரி 24]

13—

## மின் கம்பிகளை மாற்றியமைத்தல்

**வினா எண் 23034— செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் ஒன்றியம், பள்ளபட்டி, கொட்டப்பட்டி ஆதி திராவிடர் காலனி வீடுகளின் மேலுள்ள மின்கம்பிகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் ஒன்றியம், பள்ளப்பட்டி ஊராட்சி ஒன்றியம் கொட்டப்பட்டி ஆதி திராவிடர்களின் காலனி வீடுகளுக்கு மேல் செல்லும் உயர் மின்னழுத்தக் கம்பிகளை மாற்றியமைக்க ஆகும் மதிப்பீட்டுத் தொகை முழுவதும் சம்பந்தப்பட்ட பஞ்சாயத்து நிர்வாகம் செலுத்த சம்மதிக்கும் பட்சத்தில் மேற்கண்ட கம்பிகளை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

14—

## மின் வசதி

**வினா எண் 27866—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடாமங்கலம் பேரூராட்சி, சரளப்பட்டி கிராம தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடாமங்கலம் பேரூராட்சி, சரளப்பட்டி கிராம தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் வசதி செய்யவேண்டி விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. விண்ணப்பம் பெறப்பட்டால் விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும்.

[2008 ஜனவரி 24

15—

## அனுமதி ரத்து

**வினா எண் 5027—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வைகை ஆற்றில் மணல் அள்ளும் டெண்டரை ரத்து செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், மானாமதுரை தொகுதிக்குட்பட்ட வைகை நதியில் வி. கரிசல்குளம் கிராமம் புல எண் 263-ல் அமைந்துள்ள மணல் குவாரியினால் தீத்தாம்பேட்டை, கீழமேல்குடி, சிப்காட் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் மானாமதுரை நகர் ராஜகம்பீரம், கடலாடி மற்றும் முதுகுளத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டங்களும் பாதிக்கப்படும் என்பதால் மேற்கண்ட மணல் குவாரி அமைக்க வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது.

16—

## மணல் விற்பனை

**வினா எண் 5324— திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் 2005-2006 ஆம் ஆண்டில் மணல் விற்பனை மூலம் அரசுக்குக் கிடைத்த லாபம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் அரசின் மணல் குவாரி எதும் இல்லை. எனவே, வால்பாறை தொகுதியில் மணல் விற்பனை ஏதும் அரசால் நடத்தப்பெறவில்லை.



2008 ஜனவரி 24]

17—

## ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 10507— திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், பென்னகர் கிராமம், கல்கொண்டம் ஏரியை தூர் எடுத்துப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆற்காடு வட்டம், பென்னகர் ஏரியினை தூர்வாரி கல்கொண்டம் சிறப்பு பழுது பார்க்கும் பணி நடப்பு நிதி ஆண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் கருத்திற்கொள்ளப்படும்.

18—

## நீர் கொண்டுவர ஏற்பாடு

**வினா எண் 10519— திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு ஒன்றியம், சாத்தூர் பெரிய ஏரிக்கு பாலாற்றிலிருந்து நீர் வர ஏற்பாடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு நிதியாண்டில் (2007-2008) தள ஆய்வு செய்து உரிய அறிக்கை மற்றும் மதிப்பீடு தயார் செய்து நடவடிக்கை மேற்கொள்ள கருத்திற்கொள்ளப்படும்.

[2008 ஜனவரி 24

**19—**

**ஏரியைத் தூர் வாருதல்**

**வினா எண் 10520—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வாழப்பந்தல், பரதராமி மற்றும் வரகூர் கிராமங்களில் ஏரிகள் தூர் வாரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரதராமி ஏரிக்கு தற்போது நபார்டு வங்கி மூலம் செயல்படுத்த ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், வாழப்பந்தல், வரகூர் ஏரிகள் அடுத்த நிதியாண்டில் (2007-2008) முன்னுரிமை கொடுத்து எடுத்து செயல்படுத்தப்படும்.

**20—**

**கால்வாயைத் தூர் வாருதல்**

**வினா எண் 10524—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வளையாத்தூர் போரமேட்டு ஏரி கால்வாயைத் தூர்வாரி அகலப்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்து மதிப்பீடு தயாரிப்பதற்கான கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிதிநிலையைப் பொறுத்து வரும் நிதியாண்டில் இப்பணி செயலாக்கம் கவனத்திற்கொள்ளப்படும்.

**21—**

**மதகுகள் கட்டுதல்**

**வினா எண் 10893—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, அண்ணமங்கலம் நீர்ப்பாசன ஏரியில் இரண்டு புதிய மதகுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி மேல்மலையனூர் தொகுதி அண்ணமங்கலம் நீர்ப்பாசன ஏரியில் இரண்டு புதிய மதகுகள் கட்டித்தர கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. இந்த ஏரியில் ஏற்கெனவே இரண்டு மதகுகள் நல்ல முறையில் இருப்பதால் புதியதாக மதகுகள் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**22—**

**நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா எண் 12175—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) கரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு மைய அரசின் உதவியுடன் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஒன்று மைய அரசுக்கு அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. பதில் பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டுவது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும்.

**23—**

## விழா எடுத்தல்

**வினா எண் 13233—திருமதி ரா. லீமாறோஸ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

100-வது ஆண்டினை எட்டியுள்ள பேச்சிப்பாறை அணைக்கு விழா எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

பேச்சிப்பாறை அணையின் கதவுகளில் (Sluice Gates) மராமத்து பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால், பேச்சிப்பாறை அணைக்கு தற்பொழுது நூற்றாண்டு விழா கொண்டாடுவது உகந்ததல்ல என அரசு கருதுகிறது.

**24—**

## புதிய அலுவலக அறைகள்

**வினா எண் 13867—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு புதியதாக அலுவலக அறைகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்கறிஞர்களுக்கு புதியதாக அலுவலக அறைகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு 2007-2008-க்கான பகுதி-2 திட்டத்தில் பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்டது. ஆனால், முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் சேர்க்கப்படவில்லை.

**25—**

## ஏரிக்கரையை அகலப்படுத்துதல்

**வினா எண் 14774—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, கரிக்காத்தூர் கிராம ஏரிக்கரையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, கரிக்காத்தூர் கிராம ஏரிக்கரையை அகலப்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

**26—**

## மணல் கொள்ளையைத் தடுத்தல்

**வினா எண் 15078—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மணல் கொள்ளையைத் தடுக்க போதுமான பணியாளர்களை நியமிக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) பொள்ளாச்சி மண்டலம் ஆளுகைக்குள் தற்போது கோவை மாவட்டத்தில் அர்த்தநாரிபாளையம் மற்றும் அர்த்தநாரிபாளையம் குவாரி நீதிமன்ற வழக்கில் உள்ளதால் மணல் தற்போது எடுக்கப்படுவதில்லை. குமாரலிங்கம் குவாரியில் மாட்டுவண்டி மூலம் மட்டுமே மணல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் மணல் கொள்ளை நடப்பதாகத் தெரிவித்துள்ளதற்கு ஆதாரமாக புகார்கள் ஏதுமில்லை. எனவே, மணல் கொள்ளையினைத் தடுக்க கூடுதல் பணியாளர்களை நியமிப்பது குறித்து அவசியம் தற்போது எழவில்லை. பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை, காவல் துறை அதிகாரிகளுடன் கூட்டுரோந்துப் பணி இரவு நேரங்களில் அடிக்கடி செய்ய்ப்படுவதால் மணல் கொள்ளையைத் தடுக்க ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அவசியம் எழவில்லை.

**27—**

## சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 18684—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, கலந்தம்பட்டு கிராமத்திலுள்ள குளத்தைத் தூர்வாரி சுற்றுச்சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கலத்தம்பட்டு கிரமத்திலுள்ள ஏரியை உலக வங்கி நிதியுதவிடன் IAMWARM திட்டமான வராக நதி வடிநிலப் பகுதியை மேம்படுத்தும் திட்டத்தின் மூலம் மேம்பாட்டு பணிகள் செய்ய மதிப்பீடு ரூ. 7.27 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்பள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் நியமிக்கப்பட்டதும் விரைவில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## தூர் வாருதல்

**வினா எண் 21858—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் கிளை வாய்க்காலில் உள்ள 7,340 எண் வாய்க்காலை தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, வெள்ளக்கோவில் கிளை வாய்க்காலில் 7,340 மைலில் உள்ள வாய்க்காலை தூர் வாரி மராமத்து செய்ய கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் ரூ. 4.00 இலட்சம், பாசன சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட வாய்க்கால், பாசன சபைமூலம் தூர் வாரப்படும்.

**29—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 30317—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

திருச்செந்தூர் தொகுதி, புன்னக்காயல், கொம்புத்துறை, சிங்கித்துறை, வீரபாண்டியன் பட்டணம், அமளநகர், ஆலன்தலை, மணப்பாடு மற்றும் குலசேகரப்பட்டினம் ஆகிய கிராமங்களில் கடல் அரிப்பு மற்றும் சுனாமி பேரலையில் இருந்து காப்பாற்ற தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கடலோர மாவட்டங்களில் சுனாமி 2004 கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 38 இடங்களில் கடலரிப்பு தூண்டில் வளைவுகளும் மற்றும் 33 இடங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர்களும் அமைப்பதற்கான திருத்திய திட்டக் கருத்துரு ரூ. 29,730.00 இலட்சத்தில் முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

2. மேற்கூறிய கருத்துருவில், திருச்செந்தூர் தொகுதி, தூத்துக்குடி மாவட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் அமைக்கும் பணிகள் இடம் பெற்றுள்ளன:—

| | | |
|---|---|---|
| 1. புன்னக்காயல் (தூண்டில் வளைவு) | .. | ரூ. 950.00 இலட்சம். |
| 2. வீரபாண்டிய பட்டினம் (தூண்டில் வளைவு) | .. | ரூ. 600.00 இலட்சம். |
| 3. அமலி நகர் (தூண்டில் வளைவு) | .. | ரூ. 600.00 இலட்சம். |
| 4. ஆலன்தலை (தூண்டில் வளைவு) | .. | ரூ. 1,560.00 இலட்சம். |
| 5. மணப்பாடு (தூண்டில் வளைவு) | .. | ரூ. 600.00 இலட்சம். |
| 6. கொம்புத்துறை (கடலரிப்புத் தடுப்புச் சுவர்) | .. | ரூ. 150.00 இலட்சம். |
| 7. சிங்கித்துறை (கடலரிப்புத் தடுப்புச் சுவர்) | .. | ரூ. 150.00 இலட்சம். |

3. இது தொடர்பான திட்டப் பணிகள் முதன்மை தலைமைப் பொறியாளர்மூலம் திட்ட இயக்குநர், அவசரகால சுனாமி



2008 ஜனவரி 24]

புனரமைப்புத் திட்டம் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களிடமிருந்து அறிக்கை கிடைத்தபின், விரிவான தொழில்நுட்ப தள ஆய்வுகள் IHH பூண்டி நிறுவனம்மூலம் மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் விரிவான மதிப்பீடு தயாரித்து, அரசின் அங்கீகாரம் பெற்றவுடன் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள கவனத்தில் கொள்ளப்படும்.

மேலும், குலசேகரப்பட்டினம் கிராமத்தில் ரூ. 120.00 இலட்சத்தில் 400 மீ. நீளத்திற்கு கடலரிப்பு தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**30—**

## பேருந்து வசதி

**வினா எண் 4902—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி, பி. 12 என்ற நகரப் பேருந்தை மாணவர்கள், தொழிலாளர்கள் நலன் கருதி தினமும் 8 முறை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈங்கூர் வழியே பெருந்துறை செல்ல 172 தனிநடைகள் நகரப் பேருந்துகள்மூலம் இயக்கப்பட்டு வருகின்றன. குறுகிய கால இடைவெளியில் பவானியிலிருந்து பெருந்துறை வழியே ஈங்கூர் வரை 4 தனிநடைகள் வந்து செல்லும் தடம் எண் பி 12 பேருந்தினைக் கூடுதலாக ஈங்கூர் வரை நீட்டித்து இயக்கினால், தனிநடைக்கு 7 கி.மீ. அதிகமாகி, இயக்க நேரம் 15 நிமிடங்கள் கூடுதலாகி கால அட்டவணை மாறுபட்டு, தற்பொழுதுள்ள தனிநடைகளில் துண்டிப்பு ஏற்பட ஏதுவாகும். இதனால் தற்சமயம் பயன்பெறும் வாவிக்கடை, நசியனூர், சித்தோடு பகுதிகளில் உள்ள பள்ளி/கல்லூரி மாணவர்கள் பாதிப்படைய நேரிடும்.

[2008 ஜனவரி 24

31—

## பேருந்து வசதி

**வினா எண் 13690—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூர் நகரிலிருந்து கைகாட்டி வழியாக அனையட்டி கிராமத்திற்கும், பி. மணியட்டி கிராமத்திலிருந்து அதிகரட்டி வழியாக கோயம்புத்தூருக்கும் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அனையட்டி கிராமம், அதிகரட்டி பாலகொளா-உதகை சாலையில் அனையட்டி பிரிவிலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. அனையட்டி பிரிவிலிருந்து அனையட்டிக்குச் செல்லும் சாலை மிகவும் குறுகியதாக, பேருந்து போக்குவரத்திற்குத் தகுதியற்றதாக உள்ளது. பி. மணியட்டி-அதிகரட்டி-கோவை வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் 44 இருக்கைகள் கொண்ட பேருந்து மட்டுமே இயக்கப்பட வேண்டும். மலைப்பகுதியில் இயக்க செலவினம், வருவாயைக் காட்டிலும் அதிகமாக உள்ளதால், சுற்று வழித்தடங்களில் குறைந்த இருக்கைகள் கொண்ட பேருந்துகளை இயக்கம் செய்வது ஏற்புடையதல்ல. புதிய வழித்தடம் கோரியுள்ள பகுதிகளிலுள்ள கிராமங்களில் இருந்து உதகை, குன்னூர் ஆகிய முக்கிய நகரங்களுக்குச் செல்ல போதிய பேருந்து வசதியுள்ளது. எனவே, மலைப்பகுதியில் ஒவ்வொரு கிராமங்களிலிருந்தும் நீண்டதூரத்திலுள்ள/பெரு நகரங்களுக்கு நேரடிப் பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

## பேருந்து வசதி

**வினா எண் 16937—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து மதுரைக்கு நேரடியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை-மதுரை ஒரு நீண்ட தூர மலைப்பகுதி மற்றும் சமவெளிப் பகுதி சேர்ந்த வழித்தடமாகும். ஆழியார் அணையிலிருந்து வால்பாறை செல்லும் சுமார் 40 கி.மீ. சாலை மிகவும் குறுகலானதும், அதிக கொண்டை ஊசி வளைவுகளையும் கொண்ட ஒரு மலைப்பிரதேச சாலையாகும். இச்சாலை வழியே குறைந்த சக்கர இடைவெளி (Short Wheel Base) கொண்ட பேருந்துகளே இயக்கப்பட்டு வருகின்றன. சமவெளியுடன் மலைப்பகுதி இயக்கத்தை ஒப்பிடுகையில், மலைப்பகுதியில் பயணிகள் எண்ணிக்கை குறைவாகவும், இயக்கச் செலவு அதிகமாகவும் உள்ளது. எனவே, இத்தகைய சூழ்நிலையில் குறைந்த இருக்கைகள் கொண்ட பேருந்துகளைக் கொண்டு, வால்பாறையிலிருந்து தொலைதூரப் பகுதியான மதுரைக்கு நேரடிப் பேருந்து இயக்கிட சாத்தியமில்லை.

33—

## பேருந்து வசதி

**வினா எண் 23186—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், திருமானூர் முதல் தூத்தூர் வரை காலையில் இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து திருச்சி மண்டலத்திலிருந்து திருமானூர்-தூத்தூர் வழித்தடத்தில் அதிகாலை 5.00 மணிக்கு இயக்கப்பட்டு வந்தது. அந்த நடையில் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருந்தது. அதனால் அவ்வழித்தட மக்கள் பயன் அடையும் வகையில், திருமானூரில் காலை 7.25-க்கு கால நேரம் மாற்றப்பட்டு, திருமானூர்-தூத்தூர் வழித்தடத்தில் தினம் 8 நடைகள் ஒரு புறநகர் பேருந்தின்மூலம் இயக்கப்படுகின்றன.

[2008 ஜனவரி 24

34—

## பேருந்து வசதி

**வினா எண் 23501—திரு. க.ப. வேலுமணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, மதுக்கரை குரும்பபாளையத்திற்குப் புதியதாக பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதியிலுள்ள, மதுக்கரை குரும்பபாளையத்திற்கு (சரியான பெயர்) தற்போது கோயம்புத்தூர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் 4 நகரப் பேருந்துகளின்மூலம் தினசரி 50 நடைகள் இயக்கி வருகிறது. மேற்கூறிய பேருந்து வசதிகளே தற்போதைய பயணிகள் அடர்விற்குப் போதுமானதாகும்.*

35—

## பேருந்து வசதி

**வினா எண் 24033—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஓமலூர்-நாலுக்கால்பாலம்-வட்டக்காடு குருவம்பட்டி ஆகிய பகுதிகளுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*ஓமலூர்-குருவம்பட்டி (வழி) நாலுக்கால் பாலம், வட்டக்காடு வழித்தடத்தில் நாலுக்கால் பாலம் அருகே உயரம் குறைந்த இரயில்வே மேம்பாலம் ஒன்று அமைந்துள்ளதால், அவ்வழித்தடத்தில் கனரக வாகனங்கள் செல்ல இயலாது மற்றும் வட்டக்காட்டினை அடுத்துள்ள வாலூர் என்ற கிராமத்திலிருந்து குருவம்பட்டி பாரஸ்ட் எல்லை வரையிலான 2.2 கி.மீ. சாலை மண் சாலையாகவும், குருவம்பட்டி பாரஸ்ட் எல்லையிலிருந்து குருவம்பட்டி வரையிலான 1.5 கி.மீ. தூரம் வன இலாக்காவிற்குச் சம்பந்தப்பட்ட சாலை மண் சாலையாகவும், சாலையின் குறுக்கே ஓடைப்பள்ளம் கொண்டதாகவும் உள்ளதால்,*



2008 ஜனவரி 24]

*அவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட இயலாத சூழ்நிலை உள்ளது. இருப்பினும்,*

| | | | |
|---|---|---|---|
| 1. | சேலம்-தின்னப்பட்டி (வழி) ஓமலூர், நாலுக்கால் பாலம் | .. | 66 நடைகளிலும் |
| 2. | சேலம்-வட்டக்காடு (வழி) கருப்பூர், வெள்ளாளப்பட்டி | .. | 12 நடைகளிலும் |
| 3. | சேலம்-குருவம்பட்டி (வழி) அஸ்தம்பட்டி, கோரிமேடு | .. | 20 நடைகளிலும் |

*பேருந்து வசதி உள்ளது. எனவே, மேற்கண்ட பேருந்து வசதியே கோரிக்கை வழித்தட மக்களுக்குப் போதுமானதாகும்.*

36—

## பேருந்து வசதி

**வினா எண் 24110—திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, கடலூர்-இராமபுரத்திற்கு வண்டிப்பாளையம் வழித் தடத்தில் புதிய பேருந்து இயக்கவும், கடலூர்-விழுப்புரத்திற்கு மேல்பட்டாம்பாக்கம், சின்னபகண்டை வழியாகப் பேருந்து இயக்கவும், விழுப்புரம்-மாளிகைமேடு, பாலூர், நடுவீரப்பட்டு வழியாக குறிஞ்சிப்பாடிக்குப் பேருந்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர்-இராமபுரத்திற்கு வண்டிப்பாளையம் வழித்தடத்தில் உள்ள அனைத்து கிராமங்களும் கடலூர் மற்றும் பண்ருட்டி செல்ல கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி பெற்றுள்ளன:—*

| | | |
|---|---|---|
| தடம் எண் டி12-கடலூர்-ஒதியடிக்குப்பம் (வழி) கடலூர், ஓடி ராமாபுரம் | .. | 10 நடைகள் |
| கடலூர்-சி.என். பாளையம் (வழி) வண்டிப் பாளையம், சாத்தாங்குப்பம் | .. | 4 நடைகள் |
| தடம் எண் டி24-பண்ருட்டி-இராமாபுரம் (வழி) சி.என். பாளையம், சாத்தாங்குப்பம் | .. | 8 நடைகள் |

[2008 ஜனவரி 24

கடலூர்-விழுப்புரம் (வழி) மேல்பட்டாம்பாக்கம், சின்னபகண்டை வழித்தடத்தில் விழுப்புரம்-மேல்குமாரமங்கலம் இடையே கண்டரக்கோட்டை வழியாக 4 நடைகளும், கடலூர்-மேல்குமாரமங்கலம் இடையே மேல்பட்டாம்பாக்கம், அண்ணா கிராமம், பெரியபகண்டை வழியாக 6 நடைகளுமாகப் பேருந்து வசதிகள் உள்ளன.

விழுப்புரம்-மாளிகைமேடு, பாலூர், நடுவீரப்பட்டு வழியாக குறிஞ்சிப்பாடி வழித்தடத்தில் விழுப்புரம்-கடலூர் இடையே கண்டரக்கோட்டை, மாளிகைமேடு, மேல்பட்டாம்பாக்கம் வழியாகவும், கடலூர்-பத்திரக்கோட்டை இடையே மேல்பட்டாம்பாக்கம், அகரம், பாலூர், நடுவீரப்பட்டு வழியாகவும், பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி இடையே சாத்திப்பட்டு, நடுவீரப்பட்டு, பத்திரக்கோட்டை வழியாகவும் போதுமான அளவிற்குப் பேருந்து வசதிகள் உள்ளன.

**37—**

## பேருந்து வசதி

**வினா எண் 30743—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை-அரச்சலூர்-லிங்காத்தா குட்டை-வெள்ளபெத்தாம்பாளையம்-மணியம்பாளையம்-குமாரவலசு-எரப்பம்பாளையம், சேமூர், மொடக்குறிச்சி, பெருந்துறை-வெள்ளோடு-எரப்பம்பாளையம்-வெள்ளபெத்தாம்பாளையம்-எழுமாத்தூர்-சிவகிரி-கருமாண்டம்பாளையம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை-அரச்சலூர்-லிங்காத்தாகுட்டை-வெள்ளபெத்தாம்பாளையம்-மணியம்பாளையம்-குமாரவலசு எரப்பம்பாளையம், சேமூர், மொடக்குறிச்சி, பெருந்துறை-



2008 ஜனவரி 24]

வெள்ளோடு-எரப்பம்பாளையம்-வெள்ளபெத்தாம்பாளையம்-எழுமாத்தூர்-சிவகிரி-கருமாண்டம்பாளையம் ஆகிய ஊர்கள், நகரப் பேருந்து தடம் எண்கள் சி 10, 26, 21, 20பி, 17, பி9 முதலியவைமூலம் பகுதிவாரியாகப் பேருந்து வசதி பெற்றுள்ளன. கோரிக்கைப்படி நேரடிப் பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லாத நிலை உள்ளது.

**38—**

## பட்டு உற்பத்தி

**வினா எண் 37769—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பூவந்தி பகுதியில் பட்டுப்பூச்சி வளர்த்து பட்டு உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் உள்ள பூவந்தி பகுதியில் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, பட்டு வளர்ச்சித் துறைமூலமாக அனைத்து உதவிகளும் செய்ய இப்பகுதியில் உள்ள களப்பணியாளர்கள் தயாராக உள்ளனர். சிவகங்கை பகுதியில் தற்போது 86.00 ஏக்கர் அளவில் சுமார் 36 பட்டு விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். பூவந்தி பகுதியிலும் பட்டு உற்பத்தித் தொழிலில் ஈடுபட விரும்பும் விவசாயிகளைக் கண்டறிந்து உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும். இப்பகுதியில் உள்ள பட்டு வளர்ப்புப் பணிகளைக் கண்காணிக்க இளநிலை ஆய்வாளர் ஒருவர் சிவகங்கையில் பணிபுரிந்து வருகிறார். மேலும், இப்பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளை கொள்முதல் செய்ய ஓர் அரசு பட்டுக் கூடு அங்காடியும் சிவகங்கையில் செயல்பட்டு வருகிறது.

[2008 ஜனவரி 24

39—

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 23374—திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் தொகுதி, வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007-2008 பகுதி II திட்டத்தில் 6 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட ரூ.340.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி 6 வட்டாட்சியர் அலுவலகங்களில் தொட்டியம் வட்டாட்சியர் அலுவலகமும் ஒன்றாகும்.

40—

## சுற்றுலா பகுதியாக அறிவித்தல்

**வினா எண் 33710—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நாங்கூர் பகுதியை சுற்றுலாப் பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சுற்றுலாத் துறைமூலம் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியையும் சுற்றுலாத்தலமாக அறிவிப்பதில்லை.



2008 ஜனவரி 24]

பூம்புகார் தொகுதி, நாங்கூர் பகுதியை சுற்றுலாதலமாக்குதல் குறித்து செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

41—

## சிறுவர் விளையாட்டு பூங்கா

**வினா எண் 37326—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம் கடற்கரையில் சிறுவர் விளையாட்டு பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம் கடற்கரையில் சிறுவர் விளையாட்டு பூங்கா அமைத்திட செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

42—

## மருத்துவமனை இடமாற்றம்

**வினா எண் 9343—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முடிஸ் அரசு மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை முடிஸ் அரசு மருத்துவமனை உள்ள இடத்தில் தற்போது மருத்துவமனை மேம்பாட்டுப் பணிகள் நடந்து வருகின்றன. எனவே, இம்மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

53-418—11

[2008 ஜனவரி 24

**43—**

## நோயாளிகளுக்கான கட்டடம்

**வினா எண் 9808—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான்குப்பம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகள் காத்திருப்பதற்கு ஒரு கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பேர்பெரியான்குப்பம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்த ஊராட்சி ஒன்றியத்தில், மருங்கூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம், கடும்புலியூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், வீரப்பெருமாநல்லூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியனவும் செயல்படுகின்றன. நோயாளிகள் காத்திருப்பதற்கு தற்போதுள்ள கட்டட வசதிகளே போதுமானதாக உள்ளதால், கூடுதலாகக் கட்டடம் அமைத்துத் தர சாத்தியக்கூறுகள் இல்லை.

**44—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 10203—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.கே.எச்.எஸ். காலனியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.கே.எச்.எஸ். காலனி கோவை மாநகராட்சி எல்லைக்குள் உள்ளது. மாநகராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுவதில்லை. கிராமப் பகுதியில் (புற நகர் பகுதி) மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. எஸ்.கே.எச்.எஸ். காலனியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாததால் கட்டடம் கட்டித் தர வேண்டிய அவசியம் எழவில்லை.

**45—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 11196—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், சின்னசமுத்திரம் ஊராட்சியில் பிச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சின்னசமுத்திரம் ஊராட்சி, பிச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான வாடகையில்லா கட்டடத்தில் போதுமான வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. பிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்த கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. நிலமாற்ற ஆணை பெற திருப்பத்தூர் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலமாற்ற ஆணை கிடைத்தவுடன், உரிய நிதி ஒதுக்கீடு பெற்று சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்.

[2008 ஜனவரி 24

46—

## மருத்துவமனைக்கு இடம் ஒதுக்குதல்

**வினா எண் 11226—திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதி, மணப்பாறை நகராட்சி, அரசு மருத்துவமனை தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், அம்மருத்துவமனைக்கான இடம் ஒதுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, மணப்பாறை நகராட்சிக்குச் சொந்தமான 4.27 ஏக்கர் நிலத்தினை இம் மருத்துவமனைக்கு இலவசமாக வழங்க அரசு ஆணை எண் 148, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 5-12-2006 வாயிலாக ஆணை வழங்கப்பட்டுள்ளது.

47—

## தடுப்பு மருந்து திட்டம்

**வினா எண் 14757—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் எம்.எம்.ஆர். மற்றும் ரூபெல்லா தடுப்பு மருந்து திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடந்த 2004 ஆம் ஆண்டு திருவண்ணாமலை, வேலூர், கடலூர், தேனி மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு வட்டாரம் வீதம் தேர்வு செய்து 2 முதல் 5 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு எம்.எம்.ஆர். தடுப்பூசியும், 10 முதல் 15 வயது வரையிலான வளர் இளம் பெண்களுக்கு ரூபெல்லா தடுப்பூசியும் சோதனை அடிப்படையில் கொடுத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின்மூலம், 24,919 குழந்தைகளும், 22,390 வளர் இளம் பெண்களும் பயனடைந்தனர். தடுப்பூசி கொடுக்கப்பட்ட அனைவருக்கும் குறிப்பிடும்படியான அளவிற்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கப்பெற்றுள்ளது. இத்திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த செயல் திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அனுமதியும் போதிய நிதி ஒதுக்கீடும் கிடைக்கப்பெற்றவுடன், இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும். அதுசமயம் உடுமலைப்பேட்டை தொகுதியிலும் இந்தத் தடுப்பு மருந்து திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

48—

## மின் ஆக்கி வழங்குதல்

**வினா எண் 16537—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூர் அரசு மருத்துவமனைகளுக்கு மின் ஆக்கி வாங்கி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் 1 கே.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு மின் ஆக்கிகள் செயல்பட்டு வருகின்றன. கோட்டூர் அரசு மருத்துவமனையில் 1.5 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் ஆக்கி ஒன்றும், 1 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் ஆக்கி ஒன்றும், மொத்தம் 2 மின் ஆக்கிகள் செயல்பட்டு வருகின்றன.

**49—**

**கூடுதல் கட்டடங்கள்**

**வினா எண் 17175—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள, ஆழியார் நகர், ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், ஆழியார் நகர் ஆரம்ப சுகாதார நிலையம் 1041 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு, நல்ல முறையில் செயல்படுகின்றது. மாதமொன்றுக்கு சராசரியாக 7 உள்நோயாளிகள் பயனடைகின்றனர். மேலும், சராசரியாக நாளொன்றுக்கு 98 வெளிநோயாளிகள் பயனடைகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 1 பிரசவம் நடைபெறுகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தற்போது உள்ள கட்டட வசதிகள் போதுமானதாக உள்ளது. ஆகவே, ஆழியார் நகர் ஆரம்ப சுதாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித்தர தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



2008 ஜனவரி 24]

**50—**

**மதிற்சுவர் அமைத்தல்**

**வினா எண் 28464—திருமதி பெ. கமலாம்பாள் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றி மதிற்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் பெரும்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சுற்றுச்சுவர் கட்டுவதற்கென அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி உதவி பெற்று சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட சுகாதாரப் பணிகள் துணை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**51—**

**தொழிலாளர்களுக்கு மருத்துவமனை**

**வினா எண் 9342—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர்களுக்குத் தனியாக மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை அமல்படுத்துவது தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகமாகும். 2008-2009-ம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தை அமல்படுத்தும் கருத்துரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது. அதன்படி, வால்பாறை பகுதியில் மறு அளவை (resurvey) செய்யும் பணியினைத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் தற்போது மேற்கொண்டுள்ளது. மறுஅளவைப் பணியினை முடித்து வால்பாறை பகுதியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தினை அமல்படுத்தும் கருத்துருவினை அரசிற்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் அனுப்புமாயின், அக்கருத்துருவின்மீது இவ்வரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**52—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 31654—திரு. செ. புஷ்பராஜ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**53—**

## திருப்பணிகள்

**வினா எண் 8827—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், கஞ்சா நகரம் ஊராட்சியிலுள்ள குமரகுருபரன் திருக்கோயில் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கஞ்சா நகரம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் (குமரகுருபரன் திருக்கோயில்) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் தற்போது பழுதடைந்து உள்ளதால், திருப்பணி வேலைகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாலாலயம் செய்து திருப்பணி வேலைகளைத் தொடங்கி உபயதாரர்மூலம் பணிகளைச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**54—**

## திருப்பணிகள்

**வினா எண் 9987—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, செம்மேடு ஊராட்சி, வீரமநல்லூரில் உள்ள அண்ணாமலையார் திருக்கோயிலைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செம்மேடு ஊராட்சி, வீரமநல்லூர் அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் (சுந்தரேஸ்வரர் திருக்கோயில்) விழுப்புரம் உதவி ஆணையர் ஆளுகைக்குட்பட்ட

[2008 ஜனவரி 24

ஆய்வர் நிர்வாகத்தின்கீழ் உள்ள பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் வருமானம் ரூ. 5,000/-க்கும் கீழ் உள்ளது. உபயதாரர்களைக் கொண்டு திருக்கோயில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**55—**

## தார்ச்சாலை அமைத்தல்

**வினா எண் 18622—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி கிராமம், அருள்மிகு கரியபெருமாள் கோயிலுக்குத் தார்ச்சாலை அமைக்க அரசு முன் வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி கிராமம், அருள்மிகு கரியபெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்குச் செல்லும் சாலை கிராம புறம்போக்கில் அமைந்துள்ளது. எனவே, இத்திருக்கோயிலுக்கு தார்ச்சாலை வசதி செய்வது குறித்து அமரகுந்தி கிராமம் ஊராட்சிமூலம்தான் உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**56—**

## சிவன் கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 20987—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாம்துரை தொகுதி, மேலநெட்டூர் கிராம சிவன் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மேலநெட்டூர் அருள்மிகு சொர்ணவாரீஸ்வரர் திருக்கோயில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் பாலாலயம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் உபயப் பணியாகச் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**57—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 22196—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர் திருக்கோயில் அருகில் நவீனக் கழிப்பிடம், குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்ட மற்றும் வட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான வெள்ளிக்கிழமை அம்மன் தோப்பு என்று அழைக்கப்படும் நிலத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நவீனக் கழிப்பிட மற்றும் குளியலறைகள் 4 தொகுப்பறைகளாக ஏற்கெனவே கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளன. இவை தவிர, இத்திருக்கோயிலின் தென்மேற்கு மூலையில் பெரிய மதிற்சுவருக்கு வெளியே, திருக்கோயில் நிர்வாகத்தில் அரசுமூலம் ஆண்களுக்கு 4 கழிப்பிடங்களும், பெண்களுக்கு 4 கழிப்பிடங்களும் கட்டப்பட்டு உபயோகத்தில் உள்ளன. மேலும் நகர ஊரமைப்புத் திட்டத்தின்மூலம்

வெள்ளிக்கிழமை அம்மன் தோப்பில் 0.50 சென்ட் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டில் பேரூர் பஞ்சாயத்து நிர்வாகம்மூலம் சமுதாயக் கூடம் கட்ட மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, அதில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தலா 4 கழிப்பறைகளும், 4 குளியலறைகளும் கட்டப்படவுள்ளன. ஏற்கெனவே உள்ள நவீனக் கழிப்பிடத்தைப் புதுப்பித்து மேலும் வசதிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் வசதி:—**

திருக்கோயில் வளாகத்தில் 2 போர்வெல்கள் போடப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ஒன்று கட்டப்பட்டு சுத்திகரிக்கும் இயந்திரம் மூலம் பக்தர்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், சுற்றுலாத் துறைமூலம் ரூ. 3.30 இலட்சத்தில் இத்திருக்கோயில் வளாகத்தில் மேல்நிலை குடிநீர்த் தொட்டி ஒன்று அமைக்க மாவட்ட ஆட்சியருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

**58—**

### கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 31817—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் அருள்மிகு ஈஸ்வரன் கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், அரகண்டநல்லூர் கிராமம், அருள்மிகு ஈஸ்வரன் கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் நிலை 4 செயல் அலுவலராலும், திருக்கோவிலூர் அரசு ஆய்வரை தக்கராக கொண்டும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோவிலூர் பசலி 1414-க்கு உதவித் தொகை நிர்ணய





வருமானம் ரூ.14,169/-ஆகும். இத்திருக்கோயிலில் திருப்பணி முழுவதும் முடிக்கப்பட்டு, கடந்த 6-2-2003 அன்று கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில் தற்போது நல்ல நிலையில் உள்ளதால், திருப்பணிகள் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**59—**

### பல்முனை நூற்பு இயந்திரக் கூடம்

**வினா எண் 31533—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதியில் பல்முனை நூற்பு இயந்திரக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதியில் பல்முனை நூற்பு இயந்திரக் கூடம் அமைக்கும் பிரேரணை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**60—**

### கூட்டுறவு நூற்பாலையை இயக்குதல்

**வினா எண் 33518—திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலையை மீண்டும் இயக்குவது குறித்த செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 ஜனவரி 24

61—

## துணி நூல் உற்பத்தி மையம்

**வினா எண் 34580—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் துணிநூல் உற்பத்தி மையம், நவீன துணி தையல் மையம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதியில் துணிநூல் உற்பத்தி மையம், நவீன துணி தையல் மையம் தொடங்க தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

62—

## இயக்குநர் அலுவலகம்

**வினா எண் 36121—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெசவாளர்களுக்கு சரக உதவி இயக்குநர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் நகரில் சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர் அலுவலகம் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி மாவட்டத்தில் மேலும் ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

## வணிக வளாகம்

**வினா எண் 37632—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

செங்கல்பட்டு தொகுதியில் விசைத்தறி வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதியில் விசைத்தறி வணிக வளாகம் கட்டுவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

64—

## கிளை அலுவலகம்

**வினா எண் 17601—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் வணிக வரித் துறையின் கிளை அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில், வணிக வரித் துறை கிளை அலுவலகம் கட்ட, வருவாய்த் துறைமூலம் ஆனைமலைக் குன்றுகள் கிராமம், வால்பாறை வட்டம் புல எண் 31/5/11-ல், 0.50 ஏக்கர் நிலம், 1-6-1999 அன்று வணிக வரித் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறை, தலைமைப் பொறியாளரிடமிருந்து வரப்பெற்ற ரூ. 141.00 இலட்சம் மதிப்பிலான தோராய மதிப்பீடு மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை வணிக வரி ஆணையர்மூலம் அரசால் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. வால்பாறையில் வணிக வரித் துறையின் கிளை அலுவலகம் கட்ட நடவடிக்கை தொடரப்படும்.

65—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 31061—திரு. பெ.க. விஜயகுமார்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், திருசூர் ஊராட்சியின் விளையாட்டு மைதானத்தினை பேட்டை கிராமத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், திருசூர் ஊராட்சியின் விளையாட்டு மைதானத்தினை, பேட்டை கிராமத்தில் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**66—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 31062—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கட்டிப்பூண்டி கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கட்டிப்பூண்டி கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**67—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 31784—திரு. எஸ். ஆர். இராஜா:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கம் ஊராட்சி, டாக்டர் கலைஞர் கருணாநிதி சோழன் நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கம் ஊராட்சி, டாக்டர் கலைஞர் கருணாநிதி சோழன் நகரில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**68—**

## உடற்பயிற்சிக் கூடம்

**வினா எண் 32287—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, 3-வது வார்டு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி 3-வது வார்டு, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**69—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 32288—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, 10 முதல் 18 வரையுள்ள வார்டுகளுக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, 10 முதல் 18 வரையுள்ள வார்டுகளுக்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**70—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 32289—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலகம் அருகிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**71—**

## விளையாட்டு அரங்கம்

**வினா எண் 33614—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வடகரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு அரங்கம் அமைத்து, உரிய பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், வடகரை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டு அரங்கம் அமைத்து, உரிய பொருட்கள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**72—**

## நிழற்குடை அமைத்தல்

**வினா எண் 28933—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை, சங்கரமநல்லூர் பேரூராட்சி, என்.ஜி. புதூர் ஆதி திராவிடர் காலனியில் நிழற்குடை கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை, சங்கரமநல்லூர் பேரூராட்சி, சங்கரமநல்லூர் படத்துக்குளம் பஞ்சாயத்து யூனியன் பகுதியைச் சேர்ந்த என்.ஜி. புதூர் காலனி, இந்திராகாந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசிய பூங்கா கோட்டத்தின் வன எல்லைக்கு வெளியில் அமைந்துள்ளதால், வனத் துறையின்மூலம் நிழற்குடை கட்டும் பணி மேற்கொள்ள இயலாது.

**73—**

## வனத் துறையின் அனுமதி

**வினா எண் 30199—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

திருவண்ணாமலை மாவட்டம், வீரனூர் அருகே வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலுள்ள அம்மன் சிலையை பொது மக்கள் தரிசிக்க வனத் துறை அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

வீரனூர் அருகே வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அம்மன் கோயில் தென்படவில்லை. வீரனூர் கிராமம் அருகே உள்ள மூலக்காடு காப்புக் காட்டில் உள்ள தண்டுகாரசாமி கோயிலுக்குச் செல்ல வழித்தடம் அனுமதிக்கப்பட்டு பொதுமக்களால் வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது.

**74—**

## மின் வேலி

**வினா எண் 30223—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, காட்டு குடியிருப்புப் பகுதியைச் சுற்றி மின் வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ், உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட வனப்பகுதியில் 5 கி. மீட்டர் தூரத்திற்கு ரூ. 8.00 இலட்சம் செலவில் சூரிய மின்வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**75—**

## மரக்கன்றுகள் நடுதல்

**வினா எண் 33567—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) வால்பாறை மலைப்பகுதி டாப்சிலிப், மானம்பள்ளி காடுகளில் புதிய மரங்களை நடுவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். நடப்பாண்டில் 2007-2008-ல் வால்பாறை மலைப்பகுதி டாப்சிலிப், மானம்பள்ளி காடுகளில் புதிய மரங்கள் கீழ்க்கண்ட எண்ணிக்கையில் நடுவதற்கு நர்சரி தயார் நிலையில் உள்ளது:

| சரகம் | மூங்கில் மர இனம் | இதர மர இனங்கள் |
|---|---|---|
| வால்பாறை | 5000 | 2000 |
| மானம்பள்ளி | 5000 | 2000 |
| டாப்சிலிப் | 10000 | 10000 |
| **மொத்தம்** | **20000** | **14000** |

(ஆ) மேற்படி இன மர நாற்றுக்கள் நடப்பாண்டில் மழைக்காலத்தைப் பயன்படுத்தி நடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**76—**

## வனவிலங்கு சரணாலயம்

**வினா எண் 37585—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, மலைப் பகுதியில் வனவிலங்கு சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம் அமைந்துள்ளதால், வால்பாறை மலைப் பகுதியில் புதியதாக வனவிலங்கு சரணாலயம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

[2008 ஜனவரி 24

77—

### சாலைப் பணிகள்

**வினா எண் 2895—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், தென்சங்கம்பாளையம் முதல் சோமந்துரை வரை பழுதடைந்துள்ள சாலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் பொள்ளாச்சி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள ஆனைமலை - பூலாங்கிணார் சாலையில் கி.மீ. 6/8-ல் பிரிந்து, அதே சாலையில், கி.மீ. 3/8-ல் இணையும் சோமந்துரை-சித்தூர் (வழி) சாலை கி.மீ. 0/6-4/0 வரையுள்ள மாவட்ட இதர சாலையின் மொத்த நீளம் 5.00 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 0/6-4/0 வரையிலான பழுதடைந்த சாலைப் பகுதியில் பணிகள் 2006-2007 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது. இச்சாலையில் மீதமுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

78—

### தரைப்பாலம்

**வினா எண் 13216—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புங்கத்து ஊராட்சிக்குட்பட்ட செல்லண்டியம்மன் கோவில்-வெள்ளக்கோவில் தொகுதி வரை இணைக்க தரைப்பாலம் ஒன்று அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தரைப்பாலம் அமைக்கக் கோரும் பகுதியானது, செல்லண்டியம்மன் கோவில் மெட்டூர், பழக்காணூத்து ஓட்டன்சத்திரம் -தாராபுரம்-காங்கேயம்-ஈரோடு சாலை கி.மீ. 84/10-ல் பிரிந்து (மாநில சாலை) ஊதியூர் தாசநாயக்கன்பட்டி சாலை கி.மீ. 8/6-ல் இணையும் சாலையாகிய இதர மாவட்டச் சாலை கி.மீ. 15/6-ல் அமைந்துள்ளது. இப்பகுதியில் தரைப்பாலம் கட்டும் திட்டம் தற்சமயம் அரசின் பரிசிலனையில் இல்லை.

79—

### தார்ச்சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 14944—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்கபுரத்திலிருந்து கோட்டைக்கருங்குளம் வரை செல்லும் தார்ச்சாலையைச் செப்பனிட்டுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கோட்டப் பராமரிப்பில் உள்ள கஸ்தூரி ரெங்கபுரம் சாலை என்பது கி.மீ. 0/0-4/0 வரையுள்ள பகுதி மாவட்ட இதர சாலை யாகும். இச்சாலையை, காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் சீர் செய்யும் பணிக்காக ரூ.19.50 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்த உடன்படிக்கை செய்து தற்போது பணி நடைபெற்று வருகிறது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

80—

### அங்கன்வாடி மையக் கட்டடம்

**வினா எண் 5171—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, வேலூர் சிறப்பு ஊராட்சி, தெற்கு நல்லியம்பாளையத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

கபிலர்மலைத் தொகுதி, வேலூர் சிறப்பு ஊராட்சி, தெற்கு நல்லியம்பாளையத்தில் 1-6-2004 முதல் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்ற அங்கன்வாடி மையத்திற்குச் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**81—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 5667—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை தொகுதி, ஜல்லிப்பட்டி சந்தன கருப்பனூர் கிராமங்களில் அங்கன்வாடி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலை வட்டாரம், சந்தன கருப்பனூர் கிராமத்தின் மக்கட்தொகை 527 ஆகும். இக்கிராம மக்கள் அரை கிலோமீட்டர் அருகில் உள்ள ஜல்லிப்பட்டி கிராமத்தின் மக்கள் தொகையில் ஒரு பகுதியினர் ஆவர். எனவே, சந்தன கருப்பனூர் கிராமத்தின் பயனாளிகள் ஏற்கெனவே ஜல்லிப்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் அங்கன்வாடி மையத்துடன் சேர்க்கப்பட்டு, திட்டப்பணிகள் அனைத்தும் இக்கிராமங்களின் பயனாளிகளுக்குச் சென்றடைகின்றன. எனவே, இக்கிராமங்களில் மேலும் கூடுதலாக அங்கன்வாடி மையம் அமைக்க வாய்ப்பு ஏதும் இல்லை.

*(ஆ)* எழவில்லை.





**82—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 6866—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, 1-வது வார்டு உடைந்தபாலம் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, 1-வது வார்டு உடைந்தபாலம் குக்கிராமத்தில் 63 வீடுகள் மட்டுமே உள்ளன. குக்கிராமத்தின் மொத்த மக்கட்தொகை 240 ஆகும். ஸ்ரீனிவாச நகர், செட்டிச்சாவடி அங்கன்வாடி மையத்தின் துணை கிராமமாக தற்போது உடைந்தபாலம் பகுதி பயன்பெற்று வருகிறது. மக்கட்தொகை 500-க்கும் குறைவாக உள்ளதால், தற்போதுள்ள விதிமுறைகளின்படி இப்பகுதிக்குத் தனி அங்கன்வாடி மையம் தொடங்க வாய்ப்பில்லை.

*(ஆ)* எழவில்லை.

**83—**

## அங்கன்வாடி மையம்

**வினா எண் 7471—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குட்டைமேடு காலனி பகுதியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஒலகடம் பேரூராட்சி, குட்டைமேடு காலனி பகுதியில் அங்கன்வாடி மையம் 2-3-1993-லிருந்து தனித்த ஊட்டச்சத்து மையமாகவும், 8-3-2004-லிருந்து அங்கன்வாடி மையமாகவும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) எழவில்லை.

**84—**

**அங்கன்வாடி மையக் கட்டடம்**

**வினா எண் 7753—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட ஒலகடம் கிராமம், குப்பைமேடு பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி சட்டமன்ற தொகுதி, அம்மாபேட்டை வட்டாரம், ஒலகடம் பேரூராட்சி, குப்பைமேட்டில் தனியார் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்திற்கு அரசுக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**85—**

**பாலர் பள்ளி**

**வினா எண் 8596—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் ஊராட்சி, தோட்டாவிளை கிராமத்தில் பாலர் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் வட்டம், திருவம்பலாபுரம் ஊராட்சி, தோட்டாவிளை கிராமத்தில் 1-6-2004 முதல் குழந்தைகள் மையம் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில் 40 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். எனவே, தோட்டாவிளை கிராமத்தில் மேலும் குழந்தைகள் மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

**86—**

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 8900—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குன்றடம் ஒன்றியம், காஞ்சிபுரம் காலனிக்குப் பால்வாடி ஊட்டச்சத்து மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) காங்கேயம் தொகுதி, குன்றடம் ஒன்றியம், காஞ்சிபுரம் காலனியில் மொத்த மக்கட்தொகை 221 ஆகும். விதிகளின்படி அங்கன்வாடி மையம் அமைக்க மக்கட்தொகை 1,000 இருக்க வேண்டும். மேலும், காஞ்சிபுரம் காலனி கிராமம் அருகாமையில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள என். காஞ்சிபுரம் கிராமத்தில் 1994 முதல் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின்மூலம் காஞ்சிபுரம் காலனியிலுள்ள பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். எனவே, காஞ்சிபுரம் காலனியில் தனி மையம் தொடங்க வாய்ப்புகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

**87—**

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 10242—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, நின்னக்கரை கிராமத்திற்கு அங்கன்வாடி மையமும், பால்வாடிக்குக் கட்டடமும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) திருப்போரூர் சட்டமன்ற தொகுதி, காட்டாங்குளத்தூர் குழந்தை வளர்ச்சித் திட்டத்தில், நின்னக்கரை கிராமத்தில் (நின்னக்கரை 1 மற்றும் 2) இரண்டு அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன. அவ்விரண்டு அங்கன்வாடி மையங்களுக்கும் கட்டடங்கள் உள்ளன. எனவே, கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

(ஆ) எழவில்லை.

**88—**

**அங்கன்வாடி மையம்**

**வினா எண் 14188—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, கண்டவராட்டி ஊராட்சியில் பால்வாடிக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, தெள்ளார் வட்டம், கண்டவராட்டி அங்கன்வாடி மையத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தன்விருப்ப நிதியிலிருந்து (District Collector's Discretionary fund) ரூ.1.38 இலட்சம் செலவில் கட்டடம் கட்டத் தீர்மானிக்கப்பட்டு, இப்பணிகள் முடிவடைய உள்ளன.

**89—**

**குழந்தைகளைத் தத்தெடுத்தல்**

**வினா எண் 23626—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில், பிரசவத்தின்போது தாய் மரணமடையும்போது பிறக்கும் குழந்தைகளைத் தத்தெடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) தாய் இறந்த பின்னர் வேறெந்த நெருங்கிய உறவினரும் இல்லாத குழந்தைகள் தொட்டில் குழந்தைகளாகச் சேர்க்கப்பட்டு, தொண்டு நிறுவனங்கள்மூலம் தகுதியான பெற்றோருக்கு தத்து வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனால், தந்தை அல்லது வேறு நெருங்கிய உறவினர்கள் உள்ள குழந்தைகள் அவர்கள் குடும்பத்திலேயே வளர்வதுதான் குழந்தையின் நலனிற்கு உகந்தது என்பது அரசின் கொள்கையாகும். இதையும் மீறி குழந்தைகளை வளர்க்க இயலாத தந்தையர்கள்/பெற்றோர்கள், தங்கள் குழந்தையை தொட்டில் குழந்தை திட்டத்தின்மூலம் தத்துக் கொடுக்கலாம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**90—**

**சத்துணவுக் கூடத்தைச் சீரமைத்தல்**

**வினா எண் 24215—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி, மணப்பாக்கம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் சத்துணவுக் கூடத்தினைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

மணப்பாக்கம் கிராம ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியின் சத்துணவு சமையலறை கட்டடத்தைச் சீரமைக்க சிறுசேமிப்பு ஊக்கத்தொகை 2007-2008-ல் ரூ.15,000/- மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி கட்டடத்தை 2007-2008-ம் ஆண்டில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**91—**

**சத்துணவு சமையல் கூடம்**

**வினா எண் 35708—திரு. ந. கணபதி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, கொந்தடூர் அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொந்தடூர் அரசு ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளி சமையல் அறைக்குரிய கட்டடம் கட்டுவதற்கு வானூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**92—**

## மாணவர் விடுதி தொடங்குதல்

**வினா எண் 3394—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருநகரி அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் ஆதி திராவிடர் மாணவர்களுக்கு அப்பகுதியிலேயே மாணவர் விடுதி ஒன்றினைத் தொடங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி வட்டம், திருநகரி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்று வரும் மாணவ/மாணவியர்கள் பெரும்பான்மையினர், 3 கிலோ மீட்டர் தூரத்திற்குள் வசித்து வருகின்றனர். மேலும் திருநகரிக்கு அருகில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் திருவெண்காட்டில் செயல்பட்டு வரும் மாணவர் விடுதியில் போதிய இடவசதிகள் இருந்தும், கடந்த ஆண்டு 26 மாணவர்கள் மற்றும் நடப்பாண்டில் விண்ணப்பம் செய்து கொண்ட 12 மாணவர்கள், ஆக மொத்தம் 38 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்ட இடங்களை விட குறைவான எண்ணிக்கையில் மாணவர்கள் விடுதியில் தங்கி பயின்று வருகின்றனர். எனவே, திருநகரியில் தற்சமயம் புதியதாக ஆதி திராவிடர் நல மாணவர் விடுதி தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.





**93—**

## கான்கிரீட் வீடுகள்

**வினா எண் 12939—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் தளிஞ்சி, மாவடப்பு திருமூர்த்தி மலை, கோடந்தூர் ஆகிய செட்டில்மென்ட் பகுதிகளில் மத்திய அரசு திட்டத்தில் கான்கிரீட் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள மலைவாழ் மக்கள் வசிக்கும் செட்டில்மென்ட் பகுதிகளான தளிஞ்சி, மாவடப்பு, திருமூர்த்தி மலை, கோடந்தூர் ஆகிய பகுதிகள் இந்திராகாந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசியப் பூங்காவிற்குள் அடங்கிய பகுதியாக உள்ளது. மேலும், தற்போது மத்திய அரசு வெளியிட்ட அரசாணையின்படி, இக்கோட்டம் ஆனைமலை வன விலங்கு புலிகள் காப்பகத் திட்டமாக அறிவித்துள்ளதால், மத்திய அரசின் வன உயிரின வாரியத்திடம் அனுமதி பெற்றபின்னரே இக்கோட்டத்தில் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க இயலும்.

(ஆ) மத்திய அரசின் வன உயிரின வாரியத்தின் அனுமதி பெற்ற பின்னரே பரிசீலனை செய்யப்படும்.

**94—**

## சிறப்புப் பயிற்சி

**வினா எண் 15347—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வு, நுழைவுத் தேர்வு சிறப்பாக எழுத சிறப்பு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

விடை—

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007-2008-ஆம் ஆண்டு நுழைவுத்தேர்வு, ரத்து செய்யப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் நுழைவுத் தேர்வுக்காக பயிற்சி தொடங்குவது குறித்து அரசளவில் முடிவு எடுக்கப்படும். நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி எதுவும் அளிக்கப்படவில்லை.

**95—**

### குடியிருப்பு வசதியை மேம்படுத்துதல்

**வினா எண் 16427—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை அண்ணா நகர் பகுதி மற்றும் தேவப்பட்டினத்தில் உள்ள ஆதி திராவிடர் குடியிருப்பு வசதியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் உள்ள அண்ணா நகர் பகுதிக்கு ரூ.2.00 இலட்சம் செலவில் 9-5-2007-ல் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. வால்பாறை தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் செலவில் தேவிப்பட்டினம் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் கான்கிரீட் ரோடு 30-4-2007 அன்று போடப்பட்டுள்ளது. மேலும் பொது நிதியிலிருந்து ரூ.50,000/- (ரூபாய் ஐம்பது ஆயிரம்) செலவில் வடிகால் 30-4-2007-ல் அமைக்கப்பட்டுள்ளது.

**96—**

### சாலை வசதி

**வினா எண் 23901—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுக்கம்பாளையம் பேருந்து நிலையம் முதல் உடுக்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனி வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், உடுக்கம்பாளையம் பேருந்து நிலையம் முதல் உடுக்கம்பாளையம் ஆதி திராவிடர் காலனி வரை, 2006—2007 ஆம் ஆண்டு பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் இருந்து ரூ.3.17 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

**97—**

### மீன் வளர்க்க மானியம்

**வினா எண் 12671—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நன்னீர் இறால் மற்றும் நன்னீர் மீன் வளர்க்க அதிக மானியம் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

நன்னீர் மீனுடன் நன்னீர் இறால் வளர்ப்பை மேற்கொள்ளும் மீன் வளர்ப்பாளர்களுக்கு ஒருமுறை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.1,875/-மானியமாக துறை மூலமாக அளிக்கப்படுகிறது. அதிக பட்சமாக ஒருவர் ஐந்து ஹெக்டேருக்கு மானியம் பெறலாம்.

இதேபோன்று நன்னீர் இறால் வளர்ப்போருக்கு உள்ளீட்டு செலவினமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.1.20 இலட்சத்தில் மானியமாக ரூ.24,000/- என்ற அளவில் மைய அரசு மற்றும் மாநில அரசால் சம்பந்தப்பட்ட மாவட்ட மீன் வளர்ப்போர் முகமையால் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது:

[2008 ஜனவரி 24

I. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக வேண்டும்.

II. இதே இனத்திற்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் மானியம் பெற்றிருத்தல் கூடாது.

III. மானியம் பெறும் நபர் நன்னீர் இறால் வளர்ப்புப் பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

IV. இதே இனத்திற்கு மைய அரசு அல்லது மாநில அரசின் இதர நிறுவனங்களில் மானியம் பெற்றிருக்கக் கூடாது.

**98—**

## பஞ்சகால சேமிப்பு நிவாரண நிதி

**வினா எண் 18636—திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவப் பெண்களுக்கு, 2005 ஆம் ஆண்டுக்கான பஞ்சகால சேமிப்பு நிவாரண நிதியை விரைந்து வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

மத்திய அரசு வழிகாட்டும் நெறிமுறைகளில் தமிழ்நாட்டிலுள்ள கடலோர மாவட்ட மீனவ மகளிர் முழுநேர மீன்பிடித் தொழிலில் ஈடுபடாததால் நிவாரணம் வழங்க இயலாது என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, 2005 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட மீனவ மகளிர் செலுத்திய சந்தாத் தொகை மட்டும் திரும்ப வழங்கப்பட்டுவிட்டது. இதனை மாநிலத் திட்டமாகச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள 13 கடலோர மாவட்டங்களில் உள்ள மீன்பிடிப்புத் தொழில் மற்றும் மீன்பிடித் தொழில் சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து கடல் மீனவ மகளிருக்கும் பஞ்சகால சேமிப்பு நிவாரண நிதி வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவ மகளிருக்கு மூன்று வகையாகப் பிரித்துப் சேமிப்பு மற்றும் நிவாரண நிதி வழங்க அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை (4டி) 13 கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் (மீன் 3) துறை, நாள் 7-9-2006.)



2008 ஜனவரி 24]

1. சென்னை முதல் இராமநாதபுரம் (இராமேஸ்வரம் உட்பட) முடிய உள்ள 10 மாவட்ட மீனவ மகளிருக்கு பஞ்சகால நிவாரணம் செப்டம்பர் முதல் டிசம்பர் முடிய நான்கு மாதங்கள் வரை வழங்கப்பட்டு வருகிறது.

2. கன்னியாகுமரி மாவட்ட மீனவ மகளிருக்கு டிசம்பர் முதல் மார்ச் முடிய நான்கு மாதங்கள் வரை பஞ்சகால நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது.

3. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய இரு மாவட்ட மீனவ மகளிருக்கு மார்ச் முதல் ஜூன் முடிய பஞ்சகால நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது.

**99—**

## வலம்புரி விசைப் படகு

**வினா எண் 29857—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மீனவ மக்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் போது காணாமல் போனால் தேடப் பயன்படுத்தி வந்த வலம்புரி விசைப் படகை மீண்டும் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 முறைப்படி செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கவும், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை இயற்கையால் ஏற்படும் இன்னல்களிலிருந்து மீட்கவும், துறைக்கு 5 சுற்றுக் காவல் படகுகள் மத்திய அரசின் 100% நிதி உதவியுடன் வாங்கப்பட்டன. இப்படகுகளின் இயக்கத்திற்கும், பராமரிப்பிற்கும் பணியாளர் பதவிகள் அரசால் ஒப்பளிக்கப்படாததால் படகுகள் இயக்கப்படாமல் இருந்தன. முதல் 3 மாத காலத்திற்குப் படகுகளைத் தயாரித்த நிறுவனமே மேற்கண்ட படகுகளை இயக்கி வந்தது. பின்னர் படகுகள் கரையேற்றி வைக்கப்பட்டன. இந்நிலையில் 2004 ஆம் ஆண்டு சுனாமியின் போது சென்னை இராயபுரத்தில் கரையேற்றி வைக்கப்பட்டிருந்த நிலம் படகு சுனாமி அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனது.

[2008 ஜனவரி 24

கரையேற்றி வைக்கப்பட்டிருந்த மற்ற படகுகள், வலம்புரி உட்பட, இயக்கமின்றியும், பராமரிப்பின்றியும் இருந்து வந்தமையால் அவை பழுதடைந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. ஆதலால் இப்படகுகளைக் கழித்தொதுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலுக்குள் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்கள் இயற்கைச் சீற்றத்தால், கடலுக்குள் காணாமல் போகும் நிகழ்வுகளில் படகுகளையும், மீனவர்களையும் தேடிக் கண்டுபிடிக்க கடலோரக் காவல் படை மற்றும் கப்பற் படையினருக்கு உடனடியாக விவரம் தெரிவிக்கப்பட்டு கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் தேடுதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதலால் இதனை மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

**100—**

## இறால் பண்ணைகள்

**வினா எண் 34601—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இறால் பண்ணைகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளைச் சார்ந்த இறால் பண்ணைகள் அமைக்க வாய்ப்புள்ளது. இதில் 14,880 ஹெக்டேர் கடலோரப் பகுதிகள் கண்டறியப்பட்டு, அவற்றில் தற்போது 2,257 பண்ணைகள் 6,752 ஹெக்டேரில் அமைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு மானிய உதவியுடன் தமிழ்நாட்டில் 5 இடங்களில் உவர்நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் செயல்பட்டு வருகின்றன. இறால் வளர்க்க முன்வருவோரை இடத் தேர்வுக்குப் பின் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் மீன்வள விவசாயியாகச் சேர்ந்து இறால் வளர்ப்புப் பயிற்சி அளித்து இறால் பண்ணைகளுக்குத் தேவையான கடன்/அரசு மானியம் பெற ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், இரண்டு ஹெக்டேர் வரை இறால் பண்ணைகள் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்கு மூலதன முதலீட்டில் 25 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ஹெக்டேருக்கு ரூ.40,000/- வீதம் மானியம் மத்திய, மாநில அரசுத் திட்டத்தில் அளிக்கப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 24]

## பட்டியல் 3

**1—**

## கலால் வரி

**வினா எண் 17612—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தயார் செய்யும் பொருட்களுக்கு கலால் வரியை அறவே ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் தயார் செய்யப்படும் அயல்நாட்டு சாராவிகள் மீது கலால் வரி விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனை ரத்து செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**2—**

## பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 18128—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்குப் போதுமான பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வால்பாறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒரு நீர்தாங்கிவண்டி கொண்ட ஓரூர்தி நிலையமாகும். அரசின் 5-3-2001-ஆம் நாளிட்ட ஆணை (நிலை) எண் 196-ல் ஓரூர்தி கொண்ட

[2008 ஜனவரி 24

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் நிர்ணயம் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன:

| | | |
|---|---|---|
| 1. நிலைய அலுவலர் | — | 1 |
| 2. முன்னணித் தீயணைப்போர் | — | 2 |
| 3. தீயணைப்போர் ஓட்டி | — | 2 |
| 4. எந்திரக் கம்மியர் ஓட்டி | — | 1 |
| 5. தீயணைப்போர் | — | 11 |

தற்போது வால்பாறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் கீழ்காணும் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்:

| | | |
|---|---|---|
| முன்னணித் தீயணைப்போர் | — | 2 |
| தீயணைப்போர் ஓட்டி | — | 2 |
| தீயணைப்போர் | — | 10 |

இத்தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் தற்போது 1 நிலைய அலுவலர், 1 எந்திரக் கம்மியர் ஓட்டி மற்றும் 1 தீயணைப்போர் பணியிடங்கள் காலியாக உள்ளன. தற்போது நடைமுறையிலுள்ள விதிமுறைகளைப் பின்பற்றி காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) இக்கேள்வி தற்போது எழவில்லை.

**3—**

## புதிய கட்டடம்

**வினா எண் 28422—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சேலம் கோட்டம், ஓமலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட, ஓமலூர் வட்டம்,



2008 ஜனவரி 24]

புளியம்பட்டி கிராமத்தில், நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தீயணைப்புத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்தில் சொந்தமாகக் கட்டடம் கட்ட பொதுப் பணித் துறையிலிருந்து மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ளன. மேலும், சட்டமன்றப் பேரவையில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான அறிவிப்புகளில், 8 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு மொத்தம் ரூ.2 கோடி செலவில் கட்டடங்கள் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் ஓமலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் ஒன்றாகும். எனவே, ஓமலூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு விரைவில் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**4—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 33304—திரு. கு. செல்வம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மங்களூர் தொகுதி, மங்களூரை மையமாகக் கொண்டு தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கடலூர் மாவட்டம், மங்களூர் பகுதியிலிருந்து 21 கிலோமீட்டர் தொலைவில் திட்டக்குடி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள ஊர்தியைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும் என்பதால் இவ்விடத்தில் புதிதாக ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

**5—**

## குறைவான மின் அழுத்தம்

**வினா எண் 3693—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் உள்ள வழூதூர் ஊராட்சி, புதுக்கல்பாக்கம் கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக உள்ளது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சீரமைக்க அரசு நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டூர் மின்மாற்றி எண் 3, 100 கே.வி.ஏ. சுமார் ரூ.4,39,740/- மதிப்பீட்டில் 4-1-2007 அன்று நிறுவி, அதிலிருந்து சுமார் 400 மீ. தூரத்திற்கு புதிய தாழ்வழுத்த மின்பாதை ரூ.73,740/- மதிப்பீட்டில் 8-2-2007 அன்று அமைக்கப்பட்டு புதுக்கல்பாக்கம் கிராமத்திற்குச் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**6—**

## புதிய கம்பிவடம்

**வினா எண் 19942—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல் ஜஸ்டிஸ் பண்டகசாலை, வெங்கடாசலம் தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு, கப்பல் போலு தெரு, பால அருணாச்சலம் தெரு, பி.ஏ.என். ராஜரத்தினம் சாலை, நமச்சிவாயம் தெரு, குருவப்ப தெருவில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 15-ல் உள்ள ஜஸ்டிஸ் பண்டகசாலை, வெங்கடாசலம் தெரு, கப்பல்போலு தெரு, பால அருணாச்சலம் தெரு, பி.ஏ.என். ராஜரத்தினம் சாலை, நமச்சிவாயம் தெரு, குருவப்ப தெரு ஆகியவற்றில் புதைவடம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கம்மாள் தெருவில் புது மின்மாற்றி மற்றும் பில்லர் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 24]

**7—**

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 22952—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்றுப்படுகையிலிருந்து 100 மீட்டருக்கு மேலுள்ள விவசாயக் கிணற்றிற்கு மின் இணைப்பு வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தற்போதைய வாரிய விதிகளின்படி ஆற்றுப்படுகையிலிருந்து 200 மீட்டருக்குள் உள்ள விவசாய கிணற்றுக்குச் சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து மறுப்பின்மைச் சான்று மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையின்பேரில் விவசாய மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**8—**

## துணை மின் நிலையப் பணிகள்

**வினா எண் 24754—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம், கரடிவாளி, ஈச்சிப்பட்டி, சங்கோதிபாளையம், சோமனூர், சூலூர் ஆகிய இடங்களில் துணை மின் நிலையப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம், கரடிவாளி, ஈச்சிப்பட்டி, சங்கோதிபாளையம், சோமனூர், சூலூர் ஆகிய இடங்களில் துணை மின் நிலையப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

[2008 ஜனவரி 24

9—

### சீரான மின் விநியோகம்

**வினா எண் 29863—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, சமூகரெங்காபுரம் ஊராட்சி, துரைகுடியிருப்பு கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் தொகுதிக்கு உட்பட்ட சமூகரெங்காபுரம் பஞ்சாயத்து துரைகுடியிருப்பு கிராமத்தில் புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்கப்பட்டு, சீரான மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

10—

### அங்கன்வாடி மையம்

**வினா எண் 3724—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி பகுதியிலுள்ள அங்கன்வாடி மையத்தைப் பழுதுநீக்கி, புதுப்பித்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி பகுதியில் உள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் 2005-2006 ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் திட்டத்தில் ரூ.15,000 மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

11—

### துப்புரவுப் பணியாளர் நியமனம்

**வினா எண் 4297—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளுக்குப் போதுமான துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம், பிலிசின்னம்பாளையம், கரியாஞ்செட்டிபாளையம், அங்கலக்குறிச்சி, ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் நிதி நிலைக்கேற்ப துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

12—

### கம்பிகளை மாற்றி அமைத்தல்

**வினா எண் 5224—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை நகராட்சியில் பி.வி. கோவில் வீதி அருகில் உள்ள கணேசர் சந்தில் உள்ள கேபிள் இணைப்பு டெலிபோன் கம்பிகள் வாகனங்கள் செல்லுவதற்கு இடையூறாக உள்ளதைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகராட்சியில் பி.வி. கோவில் வீதி அருகில் உள்ள கணேசர் சந்தில் உள்ள கேபிள் இணைப்பு மற்றும் டெலிபோன் கம்பிகள் வாகனங்களுக்கு இடையூறின்றி மாற்றியமைக்கச் சம்பந்தப்பட்ட கேபிள் டி.வி. நிறுவனத்தினர் மற்றும் பாரத் சஞ்சார் நிஹாம் லிமிடெட் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்போது கம்பிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

**13—**

**தார்ச் சாலை**

**வினா எண் 5906—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, திப்பிராட்டிஹள்ளி ஊராட்சி, பசுவாபுரம் முதல் சந்தனூர் மேடு தொடக்கப் பள்ளி வரை கொண்டகரஹள்ளி ஊராட்சி மணலூர் காளிகாம்பு வரை, திப்பிராட்டிஹள்ளி ஊராட்சி திப்பிராட்டிஹள்ளி முருகன் கோயில் வரை தார்ச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ). ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஊராட்சி ஒன்றியம், திப்பிராட்டிஹள்ளி ஊராட்சி பசுவாபுரம் முதல் சந்தனூர் மேடு தொடக்கப் பள்ளி வரை உள்ள சாலை மற்றும் கொண்டகரஹள்ளி ஊராட்சி, மணலூர் காளிகாம்பு வரையுள்ள சாலை 2007-2008-ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். திப்பிராட்டிஹள்ளி முருகன் கோயில் வரை தார்ச் சாலை அமைக்க நபார்டு திட்டத்தின்கீழ் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

**14—**

**தார்ச் சாலை**

**வினா எண் 5952—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி முதல் வில்லாணி வரையுள்ள சாலை மற்றும் ஜோதில்நாயக்கனூர் பஞ்சாயத்து, கோடங்கி, நாயக்கன்பட்டி மயானச் சாலையையும் தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி முதல் வில்லாணி வரையுள்ள சாலை மற்றும் ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி, கோடங்கி, நாயக்கன்பட்டி மயானச் சாலையையும் தார்ச் சாலையாக அமைக்க உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு 2006-2007-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கிட பரிந்துரை கேட்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

**சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா எண் 5955—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி யூனியன், வின்னக்குடி கண்மாய், சொக்கத்தேவன்பட்டி, பெரிய குறவகுடி சாலை, கொடிக்குளம் பஞ்சாயத்து, அகிலாண்டேஸ்வரி சாலை, பிரவியம்பட்டி சாலை, பன்னியான் பஞ்சாயத்து சொக்கநாதபுரம் சாலை, பொம்மன்பட்டி நுழைவு வாயில் வரையுள்ள சாலை, உத்தப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, உத்தப்பநாயக்கனூர் பஞ்சாயத்து பிரிவு-வாடிப்பட்டி வரையுள்ள சாலைகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, பொம்மன்பட்டி சாலை அமைத்தல், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறைமூலம் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. உத்தப்பநாயக்கனூர்—வாடிப்பட்டி சாலை நபார்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் பணியைச் செய்ய தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**16—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 6105—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, பொம்மன்பட்டி, நல்லபெருமாள்பட்டி காலனிக்கு மேற்கிலும், கலுங்கப்பட்டி கண்மாய் கீழ்புறம், மகாலிங்கபுரம் சாலையின் அருகேயும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, பொம்மன்பட்டி, நல்லபெருமாள்பட்டி காலனிக்கு மேற்கிலும், கலுங்கப்பட்டி கண்மாய் கீழ்புறம், மகாலிங்கபுரம் சாலையின் அருகேயும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு 2006-2007-ஆம் ஆண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கிட பரிந்துரை செய்யக் கேட்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**17—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 7057—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கே. வல்லாக்குண்டாபுரம்—வலையபாளையம் கிராமத்திற்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து, குடிநீர் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கே. வல்லாக்குண்டாபுரம்—வலையபாளையம் பகுதியில் வரும் நிதியாண்டில் ஆழ்துளைக் கிணறு அமைக்க ஊராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**18—**

**கைப்பம்புகள் அமைத்தல்**

**வினா எண் 7354—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, என்.எல். புரம், வேதாந்தம் நகரில் இரண்டு கைப்பம்புகள் அமைத்துத் தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, என்.எல். புரம், வேதாந்த நகரில் அக்ரஹார தெருவிலிருந்து குடிநீர் இணைப்புக் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 24

**19—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 7656—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மருள்பட்டி ஆதி திராவிடர் காலனியில் குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, மருள்பட்டி ஆதி திராவிடர் காலனிக்குத் தற்சமயம் மலையாண்டி கவுண்டனூர் கிராமத்திலிருந்து குடிநீர்க் குழாய் அமைத்து, தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

**20—**

**இணைப்புச் சாலை**

**வினா எண் 8115—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுசாலை கிராமம் நேர் வழியாகப் பத்திரக்கோட்டை செல்ல பத்திரக்கோட்டை-குமணங்குளம், காட்டாம்பட்டு கீழ்க்குப்பம்-காடாம்புலியூர் ஆகிய பகுதிகளில் இணைப்புச் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை, புலியூர் காட்டுசாலை செல்ல தார்ச் சாலை நல்ல நிலையில் உள்ளது. பத்திரக்கோட்டை-குமணங்குளம் சாலை தற்போது எஸ்.ஜி.ஆர்.ஓய். 2006-2007-ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ஜல்லி சாலை போடப்பட்டு வருகிறது.

சாத்தமாம்பட்டு, கீழ்க்குப்பம், காடாம்புலியூர் ஆகிய மூன்று கிராமங்களில் இணைப்புச் சாலை அமைக்க 2007-2008 ஆம் ஆண்டு சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் இணைப்புச் சாலை அமைக்கப்படும்.

**21—**

**சாலைகளைச் செப்பனிடுதல்**

**வினா எண் 8119—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் கிராமம் தோப்புக் கொல்லையில் சாத்தமாம்பட்டு கிராமம், கிழக்குத் தெரு, கருக்கை கிராமம், கானாஞ்சாவடி உட்புறச் சாலை, ப. ஆண்டிக்குப்பம் கிராமம், எல்.என்.புரம் ஊராட்சி, வ.உ.சி. தெரு சாலை, மேலிருப்பு கிராமச் சாலை ஆகிய சாலைகளைச் செப்பனிட்டுத் தர அரசு முன்முவருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் கிராம உள் சாலை, சிமெண்ட் சாலை 2006-2007 ஆம் ஆண்டு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது. தோப்புக் கொல்லையில் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில்

[2008 ஜனவரி 24

2006-2007 ஆம் ஆண்டு சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. சாத்தமாம்பட்டு கிராமம், கிழக்குத் தெரு சிமெண்ட் சாலை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டு செய்து முடிக்கப்பட்டது.

கருக்கை கிராமத்தில் பொது நிதி மூலம் 2006-2007 ஆம் ஆண்டு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது. கானாஞ்சாவடி உட்புற சாலை, தார்ச் சாலை மற்றும் சிமெண்ட் சாலைகள் வீடுகள் குடியிருக்கும் பகுதியில் உள்ளது. ப. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் பொது நிதி மூலம் 2005-2006 ஆம் ஆண்டு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை போடப்பட்டுள்ளது.

எஸ்.என். புரம், வ.உ.சி. தெருவில் எஸ்.ஜி.ஆர். ஓய். திட்டத்தில், 2006-2007 ஆம் ஆண்டு ஜல்லி சாலை ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் போடப்பட்டுள்ளது. மேலிருப்பு கிராமச் சாலை நெடுஞ்சாலை துறையைச் சார்ந்தது ஆகும்.

**22—**

## காவிரி பாலத்தைச் சீர்செய்தல்

**வினா எண் 8265—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, மணலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குமணன் துறை காவிரி பாலத்தை (நடைபாலம்) சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, மணலூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள குமணன் துறை காவிரி நடைபாலத்தைப் புதியதாகக் கட்ட மதிப்பீடு சுமார் ரூ30 லட்சம் செலவினமாகும். நபார்டு நிதியுதவி திட்டத்தில் அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் இப்பணியினைச் செய்ய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றால் பணியினைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**23—**

## மின் மோட்டார்கள்

**வினா எண் 9646—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம், தா. பழூர் பகுதி அனைத்து ஊராட்சிகளும் பயன்பெறும் விதத்தில் மின் மோட்டார்கள் வாங்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 35 ஊராட்சிகளில் 240 விசை இறைப்பான்களும், தா. பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 33 ஊராட்சிகளில் 128 விசை இறைப்பான்களும் உள்ளதில் மின் மோட்டார் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. மின் மோட்டார் ஏதேனும் பழுது ஏற்பட்டால் உடனடியாக உபரி மின் மோட்டர் மாற்றி குடிநீர் தடையின்றி வழங்கும் வகையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 5 உபரி (Spare Motors) மின் மோட்டார்கள் வாங்கி இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நிலையில் தற்போது மேற்படி ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் பொது மக்களுக்குத் தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**24—**

## தார்ச் சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 10809—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஊராட்சி, வடகரை—அன்னவாசல் தார்ச் சாலையைச் செப்பனிட்டு தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், வடகரை அன்னவாசல் தார்ச் சாலையாக மேம்பாடு செய்திட மதிப்பீடு ரூ.12.00 இலட்சம் ஆகும். தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதுமான நிதி இல்லாததால் இப்பணியினைத் தற்போது செய்ய இயலாது.

**25—**

**தார்ச் சாலை**

**வினா எண் 10810—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி, உதயசூரியன் தெரு, மேலப்பாதி ஊராட்சி, அக்ரஹாரம், கருவாழைக்கரை ஊராட்சி அக்ரஹாரம், ஆறுபாதி அக்ரஹாரம் ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சி, உதயசூரியன் தெருவிற்குத் தார்ச் சாலை அமைக்க மதிப்பீடு ரூ.3 இலட்சம் ஆகும். கருவாழைக்கரை ஊராட்சி அக்ரஹாரம் தெருவிற்குத் தார்ச் சாலை அமைத்திட மதிப்பீடு ரூ.3 இலட்சமாகும். இப்பணிகளைச் செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது போதிய நிதி வசதி இல்லை.

**26—**

**தார்ச் சாலை**

**வினா எண் 10815—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், மடப்புரம் ஊராட்சி, வெள்ளாளர் தெரு, திருச்சம்பள்ளி ஊராட்சி, வல்லம் காலனி—புதுக்கிராமம் வரை, நடுக்கரை ஊராட்சி, மேலப்பாதி, கீழ்த்தெரு ஆகிய பகுதிகளிலுள்ள சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மடப்புரம் ஊராட்சி, வெள்ளாளத் தெரு சாலையினைச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.4 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் திருச்சாம்பள்ளி ஊராட்சி, வல்லம் புதுக்கிராமம் சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்திட மதிப்பீடு ரூ.5 இலட்சம் ஆகும். நடுக்கரை ஊராட்சி, மேலப்பாதி, கீழ்த்தெரு, சாலையினைப் தார்ச் சாலையாக மேம்பாடு செய்திட மதிப்பீடு ரூ.5 இலட்சம் ஆகும். மேற்காணும் பணிகள் எடுத்துச் செய்ய ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை.

**27—**

**கருங்கல் சாலை**

**வினா எண் 10821—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், கீழ்மாத்தூர் பிரதான சாலை, மயானம் வரையுள்ள ஆற்றங்கரை சாலையினைக் கருங்கல் சாலையாக மாற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், கீழ்மாத்தூர் பிரதான சாலை, மயானம் வரையில் உள்ள ஆற்றங்கரை சாலையினைக் கருங்கல் சாலையாக மேம்பாடு செய்திட ரூ.7.00 இலட்சம் ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாததால் இப்பணியினைச் செய்ய இயலாது.

**28—**

## சாலையைச் சீரமைத்தல்

**வினா எண் 10822—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், அரங்கக்குடி, ஏரிகலத்து தெரு சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், அரங்கக்குடி, ஏரிகலத்து தெரு சாலையைச் சீரமைக்க மதிப்பீடு ரூ.8.00 இலட்சம் ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாததால் இப்பணியினைச் செய்ய இயலாது.

**29—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 10831—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார், கோவில் ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சியின் சத்தியவாணன் வாய்க்காலில் கன்னிக்கோயில் அருகில் வண்டிப் பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சியில் கன்னிக்கோயில் அருகில் சத்தியவாணன் வாய்க்காலில் புதிய வண்டிப்பாலம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது போதிய நிதி வசதியில்லாததால் இப்பணியினைச் செய்ய இயலாது.

**30—**

## பாலம் கட்டுதல்

**வினா எண் 11218—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், ஏ.கே.மோட்டூர் ஊராட்சி, அம்மன் நகரில் ஆற்றைக் கடக்க பாலம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஏ.கே.மோட்டூர் ஊராட்சி, அம்மன் நகர் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 2006-2007-ன்கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு ரூ.3,99,600/- செலவில் 10-4-2007-ல் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களின் பொதுமக்கள் நல்லமுறையில் போக்குவரத்திற்குப் பயன்படுத்தி வருகிறார்கள்.

[2008 ஜனவரி 24

**31—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 12578—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், பாண்டி ஊராட்சி, மேலத் தெரு சாலையினைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பாண்டி ஊராட்சி, மேலத் தெரு சாலை 1,300 மீ. நீளமுடையது. இதில் 2006-2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் 300 மீ. மற்றும் ஊராட்சி நிதியில் 800 மீ., மொத்தம் 1,100 மீ. மெட்டல் சாலை போடப்பட்டுள்ளது. மீதமுள்ள 200 மீ. சாலை, 2007-2008 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். II திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**32—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 12579—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சி, மேலச்சேரிக்குச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், சேரி ஊராட்சி, மேலச்சேரி சாலை சுமார் 1.50 கி.மீ. கிராவல் சாலையாக உள்ளது. இச்சாலையில் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா 2 (எஸ்.ஜி.ஆர்.ஒ.-II) 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டத்தில் 200 மீ. கருங்கல் கப்பிச் சாலையாக போடப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலையை ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**33—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12580—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம் பிரதான சாலையிலிருந்து கீழக்காடு வரை செல்லும் பிரதான சாலை, கீழ்வங்கநகர் ஊராட்சி, ஓவர்குடி கிராமத்தில் புதுப்பாலம் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், உதயமார்த்தாண்டபுரம், கீழக்காடு சாலை 3.10 கி.மீ. ஆகும். இதில் 2006-2007 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மானியத்தில் 500 மீ. நீளத்திற்குத் தார்ச் சாலையும், ஊராட்சி நிதியில் 400 மீ. தார்ச் சாலையும் அமைக்கப்பட்டு வருகிறது. மீதம் உள்ள 2.2 கி.மீ. சாலை 2007-2008 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் (நபார்டு நிதியுதவி) எடுத்துச் செய்ய

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஓவர்குடி கிராமம், புதுப்பாலம் சாலை தற்போது நபார்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**34—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12582—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சியிலுள்ள மேலகண்டமங்கலம் கிராம கப்பிச் சாலை, புழுதிக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலிருந்து கிழபுழுதிக்குடி வரையுள்ள கப்பிச் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச்சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சியிலுள்ள மேலகண்டமங்கலம் சாலை 2 கி.மீ. கிராவல் சாலையாக உள்ளது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டால் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். புழுதிக்குடியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலிருந்து கிழபுழுதிக்குடி சாலை சுமார் 2 கி.மீ. ஆகும். தற்போது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

**35—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 12589—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், ஆலங்காடு புத்தகரம் இணைப்புச் சாலையில் ஆலங்காடு எல்லையில் கோவிலூர் வடிகால் வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஆலங்காடு புத்தகரம் இணைப்புச் சாலை கோவிலூர் வடிகால் சுமார் 50 மீட்டர் நீர் வழிப் பாதையாகும். இதில் வண்டிப் பாலம் அமைக்க சுமார் ரூ.25.00 இலட்சம் ஆகும். இப்பணி மேற்கொள்ளப்பட்டால் விவசாயத்திற்கு மட்டும் பயன்படும். சிறப்பு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறும்போது இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12720—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பாறைக்களம், கிழக்கு களம், பொன்னுரங்கம்பட்டி, வடக்கிப்பட்டி—கருப்பூர் வரை, வலையப்பட்டி - அடைக்கம்பட்டி - சாம்பட்டி வரை, நெடுஞ்சிக்களம் - வளையப்பட்டி வரை, வெள்ளைய கவுண்டம்பட்டி சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், பாறைகளம் கிழக்குக்களம், பொன்னுரங்கம்பட்டி வடக்கிப்பட்டி - கருப்பூர் வரை தார்ச் சாலை அமைப்பதில்

[2008 ஜனவரி 24

பொன்னுரங்கம்பட்டி, வடக்கிப்பட்டி சாலை கி.மீ.0/0—0/6 வரை தார்ச் சாலையாக மாற்றிடவும், கி.மீ. 0/6-2/6 மண் சாலை, பாலம் மற்றும் தார்ச் சாலையாக மாற்றிட நெடுஞ்சாலைத் துறைமூலம் தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புத்தாநத்தம்-கல்லுப்பட்டி-வடக்கிப்பட்டி சாலை கி.மீ.0/2-0/3 நெடுஞ்சாலைத் துறைமூலம் இப்பணி 2005-2006 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

பாறைக்களம்-கிழக்குகளம் சாலை, கி.மீ. 0/0-1/7 தற்போது மண் சாலையாக உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றிட ரூ.20.00 இலட்சம் ஆகும்.

வலையப்பட்டி - அடைக்கம்பட்டி முதல் சாம்பட்டி வரை உள்ள சாலை கி.மீ.0/0-1/0 தற்பொழுது மண் சாலையாக உள்ளது. இதை தார்ச் சாலையாக மாற்றிட ரூ.12.00 இலட்சம் ஆகும்.

நெடுஞ்சிக்களம் - வளையப்பட்டி வரை உள்ள சாலை கி.மீ. 0/0-1/0 உள்ள சாலை தற்பொழுது மண் சாலையாக மாற்றிட ரூ.15.00 இலட்சம் ஆகும்.

வெள்ளைய கவுண்டம்பட்டி சாலை கி.மீ. 0/0-1/0 தற்பொழுது மெட்டல் சாலையாக உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றிட ரூ.7.50 இலட்சம் ஆகும்.

மேற்காணும் பணிகளைச் செய்ய மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள பரிந்துரை அளிக்கப்பட்டால் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**37—**

### தார்ச் சாலை

**வினா எண் 12725—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, கீழபொய்யப்பட்டிலிருந்து கஸ்பாபொய்யப்பட்டி, கீழபொய்யப்பட்டிலிருந்து ராயம்பட்டி, பன்னாங்கொம்பு, வெள்ளையம்மாபட்டி - பின்னத்தூர் வழி பெருமாம்பட்டி வரை எப். தொப்பம்பட்டி - மேட்டுக்கடை-



2008 ஜனவரி 24]

பொடங்குப்பட்டி வரையுள்ள சாலைகளைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, கீழபொய்யப்பட்டி கஸ்பாபொய்யப்பட்டி வரை கி.மீ.0/0-3/0 வரையில் தற்பொழுது உள்ள தார்ச் சாலை பழுதாகியுள்ளது. தார்ச் சாலை அமைக்க ரூ.15.00 இலட்சம் தேவைப்படும்.

கீழபொய்யப்பட்டி - ராயம்பட்டி கி.மீ. /0-2/0 வரையுள்ள சாலை தற்பொழுது மண் சாலையாக உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றி அமைக்க ரூ.15.00 இலட்சம் தேவைப்படும்.

பன்னாங்கொம்பு - வெள்ளையம்மாபட்டி - பின்னத்தூர் வழி பெருமாம்பட்டி வரை கி.மீ. 0/0-2/0 வரையுள்ள சாலை தற்பொழுது ஓரடுக்கு மெட்டல் போடப்பட்டுள்ளது. இச்சாலையை தார்ச் சாலையாக அமைக்க ரூ.15.00 இலட்சம் ஆகும். எப். தொப்பம்பட்டி - மேட்டுக்கடை-பொடங்குப்பட்டி கி.மீ. 0/0-4/0 வரை தற்பொழுது உள்ள தார்ச் சாலையை மராமத்து செய்ய ரூ.20.00 இலட்சம் ஆகும்.

மேற்காணும் பணிகளைச் செய்ய மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் பணியினை மேற்கொள்ள பரிந்துரை அளிக்கப்பட்டால் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**38—**

### பாலம் கட்டுதல்

**வினா எண் 12728—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், குருமலைப்பட்டியில் பாலம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், குருமலைப்பட்டியில் பாலம் கட்ட ரூ.5.00 இலட்சம் தேவைப்படும். இதற்குரிய நிதியினை மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் மேற்கொள்ள சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை அளிக்கப்பட்டால் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**39—**

**தார்ச் சாலை**

**வினா எண் 12872—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியம், ப. குட்டப்பாளையம் ஊராட்சியில் குட்டப்பாளையம் பிரிவிலிருந்து குட்டப்பாளையம் ஆதி திராவிடர் காலனி மேலப்பாளையத்திலுள்ள சரவணா நகர், புங்கம்பாடி ஊராட்சி, பாலவலசுவிலிருந்து அ. மேட்டுப்பாளையம் வரை, மேட்டுப்பாளையத்திலிருந்து தலையங்காட்டூர் வரை, ப. குட்டப்பாளையம் ஊராட்சி, ஓலப்பாளையத்தில் மாகாளியம்மன் கோயிலிலிருந்து மயானம் வரை உள்ள பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ப. குட்டப்பாளையம் ஊராட்சியில் குட்டப்பாளையம் பிரிவிலிருந்து குட்டப்பாளையம் ஆதி திராவிடர் காலனி வரை ஏற்கெனவே தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிக்கு தார்ச் சாலை அமைக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.



2008 ஜனவரி 24]

மேலப்பாளையத்தில் உள்ள சரவணா நகரில் 2006-2007-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து தலையங்காட்டூர் வரை 2006-2007-ஆம் ஆண்டு SGRY (சிறப்புக் கூறு) திட்டத்தின்கீழ் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் கப்பிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

புங்கம்பாடி ஊராட்சியில் பாரவலசு-அரைவாணி மேட்டுப்பாளையம் வரை 2006-2007-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கும் பணி ரூ.2.65 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துச் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், ப.குட்டப்பாளையம் ஊராட்சி, ஓலப்பாளையத்தில் மாகாளியம்மன் கோயிலிலிருந்து மயானம் வரை மெட்டல் சாலை அமைக்கும் பணியை ரூ.0.50 இலட்சம் மதிப்பீட்டில் 2007-2008-ஆம் ஆண்டு SGRY திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**40—**

**கான்கிரீட் சாலை**

**வினா எண் 12879—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, எல்லாப்பாளையம் புதூர் ஊராட்சி, கவுண்டம்பாளையம் காலனி, ஆலம்பாடி கிராமத்தில் நெய்காரப்பாளையம் 3-வது வார்டு ஆகிய பகுதிகளில் கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, எல்லாப்பாளையம் புதூர் ஊராட்சி, கவுண்டம்பாளையம் ஆதி திராவிடர் காலனியில்

2006-2007ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைத் திட்டத்தில் ரூ.1.65 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஆலம்பாடி கிராமத்தில் நெய்காரப்பாளையம் 3-வது வார்டில் 2006-2007-ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைத் திட்டத்தின்கீழ் (ஊராட்சி) ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

**41—**

### தார்ச் சாலை

**வினா எண் 13449—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஒன்றியம், பெரிய புளியம்பாளையம்—பச்சாங்காட்டுவரப்பாளையம் வரை செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், பெரிய புளியம்பாளையம் பச்சாங்காட்டுவரப்பாளையம் வரை செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி அமைக்க ரூ. 4.00 இலட்சம் மதிப்பீட்டில் 2006-2007 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**42—**

### தார்ச் சாலை

**வினா எண் 14019—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சியில் மாரியம்மன் கோயில் வீதி மற்றும் காளஹஸ்திநாதபுரம்—முடிகண்டநல்லூர் ஊராட்சி வரை தார்ச் சாலை அமைத்திட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆறுபாதி ஊராட்சியில் மாரியம்மன் கோயில் வீதிக்கு தார்ச் சாலை அமைத்திட ரூ.3.50 இலட்சம் ஆகும். மேலும், காளஹஸ்தினாபுரம், முடிகண்டநல்லூர் வரை உள்ள தார்ச் சாலை தற்போது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆறுபாதி ஊராட்சியில் மாரியம்மன் கோயில் வீதிக்கு தார்ச் சாலை அமைக்கும் பணி ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் தற்போது செய்ய இயலாது.

**43—**

### தார்ச் சாலை

**வினா எண் 14025—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த உடையார் கோவில்பத்து வடக்குக் காலனி தெரு, ஆக்கூர் ஊராட்சி, இக்காலனி தெரு மற்றும் ஆக்கூர் ஊராட்சி, அன்னப்பன் பேட்டை-சவுரியாபுரம் வரை, புங்கையன் தோப்புத் தெரு, மண் சாலை, அம்மன் கோவில் பத்து தெருவிலுள்ள கப்பிச் சாலை ஆகிய சாலைகளைத் தார்ச் சாலைகளாக அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆக்கூர் ஊராட்சியில் உடையார் கோவில்பத்து வடக்கு காலனி, கன்னடி தெரு சாலை மற்றும் புங்கையன் தோப்புத் தெரு சாலைகள் எஸ்ஜிஆர்ஒய். சிறப்புக் கூறு திட்டத்தின்கீழ் ரூ. 5.50 இலட்சம் மதிப்பீட்டில் கருங்கல் ஜல்லி சாலையாக மேம்பாடு செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆக்கூர் சவுரியாபுரம்—அன்னப்பன்பேட்டை சாலை ரூ.33.21 இலட்சம் மதிப்பீட்டில் 'நபார்டு' வங்கி உதவியுடன் தார்ச் சாலையாக மேம்பாடு செய்திட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி மற்றும் நிதிபெறப்பட்டஉடன் ஆக்கூர் சவுரியாபுரம்—அன்னப்பன்பேட்டை சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்படும்.

**44—**

**காவிரி பாலத்தைச் சீர்செய்தல்**

**வினா எண் 14290—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், மேலப்பாதி-செம்பனார்கோவில் ஊராட்சிகளை இணைக்கும் காவிரி பாலத்தைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், மேலப்பாதி-செம்பனார்கோவில் ஊராட்சிகளை இணைக்கும் காவிரிப் பாலத்தை புதுப்பிக்க ரூ.50.00 இலட்சம் ஆகும். இப்பணியினை ஊராட்சி ஒன்றியம்மூலம் செயல்படுத்த போதுமான நிதி இல்லை.



2008 ஜனவரி 24]

**45—**

**குளங்கள் அமைத்தல்**

**வினா எண் 15206—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள ஊராட்சிகளில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று குளங்கள் வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளில் குளங்கள் வெட்ட இடவசதி இல்லை. ஊராட்சித் தலைவர்களிடமிருந்து இடவசதியுடன் கோரிக்கை வரப்பெறின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

**46—**

**தார்ச் சாலை**

**வினா எண் 20656—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலை ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சி, திருமுகமலர்ந்தபுரம் பகுதி, ஈங்கூர் சாலை-வெள்ளோடு சாலை வரை தடுப்புச் சுவர் அமைக்கவும், இணைப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்றவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிபிடாரியூர் ஊராட்சி, திருமுகமலர்ந்தபுரம் பகுதி, ஈங்கூர் சாலை-வெள்ளோடு சாலை வரை தடுப்புச் சுவர் அமைக்கவும், இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றவும் மாவட்ட ஆட்சித் தலைவர் வளர்ச்சி

[2008 ஜனவரி 24

நிதியிலிருந்து ரூ.8.00 இலட்சத்தில் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தின்மூலம் எடுத்து செய்யப்பட்டு வருகிறது.

**47—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 29356—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாம்பரம் தொகுதி, உத்தண்டி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தாம்பரம் தொகுதி, தாமஸ் சாலை ஒன்றியம், உத்தண்டி ஊராட்சி, ஆதி திராவிடர் காலனிக்கு ஏற்கெனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் (2008-2009) புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 31028—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி ஒன்றியம், கண்டக்காம்பாளையம் ஊராட்சி, கொசுவன்மடைப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஊத்துக்குளி ஒன்றியம், கண்டக்காம்பாளையம் ஊராட்சி, பவர்ஹவுஸ் பிரிவு குடியிருப்பின் ஒரு பகுதியே கொசுவன்மடை என்பதாகும், பவர்ஹவுஸ் பிரிவு குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிமூலம் குடிநீர் மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வாரிய விதிமுறைகளின்படி மேற்கண்ட குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை அடிப்படையில் இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகையால் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

**49—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 31038—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, மாம்பட்டு கிராமத்தில் அங்குசெட்டிப் பாளையம் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அங்குசெட்டிபாளையம், பண்ருட்டி ஒன்றியம், அங்குசெட்டிபாளையம் ஊராட்சியைச் சார்ந்தது ஆகும். மாம்பட்டு கிராமத்திற்கு உட்பட்டது அல்ல. இக்குடியிருப்பிற்கு மக்கள் தொகைக்கேற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்) வழங்கப்படுவதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தற்போது அவசியம் இல்லை.

[2008 ஜனவரி 24

**50—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 32362—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, தங்காயூர் ஊராட்சி, கோழிப் பண்ணை காலனி பகுதி, பாசப்பாலிக்காடு பகுதி, காவடிக்காரனூர், கருங்கல்காடு பகுதி, மீனாங்குட்டை பகுதி, ராயர்காடு வளவு பகுதியில், மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோழிப் பண்ணை காலனி பகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் புதிதாகக் கண்டறியப்பட்ட கோழிப் பண்ணை மலையனூர் கோணகுட்டையூர் குடியிருப்பின் உள்ளடங்கிய பகுதியாகும். இக்குடியிருப்பில் கையிறைப்பான்மூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும், கோழிப் பண்ணை மலையனூர் கோணகுட்டையூர் குடியிருப்பிற்கு நடப்பு நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நடவடிக்கையில் உள்ளது.

2. மற்றும், பாசப்பாலிக்காடு பகுதி மற்றும் ராயர்காடு வளவு பகுதிகள், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நெட்டப்பெருமாள்காடு குடியிருப்பின் உள்ளடக்கிய பகுதியாகும். தற்போது இக்குடியிருப்பில் கையிறைப்பான்மூலம் அத்தியாவசியத் தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனினும் நெட்டப்பெருமாள்காடு குடியிருப்பின் தேவைக்கு நடப்பு நிதியாண்டில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் நடவடிக்கையில் உள்ளது.



2008 ஜனவரி 24]

3. காவடிக்காரனூர் குடியிருப்பிற்கு ராசிபுரம்—எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து போதுமான அளவு (40 எல்.பி.சி.டி.) காவிரி குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, காவடிக்காரனூர் குடியிருப்புக்குக் கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க தற்போது அவசியம் இல்லை.

4. கருங்கல்காடு குடியிருப்பு, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள குடியிருப்பாகும். இக்குடியிருப்பில் கையிறைப்பான் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. இக்குடியிருப்பிற்கு குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதி நிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. மீனாங்குட்டை குடியிருப்பு, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சியில் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள குடியிருப்பாகும். இக்குடியிருப்பில் கையிறைப்பான் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. மீனாங்குட்டை குடியிருப்பிற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதியாண்டுகளில் தேவை, தகுதி மற்றும் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**51—**

## புதிய கட்டடம்

**வினா எண் 6796—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சி, ஏகாபுரம் நல்லாரம் பூசாரி வளவு பகுதியில் இயங்கும் நியாய விலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் ஊராட்சியில் ஏகாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வரும் நல்லாரம் பூசாரி வளவு-I என்ற நியாய விலைக் கடைக்கு மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் 2005-2006 ஆம் ஆண்டிற்கான

[2008 ஜனவரி 24

பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட அரசு கட்டடம் 28-2-2007 அன்று தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டு, இந்தக் கட்டடத்தின் நல்லாரம் பூசாரி வளவு-1 நியாயவிலைக் கடையை மாற்றத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, நல்லாரம் பூசாரி வளவு-1 நியாயவிலை கடைக்கு என புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**52—**

## அத்தியாவசியப் பொருட்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 7767—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மற்றும் வால்பாறை தொகுதி ஊராட்சிகளில் நியாய விலைக் கடையின் பொருட்களைச் சேமித்து வைக்கவும், சொந்தமாக அரிசி மொத்தமாக வைக்கவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு ஒன்று வால்பாறையில் உள்ளது. அக்கிடங்கில், அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மாதந்தோறும் நியாய விலைக் கடைகளுக்கு மாதாந்திர ஒதுக்கீட்டின் அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்கள் நுகர்வு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய, நியாய விலைக் கடைகளில் இருப்பு வைக்கப்பட்டு வருகிறது.

**53—**

## அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல்

**வினா எண் 7832—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை காளியாபுரம், கோட்டூர் சிறப்பு ஊராட்சி, வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி ஆகிய ஊராட்சிகளிலுள்ள நியாய விலைக் கடைகளில் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தடையின்றி தரமானதாக வழங்க அரசு முன்வருமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை காளியாபுரம், கோட்டூர் சிறப்பு ஊராட்சி மற்றும் வேட்டைக்காரன்புதூர் சிறப்பு ஊராட்சி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் மொத்தம் 16 முழுநேர நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இக்கடைகளில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு, அரசு நிர்ணயித்த அளவிற்கு, அரசு நிர்ணயித்த விலையில் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி தரமானதாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தடையின்றித் தரமானதாக வழங்கப்பட்டு வருகின்றன.

**54—**

## தரமான அத்தியாவசியப் பொருட்கள்

**வினா எண் 7835—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகரில் உள்ள நியாய விலைக் கடைகளிலுள்ள அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது மக்களுக்குத் தடையின்றி தரமானதாக வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கோவை மாநகரில் 329 முழுநேர நியாய விலைக் கடைகளும், 37 பகுதி நேரக் கடைகளும், 2 நடமாடும் அங்காடிகளும் செயல்பட்டு வருகின்றன. இதிலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி தரமானதாக, அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவு மற்றும் விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இயங்கிவரும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும், அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொதுமக்களுக்குத் தரமானதாக வழங்கப்பட்டு வருகின்றன. எந்த அங்காடியிலும் தரமற்ற பொருட்கள் இருப்பது கண்டறியப்படின், அவை உடனடியாக மாற்றம் செய்யப்பட்டு தரமான பொருட்கள் வழங்கப்படுகின்றன.

[2008 ஜனவரி 24

**55—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 12813—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பவானி தொகுதி, ஜம்பை கிராமம், நல்லிப்பாளையத்திற்குப் புதிய நியாய விலைக் கடை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் நல்லிப்பாளையம் கிராமமானது, தற்போது பகுதி நேரக் கடை இயங்கி வரும் முத்துக்கவுண்டனூர் என்ற இடத்திலிருந்து ஒரு கி.மீ. தொலைவிற்குள் உள்ளது. புன்னம்-*I* (தாய்க்கடை) அங்காடியில் இருந்தும் நல்லிப்பாளையம் கிராமமானது, *1* கி.மீ. தொலைவிற்குள் உள்ளது. மேலும், தற்போது வாரத்தில் இரண்டு நாட்கள் செயல்பட்டு வருவதை, வாரத்தில் மூன்று நாட்கள் செயல்பட்டால் போதும் என பொதுமக்கள் தெரிவித்ததன் பேரில், முத்துக்கவுண்டனூர் பகுதி நேர அங்காடி வாரத்தில் மூன்று நாட்கள் செயல்பட அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, தற்போது உள்ள அரசு ஆணையின்படி நல்லிப்பாளையம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**56—**

## விவசாயத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 10671—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தவும், மேலைநாடுகளின் நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயத் துறையில் கொண்டு வரவும் அரசு முன்வருமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மையில் தற்போதைய சூழ்நிலையில் நிலவி வரும் சவால்களைச் சந்திக்க, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டுமென்றால், உலகிலுள்ள பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களின் கூட்டுமுயற்சி மிகவும் அவசியம். இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உலகிலுள்ள பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களுடன், குறிப்பாக உயிர் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்துதல், பண்ணை இயந்திரங்கள் நவீனமாக்கல் ஆகிய துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) செய்துள்ளது. இந்தக் கூட்டு ஆராய்ச்சியின் வாயிலாக புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டு, அத்தொழில்நுட்பங்கள் தமிழ்நாட்டிலுள்ள பண்ணைகளில் அறிமுகப்படுத்துவதற்கு உகந்ததாக இருப்பின், அத்தொழில்நுட்பங்கள் விவசாயிகள் அறியும் பொருட்டு வேளாண்மைப் பண்ணைகளில் வேளாண் துறை மூலமாக அறிமுகம் செய்யப்படும்.

**57—**

## மனிதக் கழிவுகளை உரமாக உருவாக்குதல்

**வினா எண் 26543—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மனிதக் கழிவுகளை இயற்கை உரமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், திருச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் ஈகோசான் என்ற அமைப்பு சாரா நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து, மனிதக் கழிவுகளையும் மனிதனது சிறுநீரையும் எவ்வாறு இயற்கை உரமாகத் தயாரிக்கலாம் என்ற

ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்த பின்பு, அந்தத் தொழில்நுட்பத்தை விவசாயப் பெருமக்கள் எல்லோரும் அறியும்படி செய்யப்படும்.

**58—**

**விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி**

**வினா எண் 26548—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னை மரங்கள் கருத்தலைப் புழுவினால் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க விவசாயிகளுக்கு சிறப்புப் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தென்னை மரங்களில் தோன்றும் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த தென்னை வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் தென்னை விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு தொழில்நுட்ப செயல்விளக்கத் திடல்கள் அமைத்து பூச்சி நோய் கட்டுப்பாட்டு செய்திகள் விளக்கப்பட்டு வருகின்றன.

**59—**

**பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல்**

**வினா எண் 34372—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை பகுதியில் தென்னை மரங்களைத் தாக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பகுதியில் தென்னை மரங்களைத் தாக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்த 2007-2008 ஆம் ஆண்டில் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.*

**60—**

**தேங்காய் ஏற்றுமதி**

**வினா எண் 34649—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியப் பகுதியில் விளையும் தேங்காயை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) தேங்காயை வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**61—**

**கண்மாய்க் கரைகள் சீரமைப்பு**

**வினா எண் 11296—திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியில் பொன்னமராவதி ஒன்றியத்தில் உள்ள கண்மாய்க் கரைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

பொன்னமராவதி ஒன்றியத்தில் உள்ள 61 கண்மாய்களில், 7 கண்மாய்களில் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய கண்மாய்களில் நீர் வள நில வளத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

**62—**

## நதிநீர்த் திட்டத்தை விரைவுபடுத்துதல்

**வினா எண் 11888—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில் அணைப்பட்டி, இராயப்பன்பட்டி, ஆனைமலையான்பட்டி, கோகிலாபுரத்திற்குப் பாசன வசதி தருகின்ற சண்முகா நதி நீர்த் திட்டத்தை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சண்முகா நதி நீர்த்தேக்கக் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, 3-12-2004-ல் தண்ணீர் திறக்கப்பட்டு நீர்த்தேக்கம் தற்போது பயன்பாட்டில் உள்ளது. கம்பம் தொகுதி, அணைப்பட்டி, இராயப்பன்பட்டி, ஆனைமலையான்பட்டி மற்றும் கோகிலாபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்களுக்கு சண்முகா நதி நீர்த்தேக்கம் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

**63—**

## கான்கிரீட் தளம்

**வினா எண் 30023—திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாய்க் கரைகளை பலப்படுத்தி நீர்வரத்துப் பகுதியின்கீழ் கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாய்க் கரைகளை பலப்படுத்தி நீர்வரத்துப் பகுதியின்கீழ் கான்கிரீட் தளம் (லைனிங்) அமைக்கும் பணிகளை, நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்வதற்காக உரிய மதிப்பீடுகள் முறையே ரூ.27.43 கோடி மற்றும் சுமார் ரூ.13.00 கோடியில் மதுரை மண்டல நீர்வள் ஆதார அமைப்பு பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**64—**

## ஆற்றின் கரைகளைப் பலப்படுத்துதல்

**வினா எண் 30315—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாமிரபரணி ஆற்றின் கரையோரமுள்ள ஆத்தூரில் ஆற்றின் கரைகளை கான்கிரீட் தளம் அமைத்துப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆத்தூர் பகுதி தாமிரபரணி ஆற்றின் வலது கரையில் அமைந்துள்ளது. ஆற்றின் கரைகளில் கான்கிரீட் தளம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**65—**

### மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

**வினா எண் 3423—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து சேர்க்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக 2006-2007 ஆம் கல்வியாண்டில் 10 கல்லூரிகளில் சுழற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (Shift System) இத்திட்டம் 2007-2008 ஆம் கல்வியாண்டில் மீதமுள்ள அனைத்து அரசு கல்லூரிகளிலும் நடைமுறைப்படுத்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இக்கல்வியாண்டில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் சுழற்சி முறை (Shift System) நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**66—**

### மகளிர் கல்லூரி

**வினா எண் 4590—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியில் மகளிர் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சியில் மகளிர் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



இருப்பினும் 5 ஏக்கர் நிலமும், ஒரு கோடி ரூபாய் நிதியும் அந்த ஊர்ப் பொதுமக்கள் கொடுத்தால் அங்கு கல்லூரி ஆரம்பிப்பது குறித்து தேவையின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும்.

**67—**

### மகளிர் கல்லூரி

**வினா எண் 12313—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. பொள்ளாச்சி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் 57 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. பொள்ளாச்சியில் மட்டும் 3 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவை அப்பகுதியிலுள்ள மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவையை பூர்த்தி செய்து வருகின்றன.

**68—**

### மாணவர்களுக்குப் பிரசாரம்

**வினா எண் 16122—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் போதைப் பொருள் உபயோகிப்பதால் ஏற்படும் தீமைகள் பற்றி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போதைப் பொருள் உபயோகிப்பதால் ஏற்படும் தீமைகளைப் பற்றி நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் மூலமாக கல்லூரி மாணவ மாணவியர்களுக்குப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு அவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**69—**

## பேருந்து வசதி

**வினா எண் 15801—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கிழக்கு ஓலைப்பட்டி கிராமம், நரிக்குண்டம் பகுதிக்குப் பேருந்து வசதியும் மற்றும் கிழக்கு ஓலைப்பட்டி கிராமப் பேருந்து நிலையத்திற்கு நிழற்கூடமும் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கிழக்கு ஓலைப்பட்டி கிராமம், நரிக்குண்டம் பகுதியானது ஓமலூர்-மேச்சேரி தடத்தில் காமனேரி பேருந்து நிறுத்தத்திலிருந்து 2.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மேலும், ஓமலூர்-கோவிலூர் (வழி) காமனேரி தடப்பேருந்து தடம் எண் 83, கோரப்பட்ட வழித்தடத்தில் 0.5 கி.மீ. தூரம் வரை இயங்கி வருகிறது. அடுத்துள்ள 2.0 கி.மீ. தூரத்திற்கு பாதை மிகவும் குறுகலாகவும் மற்றும் முட்புதர்கள் நிறைந்தும் பேருந்துகள் இயக்கிட இயலாத நிலையில் உள்ளது.

**70—**

## பேருந்து வசதி

**வினா எண் 16770—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து இளம்பிள்ளை வரை இயக்கப்பட்ட அரசு நகரப் பேருந்தை காலையிலும், மாலையிலும் சித்தர் கோயில் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் நகரப் பேருந்து தடம் எண் ஓ16 காலை 7-28 மற்றும் மாலை 16-45 மணி நேரங்களில் ஓமலூரிலிருந்து இளம்பிள்ளை வழியாக சித்தர் கோயில் வரை இயக்கப்பட்டு வருகின்றது.

**71—**

## பேருந்து வசதி

**வினா எண் 16773—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து வேம்படிதாளம் வரை இயக்கப்பட்ட 68 ஆம் எண் நகரப் பேருந்தை காலை, மாலை நேரங்களில் சந்தைப்பேட்டை, பெருமாக்கவுண்டம்பட்டி வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டலம் நகரப் பேருந்து தடம் எண் 68 மற்றும் 68ஏ மூலமாக காலையில் 6-55, 7-45, 8-36 மணி நடைகள் மற்றும் மாலையில் 15-00 மணிக்கு சேலத்தில் எடுக்கப்படும் நடைகள் சந்தைப்பேட்டை, பெருமாகவுண்டன்பட்டி வழியாகவே வேம்படிதாளம் வரை இயக்கப்பட்டு வருகின்றன.

**72—**

## பேருந்து வசதி

**வினா எண் 16959—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், திம்மலை ஊராட்சி, கள்ளக்குறிச்சியிலிருந்து திம்மலை வழியாக பின்னல்வாடிக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், திம்மலை ஊராட்சி, கள்ளக்குறிச்சி மற்றும் தியாகதுருகத்திலிருந்து திம்மலை வழியாக பின்னல்வாடிக்கு நகரப் பேருந்து தடம் எண் 32 வாயிலாக நாள் ஒன்றுக்கு சென்று திரும்பும் வகையில் 8 நடைகள் இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதியே தற்போது பயணிகள் புழக்கத்திற்கு ஏற்ற நிலையில் உள்ளது.

**73—**

## பேருந்து வசதி

**வினா எண் 17927—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, அதகம்பாடியிலிருந்து தருமபுரிக்கு பேருந்து வசதி, மானியதஹள்ளி ஊராட்சி, குரும்பட்டியான் கொட்டாய் கிராமம், தருமபுரியிலிருந்து கந்தகவுண்டனூர் கிராமத்திற்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, அதகம்பாடி கிராமத்திற்கு ஏற்கெனவே சேலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தருமபுரி மண்டலம் மூலம் 21 பேருந்துகள் மற்றும் 14 தனியார் பேருந்துகள் முறையே 65 மற்றும் 76 நடைகளில் பெண்ணாகரம் தடத்தில் இயக்கப்படுகின்றன. மேலும் கடந்த 16-3-2007 முதல் 3 புறநகர் பேருந்துகள் மூலம் நாளொன்றுக்கு 10 நடைகள் தருமபுரி-பெண்ணாகரம் (வழி) அதகம்பாடி தடத்தில் இயக்கப்படுகின்றன.



2008 ஜனவரி 24]

தருமபுரி-குரும்பட்டியான் கொட்டாய் தடத்தின் நீளம் 35 கி.மீ. ஆகும். ஏற்கெனவே நகர் பேருந்து தடம் எண் 2சி-ன் மூலம் தருமபுரியிலிருந்து குரும்பட்டியான் கொட்டாய் வழியாக பரிகம் வரை நாளொன்றுக்கு 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் பயணிகளின் அடர்வு சுமார் 52 விழுக்காடுகளாக உள்ளதால், புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கும்பொழுது குரும்பட்டியான் கொட்டாய் கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து வசதி செய்திட பரிசீலிக்கப்படும்.

கந்தகவுண்டனூர் கிராமத்திற்கு நகர் பேருந்து தடம் எண் டி49-ன் மூலம் தருமபுரியிலிருந்து கந்தகவுண்டனூர் வரை நாளொன்றுக்கு 6 நடைகள் கடந்த 23-02-2007 முதல் இயக்கப்படுகின்றன.

**74—**

## பேருந்து வசதி

**வினா எண் 21269—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, அக்காமலை முதல் பொள்ளாச்சி வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், வால்பாறையிலிருந்து அக்காமலைக்கு 2 பேருந்துகளின் மூலம் தினசரி 30 நடைகள் இயக்கி வருகிறது. இது தவிர வால்பாறையிலிருந்து பொள்ளாச்சிக்கு 26 பேருந்துகளின் மூலம் தினசரி 88 நடைகள் இயங்கி வருகிறது. எனவே வால்பாறை—அக்காமலையிலிருந்து பொள்ளாச்சிக்கு நேரடிப் பயணிகள் மிகக் குறைவாக உள்ள நிலையில் நேரடிப் பேருந்துகள் இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 ஜனவரி 24

75—

## பேருந்து வசதி

**வினா எண் 21275—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை முதல் திருப்பூர் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கோயம்புத்தூர், 18-3-2007 முதல் வால்பாறையிலிருந்து திருப்பூருக்கு ஒரு நேரடிப் பேருந்து தினசரி 2 நடைகள் இயக்கி வருகிறது. இது தவிர வால்பாறை—பொள்ளாச்சி, பொள்ளாச்சி—திருப்பூர் என பகுதி வாரியாக போதுமான அளவு பேருந்துகளை இயக்கி வருகிறது.

76—

## பேருந்து வசதி

**வினா எண் 24039—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூரிலிருந்து பழனி தேவஸ்தானம் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்பொழுது 17-5-2007 ஆம் தேதி முதல் ஓமலூர்—பழனி தடத்தில் அரசுப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு இக்கோரிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

77—

## பேருந்து பணிமனை

**வினா எண் 24045—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி வேலூரில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமத்தி வேலூரில், சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்தால் பணிமனை தொடங்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

78—

## பேருந்து வசதி

**வினா எண் 26355—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொகுதி, பூசாரிபாளையம், வடுகம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், முனியப்பம்பாளையம், புதுப்பட்டி வழியாக ராசிபுரம் வழித்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தொகுதி, பூசாரிபாளையம், வடுகம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், முனியப்பம்பாளையம், புதுப்பட்டி வழியாக ராசிபுரம் வழித்தடத்தில் சேலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எதுவும் இது நாள் வரை இயக்கம் செய்யப்படவில்லை. அவ்வழித்தட சாலை மிகவும் குறுகலாக எதிர்வரும் வாகனம் செல்ல இயலாத அளவில் இருப்பதால் கனரக வாகனங்களை இயக்கிட இயலாது. இருப்பினும், அவ்வழித்தடத்தில்

[2008 ஜனவரி 24

தனியார் சிற்றுந்து ஒன்று தினசரி 18 நடைகள் இயங்கி வருகிறது. இந்த வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**79—**

## புறநகர்ப் பேருந்து நிறுத்தம்

**வினா எண் 27956—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி ஊராட்சி, நான்கு சாலை பகுதியில் புறநகர்ப் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது சேலத்திலிருந்து ஓமலூர், மேச்சேரி, பொட்டனேரி, குஞ்சாண்டியூர் வழியாக மேட்டூர் செல்லும் புறநகர்ப் பேருந்துகள் அனைத்தும் பொட்டனேரி பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன. கோரப்பட்டுள்ள பொட்டனேரி நான்கு சாலை பகுதியானது, தற்போதுள்ள பொட்டனேரி பேருந்து நிறுத்தத்தில் இருந்து 1.0 கி.மீ. தொலைவிலேயே உள்ளது. இவ்விடத்தில் அனைத்து நகரப் பேருந்துகளும் தவறாமல் நின்று பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன. புறநகர்ப் பேருந்துகள் நிறுத்திச் செல்ல இயலாது.

**80—**

## பேருந்து வசதி

**வினா எண் 28039—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ராசிபுரம் தொகுதி, ராசிபுரத்திலிருந்து பூசாரிப்பாளையம், முனியப்பம்பாளையம் வழியாக இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ராசிபுரம் தொகுதி, ராசிபுரத்திலிருந்து பூசாரிப்பாளையம், முனியப்பம்பாளையம் வழித்தடத்தில் சேலம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் எதுவும் இது நாள் வரை இயக்கம் செய்யப்படவில்லை. அவ்வழித்தடச் சாலை மிகவும் குறுகலாக எதிர்வரும் வாகனம் செல்ல இயலாத அளவில் இருப்பதால் கனரக வாகனங்களை இயக்கிட இயலாது. இருப்பினும், அவ்வழித்தடத்தில் தனியார் சிற்றுந்து ஒன்று தினசரி 18 நடைகள் இயங்கி வருகிறது. இந்த வசதியே அப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**81—**

## பேருந்து வசதி

**வினா எண் 28040—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ராசிபுரம் தொகுதி, வெண்ணந்தூரிலிருந்து நாமக்கல் வரை இயக்கி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல்—ஆட்டையாம்பட்டி (வழி) வெண்ணந்தூர் வழித்தடத்தில் இயக்கப்பட்ட அரசு புறநகர்ப் பேருந்து பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக இருந்த காரணத்தால், கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டது. இருப்பினும் நாமக்கல்—ராசிபுரம் (வழி) ஆண்டகலூர் கேட், புதுச்சத்திரம், புதன்சந்தை வழித்தடத்தில் ஒவ்வொரு 10 நிமிடம் (அ) 15 நிமிடத்திற்கு இயங்கும் வகையில், கழக மற்றும் தனியார் பேருந்துகள்மூலம் போதிய பேருந்து வசதி உள்ளது. அதேபோல ராசிபுரம்—ஆட்டையாம்பட்டி (வழி) வெண்ணந்தூர் வழித்தடத்திலும் அதிக அளவு கழக மற்றும் தனியார் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் ஒவ்வொரு 10 நிமிட

[2008 ஜனவரி 24

இடைவெளியில் இயக்கப்படுகின்றன. மேலும் நாமக்கல்-ஆட்டையாம்பட்டி (வழி) வையப்பமலை வழித்தடத்தில் அரசு புறநகர்ப் பேருந்தொன்றின்மூலமாக தினசரி எட்டு நடைகள் இயக்கப்படுகின்றன. மேற்படி நேரடி மற்றும் பகுதி வாரியாக உள்ள பேருந்து வசதியே ஆட்டையாம்பட்டி-நாமக்கல் வழித்தட மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**82—**

## பேருந்து பணிமனை

**வினா எண் 32879—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, திருக்கோவிலூர் பேருந்துப் பணிமனையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் திருக்கோவிலூர் புதிய பேருந்துப் பணிமனை கடந்த 13-4-2007 அன்று திறந்து வைக்கப்பட்டது.

**83—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 2946—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காலமுறை ஊதிய அடிப்படையில் நடப்பாண்டில் எத்தனை மருத்துவர்களை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

2006-2007 ஆம் ஆண்டில் காலமுறை ஊதிய அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம்



2008 ஜனவரி 24]

1,427 மருத்துவர்கள் 1-4-2006 முதல் நியமனம் செய்யப்பட்டார்கள். ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சுமார் 1,305 மருத்துவர்கள் 1-11-2006 முதல் காலமுறை ஊதிய அடிப்படையில் பணி செய்து வருகின்றனர். வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் 10(ஏ) (1) அடிப்படையில் காலமுறை ஊதியத்தில் தற்காலிகமாக 475 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு பணியில் உள்ளனர்.

**84—**

## பெண் மருத்துவர் நியமனம்

**வினா எண் 9310—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறுக்கென தனி பெண் மருத்துவர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் பணிபுரியும் கீழ்க்கண்ட பெண் மகப்பேறு மருத்துவ அலுவலர்களை சுழற்சி முறையில் வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு மாற்றுப் பணியில் பணிபுரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:—

1. மருத்துவர் டி. யசோதா ராணி, எம்.டி. (ஓ.ஜி.)
2. மருத்துவர் வி.இ. புவனேஸ்வரி, டி.ஜி.ஓ.
3. மருத்துவர் ஞான பூங்கோதை, டி.ஜி.ஓ.

**85—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 9807—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான் குப்பம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்களில் ஒருவர் வைத்தியம் செய்ய வெளியில் செல்வதால் மற்றுமொரு மருத்துவரை பணியில் அமர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பேர்பெரியான் குப்பம் கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட இரு மருத்துவர் பணியிடத்திலும் முழு அளவில் மருத்துவர்கள் பணியில் உள்ளனர். எனினும் தற்போது நடமாடும் மருத்துவ குழுக்கள் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கப்பட உள்ளன. இதற்கென தனியாக மருத்துவர் மற்றும் செவிலியர், வாகனவசதியுடன் நியமனம் செய்யப்பட உள்ளனர். இவர்கள் வட்டார முழுவதும் உள்ள கிராமங்களுக்கு குறிப்பிட்ட நாட்களுக்கு சென்று மருத்துவ சேவை புரிவார்கள்.

**86—**

## பெண் மருத்துவர் நியமனம்

**வினா எண் 17233—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டியில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இங்கு இரு மருத்துவர் பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அதில் ஒரு பெண் மருத்துவர் ஏற்கெனவே பணியில் உள்ளார்.



2008 ஜனவரி 24]

**87—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 18773—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மானியத ஹள்ளி ஊராட்சி, மேல் ஈசம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு புதிய மருத்துவரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், மானியத ஹள்ளி ஊராட்சி, மேல் ஈசம்பட்டியில் செயல்பட்டு வரும் துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் பணியிடம் ஒப்பளிப்பு இல்லை. எனவே மேல் ஈசம்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமிக்க சாத்தியக் கூறு இல்லை. இங்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடத்தில் கிராம சுகாதார செவிலியர் பணியில் உள்ளார். தொப்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்கள் முழு அளவில் பணியில் உள்ளனர். பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தின்கீழ் சுழற்சி முறையில் வாரம் ஒரு முறை மருத்துவர் துணை சுகாதார நிலைய கிராமங்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றனர். கே.ஆர். தொப்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் மேல்ஈசம்பட்டியில் இருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

**88—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 29522—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கீரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலைய சித்த மருத்துவப் பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீரமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள சித்த மருத்துவப் பிரிவிற்கு தேசிய ஊரக நல மையத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றபின் கூடுதல் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**89—**

**மருத்துவமனைக் கட்டடம்**

**வினா எண் 30329—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி காலங்குடியிருப்பு அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி காலங்குடியிருப்பு அரசு மருத்துவமனையில் உள்ள சித்த மருத்துவப் பிரிவுக்கு தேசிய ஊரக நல மையத்திடமிருந்து நிதியுதவி கிடைக்கப்பெற்றபின் தனிக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**90—**

**கூட்டுறவு நெசவாளர் சங்கம்**

**வினா எண் 33517—திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

ஸ்ரீவில்லிபுத்தூர், மடத்துப்பட்டி கூட்டுறவு நெசவாளர் சங்கத்தினை மீண்டும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

ஸ்ரீவில்லிபுத்தூர் மடத்துப்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 31-7-2007 தேதி முடிய ரூ.18.83 இலட்சத்திற்கு சங்கம் குவிந்த நட்டத்தில் இயங்கி வருகிறது. மேற்படி உறுப்பினர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் பொருட்டு ஏற்றுமதி இரகம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு சங்கத்தின் ஆதாரக்குறைவை படிப்படியாக குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் சங்கத்தில் எஞ்சியுள்ள தறிகளை இயக்கி சங்கத்தை தொடர்ந்து முழு அளவில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**91—**

**விற்பனைக் கூடம்**

**வினா எண் 36113—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டிலும், திருக்கழுக்குன்றத்திலும் கைத்தறித் துணி விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் 1944 ஆம் ஆண்டிலிருந்து செங்கல்பட்டிலும், 1954 ஆம் ஆண்டிலிருந்து திருக்கழுக்குன்றத்திலும் இயங்கி வருகின்றது.

**92—**

**மாற்றுப் பாதை**

**வினா எண் 8317—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறைக்கு ஒரு மாற்றுப் பாதை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை செல்வதற்கு ஏற்கெனவே பிரதான சாலை நல்ல முறையில் இயங்கி வருகிறது. இதற்கு மாற்றுப்பாதை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. வால்பாறை, இந்திரா காந்தி வன உயிரின ஓய்விட பகுதியில் அமைந்துள்ளது. மேற்கண்ட இடத்தில் மாற்று வழிப்பாதை அமைக்கும் பட்சத்தில் அங்குள்ள அரிய வகை பாதுகாக்கப்பட்ட வன உயிரினங்கள் குறிப்பாக வரையாடுகள் (மாநில விலங்கு) மற்றும் மான்கள் அழிவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். மரங்கள் வெட்டப்பட வேண்டிய நிலை உருவாகும். மேலும் வனச் சரணாலயம், தேசிய பூங்காக்களில் வனமல்லாத பணிகள் செய்ய மாநில வன உயிரின குழுமம், தேசிய வன உயிரின குழுமம் மற்றும் மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். அங்குள்ள மரங்கள் வெட்டுவதற்கு உச்ச நீதிமன்ற அனுமதி பெறப்பட வேண்டும். எனவே ஏற்கெனவே பிரதான சாலை வால்பாறையிலிருந்து பொள்ளாச்சிக்கு நல்ல முறையில் இயங்கி வருவதால் மாற்று வழி அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**93—**

## பூங்காவை நவீனப்படுத்துதல்

**வினா எண் 12464—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வண்டலூர் உயிரியல் பூங்காவை நவீனப்படுத்தவும் மின் விசை மூலம் இயங்கும் மின் இரயில்களை கூடுதலாக இயக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

மைய வன உயிரியல் ஆணையத்திடமிருந்து ரூ. 344.64 இலட்சம் நிதி உதவி பெறப்பட்டு வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

வண்டலூர் உயிரியல் பூங்காவில் மின்விசை மூலம் இயங்கும் ரயில் வண்டிகளில் தற்போது 3 வண்டிகள் இயக்கப்படுகின்றன. தலா 5



2008 ஜனவரி 24]

சுற்றுகள் வீதம் 15 சுற்றுகள் ஓடுகின்றன. பழுதடைந்துள்ள மூன்று வண்டிகளும் பழுது நீக்கம் செய்து நாள் ஒன்றுக்கு கூடுதலாக 15 சுற்றுகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**94—**

## பறவைகளைப் பாதுகாத்தல்

**வினா எண் 25004—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மேலச்செல்வனூர் பறவைகள் சரணாலயத்திலுள்ள பறவைகளைப் பாதுகாக்கவும், பார்வையாளர் கோபுரம் அமைக்கவும், பாதுகாப்பு சிறப்பு ஏற்பாடுகள் செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேலச்செல்வனூர் கண்மாய் பறவைகள் சரணாலயத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கண்காணிப்பு கோபுரம் கட்டப்பட்டுள்ளது. மேலும் அப்பறவைகள் சரணாலயத்தைப் பாதுகாக்க தினக்கூலி அடிப்படையில் ஒரு காவலாளி நியமிக்கப்பட்டு கண்மாய் உள்ளே வேலிக்கருவேல் மரங்களை அகற்றி 15 ஹெக்டேர் பரப்பில் பறவைகள் தங்கி இனப்பெருக்கம் செய்ய ஏதுவாக நாட்டுக்கருவேல் தோட்டம் உற்பத்தி செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

**95—**

## வனவிலங்குகள் பாதுகாப்பு

**வினா எண் 29965—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச்சரகம், அஞ்செட்டி வனச்சரகத்தில் தொடர்ந்து யானைகள், காட்டு விலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொகுதிகளில் தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம், ஜவளகிரி ஆகிய சரகங்களில் யானைகள் வேட்டையாடுவதைத் தடுக்க யானைகள் திட்டம், ஒருங்கிணைந்த காடுகள் பாதுகாப்பு உள்ளிட்ட திட்டங்களின் கீழ் சிறப்பு வேட்டைத் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டும் குடில்கள் அமைத்தும், இரவு பகலாக வனப் பணியாளர்களும் வேட்டைத் தடுப்பு காவலர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

அவ்வப்போது சிறப்புக் காவல்படை மூலம் ஒருங்கிணைந்த ரோந்து பணிகளில் ஈடுபட்டும் யானைகள் மற்றும் பிற வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதை தடுக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**96—**

## குடிநீர் வசதி

**வினா எண் 30224—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொட்டையாறு குடியேற்றப் பகுதி, குறுமலை, குழிப்பட்டி, ஈசல்திட்டு, தளிஞ்சி, மஞ்சப்பட்டி ஆகிய குடியேற்றப் பகுதிகளில் குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொட்டையாறு, குறுமலை, குழிப்பட்டி, ஈசல்திட்டு, மஞ்சப்பட்டி குடியேற்றப் பகுதிகளில் தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்ய வனத் துறையில் நிதி ஏதும் இல்லை. இருப்பினும் மாவட்ட ஆட்சித் தலைவர், கோவை அவர்களை நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து இவ்வேலைக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தளிஞ்சி பகுதியில் குடிநீர் வசதிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**97—**

## கான்கிரீட் வீடுகள்

**வினா எண் 30231—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கரட்டுப்பகுதி குடியேற்றப் பகுதியில் கான்கிரீட் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, கரட்டுப்பகுதியானது அமராவதி காப்புக் காட்டுப் பகுதியிலுள்ள செட்டில்மெண்ட் பகுதியாகும். இப்பகுதியில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள் அவரது தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்கள். அதன்படி வன உயிரினக் காப்பாளர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நிதி கேட்டுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதும் அங்குள்ள வீடுகள் பழுதடைந்ததை சரி செய்யப்படுவதற்கும் அதே இடங்களில் புதியதாக கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 ஜனவரி 24

**98—**

**தனிப்படை அமைத்தல்**

**வினா எண் 33573—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனக் கொள்ளையர்களைப் பிடிக்க தனிப்படை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வனச் செல்வங்களைப் பாதுகாக்க தமிழ்நாடு வனச்சட்டம் 1882, இந்திய வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972 மற்றும் மத்திய வனப் பாதுகாப்பு சட்டம் 1980 ஆகிய வனச் சட்டங்கள் அமல்படுத்தி நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றன. வனங்களைப் பாதுகாக்கவும் வனக்குற்றங்களைத் தடுக்கவும் வழக்கமான பணியாளர்களைக் கொண்டு பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டு வந்தாலும் வனப் பகுதியினை பாதுகாக்கும் பொருட்டு பாதுகாப்புப் பணிகளுக்கு சரக சிப்பந்திகளுக்குத் துணையாக 12 வனப் பாதுகாப்புப் படைகள், 11 சுழல் தணிக்கை சாவடிகள், 109 வனச் சோதனை சாவடிகள் மற்றும் 21 வனக் காவல் நிலையங்கள் மற்றும் சிறப்பு பணிக் குழு ஆகியவை வன மண்டல அளவில் அமைக்கப்பட்டு வனக் குற்றங்கள் ஏற்படாவண்ணம் மற்றும் வனக் குற்றங்களைத் தடுக்கும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதனைத் தவிர வேட்டைத் தடுப்பு சுழற்சி முறையில் வேட்டைத் தடுப்புக் காவலர்கள் நியமிக்கப்பட்டு ரோந்து பணி மேற்கொள்வதன் மூலம் வனக் குற்றங்கள் நிகழா வண்ணம் தடுக்கப்படுகிறது. மேலும் வனப் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு வனக்குற்றங்கள் நிகழா வண்ணம் தடுக்கும் நோக்கத்தில் வனப் பணியாளர்களுக்கு ஈப்பு, கம்பியில்லா தந்தி, செல்போன் மற்றும் படைக்கலன்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்நிலையில் வனக் கொள்ளையர்களைப் பிடிக்க மேலும் வேறு தனிப்படை அமைக்க அவசியம் எழவில்லை.



2008 ஜனவரி 24]

**99—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 34895—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

உடுமலைப்பேட்டை வனச்சரக சாலைகளை மேம்படுத்தி கூட்டாறு பகுதியில் கால்நடைப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி சரகம் மலைப் பகுதியில் தளிஞ்சி, மஞ்சப்பட்டி செல்லும் வனப் பகுதியில் கால்நடை பாலம் கட்டுவதால் வனங்கள் அழிக்கப்படுவதுடன் அரிய வகை வன உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படும். மேலும் வன உயிரின சரணாலயம் மற்றும் தேசிய பூங்காக்களில் வனமல்லாத பிற பணிகள் செய்ய மத்திய வன உயிரின குழுமம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற்ற பின்னரே வனமற்ற பணிகள் செய்ய இயலும். மேலும், கூட்டாறு பகுதிகளுக்கு செல்லும் மலைவாழ் மக்களுக்கு மாற்று வழியிருப்பதால் இந்த வனச் சாலையில் கால்நடைப் பாலம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**100—**

**தார்ச் சாலை**

**வினா எண் 35796—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, தொட்டமஞ்சி மலை கிராமம், தொட்டமஞ்சி முதல் கெம்பகரை வரை, தொடக்கரை மலை கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, தொட்டமஞ்சி ஊராட்சி, தொட்டமஞ்சி மலைக் கிராமம், தொட்டமஞ்சி முதல் கெம்பக்கரை வரையிலான சாலையானது கெம்பகரை காப்புக்காட்டினுள் அமைந்துள்ளது. கெம்பகரை காப்புக்காடு, வனச்சட்டம் பிரிவு 16-ன்கீழ் அறிவிக்கையில் இச்சாலைக்கு வழி உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதன் அகலம் 6 அடி ஆகும். இச்சாலையினை தார்சாலையாக அமைக்கப்பட வேண்டுமானால் இச்சாலை அகலப்படுத்தப்பட வேண்டும். வன நிலங்களை வனமற்ற பிற பணிகளுக்கு பயன்படுத்த வேண்டுமானால் வனப்பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். எனவே, வனப்பாதுகாப்புச் சட்டம் 1980-ன்படி உரிய கருத்துரு ஊரக வளர்ச்சி / நெடுஞ்சாலை துறையிடமிருந்து கிடைக்கப் பெறும் பட்சத்தில் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலை அமைக்க மத்திய அரசின் முன்அனுமதி பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2008 ஜனவரி 24]

**பட்டியல் 4**

**1—**

**உதவி பொறியாளர் அலுவலகம்**

**வினா எண் 30530—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை மின் திட்டம் சூரியநல்லூர் உதவி பொறியாளர் அலுவலகத்தை சூரியநல்லூரிலே தொடர்ந்து செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை மின் திட்டம் சூரியநல்லூர் உதவி பொறியாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக சூரியநல்லூரில் உள்ள 1/18, திருப்பூர் முதன்மைச் சாலை, சூரியநல்லூர்-638 702 என்ற முகவரியில் செயல்பட்டு வருகின்றது. இவ்வலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**2—**

**சொந்த அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 33490—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி மின் வாரிய அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆலங்குடியில் உதவி செயற் பொறியாளர் / கிராமியம் ஆலங்குடி, உதவி மின் பொறியாளர் / இகா/பாச்சிக்கோட்டை மற்றும் உதவி மின் பொறியாளர் கட்டுமானம் / ஆலங்குடி ஆகிய மின் வாரிய அலுவலகங்கள் ஆலங்குடி துணை மின் நிலைய வளாகத்தில் இயங்கி வருகின்றன. மற்ற அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆலங்குடியில் மின் வாரியத்திற்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லாத காரணத்தால் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு தற்சமயம் கருத்துரு ஏதும் இல்லை. வருங்காலங்களில் அவசியம் ஏற்படின் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**3—**

## புதிய கட்டடம்

**வினா எண் 34292—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஆதமங்கலம் கடலாடி மின் வாரிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம், ஆதமங்கலம், கடலாடி ஆகிய பகுதிகளில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான இடங்கள் இருப்பின், அப்பகுதிகளில், வாடகைக்கு இயங்கி வரும் வாரிய அலுவலகங்களுக்கு நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**4—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 31355—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பாலவாக்கம் ஊராட்சி, லட்சுமணன் நகரில் சமூகக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், பாலவாக்கம் ஊராட்சி, லட்சுமணன் நகரில் சமுதாயக் கூடம் அமைக்கும் அளவிற்கு தகுந்த, அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லாமையால் புதியதாக அப்பகுதியில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான வழிவகை இல்லை.

**5—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 33268—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, செம்பை ஒன்றியம், திருக்காளச்சேரி ஊராட்சி, ஆயப்பாடி, மன்மதன்கோவில் ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது சமுதாயக் கூடம் கட்டும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. செம்பனார்கோயில் ஒன்றியம், திருக்காளச்சேரி ஊராட்சி, ஆயப்பாடி மன்மதன்கோவில் பகுதிகளில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இல்லை. அரசினால் வரையறுக்கப்பட்ட (Type design) அளவில் இடவசதி இல்லாத காரணத்தால் சமுதாயக் கூடம் கட்ட வாய்ப்பில்லை.

**6—**

## பூச்சிக்கொல்லி மருந்துக்குத் தடை

**வினா எண் 18195—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள எண்டோசல்பான் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பிற நாடுகளில் தடை செய்யப்பட்ட / உபயோகத்தை குறிப்பிட்ட பயன்பாட்டிற்கென வரைமுறைப்படுத்தப்பட்ட பூச்சிக்கொல்லிகளை இந்தியாவில் தொடர்ந்து பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்திட மத்திய அரசினால் ஒரு வல்லுநர் குழு (Expert Committee) அமைக்கப்பட்டிருக்கிறது. பல நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ள / குறிப்பிட்ட பயன்பாட்டிற்கென வரைமுறைப்படுத்தப்பட்ட பூச்சிக்கொல்லிகள் உபயோகத்தினை நமது நாட்டில் தடை செய்வது குறித்து மத்திய அரசுதான் முடிவு செய்து அறிவிக்கும். மத்திய அரசு (வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறை) சிறப்பு அறிவிக்கை நாள் 15-6-2006-ன்படி கரும்பு, புகையிலை, முந்திரி மற்றும் கோகோ பயிர்களுக்கு எண்டோசல்பான், பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

**7—**

## சூரியகாந்தி பயிரிடுதல்

**வினா எண் 39073—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் சூரியகாந்தி பயிரிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மானாமதுரை தொகுதியில் இதுவரை சூரியகாந்தி பயிர் பெருமளவில் சாகுபடி செய்யப்படவில்லை. நடப்பு ஆண்டில் சூரியகாந்தி பயிர் சாகுபடியை விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தும் நோக்கில் 25 எண்கள் சூரியகாந்தி பயிர் சிறுதளைகள் மானாமதுரை பகுதி விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த சாகுபடியின் மகசூல் விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இனி வருங்காலங்களில் சூரியகாந்தி பயிர் சாகுபடி பரவலாக்கப்படும்.

**8—**

## தேங்காய் கொள்முதல் நிலையம்

**வினா எண் 39510—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறை மூலம் தேங்காய் கொள்முதல் செய்யப்படுவதில்லையாதலால் தேங்காய் கொள்முதல் அமைக்கும் திட்டம் எதுவும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை. டான்பெட் மூலம் கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யும் மையங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

| வ. எண் | மையம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் |
| 2 | தாராபுரம் | ஈரோடு மாவட்டம் |
| 3 | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 4 | உடுமலைப்பேட்டை | கோயம்புத்தூர் மாவட்டம் |
| 5 | பல்லடம் | கோயம்புத்தூர் மாவட்டம் |

**9—**

## முட்செடிகளை அகற்றுதல்

**வினா எண் 10228—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆலந்தூர் கிராமம், குன்னத்தூரன் கடையிலிருந்து ப. ராமநாதபுரம் வரைக்கான வாய்க்கால் ஓரத்தில் முட்செடி, மரங்களை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆலந்தூர் கிராமம், குன்னத்தூரன் கடையிலிருந்து இராமநாதபுரம் வரைக்கான வாய்க்கால் ஓரத்தில் உள்ள முட்செடி, மரங்களை அகற்றும் பணி பாசன சபைகள்மூலம் ஜனவரி 2007-ல் தொடங்கி அதே மாதத்தில் முடிக்கப்பட்டது.

**10—**

## தடுப்பணை

**வினா எண் 10523—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், சென்ன சமுத்திரம் கிராம ஓடையில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் குறித்து மதிப்பீடு தயாரிப்பதற்கான கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. நிதிநிலையைப் பொறுத்து வரும் நிதியாண்டில் இப்பணி மேற்கொள்வது குறித்து கவனத்தில் கொள்ளப்படும்.

[2008 ஜனவரி 24

11—

## குளக்கரையை உயர்த்துதல்

**வினா எண் 12187—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், கோட்டக்கரை குளத்தின் கரையை உயர்த்திக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்குளமானது பொதுப் பணித் துறைக்கு சொந்தமானது. 1999-2000-ம் ஆண்டில் ரூ. 9.70 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது. கடந்த 2005-ம் ஆண்டு பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் இயற்கை சீற்றத்தாலும் கரை பலவீனமாக உள்ளது. இவற்றினை சீரமைக்க ரூ. 5.00 இலட்சம் நிதி தேவைப்படும். வரும் நிதியாண்டில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் இக்குளத்தினை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

## ஏரிகளில் மரம் நடுவதைத் தவிர்த்தல்

**வினா எண் 12409—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுப் பணித் துறை நிர்வாகத்தில் உள்ள ஏரிகளில் கருவேல் மரம் நடப்படுவதை விவசாயிகளின் நலன் கருதி தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

இப்பொருள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு, அரசாணை (நிலை) எண் 98, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, நாள் 06-05-2002 மூலம் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(அ) பொதுப் பணித் துறை கண்மாய்களின் எதிர்வாய் பகுதியில் (Foreshore) கண்மாயின் முழுநீர் மட்ட அளவிற்கு மேல் பகுதியில் (above tank F.T.L.) கருவேல் மரங்கள் நடப்பட வேண்டும்.

(1) 3 மீட்டர் x 3 மீட்டர் இடைவெளிவிட்டு கருவேல் மரங்கள் நடப்பட வேண்டும்.

(2) மேற்கண்டவாறு மரம் நடுதலின் போது ஒவ்வொரு 1 கிலோ மீட்டருக்கு இடையில் 15 மீட்டர் அகல அடுக்குகள் இடைவெளி விடப்பட வேண்டும்.

(3) பொதுப் பணித் துறை அதிகாரிகள் எந்நேரமும் எளிதாக கண்மாயை பார்வையிட நுழைவு உரிமை படைத்தவர்கள்.

(ஆ) பஞ்சாயத்து யூனியன் கண்மாய்களில் கண்மாயின் நீர்பிடிப்பு பகுதிகளை பாதிக்காத வகையில் உள்ளூர் பொதுப் பணித் துறை அதிகாரிகள் சான்றிதழ் பெற்று மரங்கள் நடப்பட வேண்டும்.

13—

## நீர்வள ஆதாரம்

**வினா எண் 12412—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரப் பிரிவுத் துறை அதிகாரிகளைக் கொண்டு நீர்பிடிப்புப் பகுதியான குளம், குட்டை, ஏரி, ஆகியவற்றில் நீர்வள ஆதாரம் அறிந்து பட்டியலிட அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பு, சென்னை, திருச்சி, மதுரை மற்றும் பொள்ளாச்சி என 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மண்டலத்திலும் வடிநில வாரியாக நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் குளம், ஏரி ஆகியவற்றின் பட்டியல் மற்றும் நினைவுக் குறிப்புகள் (வரலாற்றுப் பதிவேடு, நீரியல் விவரங்கள் அடங்கியது) ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு நீர்வள ஆதாரங்கள் தக்க முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. நீர்ப்பிடிப்புப் பகுதிகள், நினைவுக் குறிப்புகள் பற்றிய விவரங்களை பொதுமக்கள் தொடர்புடைய வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.*

**14—**

**தடுப்பணை**

**வினா எண் 18767—திரு. இல. வேலுசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், மதிகோன்பாளையம் முதல் கிருஷ்ணாபுரம் வரை செல்லும் சாலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில், இத்திட்டம் விரிவான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

**15—**

**ஏரியைத் தூர்வாருதல்**

**வினா எண் 23377—திரு. மா. ராஜசேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2008 ஜனவரி 24]

*(அ) தொட்டியம் தொகுதி, அப்பநல்லூர் ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அப்பநல்லூர் ஏரியைத் தூர் வார கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை. வரும் நிதியாண்டில் (2008-2009) தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**16—**

**மராமத்துப் பணி**

**வினா எண் 26718—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஊராட்சி பரளை ஆற்றை மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் ஊராட்சியில் உள்ள பரளை ஆற்றை மராமத்து செய்ய நபார்டு வங்கியிடம் நிதி உதவிபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**17—**

**தூர்வாருதல்**

**வினா எண் 28362—திரு. எஸ். இராசசேகரன்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குடி தொகுதி, மாணியவயில் சாலை குமாரகுளம் சாலை வரை வாரியைத் தூர் வாரி தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உலக வங்கித் திட்டமான 'நீர்வள நிலவள' திட்டத்தின்கீழ் 2008-2009 ஆம் நிதியாண்டில் மாணியவயில் சாலை குமாரகுளம் சாலை வாரியை தூர் வாரி பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. தடுப்பணை குறித்து தொழில்நுட்ப சாத்தியக்கூறுக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

**18—**

### வரத்துவாரியைத் தூர்வாருதல்

**வினா எண் 28363—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, புலவன்காடு அணையிலிருந்து கருப்பட்டிப்பட்டி, கறம்பக்குடி புதுக்குளம் வரை வரத்துவாரியைத் தூர் வாரி மராமத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புலவன்காடு அணையிலிருந்து கறம்பக்குடி பெரியகுளம் உள்ள வரத்துவாரியைத் தூர் வாரி மராமத்து செய்யும் பணிகளை மேற்கொள்ள உலக வங்கித் திட்டமான 'நீர்வள நிலவள' திட்டத்தின்கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. மதிப்பீடு இறுதி செய்த உடன் இப்பணி 2007-2008 ஆம் நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



**19—**

### வாய்க்காலைத் தூர்வாருதல்

**வினா எண் 28528—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பிள்ளைபாளையம் பாசன வாய்க்காலைத் தூர் வாரி கரைகளை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பிள்ளைபாளையம் பாசன வாய்க்கால் ரூ. 2.40 இலட்சம் செலவினத்தில் தூர் வாரி முடிக்கப்பட்டது.

**20—**

### அரசு அனுமதி

**வினா எண் 9587—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் ஊராட்சி, கீழப்பெருமாள்பட்டி கல்குவாரியில் கல் உடைக்க அரசு அனுமதி அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

விக்கிரமங்கலம் உள்வட்டம், கீழப்பெருமாள்பட்டி பகுதி மலைப் பாதுகாப்பு குழுமத்தின்கீழ் வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் கல்குவாரிக் குத்தகை உரிமம் வழங்குவதற்கு முன்பாக மலைப் பாதுகாப்புக் குழுமத்தின் ஒப்புதல் பெறவேண்டும். மேலும் இப்பகுதியில் 100 மீட்டர் தொலைவில், ஆதி திராவிடர் காலனி அமைந்துள்ளதால் மேற்படி பகுதியில் கல்குவாரி குத்தகை உரிமம் வழங்க இயலாது. எனவே மேற்படி கல்குவாரியில் கல் உடைக்க அனுமதி வழங்க இயலாது.

[2008 ஜனவரி 24

**21—**

## பேருந்து வசதி

**வினா எண் 22176—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலி மலை மருத்துவமனை அருகில், மணப்பாறையிலிருந்து இலுப்பூர் வரை இயக்கப்படும் நகரப் பேருந்துகள் நின்று செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் திருச்சி மண்டலத்தின் மூலம் மணப்பாறை—இலுப்பூர் (வழி) விராலிமலை வழித்தடத்தில் 6 நகரப் பேருந்துகளின் மூலம் தினசரி 48 நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தடத்தில் இயக்கப்படும் அனைத்து நகரப் பேருந்துகளும் விராலிமலை அரசு மருத்துவமனை அருகில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன. மேலும் மேற்கண்ட வழித்தட நகரப் பேருந்துகள் அரசு பேருந்துகள் அரசு மருத்துவமனை அருகில் நின்று செல்ல சுற்றறிக்கைமூலம் ஓட்டுனர், நடத்துனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, நகரப் பேருந்துகள் நின்று செல்வதை பறக்கும்படைமூலம் கண்காணித்து வரப்படுகிறது.

**22—**

## பேருந்து வசதி

**வினா எண் 23469—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சி, திருமானூர் பகுதிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல நகரப் பேருந்துகள் தடம் எண் 2சி மற்றும் 2டி மூலமாக எடப்பாடியிலிருந்து சமுத்திரம், திருமானூர் வழியாக ஜலகண்டாபுரம் வரை தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. மற்றும் தடம் எண் 10, எடப்பாடியிலிருந்து இருப்பாளி, திருமானூர் வழியாக ஜலகண்டாபுரம் வரை தினசரி 8 நடைகள் இயங்கி வருகின்றது.

**23—**

## பேருந்து வசதி

**வினா எண் 23492—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மல்லசமுத்திரத்திலிருந்து தாரமங்கலத்திற்கு மகுடஞ்சாவடி, அ. புதூர் வழியாக, சேலத்திலிருந்து ஜலகண்டாபுரம் வழியாக நெம்பிள்ளைக்கும், மகுடஞ்சாவடியிலிருந்து நெம்பிள்ளை வழியாக கே.ஆர். தோப்பூருக்கும் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, மல்லசமுத்திரத்திலிருந்து மகுடஞ்சாவடி, அ. புதூர் வழியாக தாரமங்கலம் செல்லும் வழித்தடத்தில் மகுடஞ்சாவடி அருகே இரயில்வே பேருந்து மேம்பால பணி நடைபெற்று வருவதால் இப்பணி முடிவுற்றதும் பேருந்து இயக்க பரிசீலிக்கப்படும். சேலத்திலிருந்து ஜலகண்டாபுரம் (வழி) எளம்பிள்ளை தடத்தில் அரசு புறநகர் பேருந்துகள் 11 நடைகளிலும், நகர் பேருந்துகள் 124 நடைகளிலும், தனியார் பேருந்துகளின்மூலம் புறநகர் பேருந்துகள் 22 நடைகளிலும், நகர் பேருந்துகள் 48 நடைகளிலுமாக இயக்கப்பட்டு வருகின்றன.

[2008 ஜனவரி 24

மகுடஞ்சாவடியிலிருந்து எளம்பிள்ளை வழியாக கே.ஆர். தோப்பூர் வரை உள்ள பேருந்து விபரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மகுடஞ்சாவடி-காகாபாளையம் | .. | ஒவ்வொரு 5 நிமிட இடைவெளியிலும் பேருந்து வசதி உள்ளது. |
| காகாபாளையம்-எளம்பிள்ளை | .. | அரசு பேருந்து 99 நடைகள். தனியார் பேருந்து 12 நடைகள். |
| எளம்பிள்ளை-கே.ஆர். தோப்பூர் | .. | 2 மினிப் பேருந்து 30 நடைகள். |

மேற்கண்ட பேருந்து வசதியே இப்பகுதி மக்களின் போக்குவரத்துத் தேவைக்குப் போதுமானதாகும்.

**24—**

## பேருந்து வசதி

**வினா எண் 24037—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் முதல் சங்ககிரி, ஈரோடு-தாராபுரம் பழனிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் முதல் சங்ககிரி, ஈரோடு, தாராபுரம் வழியாக பழனி வரை அரசுப் பேருந்து ஒன்று 17-5-2007 முதல் இயக்கப்படுகின்றது. இதன்மூலம் இக்கோரிக்கை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படுகிறது.

**25—**

## பேருந்து வசதி

**வினா எண் 26079—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

ஓமலூரிலிருந்து திண்ணப்பட்டி, பொட்டியபுரம், கொண்டையனூர், சட்டூர், கருத்தானூர், ஓட்டத்தெரு வழியாக பன்னப்பட்டிக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் மண்டல புதிய நகரப் பேருந்து ஒன்று மூலம் சேலத்திலிருந்து ஓமலூர், பொட்டியபுரம், கொண்டையனூர், சட்டூர், ஓட்டத்தெரு, கருத்தானூர் வழியாக பண்ணப்பட்டி வரை தினசரி 6 நடைகள் 2-6-2007 முதல் இயக்கப்பட்டு வருகின்றது மற்றும் பன்னப்பட்டி-திண்ணப்பட்டி வழித்தடத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மூலமாக தினசரி 88 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. இப்பேருந்து வசதியே இப்பகுதி மக்களுக்குப் போதுமானதாகும்.

**26—**

## அதிவேக இரயில் வசதி

**வினா எண் 28447—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் இரயில் நிலையத்தில் அதிவேக இரயில்கள் நின்று செல்ல மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஓமலூர் இரயில் நிலையத்தில் வண்டி எண் 6231/6232 மயிலாடுதுறை-மைசூர் விரைவு வண்டி நின்று செல்வதற்கு புது தில்லியிலுள்ள இரயில்வே வாரியத்தின் ஒப்புதலுக்காக தென்னக இரயில்வேயின் முதன்மை பயணிகள் போக்குவரத்து மேலாளர், தலைமை அலுவலகம், சென்னை-3 அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 24

**27—**

## பேருந்து வசதி

**வினா எண் 29272—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, தருமபுரி காரிமங்கலம் பேருந்து 34-ஐ விளங்காமுடி வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட், தருமபுரி மண்டலம் நகர் பேருந்து தடம் எண் டி3ஏ-யின் மூலம் தருமபுரி-காரியமங்கலம் தடத்தில் நாளொன்றுக்கு 14 நடைகள் இயக்கப்படுகிறது. அத்தடத்தின் நீளம் 22 கி.மீ. ஆகும். நீட்டிக்கக் கோரியுள்ள விளங்காமுடி கிராமம் காரிமங்கலத்திலிருந்து 14.5 கி.மீ. தூரத்தில் உள்ளது. கோரிக்கைப்படி நகர் தடம் எண் டி3ஏ-யை நீட்டித்து இயக்கினால், ஏற்கெனவே, தருமபுரி-காரிமங்கலம் தடத்தில் நகர் பேருந்து வசதி பெற்றவர்கள் ஒரு சில நடைகளை இழக்க நேரிடும் மற்றும் பள்ளி செல்லும் நேரத்திற்கு பேருந்து வசதி பெற்ற மாணவ, மாணவியர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். எனவே, கோரிக்கைப்படி தடம் எண் டி3ஏ-யை விளங்காமுடி வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

**28—**

## சிமெண்ட் தளம்

**வினா எண் 30418—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் புதிதாக தொடங்கப்பட்ட அரசு போக்குவரத்துப் பணிமனைக்கு சிமெண்ட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் செயல்பட்டு வரும் அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் பராமரிப்பு கூடத்தில் போதுமான சிமெண்ட் தளம் அமைக்கப்பெற்று அதன் மூலம் அப்பணிமனையின் பேருந்துகள் பராமரிக்கப்படுகின்றன.

**29—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 30419—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் புதிதாக தொடங்கப்பட்ட அரசு போக்குவரத்துப் பணிமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்டவும் சீர்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அமையப்பெற்றுள்ள பணிமனையில் பராமரிப்புக் கூடம், அலுவலகம், ஓய்வறை, கழிவறை, பாதுகாவலர் அறை ஆகிய பணிமனைக்கு உரிய அனைத்து வசதிகளும் அமைக்கப்பெற்று செயல்பட்டு வருவதால் கூடுதல் கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**30—**

## பேருந்து வசதி

**வினா எண் 30735—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திலிருந்து திருப்பூர், புளியம்பட்டி, பவானி சாகர் வழியாக பண்ணாரிக்கும், வெள்ளக்கோவில்-நத்தகாடையூர்க்கும் புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயத்திலிருந்து திருப்பூர், புளியம்பட்டி, பவானி சாகர் வழியாக பண்ணாரிக்கும், வெள்ளக்கோவில்-நத்தகாடையூர் ஆகிய வழித்தடங்களில் பகுதிவாரியாக பேருந்து வசதி உள்ளது. எனவே, தற்சமயம் மேற்படி வழித்தடங்களில் நேரடிப் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலை உள்ளது.

**31—**

## ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 33335—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் போக்குவரத்து வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு எதுவும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

## ஓய்வு அறை

**வினா எண் 34760—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் போக்குவரத்துக் கழகப் பணிமனையில் ஓட்டுநர் மற்றும் நடத்துநருக்கு ஓய்வு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் உள்ள அரசு போக்குவரத்துக் கழக பணிமனையில் அங்கு தங்கும் ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களுக்கு போதுமான ஓய்வறை வசதி ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டு அவர்களின் பயன்பாட்டில் உள்ளது.

**33—**

## புதிய கட்டடம்

**வினா எண் 35347—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் கோட்டம், காஞ்சிபுரம் மண்டலம் தலைமை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை கிராமத்தில் மண்டல தலைமை அலுவலகம் கட்டுவதற்கான நிலம் ஒப்படை பெறப்பட்டு மண்டல தலைமை அலுவலகம் அமைப்பதற்குரிய வரைபடமும் மதிப்பீடும் தயார் செய்து இயக்குநர் குழுமத்தில் ஒப்புதல் பெற்று பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**34—**

## குதிரைப் படை

**வினா எண் 38144—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்தை ஒழுங்குபடுத்த கோயம்புத்தூர் மாநகரில் குதிரைப் படை பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூரில் ஏற்கெனவே குதிரைப் படை அமைக்கப்பட்டு பல்வேறு வகையான பணிகளையும் குறிப்பாக போக்குவரத்துப் பணிகளையும் கவனித்து வந்தது. இருப்பினும் குதிரைப் படையில் இருந்த குதிரைகள் அனைத்தும் இறந்து விட்டதால் இப்படை இயங்கவில்லை. இப்படைப் பிரிவிற்கு குதிரைகளை வாங்க அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. குதிரைகளை வாங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குதிரைகள் வாங்கியவுடன் அவைகள் காவல் பணிகளுக்கு குறிப்பாக போக்குவரத்துப் பிரிவு ஒழுங்குபடுத்தவும் பயன்படுத்தப்படும்.

**35—**

## நவீன கழிப்பிடம்

**வினா எண் 38555—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை போக்குவரத்துத் துறை பணி மனையில் நவீன கழிப்பிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு போக்குவரத்துக் கழக மானாமதுரை பணிமனையில் ஏற்கெனவே நவீன கழிப்பிடம் கட்டப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே வேறு நவீன கழிப்பிடம் கட்டும் திட்டம் எதுவுமில்லை.

**36—**

## தொழிற்சாலைகள் அமைத்தல்

**வினா எண் 20217—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) வால்பாறையில் பட்டன், பிலிம், ஊசி தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் பட்டன், பிலிம், ஊசி ஆகியவை தயாரிக்கும் தொழிற்சாலைகள் துவங்க அரசுக்கு உத்தேசமில்லை. தனியார் முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு தக்க ஆலோசனைகளை மாவட்டத் தொழில் மையம் அளிக்கும்.

**37—**

## கூட்டுப்பட்டா வழங்குதல்

**வினா எண் 9279—திருமதி ஜி. லதா:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தரிசு நிலங்களுக்கான பட்டாக்களை கணவன் மனைவி பெயரில் கூட்டுப்பட்டாவாக வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

அரசு நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை திட்டங்களின்போது பெண்கள் பெயர்களிலேயே பட்டா வழங்க அரசாணை எண் 1763, வருவாய்த் துறை, நாள்: 19-11-1987-இல் அறிவுறுத்தப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது.

பெண்கள் பேரில் நில ஒப்படை/வீட்டுமனை ஒப்படை வழங்கும்போது நடைமுறையில் உள்ள மகளிருக்கான நில மேம்பாட்டு திட்டம், சுயவேலை வாய்ப்பு மற்றும் சிறுதொழில் கடன் வழங்கும் திட்டம் போன்றவற்றின்கீழ் சுயமாக மகளிர் கடனுதவி பெற வழி செய்கிறது.

பெண்கள் பெயர்களில் சொத்துரிமை வழங்கப்படுவதால் சமூகத்தில் இவர்களது நிலை உயர்வடைய வழி வகுக்கப்படுகிறது. மேலும் மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு எண்ணிக்கையில் உள்ள மகளிர்க்குக் உரிய பங்கு சென்றடைய வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறத்தக்கவகையில் தரிசு நில ஒப்படை மற்றும் வீட்டுமனைப் பட்டாக்கள் பெண்கள்/குடும்பத் தலைவர் பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்படவேண்டும் என்பதால் பெண்கள் பெயரில் தனிப்பட்டா வழங்குவதே சரியானதாகும். கணவன்-மனைவி இருவர் பெயரிலும் கூட்டுப்பட்டா வழங்கப்படுமானால் நாளடைவில் சச்சரவுகள் ஏற்பட காரணமாகலாம். எனவே, தற்போது நடைமுறையில் உள்ளவாறு பெண்கள் பெயரில் மட்டும் பட்டா வழங்கலாம்.

**38—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 21775—திரு ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், கருநாகல்லூர், காவேரிபுரம், கோனூர், தின்னப்பட்டி ஊராட்சிகளில் இதுவரை வீட்டுமனைப் பட்டா வழங்கப்படாத வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து,





தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 498, வருவாய்த் துறை, நாள்: 5-9-2007-இன்படி இத்திட்டம் 31-3-2008 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**39—**

## சித்த மருத்துவப் பிரிவு

**வினா எண் 26137—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் சித்த மருத்துவப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறைச்சாலைகளில் ஆங்கில மருத்துவ முறைக்கான (Allopathy) மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சித்தா மருத்துவ சிகிச்சை தேவைப்படும் சிறைவாசிகளுக்கு சித்தா மருத்துவத்திற்கான மருத்துவர்கள் தனியாக சிறைகளுக்கு வரவழைக்கப்பட்டு சிறைவாசிகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். சிறைச்சாலைகளில் சித்த மருத்துவப் பிரிவு துவக்குவது குறித்தான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**40—**

## இலவசப் பட்டா

**வினா எண் 28313—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மல்லியகுந்தம் ஊராட்சி, சூரியனூர் காட்டுவளவு பகுதியில் வீடுகளுக்கு இலவசப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை நிலை எண் 498, வருவாய், நாள்:5-9-2007-இன்படி இத்திட்டம் 31-3-2008 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**41—**

## கட்டடப் பராமரிப்பு

**வினா எண் 29984—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை கிளைச் சிறைச்சாலை கட்டடத்தை மராமத்து செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 20 ஆகும். அங்கு தற்போது உள்ள அடைப்பு 20 ஆகும். பெரும்பாலும் கிளைச் சிறைகளில் விசாரணை சிறைவாசிகள் அல்லது சிறு குற்றவாளிகள்தான் அடைக்கப்படுவார்கள். இக்கிளைச் சிறையில் தற்போதுள்ள வசதிகள் போதுமானதாக உள்ளது. இக்கிளைச் சிறையின் சமையலறை ரூ.1 இலட்சம் செலவில் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ்



2008 ஜனவரி 24]

நவீனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்கிளைச் சிறையின் தரைதளம் மற்றும் ஜன்னல்கள் ஆகியவற்றை செப்பனிடவும் மற்றும் தண்ணீர் வசதி செய்து தரவும் ஆண்டுதோறும் வழங்கப்படும் கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து நடப்பு நிதியாண்டில் ரூ.2.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் பொதுப் பணித் துறையினரால் செயல்படுத்தப்படும்.

**42—**

## பெண் பணியாளர் நியமனம்

**வினா எண் 36398—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைக்குப் போதுமான பெண் பணியாளர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையைச் சார்ந்த பெண்கள் இணைப்பு சிறைக்கு (Coimbatore Annex) அரசு ஆணை நிலை எண் 1012, உள் (சிறை-IV) துறை, நாள்: 24-10-2002-ன்படி கீழ்க்கண்ட பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

பெண்கள் இணைப்பு சிறையைப் பொறுத்தவரை இப்பதவிகள் போதுமானது.

| | | |
|---|---|---|
| 1. உதவி சிறை அலுவலர் (பெ) | — | 1 |
| 2. முதல் நிலைக் காவலர் (பெ) | — | 1 |
| 3. இரண்டாம் நிலை காவலர் (பெ) | — | 9 ஏற்கெனவே உள்ள பதவிகள் மற்றும் பிற சிறைகளிலிருந்து மாற்றப்பட்ட பதவிகள் |
| 4. முதல்நிலைக் காவலர் (பெ) | — | 5 |

[2008 ஜனவரி 24

மேற்படி பதவிகளில் உதவி சிறை அலுவலர் பதவி தவிர மற்ற பதவிகள் யாவும் நிரப்பப்பட்டுள்ளன. உதவி சிறை அலுவலர் பதவியும் விரைவில் நிரப்பப்படும்.

**43—**

**கூடுதல் காவலர் நியமனம்**

**வினா எண் 38522—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் கூடுதலாக காவலர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மத்திய சிறையில் கூடுதலாக காவலர் பதவிகள் புதிதாக தோற்றுவிப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. காலிப் பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக விவரம் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணைக் குழு தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேர்வுக் குழு மூலம் தேர்வுகள் நடத்தி தகுதியுள்ள நபர்களைத் தெரிவு செய்தபின் அச்சிறையின் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**44—**

**ஏரியில் படகு விடுதல்**

**வினா எண் 22388—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் மீண்டும் படகு விட அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு படகு குழாமை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

செங்கல்பட்டு கொளவாய் ஏரியில் போதிய நீர் இல்லாததால் 25-4-2005 முதல் படகு விடுவது நிறுத்தப்பட்டது. கொளவாய் ஏரியில் படகு விட்டதின்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு கீழ்க்கண்டவாறு நட்டம் ஏற்பட்டது.

| வருடம் | நட்டம் (இலட்சத்தில்) |
|---|---|
| 2002-03 | ரூ.2.52 |
| 2003-04 | ரூ.2.02 |
| 2004-05 (24-4-2005 வரை) | ரூ.1.08 |

இவ்வாறு தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டதாலும், ஏரியில் போதிய நீர் இல்லாததாலும், நிரந்தரமாக படகுப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

**45—**

**சுற்றுலாத் தலமாக அறிவித்தல்**

**வினா எண் 30703—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி அருகிலுள்ள தொங்கு பாலத்தினை சுற்றுலா தலமாக அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மருங்காபுரி தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி அருகிலுள்ள தொங்கு பாலத்தினை சுற்றுலா தலமாக்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**46—**

## பழுது நீக்கம்

**வினா எண் 32167—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், ஓட்டல் தமிழ்நாடு பழுதடைந்துள்ளதை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

ஓட்டல் தமிழ்நாடு, திருக்கழுக்குன்றம், இந்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான 1 ஏக்கர் நிலத்தில், மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியில் கட்டப்பட்டு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 17-4-1996 அன்று துவங்கப்பட்டு சில மாதங்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்பட்டது. தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டதால் ஓட்டலை மூடி வைக்க வேண்டியதாகிவிட்டது. பின்னர் தனியாருக்கு குத்தகை விட முடிவு செய்து டெண்டர் விட்டதில் யாரும் எடுக்க முன்வரவில்லை. மேலும், இந்து சமய அறநிலையத் துறையினர் மாதம் ஒன்றுக்கு நில வாடகையாக ரூ.6000/- வசூலித்து வருகின்றனர். தனியாருக்குக் குத்தகைக்கு விடவும், நிலக்குத்தகையைக் குறைக்கவும் இந்து சமய அறநிலையத் துறை அனுமதிக்காததால், பொதுப் பணித் துறையினர் மதிப்பீடு செய்யவும் கட்டட தொகையை இந்து சமய அறநிலையத் துறையிடம் பெற்றுக்கொண்டு ஓட்டலை அவர்களிடமே ஒப்படைத்து விட முடிவு செய்யப்பட்டு உள்ளதால், திருக்கழுக்குன்றத்தில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு கட்டடத்தைப் புதுப்பிக்கும் உத்தேசம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.





**47—**

## தங்கும் விடுதி அமைத்தல்

**வினா எண் 36507—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகிலும், டாப்சிலிப் பகுதியிலும் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம் அணைக்கு அருகிலும், டாப்சிலிப் பகுதியிலும் தங்கும் விடுதியும், உணவு விடுதியும் அமைத்திட செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**48—**

## விளம்பரம்

**வினா எண் 36558—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோடை விழாக்கள் நடக்கும் இடம், நாள், மாதம் போன்ற தகவல்களை அனைத்து முக்கிய பேருந்து நிலையங்களிலும் விளம்பரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என் சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய மலை வாசஸ்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஏலகிரி போன்ற இடங்களில் நடத்தப்படும் கோடை விழாக்கள் குறித்த அனைத்து தகவல்களும் அமையப்பெற்ற விளம்பரங்கள் நாளிதழ்கள் மற்றும் வாராந்திர சஞ்சிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி அலைவரிசைகள் ஆகியவற்றிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. இவை தவிர கோடை விழா நடைபெறும் குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள முக்கிய பேருந்து நிலையங்கள் மற்றும் சந்திப்புகளிலும் கோடை விழா குறித்த விளம்பர பேனர்களும் போஸ்டர்களும் போதிய அளவில் வைக்கப்படுகின்றன.

[2008 ஜனவரி 24

49—

**சுற்றுலாப் பூங்கா**

**வினா எண் 38699—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், எ. கொல்ல அள்ளி ஊராட்சி, மொடக்கேரி, மலைப் பகுதியில் சுற்றுலாப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என் சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி தொகுதி, தருமபுரி ஒன்றியம், எ.கொல்ல அள்ளி ஊராட்சி, மொடக்கேரி மலைப் பகுதியில் சுற்றுலாப் பூங்கா அமைத்தல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

50—

**சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா எண் 39105—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், விரகனூர் மதகு அணையை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என் சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை மாவட்டம், விரகனூர் மதகு அணையை சுற்றுலாத் தலமாக்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2008 ஜனவரி 24]

51—

**சுற்றுலாத் தலமாக்குதல்**

**வினா எண் 39179—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையை சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, பார்த்திபனூர் மதகு அணையை சுற்றுலாத் தலமாக்குதல் குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

52—

**புதிய குடும்ப அட்டைகள்**

**வினா எண் 17890—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் 271 குடும்ப அட்டைகளுக்கு புதிய குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தைச் சேர்ந்த நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைகளை 2005-2009 ஆம் ஆண்டுக்கு, புதுப்பித்து வழங்குவதில் விடுபட்ட 268 குடும்ப அட்டைகளுக்கும் புதிய குடும்ப அட்டைகள் அச்சிட்டு உரியவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன.

[2008 ஜனவரி 24

53—

## குடும்ப அட்டை வழங்குதல்

**வினா எண் 24598—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, 9-வது வார்டில் குடியிருக்கும் பழங்குடியினர்களில் குடும்ப அட்டை அல்லாத குடும்பங்களுக்கு அட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

நிலக்கோட்டை தொகுதி நிலக்கோட்டை கிராமம் மற்றும் டவுன் 9-வது வார்டு எண்ணில் உள்ள புதுப்பட்டியில் உள்ள பழங்குடியினருக்கு குடும்ப அட்டை வழங்கக்கோரி எவரும் மனுச் செய்யவில்லை என்றும், இருப்பினும் புதிதாக மனுச் செய்யும் பட்சத்தில் பழங்குடியினர்களுக்கு குடும்ப அட்டை வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 30649—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குடிசை மாற்று வாரியத்தில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் உள்ள பகுதியான சுகுணாபுரம் பிள்ளையார்புரம், எஸ்.கே.புதூர் ஆகிய இடங்களில் அடிப்படை வசதிகள் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2008 ஜனவரி 24]

(ஆ) கோவை மாவட்ட பேரூர் தொகுதியில் 11-வது நிதிக் குழுவின் சிறப்பு மானியம் மூலமாக தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் கட்டியுள்ள சுகுணாபுரம் பகுதி 1, பிள்ளையார்புரம், சுகுணாபுரம் கிழக்கு மற்றும் கோண்டிநகர் ஆகிய 4 திட்டப் பகுதிகளில் 889 வீடுகளுக்கு வாரியத்தின் மூலமாக சாலைகள், சாக்கடைகள், கழிவு நீர்க் கால்வாய் போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் வசதி அமைக்க குறிச்சி நகராட்சி வாரியம் ரூ. 5,30,000 செலுத்தியுள்ளது.

இத்திட்டப் பகுதிகளுக்கு ஆழியார் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்போது குடிநீர் வழங்கப்படும் என குறிச்சி நகராட்சி தெரிவித்துள்ளது.

55—

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா எண் 37279—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத் துறைகளிலும், நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புக்காக பெயர்கள் அனுப்பப்படும்போது விடுதலைப் போராட்ட தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்க அரசாணை (நிலை) எண் 59, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (என்2) துறை, நாள் 4-5-1999-ன்மூலம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

56—

## முன்னுரிமைப் பதிவு

**வினா எண் 38502—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) அரசின் திட்டப் பணிகளுக்கு நிலம் கொடுத்தோரின் வாரிசுதாரர்களுக்கு உள்ளது போல, திருமணமான வாரிசுதாரர்களுக்கும் வேலைவாய்ப்பகத்தில் முன்னுரிமையில் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**57—**

**தேரைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 8726—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் தொகுதி, துரிஞ்ஞாபுரம் ஒன்றியம், பூதமங்கலம் ஊராட்சியில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான கோயிலின் தேரைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பூதமங்கலம் அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் மற்றும் அருணாசலேஸ்வர் திருக்கோயில் திருப்பணிகளுக்கு ரூ.5.30 இலட்சத்திற்கு நிருவாக அனுமதி அளிக்கப்பட்டு, அதில் அரசு மானியத்தொகை ரூ.1.60 இலட்சம் விடுவிக்கப்பட்டு, அதில் ரூ. 1.07 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. திருப்பணிக் குழுவினரின் ஆர்வமின்மையால் திருப்பணி செய்ய இயலாத நிலையில், எஞ்சிய அரசு மானியத் தொகை வட்டியுடன் சேர்த்து ரூ.1.54 இலட்சத்திற்கான தொகை இந்து சமய அறநிலையத் துறைக்கு திரும்ப வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள



2008 ஜனவரி 24]

திருப்பணி வேலைகளை செய்து முடிக்க ரூ. 10.00 இலட்சம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 25 அடி உயரம் கொண்ட முழுவதும் பழுதடைந்த தேரைப் புதிதாக செய்வதற்கு ரூ. 20 இலட்சம் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணியினைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதியாதாரம் இல்லை. இந்நிலையில் இப்பணி வேலைகள் முடிக்கப்பட்டபின்னரே, பொதுமக்கள் பங்கேற்பு கிடைத்தால் மட்டுமே தேர்த் திருப்பணியை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்து சமய அறநிலையத் துறை நிதியுதவி சிறிதளவு அளித்து பணியினை செய்திட இயலும்.

**58—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 13245—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, முகாசிப்புதூர், பூனாச்சி பெரியாண்டிச்சி அம்மன் கோயிலுக்கு தடுப்புச் சுவர் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூனாச்சி அருள்மிகு பெரியாண்டிச்சி அம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத திருக்கோயிலாகும், இத்திருக்கோயிலின் நிர்வாகம் திரு. செ. அங்கப்பன் என்பவரால் கவனிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் அந்தியூர்-அம்மாபேட்டை பிரதான சாலையில், மேற்கில் ஆற்றுப் பாலத்திற்கு அருகில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதி திராவிடர் மக்கள் வாழும் பகுதியில் உள்ளது என்பதால், வரும் நிதியாண்டில் ஆதிதிராவிடர் வாழும் பகுதி திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.25,000/- நிதியுதவி வழங்கி பொதுமக்கள் உதவியுடன் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2008 ஜனவரி 24

**59—**

**தார்ச் சாலை**

**வினா எண் 18621—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, மல்லிகேஸ்வரன் திருக்கோயிலைச் சுற்றி கிரிவலம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி, மல்லிகேஸ்வரன் திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் கட்டடங்கள் மற்றும் இதர அசையாச் சொத்துகள் ஏதும் இல்லை. உபரி நிதி மற்றும் முதலீடுகள் ஏதுமில்லை. உண்டியல் மற்றும் கட்டண சீட்டுகள்மூலம் இத்திருக்கோயிலுக்கு வருமானம் கிடைக்கப் பெறுகிறது. மேற்படி வருமானம் சிப்பந்திகள் சம்பளம், மின் கட்டணம், நித்திய பூஜை முதலிய செலவினத்திற்கே போதுமானதாக இல்லை. மேலும் வெள்ளார் கிராம மக்கள் விவசாயத்தையே நம்பி உள்ளதால் இக்கிராம மக்களின் நிதி உதவிமூலம் கிரிவலப் பாதையை சீரமைக்க இயலாது. இந்த கிரிவலப் பாதையை சீரமைக்க சுமார் ரூ. 5 இலட்சம் செலவாகும். மேற்படி கிரிவலப் பாதையைச் சுற்றி தார்ச் சாலை அமைக்க மாவட்ட நிருவாகத்தின் நிதி ஒதுக்கீட்டின்மூலம் மட்டுமே நடவடிக்கை எடுத்திட இயலும்.

**60—**

**மலையைச் சுற்றி பாதை அமைத்தல்**

**வினா எண் 18623—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) தாரமங்கலம் ஒன்றியம், கருக்கல்வாடி ஊராட்சி அருள்மிகு அரங்கநாதர் கோவில் மலையைச் சுற்றி பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கே.ஆர். தோப்பூர் கிராமம் அருள்மிகு காரவட்டி அரங்கநாதர் திருக்கோயில் ஒரு மலையின் மேல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு மலை அடிவாரத்திலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு உபயதாரர்களால் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. அடிவாரத்திலிருந்து திருக்கோயில் வரை 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு மண்பாதை அமைக்கப் பட்டுள்ளது. இப்பாதையில் இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் சென்று வருகின்றன. தற்போது இத்திருக்கோயிலின் மலையைச் சுற்றி சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு 2006-2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின்மூலம் ரூ.1,60,000/- மதிப்பீட்டில் மண்பாதை அமைக்கப்பட்டுள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றுவதற்கு ரூ.6,00,000/- செலவாகும். மேற்படி தார்ச் சாலை அமைக்க திருக்கோவிலில் போதிய நிதி வசதி இல்லை. மேற்படி தார்ச் சாலை அமைக்க மாவட்ட நிர்வாகத்தின் நிதி ஒதுக்கீட்டின்மூலம் மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும்.

**61—**

**கோயிலைப் புதுப்பித்தல்**

**வினா எண் 20780—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கொடும்பாளூரில் மூவர் கோவிலை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கொடும்பாளூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு

[2008 ஜனவரி 24

மூவர் திருக்கோயில், வரலாற்றுச் சிறப்புமிக்க பழமையான திருக்கோயில் ஆகும். மேற்படி திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் துறையின் பராமரிப்பின்கீழ் உள்ளது. மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் ஏதும் இல்லை. வருமானம் ஏதும் இல்லை. மேற்படி திருக்கோயில் இதுவரை துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவில்லை. மேற்படி திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் துறையின் பராமரிப்பில் உள்ளதால், மேற்படி திருக்கோயிலை இந்து சமய அறநிலையத் துறையின்மூலம் புதுப்பிக்க வழிவகை இல்லை.

**62—**

## குளத்தைத் தூர் வாருதல்

**வினா எண் 22145—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தி ஊராட்சி, மாங்குட்டப்பட்டி அருள்மிகு ராஜகணபதி திருக்கோயிலின் குளத்தைத் தூர் வாரி, சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், அமரகுந்தி ஊராட்சி, மாங்குட்டப்பட்டி கிராமம், அருள்மிகு இராஜகணபதி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் கிராமப் புறம்போக்கில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருமானம் பெற்றுத்தரக் கூடிய நிலங்கள், கட்டடங்கள் ஏதுமில்லை. இத்திருக்கோயிலுக்கென நிர்வாகி எவரும் இல்லை. திரு. கந்தசாமி என்பவர் பூஜை செய்து வருகிறார். இத்திருக்கோயிலில் அவ்வப்போது உபயதாரர்கள்மூலம் பூசைகள் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலின் எதிர்புறத்தில்



2008 ஜனவரி 24]

சுமார் 50'x40' சுற்றளவில் ஒரு குளம் உள்ளது. இந்தக் குளம் சுற்றுச் சுவர்கள் சரிந்து பாழடைந்து உள்ளது. திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் திருக்கோயிலுக்கு எதிரே உள்ள குளத்தினை இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தூர்வாரி சுற்றுச் சுவர் அமைக்க வழிவகையில்லை.

**63—**

## பொற்றாமரைக் குளத்தில் நீர் நிரப்புதல்

**வினா எண் 22502—திரு. சை. சையது கௌஸ் பாஷா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் பொற்றாமரைக் குளத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயிலிலுள்ள பொற்றாமரைக் குளத்தில், வைகை ஆற்றிலிருந்து தனிக் குழாய்மூலம் தண்ணீர் கொண்டுவரப்பட்டு, எப்பொழுதும் தண்ணீர் இருக்கும்படி செய்யப்படும்.

**64—**

## பஞ்சாமிருதத்தின் விலையைக் குறைத்தல்

**வினா எண் 22917—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்மூலம் விற்பனை செய்யப்படும் பஞ்சாமிருதத்தின் விலையைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிப்பதற்குத் தேவைப்படும் மலை வாழைப்பழம், சிறுமலை, விருப்பாட்சி, தாண்டிக்குடி, பாச்சலூர், பன்றிமலை, கே.சி. பட்டி ஆகிய இடங்களில் விளையும் மலை வாழைப் பழங்கள் கொள்முதல் செய்தும், தரமான உலர் கொட்டை நீக்கிய உலர் பேரீச்சம்பழம், தரமான கற்கண்டு, ஏலக்காய் போடிநாயக்கனூர் ஸ்பைசஸ் டிரேடிங் கார்ப்பரேஷனிலும், கரும்புச் சர்க்கரை ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலும், நெய் ஆவின் நிறுவனத்தாரிடமும் தேன் காதிகிராப்ட் நிறுவனத்தாரிடமும், கொள்முதல் செய்யப்பட்டு உயர் தரமான பொருட்களைக் கொண்டு பஞ்சாமிர்தம் தயார் செய்யப்பட்டு 1/2 கிலோ பெட்ஜார் டப்பா 1-க்கு ரூ.25/-வீதமும் மற்றும் அலுமினிய லேமினேட்டட் கம்போசிட் டப்பா 1-க்கு ரூ.30/-வீதமும் பக்தர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட விலை 2004 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டது முதல் தொடர்ந்து அதே விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பக்தர்களுக்குச் சுத்தமான, தரமான பஞ்சாமிர்தம் உயர் தரமான பொருட்களைக் கொண்டு தயார் செய்து வழங்கப்பட வேண்டுமென்பதைக் கருத்திற்கொண்டு மூலப் பொருட்கள் விலைவாசி உயர்ந்தாலும் கடந்த 2004 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட விலையிலேயே தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இலாப நோக்கமின்றி பஞ்சாமிர்தம் தயார் செய்து விற்பனை செய்யப்பட்டு வருவதால் தற்போது விலையைக் குறைத்து விற்பனை செய்ய இயலாத நிலை உள்ளது.

**65—**

## நிதி வழங்குதல்

**வினா எண் 22924—திரு. வை. காவேரி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டம், சித்தூர், ரெட்டியப்பட்டி ஆதிதிராவிடர் மக்களின் அருள்மிகு மாரியம்மன் கோவில் பராமரிப்புப் பணிக்கு நிதி ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் வராத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் திருப்பணி நிதி உதவித் திட்டத்தின்கீழ் 2006-2007ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், சித்தூர் ரெட்டியப்பட்டி, ஆதி திராவிடர் தெரு, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணிக்காக மதிப்பீடு அங்கீகாரம் மற்றும் டெண்டர் அங்கீகாரம் வழங்கியவுடன் ரூ. 25,000/- தொகை வழங்கப்படும்.

**66—**

## அரசு ஊழியர்களாக அங்கீகரித்தல்

**வினா எண் 23029—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி கோவிலில் உள்ள பூசாரிகள், முடிதிருத்தும் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரித்து ஊதியம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில் ஒவ்வொன்றும் தனி அலகுகளாக அந்தந்த திருக்கோயில்களுக்கென் தனித்தனி வரவு செலவுத் திட்ட அடிப்படையில், தனித்தனி அறங்காவலர்கள் குழுவின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில் பணியாளர்கள் அறங்காவலர்களால் தேர்வு செய்து நியமனம் செய்யப்படுகின்றனர். திருக்கோயில்களில் பணிபுரியும் ஊழியர்கள் இந்து சமயத்தை மட்டுமே சேர்ந்தவர்கள். இந்து சமய நிறுவன ஊழியர்களை அரசு ஊழியர்களாக அறிவிக்க சட்டத்தில் வழிவகை இல்லை. எனவே பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் உள்ள பூசாரிகள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் ஆகியோரை அரசு ஊழியர்களாக் அங்கீகரித்து ஊதியம் வழங்க இயலாது.

67—

## கோயில் விரிவாக்கம்

**வினா எண் 23611—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அருள்மிகு சுப்பிரமணியர் கோயிலை விரிவுபடுத்தி புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணி வேலைகள் செய்திட ரூ. 12.00 இலட்சம் செலவாகும் என தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணிகளைச் செய்திட திருக்கோயிலில் போதிய நிதிவசதி இல்லை. திருப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகையினையும் அரசு நிதியாக வழங்கிட வழிவகை இல்லை. இத்திருக்கோயில் திருப்பணியினைச் செய்திட பொதுமக்கள் ஆர்வத்தோடு முன்வந்து நிதிப் பங்களிப்பு வழங்கும் நிலையில், அவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் சிறிதளவு அறநிலையத் துறை நிதியுதவி வழங்கி திருப்பணிகள் மேற்கொள்ள இயலும்.

68—

## நிழற்கூடம்

**வினா எண் 237[illegible]—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் தொகுதி, மொரப்பூர் சிங்காரவேலர் கோயிலில் நிழற்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மொரப்பூர் தொகுதி, மொரப்பூர் சிங்காரவேலர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் நலன் கருதி நிழற்கூடம் அமைக்கும் பணிக்கான மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் மதிப்பில் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

69—

## புதிய திருக்கோயில்

**வினா எண் 26646—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, புளியம்பட்டி ஊராட்சி, ஆதிதிராவிடர் புதிய காலனியில் புதியதாக திருக்கோயில் கட்ட நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

2005-2006 ஆம் நிதி ஆண்டில் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் 26 திருக்கோயில்களுக்குத் திருப்பணிக்காக நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அதில் ஓமலூர், புளியம்பட்டி (ஆதி திராவிடர் காலனி) அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலும் ஒன்றாகும். இத்திருக்கோயிலுக்கு 2005-2006 ஆம் நிதியாண்டில் ரூ.25,000- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

70—

## நிதியுதவி

**வினா எண் 28984—திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

*(அ)* ஆலங்குடி தொகுதி, புள்ளான்விடுதி, மாரியம்மன் கோவில் திருப்பணிக்கு நிதியுதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஆலங்குடி தொகுதி, புள்ளான்விடுதி, அருள்மிகு சின்னமுத்து மாரியம்மன் திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு புதுக்கோட்டை ஆய்வர் தக்காராக உள்ளார். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ. 5000/-க்கு கீழ் உள்ளதாகும். இத்திருக்கோயிலுக்கு புல எண் 97-1பி-0120 மற்றும் 97-1பி 3.87.5 ஆகிய நிலங்கள் உள்ளன. மேற்படி நிலங்கள் பூஜைக்காக மானியத்திற்கு விடப்பட்டுள்ளன. மேற்படி நிலங்கள் பயிரிடப்பட்ட தைல மரங்கள் மகசூல் ஏலம்மூலம் 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுமார் ரூ.1.00 இலட்சம் வருமானமாக வரப்பெறுகிறது. தற்போது இத்திருக்கோயிலில் ரூ.5.00 இலட்சம் முதலீடுகள் உள்ளன. மேற்படி திருக்கோயிலில் ரூ.13.35 இலட்சத்திற்கு 4 திருப்பணிகள் செய்யப்படவுள்ளன. இதில் 5.25 இலட்சத்திற்கு உபயமாகவும் எஞ்சிய ரூ.8.10 இலட்சத்திற்கு திருக்கோயில் நிதிமூலம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**71—**

## திருக்கோயில் பெயரில் பட்டா

**வினா எண் 29670—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெருந்துறைத் தொகுதி, சீனாபுரம் கிராமம், மலை சீனாபுரம் முத்துக் குமாரசாமி கோவிலிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கோவிலுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பெருந்துறை தொகுதி, சீனாபுரம் கிராமம், மலை சீனாபுரம் அருள்மிகு முத்துக்குமாரசுவாமி திருக்கோயில் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகள் ஏற்கெனவே வருவாய்த் துறையினரால் அகற்றப்பட்டுவிட்டன. திருக்கோயில் அமைந்துள்ள சர்க்கார் புறம்போக்கு இடத்திற்கு திருக்கோயில் பெயரில் பட்டா வழங்குவதற்கு நிர்வாகியால் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இந்த திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லை. பட்டா வழங்குவது வருவாய்த் துறையினரின் பரிசீலனையில் உள்ளது.

**72—**

## கல்லூரிகள் அமைத்தல்

**வினா எண் 30667—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பல்லடம் தொகுதி, வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிதியிலிருந்து அறநிலையத் துறை மூலமாக அரசு கலைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, தொழில்நுட்பக் க்ல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருக்கோயில் நிதியிலிருந்து அறநிலையத் துறை மூலமாக கலைக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவைகள் அமைப்பது தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களும் பரிசீலனையில் இல்லை. மேற்படி கல்லூரிகள் அமைக்கத் தேவையான இடவசதியோ, நிதிவசதியோ திருக்கோயிலில் தற்பொழுது இல்லை.

[2008 ஜனவரி 24

73—

## குடமுழுக்கு

**வினா எண் 31599—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை பகுதியிலுள்ள அருள்மிகு முத்துமாரியப்பன் கோவில், அருள்மிகு சிவன்கோயில், அருள்மிகு கோதண்டராமர் கோவில், அருள்மிகு வெள்ளைமுனியன் கோவில் ஆகிய கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை கிராமம், அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் சட்டப் பிரிவு 46(i)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். பசலி 1416 ஆம் உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ. 47,763/- ஆகும். மேற்படி திருக்கோயிலுக்கு தகுதி வாய்ந்த உபயதாரர்களைக் கொண்டு திருப்பணி வேலைகள் செய்திட மதிப்பீடுகள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை கிராமம், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். பசலி 1416 ஆம் உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.19,980/- ஆகும். இந்த திருக்கோயிலுக்கு உபயதாரர்கள்மூலம் திருப்பணி செய்ய ரூ. 8.75 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டு வேலைகள் துவங்கப்படவுள்ளது. மேற்படி வேலைகள் யாவும் நிறைவு செய்து நடப்பு நிதியாண்டு முடிவதற்குள் குடமுழுக்கு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை அருள்மிகு கோதண்டராமர் திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயிலாகும்.



2008 ஜனவரி 24]

இத்திருக்கோயிலுக்கு உதவித் தொகை நிர்ணய வருவாய் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலுக்கு தகுதி வாய்ந்த உபயதாரர்களைக் கொண்டு திருப்பணி செய்திட மதிப்பீடுகள் தயார் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை அருள்மிகு வெள்ளை முனீஷ்வரர் திருக்கோயில் சட்டப்பிரிவு 46(i)-ன்கீழ் பட்டியலில் சேர்ந்த திருக்கோயிலாகும். பசலி 1416 ஆம் உதவித் தொகை நிர்ணய வருமானம் ரூ.33,775/- ஆகும். இத்திருக்கோயிலில் கடந்த 22-11-1996 அன்று குடமுழுக்கு செய்யப்பட்டு 12 ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. தற்போது ரூ.10,000/- மதிப்பீட்டில் உபய திருப்பணியாக மூலஸ்தானம் மராமத்துப் பணி நிறைவடைந்து உள்ளது. இதர திருப்பணி வேலைகளையும் உபயதாரர்கள்மூலம் செய்து அடுத்த நிதியாண்டில் குடமுழுக்கு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

74—

## குடமுழுக்கு

**வினா எண் 31601—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நொடியூர் முத்துமாரியம்மன் கோயில், பழைய கந்தர்வக்கோட்டை கஸ்தூரியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், நொடியூர் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து

[2008 ஜனவரி 24

சமய அறநிலையத் துறையின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு கிராமப் பொது மக்களால் திருப்பணி செய்யப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், பழைய கந்தர்வக்கோட்டை அருள்மிகு கஸ்தூரியம்மன் திருக்கோயில் பட்டியலில் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு வருவாய் ஏதும் இல்லை. புதுக்கோட்டை நகர் கீழராஜவீதி அருள்மிகு மனோன்மணியம்மன் திருக்கோயிலின் குழுக் கோயிலான இத்திருக்கோயில் தற்போது கீரனூர் அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயில் செயல் அலுவலரின் கூடுதல் பொறுப்பில் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றது. புதுக்கோட்டை பிரிவு ஆய்வர் இத்திருக்கோயிலின் தக்காராக உள்ளார். பழமையான இத்திருக்கோயிலைத் தகுதிவாய்ந்த உபயதாரர்களைக் கொண்டு திருப்பணி செய்யவும் உரிய மதிப்பீடுகள் தயார் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**75—**

## திருப்பணி

**வினா எண் 34228—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கோட்டை மேட்டுப்பட்டி ஊராட்சி, 1-வது வார்டு, தருமபுரி சாலையிலுள்ள அட்டை விநாயகர் கோயில் திருப்பணி நடைபெற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, கோட்டை மேட்டுப்பட்டி ஊராட்சி 1-வது வார்டு தருமபுரி சாலையிலுள்ள அட்டை விநாயகர் கோயிலின் திருப்பணிக்கு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியில் உள்ள கிராமப்புறத்



2008 ஜனவரி 24]

திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.25,000/- நிதி வழங்கப்பட்டு, திருப்பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு திருப்பணி வேலைகள் துவங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**76—**

## மராமத்துப் பணிகள்

**வினா எண் 34575—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் கோவில் தெப்பக்குளத்தினைத் தூர் வாரி, மராமத்து செய்து, தடுப்புச் சுவரும் படித்துறையும் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் அருள்மிகு உண்டுகோல் இராமசாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஒரு திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் சுமார் 2 ஏக்கர் பரப்பில் நல்ல நிலையில் நீர் நிரம்பிய நிலையில் உள்ளது. இத்திருக்குளத்தைத் தூர் வாரி மராமத்து செய்து தடுப்புச் சுவர் மற்றும் படிகள் கட்ட உத்தேசமாக ரூ.2 இலட்சம் செலவாகும். இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் இல்லாததால் இத்திருக்குளத்திற்கு தடுப்புச் சுவர் மற்றும் படிக்கட்டுகள் கட்ட இந்து சமய அறநிலையத் துறைமூலம் நடவடிக்கை எடுக்க இயலாது.

**77—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 34578—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் கோவிலுக்குக் கூடுதலாக கழிப்பறை, குளியலறை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் பயன்பாட்டிற்காக திருக்கோயிலுக்கு இடப்புறம் 200 அடி தூரத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியே ஆறு கழிப்பறைகளும் திருக்கோயிலுக்கு வலப்புறம் 100 அடி தூரத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித் தனியாக கழிப்பறைகளும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தலா ஒரு குளியலறையும் உள்ளன. திருக்கோயிலுக்கு பின்புறம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தலா 10 கழிப்பறைகள் விரைவில் கட்டப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**78—**

## கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 35828—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் கோட்டைமாரியம்மன் கோயில், ஈஸ்வரன் கோயிலைச் சுற்றியுள்ள சரபங்கா ஆறு அகழி மற்றும் கோயில்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் கோட்டைமாரியம்மன் கோயில், ஈஸ்வரன் திருக்கோயிலைச் சுற்றியுள்ள சரபங்கா ஆறு அகழி வருவாய்த் துறைக் கட்டுப்பாட்டில் உள்ளது. அகழி முற்றிலும்



2008 ஜனவரி 24]

தூர்ந்த நிலையில் உள்ளது. சரபங்கா ஆறு மற்றும் அகழி இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் இவற்றினை மாவட்ட நிர்வாகம்மூலம் மட்டுமே செப்பனிட இயலும். இத்திருக்கோயிலுக்கு கடந்த 12-9-1999-ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்ற 12 ஆண்டுகள் முடிவடையாத நிலையில் திருக்கோயிலைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**79—**

## மயானத்திற்கு சுற்றுச் சுவர்

**வினா எண் 31257—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டம், அமராவதி முஸ்லீம்கள் மயானத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், அமராவதி முஸ்லீம்கள் மயானத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட நிதியுதவி கோரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**80—**

## தர்காக்களைப் புனரமைத்தல்

**வினா எண் 32638—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி மற்றும் வேலூரிலுள்ள தர்காக்களைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், பரமத்தி மற்றும் வேலூர் தொகுதியிலுள்ள வக்ஃபு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2008 ஜனவரி 24

81—

### தளப் பணிகள்

**வினா எண் 2886—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை துறைமுகத்தில் கப்பல் பழுது பார்க்கும் தளப் பணிகள் எப்பொழுது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சென்னை துறைமுகத்தில் கப்பல்களைப் பழுதுபார்ப்பதற்கான தளம் கட்டுவதற்குத் தேவையான நிலம் மற்றும் நீர்பரப்பு இல்லாத காரணத்தினால் இத்திட்டம் சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தால் கைவிடப்பட்டுவிட்டது.

82—

### சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 12437—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு ஆத்தூரில் சமூக நலத் துறையின்மூலம் இயங்கும் மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளி பயிற்சி மையத்திற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் சுற்றுச் சுவர் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

புதியதாக துவக்கப்பட்ட கணினிப் பயிற்சி மற்றும் மின் பணி பயிற்சிக்கென தேவையான பயிற்சி உபகரணங்கள் ரூ.30,000/- அளவில் 2005-2006 ஆம் ஆண்டில் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு ஆத்தூர் அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்திற்கு சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ரூ.10 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

83—

### அதிக பாரம் ஏற்றுவதற்குத் தடை

**வினா எண் 16177—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடுகளை வண்டியில் பூட்டி அதிக பாரம் ஏற்றுவதை அரசு தடை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மாடுகளை வண்டியில் பூட்டி அதிக பாரம் ஏற்றுவதைத் தடைசெய்யும் பொருட்டு இம்மாநிலத்தில் மாவட்டந்தோறும் பிராணிகள் வதைத் தடுப்பு நலச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சங்கத்தின் தலைவராக பொறுப்பு ஏற்று பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் சட்டம் 1960-ன்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) எழாது.

84—

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 20876—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, நொச்சலூர், மேல்வயலாம்பூர், மேல்செவலாம்பாடி, தென்பாளை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நொச்சலூர், மேல்வயலாம்பூர், மேல்செவலாம்பாடி மற்றும் தென்பாளை ஆகிய கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை

குறைவாக உள்ளதால் மேற்படி கிராமங்களுக்கு அருகில் செயல்படும் கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

**85—**

## கால்நடை கிளை மருத்துவமனைகள்

**வினா எண் 23733—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, திடுமல், சித்தம்பூண்டி ஊராட்சி கொண்டரசம்பாளையத்தில் கால்நடை கிளை மருத்துவமனைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திடுமல் மற்றும் கொண்டரசம்பாளையம் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு நல்லூர் கால்நடை மருந்தகம்மூலம் சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகளே போதுமானதாகக் கருதப்படுவதால் நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த சித்தம்பூண்டி ஊராட்சியில் கொண்டரசம்பாளையம் கிராமத்தில் தற்போது கால்நடை கிளை நிலையம் அமைக்க வாய்ப்பு இல்லை. மேலும் திடுமல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவங்க அரசு முடிவெடுத்து அரசாணை (நிலை) எண் 136, கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள் 29-8-2007 ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழாது.

**86—**

## தீவனங்கள் உற்பத்தி மையம்

**வினா எண் 32300—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மானாமதுரையில் கால்நடை தீவனங்கள் உற்பத்தி மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் உள்ள பண்ணைகளிலுள்ள கால்நடைகளுக்கு மட்டும் தீவனம் ஆவின் மற்றும் கோழி விரிவாக்க நிலையம்மூலம் வாங்கப்படுகிறது. பொதுமக்கள் பலன் பெறும் வகையில் விருதுநகர் கூட்டுறவு மையம் மற்றும் தனியார் தீவன உற்பத்தி மையங்கள்மூலம் போதிய தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, மானாமதுரையில் கால்நடை தீவன உற்பத்தி மையம் துவங்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

**87—**

## கூடுதல் மருத்துவர்கள்

**வினா எண் 32301—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதல் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை கால்நடை மருந்தகத்திற்கு நியமனம் செய்யப்பட்ட கால்நடை உதவி மருத்துவர் 9-8-2007 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். மேற்படி மருந்தகத்திற்குக் கூடுதல் கால்நடை மருத்துவர்களை நியமனம் செய்ய செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2008 ஜனவரி 24

88—

## கோழிப் பண்ணை

**வினா எண் 33609—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பூவந்தி, பொட்டப்பாளையம் பகுதியில் கோழிப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை பேரூராட்சி, பூவந்தி, பொட்டப்பாளையம் பகுதிகளில் கோழிப் பண்ணை அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

89—

## காடைகள் வளர்த்தல்

**வினா எண் 34600—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் காடைகள் வளர்ப்பதை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

காடைகள் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்களில் ஒன்றாக உள்ளதால், காடைகள் வளர்ப்பதை ஊக்குவிக்க, காடைகள் வளர்ப்பதற்கும் மற்றும் விளம்பரம் செய்வதற்கும் வனவிலங்கு அதிகாரிகளிடம் அனுமதி பெற கால்நடை பராமரிப்புத் துறையினரால் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 24]

90—

## கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்

**வினா எண் 34622—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம், ஜம்னாமரத்தூர், சேத்பட் ஒன்றியங்களில் மாதந்தோறும் கால்நடை முகாம் நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 175, கால்நடை பராமரிப்பு பால் வளம் மற்றும் மீன்வளத் துறை, நாள்: 6-10-2006-ன் வழி 385 ஊராட்சி ஒன்றியங்களில் மாதம் ஒரு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்தில் கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம், ஜம்னாமரத்தூர், சேத்பட் ஒன்றியங்களும் அடங்கும்.

91—

## கால்நடை துணை மருத்துவமனை

**வினா எண் 34814—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி ஊசாம்பாடி, சீலப்பந்தல் இனம் காரியந்தல் ஆகிய ஊராட்சிகள் கருந்துவாம்பாடி கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஊசாம்பாடி கிராமத்தில் இருந்து 1½ கி.மீ. தூரத்திற்குள் மல்லவாடி கால்நடை மருந்தகம் அமைந்துள்ளது. மேலும் மல்லவாடி கால்நடை மருந்தகம்மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகள் போதுமானதாக கருதப்படுவதாலும்

[2008 ஜனவரி 24

கலசப்பாக்கம் தொகுதி, திருவண்ணாமலை மாவட்டம் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தினைச் சார்ந்த ஊசாம்பாடி, சீலப்பந்தல், இனம் காரியந்தல் மற்றும் கருத்துவாம்பாடி முதலான கிராமங்களில் கால்நடை கிளை நிலையம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**92—**

**மாட்டுப் பண்ணை**

**வினா எண் 34838—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் மாட்டுப் பண்ணை, ஆட்டுப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது சிவகங்கை மாவட்டத்தில் செயல்பட்டுவரும் அரசு பண்ணையே மக்களின் தேவைகளை பூர்த்திசெய்ய போதுமானதாக உள்ளது. ஏற்கெனவே சிவகங்கை மாவட்டத்தில் செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணை இயங்கிவருவதால், அதே மாவட்டத்தில் உள்ள மானாமதுரையில் மற்றொரு மாட்டுப் பண்ணை, ஆட்டுப் பண்ணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழாது.

**93—**

**நிரந்தர மருத்துவர் நியமனம்**

**வினா எண் 39649—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பெரியகண்ணனூர் கால்நடை மருத்துவமனையில் நிரந்தர மருத்துவர்களைப் பணியமர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 27-7-2007 முதல் கால்நடை உதவி மருத்துவர் பதவி நிரப்பப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

**94—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 11721—திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, குன்னூர், கோத்தகிரி, கீழ்கோத்தகிரியிலுள்ள பழங்குடியினருக்கு சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரி, கீழ்கோத்தகிரி பழங்குடியினர் குடியிருப்பில் 37 பழங்குடியினர் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். கீழ்கோத்தகிரியில் புல எண் 224/4-ல் 2.14 ஏக்கர் நிலம் "கோத்தர் நத்தம்" என கிராமக் கணக்கில் உள்ளது. இந்த நிலத்தில் மாதர் சங்கக் கட்டடம் அமைந்துள்ள பகுதியினை ஒட்டி காலியாக உள்ள இடத்தில் பழங்குடியினர்களுக்கு ஊராட்சியின்மூலம் 2007-2008 ஆம் நிதி ஆண்டில் சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**95—**

**மீன் அங்காடி**

**வினா எண் 29936—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில் மீன் அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சியில், மீன்வளத் துறைமூலம் மீன் அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. கொள்முதல் செய்து விற்பனை செய்யுமளவிற்கு சாத்தியக்கூறுகள் இல்லாததால், இலாபகரமாகவும் அமையாது.

**96—**

## மிதவைக்கூடு மீன் வளர்ப்புத் திட்டம்

**வினா எண் 37627—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, பக்கிங்ஹாம் கால்வாய் பகுதிகளில் மிதவைக் கூடு மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

1. பக்கிங்ஹாம் கால்வாய் தொடர்ச்சியாக இன்றி ஆங்காங்கு அடைபட்டுள்ளது.

2. இக்கால்வாயில் உவர்நீர் மட்டுமே ஆதாரமாக உள்ளது.

3. இக்கால்வாயில் போதிய ஆழமில்லாத காரணத்தால் நகர்புற கழிவுகளினால் மாசுபட்டு மீன்வளர்ப்பிற்கு உகந்ததாக இல்லாததாலும், மிதவைக் கூடுகள் அமைத்து மீன்வளர்க்கும் வழிவகை இல்லை.

**97—**

## கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதி

**வினா எண் 22483—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், கோட்டைமேடு பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தை அங்கீகரித்து அனுமதி வழங்க அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, கஞ்சநாய்க்கன்பட்டி கிராமம், கோட்டைமேடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் முறையாகப் பதிவு செய்யப்பட்டு (எஸ்.எம்.டி. 929) 31-07-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

**98—**

## பால் உற்பத்தி

**வினா எண் 26653—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் பால் உற்பத்தியைப் பெருக்க சிறப்புத் திட்டம் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதியில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக மத்திய அரசு நிதி உதவியின்கீழ் STEP (Support Training Employment Programme) திட்டத்தின்படி சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் Stainless Steel கேன்கள் வழங்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியை அதிகரிக்க இதுவரை 24 சுய உதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளன. அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மொத்த பால் குளிர்விப்பான்கள் நிறுவ மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம், நிதி உதவி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**99—**

## உணவுப் பூங்கா

**வினா எண் 37616—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் பால் பொருட்களைத் தயாரித்து வழங்கும் 'உணவுப் பூங்கா' துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் பால் பொருட்களைத் தயாரித்து வழங்கும் 'உணவுப் பூங்கா' துவங்குவதற்கு அரசிடம் ஏதும் செயற்குறிப்பு இல்லை.

**100—**

### விற்பனை நிலையம்

**வினா எண் 34579—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கதர், கதர் கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. இராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரையில் கதர், கதர் கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் ஏதும் மீண்டும் துவக்கும் உத்தேசம் அரசிடம் இல்லை.

மானாமதுரையில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த கதரங்காடி தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், இவ்வலகில் தினசரி விற்பனை இல்லாத நிலையில் தீபாவளி சிறப்பு விற்பனைக் காலத்தில் மட்டுமே விற்பனை நடைபெற்று வந்த நிலையிலும் இவ்வலகு செயல்பட்டு வந்த கட்டடத்தினை காலி செய்து உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்த நிலையில் அலகினை செயல்படுத்த குறைந்த வாடைக்கு வேறு கட்டடம் கிடைக்காத நிலையில் இக்கதரங்காடி சிவகங்கை கதரங்காடியுடன் 14-5-2003-ல் இணைக்கப்பட்டது. எனினும் 2003 ஆம் ஆண்டு முதல் தீபாவளி சிறப்பு விற்பனைக் காலத்தில் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் தற்காலிக கதர் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மானாமதுரையில் வாரிய கட்டடம் ஏதும் இல்லாத நிலையில், அலகினை மீண்டும் ஆரம்பித்து இலாபகரமாகச் செயல்படுத்திட வாய்ப்பு இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



2008 ஜனவரி 24]

## பட்டியல் 5

**1—**

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 11882—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில், கம்பத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையம் சொந்தக் கட்டடத்தில் செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கம்பம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட வருவாய் துறைமூலம் உத்தமபுரம் கிராமம், கோம்பை ரோடு, கம்பம் நகரில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2007-2008-ம் ஆண்டிற்கான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கான மானியக்கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், கம்பம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குக் கட்டடம் கட்டித்தரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், மதிப்பீடுகள் பொதுப் பணித் துறையிடம் பெறப்பட்டுள்ளது. எனவே, கம்பம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு விரைவில் சொந்தக் கட்டடம் கட்டித்தரப்படும்.

**2—**

### குடியிருப்பு வசதி

**வினா எண் 14649—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய கட்டடமும், காவலர்களுக்குக் குடியிருப்பும் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. உரிய தருணத்தில் நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும்.*

**3—**

### தீயணைப்பு நிலையம்

**வினா எண் 25756—திரு. க.ப. வேலுமணி:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பேரூர் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூரைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் 2 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இந்நிலையங்களிலுள்ள ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியின் தீ அபாயங்களைச் சமாளிக்க இயலும் என்பதால் இங்கு புதியதாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**4—**

### கிராமியக் கலைஞர்கள்

**வினா எண் 29679—திரு. என். மாலைராஜா:** *மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தில் பொதுக் குழுவில் தமிழக கிராமியக் கலைஞர்கள் உறுப்பினர்களாவதற்கு அரசு ஆவன செய்யுமா?*



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் பொதுக் குழுவில் தமிழக கிராமியக் கலைஞர்கள் உறுப்பினர்களாக அரசால் நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.*

*தற்போது வில்லிசைக் கலைஞர் கலைமாமணி கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகம் அவர்கள் மன்றத்தின் பொதுக் குழுவிலும் செயற்குழுவிலும் அரசு நியமன உறுப்பினராக இருந்து வருகின்றார். மேலும், கலைமாமணிகள் திரு. புஷ்பவனம் குப்புசாமி, டாக்டர் விசயலக்குமி நவநீத கிருட்டிணன், கவிஞர் முத்துக்கூத்தன் மற்றும் திரு. அமல்ராஜ் ஆகியோரும் மன்றத்தின் முந்தைய பொதுக் குழுவில் உறுப்பினர்களாக அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனவே தகுதி பெற்ற நாட்டுப்புறக் கலைஞர்கள் மன்றத்தில் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால், இக்கேள்வி எழவில்லை.*

**5—**

### குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு

**வினா எண் 3767—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லம்பட்டி ஊராட்சி புதூர் பகுதி, மூங்கில்பாடி ஊராட்சி, கொல்லம்பட்டி ஊராட்சி கருமலைகாடு முதல்-புதூர் வரை, நாரணம்பாளையம் ஊராட்சி, நிக்கோலஸ்வீடு முதல்—மெய்யப்பன்வீடு வரை மேல்நிலைத்தொட்டி முதல் அம்மாசிவீடு வரை, அண்ணாநகர் கோவிந்தன் வீடு—ருக்மணி வீடுவரை குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்ய அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், கொல்லம்பட்டி ஊராட்சி புதூர் பகுதி, மூங்கில்பாடி ஊராட்சி,*

[2008 ஜனவரி 24

கருமலைகாடு முதல் புதூர் வரை, நாரணம்பாளையம் ஊராட்சி நிக்கோலஸ் வீடு முதல் மெய்யப்பன் வீடு வரை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி முதல், அம்மாசி வீடு வரை அண்ணாநகர் கோவிந்தன் வீடு முதல், ருக்மணி வீடு வரை குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்ய சுமார் 2000 மீட்டர் செய்ய வேண்டும். இதற்கு ரூ.1.80 லட்சம் செலவாகும். இந்த குடிநீர் விஸ்தரிப்பு செய்தால் 500 குடும்பங்கள் பயன் பெறுவார்கள். ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப் பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**6—**

## மின் மோட்டார் வசதி

**வினா எண் 3777—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நாரணம்பாளையம் ஊராட்சி மையப்பாளையம் மோலிக்காட்டு திட்டில் உள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் சாமிநாய்க்கன்பட்டு ஊராட்சி ஆதி திராவிடர் பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணற்றுக்கும் மின் மோட்டார் அமைத்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், நாரணம்பாளையம் ஊராட்சி மோலிக்காட்டு திட்டில் உள்ள ஆழ்துளைக் கிணறு மற்றும் சாமிநாய்க்கன்பட்டி ஊராட்சி ஆதி திராவிடர் பகுதியிலுள்ள ஆழ்துளைக் கிணற்றுக்கும் மின் மோட்டார் அமைக்க ரூ.2.50 இலட்சம் மதிப்பீடாகும். இந்த மின் மோட்டார் பொருத்துவதால் சுமார் 1,500 மக்கள் பயன் பெறுவார்கள். ஊராட்சி நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப் பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணியினை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**7—**

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 3779—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், காடையாம்பட்டி ஒன்றியம், செம்மாண்டப்பட்டி கிராமம், புது தெரு பெரியபட்டி பழைய காட்டு வளவு, கொங்குப்பட்டி கிராமம், ஒண்டிமாமரத்துப்பட்டி சுமைதாங்கி காலனி பகுதி, ஊர்கவுண்டனூர் பகுதி ஆகிய இடங்களில் சிறிய குடிநீர்த் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செம்மாண்டப்பட்டி ஊராட்சியில் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்மூலம் தேவையான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கொங்குப்பட்டி கிராமம், ஒண்டிமாமரத்துப்பட்டி சுமைதாங்கி காலனி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் பைப்லைன் விஸ்தரிப்பு செய்து சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கொங்குப்பட்டி ஊராட்சி ஊர்க்கவுண்டனூர் பகுதிக்கு சிறுமின் விசைப் பம்புகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**8—**

## குடிநீர் வசதி

**வினா எண் 6662—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மழையூர் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிக்குக் குடிநீர் வசதி மற்றும் நம்பரை கிராமத்திற்கு குடிநீர் குழாய் அமைத்து தண்ணீர் பிரச்சினையைப் போக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியத்தைச் சேர்ந்த மழையூர் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் தொடக்கப் பள்ளிக்கு 2004-2005-ம் நிதியாண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக 1000 லிட்டர் கொள்ளளவுள்ள சிறு மின்விசைப் பம்பு அமைத்து புதிய மின் இணைப்பு பெற்று குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், திமிரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நம்பரை கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைநீர்த்தேக்கத் தொட்டிக்கு 2 ஆழ்துளைக் கிணறுகள்மூலமாக இரண்டு 5 எச்பி சப்மெர்சிபிள் மோட்டார் பம்பு மூலமாக குடிநீர் தினமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**9—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 6999—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், நெமிலி கிராமம் என். காஞ்சிபுரம் காலனிக்கு அன்னை இந்திரா தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, குண்டடம் வட்டாரம், எல்லப்பாளையம் ஊராட்சிக்குட்பட்டது என்.காஞ்சிபுரம் கிராமம் ஆகும். 2007-2008 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தில் எல்லப்பாளையம் ஊராட்சிக்கு 2 வீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு வீடும் மற்றும் பிற இனத்தவருக்கு ஒரு வீடும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வீடுகள் கட்டித் தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**10—**

## தெருவிளக்கு வசதி

**வினா எண் 11036—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சியில் முனியப்பன் கோயில் வட்டம், சோரையான்காடு, துக்காகவுண்டர் வட்டம், ருக்குமணி காட்டு வளவு ஆகிய பகுதிகளில் தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், நாரணம்பாளையம் ஊராட்சி, முனியப்பன் கோயில் வட்டம், சோரையான்காடு, துக்காகவுண்டர் வட்டம், ருக்குமணி காட்டு வளவு ஆகிய பகுதிகளில் 10 தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும். இதன்மூலம் சுமார் 100 குடும்பங்கள் பயன்பெறும். இதற்கு ரூ.1.25 இலட்சம் செலவாகும். ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப் பெற்றதும், முன்னுரிமை அடிப்படையில் இப்பணியினை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஜனவரி 24

11—

**குடிநீர் வசதி**

**வினா எண் 12786—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் கிராமம், போயர் காலனி, ஜம்பை கிராமம், நல்லிபாளையம் தெற்காட்டுபுதூர், ஜம்பை 8-வது வார்டு, கவுந்தப்பாடி கிராமம், பொம்மன்பட்டி, அட்டவணைப்புதூர் கிராமம், முகாசிபுதூர் கிராமம் ஆகிய இடங்களில் குடிநீர்த் தொட்டி கட்டி, குடிநீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அட்டவணைப்புதூர் கிராமம், போயர் காலனி கவுந்தப்பாடி கிராமம், பொம்மன்பட்டி, அட்டவணைப்புதூர் கிராமம், முகாசிபுதூர் கிராமம் ஆகிய இடங்களில் குடிநீர்த் தொட்டி கட்டி, குடிநீர் வசதி செய்து கொடுக்க பொம்மன்பட்டி கிராமத்தில் ரூ.1,00,000/- மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு பவானி ஆற்று நீர் ஏற்றப்பட்டு, குடிநீர் விநியோகம் சீராக நல்ல முறையில் தடையின்றி செய்யப்படுகிறது.

12—

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 14200—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காங்கேயம் தொகுதி, காங்கேயம் வட்டம், எல்லப்பாளையம் புதூர் ஊராட்சியில் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, குண்டடம் வட்டாரம், எல்லப்பாளையம் ஊராட்சிக்கு 2007-2008 ஆம் ஆண்டில் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தில் 2 ஊராட்சிகளுக்கு 2 வீடுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒரு வீடும் மற்றும் பிற இனத்தவருக்கு ஒரு வீடும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்கான பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தொகுப்பு வீடுகள் கட்டித்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

13—

**ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம்**

**வினா எண் 38556—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)*. செய்யாறு தொகுதி, செய்யாறில் அனைத்து வசதிகளைக் கொண்ட துணை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும், கண்காணிக்கவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்வமைப்பு ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்கள்மூலம் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எனவே, துணை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகம் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

14—

## நிரந்தரக் கட்டடம்

**வினா எண் 5098—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருவெண்காட்டில் இரண்டு நியாயவிலைக் கடைகளுக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், திருவெண்காடு நியாயவிலைக் கடை 1 மற்றும் 2 ஆகிய இரு கூட்டுறவுக் கடைகளும், தற்போது கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் உள்ள கலைக்கப்பட்ட திருவெண்காடு விவசாய சேவை கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. எனவே, தற்போது கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் மேற்குறித்த இரு கடைகளுக்கும் நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

## கட்டட வசதி

**வினா எண் 5283—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிபட்டி ஊராட்சி வெற்றிலைக்காரத் தெரு மகளிர் சுயஉதவிக் குழுவிற்கான நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியேரிப்பட்டி ஊராட்சியில் வெற்றிலைக்காரத் தெரு, மகளிர் சுய உதவிக் குழுவால் நியாயவிலைக் கடை ஏதும் நடத்தப்படவில்லை. வெற்றிலைக்காரத் தெரு பகுதியில் மொத்தம் 107 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே உள்ளனர். இவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் ஒரு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தாரமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள நியாயவிலைக் கடைகளிலும், பி. காளிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள நியாயவிலைக் கடைகளிலும் பெற்று வருகின்றனர். மேலும் வெற்றிலைக்காரத்தெரு பகுதியில் 107 குடும்ப அட்டைகளே உள்ளதால், புதிய பகுதி நேர நியாயவிலைக் கடை அமைக்க கோரிக்கை ஏதும் வரப்பெறவில்லை என்பதாலும், இப்பகுதியில் நியாயவிலைக் கடை ஏதுமில்லை என்பதாலும் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

16—

## நியாயவிலைக் கடை

**வினா எண் 10303—திரு. கோ. அரி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாலங்காடு ஒன்றியம், பொன்னாங்குளம் கிராமத்தில் நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், லட்சுமி விலாசபுரம் கிராமத்தில் 200 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாய விலைக் கடை இயங்கி வருகிறது. தற்போது புதிய நியாயவிலைக் கடைகள் அமைக்கக் கோரும் பொன்னாங்குளம் கிராமத்தில் 92 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தற்போது நடைமுறையில் உள்ள

[2008 ஜனவரி 24

அரசாணையின்படி புதிய பகுதி நேரக் கடை அமைப்பதற்கு குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். ஆனால், இந்நேர்வில், 92 குடும்ப அட்டைகளே உள்ளதால், பொன்னாங்குளம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க இயலாத நிலை உள்ளது.

**17—**

### கட்டட வசதி

**வினா எண் 12779—திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருங்காபுரி தொகுதி, டிசுக்காம்பட்டி கிராமத்திலும் பெருமாம்பட்டியிலும் நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மருங்காபுரி தொகுதி டிசுக்காம்பட்டி கிராமத்தில் டிசுக்காம்பட்டி நியாயவிலைக் கடை, கவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் திருநெல்லிப்பட்டி நியாயவிலைக் கடையின் ஒரு பகுதிநேர நியாயவிலைக் கடையாக செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடை பகுதிநேர கடையாக உள்ளதால் வாடகை இன்றி இலவசக் கட்டடத்தில் செயல்படுகிறது. மேலும், இப்பகுதிநேர கடைக்கு கட்டடம் கட்ட நிலம் ஏதும் இல்லை.

பெருமாள்பட்டி கிராமத்தில் 163 குடும்ப அட்டைதாரர்கள் பண்ணாம்கொம்பு கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டு வாரம் ஒருமுறை இக்கிராமத்தில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பெருமாள்பட்டி கிராமத்தில் பண்ணப்பட்டி ஊராட்சி மூலம் 2005-2006 ஆம் ஆண்டிற்குரிய சம்பூர்ண கிராமின் ரோஸ்கார் யோஜனா திட்டம் பகுதி 2 திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டப்பட்டு தற்போது காவல்காரன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெற்று விரைவில் புதிய கட்டடத்தில் நியாயவிலைக் கடை நடத்தப்படும்.



2008 ஜனவரி 24]

எனவே, மேற்கண்டவாறு சுக்காம்பட்டி கிராமத்தில் உள்ள பகுதி நேர கடை இலவசக் கட்டடத்திலும், பெருமாம்பட்டி கிராமத்தில் உள்ள பகுதிநேரக் கடைக்கு புதிய கட்டடமும் கட்டப்பட்டுள்ளதால் இக்கடைகளுக்கு கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**18—**

### சொந்தக் கட்டடம்

**வினா எண் 20389—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, பொறையூர் நியாயவிலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சி, பொறையூரில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படவில்லை. பொறையூரில் உள்ள 90 குடும்ப அட்டைகளும், மேல் பொறையூரில் உள்ள 55 குடும்ப அட்டைகளும், மேட்டூர் மகளிர் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடை மகளிர் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, பொறையூரில் நியாயவிலைக் கடை ஏதும் செயல்படாத நிலையில், சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**19—**

### வெற்றிலை ஆராய்ச்சி மையம்

**வினா எண் 20442—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் வெற்றிலை பயிரிடுவதற்கான தட்ப வெப்ப நிலை முழுமையாக இல்லை. சுற்றுச்சூழலை மாற்றம் செய்து செயற்கைக் கூடாரங்கள் அமைத்து இப்பயிரை பயிரிடுவதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டாலும் இவ்வகையான ஆராய்ச்சி நிலையம் இத்தொகுதியில் அமைக்க ஏற்படும் நிதிச்சுமையானது ஆராய்ச்சியால் பெறக்கூடிய முடிவுகளை கருத்தில் கொள்ளும்போது பயனற்றதாகிவிடும். தட்ப வெப்ப நிலையை மையமாக வைத்து பயிர் வளர்ப்பதற்கும் ஏற்ற சுற்றுப்புறச்சூழலை உருவாக்குவதற்கும் பசுமைக்குடில்கள் அமைக்க வேண்டும். இவ்வகையான பசுமைக்குடில்கள் அமைப்பதற்கு அதிக முதலீடு தேவை. சிறுகமணியில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் பசுமைக்குடில்கள் அமைத்து அவற்றில் வெற்றிலை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ச்சி செய்யலாம்.

(ஆ) ஆகவே, மண்வளம் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் மாற்றம் செய்வதற்கான "Adaptive Trials" என்ற முறையைப் பயன்படுத்தி துல்லிய பண்ணையம் மற்றும் களர் உவர் நிலச் சீர்திருத்தத் திட்டத்தின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி மண்வளப் பெருக்கம் செய்தல் மற்றும் சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்ப் பாசனம் வாயிலாக சுற்றுச்சூழலை மாற்றி அமைத்தல் ஆகிய வழிமுறைகளைப் பின்பற்றி வெற்றிலை சாகுபடி செய்யும் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயுமாறு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**20—**

## விவசாயிகளை ஊக்கப்படுத்துதல்

**வினா எண் 28870—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மக்காச்சோளம், கம்பு போன்ற தானிய பயிர் வகைகளை அதிக அளவில் பயிர் செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மக்காச்சோளத்திற்கு நல்ல இலாபகரமான சந்தை விலை கிடைத்தமையால் 2006-2007 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மக்காச்சோளம் 3 இலட்சம் ஹெக்டேர் வரை சாகுபடி செய்யப்பட்டது. இது (இயல்பான) பொதுவான 2 இலட்சம் ஹெக்டேர் சாகுபடியை விட 1 இலட்சம் கூடுதல் ஆகும்.

1. 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஐசோபாம் மக்காச்சோள சாகுபடித் திட்டத்தின்மூலம் மக்காச்சோள சாகுபடியை அதிகப்படுத்த சுமார் ரூ.97.395 இலட்சம் அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சுமார் ரூ. 5.687 இலட்சம் கோவை மாவட்டத்திற்கு ஒதுக்கப்படவுள்ளது.
2. தமிழ்நாடு நீர்வள, நிலவள (T.N.I.AM WARM) திட்டத்தில் குறிப்பாக பாலாறு குறுவடி நிலப்பகுதிகளிலும் மக்காச்சோளம் சுமார் ரூ. 12.265 இலட்சத்திற்கு செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்பட உள்ளன.
3. தற்போது கம்பு பயிரை ஊக்குவிக்க அரசுத் துறையில் எந்தவிதமான திட்டங்களும் இல்லை.

**21—**

## விவசாய ஏற்றுமதி மண்டலம்

**வினா எண் 39543—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் விவசாய ஏற்றுமதி மண்டலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே விவசாய ஏற்றுமதி மண்டலம் இம்மாவட்டத்தை உள்ளடக்கி கடலூரில் அமைக்கப்பட்டு வருகிறது.

[2008 ஜனவரி 24

(ஆ) சிவகங்கை மாவட்டம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர் மாவட்டங்களை உள்ளடக்கி, கடலூரில் முந்திரி வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூ.17.00 கோடி செலவில் அமைப்பதற்கு மத்திய அரசின் அங்கீகாரம் பெறப்பட்டு, இதற்கான செயலாக்க ஒப்பந்தம் மத்திய அரசு நிறுவனமான அபீடா-வுடன் தமிழக அரசு கடந்த 12-4-2006 அன்று செய்து கொண்டுள்ளது. இந்த ஏற்றுமதி மண்டலத்தினை அமைக்க சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்கின்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இந்நிறுவனம் மாநில அரசு நிறுவனமான டிட்கோவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு டிட்கோ நிதி பங்களிப்புடன் விவசாய ஏற்றுமதி மண்டலம் அமைத்து வருகின்றது.

**22—**

**தண்ணீர் வசதி**

**வினா எண் 8353—திரு. மு. பரஞ்ஜோதி:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருச்சி மாவட்டத்தில் புதிய கட்டளைக் கால்வாய்க்குத் தண்ணீர் திறந்துவிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*புதிய கட்டளைக் கால்வாயில் 2006-2007 ஆம் பாசன ஆண்டில் 21-7-2006-லிருந்து தண்ணீர் விடப்பட்டது. 2007-2008 ஆம் பாசன ஆண்டில் 24-7-2007-லிருந்து தண்ணீர் விடப்பட்டு வருகிறது.*

**23—**

**கால்வாய் சீரமைப்பு**

**வினா எண் 18728—திரு. ஜா. ஜான் ஜோசப்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2008 ஜனவரி 24]

*விளவங்கோடு தொகுதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயைத் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

விளவங்கோடு தொகுதி, நெய்யாறு இடது கரை பிரதானக் கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய்கள் அனைத்திலும் தூர்வாரும் பணிகள் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டில், பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**24—**

**பேருந்து வசதி**

**வினா எண் 1252—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*முகையூர் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூரிலிருந்து தணிக்கலாம்பட்டு, கிங்கினிவாடி சத்திரம், பரனூர், மேலக்கொண்டூர் அருமலை, புதூர் வழியாக அரசு பேருந்து இயக்க ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலூரிலிருந்து தணிக்கலாம்பட்டு, கிங்கினிவாடி சத்திரம், பரனூர், மேலக்கொண்டூர், புதூர் மற்றும் அருமலை வரையிலான தூரம் 17.1 கி.மீ. ஆகும். தணிக்கலாம்பட்டு-மேலக்கொண்டூர் வரையிலான 3.2 கி.மீ. இடைப்பட்ட பகுதி இதுவரை பேருந்து வசதி பெறாத பகுதி என்பதாகும். திருக்கோயிலூரிலிருந்து அரகண்டநல்லூர் வழியாக தணிக்கலாம்பட்டு கூட்டுச்சாலை வரையிலும் நகரப் பேருந்து வசதி உள்ளது. திருக்கோயிலூரிலிருந்து அருமலை, மேலக்கொண்டூர், பரனூர் வரையிலும் அரசு நகரப் பேருந்து தடம் எண். 17 மூலமாக நான்கு நடைகளில் பேருந்து வசதி உள்ளது.

[2008 ஜனவரி 24

25—

## நகரப் பேருந்துகள்

**வினா எண் 1283—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, கல்பாக்கம் பணிமனையிலிருந்து கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கல்பாக்கம் பணிமனை செங்கல்பட்டு நகரிலிருந்து 34.0-வது கி.மீ.-ல் அமைந்துள்ளது. இப்பணிமனையிலிருந்து தற்போது புறநகர் பேருந்துகள் 54-ம், நகரப் பேருந்து 1-ம் இயக்கப்பட்டு வருகின்றன.

இயக்கப்படும் நகரத்தடம் கீழ்க்கண்டவாறு இயக்கப்படுகிறது.

| வ.எண் | தடம் | நடைகள் |
|---|---|---|
| 1 | கல்பாக்கம்—நெடுமரம் | 4 நடைகள் |
| 2 | கல்பாக்கம்—செய்யூர் (வழி) கடலூர் கிராமம், கூவத்தூர் | 6 நடைகள் |

எனினும், இத்தடத்தில் பயணிகள் அடர்வு 44.3 விழுக்காடு மட்டுமே உள்ளது. இப்பணிமனையிலிருந்து இயக்கப்படும் 54 புறநகர் பேருந்துகள் மூலம் கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் தேவையான அளவு போக்குவரத்து வசதி பெறுவதுடன், கல்பாக்கத்திலிருந்து முக்கிய நகரங்களுக்கு நேரடி பேருந்து வசதி உள்ளது. குறிப்பிட்டு கோரிக்கை வைத்தால் ஆய்வுக்குப்பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

26—

## புதிய பேருந்துகள்

**வினா எண் 2145—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, கல்பாக்கம் போக்குவரத்து பணிமனைகளில் இயக்கப்படும் பழைய பேருந்துகளை நீக்கி புதிய பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு பணிமனையிலிருந்து 100 பேருந்துகளும், கல்பாக்கம் பணிமனையிலிருந்து 58 பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. செங்கல்பட்டு மற்றும் கல்பாக்கம் பணிமனைகளுக்கு 47 புதிய பேருந்துகளும், 11 பழைய பேருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன.

27—

## நகரப் பேருந்து

**வினா எண் 2462—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-பொன்விளைந்தகளத்தூர்-ஆனூர்-கோரப்பட்டி-சாலூர் வழியாக திருக்கழுக்குன்றம் மற்றும் திருக்கழுக்குன்றம்-அமிஞ்சிக்கரை-லட்டூர் வரையிலும் புதிய நகரப் பேருந்து இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையின்படி செங்கல்பட்டு-பொன்விளைந்தகளத்தூர்-ஆனூர்-கோரப்பட்டி - சாலூர் - திருக்கழுக்குன்றம்-அமிஞ்சிக்கரை-லட்டூர் தடத்தின் நீளம் 41.8 கி.மீ. ஆகும். எனினும், கோரப்பட்டி தடத்திலுள்ள அனைத்து கிராமங்களுக்கும் பகுதி வாரியாக போதிய பேருந்து வசதி உள்ளது. தடநீளம் 35 கி.மீ.-க்கு மேற்பட்டிருப்பதால் கோரிக்கைத் தடத்தில் நகரப் பேருந்து இயக்க சாத்தியமில்லை.

28—

## பேருந்து வசதி

**வினா எண் 2484—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம்-நல்லாத்தூர்-நெடும்பூர்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு-சென்னைக்கு மற்றும் நெரும்பூர்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு வரை வீட்டிலாபுரம் வழியாக கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கல்பாக்கம் பணிமனையிலிருந்து சமீப காலத்தில் புதிய தடங்கள் இயக்கப்படவில்லை.

தற்பொழுது, வேறு தடங்களில் இயக்கப்படும் கல்பாக்கம்-நல்லாத்தூர்-நெடும்பூர்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு-தடத்தின் பேருந்துகளை மீண்டும் மேற்கண்ட தடத்தில் இயக்கினால் தற்பொழுது பயன்பெறும் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணை வர வாய்ப்புள்ளது.

எனவே, புதிய தடங்கள் இயக்கும்பொழுது மேற்கண்ட தடத்தில் இயக்கப்பட்ட நடைகளை மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**29—**

## ஓட்டுநர் உரிமம்

**வினா எண் 2906—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஓட்டுநர் உரிமம் பெற வயது வரம்பு என்ன?*

*(ஆ) ஓட்டுநர் உரிமம் பெறாமல் இரண்டு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களைத் தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டம், 1988, பிரிவு 4-ன்படி ஓட்டுநர் உரிமம் பெற சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

(ஆ) ஓட்டுநர் உரிமம் பெறாமல் இரண்டு சக்கர வாகனங்கள் ஓட்டுபவர்களைத் தடுக்க போக்குவரத்துத் துறையினால் சிறப்பு தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நீதிமன்றங்களின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்றத்தால் குற்றங்களின் தன்மைக்கேற்ப அபராதமும், தண்டனையும் அளிக்கப்படுகிறது.



2008 ஜனவரி 24]

**30—**

## நகரப் பேருந்து

**வினா எண் 3589—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செங்கல்பட்டு-சோகண்டி-வீரக்குப்பம்-எடையூர் வழியாக திருக்கழுக்குன்றம் வரை இயக்கிய டி.27 நகரப் பேருந்து மீண்டும் இயக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் டி. 27 நகரப் பேருந்து செங்கல்பட்டு - கிளாப்பாக்கம் (வழி) சோகண்டி, வீரக்குப்பம், எடையூர் மற்றும் திருக்கழுக்குன்றம் தடத்தில் 20-08-2006 முதல் தினசரி நான்கு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

**31—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 4188—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செங்கல்பட்டு-நேரு நகர்-மேலேரிப்பாக்கம்-சோகண்டி-வீரக்குப்பம்-எடையூர்—திருக்கழுக்குன்றம் வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு-நேரு நகர்-மேலேரிப்பாக்கம்-சோகண்டி-வீரக்குப்பம்-எடையூர்-திருக்கழுக்குன்றம் தடத்தின் நீளம் 17.3 கி.மீ. ஆகும். இதில் செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றம் செல்லும் பிரதான சாலையில் செங்கல்பட்டிலிருந்து 3.0 கி.மீ.-ல் நேரு நகர் அமைந்துள்ளது. இந்த நகர் பிரதான சாலையிலேயே அமைந்துள்ளது. நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. அதேபோல் மேலேரிப்பாக்கத்திலிருந்து

திருக்கழுக்குன்றம் வரையிலான சோகண்டி-வீரக்குப்பம்-எடையூர் வழியான 12.4 கி.மீ. சாலை செங்கல்பட்டிலிருந்து திருக்கழுக்குன்றத்திற்கு இயக்கப்படும் நகரத்தடம் டி27-இன்மூலம் போக்குவரத்து வசதி பெறுகிறது. இத்தடத்தில் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், கீழவேடு கிராமம் மேலேரிப்பாக்கத்திலிருந்து 0.4. கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. எனவே, இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் போக்குவரத்து வசதி பெற்றுள்ளன.

**32—**

## பேருந்து வசதி

**வினா எண் 4578—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், திருப்புவனம் TNCSC டிப்போவில் இருந்து கொந்தகை வழியாக எழுவணிக்கு அரசுப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்புவனத்திலிருந்து சிலைமான், கொந்தகை, மேலவெள்ளூர், அம்பலத்தாடி, மாங்குடிகலியாந்தூர், நயினார்பேட்டை, எஸ். நாங்கூர் மற்றும் அமுக்குளம் வழியாக எழுவணி தடத்தின் தூரம் 45.5 கி.மீ. மேற்குறிப்பிட்ட தடத்தின் தூரம் வரையறை தூரத்தைவிட அதிகமாக இருப்பதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது. தற்போது எழுவணி கிராம மக்கள் எழுவணியிலிருந்து 2.0 கி.மீ. தூரத்தில் உள்ள உண்டுருமிகிடாக்குளத்திலிருந்து தெப்பக்குளத்திற்கு இயக்கப்படும் 4 தனி நடைகள் பேருந்து வசதியினைப் பயன்படுத்தி வருகிறார்கள். இப்பேருந்தினை எழுவணிக்கே நீட்டித்தாலும் தடத் தூரம் 35 கி.மீ-க்கு மேல் உள்ளது. எனவே, கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள தடத்தில் நகரப் பேருந்து இயக்க வழிவகை இல்லை.



**33—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 5293—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழியிலிருந்து வடரெங்கம் வரை கூடுதலாக ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*சீர்காழியிலிருந்து வடரெங்கத்துக்கு கொண்டல், பனங்காட்டாங்குடி வழியாக இரண்டு நகர பேருந்துகள்மூலம் தினசரி 36 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கோரிக்கைக்கு ஏற்ப பள்ளி மாணவர்கள் பயன்பாட்டுக்காக காலையில் ஒரு பேருந்துமூலம் 2 நடைகள் நவம்பர் 2006 இறுதி முதல் இயக்கப்படுகின்றன.*

**34—**

## பேருந்து வசதி

**வினா எண் 5687—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், உச்சனேந்தல் கிராமத்திற்கு திருப்புவனத்திலிருந்து புதிய பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருப்புவனத்திலிருந்து வயல்சேரி, பழையனூர், கிடாக்குளி, வீரனேந்தல், வாகைக்குளம் வழியாக உச்சனேந்தலுக்கு தடத்தின் தூரம் 19.9 கி.மீ. இப்பகுதியில் பழையனூரிலிருந்து உச்சனேந்தல் வரை 6.0 கி.மீ. தூரம் பெரிய பேருந்து இயங்காத பகுதியாகும்.

[2008 ஜனவரி 24

இப்பகுதியில் சுமார் 2.0 கி.மீ. தூரம் பெரிய பேருந்து இயக்க இயலாத அளவில் மண்சாலையாக உள்ளது. பழையனூரில் ஊருக்குள் உள்ள சாலையில் பேருந்து திரும்ப இயலாத அளவிற்கு இடையூறாக ஒரு கோவிலும், மின் கம்பமும், ஒரு வீடும் அமைந்துள்ளது. இதனால் திருப்புவனத்திலிருந்து உச்சனேந்தலுக்கு புதிய தடம் இயக்க இயலாது. தற்போது இப்பகுதி மக்கள் திருப்புவனம்-உளுத்திமடை (வழி) பழையனூர், உச்சனேந்தல் என்ற தடத்தில் இயக்கப்படும் தனியார் மினி பேருந்தினையும் பழையனூர் வரை இயக்கப்படும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், பேருந்தின் 20 தனி நடைகளையும் பயன்படுத்தி வருகிறார்கள்.

**35—**

**பேருந்து வசதி**

**வினா எண் 5770—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை கோட்டம் 3-ஐச் சார்ந்த தடம் எண் 575 (கன்னியாகுமரி-திருச்செந்தூர்) தடம் எண் 573 (நாகர்கோயில்-திருச்செந்தூர்) பேருந்துகளை இடிந்தகரை, தோமையார்புரம் விஜயாபதி, தில்லைநகர், கூத்தன்குடி ஆகிய மீனவ கிராமங்கள் வழியாக இயக்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மதுரை நாகர்கோவில் வட்டாரம்மூலம் இயக்கப்படும் தடம் எண் 575 (கன்னியாகுமரி-திருச்செந்தூர்), தடம் எண் 573 (நாகர்கோவில்-திருச்செந்தூர்) ஆகிய வழித்தடப் பேருந்துகள் தற்போது இடிந்தகரை, தோமையார்புரம், விஜயாபதி, தில்லைநகர், கூத்தன்குழி ஆகிய கிராமங்கள் வழியாக இயக்கப்பட்டு வருகின்றன.

**36—**

**பேருந்து வசதி**

**வினா எண் 5771—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை—வள்ளியூர் இடையே இயக்கப்பட்ட தடம் எண் 10 நகரப் பேருந்தை மீண்டும் இயக்கவும், மற்றும் அடங்கார்குளம் ஊராட்சி மேலகிளாக்குளம் கிராமத்திற்கு பேருந்து வசதி ஏற்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திசையன்விளை வள்ளியூர் இடையே இயக்கப்பட்ட நகரப் பேருந்து வழித்தட எண் 10 பயணிகள் அடர்வின்றி மிகக் குறைந்த வருவாயுடன் இயக்கப்பட்டதால் நிறுத்தப்பட்டுவிட்டது. அழகனேரியிலிருந்து பிரிந்து செல்லும் 2.2 கி.மீ தூரத்தில் மேலக்கிளாக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமம் வரை உள்ள சாலை, பேருந்து இயக்க தகுதி இல்லாத நிலையில் இருப்பதால் மேலக்கிளாக்குளத்திற்கு பேருந்து வசதி செய்து தர இயலாத நிலை உள்ளது.

**37—**

**பேருந்து வசதி**

**வினா எண் 6375—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மேலக்கால், விக்கிரமங்கலம் வழியாக மேலப்பெருமாள்பட்டி செல்லும் பேருந்தை சக்கரப்பநாயக்கனூர், அய்யம்பட்டி, கோழிப்பட்டி வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேலப்பெருமாள்பட்டி கிராமத்திலிருந்து 0.7 கி.மீ. தூரத்தில் சக்கரப்பநாயக்கனூரும் அங்கிருந்து 0.6 கி.மீ தூரத்தில் அய்யம்பட்டி கிராமமும் அமைந்துள்ளது. மேலப்பெருமாள்பட்டியிலிருந்து இதே சாலையில் 0.5 கி.மீ.-ல் பிரிந்து 1.2 கி.மீ தூரத்தில் கோழிப்பட்டி கிராமம் அமைந்துள்ளது. மேலப்பெருமாள்பட்டியில் மேற்படி கிராமங்களுக்குச் செல்லும் அணுகுசாலை திருப்பம் மிகவும்

குறுகலாக பேருந்து திருப்புவதற்கு இயலாதவாறு உள்ளது. மேலும், கோழிப்பட்டி கிராமத்தில் பேருந்து ஊருக்குள் சென்று திரும்ப போதுமான இடவசதியில்லை.

**38—**

### பேருந்து வசதி

**வினா எண் 6394—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி வழியாக தாழையூத்துப்பட்டிக்கு சென்று கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, செல்லம்பட்டி, பொறுப்புமேட்டுப்பட்டி வழியாக தாழையூத்துப்பட்டிக்கு 8 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. பொறுப்புமேட்டுப்பட்டியிலிருந்து தாழையூத்துப்பட்டி வரையுள்ள சாலை பேருந்து இயக்க இயலாத அளவிற்கு மோசமாக இருந்ததால் தற்காலிகமாக பொறுப்புமேட்டுப்பட்டி வரை இயக்கப்பட்டு வருகிறது. தற்போது சாலை செப்பனிடப்பட்டிருப்பினும் பொறுப்புமேட்டுப்பட்டியில் உள்ள இரண்டு வீடுகளின் கூரை ஓடுகள் பேருந்து இயக்கத்திற்கு இடையூறாக இருப்பதால் பேருந்தை தாழையூத்துப்பட்டி வரை இயக்க இயலாத நிலை உள்ளது.

**39—**

### பேருந்து வசதி

**வினா எண் 6551—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*இராதாபுரம் தொகுதி, பெருங்குடி, பெருங்காளியாபுரம் கிராமங்கள் இடிந்தகரையில் குருநில தில்லை வனந்தோப்பு, ஆவுடையான்புரம், கூத்தன்குழி, நல்லாடி ஆகிய பகுதிகளுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?*





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெருங்குடி, பெருங்காளியாபுரம் கிராமங்கள் வழியாக தடம் எண் 15எ என்ற வழித்தடப் பேருந்துமூலம் 6 தனிநடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. கூடன்குளம், வைராவிகிணறு, இடிந்தகரை, விஜயாபதி, ஆவுடையான்புரம், கூத்தன்குழி, நல்லாடிக்கு தடம் எண் 560, 570, 572, 573 பேருந்துகள்மூலம் தினசரி 28 தனிநடைகளில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. தில்லை நகர் பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. என்ற குறுகிய தூரத்தில் தில்லை வனந்தோப்பு அமைந்திருப்பதாலும் இச்சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாதிருப்பதாலும் தில்லை வனந்தோப்பிற்கு பேருந்து வசதி செய்து தர இயலாத நிலை உள்ளது.

**40—**

### பேருந்து வசதி

**வினா எண் 6997—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— 5

*(அ) காங்கேயம் தொகுதி, முகாசிப்பிடாரியூர் ஊராட்சியிலுள்ள நெசவாளர் காலனியிலிருந்து நகருக்குச் செல்ல பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்துகள் வழித்தட எண் சி4 மூலம் 4 தனிநடைகள், சி14 மூலம் 6 தனிநடைகள், சி12 மூலம் 2 தனிநடைகள், 11டி மூலம் 2 தனிநடைகள் என 14 தனிநடைகள் 1010 நெசவாளர் காலனி வழியே சென்னிமலைக்கு இயக்கப்படுகிறது.*

**41—**

### சிறப்பு பேருந்துகள்

**வினா எண் 7046—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், திசையன் விளையில் இருந்து ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை நாலுமாவடிக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கிட நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை திசையன்விளையிலிருந்து நாலுமாவடிக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் நாகர்கோவிலிலிருந்து பணகுடி, வள்ளியூர், மன்னார்புரம், இட்டமொழி, சாத்தான்குளம், நாசரேத், இடையன்விளை வழியாக ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை 6 பேருந்துகள் சிறப்புப் பேருந்துகளாக நாலுமாவடிக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

**42—**

## பேருந்து வசதி

**வினா எண் 8104—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திம்மானமத்தூர் வழியாக ஏ.கே. மோட்டூருக்கு பேருந்து விடவும் பொம்மிகுப்பம் ஊராட்சி ஜோன்றம்பள்ளி-A. காந்திபுரம் வரை பேருந்துகளை நீட்டித்து இயக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூரிலிருந்து திம்மானமத்தூர் வழியாக ஏ.கே. மோட்டூருக்கு டி31 மற்றும் டி23 நகரத் தடப் பேருந்துகள்மூலம் தலா 4 நடைகள் வீதம் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பத்தூர்-ஜோன்றாம்பள்ளிக்கு இயக்கப்பட்டு வரும் டி28 நகரத் தடப் பேருந்து 14-08-2006 முதல் காந்தி நகர் வரை நீட்டித்து தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.



2008 ஜனவரி 24]

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 8106—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், திருப்பத்தூர் வெங்காயபள்ளி வழியாக பால்னாங்குப்பம் வரை நிறுத்தி விட்ட அரசுப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூரிலிருந்து வெங்காயபள்ளி வழியாக பால்னாங்குப்பம் வரை டி27 நகரத்தடப் பேருந்துமூலம் தினசரி 3 நடைகள் மீண்டும் 14-8-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

**44—**

## பணிமனை இணைப்பு

**வினா எண் 9141—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளையிலுள்ள அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனையினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மதுரை கோட்டம்-II, திருநெல்வேலியுடன் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு போக்குவரத்துக் கழகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு மதுரை கோட்டமாக செயல்படத் தொடங்கிய பின்னர் நிர்வாக வசதிகளுக்காக பணிமனைகளின் எண்ணிக்கையைச் சீர்படுத்தும் பொருட்டு பணியாளர்களின் விருப்புரிமை பெறப்பட்டு திசையன்விளை கிளையினை நாகர்கோவில் வட்டாரத்துடன் இணைத்து

செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திருநெல்வேலி வட்டாரத்தில் 13 கிளைகளுடனும், நாகர்கோவில் வட்டாரத்தில் 11 கிளைகளுடனும், மதுரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக செயல்பாடுகள் நல்ல நிலையில் இருப்பதால் திசையன்விளை கிளையை மீண்டும் திருநெல்வேலியுடன் இணைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**45—**

## பேருந்து வசதி

**வினா எண் 9142—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், வள்ளியூரிலிருந்து ஆத்தங்கரைப் பள்ளிவாசலுக்கு தெற்கு கள்ளிக்குளம், சமூகரெங்கபுரம், கோட்டைக்கருங்குளம் கஸ்தூரிரெங்கபுரம், சிதம்பராபுரம், திருவம்பியாபுரம் பார்க்கனேரி வழியாக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

புதிதாக பேருந்து வசதி செய்ய கேட்கப்பட்டுள்ள வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் பேருந்து வசதியற்ற பகுதி எதுவும் இல்லை. அவ்வழித்தடத்தில் அமைந்துள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் கீழ்க்கண்டவாறு பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது. வள்ளியூரிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பிரதான சாலையில் உள்ள தெற்கு கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், கோட்டைக்கருங்குளம் ஆகிய ஊர்களுக்கு நாளொன்றுக்கு 60-க்கும் மேற்பட்ட சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது. கஸ்தூரிரெங்கபுரத்திற்கு 6 சுற்றுக்களும் சிதம்பராபுரம், திருவம்பியாபுரம், பார்க்கனேரி வழியாக ஆற்றங்கரை பள்ளிவாசல் வரை நாளொன்றுக்கு 16 சுற்றுக்களும் பேருந்து வசதி உள்ளது. மேலும், வள்ளியூரிலிருந்து ஆற்றங்கரை பள்ளிவாசலுக்கு தெற்கு கள்ளிகுளம், சமூகரெங்கபுரம், கோட்டைக்கருங்குளம், கஸ்தூரிரெங்கபுரம், சிதம்பராபுரம், திருவம்பியாபுரம், பார்க்கனேரி வழியாக தனியார் பேருந்துகள்மூலம் 6 சுற்றுக்கள் பேருந்து வசதி உள்ளது.



**46—**

## பேருந்து வசதி

**வினா எண் 9403-அ—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில், சுசீந்திரம், மயிலாடி, அஞ்சுகிராமம், தெற்கு கருங்குளம், பழவூர், சிதம்பராபுரம், மாறன்குளம், கைக்குளம், ஆரல்வாய்மொழி, நக்கனேரி, பரமேஸ்வரபுரம் வழியாக திசையன்விளைக்கு பேருந்து இயக்கிட, இராதாபுரத்திற்கு புறநகர் பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வினாவில் கோரப்பட்டுள்ள வழித்தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். இவ்வழித்தடத்தில் பரமேஸ்வரபுரம், இராதாபுரம், திசையன்விளை நீங்கலாக அனைத்து பகுதிகளுக்கும் நகர பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தடம் எண் 560 மற்றும் 561 வழித்தடங்கள் மூலம் சுசீந்திரம், அஞ்சுகிராமம் வழியாக திசையன்விளைக்கு நேரடி பேருந்து வசதி உள்ளது. நாகர்கோவிலிலிருந்து ஆரல்வாய்மொழி, காவல்கிணறு கிராமம், வடக்கன்குளம், மருதப்பபுரம் வழியாக இராதாபுரத்திற்கு புறநகர் வழித்தட எண் 515 எஃப் மூலம் தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்து இயக்கங்கள் மூலம் வினாவில் கோரப்பட்டுள்ள அனைத்து பகுதிகளுக்கும் பகுதி பகுதியாக போதிய பேருந்து வசதிகள் உள்ளதால் வினாவில் கோரப்பட்டுள்ள சுற்று வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**47—**

## நகரப் பேருந்து

**வினா எண் 9548—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கிளாதரி கிராமத்திற்கு கருப்பாயூரணி, வரிச்சியூர், மீனாட்சிபுரம், கட்டையன்பட்டி ஆகிய கிராமங்களின் வழியாக ஒரு நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை பெரியார் நிலையம் — கிளாதரி வழி கருப்பாயூரணி, வரிச்சியூர், மீனாட்சிபுரம், கட்டையன்பட்டி தடத்தில் அனைத்துப் பகுதிகளும் போக்குவரத்து வசதி பெற்றுள்ள பகுதிகளாகும். இத் தடத்தின் ஒரு முனையான கிளாதரி மேலூரிலிருந்து இயக்கப்படும் நகரப் பேருந்து வசதிகள் உள்ளன. கிளாதரியிலிருந்தும் கிளாதரி வழியாகவும் மேலூருக்கு இயக்கப்படும் 10 தனி நடைகள் வசதிகளைப் பயன்படுத்தி கட்டையன்பட்டிக்கோ அல்லது திருவாதவூருக்கோ வந்து அங்கிருந்து மதுரை பெரியார் நிலையம் செல்லும் வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். கிளாதரியிலிருந்து தனி பேருந்து இயக்குமளவிற்கு போதிய அளவு பயணிகள் இருக்கும் வாய்ப்பு இல்லையென்பதால் மேற்குறிப்பிட்ட புதிய நகர் தடம் இயக்கும் தேவை எழாது.

(ஆ) கேள்வி எழாது.

**48—**

## புதிய பேருந்து

**வினா எண் 9656—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பரக்கலக்கோட்டை-சிரமேல்குடி-கன்னியாகுறிச்சி-திருமக்கோட்டை—மன்னார்குடிக்கு புதிய பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தில் பகுதி வாரியாக பட்டுக்கோட்டையிலிருந்து பரக்கலக்கோட்டை, பரக்கலக்கோட்டை-சிரமேல்குடி மற்றும் சிரமேல்குடி-கன்னியாக்குறிச்சி, கன்னியாக்குறிச்சி-திருமக்கோட்டை, திருமக்கோட்டை-மன்னார்குடி வரையும் மொத்தம் 148 நடைகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தால் (கும்பகோணம் லிமிடெட்) இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்குறிப்பிட்ட தடங்களில்



2008 ஜனவரி 24]

தனியார் பேருந்துகளும் 60 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே குறிப்பிட்ட ஊர்களுக்கு போதுமான நடைகள் இயக்கப்பட்டு பேருந்து வசதி உள்ளதால், புதிய வழித்தடப் பேருந்து இயக்க அவசியமில்லை.

**49—**

## விரைவுப் பேருந்து வசதி

**வினா எண் 10244—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, தைலாவரம், அட்டை கம்பெனி ஆகிய இடங்களில் டி 60 எல்.எஸ்.எஸ். விரைவுப் பேருந்து நின்று செல்ல நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதியின் தைலாவரம், அட்டை கம்பெனி ஆகிய இடங்கள் தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் தாம்பரம்-செங்கல்பட்டு இடையே அமைந்துள்ளது.

தற்போது தாம்பரம்-செங்கல்பட்டு டி60 நகரத்தடத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், காஞ்சிபுரம் மண்டலம், 13 சாதாரண பேருந்துகள் மூலம் 115 நடைகளும், 8 எல்.எஸ்.எஸ். பேருந்துகள் மூலம் 128 நடைகளுமாக மொத்தம் 243 நடைகள் தினசரி இயக்குகிறது. பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க சமீபத்தில் டி60 எல்.எஸ்.எஸ். பேருந்துகள் அட்டை கம்பெனி பேருந்து நிறுத்தத்தில் பயணியரை ஏற்றி இறக்கிச் செல்ல உத்தரவு வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் தைலாவரம் பேருந்து நிறுத்தம் பொத்தேரி (SRM Polytechnic) பேருந்து நிறுத்தத்திற்கு மிக அருகில் உள்ளது. எனவே எல்.எஸ்.எஸ். பேருந்துகள் தைலாவரம் பேருந்து நிறுத்தத்தில் நின்று சென்றால் நேரடி பயணியர் பாதிக்கப்படுவர். எனவே தைலாவரம் பேருந்து நிறுத்தத்தில் டி60 எல்.எஸ்.எஸ். பேருந்துகள் நிறுத்துவதற்கு சாத்தியமில்லை. எனினும் தைலாவரம் பேருந்து நிறுத்தத்தில் அனைத்து சாதாரணப் பேருந்துகளும் நின்று செல்கின்றன. மேலும் டி60 தடத்தில் விரைவு பேருந்துகள் எதுவும் காஞ்சிபுரம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படவில்லை.

[2008 ஜனவரி 24

**50—**

**பேருந்து வசதி**

**வினா எண் 10249—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, ம்றைமலை நகர்-செங்கல்பட்டு டி 60 பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி, மறைமலைநகர்-செங்கல்பட்டு தடத்தில் நகரத்தடம் எண் டி60 மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. மேற்கண்ட 4 நடைகள் மீண்டும் 04-09-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

**51—**

**பேருந்து வசதி**

**வினா எண் 10294—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நர்கர்கோவில்-இந்துக்கல்லூரி-என்.ஜி.ஓ.காலனி-கோவில்விளை-ராமன்புதூர்-பொட்டல்-கேசவன்புதூர்-பிலாவிளை-செம்பொன்கரை காலனி-புதூர்ஈத்தாமொழி-பெரியக்காடு ஆகிய பகுதிகளில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

19-09-2006 முதல் புதிய பேருந்து தடம் எண் 36 என் மூலம் நாளொன்றிற்கு 12 நடைகள் அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து புதூருக்கும் (வழி கோட்டார், செட்டிகுளம், இந்து கல்லூரி, இருளப்பபுரம், வைராவிளை, பொட்டல், நங்கூரன்பிலாவிளை, நரியன்விளை) மற்றும் நாகர்கோவிலிலிருந்து புதூருக்கு (வழி இந்து கல்லூரி, என்.ஜி.ஓ. காலனி, பிள்ளையார்புரம், நங்கூரன்பிலாவிளை, நரியன்விளை) 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்போது மேற்படி நடைகள் புதூரிலிருந்து ஈத்தாமொழிக்கு நீட்டித்து இயக்கப்பட்டு வருகின்றன.



2008 ஜனவரி 24]

**52—**

**பேருந்து வசதி**

**வினா எண் 10296—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில்-சூரங்குடி-பொட்டல்விலக்கு-கண்டப்பற்றுவிளை-பிலாவிளை-நெடுவிளை-நரையன்விளை-புதூர்-பொழிக்கரை-கேசவன்புத்தன் துறை ஆகிய பகுதிகளில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

19-09-2006 முதல் புதிய பேருந்து தடம் என் 38எம்/என் மூலம் நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து கேசவன்புத்தன்துறைக்கு (வழி பொட்டல் விலக்கு சந்திப்பு-கண்டப்பற்றுவிளை-பிலாவிளை-நெடுவிளை-நரையன்விளை-புதூர்-பொழிக்கரை) 6 நடைகளும் மற்றும் நாகர்கோவிலிலிருந்து பொழிக்கரைக்கு (வழி பொட்டல் சந்திப்பு, நங்கூரன்பிலாவிளை, கேசவன்புதூர், செம்பொன்கரைபாலம், கேசவன்புத்தன்துறை) 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**53—**

**பேருந்து வசதி**

**வினா எண் 13059—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, முகாசிபுதூர் கிராமம், நாகலூர் வழியாக பவானி-குருவரெட்டியூர், பூனாச்சி, ஜம்பை கிராமம், பவானியிலிருந்து சின்னியம்பாளையம் மற்றும் பெரியவடமலைபாளையத்தில் பள்ளி மாணவ-மாணவிகளின் வசதிக்காக பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் இயங்கும் பேருந்தின் வழித்தடம் மாற்றி நாகனூர் வழியே இயக்கப்பட்டால் தற்சமயம் பயன்பெறும் முளியனூர் வெங்கட்ரெட்டியூர் பொதுமக்கள் பாதிப்படைய நேரிடும் என்பதால் நாகனூர் வழியாக பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லாத நிலை உள்ளது. ஜம்பை கிராமம், சின்னியம்பாளையம் கிராமம் வழியாக காலை பள்ளி நேரத்திற்கு தடம் எண் கே4 இயங்கிக் கொண்டிருந்ததுடன் 18-8-2006 முதல் தடம் எண் ஏ3ஏ நகரப் பேருந்தும், மாலையில் பள்ளி நேரத்திற்கும் மற்றும் பெரியவடமலைபாளையம் வழியாக காலை/மாலை பள்ளி நேரத்திற்கு 4 தனிநடைகள் தடம் எண் ஏ3ஏ நகரப் பேருந்து 7-6-2006 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**54—**

## பேருந்து வசதி

**வினா எண் 13333—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையிலிருந்து வெள்ளைத்தாதன்பட்டி, கரியாம்பட்டி, மன்னவராதி, சிரகம்பட்டி, கவிராயபுரம் வழியாக மீண்டும் பேருந்து வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் வட்டாரம்மூலம் வத்தலக்குண்டு-தொடைரோடு வழி நிலக்கோட்டை, வெள்ளைத்தாதன்பட்டி, கரியாம்பட்டி, மன்னவராதி, சிரகம்பட்டி, கவிராயபுரம், நரியூத்து, அம்மாபட்டி வழியாக வத்தலக்குண்டில் காலை 8.26—க்கும் மாலை 5.40—க்கும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.



2008 ஜனவரி 24]

**55—**

## சிற்றுந்து வசதி

**வினா எண் 13972—திரு. வி.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, வெள்ளம்புத்தூர் கிராமத்திற்கு சிற்றுந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, வெள்ளம்புத்தூர் கிராமத்திற்கு தற்சமயம் இரண்டு சிற்றுந்துகள் இயங்கி வருகின்றன.

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 14059—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதி, தெள்ளார், தேசூரில் இருந்து மாவட்டத் தலைநகர் திருவண்ணாமலைக்கு நேரடிப் பேருந்து இயக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தெள்ளார்-சேத்துப்பட்டு (வழி) தேசூர் என தினசரி W 11 நகரத் தடப் பேருந்துமூலம் 7 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து மூலம் சேத்பட் வந்தடைந்தால் அங்கிருந்து திருவண்ணாமலைக்கு 22 புறநகர்ப் பேருந்துகளின் மூலம் இயக்கப்படும் 66 நடைகளில் எளிதாக திருவண்ணாமலை செல்லலாம்.

[2008 ஜனவரி 24

57—

## பேருந்து நீட்டிப்பு

**வினா எண் 18541—திருமதி பெ. மைலாம்பாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து அங்கம்பாக்கம் செல்லும் T6 பேருந்து நேரடியாக காஞ்சிபுரம் செல்ல நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் பணிமனையிலிருந்து இயக்கப்படும் நகரத் தடம் எண் டி.6 கீழ்க்கண்டவாறு இயக்கப்படுகிறது:—

| | | நடைகள் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம்-மல்லிப்பூ காலனி வழி அங்கம்பாக்கம் | 2 |
| 2. | வாலாஜாபாத்-மல்லிப்பூ காலனி வழி அங்கம்பாக்கம் | 6 |
| 3. | காஞ்சிபுரம்-கொவளவேடு | 2 |
| 4. | வாலாஜாபாத்-கொவளவேடு | 4 |
| 5. | வாலாஜாபாத்-நந்தாநல்லூர் | 4 |
| 6. | வாலாஜாபாத்-தொள்ளாழி | 4 |
| 7. | வாலாஜாபாத்-ஏலக்காய்மங்கலம் | 4 |

தற்பொழுது அங்கம்பாக்கத்திலிருந்து வாலாஜாபாத்திற்கு 4 நடைகளும், காஞ்சிபுரத்திற்கு 2 நடைகளும் இயக்கப்படுகின்றன. கோரியவாறு தடங்களை மாற்றி இயக்கினால் பிற ஊர்மக்கள் பாதிக்கப்படுவார்கள்.



2008 ஜனவரி 24]

58—

## பேருந்து வசதி

**வினா எண் 27473—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கீழப்பகுதி ஊராட்சி, குளித்தலையிலிருந்து மாமரத்துப்பட்டி வரை இயக்கப்படும் நகரப் பேருந்தை தரகம்பட்டி வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)குளித்தலையிலிருந்து—மாமரத்துப்பட்டி வரை நகரப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. ஆனால், குளித்தலையிலிருந்து மாமரத்துப்பட்டி வழியாக தரகம்பட்டி, கடவூர், மணப்பாறை ஆகிய ஊர்களுக்கு மூன்று புறநகரப் பேருந்துகள் மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும் குளித்தலைதரகம்பட்டி (வழி) பஞ்சப்பட்டி, மாமரத்துப்பட்டி, மைலம்பட்டி வழித்தடத்தின் நீளம் 38.0 கி.மீ. ஆகும். எனவே, இவ்வழித்தட நீளம் நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான 35.0 கி.மீ.க்கு மேல் உள்ளதால் அரசு ஆணைப்படி பேருந்து வசதி பெற்ற இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

59—

## புதிய பேருந்து

**வினா எண் 32815—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி நகர் - கோவை வரையும் (உடுமலை, பல்லடம், கோவை) பொள்ளாச்சியிலிருந்து - திருச்செந்தூர் வரையும் புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை திருமூர்த்திநகர்-கோவை (வழி) உடுமலை, பல்லடம் ஒரு சுற்று வழித்தடமாகும். எனவே இச்சுற்று வழித்தடத்தில் நேரடிப் பயணிகள் பயணம் செய்திட விரும்பமாட்டார்கள் என்பதால் இச்சுற்று வழித்தடத்தில் பேருந்து இயக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் இவ்வழித்தடத்தில் கீழ்க்கண்டவாறு பகுதிவாரியாக போதுமான பேருந்துகள் இயங்கி வருகின்றன:

திருமூர்த்திநகர்-உடுமலை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட், பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் 8, தினசரி 66 நடைகளும், உடுமலை-திருப்பூர் (வழி) பல்லடம் கழக மற்றும் தனியார் பேருந்துகள் 41, தினசரி 214 நடைகளும், பல்லடம்-கோவை ஒவ்வொரு 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்தும் இயக்கப்பட்டு வருகிறது. பொள்ளாச்சி-திருச்செந்தூர் ஒரு நீண்ட தூர வழித்தடமாகும். இவ்வழித்தடத்தில் அரசு விரைவுப் பேருந்து ஒன்று பொது மக்களின் நலன் கருதி தினசரி 2 நடைகள் இயங்கி வருகின்றன.

**60—**

## பேருந்து வசதி

**வினா எண் 32875—திரு. வி.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரத்திலிருந்து காக்காகுப்பம், அருமலை, வீரசோழபுரம், ஆற்காடு வழியாக திருக்கோவிலூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரத்திலிருந்து காக்காகுப்பம், அருமலை, வீரசோழபுரம், ஆற்காடு வழியாக திருக்கோயிலூருக்கு ஒரு புறநகரப் பேருந்து 6-12-2006 முதல் தினசரி நான்கு நடைகள் இயக்கப்படுகின்றன.



2008 ஜனவரி 24]

**61—**

## நிழற்குடை

**வினா எண் 35520—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மற்றும் மதுரை நகரில் பயணிகள் நிழற்குடையின் பெயர் பலகையில் எண்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகரில் பயணிகளின் தேவைக்கேற்பவும், போக்குவரத்து காவல் துறையினரின் மாற்றங்களுக்கு உட்பட்டும், பேருந்துகள் நிற்கும் இடங்கள் அடிக்கடி மாறுதல் செய்யப்படுகின்றன. இவ்வாறு மாற்றப்படும்போது பேருந்து நிறுத்தங்களில் உள்ள நிழற்குடைகளில் வழித்தட எண்களை மாற்றி அமைக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை நகரில் உள்ள பயணிகள் நிழற்குடையில் 52 நிழற்குடைகள் போக்குவரத்துக் கழகத்தால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. அவற்றின் பக்கவாட்டுப் பகுதிகளில் எழுதப்பட்ட வழித்தட எண்களை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இரண்டு மாதங்களில் இப்பணிகள் செய்து முடிக்கப்படும்.

**62—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 21779—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பி.என்.பட்டி பேரூராட்சி, புதுக்காலனி பகுதியில் வீட்டு மனைப்பட்டா வழங்கப்படாத வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லை எனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய், நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டது. இத்திட்டம் அரசு ஆணை (நிலை) எண் 498, வருவாய்த் துறை, நாள் 5-9-2007-ன்படி 31-3-2008 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**63—**

## சுற்றுச் சுவர்

**வினா எண் 38396—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், ஒண்டிப்புதூர் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு தடுப்புச் சுவர், சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் சிங்காநல்லூரில் ஒரு திறந்தவெளிச் சிறை இயங்கி வருகிறது. அதன் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 100 ஆகும். அங்கு தற்போது உள்ள அடைப்பு 52 ஆகும். சிங்காநல்லூர் திறந்தவெளிச் சிறைக்கு ரூ.25.52 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர் கட்டுவதற்கு கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மைய அரசின் அங்கீகாரம் மற்றும் அரசாணைகள் பெறப்பட்டவுடன் பணிகள் தொடக்கப்பட்டு முடிக்கப்படும்.





**64—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 38412—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைச்சாலைகளில் போதுமான அளவில் அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் தேவையான அளவு அடிப்படை வசதிகளான இருப்பிடம், குடிநீர் வசதிகள், கழிவுநீர் வசதி ஆகியவைகளை ஏற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் அனைத்து சிறைகளில் உள்ள சிறை கட்டடங்களும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இதில் சிறைவாசிகள் தங்கும் இடங்களும் அடங்கும். சிறைகளில் உள்ள தண்ணீர் வசதிகள் மற்றும் கழிவு நீர் வசதிகளை மேம்படுத்திடவும், இத்திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ஆண்டு தோறும் சிறைக் கட்டடங்களை பராமரிப்பதற்கென்றும், தேவையான அளவு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அடிப்படை வசதிகள் பொதுப் பணித் துறைமூலம் நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**65—**

## நவீனப்படுத்துதல்

**வினா எண் 38047—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை நகரில் உள்ள மத்திய சிறைக்கு மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் சிறையில் உள்ள மருத்துவமனை கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. சிறைக்கதவுகள், ஜன்னல்கள் மற்றும் மேல் சாளரங்கள் ஆகியவைகளுக்கு கம்பிவலை அடிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள தொகுதிகள் மற்றும் சமையல் கூடம் ஆகியவைகளைப் புதுப்பிக்கும் பணி நிறைவுற்றுள்ளது. ஆண்டு தோறும் வழங்கப்படும் கட்டட பராமரிப்பு நிதியின் கீழும் மதுரை மத்திய சிறையில் உள்ள கட்டடங்கள், தண்ணீர் வசதிகள், கழிவு நீர் வசதிகள் ஆகியவை நல்ல முறையில் பராமரித்திட உரிய நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் 2006-07ஆம் ஆண்டிற்கு இச்சிறையில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்த ரூ. 19.50 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**66—**

## நவீன சமையல் கூடம்

**வினா எண் 38049—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை சிறைச்சாலையில் நவீன சமையல் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், சிவகங்கை நகரில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 20 ஆகும்.



2008 ஜனவரி 24]

அங்கு தற்போது 12 சிறைவாசிகள் மட்டுமே அடைக்கப்பட்டுள்ளனர். மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2003-04-ல் சிவகங்கையில் உள்ள கிளைச் சிறையில் உள்ள சமையல் கூடம் ரூ. 1 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டு சிறைவாசிகளுக்கு எரிவாயு மூலம் சமையல் செய்து வழங்கப்படுகிறது. மேலும், அவ்வப்போது தேவைப்படும் மராமத்துப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் செய்து தரப்படுகிறது.

**67—**

## கட்டட வசதி

**வினா எண் 38066—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் அமைத்திடவும் புதிய கட்டடம் கட்டவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சிவகங்கை வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் அமைத்திடவும் புதிய கட்டடம் கட்டவும் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**68—**

## சிமெண்ட் சாலை

**வினா எண் 2087—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம், ருத்ரகோட்டி கிராமம், திருக்கோயில் முன்பு, வடகடும்பாடி ஊராட்சி, நல்லான்பிள்ளை பெற்றான் கிராமத்தில், மேட்டுத்தெரு, கோயில் தெரு, மணமை ஊராட்சி, தர்காஸ் கிராமம் ஆகிய இடங்களில் உள்ள மண் சாலைகளை சிமெண்ட் சாலைகளாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம், பேரூராட்சிக்குட்பட்ட 8-வது வார்டு, ருத்ரகோட்டி கிராமம், சன்னதி தெரு, 295 மீட்டர் நீளமுள்ள மண்சாலையாக உள்ளது. மேற்படி மண்சாலை பேரூராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மண்சாலையை, தார்சாலையாக மாற்றி அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணியை சுற்றுலா மற்றும் கோயில் நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சிமெண்ட் சாலையாக மாற்றிட தேர்வு செய்யப்பட்டு, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**(ii) நல்லான்பிள்ளை பெற்றான் கிராமம்**

நல்லான்பிள்ளை பெற்றாள் கிராமச் சாலை 1/6 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இத்தார்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இச்சாலையை பாரத் நிர்மான் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**(iii) தக்காமேடு கிராமம்**

தக்காமேடு கிராமத்தில் மொத்தம் 15 குடும்பங்கள் உள்ளன. இங்கு சாலை வசதி ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வினா இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்ததல்ல. எனினும் ஊரக வளர்ச்சி துறையிடமிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

**69—**

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 7141—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் அருள்மிகு முருகன் கோவிலுக்கு சொந்தமான இடத்தினை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புலியூர் காட்டுச்சாகை கிராமத்தில் கீழ்க்கண்ட விவரப்படியான திருக்கோயில்கள் குழுக்கோயிலாக உள்ளன.

1 அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயில், புலியூர். (முருகன் கோயில்)

2 அருள்மிகு திருமூலநாத சாமி திருக்கோயில், புலியூர்

3 அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

4 அருள்மிகு அய்யனார் திருக்கோயில், புலியூர்காட்டுச்சாகை

5 அருள்மிகு முனீஸ்வரர் திருக்கோயில், புலியூர் காட்டுச்சாகை

6 அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புலியூர் காட்டுச்சாகை

7 அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், வாசவனம் குப்பம்

8 அருள்மிகு அய்யனார் திருக்கோயில், வாசவனம் குப்பம்

மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமாக 54.41 ஏக்கர் நிலங்களில் 24.74 ஏக்கர் நிலங்கள் குத்தகை சாகுபடியில் உள்ளது. 18.90 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பில் உள்ளது. 10.77 ஏக்கர் நிலங்கள் திருக்கோயில் வசம் காலியாக உள்ளது. ஆக்கிரமிப்பு நிலங்கள் 18.90 ஏக்கரில் நெல், முந்திரி, வாழை மற்றும் கரும்பு ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் சுமார் 30-க்கும் மேற்பட்டவர்கள் ஆக்கிரமிப்பு செய்து சாகுபடி செய்து வருகிறார்கள். இதைத்தவிர 6 நபர்கள் குடிசை கட்டிக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். எனவே மேற்படி நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களை சட்டபூர்வமாக அகற்றி அவற்றை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

[2008 ஜனவரி 24

70—

## கோயில் திருப்பணி

**வினா எண் 14104—திரு. மு. க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், மேலபாதி மற்றும் கஞ்சாநகரம் ஊராட்சியிலுள்ள சிவன்கோயிலை சீரமைத்து பராமரிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், கஞ்சாநகரம், அருள்மிகு காத்ரசுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் உபயதாரர்கள் மூலம் திருப்பணி வேலைகள் செய்து 10-9-2006 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

71—

## கோயிலுக்கு கூடுதல் வசதி

**வினா எண் 22582—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு மருதமலை திருக்கோயிலுக்குக் கூடுதல் கழிப்பிடம், குடிநீர் வசதி செய்யவும், படிக்கட்டுகளைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் மற்றும் வட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் உள்ள முக்கிய திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் துணை ஆணையர்/செயல் அலுவலர் மற்றும் அரசால் நியமனம் செய்யப்பட்ட அறங்காவலர் குழுவினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் தற்போது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக தலா 6 கழிவறைகளும், பெண்களுக்கு 1 குளியலறையும், ஆண்களுக்கு பொதுவான குளிக்குமிடமும் உள்ளன. இவை கட்டணமின்றி கழிப்பிட வசதியாக சேவார்த்திகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவை மகளிர் சுய உதவிக் குழுவினரால் சுகாதாரமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவை தவிர மேலும் கூடுதலாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தலா 8 கழிவறைகள், சுமார் ரூ.4.70 இலட்சம் செலவில் நவீன கழிப்பிட வசதியுடன் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு 24 மணி நேரமும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும், மலை அடிவாரத்தில் குடிநீரை வடிகட்டி சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கொடுத்திட மூன்று இயந்திரங்கள் நிறுவப்பட்டு போதிய அளவில் சிறுவாணி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஆழ்குழாய் கிணறு ஏற்படுத்தப்பட்டு அதிலிருந்தும் குடிநீர் பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இத்திருக்கோயிலின் படிக்கட்டுகளை சீரமைத்திட ரூ.76.00 இலட்சத்துக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முறைப்படி பணிகள் நடைபெற்று வருகின்றன.

72—

## கல்லூரிக்கு முதல்வர் நியமனம்

**வினா எண் 22913—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) பழனி தொகுதி, அருள்மிகு பழனி ஆண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கு நிரந்தர முதல்வரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு பழனியாண்டவர் பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கு அரசு விதிகளின்படி முதல்வர் நியமனம் செய்யப்பட்டு 9-3-2006 முதல் பணியாற்றி வருகிறார்.

**73—**

## திருக்கோயில் மருத்துவமனை

**வினா எண் 22[illegible]—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மருத்துவமனையை மக்களுக்கு பயன்படும் வகையில் நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மருத்துவமனையானது திருக்கோயில் நிதியின்மூலமாக சுமார் 34 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கு இலவசமாக சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இம்மருத்துவமனையானது நகரின் மைய் பகுதியான வேலவன் விடுதி வளாகத்திற்கு மாற்றியமைக்கப்பட்டு வெளி நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதிகப்படியான மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்.



2008 ஜனவரி 24]

**74—**

## பழனி மலைக் கடைகள்

**வினா எண் 22918—திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, பழனி மலையில் உள்ள அனைத்து கடைகளையும் கோவில் நிருவாகமே ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி மலைக்கோயிலில் உள்ள கடைகளை, திருக்கோயில் நிர்வாகம், அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேற்படி கடைகளை ஏற்று நடத்தக்கூடிய சாத்தியம் இல்லை.

**75—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 22925—திரு. வை. காவேரி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஆதிதிராவிடர் தெரு, அருள்மிகு அம்பாளாயி அம்மன் திருக்கோவில் பராமரிப்புப் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஆதிதிராவிடர் தெரு, அருள்மிகு அம்பாளாயி அம்மன் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதி திருக்கோயிலாகும். இதற்கு இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதி திருக்கோயில் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் 2004-2005 ஆம் நிதியாண்டில் ரூ.25,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திருக்கோயிலின் திருப்பணிக் குழு அங்கீகரித்து, மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, திருப்பணி வேலைகள் அனைத்தும் முடிவுற்றுள்ளது.

**76—**

## சாலை வசதி

**வினா எண் 22926—திரு. வை. காவேரி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி வட்டம், வெள்ளரி வெள்ளி கிராமம், பெரியக்காட்டு வளவு காலனி, மதுரை வீரன் கோவிலுக்கும், குடிநீர் கிணற்றுக்கும் இடையில் சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

எடப்பாடி வட்டம், வெள்ளரி வெள்ளி கிராமம், பெரியக்காட்டுவளவு காலனி, மதுரை வீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள வருவாயற்ற சிறிய திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயில் நத்தம் புறம்போக்கில் அமைந்துள்ளது. வெள்ளரி வெள்ளி கிராமம், ச.எண் 260/2ஏ-ல் ஏக்கர் 2.10 சென்ட் நத்தம்



2008 ஜனவரி 24]

புறம்போக்கு நிலம் ஆதிதிராவிடர் காலனிக்கென பட்டா வழங்கப்பட்டுள்ள நிலமாகும். இவ்விடத்தில்தான் திருக்கோயிலும், இதன் அருகே குடிநீர் கிணறும் அமைந்துள்ளது. திருக்கோயிலுக்கும் குடிநீர் கிணற்றுக்கும் இடையே சாலை அமைக்கக் கோரும் இடம் நத்தம் புறம்போக்கு நிலமும் ஆதிதிராவிடர் காலனிக்காக பட்டா வழங்கப்பட்ட நிலமாகும். எனவே மேற்படி திருக்கோயிலுக்கும் குடிநீர் கிணற்றுக்கும் இடையில் உள்ள நிலம் திருக்கோயிலுக்குச் சொந்தமில்லாத நிலமாக இருப்பதால் சாலை அமைக்க மாவட்ட நிர்வாகம்மூலமே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் சாலை அமைக்க இயலாது.

**77—**

## ஆலயத் திருப்பணி

**வினா எண் 23603—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நெல்மடூர் ஊராட்சி, நெல்மடூர் ஈஸ்வரன் கோவில், உத்தரகோசமங்கை ஆலயத்தினையும் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (i) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், நெல்மடூர் அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழ் இல்லாத ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் அமைந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் கல்கட்டுமான வேலையுடன் கல் கர்ப்பகிரகம் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருமானம் பெற்றுத்தர கூடிய நிலங்கள் ஏதுமில்லை. இத்திருக்கோயிலில் தற்போது கர்ப்பகிரகம், முன்மண்டபம், திருமதிற்சுவர் மற்றும் தரைதளம் போடுதல் போன்ற பணிகள் செய்திடல் வேண்டியுள்ளது. இப்பணிகளை ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் திருக்கோயில்கள் திருப்பணித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற்றும், பொதுமக்கள் நன்கொடை பெற்றும் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 24

(ii) இராமநாதபுரம் மாவட்டம், உத்தரகோசமங்கை, அருள்மிகு மங்களநாதசுவாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள இராமநாதபுரம் சமஸ்தான தேவஸ்தானத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு மத்தியத் தொல்பொருள் துறை நிதி ரூ.1.00 கோடியும், மாவட்ட நிர்வாகத்தில் நிதி ரூ. 13.90 இலட்சமும் பெறப்பட்டு, திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

78—

## ஆலயத்திற்கு வர்ணம் பூசுதல்

**வினா எண் 23806—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டை, கண்ணாத்தாள் ஆலயத்திற்கு வர்ணம் பூசிட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை சமஸ்தான தேவஸ்தான திருக்கோயிலான சிவகங்கை மாவட்டம் மற்றும் வட்டம், நாட்டரசன் கோட்டை, அருள்மிகு கண்ணுடைய நாயகியம்மன் திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டு, மகா கும்பாபிஷேகம் நல்ல முறையில் 22-4-2005 அன்று நடைபெற்றது. திருக்கோயிலின் கும்பாபிஷேகம் நடைபெற்று இரண்டு ஆண்டுகளே நிறைவடைந்துள்ளதாலும், திருக்கோயிலின் இராஜகோபுரம் மற்றும் விமானங்களில் பூசப்பட்ட வர்ணங்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளதாலும், இத்திருக்கோயிலுக்கு புதிதாக வர்ணம் பூசிட வேண்டிய அவசியம் எழவில்லை.



2008 ஜனவரி 24]

79—

## தெப்பக்குளத்தை சீரமைத்தல்

**வினா எண் 23807—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், பிள்ளையார்பட்டி, பிள்ளையார் கோவில், நாட்டரசன்கோட்டை, கண்ணாத்தாள் கோவிலின் தெப்பக் குளத்தை தூர் வாருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம்-பிள்ளையார்பட்டி, பிள்ளையார் கோயில் திருக்குளத்தினை தூய்மையாகவும், சிறப்பான முறையில் சுகாதாரமாகவும் வைத்திருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திருக்குளம் ஆண்டுக்கொருமுறை கோடைகாலத்தில் தண்ணீர் வற்றிய நிலையில் இருக்கும். நீர் வற்றியுள்ள சமயத்தில் திருக்குளத்தினை தூய்மைபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானத்தைச் சேர்ந்த சிவகங்கை வட்டம், நாட்டரசன்கோட்டை, அருள்மிகு கண்ணுடைய நாயகி அம்மன் திருக்கோயிலில் பின்புறமுள்ள தெப்பக்குளம் தூர்வாரி சுத்தப்படுத்தப்பட்டு இக்குளம் தற்போது நல்ல முறையில் உள்ளது. சுற்று வட்டார மக்களின் குடிநீராகவும் பயன்படுத்தப்பட்டு வருவதால் தற்போதைக்கு இத்திருக்குளத்தினை தூர்வாரிட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

80—

## அங்கப்பிரதட்சண மண்டபம்

**வினா எண் 23779—திரு. என். நன்மாறன்:** இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

மதுரை, வண்டியூர், மாரியம்மன் திருக்கோவிலில் அங்கப்பிரதட்சண மண்டபம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

மதுரை அருள்மிகு வண்டியூர் மாரியம்மன் திருக்கோயிலில் அங்கப்பிரதட்சண மண்டபம் கட்டும் பணிக்கு ரூ. 22.50 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பெற்று, பணி ஒப்படைக்கப்பட்டது. தற்போது, அங்கப்பிரதட்சண மண்டபம் கட்டும் பணிகளில், மேல் தட்டோடு பதித்து பூச்சுப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை தொடர்ந்து தளம் அமைக்கும் பணி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படவுள்ளது. அங்கப்பிரதட்சண மண்டபம் கட்டும் பணிகளில் தற்போது சுமார் 80 சதவிகித பணிகள் முடிவுற்றுள்ளன. இப்பணிகள் 2007 ஜூன் மாதத்திற்குள் முழுமையாக முடித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**81—**

**கோயில் திருவிழா**

**வினா எண் 23798—திரு. அ. தமிழரசு:** இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர், கோட்டை மாரியம்மன் கோவிலில் மாசி மாதப் பண்டிகை நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் நகர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் அருகே இரயில்வே மேம்பால கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதாலும், திருகோயிலுக்கு அருகில் குழிகள் தோண்டப்பட்டிருப்பதாலும், கல், மணல், ஜல்லி,



2008 ஜனவரி 24]

இரும்பு சாமான்கள் கொட்டப்பட்டிருப்பதாலும், சுவாமியை ஊர்வலம் எடுத்துச் செல்வதற்கும், சேவார்த்திகள் வந்து செல்வதற்கும், இடையூறாக இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த மூன்று வருடங்களாக திருவிழா நடைபெறவில்லை. தற்போது பாலம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. இருப்பினும் இந்த ஆண்டு 1-3-2007 அன்று பூச்சாட்டுதல் மற்றும் கம்பம் நடுதல் விழாவும், அதனைத் தொடர்ந்து 7-3-2007 அன்று பொங்கல் விழா, 8-3-2007 அன்று வண்டி வேடிக்கை,9-3-2007 அன்று சத்தாபரணம் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவடைந்தது.

**82—**

**அறங்காவலர் குழு**

**வினா எண் 23800—திரு. அ. தமிழரசு:** இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காளையாம்பட்டி ஒன்றியம், சின்ன திருப்பதி கோயிலுக்கு அறங்காவலர் குழு அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, காளையாம்பட்டி ஒன்றியம், சின்ன திருப்பதி, அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோயிலுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமனம் செய்யத் தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற நடவடிக்கை எடுத்து நியமனம் செய்திடப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**83—**

**புதிய கட்டட வசதி**

**வினா எண் 23954—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

*(அ) பூம்புகார் தொகுதி, சுவதாரண்யேஸ்வரர் ஆலயத்தில் பழுதடைந்துள்ள நிர்வாக அலுவலர் கட்டடத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, சுவதாரண்யேஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். மேற்படி திருக்கோயில் அலுவலக கட்டுமான பணிக்கு 26-4-2007 அன்று டெண்டர் விடப்பட்டு, இடம் தேர்வு செய்து ரூ.4.99 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**84—**

## இராமர் தீர்த்தம்

**வினா எண் 27394—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இராமேசுவரத்தில் இராமர் தீர்த்தத்தை சீரமைக்க அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலின் இராமர் தீர்த்தக் குளத்தினை இராமேசுவரம் ஸ்ரீ வல்லப நிதி டிரஸ்டின் உபயப் பணியாக தூர்வாரி மராமத்து செய்து, சீரமைக்க அனுமதி வேண்டியதின் பேரில், அறங்காவலர் குழுவில், மேற்படி இராமர் தீர்த்தக் குளத்தினை உபயப் பணியாக திருப்பணி செய்திட அனுமதித்து, செய்யும் திருப்பணி குறித்த விளம்பரங்களோ, கல்வெட்டுக்களோ வைக்க அனுமதியில்லை*



2008 ஜனவரி 24]

*என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. எனவே, இத்திருக்கோயிலின் இராமர் தீர்த்தக் குளத்தினை இராமேஸ்வரம் ஸ்ரீ வல்லப நிதி டிரஸ்டின் உபயப் பணியாக சீரமைக்கப்படவுள்ளது.*

**85—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 35681—திருமதி பி. பத்மாவதி:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நன்னிலம் தொகுதி, திருகொட்டாரம் உதவிபெறும் துவக்கப்பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தனியார் உதவிபெறும் பள்ளிகளுக்கு அரசு நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு அனுமதிக்கப்படுவதில்லை.*

**86—**

## பராமரிப்பு உதவி

**வினா எண் 33357—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறையிலுள்ள இஸ்லாமிய பள்ளிகளுக்கும், பள்ளி வாசலுக்கும் பராமரிப்பு உதவி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:**

*(அ) வால்பாறையிலுள்ள இஸ்லாமிய பள்ளிகளுக்கும், பள்ளிவாசலுக்கும் பராமரிப்பு உதவி செய்வது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

[2008 ஜனவரி 24

**87—**

### தார்ச்சாலை

**வினா எண் 28525—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை ஊராட்சியில் வெள்ளியணை-ஜெகதாபி சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை ஊராட்சியில் வெள்ளியணை-ஜெகதாபி சாலையை மாநில நெடுஞ்சாலையாக மாற்றி தார்ச் சாலையாக மாற்றக் கோரப்பட்டுள்ள 4.00 கி.மீ. நீளம் கொண்ட சாலையானது தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சாலையாகும். இச்சாலையின் மேற்பரப்பு தார் தளமாகவுள்ளது. இச்சாலையானது மாநில நெடுஞ்சாலைகளில் ஒன்றான திண்டுக்கல்-குஜிலியம்பாறை-கரூர் சாலை கி.மீ. 57/10-ல் பிரிந்து மைலம்பட்டி-உப்பிடமங்கலம் சாலையில் கி.மீ. 17/10-ல் இணைகிறது. இந்த ஊராட்சி, ஒன்றிய சாலையினை அரசு நெடுஞ்சாலையாக மாற்றி மேம்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

### பாலம் செப்பனிடுதல்

**வினா எண் 32714—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், அருமலை-காக்காகுப்பம்-வீரசோழபுரம் பகுதி, பம்பை வாய்க்கால் நெடுஞ்சாலைத் துறை பாலத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், அருமலை-காக்காகுப்பம்-வீரசோழபுரம் பகுதி, பம்பை வாய்க்கால் நெடுஞ்சாலைத் துறை பாலம் கள்ளக்குறிச்சி (நெ) கோட்ட பராமரிப்பில் உள்ள அரகண்டநல்லூர்-ஆயந்தூர் சாலை என்ற மாவட்ட இதர சாலையில் அமைந்துள்ளது. இச்சாலையில் கி.மீ. 0/0-2/6, 3/0-3/8, 4/2-5/6 மற்றும் 7/0-11/8 ஆகிய 9.60 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகளை மேம்பாடு செய்யவும், இவற்றில் மேற்கூறிய பம்பை வாய்க்கால் அடங்கியுள்ள 18 சிறு பாலங்களை திரும்பக் கட்டுவதற்கான பணிக்கு சி.ஆர்.ஐ.டி.பி. 2007-08-ல் ரூ. 95.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டவுடன் இச்சாலைப் பணி துவங்கப்படும்.

**89—**

### சாலை சீரமைப்பு

**வினா எண் 33806—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, வாணகிரி, மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் சாலையை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) பூம்புகார் தொகுதி, வாணகிரி, மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் சாலையை சீரமைக்கும் பணி ரூ. 30.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட உள்ளது.

(ஆ) மேலப்பெரும்பள்ளம்-கீழப்பெரும்பள்ளம் சாலை கி.மீ. 0/0-4/8 வரை நாகப்பட்டினம் கோட்டத்தில் மாவட்ட இதர சாலையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இதில், கி.மீ. 0/5-2/6, 3/0-3/8, 3/10 (100) 4/2 வரை சுனாமி மறு சீரமைப்பு திட்டத்தின்கீழ் ரூ. 30.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன், சாலை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பகுதிகள் நல்ல நிலையில் உள்ளன.

53-418—25a

[2008 ஜனவரி 24

90—

## தையல் இயந்திரம்

**வினா எண் 4372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், காளியாபுரம் பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், சோமந்துறை, அங்கலகுறிச்சி, தென்சங்கம்பாளையம், அர்த்தநாரிபாளையம், ஜல்லிப்பட்டி முதலிய ஊராட்சிகளில் தையல் மிஷின் கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு தையல் மிஷின் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை , சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006-2007ஆம் ஆண்டிற்கு சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின்கீழ் கோவை மாவட்டத்திற்கு 150 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் வால்பாறை தொகுதியில் தையல் இயந்திரம் வேண்டி விண்ணப்பித்தவர்களில் காளியாபுரம் ஊராட்சியில் ஒருவருக்கும், அங்கலகுறிச்சியில் ஒருவருக்கும், அர்த்தநாரி பாளையம் ஊராட்சியில் 7 பேருக்கும் ஆக மொத்தம் 9 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பெத்த நாயக்கனூர், ரமண முதலிபுதூர், சோமந்துறை, தென்சங்கம் பாளையம், ஜல்லிப்பட்டி ஆகிய ஊராட்சிகளில் தையல் இயந்திரம் வேண்டி யாரும் விண்ணப்பிக்கவில்லை.

91—

## அரசு உதவித் தொகை

**வினா எண் 4381—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) வால்பாறை தொகுதியில் காளியாபுரம், பெத்தநாயக்கனூர், ரமணமுதலிபுதூர், அர்த்தநாரிபாளையம், கம்பலாபட்டி, பிலிசின்னம்பாளையும், ஜல்லிப்பட்டி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை முதலிய ஊராட்சிகளில் அரசு உதவித் தொகை கிடைக்காத விதவைப் பெண்களுக்கு அரசு உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில், காளியாபுரம் ஊராட்சியில் 40 நபர்களுக்கும், பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் 26 நபர்களுக்கும், ரமணமுதலிபுதூர் ஊராட்சியில் 6 நபர்களுக்கும், அர்த்தநாரிபாளையம் ஊராட்சியில் 8 நபர்களுக்கும், கம்பலாபட்டி ஊராட்சியில் 8 நபர்களுக்கும், பிலிசின்னம்பாளையம் ஊராட்சியில் 5 நபர்களுக்கும், ஜல்லிப்பட்டி ஊராட்சியில் 3 நபர்களுக்கும், தென்சங்கம்பாளையம் ஊராட்சியில் 15 நபர்களுக்கும், சோமந்துறை ஊராட்சியில் 11 நபர்களுக்கும் மொத்தம் 122 நபர்களுக்கு ஆதரவற்ற விதவை ஓய்வூதிய திட்டத்தின்கீழ் உதவித் தொகை கோரி வரப்பெற்ற மனுக்கள் விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் அவ்வப்போது உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கேள்விகளுக்கு இடமில்லை.

92—

## புதிய கட்டடம்

**வினா எண் 23732—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் நகரிலுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு புதிதாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் ஒதுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. மேற்படி நிலம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கப்பட்டவுடன் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நல அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**93—**

**மருத்துவர்கள் நியமனம்**

**வினா எண் 7912—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பொறையாறில் உள்ள கால்நடை மருத்துவமனையை புதுப்பிக்கவும், மருத்துவர்களை நியமிக்கவும் அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம் பொறையாறில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. சுனாமி திட்டத்தில் பொறையார் கால்நடை மருந்தகத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சங்கரன்பந்தல், கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவரால் வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய 3 நாட்களில் பொறையார் கால்நடை மருந்தகத்திற்கு வரும் கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியினை தற்போது பணிபுரிந்து



2008 ஜனவரி 24]

வரும் பணியாளர்களைக் கொண்டு கூடுதல் பொறுப்பில் பணிபுரிந்து வருவதால், மருத்துவர்களை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**94—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 11654—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனையை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி சிக்கம்பட்டி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம்தான் இயங்குகிறது. அதன் மேற்கூரை, சுவர், கதவு மற்றும் ஜன்னல்கள் பழுதடைந்துள்ளன. 2007-2008 ஆம் ஆண்டில் இது சிறப்பு நிகழ்வாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**95—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 13112—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சி, பெரியநாகனூரில் கால்நடை மருத்துவமனை கட்ட அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஒரு கால்நடை மருத்துவமனையும், மூன்று கால்நடை மருந்தகங்களும், மூன்று கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பெரியநாகனூர் கிராமத்திற்கு அருகில் ஓமலூர் கால்நடை மருத்துவமனை 10 கி.மீ. தொலைவிலும், கமலாபுரம் கால்நடை மருந்தகம் 7 கி.மீ. தொலைவிலும், பூசாரிப்பட்டி கால்நடை கிளை நிலையம் (காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம்) 6 கி.மீ. தொலைவில் செயல்பட்டு வருவதாலும், மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், மேலும் பெரியநாகனூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் எதுவும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**96—**

## தடுப்பூசி முகாம்

**வினா எண் 29694—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் கால்நடைகளை பராமரிக்க தடுப்பூசி முகாம் மாதந்தோறும் நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சியில் கால்நடைகளை பராமரிக்க தேவையான காலங்களில் அவ்வப்போது தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படும்.



**97—**

## துணை கால்நடை மருத்துவமனை

**வினா எண் 32304—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பசலை துணைக் கால்நடை மருத்துவமனையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பசலை கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. அந்த கால்நடை கிளை நிலையத்தில் கால்நடை ஆய்வாளர் நிலை-I பணிபுரிந்து வருகிறார். இவர் வாரத்தில் மூன்று தினங்கள் (திங்கள், புதன், வெள்ளி) மேலப்பசலை கால்நடை கிளை நிலையப் பணியை கவனித்து வருகிறார். மேலும், இவர் செவ்வாய், வியாழன் மற்றும் சனிக் கிழமைகளில் மேலநெட்டூர் கால்நடை கிளை நிலைய பணியை கூடுதல் பொறுப்பு ஏற்று கவனித்து வருகிறார். மேற்படி மானாமதுரை ஒன்றியத்தில் (3) கால்நடை மருந்தகங்களும் மற்றும் (4) கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழாது.

**98—**

## காளை மாட்டுப் பண்ணை

**வினா எண் 37587—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

*(அ) வால்பாறையில் காங்கேயம் காளை மாட்டுப் பண்ணை துவக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) காங்கேயம் இன கால்நடைகள், மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, ஓசூர், மாவட்ட கால்நடைப் பண்ணையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இவற்றிலிருந்து காங்கேயம் இன உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் சிறு, குறு விவசாயிகளின் கால்நடைகளுக்கு செயற்கை முறை கருவூட்டல் மூலம் பாரம்பரியம் மிக்க காங்கேயம் இன கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே, வால்பாறையில் தனியாக காங்கேயம் காளை மாட்டுப் பண்ணை துவக்க தற்போது அவசியம் எழவில்லை.*

*(ஆ) எழவில்லை.*

**99—**

## மீன்பிடிக்க அனுமதி

**வினா எண் 35992—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம், ஆழியார் அணைகளில் மீன்பிடிக்க மகளிர் சுய உதவிக் குழுவிற்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பரம்பிக்குளம், ஆழியார் அணைகளில் மீன்பிடிக்க மகளிர் சுய உதவிக் குழுவிற்கு அனுமதி*



2008 ஜனவரி 24]

*வழங்க வேண்டுமெனில், மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ளவர்கள் மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருந்து அவர்கள் பரிசல் ஓட்டவும், மீன் பிடிக்கவும் தெரிந்திருப்பார்களேயானால் அவர்களிடம் விண்ணப்பம் பெற்று பங்கு மீனவர்களாக மீன் பிடிக்க அனுமதிக்கலாம்.*

**100—**

## நிதியுதவி

**வினா எண் 26648—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஓமலூர் தொகுதியில் கூட்டுறவு பால் சங்கம் மூலம் பால்கேன்கள், கட்டடங்கள், பால் பரிசோதனைக் கருவிகள், உபகரணங்கள் வாங்க நிதி உதவி வழங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

*பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு பகுதி-2 திட்டத்தின்கீழ் 50% மானிய அடிப்படையில் பால் குவளைகள்* (Stainless Steel Can), *பரிசோதனைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கு நிதியுதவி வழங்கிட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.*

**பட்டியல் 6**

1—

**அமராவதி அணை பராமரிப்பு**

**வினா எண் 7571—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி அணை, அமராவதி அணை பராமரிப்புப் பணிகளை மின்சார வாரியமே ஏற்று நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, திருமூர்த்தி அணை மற்றும் அமராவதி அணையில் கட்டப்பட்டுள்ள சிறு புனல் மின் உற்பத்தி நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகள் தற்பொழுது ஒப்பந்த அடிப்படையில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட சிறு புனல் மின் நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணிகளை வாரியமே ஏற்று நடத்தினால் ஆகும் செலவினத்தைவிட ஒப்பந்த அடிப்படையில் ஆகும் செலவு குறைவு எனக் கண்டறியப்பட்டு அவ்வாறு வழங்கப்பட்டுள்ளது.

2—

**கணினிமூலம் மின் கட்டணம் வசூல்**

**வினா எண் 32488—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடையூர் சங்கேந்தி, பின்னத்தூர், ஆரியலூர், வடசங்கேந்தி ஆகிய கிராமங்களில் ஏதேனும் ஓர் இடத்தில் மின் கட்டணத்தினைச் கணினிமூலம் வசூல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மன்னார்குடி கோட்டம், திருத்துறைப்பூண்டி உப கோட்டம் இளநிலைப் பொறியாளர்/நகர்/திருத்துறைப்பூண்டி பிரிவிற்குட்பட்ட இடையூர் சங்கேந்தி, பின்னத்தூர், ஆரியலூர், வடசங்கேந்தி ஆகிய கிராமங்களுக்குத் தற்பொழுது இளநிலைப் பொறியாளர்/நகர்/ திருத்துறைப்பூண்டி பிரிவில் கணினிமூலம் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. மேற்படி கிராமங்களில் ஏதேனும் ஓரிடத்தில் மின் கட்டணத்தைக் கணினிமூலம் வசூல் செய்ய அடிப்படை கட்டமைப்பு ஏற்படுத்தி விரைவில் ஆவன செய்யப்படும்.

3—

**கட்டட வசதி**

**வினா எண் 32796—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் மின் வாரிய அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டத்திற்கு மத்திய அலுவலகக் கட்டடம் மற்றும் இதர மின் வாரிய அலுவலகங்கள் கட்ட திருப்பத்தூர் நகரம் புல எண் 5/1A மற்றும் 5/6A-ல் 3.34 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக மதிப்பீடு தயாரித்து கட்டடம் கட்டும் பணி பரிசீலனையில் உள்ளது.

4—

**அலுவலகக் கட்டடம்**

**வினா எண் 35638—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் மின் வாரிய அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் மின் வாரியப் பிரிவு அலுவலகம், தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.*

*(ஆ) தற்சமயம், காடாம்புலியூரில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமாக நிலம் எதுவும் இல்லை. நிலம் கிடைக்கும் பட்சத்தில், மின் பிரிவு அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட ஆவன செய்யப்படும்.*

**5—**

**புதிய சேமிப்புக் கிடங்கு**

**வினா எண் 36632—திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மானாமதுரையில் தமிழ்நாடு மின்சார வாரிய சேமிப்புக் கிடங்கு புதியதாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் பகுதி, 110 கி.வோ. துணை மின் நிலையமருகில் தற்சமயம் மானாமதுரை கிளைப் பண்டகச் சாலை, செயற்பொறியாளர், மானாமதுரை, அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இது மின் பகிர்மான வட்டம், சிவகங்கை, மேற்பார்வைப் பொறியாளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இயங்கி வருகிறது.*

**6—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 4702—திரு. அ. தமிழரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2008 ஜனவரி 24]

*(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்ப்புதூர் ஊராட்சி, கணவாய்ப்புதூர் நாகேஷ் வீடு முதல் சரவணன் வீடு வரை, கண்ணப்பாடி கணேசன் வீடு—கோவிந்தன் வீடு வரை, வீராட்சியூர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி—பெருமாள் வீடு வரை, பூமரத்தூர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி—மாது வீடு வரை தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணவாய்ப்புதூர் ஊராட்சிக்கு உட்பட்ட—*

1. *கணவாய்ப்புதூர் நாகேஷ் வீடு முதல் சரவணன் வீடு வரை 100 மீ. நீள தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 2.00 இலட்சம் மதிப்பீடு.*
2. *கண்ணப்பாடி கணேசன் வீடு முதல் கோவிந்தன் வீடு வரை 50 மீ. நீள தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 2.00 இலட்சம் மதிப்பீடு.*
3. *வீராட்சியூர் ஓ.எச்.டி. முதல் பெருமாள் வீடு வரை 50 மீ. நீள தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 1.00 இலட்சம் மதிப்பீடு.*
4. *பூமரத்தூர் ஓ.எச்.டி. முதல் மாது வீடு வரை 60 மீ. நீள தடுப்புச் சுவர் அமைக்க ரூ. 1.00 இலட்சம் மதிப்பீடு.*

*மேற்காணும் பணிகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலும், ஊராட்சி நிதியிலும், போதிய நிதி வசதி இல்லை. ஊராட்சி நிதியில் போதிய நிதி வசதி கிடைக்கப்பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பணிகள் செய்யபடும்.*

**7—**

**நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 4992—திரு. எம். பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2008 ஜனவரி 24

சீர்காழி தொகுதி, அன்னப்பன்பேட்டை மற்றும் தென்னாம்பட்டினம் பாடசாலைத் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி (ஒன்றியம்), தென்னாம்பட்டினம் ஊராட்சி, அன்னப்பன்பேட்டை மற்றும் தென்னாம்பட்டினம் பாடசாலைத் தெருவில் உள்ள குடியிருப்புகளுக்கு மக்கட்தொகைக்கேற்ப கட்டப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குக் கொள்ளிடம் ஆற்றில் அமைந்துள்ள நீருறிஞ்சும் கிணற்றை ஆதாரமாகக் கொண்ட சீர்காழி செம்பனார்கோயில் ஒன்றியங்களைச் சேர்ந்த 133 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் முழுமையான அளவு குடிநீர் வசதி (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம்) அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதிக்கு புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் நிலை எழவில்லை.

8—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5144—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் முதல் நிலை ஊராட்சி விஜயநகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கணவாய்ப்புதூர் ஊராட்சியிலுள்ள விஜயநகரம் குடியிருப்புக்கு,



2008 ஜனவரி 24]

2005-2006 ஆம் ஆண்டு முதல் நபார்டு வங்கி திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கும் வாய்ப்பு இல்லை.

9—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 5181—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், செம்பதனிருப்பு, ராமர் கோவில் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது.

(ஆ) ராமர் கோவில் தெரு என்பது மேல்செம்பதனிருப்பு குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்புக்கு மேல் செம்பதனிருப்பு குடியிருப்பிலுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியின் பிரதானக் குடியிருப்பின் மக்கள் தொகைக்கேற்ப ஏற்கெனவே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதால், இப்பகுதிக்கு புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் நிலை எழவில்லை.

10—

## கைப்பம்பு அமைத்தல்

**வினா எண் 6585—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்ப்புதூர் முதல் நிலை கிராம ஊராட்சியில், வேலகவுண்டனூர் காட்டுவளவு, கே.என். புதூர் சுப்பலோடன் காட்டுவளவு, சின்னமா ஜாலிகாடு, ஜாலிகொட்டாய் மோயர் தெரு, கிச்சான் காட்டுவளவு, குமரன் காட்டுவளவு, கே. மோரூர் எஸ்.டி. தெரு, கே. மோரூர் பிசி காலனி, கணவாய்ப்புதூர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளைக் கிணறும் மற்றும் கொங்குப்பட்டி ஊராட்சி, தாசனூர் காட்டுவள்வுப் பகுதியில் கைப்பம்பும் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கணவாய்ப்புதூர் முதல் நிலை கிராம ஊராட்சி, வேலகவுண்டனூர் காட்டுவளவு, கணவாய்ப்புதூர், குப்பன் கொட்டாய், கே. மோரூர் வண்டித் தெரு, கே. மோரூர் பிசி தெரு ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலமும் திறந்தவெளிக் கிணறுகள் மூலமும் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது கணவாய்ப்புதூர் ஊராட்சி மற்றும் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் போதிய நிதி வசதி இல்லை. இருப்பினும் பொதுமக்களின் கூடுதல் தேவையைக் கருத்தில்கொண்டு வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப குடிநீர் வசதி செய்துதர முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**11—**

## குடிநீர் வசதி

**வினா எண் 8442—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி, கரைப்புதூர், எஸ். ஆலாம்பாளையம், குள்ளகவுண்டன்புதூருக்கு அமராவதி குடிநீர் மீண்டும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, கரைப்புதூர், எஸ். ஆலாம்பாளையம், குள்ளகவுண்டன்புதூர் ஊர்களுக்கு நொச்சிப்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள கேட் வால்விலிருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 24 மணி நேரம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**12—**

## குடிநீர் வசதி

**வினா எண் 8443—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், சங்கராண்டாம்பாளையம், வடுகபாளையம் அருகிலுள்ள காலனிக்குத் தண்ணீர் வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், சங்கராண்டாம்பாளையம் ஊராட்சி, வடுகபாளையம் அருகிலுள்ள காலனிக்குப் புதிதாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்து சிறிய மின் மோட்டார் பொருத்தி, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**13—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 8929—டாக்டர். க நெடுஞ்செழியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

(அ) பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி ஊராட்சி, நத்தமேட்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமத்தி ஒன்றியம், கூடச்சேரி ஊராட்சியில் நத்தமேடு என்ற குடியிருப்பு இல்லை. மாணிக்கநத்தம் ஊராட்சியில் நத்தமேடு புதூர் என்ற குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டத்தின்மூலம் போதுமான அளவு (நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர்) குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மக்கட்தொகைக்கேற்ப நீர்த்தேக்கத் தொட்டி ஏற்கெனவே உள்ளதால், புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் நிலை எழவில்லை.

**14—**

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 9129—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதியில், வயலூர் ஊராட்சியிலுள்ள கணக்கம்பட்டியில் பழுதடைந்துள்ள குடிநீர் பம்ப் போர் மோட்டாரை மாற்றி புதியதாகப் போடவும் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு வசதி செய்து கொடுத்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வயலூர் ஊராட்சியிலுள்ள கணக்கம்பட்டியில்



2008 ஜனவரி 24]

ரூ.1.50 இலட்ச மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து பைப்லைன் விஸ்தரிப்பு செய்து குடிநீர் விநியோகிக்க 2007-08 ஆம் ஆண்டு ஒன்றியப் பொது நிதியிலிருந்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**15—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 9903—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குலமாணிக்கம் ஊராட்சி, பெரிய ஆண்டிப்பட்டி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரிய ஆண்டிப்பட்டி என்பதும் ஆண்டிப்பட்டி என்பதும் ஒரே குடியிருப்பாகும். இக்குடியிருப்பில் ஏற்கெனவே அமையப்பெற்ற 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு இராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக காவிரிக் குடிநீர் ஏற்றப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஊரக குடிநீர்த் திட்ட விதிகளின்படி கூடுதலாக மேல்நிலைத் தொட்டி கட்ட சாத்தியக் கூறுகள் இல்லை.

**16—**

## புதிய பாலம்

**வினா எண் 10571—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், எலக்குடிப்பட்டியில் உடைப்பு ஏற்பட்ட சாலை மற்றும் ஊரத்துப்பட்டி சாலையிலும் புதிய பாலம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், எலக்குடிப்பட்டியில் உடைப்பு ஏற்பட்ட சாலை மற்றும் ஊரத்துப்பட்டி சாலையிலும் புதிய பாலம் கட்டித்தர தற்போது அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, இப்பணியினை தற்சமயம் செய்ய இயலாது.

**17—**

**சிமெண்ட் சாலை**

**வினா எண் 10577—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், வடக்கிப்பட்டியில் சிமெண்ட் சாலை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், செங்களூர் ஊராட்சி, வடக்கிப்பட்டியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் 2006-2007-ல் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் சாலை போடப்பட்டு தற்சமயம் பணி முடிவடைந்துவிட்டது.

**18—**

**வீடுகளைச் செப்பனிடல்**

**வினா எண் 10827—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், கஞ்சாநகரம் ஊராட்சி, காலனி வீடுகள் மற்றும் இராதாநல்லூர் ஊராட்சி, ஆலங்காடு ஆதி திராவிடர் தெருவிலுள்ள வீடுகளையும் செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006-ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 21 ஊராட்சிகளில் 220 தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2007-08 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும்பட்சத்தில், கஞ்சாநகரம் ஊராட்சியில் உள்ள பழுதுற்ற தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 13293—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், செங்களூரிலிருந்து லெக்குடிப்பட்டி செல்லும் சாலையில் பாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், செங்களூரிலிருந்து லெக்குடிப்பட்டி செல்லும்

சாலையில் பாலம் கட்டித்தர தற்போது அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் இல்லை. எனவே, இப்பணியினைத் தற்சமயம் செய்ய இயலாது.

**20—**

**மெட்டல் சாலை**

**வினா எண் 13294—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், டி. கீழையூரிலிருந்து இராக்கதம்பட்டி செல்லும் சாலையை மெட்டல் சாலையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், டி. கீழையூரிலிருந்து இராக்கதம்பட்டி செல்லும் சாலையை மெட்டல் சாலையாக மாற்ற நபார்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**21—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 13295—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், பாரப்பட்டியிலிருந்து பிரகதாம்பாள்புரம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், பாரப்பட்டியிலிருந்து பிரகதாம்பாள்புரம் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத்தர நபார்டு நிதியுதவித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**22—**

**மெட்டல் சாலை**

**வினா எண் 13296—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், நாஞ்சிலார் நகரிலுள்ள சாலைகளை மெட்டல் சாலைகளாக அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, விராலிமலை, ஊராட்சி ஒன்றியம், குமாரமங்கலம் ஊராட்சி, நாஞ்சிலார் நகர் சாலை 1 கி.மீ. தூரம் உள்ளது. இதனை மெட்டல் சாலையாக அமைக்க ரூ. 2.50 இலட்சம் தேவைப்படுகிறது. இதற்காக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப் பரிந்துரை செய்தால் இவ்வேலையை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 13297—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஒன்றியம், அவ்வையார்பட்டியிலிருந்து மண்டையூர் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், அவ்வையார்பட்டியிலிருந்து மண்டையூர் செல்லும் சாலையை தார்ச் சாலையாக அமைத்தல் மற்றும் பாலங்கள் கட்டும் பணிக்கு ரூ.40 இலட்சம் தேவைப்படுகிறது. தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, மேற்கண்ட பணியினைத் தற்சமயம் செய்ய இயலாது.

24—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 13298—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஒன்றியம், செம்பாட்டூரிலிருந்து கீழமுத்துக்காடு செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், செம்பாட்டூரிலிருந்து கீழமுத்துக்காடு செல்லும் சாலையில் 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இரண்டாம் அடுக்கு மெட்டல்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 14033—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியத்தைச் சார்ந்த பரசலூர் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீர்செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2005-2006 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி, மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 21 ஊராட்சிகளில் 220 தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் பழுது நீக்கம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்ய சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும்பட்சத்தில், பரசலூர் ஊராட்சியில் உள்ள பழுதுற்ற தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2008 ஜனவரி 24

26—

## சுடுகாடு அமைத்தல்

**வினா எண் 17948—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், நல்லசேனஅள்ளி ஊராட்சி, எ. சவுளூரில் சுடுகாடு ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி ஒன்றியம், நல்லசேனஅள்ளி ஊராட்சி, எ. சவுளூரில் சுடுகாடு அமைக்கும் பணியை 2007-2008 ஆம் ஆண்டு அனைத்து கிராம (AGAMT) திட்டத்தில் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

27—

## குடிநீர் வசதி

**வினா எண் 19009—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமுத்திரம் ஊராட்சி, தொப்பவளவு பகுதியில் சிறிய மின் விசை குடிநீர்க் குழாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சமுத்திரம் ஊராட்சியிலுள்ள தொப்பவளவு பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று உள்ளது. அதில் போர்வெல் குடிநீரும், காவிரிக் குடிநீரும் மாற்றி மாற்றி ஏற்றப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. சுமார் 300 மக்கள்தொகை கொண்ட இப்பகுதிக்கு இதுவே போதுமானதாக உள்ளது.



2008 ஜனவரி 24]

28—

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 24134—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, இலக்கியம்பட்டி ஊராட்சி, இலக்கியம்பட்டியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி ஊராட்சி ஒன்றியம், இலக்கியம்பட்டி ஊராட்சி, இலக்கியம்பட்டியில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்க தற்போது போதுமான நிதி வசதி இல்லை. வரும் நிதியாண்டில் (2008-2009) போதுமான நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றால் முன்னுரிமை அடிப்படையில் பணி செய்து முடிக்கப்படும்.

29—

## தூர் வாருதல்

**வினா எண் 26365—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், முட்டாஞ்செட்டி கிராம பொதுக் கிணற்றைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், முட்டாஞ்செட்டி ஊராட்சியில் உள்ள பொதுக் கிணற்றைத் தூர் வார ஊராட்சியின் பொது நிதிமூலம் பணி மேற்கொள்ள ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. தூர் வாரும் பணி விரைவில் முடிக்கப்படும்.

**30—**

**தார்ச் சாலை**

**வினா எண் 29642—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெரியவீரசங்கிலி ஊராட்சி, கைக்கோள பாளையம்-வெள்ளிரவெளி தார்ச் சாலையிலிருந்து மச்சாபாளையம் வரை கொடாப்புலியூரிலிருந்து பெரியவீரசங்கிலி வரை செல்லும் தார்ச் சாலைகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, பெருந்துறை வட்டாரம், வெள்ளிரவெளி தார்ச் சாலையிலிருந்து மச்சாபாளையம் வரையுள்ள சாலை 2007-2008 ஆம் ஆண்டு பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின்கீழ் புதுப்பிக்கும் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

கொடாப்புலியூரிலிருந்து பெரியவீரசங்கிலி வரை செல்லும் தார்ச் சாலையினைப் புதுப்பிக்கும் பணியை 2007-2008 ஆம் ஆண்டு 12-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2008 ஜனவரி 24]

**31—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 30101—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மணிக்குடி, திருலோக்கி ஊராட்சிக்கு இடையே பழுதடைந்த இராமர் ஓடை பாலத்திற்கு பதிலாக, புதிய பாலம், குறிச்சி, சிக்கநாயக்கன்பேட்டை, மண்ணியாறு, நெய்குப்பை ஊராட்சி, மண்ணியாறு, காவனூர் ஊராட்சி, காகிதப் பட்டறை, செருகுடி, மண்ணியாறு, திருவாய்ப்பாடி, கூத்தனூர் இணைப்பு, மண்ணியாறு ஆகிய பகுதிகளில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மணிக்குடி, திருலோக்கி ஊராட்சிகளுக்கு இடையே பழுதடைந்த இராமர் ஓடை பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் 2007-2008 ஆம் ஆண்டு கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் குறிச்சி, சிக்கநாயக்கன்பேட்டை, மண்ணியாறு, காவனூர் ஊராட்சி, காகிதப் பட்டறை, செருகுடி, மண்ணியாறு, திருவாய்ப்பாடி, கூத்தனூர் இணைப்பு, மண்ணியாறு ஆகிய பகுதிகளில் பாலம் கட்ட நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**32—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 30524—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம், குளத்துபாளையம் கிராம தொகுப்பு வீடுகளைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்தால், உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம், குளத்துப்பாளையம் கிராமங்களில் உள்ள தொகுப்பு வீடுகளைப் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**33—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 34303—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் ஒன்றியம், எலத்தூர் ஊராட்சி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதி திராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கலசப்பாக்கம் ஒன்றியம், எலத்தூர் ஊராட்சிக்கு கடந்த 2006-2007 ஆம் ஆண்டு 6 தொகுப்பு வீடுகள் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சார்ந்த, தீயினால் வீடு இழந்து பாதிக்கப்பட்டிருந்தோருக்கு சிறப்பினமாக வழங்கப்பட்டது.

**34—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 39038—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) மானாமதுரை தொகுதி, சூரக்குளம், பில்லருத்தான் ஊராட்சி, நலத்தாவு கிராமத்திற்குத் தனியாக ஒரு நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சூரக்குளம், பில்லருத்தான் ஊராட்சி, நலத்தாவு கிராமத்தில் மொத்தம் 90 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இக்குடும்ப அட்டைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள், இப்பகுதியிலிருந்து 1.5 கி.மீ. தூரத்தில், கொன்னக்குளம் முழுநேரக் கடையால் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகின்றன. தாய்க்கடையான கொன்னக்குளம் முழுநேர நியாய விலைக் கடையில் 500-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும், புதிய நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் நலத்தாவு பகுதியில் 150-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் உள்ளதாலும், தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி நலத்தாவு பகுதியில் புதிய பகுதிநேரக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**35—**

## கிடங்குகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 7033—திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள வேளாண்மைத் துறை கிடங்கு மற்றும் துணைக் கிடங்குகளைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் மற்றும் சூலூர் வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு மொத்தம் ரூ. 5 இலட்சம் 2007-08 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித் துறையின் பராமரிப்பு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுது நீக்கிட தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொதுப் பணித் துறை, சென்னை அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பழுது நீக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**36—**

### குடியிருப்புகளில் பழுது நீக்கம் செய்தல்

**வினா எண் 10672—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண் அலுவலர் மற்றும் வேளாண் விரிவாக்க அலுவலர் குடியிருப்புகளைப் பழுது நீக்கம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறையின் சார்பில் அனைத்து மாவட்டங்களில் உள்ள வேளாண்மை அலுவலர்/உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகள் பழுதடைந்திருந்தால், அதனைச் சீரமைத்து குடியிருக்க வசதியாக அமைத்துத் தருதல் குறித்த விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை ஆணையரிடமிருந்து மதிப்பீடுகள் வரப்பெற்றதும் அதன்மீது நிதி ஒப்பளிப்பு மற்றும் நிர்வாக ஒப்பளிப்பு பெறப்பட்டு பணிகள் பொதுப் பணித் துறையின் மூலமாக செய்து முடிக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.



**37—**

### கட்டட வசதி

**வினா எண் 22384—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வேளாண்மை விரிவாக்க மையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருக்கழுக்குன்றம் வேளாண்மை விரிவாக்க மையம் தற்போது அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே புதிதாகக் கட்டடம் கட்ட அவசியம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**38—**

### கட்டட வசதி

**வினா எண் 34371—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஆயிரம் மெட்ரிக் டன் மற்றும் அறுநூறு மெட்ரிக் டன் கொள்ளளவு

கொண்ட இரண்டு கிட்டங்கிகள், இருநூற்று ஐம்பது மெ. டன் கொள்ளளவு கொண்ட ஏலக் கொட்டகை ஒன்றும் தற்போது இருக்கின்றன. மேற்கண்ட கிட்டங்கிகளில் 2006-2007 ஆம் ஆண்டில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பொருளீட்டுக் கடன் கோரி இருப்பு வைத்துள்ள விளைபொருட்களின் அளவு 147.14 மெ. டன் ஆகும். பயனடைந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் மொத்த எண்ணிக்கை 28 ஆகும். தற்போது கட்டப்பட்டுள்ள 3 கிட்டங்கிகளிலேயே இருப்பு வைப்பதற்கு ஏராளமான இடங்கள் உள்ளமையால் கூடுதல் கிட்டங்கி கட்ட வேண்டிய சூழ்நிலை எழவில்லை.

**39—**

## பருத்தி விளைச்சல்

**வினா எண் 38547—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் பருத்தி விளைச்சலை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க அரசு பல வழிகளில் நடவடிக்கை எடுத்து வருகிறது. மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தில் மானாமதுரை தொகுதியினை உள்ளடக்கிய சிவகங்கை மாவட்டத்திற்கு ரூ.0.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர விவசாயிகளுக்கு வேளாண்மைத் துறையினரால் பருத்தி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) விளைச்சலை அதிகரிக்கத் தேவையான தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.



**40—**

## குளிரூட்டும் நிலையம்

**வினா எண் 39513—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் பப்பாளிப் பழங்களைப் பாதுகாக்க குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் பப்பாளிப் பழங்களைப் பாதுகாக்க குளிரூட்டும் நிலையம் அமைப்பது குறித்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**41—**

## ஆக்கிரமிப்புகள் அகற்றல்

**வினா எண் 10939—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கொடுமுடியாறு அணைக்கட்டு வடமலையான் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கொடுமுடியாறு அணைக்கட்டு, வடமலையான் கால்வாயில் திருமலாபுரம் கிராமத்தில் 7 இடங்களில் புல எண்கள் 233, 238, 243/3, 244, 251, 269, 270 ஆகியவற்றில் 0.38.0 ஹெக்டேர் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டுள்ளது.

[2008 ஜனவரி 24

விரைவில் காவல் துறை மற்றும் வருவாய்த் துறை உதவியுடன் ஆக்கிரமிப்புகளை அகற்றவும் மற்றும் தற்போது நடைமுறைக்கு வந்துள்ள ஆக்கிரமிப்பு அகற்றும் சட்டம் 2007-ன் படியும் மதுரை மண்டல பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**42—**

## நம்பி ஆற்றில் தடுப்பணை

**வினா எண் 10954—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆத்தங்கரை பள்ளி வாசலின் தென்புறம் செல்லும் நம்பி ஆற்றில் தடுப்பணை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ராதாபுரம் வட்டம், ஆத்தங்கரை பள்ளிவாசல் தென்புறம் நம்பியாற்றில் தடுப்பணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**43—**

## தடுப்பணை கட்டுதல்

**வினா எண் 26093—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் வழியில் பெரும்பரணியிலிருந்து வரும் மழைநீரை மேச்சேரியை அடுத்துள்ள பகுதியில் தடுப்பணை கட்டி பாசனத்திற்குப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மேட்டூர் அணையின் நீர்ப் பிடிப்பு பகுதி மிக அருகில் உள்ளதாலும், பாலாற்றின் இருபுறமும் மேடான பகுதிகளாகவும், மலைக்குன்றுகள் சூழ்ந்த பகுதிகளாகவும் அமைந்துள்ளதாலும், பாசனம்பெறும் நிலங்கள் போதுமானதாக இல்லை என்பதாலும், பெரும்பரணியிலிருந்து (பெரும்பாலை) வரும் மழைநீரை ஊத்துப்பள்ளம் அருகே தடுப்பணைமூலம் தடுத்து பாசனத்திற்குப் பயன்படுத்துவது சாத்தியமில்லை.

**44—**

## ஆற்றைச் சுத்தம் செய்தல்

**வினா எண் 30022—திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாமிரபரணி ஆற்றைச் சுத்தப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தாமிரபரணி ஆற்றின் தலைப் பகுதி முதல் கடைசிப் பகுதி வரை சுமார் 120 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இதனை சுத்தப்படுத்திச் சீரமைக்க தோராயமாக ரூ.250 கோடி தேவைப்படுகிறது.

தாமிரபரணி பாசன அமைப்பின் பாசன ஆதாரங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், மேம்பாடு மற்றும் அபிவிருத்தி மற்றும் மராமத்துப் பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துருக்களை ஆய்வு செய்து அரசின் ஒப்புதலுக்காக அனுப்புவதற்கு ஏதுவாக குழு ஒன்று அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

45—

## புதிய குடியிருப்புகள் வசதி

**வினா எண் 31679—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம், பொதுப் பணித் துறை ஊழியர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மேட்டுப்பாளையம், பொதுப் பணித் துறை அலுவலகத்தில் மொத்தமுள்ள பணியிடங்கள் 12 ஆகும். இதில் தற்போது 6 குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 6 பணியாளருக்கு குடியிருப்பு வசதி தேவைப்படுகிறது. இதற்கான மதிப்பீடு தயார் செய்து பகுதி 2 திட்டத்தில் முன்மொழிவு செய்யப்படும்.

46—

## கான்கிரீட் தளம்

**வினா எண் 33832—திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, காளிங்கராயன் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைத்து சிலாப் மூலம் கரைகளை பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மொடக்குறிச்சி தொகுதி, காளிங்கராயன் வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைத்து சிலாப் மூலம் கரைகளை பலப்படுத்தும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

47—

## போக்குவரத்து வசதி

**வினா எண் 1255—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி, காடகனூர் கிராமத்திற்கு திருக்கோவிலூரிலிருந்து அரசுப் போக்குவரத்து வசதி செய்துதரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

15-08-2006 முதல் திருக்கோயிலூருக்கும் கண்டாச்சிபுரத்துக்கும் இடையே இயக்கப்படும் நகரப் பேருந்து தடம் எண் 11 மூலமாக 4 சென்று வரும் நடைகளில் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

48—

## கூடுதல் பேருந்துகள்

**வினா எண் 1285—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு பணிமனையில் இயக்கப்படும் பேருந்துகள்மூலம் கிடைக்கும் வருவாயை அதிகரிக்க கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையின் அடிப்படையில் கூடுதலாக செங்கல்பட்டு பணிமனையிலிருந்து கீழ்க்கண்ட 3 தடங்கள் 2006 ஆகஸ்ட் மாதத்திலிருந்து இயக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம்-திருப்போரூர் (வழி) செங்கல்பட்டு, கரும்பாக்கம் | 1 பேருந்து |
| 2. | அ. வேப்பங்கரணை—சென்னை | 1 பேருந்து |
| | ஆ. சாலவாக்கம்—தாம்பரம் | 1 பேருந்து |
| 3. | தாம்பரம்—செய்யூர் | 1 பேருந்து |

**49—**

## நகரப் பேருந்து

**வினா எண் 1286—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-பொன்விளைந்தகளத்தூர்-வள்ளிபுரம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு-வள்ளிபுரம் (வழி) பொன்விளைந்தகளத்தூர் தடம் செங்கல்பட்டிலிருந்து தினசரி இயக்கப்படும் புறநகர் பேருந்துகளின் 18 நடைகள்மூலமும் நகரப் பேருந்துகளின் 19 நடைகளின்மூலமும் நன்கு போக்குவரத்து வசதி பெறுகிறது. இத்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளின் அடர்வுக் குறைவு உள்ளதால், தற்பொழுது இயக்கப்படும் நகரப் பேருந்துகளே போதுமானதெனக் கருதப்படுகிறது.

**50—**

## புதிய நகரப் பேருந்து

**வினா எண் 2460—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

செங்கல்பட்டு-நீதிமன்றம்-ஐ.டி.ஐ.-இருங்குன்றம்பள்ளி-பழவேலி, நத்தம்-பழைய பேருந்து நிலையம்-புதிய பேருந்து நிலையம் மற்றும் சென்னேரி-அனுமந்தபுரம் வரையிலும் புதிய நகரப் பேருந்து இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு-நீதிமன்றம்-ஐ.டி.ஐ-இருங்குன்றம்பள்ளி-பழவேலி-நத்தம்-பழைய பேருந்து நிலையம்-புதிய பேருந்து நிலையம் சென்னேரி-அனுமந்தபுரம் தடத்தின் நீளம் 28.1 கி.மீ. ஆகும். இது செங்கல்பட்டு நகரைச் சுற்றிவிட்டு வெளியூருக்குச் செல்லும் ஒரு சுற்றுத்தடமாகும். இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் நன்கு போக்குவரத்து வசதி பெறுகிறது. பழவேலி, செங்கல்பட்டு புறவழிச் சாலையில் அமைந்துள்ளது. இத்தடத்தில் செங்கல்பட்டு பேருந்து நிலையத்திலிருந்து அனுமந்தபுரத்திற்கு நேரிடையாகச் சென்றால் 15.6 கி.மீ. ஆகும். எனவே, இத்தடத்தில் நேரிடையாகச் செல்லும் பயணிகள் சுற்றுத்தடமாக இருப்பதால் அதிகம் பயணம் செய்யமாட்டார்கள்.

**51—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 3249—திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியத்தில், திருவாரூர்-திருமருகல் (சின்னாநல்லூர், திருப்பதலூர், திருக்கண்ணபுரம் வழியாக) செல்லும் தமிழக அரசு பேருந்து எண் 13-ஐ மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 28 கி.மீ. ஆகும். முன்பு தட எண் ஏ13 இயக்கியபோது மக்கள் பயன்பாடு 33 சதவிகிதம் இருந்ததால் இத்தடத்தினை தொடர்ந்து இயக்கிட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் இத்தடத்தில் திருவாரூர்-சன்னாநல்லூர், சன்னாநல்லூர்-திருமருகல் தடத்தில் பகுதி பகுதியாகப் பேருந்து வசதி உள்ளது. மேலும், திருவாரூர்-திருமருகல் (வழி) ஆண்டிப்பந்தல்,

திருக்கண்ணபுரம் வழியாக தட எண் 350 மூலம் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகிறது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**52—**

## அரசுப் பேருந்து

**வினா எண் 5103—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் முதல் காரைக்கால் வரை அரசுப் பேருந்தை மீண்டும் இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காரைக்கால்-பூம்புகார் தடத்தில் ஒரு புறநகர் பேருந்து மூலம் கீழ்க்கண்ட நேரத்தில் நேரடிப் பேருந்து வசதி உள்ளது:

| காரைக்கால் | | பூம்புகார் | |
|---|---|---|---|
| சே.நே. | பு.நே. | சே.நே. | பு.நே. |
| - | 9.55 | 11.20 | - |
| 12.45 | - | - | 11.30 |

கோரிக்கை தடத்தில் காரைக்கால்-கருவிழந்தநாதபுரம்-பூம்புகார் எனப் பகுதி பகுதியாகக் கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி உள்ளது:

| தடத்தின் பகுதி | தட நீளம் கி.மீ. | தினசரி கழகப் பேருந்துகள் இயக்கப்படும் நடை விவரம் |
|---|---|---|
| காரைக்கால்-கருவிழந்தநாதபுரம் | 35 கி.மீ. | 112 நடைகள் |
| கருவிழந்தநாதபுரம்-பூம்புகார் | 10 கி.மீ. | 64 நடைகள் |

எனவே, பூம்புகார்-காரைக்கால் தடத்தில் நேரடிப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.





**53—**

## பேருந்து வசதி

**வினா எண் 6020—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் சுற்றுலா நகரமாக இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக காஞ்சிபுரத்திலிருந்து ஓசூர், திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் பெங்களூர் ஆகிய பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரத்திலிருந்து ஓசூர் மற்றும் பெங்களூர் செல்லும் பயணிகள், காஞ்சிபுரம் வழியாக இயக்கப்படும் 831 கே சென்னை-பெங்களூர் (வழி காஞ்சிபுரம், ஓசூர்) மற்றும் 834 கல்பாக்கம்-பெங்களூர் (வழி காஞ்சிபுரம், ஓசூர்) ஆகிய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை பயன்படுத்துகின்றனர். மேலும், காஞ்சிபுரத்திலிருந்து திருச்சி, மதுரை செல்லும் பயணிகள் அதன் வழியாக இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக தடம் எண் 995-ஐ (திருப்பதி-நாகர்கோவில் வழி காஞ்சிபுரம், திருச்சி, மதுரை) பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து-தஞ்சாவூர் செல்லும் பயணிகள் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மூலமாக காஞ்சிபுரத்திலிருந்து தஞ்சாவூருக்கு இயக்கப்படும் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் மூலம் காஞ்சிபுரத்திலிருந்து திருச்சிக்கு தற்போது இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழக ஒப்புதலும் அரசு அனுமதியும் பெற்று காஞ்சிபுரத்திலிருந்து பெங்களூர் செல்ல பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும். காஞ்சிபுரம்-திருவண்ணாமலை தடத்தில் தேவையின் அடிப்படையில் கூடுதல் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2008 ஜனவரி 24

54—

## பேருந்து வசதி

**வினா எண் 6380—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சக்கிலியன்குளம், உசிலம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து வாலாந்தூர், சொக்கத்தேவன்பட்டி வழியாக கிருஷ்ணாபுரத்திற்கு, சிந்துப்பட்டி, குமரன்பட்டி ஆகிய இடங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி-அய்யனார்குளம் வழித்தடத்தில் சொக்கத்தேவன் பட்டியிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் சக்கிலியன்குளம் அமைந்துள்ளது. இடையில் வேறு கிராமங்கள் இல்லை. இப்பகுதியில் பேருந்து இயக்கத்திற்கு ஏற்ற சாலை இல்லை. தற்போது இக்கிராம மக்கள் சொக்கத்தேவன்பட்டிக்கு வந்து உசிலம்பட்டியிலிருந்து சொக்கத்தேவன்பட்டி வழியாகப் பல்வேறு இடங்களுக்கு இயக்கப்படும் 32 தனி நடைகள் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். உசிலம்பட்டி-வி. காமாட்சிபுரம் சாலையில் புதுப்பட்டி கிராமத்திற்கு முன்பாக பிரதான சாலையிலிருந்து 0.7 கி.மீ. தூரத்தில் உட்புறமாக கிருஷ்ணாபுரம் அமைந்துள்ளது. இக்கிராமத்திற்கு செல்லும் சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. மக்கள்தொகை 250. தற்போது இக்கிராம மக்கள் கிருஷ்ணாபுரம் பிரிவு நிறுத்தம் வழியாக உசிலம்பட்டியிலிருந்து வி. காமட்சிபுரம், பேயம்பட்டி மற்றும் நடுப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு இயக்கப்படும் 18 தனி நடைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். இக்கிராமத்திற்கு 1.0 கி.மீ.-க்கும் குறைவான தூரத்திலேயே தேவைக்கேற்ப பேருந்து வசதிகள் உள்ளதால் உசிலம்பட்டி-கிருஷ்ணாபுரம் எனத் தனி பேருந்து இயக்கும் தேவை எழவில்லை என்று கருதப்படுகிறது. சிந்துப்பட்டி கிராமம் உசிலம்பட்டி-திருமங்கலம் தடத்தில் பிரதான சாலையில் உள்ளது. சிந்துப்பட்டி வழியாக உசிலம்பட்டி-திருமங்கலம் தடப் பேருந்துகள்மூலம் 26 தனி நடைகள் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர தனியார் புறநகர் பேருந்துகளும் போதிய அளவில் இயக்கப்படுகின்றன. எனவே, சிந்துப்பட்டி கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமானது என்று கருதப்படுகிறது.



2008 ஜனவரி 24]

55—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 8097—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், பொம்மிக்குப்பம் ஊராட்சி, மொழுகு கவுண்டர் வட்டம், ராச்சமங்கலம் ஊராட்சி வினாயகபுரம், திருப்பத்தூர்-கருப்பனூர், வெங்காயப்பள்ளி, பால்னாங்குப்பம் வழியாக ஏலகிரி கிராமம் ஆகிய பகுதிகளில் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர்-குமரன்நகர் (வழி) அனேரி, ராச்சமங்கலம், விநாயகபுரம், என டி22 நகரத் தடப் பேருந்துமூலம் 3 நடைகளும் டி6 நகரத் தடப் பேருந்துமூலம் 1 நடையும் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரிலிருந்து கருப்பனூர், வெங்காயப்பள்ளி வழியாக பால்னாங்குப்பம் வரை டி27 நகரத் தடப் பேருந்து தினசரி 3 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பால்னாங்குப்பத்திலிருந்து ஏலகிரி கிராமம் வரை உள்ள 1.0 கி.மீ. தூரம் உள்ள சாலை கனரக வாகனம் இயக்குவதற்கு ஏற்றவாறு இல்லை.

56—

## கூடுதல் பேருந்து இயக்கம்

**வினா எண் 8100—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் ஒன்றியம், காக்கானம்பாளையம் ஊராட்சி, சிங்கபாளையம், பொம்மிக்குப்பம் ஊராட்சி, ஏழருவிக்கு எ.கே. மோட்டூர் ஊராட்சி புதுப்பூங்குளம் ஆகிய பகுதிகளில் கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூரிலிருந்து சிங்கம்பாளையத்திற்கு 20எ மூலம் இயக்கப்பட்டு வந்த 6 நடைகளுடன் டி6 நகரத் தடத்தில் 4 நடைகள் மற்றும் டி32 நகரத் தடத்தில் 2 நடைகள் எனக் கூடுதலாக 6 நடைகள் 02-06-2006 முதல் இயக்கப்பட்டு வருகின்றன. திருப்பத்தூரிலிருந்து புதுப்பூங்குளத்திற்கு டி4, டீ23, டீ27 ஆகிய நகரப் பேருந்துகள்மூலம் இயக்கப்பட்டு வந்த 16 நடைகளுடன் 23 நகரப் பேருந்தில் திருப்பத்தூரிலிருந்து ஏ.கே. மோட்டூர் வழியாகப் புதுப்பூங்குளத்திற்கு 2 நடைகள் 14-08-2006 முதல் கூடுதலாக இயக்கப்படுகின்றன. திருப்பத்தூரிலிருந்து ஏழருவிக்கு டி2, டீ11 ஆகிய நகரப் பேருந்துகள் மூலம் 14 நடைகளும் 102பி புறநகர் பேருந்துமூலம் 2 நடைகளும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் பயணிகள் அடர்விற்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

**57—**

## கூடுதல் நகரப் பேருந்து

**வினா எண் 9475—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானமதுரையிலிருந்து கொன்னகுளம், சிப்காட் வழியாக, மல்லலுக்கு கூடுதலாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குருந்தங்குளம்-சாத்தரசன்கோட்டை 1.00 கி.மீ. தூரம் சாலை பேருந்து இயக்க தகுதியற்ற, மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் குருந்தங்குளத்தை அடுத்துள்ள தத்துபாலம் பழுதடைந்து செப்பனிடப்படாத நிலையில் உள்ளது. இருந்தபோதிலும், சாலை சுமாராக உள்ள குருந்தங்குளம் வரை 4 நடைகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, சாலை செப்பனிடப்பட்ட பிறகு பேருந்துகளை மல்லல் வரை கூடுதலாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

**58—**

## நகரப் பேருந்து

**வினா எண் 9555—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனத்திலிருந்து திருமாஞ்சோலை, ஏனாதி, தேளி, மடப்புரம் வழியாக சிவகங்கைக்கு நகரப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனத்திலிருந்து திருமாஞ்சோலை, ஏனாதி, தேளி, மடப்புரம் வழியாக சிவகங்கைக்கு நாள் ஒன்றுக்கு 5 நடைகள் வீதம் அரசு நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**59—**

## இரயில் நிலையத்திற்குப் பேருந்து வசதி

**வினா எண் 9663—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையத்திற்குப் பேருந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

வள்ளியூரிலிருந்து திருச்செந்தூர் செல்லும் பிரதான சாலையில் உள்ள வள்ளியூர் இரயில் நிலையம் விலக்கு வழியாக மூன்று நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 20 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த விலக்கிலிருந்து வள்ளியூர் இரயில் நிலையம் சுமார் 0.6 கி.மீ. தூரத்திலேயே உள்ளது. மேலும், வள்ளியூர்-திருச்செந்தூர் பிரதான சாலையில் சுமார் 20 நிமிடத்திற்கு 1 பேருந்து வீதம் புறநகர் பேருந்துகள் ஏராளமாகச் சென்று வருகின்றன. இப்பேருந்துகள் வள்ளியூர் இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள முருகன் கோயில் நிறுத்தத்தில் நின்று செல்கின்றன.

53-418—28

[2008 ஜனவரி 24

60—

## பேருந்து வசதி

**வினா எண் 9764—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு தொகுதி, உதயேந்திரம் முதல் அரங்கல்துருகம் வழி ஆம்பூர் செல்வதற்கு, ஆம்பூரிலிருந்து சின்னவரிகம், மிட்டாளம் மற்றும் கரும்பூர், கதவாளம், காரப்பட்டு, சுட்டகுண்டா, பொன்னபள்ளி வழியாக உதயேந்திரம் செல்வதற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடம், ஆம்பூர்-உதயேந்திரம் (வழி) மிட்டாளம், கரும்பூர், பொன்னபள்ளி, சுட்டகுண்டா, காரப்பட்டு என்பது ஒரு சுற்று வழித்தடமாகும். இச்சுற்று வழித்தடத்தின் நீளம் 52 கி.மீ. ஆகும். சுட்டகுண்டா, பொன்னபள்ளி இடையே உள்ள 1.5 கி.மீ. தூர சாலை கனரக வாகன இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. ஆம்பூரிலிருந்து வாணியம்பாடி வழியாக உதயேந்திரம் 19 கி.மீ. தூரத்தில் உள்ளது. அதேபோல் ஆம்பூரிலிருந்து சின்னவரிகம், மிட்டாளம், வெங்கடசமுத்திரம் வழியாக உதயேந்திரம் 25 கி.மீ. தூரத்தில் மட்டுமே உள்ளது. இருப்பினும், கோரிக்கை தடப் பகுதியில், ஆம்பூரிலிருந்து கதவாளம், அரங்கல்துருகம் வழியாக சுட்டகுண்டா வரை ஜி21 நகரப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆம்பூரிலிருந்து கரும்பூர் வழியாக அரங்கல்துருகம் வரை ஏ16 நகரப் பேருந்துமூலம் 11 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆம்பூரிலிருந்து சின்னவரிகம், மிட்டாளம், உதயேந்திரம் வழியாக வாணியம்பாடிக்கு ஏ10 நகரப் பேருந்துமூலம் 10 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆம்பூரிலிருந்து காரப்பட்டு வழியாக அரங்கல்துருகம் வரை ஏ10 ஸ்பெஷல் மற்றும் ஜி18 நகரப் பேருந்துகள் மூலம் 3 நடைகள் இயக்கப்படுகின்றன. வாணியம்பாடியிலிருந்து உதயேந்திரம் வழியாக அரங்கல்துருகத்திற்கு எ24 மற்றும் எ10 ஸ்பெஷல் நகரப் பேருந்துகள்மூலம் 5 நடைகள் இயக்கப்படுகின்றன.

61—

## பேருந்து வசதி

**வினா எண் 10722—திரு. வீ.ஏ.டி. கலிவரதன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

முகையூர் தொகுதிக்குட்பட்ட திருமன்றாயபுரம் சேத்தூர், மரங்கியூர், குயவன்காடுவெட்டி, அருள்வாடி, தணிக்கலாம்பட்டு, சிங்கினவாடி, காடலூர், தண்டரை ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

விழுப்புரம்-சேத்தூர் இடையே வழி திருவெண்ணைநல்லூர், பையூர், புறநகரத் தடம் எண் 135-ன்மூலம் இரண்டு சென்று வரும் நடைகளிலும், நகரத் தடம் எண் டி.5ஏமூலம் இரண்டு சென்று வரும் நடைகளிலும் 27-02-2007 தேதி முதல் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. விழுப்புரம்-குயவன்காடுவெட்டி இடையே ஆயந்தூர் அருள்வாடி காலனி, புதூர் வழியாகச் சென்று வரும் ஆறு நடைகளில் நகரத் தடம் எண் டி.22 மூலம் 15-12-2006 முதல் பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், திருக்கோயிலூர்-குயவன்காடுவெட்டி இடையே காடகனூர், ஆலம்பாடி, முகையூர் வழியாக சென்று வரும் 4 நடைகளிலும், கொடுங்கால் மீளச்செய்து சென்று வரும் 2 நடைகளிலும் திருக்கோயிலூர் கிளையினால் இயக்கப்படும் நகரத் தடம் எண் 22-ன்மூலம் 15-12-2006 முதல் பேருந்து வசதி அளிக்கப்பட்டு உள்ளது. தணிக்கலாம்பட்டு கிராமத்திற்கு வரும் நிதியாண்டில் புதிய நகரப் பேருந்துமூலம் பேருந்து வசதி அளிக்கும் திட்டம் உள்ளது. மரங்கியூர் ஆற்றில் பாலம் கட்டப்பட்ட பிறகு மரங்கியூருக்கு பேருந்து வசதி அளிப்பது பற்றிப் பரிசீலிக்க இயலும்.

62—

## புதிய பேருந்துப் பணிமனை

**வினா எண் 12065—திரு. கோ. அரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், திருவாலங்காட்டில் புதிய பேருந்துப் பணிமனை அமைக்கவும், அங்கிருந்து பல்வேறு ஊர்களுக்கு வழித்தடங்களை அமைத்துப் பேருந்து இயக்கவும் அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

திருவாலங்காடு சென்னை நகரிலிருந்து 69.0 கிலோ மீட்டரிலும், அரக்கோணத்திலிருந்து 17.0-வது கிலோ மீட்டரிலும், திருவள்ளூரிலிருந்து

[2008 ஜனவரி 24

18.0-வது கிலோ மீட்டரிலும், திருத்தணியிலிருந்து 30.0-வது கிலோ மீட்டரிலும் அமைந்துள்ளது. இவ்வூருக்கு சென்னை, திருத்தணி, திருவள்ளூர் மற்றும் அரக்கோணம் ஆகிய ஊர்களில் இருந்து தினசரி 67 நடைகள் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள்மூலம் பேருந்து வசதி உள்ளது. திருவாலங்காட்டிற்கு அருகிலேயே திருவள்ளூர், திருத்தணி பணிமனைகள் அமைந்துள்ளதால் திருவாலங்காட்டில் ஒரு பணிமனை அமைத்து அங்கிருந்து பல்வேறு ஊர்களுக்கு புதிய தடங்கள் இயக்க தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) லிமிடெட், காஞ்சிபுரம் மண்டலத்திடம் திட்டம் இல்லை.

**63—**

## பேருந்து வசதி

**வினா எண் 13414—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகம், மார்த்தாண்டம் கிளை பணிமனையிலிருந்து மார்த்தாண்டம், பள்ளிக்கோணம், சிதறால் வழியாக அருமனைக்கு இயங்கி வந்த தடம் எண் 86 F பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) அவ்வாறெனில், எந்த நாளிலிருந்து இயக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மார்த்தாண்டத்திலிருந்து மேல்புறம், அருமனை வழியாக மாறப்பாடி மற்றும் பள்ளிக்கோணம், சிதறால் வழியாக குலசேகரத்திற்கு இயக்கப்பட்டு வந்த தடம் எண் 86H மிகக் குறைந்த பயணி இருப்பு விகிதத்துடன் (40% to 50%) இருந்ததால் பல ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது. பள்ளிக்கோணம், சிதறால் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் கடந்த 19-09-2006 முதல் தடம் எண் 86F/89 மூலம் மார்த்தாண்டத்திலிருந்து பள்ளிகோணம், சிதறால் வழியாக குலசேகரத்திற்கு தினசரி 8 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.



2008 ஜனவரி 24]

**64—**

## புதிய பேருந்து இயக்குதல்

**வினா எண் 14061—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, பெரணமல்லூர் முதல் செஞ்சி வரை (வழி பெரணமல்லூர், கோட்டுப்பாக்கம், பூங்குணம், வளத்தி, செஞ்சி) புதிய பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பெரணமல்லூர்-செஞ்சி வழித்தடம் வழி இஞ்சிமேடு, மோட்சவாடி, ரெட்டிகுப்பம், கோட்டுப்பாக்கம், நல்லடிசேனை, பூங்குணம், கெங்கபுரம், தேவனூர், வளத்தி ஆகிய ஊர்கள் வழியாகச் செஞ்சியை அடைகிறது. மேற்படி தடத்தின் நீளம் 46 கி.மீ. ஆகும்.

பெரணமல்லூர் முதல் செஞ்சி வரை உள்ள கோட்டுப்பாக்கம், பூங்குணம், வளத்தி ஆகிய ஊர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு பகுதி வாரியாகப் பேருந்து வசதி உள்ளது:—

| வ. எண். | நகர தடம் | பேருந்தின் விவரம். | இயக்க ஆரம்பம். இயக்க முடிவு. | நடைகள். | பயன்பெறும் கிராமங்கள். |
|---|---|---|---|---|---|
| 1 | டி 18 | அரசுப் பேருந்து | ஆரணி-சேத்பட்டு வழியாக | 4 | கோட்டுப்பாக்கம் |
| 2 | டி 11ஏ | அரசுப் பேருந்து | சேத்பட்-தெள்ளார் | 6 | கோட்டுப்பாக்கம் |
| 3 | — | ராதாகிருஷ்ணா தனியார் பேருந்து | சேத்பட்-வந்தவாசி | 8 | பூங்குணம், வயலூர், நல்லடிசேனை |
| 4 | — | ரங்கசாமி தனியார் பேருந்து | தேசூர்-படவேடு | 4 | பூங்குணம், வயலூர், நல்லடிசேனை |
| 5 | 104டி | அரசுப் பேருந்து | வந்தவாசி-பெருவளூர் | 2 | பூங்குணம், வயலூர் நல்லடிசேனை |

[2008 ஜனவரி 24

| வ. எண் | நகர தடம். | பேருந்தின் விவரம். | இயக்க ஆரம்பம். இயக்க முடிவு. | நடை கள். | பயன்பெறும் கிராமங்கள். |
|---|---|---|---|---|---|
| 6 | 208 எம் | அரசுப் பேருந்து | திருவண்ணாமலை-சென்னை | 4 | பூங்குணம், வயலூர் நல்லடிசேனை |
| 7 | டி12 | அரசுப் பேருந்து | செஞ்சி-பூங்குணம் | 4 | பூங்குணம் |
| 8 | டி7 | அரசுப் பேருந்து | கெங்கபுரம்-செஞ்சி | 12 | வளத்தி |
| 9 | — | விஜயலட்சுமி தனியார் பேருந்து | கெங்கபுரம்-செஞ்சி | 8 | வளத்தி |

65—

## நகரப் பேருந்து

**வினா எண் 18537—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, கிராமப்புறங்களில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி நேரங்களுக்கு ஏற்ப நகரப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்தைச் சுற்றி உள்ள கிராமங்களுக்கு இயக்கப்படும் நகரப் பேருந்துகள் பள்ளி, மாணவ மாணவியருக்காக நெரிசல் நேரங்களில் கிராமங்களில் இருந்து காஞ்சிபுரத்திற்கு இயக்கப்படுகின்றன. சமீபத்தில் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் நகரத் தடம் எண் 66-ன்மூலம் காஞ்சிபுரத்திலிருந்து களக்காட்டூருக்கு பள்ளி மாணவ, மாணவியரின் நலனுக்காக காலையிலும், மாலையிலும் 4 குறுநடைகள் இயக்கப்படுகின்றன, குறிப்பிட்டு கோரிக்கை வைத்தால் தேவையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 ஜனவரி 24]

66—

## நகரப் பேருந்து இயக்கம்

**வினா எண் 20519—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, கீரனூர்-ராப்பூசல் வழி, இலுப்பூர், குரும்பட்டி வரை செல்லும் கே.5 நகரப் பேருந்தை தென்னலூர் வழியாக ஆலங்குளம் வரை நீட்டித்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கீரனூர்-ராப்பூசல் வழி, இலுப்பூர், குரும்பட்டி வரை செல்லும் கே.5 நகரப் பேருந்து தற்போது நாள் ஒன்றுக்கு 412.0 கி.மீட்டர் வரை போதிய கால அவகாசமின்றியும், பலமுனைத் திட்டத்தின் கீழும் இயக்கப்பட்டு வருவதால் இப்பேருந்தை மேலும் நீட்டித்து இயக்க வழிவகையில்லை.

67—

## நிறுத்தப்பட்ட பேருந்து இயக்கம்

**வினா எண் 24145—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியிலிருந்து சிதம்பரம் வரை இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சீர்காழி-சிதம்பரம் (வழி) புத்தூர், கொள்ளிடம், வல்லம்படுகை தடத்தின் நீளம் 20 கி.மீ. ஆகும். இத்தடங்களில் புறநகர் பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்பட்டு வருவதால் பயணிகள் நகரப் பேருந்துகளை பயன்படுத்திடாமல் புறநகர் பேருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக, மக்கள் பயன்பாடு இன்மையால் முன்பு இத்தடத்தில் இயக்கப்பட்ட நகரப் பேருந்து நிறுத்தப்பட்டது.

[2008 ஜனவரி 24

கோரிக்கை தடத்தில் தற்போதுள்ள புறநகர் பேருந்து வசதி பின்வருமாறு உள்ளது:—

| தடம் | இயக்கப்படும் நடைகளின் விவரம் | | | |
|---|---|---|---|---|
| | கழகம் | தனியார் | இதர போ. கழகம் | மொத்தம் |
| மயிலாடுதுறை-சீர்காழி-சிதம்பரம் | 148 | 96 | 8 | 252 |
| சிதம்பரம்-சீர்காழி-மயிலாடுதுறை | 144 | 102 | 11 | 257 |
| மொத்தம் | 292 | 198 | 19 | 509 |

கோரிக்கை தடத்தில் இயக்கப்பட்டு வரும் சாதாரண புறநகர் பேருந்துகள் அனைத்து நிறுத்தங்களிலும் நகர் பேருந்துகளைப் போன்று நின்று பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்கின்றன.

**68—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 28008—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்பட்ட எல்.எஸ்.எஸ். பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு சுங்குவார்சத்திரம், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி மற்றும் மதுரவாயல் வழியாகவும் சுங்குவார்சத்திரம், ஸ்ரீபெரும்புதூர், பூந்தமல்லி, கிண்டி, வடபழனி வழியாகவும் இயக்கப்பட்ட எல்.எஸ்.எஸ். பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.



2008 ஜனவரி 24]

**69—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 31199—திரு. பெ.க. விஜயகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஆரணி முதல் படவேடு வழி, அர்ஜுனாபுரம் வரை கட்டிப்பூண்டி ஊராட்சி, ஆரணி முதல் கட்டிப்பூண்டி வரை, வேலூர், படவேடு வரை பொத்தரை முதல் ஆரணி வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி-படவேடு (வழி) அர்ஜுனாபுரம் என தடம் எண் A12 தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தின் பயணிகளின் அடர்வு 34.56% தான் உள்ளது. ஆரணி-கட்டிப்பூண்டி (வழி) கேளூர் தடத்தின் நீளம் 26 கி.மீ. ஆகும். ஆரணி-ஆத்துவாம்பாடி (வழி) கட்டிப்பூண்டி கூட்டுச்சாலை என தடம் எண் ஏ2 தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 64.79% தான் உள்ளது. மேலும், போளூர்-துரிஞ்சிகுப்பம் (வழி) கட்டிப்பூண்டி என தினசரி 8 நடைகள் இயக்கப்படுகின்றன. வேலூர்-படவேடு (வழி) கண்ணமங்கலம் என நகரத் தடம் 4 நடைகளும், தடம் எண் 91 தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. மேலும் தனியார் பேருந்துகள் மூலமாக 18 நடைகளும் இயக்கப்படுகின்றன. ஆரணி-பொத்தரை (வழி) கேளூர் தடத்தின் நீளம் 28 கி.மீ. ஆகும். ஆரணி-ஆத்துவாம்பாடி (வழி) பொத்தரை கூட்டுச்சாலை என ஏ2 தடத்தில் தினசரி 12 நடைகள் இயக்கப்படுகின்றன. இத்தடத்தில் பயணிகள் அடர்வு 64.79% தான் உள்ளது. இத்தடத்திலுள்ள அனைத்து கிராம மக்களும் அருகிலுள்ள நகரங்களுக்கு சென்றுவரப் போதிய பேருந்துகள் உள்ளன.

[2008 ஜனவரி 24

70—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 31203—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், ஏரிகுப்பம் ஊராட்சி, படவேடு முதல் ஆரணி வரை இயக்கப்படும் பேருந்தை ஏரிக்குப்பம் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி-படவேடு என தடம் எண் 1/A நான்கு நடைகளும், 1/B நான்கு நடைகளும் 4/A நான்கு நடைகளும் என தினசரி 12 நடைகள் ஏரிக்குப்பம் வழியாக இயக்கப்படுகின்றன. இத்தடத்தின் சராசரி பயணிகளின் அடர்வு 41% தான் உள்ளது. போக்குவரத்துக்கு தற்போது உள்ள நடைகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

71—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 31204—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், போளூர்-கிடாம்பாளையம் வரை இயக்கப்படும் பேருந்தை மாம்பட்டு- எழுவாம்பாடி வழியாக எடப்பிறை வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

போளூர்-கிடாம்பாளையம் (வழி) மாம்பட்டு, எழுவாம்பாடி மற்றும் எடப்பிறை தடத்தின் நீளம் 28 கி.மீ. ஆகும். இது ஒரு சுற்று வழித்தடமாகும். போளூர் முதல் எடப்பிறை வரை வழி மாம்பட்டு, எழுவாம்பாடி நகரப் பேருந்து 4 நடைகள் இயக்கப்படுகின்றன. இதன் பயணிகளின் அடர்வு 35% தான் உள்ளது.



2008 ஜனவரி 24]

72—

## பேருந்து இயக்கம்

**வினா எண் 33411—திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவிலிலிருந்து உடையூர் வரை இயக்கப்பட்ட டி40 ஆம் எண் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகரப் பேருந்து தடம் எண் டி40 காட்டுமன்னார்கோவில்-குஞ்சமேடு இடையே அழிஞ்சிமங்கலம் சந்திப்பு சாலை, மா.உடையூர், தில்லைநாயகபுரம் வழியாக நாளொன்றுக்கு 6 நடைகள் பேருந்து வசதி அளிக்கப்பட்டது. இவ்வழித்தடப் பகுதி மக்கள் இந்நடைகளை நன்கு பயன்படுத்தாத காரணத்தால் பயணியர் புழக்கம் மிகவும் குறைந்து காணப்பட்டது. எனவே, இந்நடைகளை துண்டித்து நகரத் தடம் டி23-ல் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் நகரப் பேருந்து தடம் எண் டி23 மூலம் சிதம்பரம்—முட்டம் இடையே குமராட்சி, அழிஞ்சிமங்கலம் சந்திப்பு சாலை, மா.உடையூர், குஞ்சமேடு வழியாக நாளொன்றுக்கு 10 நடைகள் பேருந்து வசதி அளிக்கப்படுகிறது.

73—

## கூடுதல் பேருந்து இயக்கம்

**வினா எண் 34059—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, ஆரணியிலிருந்து களம்பூர் வழியாக இரவு 10.30 மணிக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தடம் எண் 163 ஆரணியிலிருந்து இரவு 22.35 மணிக்கு புறப்பட்டு களம்பூர் வழியாக திருவண்ணாமலைக்கு 23-01-2007 முதல் இயக்கப்பட்டு

[2008 ஜனவரி 24

வருகிறது. இத்தடத்தில் ஆரணி, திருவண்ணாமலை பயணிகள் அடர்வு 40 சதவிகிதம்தான் உள்ளது. எனவே, கூடுதலாக ஒரு பேருந்து இயக்க சாத்தியமில்லை.

**74—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 35915—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஆலம்பள்ளம் ஊராட்சிக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை-ஆலம்பள்ளம் கிராமம் (வழி) ஆலத்தூர் தடத்தின் நீளம் 14 கி.மீ. ஆகும். பட்டுக்கோட்டை-ஆலம்பள்ளம் கிராமம் (வழி) நாட்டுச்சாலை, வேப்பங்குளம் தடத்தின் நீளம் 14 கி.மீ. ஆகும். ஆலம்பள்ளம் கிராமம், ஆலத்தூரிலிருந்து 4 கி.மீ. தூரத்திலும், வேப்பங்குளத்திலிருந்து 3.5 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. ஆலத்தூர்-மதுக்கூர் (வழி) ஆலம்பள்ளம் தடத்தில் தனியார் மினி பேருந்து ஒன்று தினசரி 10 நடைகள் இயங்கி வருகிறது. பட்டுக்கோட்டை-ஆலத்தூர் (வழி) செண்டாங்காடு, ஆலம்பள்ளம் தடத்தில் இயக்கப்பட்ட தனியார் மினி பேருந்து ஒன்றும், ஆலத்தூர்-மதுக்கூர் (வழி) ஆலம்பள்ளம் தடத்தில் இயக்கப்பட்ட தனியார் மினி பேருந்து ஒன்றும், இயக்கப்பட்ட நடைகளில் போதிய மக்கள் பயன்பாடு மற்றும் வருவாய் அமைந்திடாத நிலையில் நிறுத்தம் செய்யப்பட்டன.

**75—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 38549—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) மானாமதுரையிலிருந்து மேலப்பசலை, சின்னக்கண்ணனூர் வழியாக வீரசோழன் வரை இயக்கப்பட்ட நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து மேலப்பசலை வழியாக சின்னக்கண்ணனூர் வரை 8 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. சின்னக்கண்ணனூரிலிருந்து வீரசோழன் செல்லும் சாலையில் கிழவிக்குளத்தை அடுத்து சுமார் 5 மீட்டர் தூரம் சாலை மிகவும் பழுதடைந்து பேருந்து செல்ல இயலாத நிலையில் உள்ளது.

**76—**

## பேருந்து இயக்கம்

**வினா எண் 38552—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலிருந்து சிப்காட், வேலூர், பெரியகோட்டை வழியாக வேம்பத்தூர் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையிலிருந்து சிப்காட் வழியாக வேலூர் வரைக்கும், சிவகங்கையிலிருந்து பெரியகோட்டை வழியாக வேம்பத்தூருக்கும் பகுதி, பகுதியாக பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**77—**

## புதிய கட்டடம்

**வினா எண் 9221—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஜனவரி 24

வால்பாறை அரசு மருத்துவமனையில் கட்டியுள்ள புதிய கட்டடத்தை விரைவில் திறந்து வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனையில் கட்டியுள்ள புதிய கட்டடம் தற்போது பயன்பாட்டில் உள்ளது.

**78—**

### தொற்று நோய் வார்டு

**வினா எண் 9349—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவ மனையில் தொற்று நோய் வார்டு தனியாக கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் தொற்று நோய் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இவர்களுக்கு தற்சமயம் மருத்துவ சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேல் சிகிச்சை தேவைப்படின் அருகில் உள்ள வால்பாறை அரசு மருத்துவமனைக்கு நோயாளிகள் அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் தொற்று நோய்க்கு தனியாக வார்டு தேவையில்லை.

**79—**

### தனி வார்டு

**வினா எண் 9356—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஜனவரி 24]

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி அரசு மருத்துவமனையில் தொற்று நோய்க்கு தனி வார்டு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி அரசு மருத்துவமனையில் தொற்று நோய் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இவர்களுக்கு தற்சமயம் மருத்துவ சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேல் சிகிச்சை தேவைப்படின் அருகில் உள்ள வால்பாறை அரசு மருத்துவமனைக்கு நோயாளிகள் அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி அரசு மருத்துவமனையில் தொற்று நோய்க்கு தனியாக வார்டு தேவையில்லை.

**80—**

### இ.சி.ஜி.-க்கு தனி அறை

**வினா எண் 14866—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு மருத்துவமனையில் **இ.சி.ஜி.** பார்ப்பதற்குத் தனி அறை ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு மருத்துவமனையில் இருதய செயல்பாட்டினைத் தெரிவிக்கும் கருவி (ECG) மருத்துவமனையின் வெளிநோயாளிகள் சிகிச்சை பெறும் பகுதியில் தனி அறையில் செயல்பட்டு வருகிறது.

[2008 ஜனவரி 24

**81—**

## மின் ஆக்கி வழங்குதல்

**வினா எண் 15755—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு மின் ஆக்கி (ஜெனரேட்டர்) வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனை 16 படுக்கைகள் கொண்ட வட்டம் சாரா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் 1 கே.வி.ஏ. மின்ஆக்கி செயல்பட்டு வருகிறது.

**82—**

## கூடுதல் கட்டடங்கள்

**வினா எண் 17173—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறையிலுள்ள குழந்தைகள் நல மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டி புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறையிலுள்ள அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நலப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு,



2008 ஜனவரி 24]

மருத்துவமனைக்கு வரும் குழந்தை நோயாளிகளின் எண்ணிக்கைக்குப் போதுமானதாக உள்ளது. எனவே, குழந்தை நோயாளிகளைக் கவனிப்பதற்கு, இப்பிரிவிற்கு கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**83—**

## வீட்டு வசதி வாரிய வீடுகள்

**வினா எண் 34570—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டி விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரையில் தேவையான நிலம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசம் இல்லாததால் புதிய திட்டங்கள் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

**84—**

## படகுப் போக்குவரத்து

**வினா எண் 13408—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் அணையிலிருந்து தெர்மல் பாலம் வழியாக முதல் தடுப்பணை வரை படகுப் போக்குவரத்து தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

மேட்டூர் அணையிலிருந்து தெர்மல் பாலம் வழியாக படகுப் போக்குவரத்து தொடங்குவது சம்பந்தமான எந்தவித செயற்குறிப்பும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் இல்லை.

**85—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 32446—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடவூர் பொன்னணியாறு அணையில் சுற்றுலாத் தலம் அமைப்பது எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

2006-2007 ஆம் ஆண்டில் கரூர் மாவட்டம், பொன்னணி அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலா அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் (மாநில அரசுப் பங்கு ரூ.12.50 இலட்சம் + மாவட்ட நிர்வாகப் பங்கு ரூ.12.50 இலட்சம்) பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டு மாநில அரசுப் பங்கு ரூ.12.50 இலட்சம் கரூர் மாவட்ட ஆட்சியரிடம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளின் முன்னேற்ற விவரங்கள் இணைப்பில் உள்ளன.



## இணைப்பு-2

### கரூர் மாவட்டம், பொன்னணியாறு அணைக்கட்டுப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

| வ. எண் (1) | திட்டப் பணிகளின் விவரம் (2) | தொகை (ரூ. இலட்சத்தில்) (3) | பணிகளின் தற்போதைய நிலை (4) |
|---|---|---|---|
| 1 | புல்வெளி சார்ந்த பூங்கா அமைத்தல் | 2.60 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | பூங்கா பகுதியில் மின் விளக்குகள் அமைத்தல் | 2.50 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3 | நடைபாதைகள் அமைத்தல் | 3.70 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4 | நீரூற்றுகள் அமைத்தல் | 2.35 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 5 | முள் கம்பி வேலி அமைத்தல் | 1.95 | பணிகள் நிறைவு பெற்றன. |
| 6 | பூங்கா பகுதி வாய் நீரோடைகள் பழுது பார்த்தல் | 2.00 | பணிகள் நிறைவு பெற்றன. |
| 7 | பொம்மைகள் மற்றும் அழகுப் பொருட்கள் அமைத்தல் | 1.00 | பணிகள் நிறைவு பெற்றன. |
| 8 | இருக்கை வசதி செய்தல் | 1.00 | பணிகள் நிறைவு பெற்றன. |
| 9 | உருவச் சிலைகள் அமைத்தல் | 2.00 | பணிகள் நிறைவு பெற்றன. |
| 10 | அலங்கார மரங்கள் அமைத்தல் | 2.00 | பணிகள் நிறைவு பெற்றன. |

[2008 ஜனவரி 24

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) | பணிகளின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 11 | படகுப் போக்குவரத்து வசதி | 1.20 | முகமை தேர்வு செய்யப் பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்பட உள்ளன. |
| 12 | படகுக் குழாம் அமைத்தல் மற்றும் சங்கிலி தடுப்பு வசதி | 1.00 | முகமை தேர்வு செய்யப் பட்டுள்ளது. பணிகள் தொடங்கப்பட உள்ளன. |
| 13 | குடிநீர் வசதி | 2.20 | பணிகள் நிறைவு பெற்றன. |
| | மொத்தம் | 25.00 | |

**86—**

## குடிசை மாற்று வாரிய விடுகள்

**வினா எண் 11853—திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி, 92-வது வட்டத்தில் உள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான 18 கிரவுண்ட் நிலத்தில் உள்ள உடல் ஊனமுற்றோர் இல்லம் உள்ளது போக மீதமுள்ள 14 கிரவுண்டு நிலத்தில் குடிசை மாற்று வாரியம்மூலம் வீடுகளைக் கட்டி அப்பகுதி ஏழை மக்களுக்கு ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.



2008 ஜனவரி 24]

**87—**

## குடிசை மாற்று வாரிய விடுகள்

**வினா எண் 29464—திருமதி பதர் சயீத்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவல்லிக்கேணி தொகுதி, கஸ்தூர்பாய் மருத்துவமனை நடைபாதைவாசிகளுக்கு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் வீடுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**88—**

## மகளிர் விடுதி

**வினா எண் 6311—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, மங்கலம், கலசப்பாக்கம் பகுதியில் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்காக புதிய மகளிர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2007-2008 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 50 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

[2008 ஜனவரி 24

சீர்மரபினர் விடுதிகள் புதிதாகத் துவங்க ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது கலசப்பாக்கம் தொகுதி, மங்கலம், கலசப்பாக்கம் பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியருக்காக புதிய மகளிர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

### பனைத் தொழிலாளர்கள்

**வினா எண் 28436—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் நலிவடைந்த பனைத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டின் பனை மரத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைச் செயல்படுத்த 1-9-2006 முதல் தனியே தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டு அவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு இயற்கை மரண மற்றும் விபத்து மரண உதவி, ஈமச்சடங்கு உதவி, கல்வி, மகப்பேறு, திருமண உதவி, ஓய்வூதியம் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஓமலூர் தொகுதியிலுள்ள பனைமரத் தொழிலாளர்களும் இத்திட்டத்தின் பலன்களை, இவ்வாரியத்தில் பதிவு செய்து பயன் பெறலாம். அரசின் பகுதி-2 திட்டத்தின்கீழ் பனம்பத்தல் அடிக்கும் இயந்திரம் மற்றும் பனந்தும்பு சீவும் இயந்திரம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மானியமாக ஓமலூருக்கு அருகில் உள்ள, சேலம் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்குச் சொந்தமான ஜலகண்டாபுரம் கிளைக்கு அனுமதிக்கப்பட்டு, தற்பொழுது, மேற்படி இயந்திரங்கள் நிறுவும் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மேற்படி பணி முடிந்தவுடன் விரைவில் பனந்தும்பு உற்பத்தி துவக்கப்பட உள்ளது. ஓமலூர் பகுதியைச் சார்ந்த பனைத் தொழிலாளர்கள் அருகிலுள்ள கிராமங்களிலிருந்து பனம்பத்தலை ஜலகண்டாபுரம் கிளையில் விற்பதன்மூலமாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.100-க்கு குறையாமல் வருமானம் ஈட்ட முடியும். எனவே, ஓமலூர் பகுதியைச் சார்ந்த நலிவடைந்த பனைத் தொழிலாளர்களுக்கு இதனால் மிகுந்த வேலைவாய்ப்பு கிடைக்கும்.



2008 ஜனவரி 24]

**90—**

### மின் கம்பிகளை மாற்றுதல்

**வினா எண் 7903—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் குமரக்கோயில் மேல வீதியில் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் மின் இணைப்பில் மின் கம்பிகள் ஏதும் தாழ்வாக இல்லை. குமரக்கோயில் மேல வீதியில் மின் கம்பிகள் தாழ்வாக உள்ளது. மேற்படி குறைபாடு தமிழ்நாடு மின்சார வாரியத்தின்மூலம் சரி செய்யப்பட வேண்டும். மின் வாரியத்திற்கு இது குறித்து தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**91—**

### தங்கும் விடுதி

**வினா எண் 8828—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருவெண்காடு கோயிலுக்கு தங்கும் விடுதி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக 65 அடி நீளம் 35 அடி அகல பரப்பளவில் நான்கு அறைகள் கொண்ட பக்தர்கள் தங்கும் விடுதி உள்ளது. இவ்விடுதி சுற்றுலாத் துறை நிதியுதவிமூலம் ரூ.1.55 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டு நல்ல நிலையில் பக்தர்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் வசதியினை அதிகரிக்கும் நோக்குடன் சுற்றுலாத் துறைமூலம் வழிபாட்டுத் தலங்கள் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 6 அறைகள் கொண்ட தங்கும் விடுதி, டார்மிட்டரி ஹால் மற்றும் குளியலறை, கழிவறைகள் கட்டடவேண்டி சுற்றுலாத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு மேற்காணும் மேம்பாட்டு வசதிகளைச் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**92—**

### தங்கும் விடுதி

**வினா எண் [illegible]—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, திருக்கடையூர் அபிராமி அம்மன் கோயிலுக்கு தங்கும் விடுதி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர், அருள்மிகு அமிர்தகடேச்வரர் திருக்கோயில் (அபிராமி அம்மன் கோயில்) இந்து சமய மற்றும் அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தில் இருந்துவரும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.43.45 இலட்சமாகும்.



2008 ஜனவரி 24]

இத்திருக்கோயிலில் 13 அறைகள் கொண்ட பக்தர்கள் தங்கும் விடுதி உள்ளது. மேலும் பக்தர்கள் வசதிக்காக இத்திருக்கோயிலின் வடபுறம் உள்ள காலியிடத்தில் 10 அறைகள் சுமார் ரூ. 30 இலட்சம் செலவில் கட்ட உத்தேசிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**93—**

### புதிய பாலம்

**வினா எண் 34106—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, நல்லாடை ஊராட்சி முடிவில் காரைக்கால் மாவட்டம் தொடங்கும் இடத்திலுள்ள பாலத்தை அகற்றி புதிய பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) பூம்புகார் தொகுதி, நல்லாடை ஊராட்சி முடிவில் அமைந்துள்ள பாலம், புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தைச் சார்ந்தது. இப்பாலம் புதுவை பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலுள்ளது. எனவே, மேற்கண்ட பாலத்திற்குப் பதிலாக இவ்வரசு புதிய பாலம் கட்ட இயலாது. ஆயினும், புதுச்சேரி அரசிடம் இது தொடர்பாக தனியே கோரிக்கை அனுப்பப்படும்.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**94—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11530—திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம் மறவமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஜனவரி 24

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே நான்கு கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் பெயர்கள் பின்வருமாறு:

1. பாகனேரி, 2. பெரியகண்ணனூர் 3. சிலுக்குப்பட்டி 4. காளையார்கோவில். மேலும் மறவமங்கலம் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு மேற்படி கால்நடை மருந்தகங்கள் மற்றும் மறவமங்கலம் கால்நடைக் கிளை நிலையத்தின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுவதால் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் மறவமங்கலம் கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**95—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11783—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மனாபபுரம் தொகுதி, கோழிப்போர்விளையில் கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கு அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கோழிப்போர்விளை கிராமத்திற்கு அருகில் காட்டாத்துறை, பள்ளியாடி ஆகிய கால்நடை மருந்தகங்கள் 5 கி.மீ. தொலைவிலும், மூலச்சல் கால்நடைக் கிளை நிலையம் 5 கி.மீ. தொலைவிலும், திக்கணங்கோடு கால்நடைக் கிளை நிலையம் 4 கி.மீ. தொலைவிலும் செயல்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், கோழிப்போர்விளை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் எதுவும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாகப் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.



2008 ஜனவரி 24]

**96—**

### கால்நடை மருத்துவப் பயிற்சி மையம்

**வினா எண் 36701—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவப் பயிற்சி மையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) முகையூர் ஒன்றியத்தில் கால்நடைப் பயிற்சி மையம் துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

**97—**

### கூடுதலாக மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 39650—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் கால்நடை மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முத்தனேந்தலில் ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. அனைத்து கால்நடை மருந்தகங்களுக்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர் பதவி மட்டுமே ஒப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி கால்நடை மருந்தகத்திற்கு கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்ய வாய்ப்பில்லை.

[2008 ஜனவரி 24

**98—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 6951—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், நெல்லிவாசல் நாடு ஊராட்சி, சேம்பறை கிராம மலைவாழ் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், நெல்லிவாசல்நாடு ஊராட்சி, சேம்பறை கிராமத்தில் மலைவாழ் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கீழ்க்கண்டவாறு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன:—

| வ. எண் | திட்டம் | ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பழங்குடியினர் நலத் திட்டம் | 2004-05 | 8 |
| 2 | இயற்கை இடர்ப்பாடு திட்டம் (தீ விபத்தினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு) | 2006-07 | 22 |

**99—**

## மூடப்பட்டுள்ள நூற்பு மையம்

**வினா எண் 34252—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தியில் மூடப்பட்டுள்ள நூற்பு மையத்தினை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஜனவரி 24]

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தாரமங்கலம் தொகுதி அமரகுந்தி கிராமிய நூற்பு நிலைய மையத்தை மீண்டும் திறந்து செயல்படுத்திட இராட்டைகள் தேவைப்படுகின்றன. சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை வழியாக SGSY திட்டத்தின்மூலம் இராட்டைகளைப் பெற்று மீண்டும் நூற்பு மையம் திறக்க வாரியம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(ஆ) சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் தொகை பெற்ற பின்னர் நூற்பு மையம் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**100—**

## கதர்த் துணி விற்பனை

**வினா எண் 39729—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கதர்த் துணிகளை உயர்ந்தரக நூல்கள்மூலம் உற்பத்தி செய்து, விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தற்போது நல்ல தரமான நூல்களைக் கொண்டே கதர்த் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான நூல்களை மத்திய அரசின் கதராணையரகத்திலிருந்து கொள்முதல் செய்யப்படும் பஞ்சினைக் (சிலைவர்) கொண்டே தரமான முறையில் தயார் செய்து கதர்த் துணி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2008 ஜனவரி 24

## 3. அறிவிப்பு

### அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவைக்கு உறுப்பினர்கள் தேர்வு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு (Senate) அலுவல்சாரா உறுப்பினர்களாகப் பணியாற்ற மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்ற கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பெறும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 5-12-2010 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவையில் அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 28-1-2008 மாலை 4-00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனுப் படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வேட்பு மனுக்கள் 29-1-2008 அன்று மாலை 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 29-1-2008 அன்று மாலை 4-00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு அலுவல்சாரா உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கை அளித்தல் மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.



2008 ஜனவரி 24]

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 25 முதல் 28 வரையான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாளன்று சட்டப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு" தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றி உடையவர்களாவார்கள்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழி மொழிதல், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள் முன்மொழிந்த மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்குதல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 13-வது சட்டப் பேரவையின் 7-வது கூட்டத் தொடரில் நம்முடைய மேதகு ஆளுநர்

---

* 333 முதல் 365 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்து, பேசுகின்ற இந்த அரிய வாய்ப்பினை எனக்கு அளித்த, உலகத் தமிழர்களின் உன்னதமான அடையாளமாகத் திகழ்கின்ற முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர் வணக்கத்திற்குரிய தமிழக நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தப் பேரவைக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் புலப்படுத்திக்கொள்வதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இந்த வாய்ப்பினை எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன், பெருமையடைகிறேன், பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆளுநர் உரை என்பது ஒரு சடங்கு என்றிருந்த காலம் மெல்ல, மெல்ல மறைந்து, இப்போது தமிழகத்தின் மூலை முடுக்குகளிலே வாழ்ந்து வருகின்ற அடித்தட்டு மக்களும் ஆவலுடன் எதிர்பார்க்கின்ற உரைகளாக அவர்களுக்கெல்லாம், மகிழ்ச்சியை, உற்சாகத்தைத் தருகின்ற ஒன்றாக இருப்பது பாராட்டுக்குரியது. பால் நினைந்து ஊட்டும் தாய் என விளங்கி வரும் தலைவர் கலைஞர் அவர்கள்— குழந்தை பாலுக்காக அழட்டும், அதன்பிறகு பால் தரலாம் என எந்தத் தாயும் காத்திருப்பதில்லை. அதைப்போலத்தான்—வாக்களித்த தமிழ்நாட்டு மக்கள் கேட்கட்டும் என அதற்காகக் காத்திராமல், அவர்கள் கேட்காமலேயே அவர்களது தேவையை அறிந்து திட்டங்களை அறிவித்து நிறைவேற்றுபவர் என்பதற்குச் சான்றாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

*முற்பகல் 10—45*

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது ஒரு சாரார்க்கே என்ற நிலை மாறி, "தை பிறந்தால், ஆளுநர் உரை இருக்கும், அதிலே நல்ல திட்டம் இருக்கும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று பாமர மக்களும், "ஆடுவோமே, பள்ளு பாடுவோமே" என்று ஆனந்தம் அடைவதாக ஆளுநர் உரை அமைந்திருப்பதை மனதார வரவேற்கிறேன்.

இந்த ஆண்டில் அரசு என்னென்ன மக்கள் நலத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்த இருக்கிறது என்பதை, ஆளுநர் உரை குறிப்பிட்டுக் காட்டுவதாக அமைந்தாலும், கடந்த ஆண்டுகளில் அரசின் செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதன் அடிப்படையிலே இந்த ஆளுநர் உரை சீர்தூக்கிப் பார்க்கப்படுகிறது. அந்த வகையில் ஆளுநர் உரையின் 13-வது பத்திக்கு மாண்புமிகு உறுப்பினர்களின்



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

மேலான கவனத்தை ஈர்க்க விழைகிறேன். "2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுவதுடன், சமையல் எண்ணெய், பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் நியாய விலைக் கடைகள்மூலம் கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றன" என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதேநேரம், கழக அரசு பதவியேற்றபின் நடந்த 13-வது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரை மீதான விவாதத்தை எண்ணிப் பார்க்கிறேன். 2006 ஆம் ஆண்டு, மே மாதம், 26 ஆம் தேதி நடைபெற்ற அந்த விவாதத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் ஒரே கருத்தைத் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்கள். "நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சிப் பீடத்திற்கு வந்தீர்கள்" என்று கூறினார்கள். ஆனால் நடந்தது என்ன? அரிசி மாத்திரமல்ல, சமையல் எண்ணெய், பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களும் மலிவு விலையில் இப்போது கொடுக்கப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டின் புள்ளிவிவரப்படி தமிழ்நாட்டில் 22 சதவீத மக்கள், அதாவது 1 கோடியே 40 இலட்சம் பேர், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாக அறிகிறோம். அரை வயிற்றுக் கஞ்சிக்கே போராடிக் கொண்டிருந்த இந்த பாமர மக்களின் நிலையை உணர்ந்து, அவர்களின் வயிற்றில் பாலை வார்த்தவர் நமது முத்தமிழ் அறிஞர் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை, வரலாறு வைர வரிகளில் பதிவு செய்து கொண்டிருக்கிறது. இந்தப் பாமரர்களின் பசிக் கொடுமையை 45 வகையான அறுசுவை உணவு படைப்பவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

2 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி திட்டத்தின் மகத்துவத்தைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்தத் திட்டத்தினால் பாமர மக்களின் வாங்கும் சக்தி–purchasing power–அதிகரித்தது, முதலாளிகளிடம் பேரம் பேசும் சக்தி–bargaining power–அதிகரித்தது. செலவு குறைந்ததால் சேமிப்பும் அதிகரித்தது. கேள்விமேல் கேள்வி கேட்டவர்கள் வாயடைத்துப் போய் நிற்கின்றார்கள். இத்திட்டத்திற்கு எங்கிருந்து பணம் வரும் என்று கேட்டார்கள். மணிமேகலையின் அமுதசுரபியிலிருந்து வருவதைப்போல, இப்போது அரிசியும் பருப்பும் வாரி வழங்கப்படுவதைக் கண்கூடாகக் கண்டு பிரமித்து நிற்கின்றார்கள்.

பத்து, ஐந்தாண்டுத் திட்டங்களில் நிகழ்த்த முடியாத ஒரு மாற்றத்தை இந்தத் திட்டம் நிகழ்த்திக் காட்டியிருப்பதை இந்தப் பேரவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

ஆளுநர் அவர்கள் உரையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது, 53 ஆம் பத்தியில் ஆளுநர் கூறிய தகவலைக் கேட்டு என் கண்கள் நன்றிப் பெருக்கால் குளமாயின. "அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால் அவர்கள்தம் முன்னேற்றத்திற்கு சிறப்புச் சலுகை அளிப்பது அவசியம் எனக் கருதி, (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இட ஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள் ஒதுக்கீடு வழங்குவது பற்றி அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது" என்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் நமக்குச் சுட்டிக்காட்டியிருப்பது, அந்தச் சமூகத்தைச் சேர்ந்த என்னைப் போன்றவர்களை சட்டசபை உறுப்பினராக்கி, பேரவையின் துணைத் தலைவராக்கியபோது, நான் அடைந்த மகிழ்ச்சியைவிட பல மடங்கு மகிழ்ச்சியடைந்தேன் என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தின் அடிமட்டத்தில் எப்படிப்பட்ட இன்னல்களையெல்லாம் சந்தித்துக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்தினர் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிந்து வைத்துக்கொண்டு, அந்தச் சமூகத்தினரை மனதில் வைத்து, இப்படி ஒரு அறிவிப்பை வெளியிட்டதன்மூலம், அருந்ததியர் சமூகத்தினரை மகிழ்ச்சியில் திக்குமுக்காட வைத்திருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு இந்தச் சமுதாயத்தின் சார்பில் (மேசையைத் தட்டும் ஒலி) என் நெஞ்சம் நிறைந்த நன்றியை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

இங்கே ஒன்றை நான் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். கேட்டதைக் கொடுப்பவர்கள் தலைவர்கள், அவர்களும் மனிதர்களிலே அடக்கம். ஆனால், கேட்காமலே கொடுப்பவரைப் "புனிதர்" என்று இந்த உலகம் போற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அத்தகைய "புனிதராகவே" மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே காட்சி தருகிறார்கள். இரண்டு பிள்ளைகளில் அழுகின்ற பிள்ளைக்கு மட்டும் பால் கொடுத்துவிட்டுச் செல்லாமல், அழுவதற்கே சக்தியற்று நலிந்து போயிருக்கும் பிள்ளைகளுக்கும் பால் கொடுக்கின்ற தாய். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்திற்குரிய அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த புனிதரை நாங்கள் தாயாகவே பார்த்து வணங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

சமுதாயப் புரட்சி என்று போற்றப்படுகின்ற இந்தத் திட்டத்தைக் கூறிய ஆளுநர் அவர்கள், 55-வது பத்தியில் சமூக நீதி காக்கும் மற்றொரு தகவலையும் தந்துள்ளார்கள். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம்தான் பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் கலைஞரை விட வேறு யார் நன்கறிவார்கள்! சிறுபான்மையினர் நலனுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திய பெருமைக்குரியவரல்லவா நமது முதல்வர்!

இஸ்லாமியப் பெருமக்களும், கிறித்துவப் பெருமக்களும் நீண்ட நாட்களாக இட ஒதுக்கீடு கோரி வந்தனர். அரசியலமைப்புச் சட்டத்தையும், நீதிமன்றத் தீர்ப்புகளையும் சுட்டிக்காட்டி அந்த இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டு வந்தது. ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள், 'மனம் உண்டேல் மார்க்கம் உண்டு' என்பதை செயல் மூலம் தெரிவித்துள்ளார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கான 30 சதவீதத்தில், தலா 3.5 சதவீத ஒதுக்கீட்டை இரு பிரிவினருக்கும் கொடுக்க வகை செய்தது (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய அரசியல் சாணக்கியம் என்னும் மகுடத்தில் மற்றுமோர் மாணிக்கக் கல்லாகும். இவ்வாறு சிறுபான்மையினருக்கு, மைனாரிட்டி வகுப்பினருக்கு அவர்களின் உரிமைகளை முன்வந்து அளிப்பதனால்தான், இதை மைனாரிட்டி அரசு என்று சிலர் சொல்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆம், மைனாரிட்டி மக்களுக்கு உரிமைகளைக் கொடுக்கின்ற தலைவர் கலைஞர் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அதை வழங்க முடியும் என்பதை அவர்களே அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக ஆளுநர் உரையில் 14 முதல் 16 வரை மூன்று பத்திகள் வேளாண் துறைக்கான திட்டங்களைக் குறிப்பிடுகிறது. பொருளாதாரத்தின் அடிநாதமாக விளங்குகின்ற வேளாண் துறை 1993-94 ஆம் ஆண்டு வரை கடுமையான நெருக்கடிக்கு ஆளானதை நாடே அறியும். மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்களிப்பு 1993-94 ஆம் ஆண்டில் 25 விழுக்காடாக இருந்த நிலை மாறி, 2005-2006-ல் 13.1 விழுக்காடாகச் சரிந்தது. அதேபோல் சராசரி நில உடமை அளவு 1976-77-ல் 1.25 ஹெக்டேரிலிருந்து, 2005-2006-ல் ஒரு ஹெக்டேருக்கும் குறைவாகச் சரிந்துள்ளது. இதற்கெல்லாம் தீர்வு காணுகின்ற சஞ்சீவி மூலிகையாக ஆளுநர் உரை அமைந்திருப்பது, வேளாண் துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் அதனுடன்கூடிய விவசாயக் கூலிகளுக்கு மிக்க மகிழ்ச்சி தருகின்ற செய்தியாக இது அமைந்திருக்கின்றது.

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

கடந்த காலத்தில் இலவச மின்சாரச் சலுகை பறிக்கப்பட்டு, கடன் வசூல் என்ற பெயரில் பெரும் அவதிக்கு உள்ளான விவசாயிகள் இன்றைக்குக் கடன் சுமை இல்லாதவர்களாக, இலவச மின்சாரத்தைப் பயன்படுத்தி செழிப்போடு இருப்பதை நாம் காண்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் விளைவிக்கும் நெல்லுக்கு தமிழக அரசின் கூடுதல் ஊக்கத் தொகையாக, குவிண்டாலுக்கு 50 ரூபாய் சேர்த்து வழங்குகின்ற. விவசாயிகளைப் பாதுகாக்கின்ற கலைஞர் அரசாக இது விளங்குகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே வல்லரசு தேவையில்லை. இந்தியா வல்லரசாக இருந்தால் போதும். தமிழகத்திற்கு நல்லரசுதான் தேவை என்பதைத் தமிழக மக்கள் புரிந்துகொண்ட காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல மாற்றங்கள் ஒவ்வொன்றாக நிகழ்ந்து வருவதைக் காண்கிறோம்.

ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள விவசாயிகளுக்கான நீர்வள, நிலவளத் திட்டங்களைப் பார்த்துவிட்டு, தமிழகத்தின் 11-வது ஐந்தாண்டு திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கை, approach paper-ஐயும் பார்த்தேன். "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற கழகத்தின் தாரக மந்திரம் போற்றி மதிக்கப்படுவது கண்டு மெய்சிலிர்த்துப் போனேன்.

1971 ஆம் ஆண்டு, மே மாதம், 25 ஆம் நாள் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மாநில திட்டக் குழு, இப்போது சீரிய முறையில் பணியாற்றி வருவதை அறிந்து அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

விவசாயத் துறையின் வளர்ச்சியை மீண்டும் உயர் வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்வதற்குரிய செயல் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற திட்டங்களை, மாநில திட்டக் குழு வடிவமைத்து வருவதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவேதான், ஆளுநர் உரை என்பது வெறும் சடங்கு அல்ல என்று தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருந்தேன். செய்வதைச் சொல்லுகின்ற, சத்தியத்திற்குச் சாட்சி சொல்வதாக, ஆளுநர் உரை அமைந்திருப்பது என்பதைப் பதிவு செய்ய வேண்டியது என் கடமையாகும்.

முற்பகல் 10–55

அரசியலில் சொல்வதைச் செய்யாதவர்கள் இருக்கிறார்கள். சொல்லாததை, ஆனால் பொல்லாததைச் செய்கின்றவர்களும் இருக்கின்றார்கள். அவ்வாறு பொல்லாததைச் செய்துவிட்டு, அதைத்



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன், இல்லாத காரணங்களைக் காட்டி திரும்பப் பெற்றுக்கொண்டு, அல்லாடிப் போனவர்களும் இந்த நாட்டிலே இருக்கிறார்கள். (மேசையை தட்டும் ஒலி) ஆனால் செயற்கரிய செயலைச் செய்துவிட்டு, அவற்றைத் தம்பட்டம் அடித்துக் கொள்ளாத அரசாக, நமது கலைஞர் அரசு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி).

ஆளுநர் உரையில் பத்தி 47-ல் குறிப்பிட்டதுபோல, நம்முடைய கலாச்சாரத்தைப் பேணிக் காக்கின்ற, மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற அரசாக கழக அரசு செயலாற்றி வருவதைப் பல்வேறு செயல்பாடுகளில் நாம் பார்க்கிறோம்.

பன்னெடுங்காலமாக நடைபெற்று வந்த தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்த நிலையில், கடந்த பொங்கல் பண்டிகையின்போது தமிழகமே ஒரு இறுக்கத்தில் இருந்தது. தென் மாவட்டங்களில் பொங்கல் பண்டிகை பொலிவிழந்துவிடுமோ என்ற அச்சம் நமக்கெல்லாம் நிலவியது. என்றாலும், ஏறு தழுவிய சங்கத் தமிழனின் பெருமையை இந்தச் சிங்கத் தமிழர் நிலை நாட்டுவார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் தமிழர்கள் இருந்தார்கள். அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. உரிய நேரத்தில் போர்க்கால நடவடிக்கை எடுத்து, எந்த உச்ச நீதிமன்றம், ஜல்லிக்கட்டுக்குத் தடை விதித்ததோ, அதே உச்ச நீதிமன்றத்தில் அதன் தொன்மையை எடுத்துக் கூறி, அந்தக் கலாச்சார உரிமையை இலாவகமாக மீட்டுத் தந்த முதல்வர் அல்லவா நமது முதல்வர் அவர்கள் என்பதை (மேசையை தட்டும் ஒலி) உலகத்தில் இருக்கும் அனைத்துத் தமிழர்களும் பாராட்டுகிறார்கள்.

செய்துவிட்டு சொல்லாதது இது மாத்திரமல்ல, இப்போது தமிழகமே பேசிக் கொண்டிருக்கின்ற மலிவு விலை சிமெண்ட் திட்டமாகும். நடுத்தர மக்களும், சொற்ப வருமானத்தில் வாழ்க்கை நடத்துகின்றவர்களும், தங்களுக்கென ஒரு வீடு கட்டிக்கொள்வது வெறும் கனவாக இருந்து விடுமோ என்ற நிலையை மாற்றுகின்ற வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டதுதான் 1 மூட்டை சிமெண்ட் விலை 200 ரூபாய் என்னும் ஒரு சிறப்பான திட்டமாகும். (மேசையை தட்டும் ஒலி) இந்தச் சிறப்பான திட்டம் இப்போது செயல்படத் தொடங்கிவிட்டது. இன்னும் சில மாதங்களில் சொந்த இல்லத்தைக் கனவாகக் கொண்டிருந்தவர்கள், தங்களின் கனவு இல்லங்களில் வசிப்பார்கள். அவர்களின் உள்ளங்களில் இல்லத்தை சாத்தியமாக்கிய முத்தமிழ்

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

அறிஞர் கலைஞர் அவர்கள் இருப்பார்கள் என்பதை நினைத்து மகிழ்ச்சியோடு இதனை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மிக முக்கியமானது. அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரும், தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றவருமான தளபதி அவர்களின் செயல்பாடுகள் அனைத்துத் தரப்பினராலும் போற்றப்படுவது பெருமகிழ்ச்சி அளிக்கிறது. (மேசையை தட்டும் ஒலி) நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கணினி மயமாக்கி, அவற்றின் சேவைகளை மேம்படுத்த, பம்பரமாகச் சுழன்று தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, தமது தலைமையிலான உயர்நிலைக் குழு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை உளமாரப் பாராட்டுகிறேன். அந்த அறிக்கையின்மீது தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பதிலே நமக்கு ஐயப்பாடு கிடையாது.

ஆளுநர் உரையில் கல்வியைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பதை முழுமனதோடு வரவேற்கிறேன். இந்த நாட்டின் எதிர்காலத்தை ஒளிமிக்க தங்கள் கண்களில் தாங்கிச் செல்லுகின்ற இளைஞர்களின் கல்விக்கு எத்தனை எத்தனை திட்டங்கள்! வியந்து நோக்குகிறேன், "வெள்ளாடைக் கலைவாணி", வேட்டியிலே வந்ததுபோல் இங்கே வீற்றிருக்கின்ற முத்தமிழ் அறிஞர் அவர்களின் திட்டங்கள் அல்லவா? ஆரம்பக் கல்வியிலிருந்து கல்லூரிக் கல்வி வரை இலவசம், பாடப் புத்தகங்கள் இலவசம், பஸ் பாஸ் இலவசம் என்று. பணம் இல்லாத தமிழ் இளைஞர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதுவும் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 3,405 அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், வரும் நிதியாண்டில் எஞ்சியுள்ள 706 மேல்நிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்படும் என்ற அறிவிப்பு நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரும்பாடுபட்டு தமிழைச் செம்மொழியாக்கி அதை மத்திய அரசைக் கொண்டு அறிவிக்கச் செய்த தமிழ் உணர்விற்கு நாங்கள் தலை வணங்குகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் செம்மொழி கருத்தரங்கை இம்மாதம் 17 ஆம் தேதி சென்னையில் தொடங்கி வைத்துப் பேசிய நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்கள், செம்மொழித் தமிழுக்கு இன்னும் செய்ய வேண்டிய



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

பெருமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அந்த உள்ளக் கிடக்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற வகையில் நமது ஆளுநர் உரை அமைந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

முற்பகல் 11-00

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும், மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும் தமிழை ஆக்கிவிட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கை விரைவில் ஏற்கப்படும் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது.

பத்தாம் வகுப்பில் தமிழ் வழிக் கல்வியில் அதிக மதிப்பெண் பெறும் ஆயிரம் மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் வழங்குவது, கிராமப்புற மாணவர்கள் தொழில்நுட்ப அறிவு பெறுவதற்கு இது வழிகோலும் என்பதிலே ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

உலகத்தில் வாழும் நம் தமிழர்களுக்கெல்லாம் தலைவராக இருக்கின்ற நமது தமிழக முதல்வர், வெளிநாட்டில் பணிபுரியும் தமிழர் நலன் காக்க, முதல்வர் தலைமையிலே ஒரு குழு — தமிழர் நலன் காப்பதற்காக, வெளிநாட்டில் பணிபுரிகின்றவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, உடனடியாக மத்திய அரசோடு கலந்து பேசி, அந்தப் பிரச்சினையிலிருந்து விடுவித்து, அவர்களை நல்ல முறையில் கொண்டு வருவதற்காக, முதல்வர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பது — இந்தியாவிலே முதல்வர் ஒருவர் தலைமையிலே இதுபோன்ற குழு அமைப்பது இதுதான் முதல் தடவை என்பதை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மறைந்த பெரும்புலவர் மறைமலை அடிகளார், மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார் போன்ற தமிழ்ச் சான்றோர்களின் கருத்துப்படி, தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கின்ற முடிவு (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுநர் உரையில் இடம் பெற்றிருப்பது தமிழ் கூறும் நல்லுலகிற்கு 'தேன் வந்து பாய்கின்ற' செய்தியாக இருக்கிறது. 'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்பது நம் மூச்சோடு கலந்துவிட்ட உணர்வு என்பதை நமது ஆளுநர் உரை நமக்கு வழங்குகிறது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் இளைஞர்கள் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இளைஞர்களின் பொது அறிவு மற்றும் ஆங்கிலம் நன்றாகப் பேசும் திறனை வளர்த்திடுகின்ற ஒரு திட்டத்தை ஆளுநர் உரை நமக்கு வழங்குகின்றது. அதனை மகிழ்ச்சியோடு

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

வரவேற்கிறேன். 'தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்பதுடன் நிற்காமல், வளத்தை வசப்படுத்த 'ஆங்கிலம் நீ பேசடா, அமெரிக்காவை வெல்லடா' என்ற நிலையை உருவாக்குவதாக இந்த ஆளுநர் உரை நமக்கு அமைந்திருக்கின்றது.

தொழில் துறை வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் மின் உற்பத்திக்கு பிற மாநிலங்களை எதிர்பார்க்காமல் அதற்கான வகை செய்யப்பட்டிருக்கிறது. பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் 925 கோடி ரூபாய் செலவில் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவும் திட்டம் கைமேல் பலனளிக்கும், அது விரைவிலே கைகூடும் என்பதிலே நமக்கு ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் 6,700 கோடி ரூபாயில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. மனிதச் சங்கிலிபோல் பேருந்துகளை நிறுத்தி வைத்து ஆயிரம் புதிய பேருந்துகளை ஒரே நாளில் மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கி, இந்தத் துறை மிகப் பெரிய ஒரு சாதனையைப் படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரையில் 54-வது பத்தியில் குறிப்பிட்டுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கான திட்டங்கள் புதியதாகவும், புத்துணர்வு ஊட்டுவதாகவும் இருக்கிறது. அவர்களின் திறன் மேம்பாட்டிற்கு, சிறப்பு மாநில உதவியாக. (Special Component Fund) 25 கோடி ரூபாய் வழங்குகின்ற ஒரே தலைவர் இந்தியாவில் தமிழக முதல்வர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட, பழங்குடியின இளைஞர்களுக்கும் அது வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

சமீபத்தில் நடந்து முடிந்த சென்னை புத்தகக் கண்காட்சி பற்றிய ஒரு தகவலைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பேரவையில் இருக்கின்ற உறுப்பினர்களோடு பகிர்ந்துகொள்ளவும் விரும்புகிறேன். அந்தப் புத்தகக் கண்காட்சிக்கு நான்கரை இலட்சத்திற்கும் மேலோர் வந்து சென்றதாகவும், இதுவரை இல்லாத அளவிற்கு புத்தகங்கள் விற்றதாகவும் நமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. புத்தகம் வாங்குதலில், புத்தகம் படிப்பதில் இந்த வியத்தகு முன்னேற்றம் எப்படி நிகழ்ந்ததென எண்ணிப் பார்த்தேன்: இனி அரசாங்க நிகழ்ச்சிகளில் மாலையோ, சால்வையோ அணிவிப்பதற்குப் பதிலாக புத்தகங்கள் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அன்புக் கட்டளையிட்டிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக்



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

கட்டளையை வரவேற்ற தமிழக மக்கள் இந்த மாற்றத்தை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

இளைஞர்கள், சிறுமியர், சிறார், பெண்கள் அத்தனைபேரும் புத்தகம் படிக்கத் தொடங்கிவிட்டதனால், இனி அரசியலில் நடிப்பவர்களுக்கு இடமே இல்லை என்பதை இந்த வளர்ச்சி நமக்குக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒரு முக்கியமான கருத்தை இந்தப் பேரவைக் குறிப்பில் பதிவு செய்ய விரும்புகின்றேன். அதை எனது கடமையாகக் கருதுகிறேன். உலகளாவிய தீவிரவாதம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வியாபித்திருக்கின்ற நிலையில், இரும்புக் கரம் கொண்டு வன்முறை தலைதூக்காமல், தமிழக அரசை வழிநடத்துகின்ற தமிழக முதல்வர் அவர்கள் தமிழகத்தைப் பாதுகாத்து வருகிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து வருகின்ற அடிப்படைவாதத் தலைவர்களும் பத்திரமாக வந்து செல்லும் அமைதிப் பூங்காவாக இந்த மாநிலம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் தமிழ்நாட்டின் நலனுக்கான சேது கால்வாய் திட்டத்தை எதிர்ப்பதன்மூலம் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி இந்த அரசாங்கத்திற்குக் களங்கம் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு சிலரை இந்த அவையின்மூலமாக நாங்கள் கண்டிக்கின்றோம். அவர்களின் கனவு ஒரு நாளும் பலிக்காது என்பதை விரைவிலே அவர்கள் உணர்ந்துகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-05

தமிழர்களின் கலாச்சார உரிமைக்காக உச்ச நீதிமன்றம் சென்று வாதாடி, அந்த உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் எங்கே? தமிழர்களின் நலனுக்கு எதிராக சேது சமுத்திரத் திட்டத்தை நிறுத்தி வைக்க party impleading petition மனுவைப் போட்டு, அந்தத் திட்டத்தை நிறுத்தி வைக்கச் செல்கின்ற சில தலைவர்களையும் தமிழர்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீவிரவாதத்திற்கும் சட்டம்-ஒழுங்கிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், சட்டம்-ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லும்போது அதனை நாம் கேலிக்குரிய ஒரு செய்தியாகத்தான்

[திரு. வீ.பெ. துரைசாமி] [2008 ஜனவரி 24

எடுத்துக்கொள்ள வேண்டும். சட்டம்-ஒழுங்கு என்பது வேறு. தீவிரவாதம் என்பது வேறு. தீவிரவாதம் ஒரு வட்டாரத்திற்கோ, ஒரு மாநிலத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ உரிய ஒரு செயல் அல்ல. இது அகில உலகச் செயல். உச்ச நீதிமன்ற நீதிபதிகள், அதேபோல Senior Advocate Fali Nariman போன்றவர்கள் எல்லாம் இந்த வாதத்தை உச்ச நீதிமன்றத்தில் வைக்கின்றபொழுது பல மாநில அரசாங்கங்களைக் கலைக்கச் சொல்லி எதிர்க்கட்சிகள் வைத்த அந்த வாதம் எடுபடாமல் போனதைத் தெரிந்துகொண்டு, அரசியல் பிழைப்பிற்காக சில பேர் இந்த ஆயுதத்தைத் தூக்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டுபுறக் கலைஞர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக தனி நல வாரியம் கண்ட நமது அரசு, தொன்மையான கலைகளை வாழ வைப்பதற்கும், நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கவும் சமீபத்தில் சென்னையில் மட்டுமே நடைபெற்ற "சென்னை சங்கமம்" கலைவிழாவினை தமிழகம் முழுவதும் நடத்துவது என்று முடிவு செய்திருப்பது நாட்டுப்புறக் கலையை வளர்க்க எடுத்த உன்னதமான நடவடிக்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரையில் ஆறுகளை இணைக்கும் திட்டம், அனைத்து வீடுகளிலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்ற திட்டம், வாரந்தோறும் 3 முட்டைகள் வழங்கும் திட்டம், மகப்பேறு நிதி உதவித் திட்டம் போன்ற திட்டங்களை இந்திய அளவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பது—பல முன்னோடித் திட்டங்களை உருவாக்கிய தலைவர், பல முதல்வர்களுக்கெல்லாம் முன்னோடி முதல்வராக இருக்கின்ற இந்தத் திட்டம்—இந்த மூன்று திட்டங்களும் இந்திய அளவிலே பரிசீலிக்கப்பட்டு அவற்றை அமல்படுத்த மத்திய அரசாங்கம் வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியார் பெயரில் 95 சமத்துவபுரங்கள். அனைத்து சமத்துவபுரத்திலும் பெரியார் சிலை. சமத்துவம், சமூக நீதியை இரு விழிகளாகக் கொண்டு செயல்படுகின்ற கொள்கைகளை ஆளுநர் உரையில் இன்று நாம் பார்க்கின்றோம்.

வேகமாக வளர்ந்து வரும் சென்னை, போக்குவரத்து நெரிசலைத் தீர்க்க Metro Rail Project ரூபாய் 9,757 கோடிகள் ஜப்பான் நாட்டு வங்கி உதவியுடன் நடைமுறைப்படுத்த முன்வந்திருப்பதற்கு தமிழர்கள் அத்தனைபேரும் பாராட்டுத் தெரிவிக்கிறார்கள்.



2008 ஜனவரி 24] [திரு. வீ.பெ. துரைசாமி]

அதேபோல தமிழகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற 75 இலட்சம் அருந்ததியர் மக்கள் சார்பாக நன்றியை சமர்ப்பிக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பல்வேறு பிரிவினர்களுக்கு வாழ்க்கை தந்தவர்கள். (உறுப்பினர் தெலுங்கில் உரையாற்றினார்.) இந்த ஒப்பற்ற ஒரே தலைவர்தான் நம்மைக் காப்பாற்றி உய்வித்தார் என்ற வாழ்த்தினையும் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) நமது ஆளுநர் உரையை வரவேற்கிறேன், பாராட்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் என்றால் கோபுரம் வழிகாட்டும், தீபம் என்றால் சுடர்கள் மொழி பேசும்; வானம் என்றால் மேகங்கள் முன்மொழியும், வாழ்க்கை என்றால் அனுபவம் புன்னகைக்கும், மக்கள் இதயங்கள் என்றால் தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்களையே என்றென்றும் உச்சரிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக புன்னகை ஆட்சி நடத்தியவர் எங்கள் அம்மா. திரு. ரங்கநாதன் உங்களுக்கும்தான். மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் உங்களுக்கும்தான்.

(முற்பகல் 11-10

ஆற்றலின் வெளிப்பாடாக, அறிவின் ஒளிக்கீற்றாக, அநீதியும், வன்முறையும், தீவிரவாதமும் எங்கெல்லாம் தலைதூக்கித் தாண்டவமாடுகின்றனவோ அங்கெல்லாம் அஞ்சாத அரிமா மங்கையாக, எதிர்த்துப் போராடும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி (மேசையைத் தட்டும் ஒலி) இரு கை குவித்து வணங்கி, ஆளுநர் உரைமீதான நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடையக் கருத்துகளைத் தெரிவிக்கின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய அன்பிற்கினிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவிரவாதமும், சட்டம் ஒழுங்கும் வெவ்வேறு என்று குறிப்பிட்டார்கள். ஒரு நாட்டிலே தீவிரவாதம் என்பது தலைதூக்குகின்றபோதுதான் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையே ஏற்படுகின்றது. தீவிரவாதம் ஆதரிக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றபோதுதான் நாட்டிலே மதக் கலவரங்களும், இனக் கலவரங்களும், சமூக விரோதச் செயல்களும் தலைதூக்குகின்றன.

தீவிரவாதங்கள் ஒடுக்கப்பட்டால்தான் நாடு அமைதியான பாதைக்குச் செல்லும். அதைத்தான் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அது விடுதலைப் புலிகள் என்றாலும் சரி, தமிழகத்தைத் துண்டாட நினைத்த ஆறு தீவிரவாதக் குழுக்கள் என்றாலும் சரி, அதை வேரோடும், வேரடி மண்ணோடும் இந்தத் தமிழகத்திலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) வீழ்த்திக் காட்டிய பெருமை எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு தயாரித்துக் கொடுத்த கவர்னர் உரையை நான் படித்துப் பார்த்தேன்; நேற்றைக்கு இங்கே கவர்னர் இந்த மாமன்றத்திற்கு அளித்த உரையையும் படித்துப் பார்த்தேன்; இந்த இரண்டு கவர்னர் உரைகளிலும் தேடித் தேடிப் பார்த்தேன்; புதிய திட்டங்கள் என்பது ஒன்றுமே இல்லை. கவர்னர் உரையை உற்று நோக்குகின்றபோது எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கூட கூறியதுபோல, 'ஜப்பான் வங்கியின் உதவியோடு, மத்திய அரசின் உதவியோடு, உலக வங்கியின் உதவியோடு நிதி பெறப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்' என்று கூறினார். அப்படியென்றால் தமிழக அரசின் நிதியோடு செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் என்பது இந்த கவர்னர் உரையிலே மிக மிகக் குறைவு என்பதை எனக்கு முன்னால் பேசிய உறுப்பினரே இங்கே எடுத்துக்காட்டியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் உண்மை நிலை என்னவென்றால், தேசியத் தலைவர்கள் முதல் உள் நாட்டுத் தலைவர்கள் வரை பாதுகாப்போடு இருந்த ஒரு சூழ்நிலை இருந்தது. இன்றைக்கு நின்றால் மாநாடு, நடந்தால் பேரணி என்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரரான, மக்களை ஈர்க்கின்ற சக்தி படைத்த மக்கள் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லத்திற்கே பாதுகாப்பு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை ஆதரித்துக் கொண்டிருக்கின்ற இயக்கம், காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவர் கிருஷ்ணசாமியே மதுரையிலே வேல் கம்பால் குத்தப்பட்டு, குற்றுயிரும், கொலையுயிருமாக, மதுரை மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகின்றார். இன்றைக்கு நாங்கள் சொன்னால்தான் 'நீங்கள் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தவறாகக் கூறுவதாகக் கூறுகிறீர்கள். இன்றைக்கு உங்கள் தோழமையிலே இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் ராமதாஸ் கூறியிருக்கின்றார். இரண்டு நாட்களுக்கு முன்பாக காங்கிரஸ்





கட்சியினுடைய, தமிழகத்தினுடைய மாநிலத் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார். அப்படியென்றால் சட்டம் ஒழுங்கு என்பது முற்றிலுமாக இழந்துவிட்ட ஒரு சூழ்நிலையைத்தான் இப்போது தமிழ்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டம் ஒழுங்கு என்பது, எதிர்க்கட்சியினருக்கு மாத்திரம் பாதுகாப்பு இல்லை என்ற ஒரு நிலை மாறி, உங்கள் கட்சியைச் சார்ந்த மாவட்டச் செயலாளரே வெடிகுண்டு வீசி கொல்லப்படுகிறார்; உங்கள் கட்சியைச் சார்ந்த நகர சபைத் தலைவர், ராஜீவ் காந்தி மறைவிற்குப் பின், remote control மூலமாக ஓர் உயிர் பலி ஏற்படுகிறது என்றால் அதற்கும் காரணமாக இருக்கின்ற அரசு இன்றைய உங்கள் அரசு என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சற்று தமிழகத்தின். . .

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அ.தி.மு.க. ஆட்சியில் கும்மிடிப்பூண்டி M.L.A.-வாக இருந்தவரே, சட்டமன்ற உறுப்பினரே கொல்லப்பட்டார். வீடு நொறுக்கப்பட்டது. அடித்து நொறுக்கப்பட்டது. அன்றைக்கு அ.தி.மு.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்பதை அவருடைய வாதப்படி இப்போதாவது ஏற்றுக்கொள்கிறாரா?

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஆந்திர மாநிலத்திலேயிருக்கிற... (குறுக்கீடுகள்) இருங்கள். சொல்கிறேன், சொல்கிற வரைக்கும் விடுங்கள். (குறுக்கீடுகள்)

முறபகல 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** பேசுவதற்கு விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லட்டும். நீங்கள் எதற்கு இடையிலே? விவாதம் நீடித்துக்கொண்டேதானே போகும்? அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார். அமைச்சர் பதில் சொல்கிறார். நீங்கள் எதற்கு இடையிலே எழுந்திருந்து சொல்கிறீர்கள்? (குறுக்கீடு) சொல்லுங்கள். என்ன, சொல்லுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அவர் சொல்வதற்கும் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதற்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. என்னவென்று சொன்னால், குண்டுகளை வைத்து இரண்டு நாட்கள் காத்திருந்து remote control மூலமாகக் கொல்லப்பட்டிருக்கிறார் உங்களது நகர மன்றத் தலைவர் என்பது வேறு, அமைச்சர் சொல்வது வேறு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** கொலை, கொள்ளை என்பது எல்லா காலத்திலும் நடக்கின்ற ஒன்றாக எடுத்துக்கொண்டாலும்கூட, (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். பேசவிடுங்கள். நேற்றைக்குக்கூட, நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரீகன் என்ற ஒரு மீனவர் வெடிகுண்டு வீசி படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார். வெடிகுண்டு கலாச்சாரம் அண்மையில் பரவியிருப்பது நீங்கள் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில்தான்; இந்தத் தமிழகத்தில் வெடிகுண்டு கலாச்சாரம் பரவியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, நீதிமன்றங்களால் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நீதிமன்றங்களால் கண்டனத்திற்கு உள்ளாக்கப்படுவது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற ஒன்று. உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சட்டம்-ஒழுங்கு நிலையை எண்ணிப் பார்க்கின்றபோது, அன்றையதினம் நீதிமன்றமே உள்ளாட்சி மன்றத் தேர்தலில் நடைபெற்ற வன்முறைகளைக் கண்டித்து 99 இடங்களுக்கு மீண்டும் மறு தேர்தலை நடத்த உத்தரவிட்ட நிலை இந்த ஆட்சியில்





ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றைக்குக்கூட நீதிமன்றத்திலே திருவள்ளூர் மாவட்டம், மோதிரம்பேடு என்ற கிராமத்தில் நடந்த மணல் கொள்ளையை நீங்கள் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்கப் போகிறீர்களா, இல்லையா என்று உயர் நீதிமன்றத்தினுடைய நீதிபதி A.P. Shah அவர்கள் இந்த ஆட்சியைக் கண்டித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) தினந்தோறும் மக்கள் கண்டனம், எதிர்க்கட்சியினர் கண்டனம், அண்டை மாநிலங்களிலே இருக்கின்ற மக்களுடைய நட்புறவுக்குக் கண்டனம், உங்கள் தோழமைக் கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள் கண்டனம், அதிகாரிகள் கண்டனம், நீதிபதிகள் கண்டனம் என்று கண்டனத்திற்குரிய ஒரு ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிற ஆட்சி உங்கள் ஆட்சி என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நதிகள் இணைப்புத் திட்டம், தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டம், தற்போது மாநிலத்திலே உள்ள ஆறுகளை இணைக்கின்ற திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். இதைப் பார்க்கின்றபோது எப்படி இருக்கிறது என்றால், நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான நீர்ப் பகிர்வினை மத்திய அரசிலிருந்து போராடிப் பெற வேண்டிய நாம் அந்தப் போராட்டங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டோமா, அல்லது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் முல்லைப் பெரியாறு அணையை 142 அடியாக உயர்த்தலாம் என்று உயர் நீதிமன்றத்தில் போராடிப் பெற்ற உரிமையை நீங்கள் நிலைநாட்டத் தவறிவிட்டீர்கள் என்றே எண்ண வேண்டியிருக்கிறது. காவிரி நீருக்காகத் தன் உயிரையே துச்சம் எனக் கருதி, உண்ணாவிரதம் இருந்து, தமிழகத்தின் உரிமையை உலகறியச் செய்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** நான், நம்முடைய உரிமையை உலகுக்கு உணர்த்திய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்றுதான் குறிப்பிட்டிருக்கின்றேன். பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு எங்கள் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஆந்திர அரசுக்கு தைரியம் வரவில்லை. இன்றைக்கு என்ன நிலைமை? எல்லா

சந்தர்ப்பத்திலும் உரிய நேரத்தில் தமிழக உரிமைக்காக உரிமைக் குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நதிநீர்ப் பிரச்சினையை விட்டுவிட்டு தமிழகத்திலே இருக்கின்ற ஆறுகளை இணைக்கின்ற... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம், பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆந்திர அரசு பாலாற்றில் அணை கட்டுகிற திட்டமே உங்கள் ஆட்சிக் காலத்தில்தான் ஆரம்பித்தது. அதை எதிர்த்து இதே இடத்தில் நானும் திரு. ஞானசேகரனும் குரல் கொடுத்திருக்கிறோம். ஆனால் அன்றைக்கு நீங்கள் அதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் போய்விட்டீர்கள். ஆனால் ஒரு வழக்குப் போட்டீர்கள். அதற்கு நம்பர்கூட வாங்காமல் போய்விட்டீர்கள். ஆனால், இப்போது சுப்ரீம் கோர்ட்டில் அதைப்பற்றி வாதாடி, அதற்கு ஒரு தீர்ப்பைப் பெற்றிருக்கிறோம். Supreme Court gave a direction to the Central Government. மத்திய அரசு இதில் தலையிட்டு, இரு மாநிலங்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற ஒரு உத்தரவினை உச்ச நீதிமன்றத்தில் பெற்ற அரசு, கலைஞருடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-20*

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் வாங்கிய தீர்ப்பைக்கூட அமல்படுத்தமுடியாத அரசாக உங்கள் அரசு இருக்கின்றது என்பதை அனைவரும் நன்றாக அறிவார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்..

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நண்பருக்கு எப்போது தீர்ப்பு வந்தது என்றுகூடத் தெரியவில்லை. தீர்ப்பு வந்து 4, 5 நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள்ளாக அமல்படுத்தவில்லையே என்று நீங்கள் கேட்கிறீர்கள். (குறுக்கீடு) முல்லைப் பெரியாறு அணை பிரச்சினை குறித்த தீர்ப்பு உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் வந்தது. என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?





ஆனால், இப்போது மூன்று முறை கேரள அரசு Review petition போட்டும், அதை ஒத்துக்கொள்ளமாட்டோம் என்று தடுத்து, உச்ச நீதிமன்றத்தில் அதற்கான பணியை வழக்குமன்றத்தில் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆக, வழக்கு முடியவில்லை; நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பாலாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுகின்ற பணியினை, நீங்கள் ஆட்சிக் காலத்தில் இருக்கின்ற நேரத்தில் தடுத்து நிறுத்தவில்லை' என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி, அவரே, 'உங்கள் ஆட்சியில் வழக்கு தொடுத்தீர்கள்' என்று சொன்னார்கள். அந்த நிகழ்வினைக் கேள்விப்பட்டவுடனேயே, மாண்புமிகு சட்டமன்றத்தில் எங்கள் உறுப்பினர்கள் பேசியவுடனேயே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில்கூட, பல்வேறு காலகட்டங்களைக் கடந்து, பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, மத்திய நீர்வளக் குழுமமும் அங்கே பார்வையிட்டு, உச்ச நீதிமன்றம் வரை அந்த வழக்கு சென்று, உச்ச நீதிமன்றமும் தீர ஆராய்ந்து, ஒரு நல்ல தீர்ப்பினை 27-2-2006 அன்றைக்குத்தான் வழங்கியது. 1-3-2006-ல் தேர்தல் நன்னடத்தை விதி வந்துவிட்ட காரணத்தினால், அதற்குமேல் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அதில் செயலாற்ற முடியாத ஒரு சூழ்நிலை அன்றைக்கு ஏற்பட்டது என்பதை நாடு நன்றாகவே அறியும். அதற்குப் பின்னால், நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், இரண்டு முறை 136 அடிக்கும் மேலாக நீர் நிரம்பியும், அந்த நீர் வீணாகக் கடலில் கலக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபொழுதும்கூட, அந்த நீரை 136 அடியிலிருந்து 142 அடியாகத் தேக்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பினைப் பெற்றுத் தந்தார்களே, அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் நீரைத் தேக்குவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதைத்தான் இப்போது நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.

ஒரு மாநிலத்தினுடைய பிரச்சினைகளுக்கு உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகின்றபோது, அந்தத் தீர்ப்பினை அமல்படுத்துகின்ற பொறுப்பு

சம்பந்தப்பட்ட மாநிலத்திற்கு உண்டு. அதே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு, இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அதை அமல்படுத்துகின்ற கடமை, பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு என்பது நன்றாகவே தெரியும். ஆனால், நீங்கள் தொடர்ந்து 9 ஆண்டுக் காலம் மத்திய அரசில் மந்திரிகளாக உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சியும் உங்கள் கையில் அங்கே இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை இருந்தும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்தில் பெற்றுத் தந்த தீர்ப்பினை அமல்படுத்த முடியாத நிலையை நீங்கள் உருவாக்கியிருக்கின்றீர்கள் என்பதைத்தான் நாங்கள் இன்றைக்கு உங்கள்மீது குற்றச்சாட்டாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கம். முதலில் பாலாறு அணை பிரச்சினையைப்பற்றி அவர் சொன்னார்; எங்கள் காலத்தில் ஆரம்பித்தது என்று. அது தவறு என்று சுட்டிக்காட்டினேன். 136 அடியிலிருந்து 142 அடி வரையில் நீரைத் தேக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கிறது என்று மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் சொல்கிறார். அதில் மாறுபட்ட கருத்து அல்ல. அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்று அரசு உச்ச நீதிமன்றத்தில் முறையாக வாதாடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதிலே இன்னொரு சிக்கல் இருக்கிறது. அதுவும் அவர்களுடைய காலத்திலே ஏற்பட்டதுதான். Kerala Irrigation and Water Conservation (Amendment) Act என்று ஒன்றை கேரள அரசு கொண்டுவந்து, ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அதில் சட்டப்படி என்னவென்று கேட்டால், எந்தெந்த அணை கேரள அரசுக்குச் சொந்தமானது என்று குறிப்பிட்டு, அதில் பெரியாறு அணையையும் சேர்த்துக்கொண்டு, அதற்கொரு கமிட்டி போட்டு, எந்தெந்த அணையில் எவ்வளவு உயரம் தண்ணீரை நிறுத்தலாம் என்பதை நிர்ணயம் செய்ய அந்தக் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையில், 136 அடி நீரைத்தான் அங்கே நிறுத்தலாம் என்று அவர்கள் ஒரு சட்டத்தைப் போட்டு வைத்துக் கொண்டார்கள். அதுவும் உங்களுடைய short fall—உங்கள் காலத்தில் ஏற்பட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், சொல்கிறேன், சொல்கிறேன். ஆனால் அந்தச் சட்டத்தைத் தகர்த்தெறிய வேண்டும்,





இது தவறானது என்று உச்சநீதிமன்றத்திலே நாம் வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறோம். அது நிலுவையில் இருக்கிறது. அந்தச் சட்டத்தை உடைக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் மீண்டும் முறைப்படி செயல்பட முடியும். இதற்கிடையில் மத்திய சர்க்கார் நேரடியாகத் தலையிட முடியாது. காரணம், சட்டம் ஒன்று அமலில் இருக்கிறது. எனவே, அந்தக் காலத்திலேயே நீங்கள் அதை எதிர்க்க முடியாமல் போய்விட்டீர்கள். இன்றைக்கு எதிர்த்துக்கொண்டிருக்கிறது கலைஞருடைய அரசு.

*முற்பகல் 11-25*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பாதுகாப்பான முறையில் அங்கு ஒரு சட்டம் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். ஏற்கெனவே, கேரள நீர்ப்பாசனத்திற்கென்று அங்கு சட்டம் இருக்கின்றது. அந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்தார்கள். எப்பொழுது அந்தத் திருத்தம் கொண்டு வந்தார்கள்? உச்ச நீதிமன்றத்தில், 136 அடியிலிருந்து 142 அடியாக நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னால்தான் அந்தத் திருத்தச் சட்டத்தை அவர்கள் கொண்டு வந்தார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னால் அந்தத் தீர்ப்பையே கேள்விக்குறியாக, சவால் விடுகின்ற அளவில் கேரள அரசு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதால் மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் அதை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்தது என்பது வேறு. ஆனால், ஏற்கெனவே நாம் உச்ச நீதிமன்றத்தின் மூலமாகப் பெற்றிருக்கிறோமே தீர்ப்பு, அந்தத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள், மத்திய அரசாங்கத்திலே இருந்துகொண்டு என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதேதான் அவரே விளக்கம் தெரிவித்தார். இப்பொழுது உச்ச நீதிமன்றம் 136 அடியிலிருந்து 142 அடி வரையில் தண்ணீரைத் தேக்கலாம் என்று தீர்ப்புரைத்ததைத் தடுக்கிற வகையில் கேரள சட்டமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தார்கள். அதை எதற்காகக் கொண்டு வந்தார்கள் என்று அவரே சொன்னார். இந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத்

[திரு. துரைமுருகன்] [2008 ஜனவரி 24

தடுப்பதற்காகக் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து நீங்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போனீர்கள் என்று சொன்னீர்கள். நிலைமை அதுதான். அதை எதிர்த்துப் போன வழக்குதான் இன்னும் உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆனால் அது இருக்கும்போது நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கிறீர்களே. அப்போது அந்தத் திருத்தச் சட்டம் வந்தபோது உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தது உங்கள் காலத்தில். அப்போது நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று அமைச்சர் சொல்லிவிட்டார். வழக்கு நிலுவையில் இருக்கிறது. அந்த சப்ஜெக்டை விட்டுவிட்டு மற்ற சப்ஜெட்டுக்குள் போய்விடுங்கள். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் பேசி முடிப்பதற்கு முன்பாக mike off செய்யப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இல்லை, இல்லை. அப்படி இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தக் குறைபாடுகளை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட நேரம் காலாவதியாகிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) ஏனென்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கிறது. வழக்கு நிலுவையில் இருக்கிறதென்று நீங்களும் ஒத்துக்கொள்கிறீர்கள். அமைச்சரும் அதைத்தான் சொல்கிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் அதைத்தான் சொல்கிறேன். அதாவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அதையே திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதாவது அந்த வழக்கு வந்து திருத்தச் சட்டம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது? உச்ச நீதிமன்றத்ினுடைய தீர்ப்பைப் பெற்ற பிறகு, உச்ச நீதிமன்றம் தீர்ப்புக்கு. . .



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், நான் என்ன சொல்கிறேன். கேரள அரசு போட்ட சட்டம் செல்லாது என்பதுதானே நீதிமன்றத்திலே வந்திருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கேரள அரசு கொண்டு வந்தது சட்டம் கிடையாது. திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: Amendment பின் எதற்கு?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அந்தத் திருத்தச் சட்டம் எப்போது கொண்டு வரப்பட்டது? உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்ததற்குப் பின்னால். அந்தத் தீர்ப்பு வந்ததற்குப் பின்னால் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரலாம் என்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தம் என்பது ஒரு சட்டமே கிடையாது என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். அது சட்டம் இல்லையென்றால் எதற்காக நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தீர்கள்? ஆக, அவர்கள் சட்டம் கொண்டு வந்தது உண்மை. அந்தச் சட்டம் வந்த காரணத்தினாலேதான் 142 அடிக்கு நாம் கேரள அரசை வற்புறுத்த முடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று முறை மத்திய அரசாங்கத்தை அணுகி, பிரதமரைச் சந்தித்து கேரள முதலமைச்சருடன் கலந்து பேசி இப்போது ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை தயவுசெய்து கெடுத்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதை விடுங்கள். அந்த matter already pending in the court. அதனால் அந்த matter-க்குள் அதிகமாக discuss பண்ண வேண்டாம், please sit down. திரு. சேகர்பாபு, நீங்கள் பேசுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

[2008 ஜனவரி 24

*முற்பகல் 11-30*

**திரு. பி.கே. சேகர்பாபு:** 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இந்தச் சந்ததியினர் கண்டிராத அளவுக்குப் பெரு வெள்ளம், மழை. இந்த மழையில், பாதிக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த தமிழகத்திற்கும் சூறாவளி சுற்றுப்பயணமாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய ஆறுதலைக் கூறி—தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுக்கும்—தினசரி கூலி வேலை செய்து ஐம்பது ரூபாய், நூறு ரூபாய் என்று சம்பாதிக்கின்ற மக்களைக்கூட 1,000 ரூபாய் சலவை நோட்டுக்களைப் பார்க்க வைத்த பெருமை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவம். ஆழிப் பேரலையின் கோரத் தாண்டவம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள், எல்லோரும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் காலை ஆறரை மணிக்கு தமிழகத்தில் இருக்கின்ற 12 கடலோர மாவட்டங்களைப் புரட்டிப்போட்ட நிலை. எண்ணற்ற மனித உயிர்கள் இறந்திருக்கின்றன. ஆனால் காவல் துறை இந்த நேரத்தில் அந்தப் பகுதிக்குச் செல்லக் கூடாது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறார்கள். தன் உயிரரையும் துச்சமென மதித்து பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சென்று அந்த ஆற்று மணல் படுகையிலே தன்னுடைய காலைப் பதித்த தலைவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு கவர்னர் உரையிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள் பக்கம் 7, பத்தி 9 இல் 1,510 கோடி ரூபாய் வெள்ள நிவாரணப் பணிகளுக்குத் தேவை; அதிலே 200 கோடி ரூபாயை நாங்கள் முதல்கட்டமாக ஒதுக்கியிருக்கிறோம் என்று. இதை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவசத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு வழங்கியிருக்கின்ற நிதியிலேயிருந்து உடனடியாக வெள்ள நிவாரண நிதிக்கு ஒதுக்குங்கள் என்று கேட்டுக்கொண்டபொழுது, தொலைக்காட்சிப் பெட்டிக்கும் பணம் இருக்கின்றது; வெள்ள நிவாரண நிதிக்கும் பணம் இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியென்றால் தேவை இருக்கின்ற 1,510 கோடி ரூபாயை முழுமையாக ஒதுக்காமல் வெறும் 200 கோடி ரூபாயை ஒதுக்கி வைத்து மத்திய அரசை எதிர்ப்பார்க்கின்ற நிலை இன்றைக்கு ஏன்?



2008 ஜனவரி 24] [திரு. பி.கே. சேகர்பாபு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய இன்றியமையாத பிரச்சினை மின்சாரம். *(மணியடிக்கப்பெற்றது)* மொத்தமே ஆறு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன். மனசாட்சி உள்ள பேரவைத் தலைவர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 22 நிமிடங்கள் ஆகிவிட்டன. *(குறுக்கீடுகள்)*

**திரு. பி.கே. சேகர்பாபு:** இல்லை. நான் பேச ஆரம்பித்த பிறகு பெரும்பாலான நேரத்தை அவர்கள் எடுத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, 22 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. பி.கே. சேகர்பாபு:** ஐந்து நிமிடங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் என்பது ஒரு நாட்டினுடைய இன்றியமையாத் தேவை. இப்போது மின்சாரம் என்பது என்ன நிலையிலே இருக்கின்றது? புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தின் அளவு 8,775 மெகாவாட் ஆனால் அன்றைய மின்சாரத்தின் உற்பத்தி அளவு 10, 011 மெகாவாட். ஆனால் இன்றைய மின்சாரத் தேவை என்பது 8,800 மெகாவாட். வெறும் 25 மெகாவாட்தான் இன்றைக்குக் கூடுதலாகத் தேவைப்படுகிறது. ஆனால் இந்த 8,800 மெகாவாட் கூட பற்றாக்குறை இருக்கின்ற மாநிலமாக இப்போது தமிழகம் இருக்கின்றது. எங்கு பார்த்தாலும் மின்சார வெட்டு. அறிவிக்கப்படாத மின் வெட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான தகவலைத் தரக்கூடாது என்பதற்காகத்தான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அம்மா அம்மா என்று சொல்லுகிறார்கள். அம்மா ஆட்சியிலே இருந்தபோது எந்த அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்தார்கள் என்று கேட்டால், ஐந்தாண்டு காலத்திலே 300 மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்தார்கள். இப்போது ஏறக்குறைய 3,500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய நாம் திட்டம் வகுத்திருக்கின்றோம். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு 1,000 மெகாவாட், 2,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 ஜனவரி 24

திட்டப்பட்டிருந்தால் இன்றைக்கு இந்த நிலைமை வந்திருக்காது. தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் 500 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கூடுதலாகத் தேவைப்படுகிறது. அதை எண்ணிப் பார்க்காமல் சரியாக திட்டம் தீட்டாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டது. இருந்தாலும்கூட அதைச் சமாளிப்பதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய தொகுப்பிலேயிருந்து முதலமைச்சர் மின்சாரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறார். இன்று தமிழ்நாட்டிலே இந்தக் கோடைக் காலத்திலே மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படாது. மத்திய தொகுப்பிலேயிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய 350 மெகாவாட் மின்சாரத்தையும் நாம் கேட்டிருக்கிறோம். அஃதன்னியில் ஏற்கெனவே அஸ்ஸாம், ஹரியானா போன்ற மாநிலங்களிலிருந்து மின்சார இலாகா 250 மெகாவாட் மின்சாரம் வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது; கேரளாவிலே 150 மெகாவாட் மின்சாரம் கோடைக் காலத்திலே வாங்க ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, மின்சாரம் வெட்டு வரும் என்று மக்கள் மத்தியிலே பீதியை உண்டாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) No.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லாத ஒன்றைத் தேடுகின்ற நிலையிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் பதிலை அளித்தார்கள். நாங்கள் கேட்பது நீர்; ஆனால் அவர் சொல்வது நான் மேகத்திற்குத் தூது விடுகிறேன் என்று. புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சிக் காலத்தில் மின்சாரம் உபரியாக இருந்தது என்பதை யாருமே மறுக்க முடியாது. மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகம் இருந்தது என்பதை யாருமே மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சாரம் தங்குதடையில்லாமல் கிடைத்தது என்பதை யாருமே மறுக்க முடியாது என்று கூறிக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுது மின்சாரம் எப்படி உபரியாக



2008 ஜனவரி 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இருந்தது என்று கேட்டால், 1996–லிருந்து 2001 வரையிலே ஐந்து மின் திட்டங்களை மின்சார வாரியம் அமல்படுத்தியது. ஜி.எம்.ஆர். வாசவி, அந்தத் திட்டம் அப்போதுதான் அமல்படுத்தப்பட்டது. பிள்ளைப்பெருமாநல்லூர் திட்டம், அப்போதுதான் அமல்படுத்தப்பட்டது. அதைப்போல, மதுரையிலே இருக்கக்கூடிய அனல் மின் திட்டமும் அப்போதுதான் அமல்படுத்தப்பட்டது. இப்படி, ஏறக்குறைய 750 மெகாவாட் மின்சாரத்தை 1996–லேயிருந்து 2001 வரையிலே உபரியாக உற்பத்தி செய்த காரணத்தினால், மின்சாரம் அந்த ஆட்சிக் காலத்திலே கிடைத்ததேதவிர, அந்த ஆட்சிக் காலத்தில் புதிய திட்டம் எதுவும் வரவில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துக் கொள்ளுங்கள். 26 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) No, no. அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்கப் போகிறேன். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள், அந்தக் கதையை விடாதீர்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்தது இந்த ஆட்சி' என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்பது, மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள் காலத்தில் நகர்பாலிகா, பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்படி, மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தைத் தமிழகத்தில், 1994 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு தனிச் சட்டமாகக் கொண்டு வந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலை நடத்துவதற்குண்டான வழிமுறைகளை அறிவித்து, அதைச் சட்டமாக இயற்றியதன் விளைவாகத்தான், நீங்கள் 2001 ஆம் ஆண்டு நடத்திய உள்ளாட்சி மன்றத் தேர்தலில், பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994 ஆம் ஆண்டிலே சட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு, 1996 வரை தேர்தலை நடத்தாமல் சென்றது ஏன்? உள்ளாட்சித் தேர்தலை நடத்தவில்லை. அதன்பின்புதான் நாங்கள் தேர்தலே நடத்தினோம். (குறுக்கீடு)

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பற்றியும், பெண்களுடைய உரிமையைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்; வரவேற்கிறேன். ஆனால், ஒன்று. முதன்முதலாக இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் பதவிக்கு ஒரு பெண்மணியை வேட்பாளராக முன்மொழிந்தபோது, அதை 'இந்த நூற்றாண்டின் ஜோக்' என்று வர்ணித்தவர்தான் இவர்களுடைய தலைவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கும் பெண்கள், எதிலும் பெண்கள் என்ற நிலையை உருவாக்கிய பெண் இனத் தலைவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பற்றி ஒரு குறிப்பினைத் தந்திருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம், பேசுங்கள்.

***திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேசுவதற்கான வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரையில் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருப்பது, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு வழிகோலும் என்ற அடிப்படையிலே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் அதை வரவேற்கிறேன். இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிற மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று, இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தக் கருத்தின் அடிப்படையிலே, நமது அமைச்சர்களெல்லாம் விளக்கம் அளித்திருக்கிறார்கள். குறிப்பாக, நதிநீர்ப் பிரச்சினையைப் பற்றி நமது ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நதிநீர்ப் பிரச்சினை, காவிரி நீர்ப் பிரச்சினை வருகிறபொழுதும்சரி, முல்லைப்





பெரியாறு பிரச்சினை வருகிறபொழுதும்சரி, பாலாறு பிரச்சினை வருகிறபொழுதும்சரி, நம்முடைய சட்டமன்றம் வேறுவிதமான விவாத மன்றமாக மாறிவிடுகிறது. இதை நான் அடிக்கடி இந்த அவையிலே பதிவு செய்திருக்கிறேன். இது நம்முடைய தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கும் வாய்ப்புக்கும் உகந்ததாக இல்லை என்பதுதான் எங்களுடைய பணிவான கருத்து. ஆகவே, யார் இதிலே தவறு செய்தார்கள் என்று இங்கே நாம் விவாதிப்பது என்பது, உண்மையிலேயே நமக்கு வரவேண்டிய அந்த நீரைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிற சூழ்நிலைதான் அதிகரிக்கிறது. இதைப்பற்றி அக்கறைப்பட்டுத் தீர்வு காணுவதற்குரிய முயற்சியை மத்திய அரசு எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

குறிப்பாக, இந்த ஆளுநர் அறிக்கையில் ஒரு சிறப்பம்சமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது, தேசிய நதிகளை இணைக்க வேண்டும் என்பதற்கான கோரிக்கை வைத்தோம். அடுத்ததாக, தீபகற்ப நதிகளையாவது இணைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். இந்த சட்டசபையிலும் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இவை இரண்டும் நிறைவேறுவது என்பது, பல மாநிலங்களிலே கருத்து முரண்பாடு இருக்கிற காரணத்தினாலே நடைபெறவில்லை என்பதற்காக, உடனடியாக மாநிலத்தில் பாய்கிற ஆறுகளையாவது இணைப்பதற்கான திட்டத்தை நிறைவேற்றுவது என்று ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கக்கூடியது. இதன்மூலமாக தமிழகத்தில் நீர் வளம் பெருகுவதற்கான வாய்ப்புகள், குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. இதற்கான நிதி உதவியை மத்திய அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தியிருப்பதை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சேது கால்வாய் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. ஆனால், இதன்மீது பல்வேறு விதமான கருத்துகள் வந்துகொண்டிருக்கின்றன. நம்பிக்கையின் அடிப்படையிலே கருத்துகளை வெளியிட்டு, அதன்மீது ஒரு தடை பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டு, இதற்கு மத்திய அரசும் இசைவு

தெரிவிப்பதைப்போல செயல்பாடு இருப்பதென்பது வேதனைக்குரிய ஒன்றாக நான் கருதுகிறேன். இந்த விஷயத்தின்மீது ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து பார்க்கிறபோது, மத்திய அரசும் நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற அந்த வாதப் பிரதிவாதங்களைப் பார்க்கிறபோது காரணங்கள் பொருத்தமாக இல்லையென்று தெரிகிறது. ஆகவே, உடனடியாக இந்த சேது கால்வாய் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் எல்லோருடைய விருப்பமும். அது உடனடியாக நிறைவேற வேண்டும். அதன்மூலமாகத்தான் தமிழகத்திற்கான வாழ்வு வளம் பெறுவதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. இதைச் செய்ய வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போல, நம் அறிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதில் மிக முக்கியமான ஒன்று மத்திய அரசாங்கத்தினுடைய நிதிக் குழுக்கள் நம்முடைய. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாநிலங்களுக்கு வழங்கப்படுகிற நிதிப் பகிர்வு என்பது தமிழகத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பது வருத்தத்தோடு இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இது மிக முக்கியமான ஒன்று. வளர்ந்து வருகிற மாநிலங்கள். விரைவாகப் பணிகளை நிறைவேற்றுகின்ற மாநிலங்கள் என்ற முறையில் நம்முடைய தமிழகம் செயல்பட்டு வருகிறது. ஆகவே, மத்திய அரசு இதற்கான நிதிப் பகிர்வைக் குறைப்பதென்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. 13-வது நிதிக் குழு அமைக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில் நிதியை அதிகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை சரியானது. இதை உடனடியாக மத்திய அரசு நிறைவேற்ற வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளம். இதிலே விவசாயிகள் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இதை உணர்ந்து நம்முடைய மாநில அரசு வெள்ள நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டு வேகமாக நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது. நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பார்வையிட்டு உரிய நிவாரணத்தை வழங்குவதற்காக நம்முடைய மாநில அரசு 200 கோடி





ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பது பாராட்டுக்குரியது, வரவேற்கக்கூடியது. 1,510 கோடி ரூபாய் அளவிற்குச் சேதம் அடைந்திருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மத்தியக் குழுவும் வந்து பார்வையிட்டிருக்கிறது. உடனடியாக மத்திய அரசு இந்த நிதி உதவியைச் செய்ய வேண்டும். ஏனென்றால், இந்த வெள்ளம் பாதித்ததற்குப் பின்னாலே விவசாயிகளுக்கு நிவாரணப் பணிகள் வழங்குவதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவி கிடைக்காத காரணத்தினாலே விவசாயிகளுக்கான நிவாரணப் பணிகள் தடைபட்டிருப்பதாகத்தான் இப்பொழுது கருதுகிறோம். ஆகவே, மத்திய அரசு நமது மாநிலத்திற்குத் தேவையான வெள்ள நிவாரணத்திற்கான நிதியை விரைவாக வழங்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு செய்தி வருகிறது. பரவலாக வருகிற செய்தி, பத்திரிகையிலே வருகிற செய்தி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் கொண்டுவர விரும்புவது, பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு குறைந்தபட்சம் 15,000 ரூபாய் வழங்க வேண்டும் என்பது விவசாயிகளுடைய கோரிக்கை. உண்மையிலேயே செலவு அப்படித்தான் இருக்கிறது. ஆனால், மத்திய அரசாங்கத்தினுடைய, நிரந்தரமாக அவர்களுடைய கொள்கையாக இருப்பது என்பது ஒரு ஹெக்டேருக்கு 4,000 ரூபாய் என்று சொல்லப்படுவதாக ஒரு தகவல் இருக்கிறது. இந்த 4,000 ரூபாய் வீதம் கொடுத்தால் எந்த வகையிலும் விவசாயிகளுக்கு அது போதுமானதாக இருக்காது என்ற காரணத்தினாலே அவர்களுக்குக் கூடுதலாக வெள்ள நிவாரணத்தை வழங்குவதற்குரிய முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பாதிக்கப்பட்ட இந்த ஆண்டுகளுக்குரிய நில வரியை இரத்து செய்ய வேண்டும். அதைப்போல, குத்தகை விவசாயிகளுக்கும், குத்தகையைத் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

அதைப்போலவே, இப்பொழுது நெல் கொள்முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நெல் கொள்முதலிலே நம்முடைய மாநில அரசு பல்வேறு சிறப்புச் சலுகைகள் அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். மத்திய அரசு அளித்த 100 ரூபாய், நம்முடைய மாநில அரசு அளித்திருக்கிற 50 ரூபாய் ஊக்கத் தொகைகளுடன் நம்முடைய

விவசாயிகளுடைய நெல் கொள்முதல் நடைபெறுகிறது. இதிலே ஆண்டுதோறும் ஒரு பிரச்சினை என்பது, ஈரப்பதம் என்ற பெயராலே, அந்தக் கொள்முதல்களிலே பல சிக்கல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இப்பொழுதும் அது இருக்கிறது. இதுகுறித்து மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டிய நிலையிலே நம்முடைய மாநில அரசு இருக்கிறது என்பதை நான் அறிவேன். இப்போது இருக்கிற இந்தச் சூழ்நிலையிலே இதை உடனடியாகத் தளர்த்தி, 16 சதம், 17 சதம் என்ற அளவிலே இல்லாமல், சென்ற ஆண்டு நாம் நடைமுறைப்படுத்தியதைப்போல 21 அல்லது 22 சதவிகிதம் என்ற அடிப்படையிலே ஈரப்பதத்திற்கான கொள்முதல் செய்வதற்குரிய முயற்சியை உடனடியாக வழங்க வேண்டும். சென்ற ஆண்டுகூட நம்முடைய அரசு என்ன செய்தது என்றால், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியை எதிர்நோக்கி முன்கூட்டியே கொள்முதல் செய்யச் சொன்னோம். ஆனால், இந்த ஆண்டு அப்படி நடைபெறாத காரணத்தினாலே, கொள்முதல் தடைப்படுகிறது. இதை உடனடியாக செய்வதற்குண்டான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். . .

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மழைபெய்த உடனேயே, அந்தப் பகுதிக்கு காவிரி–டெல்டாப் பகுதிக்கு நானே நேரிடையாகச் சென்று, மூன்று மாவட்டங்களில் விவசாயிகளை நேரடியாகச் சந்தித்து, பிரச்சினைகளை எல்லாம் அலசி ஆராய்ந்து, பின்பு, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தவுடனேயே, அவர் கடிதம் எழுதச் சொன்னார். 24–12–2007 அன்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டு, அதற்கு பின்னால் அங்கேயிருந்து ஒரு இணை இயக்குநர் ஹைதராபாத்திலேயிருந்து வந்தார்கள். அவர்களும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, இப்போது இன்னும் இரண்டொரு தினங்களிலே 20 சதவிகிதம் ஈரப்பதத்திற்கு ஆணை வரவிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றோம். இரண்டு தினங்களிலே நல்ல செய்தி வரும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து வீட்டுமனைப் பட்டா பற்றி இங்கே மகிழ்ச்சிக்குரிய செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. 10 ஆண்டுகளாக குடியிருப்பவர்களுக்கு என்ற நிலையிலிருந்து மாறி, ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு





அவர்களுக்குப் பட்டா வழங்கப்படும் என்று சொல்லப்பட்டுள்ள செய்தி உண்மையிலேயே தமிழகத்திலே மிகப்பெரிய அளவில் வரவேற்கப்பட்டிருக்கிறது. இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நம்முடைய முதல்வர் அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இதிலேயும் சில செய்திகள் வந்துகொண்டேயிருக்கின்றன. சில விதிமுறைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற பிரச்சினைகளைக் கருத்திலே கொண்டு அதைத் தளர்த்துவதற்குண்டான முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே குறிப்பாக நெல் கொள்முதல் பற்றி நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, இங்கே நம்முடைய ஆட்சியைப் பற்றி பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டன. இதிலே பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பல திட்டங்கள், சிறப்பிற்குரியவை எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. எல்லா வகையிலேயும் சிறப்புக்குரிய திட்டம் என்ற முறையிலே 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி. இது அநேகமாக இந்தியாவில் மட்டுமல்ல, நம்முடைய ஆசிய கண்டத்திலேயும், உலகளவிலேயும் பார்த்தால்கூட இது ஒரு மகத்தான சாதனைதான். இது யாராலும் மறுக்க முடியாத ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)* ஒரு கணக்கீடு செய்து பார்க்கிறபோது—இப்போது எங்களுடைய மாவட்டத்தில் நெல் கொள்முதல் நடக்கிறது. ஒரு கிலோ நெல்லினுடைய விலை 16 ரூபாய். ஆனால் ஒரு கிலோ அரிசியினுடைய விலை இரண்டு ரூபாய். *(மேசையைத் தட்டும் ஒலி)* 16 ரூபாய் நெல்லில் அரிசி உற்பத்தி செய்யப்படுவது என்பது 700 கிராம் அல்லது 750 கிராம். அதாவது முக்கால் கிலோ அரிசிதான் அதிகபட்சமாக உற்பத்தி செய்ய முடியும். இல்லையென்றால் 650 கிராம்தான் வரும். அப்படியானால், 65 சதவிகிதம் அளவிற்குத்தான் அரிசி கிடைக்கும், ஒரு கிலோவிலே. ஆக, ஒரு கிலோ 16 ரூபாய் நெல்லினுடைய விலை. ஒரு கிலோ அரிசியினுடைய விலை 2 ரூபாய். அப்படியென்றால், இது சாதாரண சாதனையல்ல. இதில் எந்தவிதமான உள்நோக்கத்துடனும் யாரும் பேசக்கூடாது என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதனைத் தொடர்வதிலே பல்வேறு சிரமங்களும், சிக்கல்களும், நிதிநெருக்கடி இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பாக நிறைவேற்றி வருகிறார்கள். இது தமிழகத்திலே முக்கியமான ஒரு திட்டம். வெற்றிகரமான திட்டம். ஆகவே, இந்தத் திட்டங்களைப் பற்றிச் சொல்கிறபோது பல வருத்தங்களும்

பிரச்சினைகளும் வருகின்றன. ஆகவே, இப்படி நான் இந்த நெல் கொள்முதல் பற்றிச் சொல்கிறபோது இதையும் இணைத்துப் பார்க்கிறபோது, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் கேட்கிறோம். இது விவசாயிகளுடைய ஒரு ஜீவாதாரமான பிரச்சினை என்ற முறையிலே இது வேண்டும். மத்திய அரசாங்கம் வழங்க வேண்டுமென்று கேட்கிறோம். கோதுமைக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. நெல்லுக்கு வழங்கவேண்டுமென்பதுதான் நம்முடைய கோரிக்கை. இதைப் பற்றி நம்முடைய மாநில முதலமைச்சர் மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தி விவசாயிகளுக்கு இந்த விலையைப் பெறுவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நம்முடைய திட்டங்கள், அறிவிப்புகளிலே மிக மகிழ்ச்சிக்குரிய ஒன்று. திருவாரூர் மாவட்டத்தில் மத்திய பல்கலைக்கழகம் வரும் என்ற அறிவிப்பு உண்மையிலேயே எங்களுடைய மாவட்ட மக்களுக்கு ஒரு மிகப் பெரிய மனநிறைவையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தொடங்குவதற்குரிய முயற்சியை மத்திய அரசு விரைவாகத் தொடங்க வேண்டும். அதற்காக மிகப்பெரும் அளவிலே முயற்சி எடுத்திருக்கிற நம்முடைய முதல்மைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பிலும், எங்களுடைய வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும், நன்றியையும் நாங்கள் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றோம்.

இட ஒதுக்கீடு என்ற முறையிலே அருந்ததியினர்களுக்கான இட ஒதுக்கீடு, உள் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கான சர்வகட்சி ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படும் என்று அறிவித்திருப்பது உண்மையிலேயே பொருத்தமானது. இது மிக முக்கியக் கோரிக்கைகளிலே ஒன்றாக இருக்கிறது. இதைப் பரிசீலித்து நம்முடைய முதல்வர் அவர்கள், சமூக நீதியின் அடிப்படையில் செயல்படுபவர் என்பதை உறுதிசெய்கிறவகையிலே இந்த முயற்சி எடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 11-50)

குறிப்பாக, சாலை விபத்துகளைப் பற்றி இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தினசரி நடக்கிற பிரச்சினையாக





இருக்கிறது. தவிர்க்கமுடியாத பிரச்சினை இது. கொத்துக் கொத்தாக நித்தம் நித்தம் மக்கள் செத்து மடிகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கான முயற்சி என்ற முறையிலே இதிலே ஆழமாகப் பார்க்கிறபொழுது, சாலை விபத்துகள் பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகளால் நடைபெறுவது என்பது குறைவாக இருக்கிறது. மனிதத் தவறுகளாலே இந்தச் சாலை விபத்துகள் நடைபெறுகின்றன என்பதுதான் இயல்பான ஒன்று. ஆகவே, இந்த மனிதத் தவறுகளைத் தவிர்ப்பதற்கு என்ன முயற்சி எடுப்பது என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஓட்டுநர்களுக்கான பயிற்சியை ஒரு தனித்த பயிற்சியாக மேற்கொள்ள முடியுமா என்று அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது தொழில்நுட்பக் கல்லூரிகள்மூலமாகவோ, வேறு வகையிலோ அவர்களுக்கு ஒரு 6 மாத காலம் பயிற்சி அளித்து அவர்களுக்கு சர்வ தேச தரத்திலான ஒரு சான்று வழங்க வேண்டும். ஏனென்றால், இவர்கள் வெளிநாடுகளுக்கும் போகிறார்கள், உள் நாட்டிலேயும் அந்த டிரைவர் பணியைச் செய்கிறார்கள் என்ற முறையில் இவர்களுக்கு சர்வ தேசத் தரத்திலான ஒரு ஓட்டுநர் பயிற்சி என்ற முறையில் வழங்குவதற்குரிய ஒரு முயற்சி இனி வருங்காலங்களில் எடுக்கலாம். ஏனென்றால், இப்பொழுது இருப்பவர்களுக்கு பாதிப்பு வந்துவிடக் கூடாது. ஆகவே இனி வருங்காலங்களில் தேர்வு செய்கிறபொழுது அந்த முயற்சியை எடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தத் திட்டங்களிலே சொல்லப்பட்டிருப்பது, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அவினாசி–அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் பற்றி அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. சென்ற முறை நாம் குறிப்பிட்டு, நிதி ஒதுக்குவதாகவும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வருவாய்த் துறை நிர்வாகம் என்ற முறையில் சில கோரிக்கைகள் என்ற அடிப்படையிலே கோவில்பட்டி தாலுகா பகுதியிலே இருக்கிற இளையரசனேந்தல் என்ற பகுதியிலே இருக்கிற 15 கிரா்மங்களை கோவில்பட்டி தாலுகாவோடு இணைக்க வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. இதைப் பரிசீலித்து இணைப்பதற்கு உரிய முயற்சி எடுக்க வேண்டும்.

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஜனவரி 24

அதேபோல, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியத்தை தனித் தாலுகாவாக அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாளையக் கோரிக்கை. அந்த சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கை அது. அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும் இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்று இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான கருத்தாக நான் சொல்ல விரும்புவது, இலங்கையிலே நடப்பது என்பது அது இலங்கை சிங்கள அரசுக்கும், புலிகளுக்குமான தகராறாக மட்டுமே சித்தரிக்கப்படுகிறது. இது இலங்கை மக்களின்மீது நடக்கிற போராகவே நாங்கள் பார்க்கிறோம். தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு போர் தொடுத்திருக்கிறது. இது எந்த வகையிலும் நாகரீகமானது அல்ல. போர் தொடுத்திருக்கிற முறை அநாகரீகமான முறை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவே இந்த இலங்கைப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும். ஆகவே, இலங்கை அரசு அப்பாவி மக்கள் மீது போர் தொடுப்பதை நிறுத்த வேண்டும் என்ற அந்தக் கோரிக்கையோடு மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கையாக வைப்பது என்பது, நம்முடைய மத்திய அரசு இராணுவம், நிதியுதவி மற்ற காரியங்களை அந்த நாட்டிற்கு செய்யக்கூடாது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. ஓர் அண்டை நாடு என்ற முறையிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. நாங்கள் இதைச் சொல்கிற காரணத்தினாலே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. எங்களுக்கு அதிலே உடன்பாடு இல்லை. அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக இருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் அப்பாவி மக்கள்மீது போர் தொடுப்பது என்பது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல. காரணம், உலக நாடுகளே இலங்கை நாட்டைக் கண்டித்திருக்கின்றன. ஒருதலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்துவிட்டு, இப்படி ஒரு தாக்குதல் நடத்துவது என்பது எந்த வகையிலே நியாயம் என்பதுதான் இன்றைக்கு உலக அளவிலே இருக்கிற கேள்வி. ஆகவே, இந்தக் கேள்வியை கேட்டுக்கொண்டிருக்கிறபொழுது, நம்முடைய மத்திய அரசு அதற்கு உதவி செய்வது என்பது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. ஆகவே, இராணுவ உதவியோ, நிதி உதவியோ, எந்த உதவியும் மத்திய அரசு அங்கே செய்யக்கூடாது. அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை அங்கே எடுக்க வேண்டும். அதிலே அவர்களுக்கு



2008 ஜனவரி 24] [திரு. வை. சிவபுண்ணியம்]

கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்வது அவர்களுக்குரிய உரிமை கிடைக்க வேண்டும். சிங்கள மக்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அதே உரிமை தமிழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான் பிரச்சினை. ஆகவே, ஆட்சியா, அதிகாரமா என்பதெல்லாம் வேறு விஷயங்கள். ஆனால் அவர்களுக்குரிய உரிமை மறுக்கப்படுவதை மீட்பதற்கான ஒரு போராட்டமாகப் பார்க்க வேண்டும் அல்லது அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்குரிய முயற்சியை பெரிய நாடு என்ற முறையிலே, அண்டை நாடு என்ற முறையிலே மத்திய அரசு அதற்குத் தீர்வு காண்பதற்கான ஒரு முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–55

அடுத்து, எல்லாவற்றிற்கும் மேலாக பல பிரச்சினைகள் இங்கே வந்திருக்கின்றன. குறிப்பாக நம்முடைய தமிழகத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சி, வேலைவாய்ப்புகளுக்கான முயற்சி, பல்வேறு தொழில்கள் தொடங்கப்படுவதற்கான முயற்சி எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று நாங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அதற்கு ஆதரவு அளிக்கிறோம். இதிலே பல்வேறு முயற்சிகளில் பல தடைகள் இருக்கின்றன. ஹூண்டாய் தொழிற்சாலை பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று. ஃபோர்டு தொழிற்சாலையினுடைய வளர்ச்சி வரவேற்கக்கூடிய ஒன்றுதான். ஆனால், தனியார் மூலதனம் என்ற முறையில் எங்களுக்கு மாற்றுக் கருத்துகள் இருந்தாலும்கூட, தொழில்கள் வருவது என்பதை நாங்கள் தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. ஆனால், இந்த ஹூண்டாய் தொழிற்சாலையிலே சமீபத்திலே நடந்த செய்தியைப் பார்த்திருப்பீர்கள். அங்கே தொழிற் சங்கம் அமைப்பதற்கான உரிமை மறுக்கப்படுகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சி.ஐ.டி.யூ.வினுடைய பொதுச் செயலாளர் தோழர் சௌந்தரராஜன் அவர்கள் போகிறபோது, கொடி ஏற்றுவதற்கே அனுமதி இல்லை. ஆகவே, பல தொழிற்கூடங்களில் அப்படிப்பட்ட அனுமதி இருக்கிறபோது, இது ஏதோ ஒரு மர்மமான சூழ்நிலையை உருவாக்குவதைப்போல அந்தத் தொழில் நிறுவனம் செயல்படுவதாக வருகிற செய்தியை நாம் கவனிக்க வேண்டும். அப்படி ஒரு ஜனநாயகப்பூர்வமான சங்கம் வைப்பதை, தடுப்பதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழ்நாட்டு அரசியலில் என்ன வருகிறது என்று சொன்னால், சில குறைபாடுகள், பிரச்சினைகள் வருகிறபோது (மணியடிக்கப்பெற்றது) அவற்றைச் சுட்டிக்காட்டலாம், அவற்றிற்கு விமர்சனம் சொல்லலாம், கருத்துகளைச் சொல்லலாம், அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. தவறுகள் என்றால் தவறுகள் என்று சொல்வதிலேயும் ஆட்சேபணை இல்லை. ஆனால், அரசியல் என்பதே ஒரு எல்லை கடந்த நிலையிலே விரோத குரோத மனப்பான்மையோடு பேசப்படுகிற சூழ்நிலைகளைப் பார்க்கிறபோதுதான் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுக்கிறபோது பல தடைகள் வருமே என்ற அச்சமும், சந்தேகமும் எழுகிறது.

குறிப்பாக, சமீபத்திலே நம்முடைய அ.தி.மு.க.—வினுடைய பொதுச் செயலாளர் அவர்களுடைய அறிக்கை. இதை இங்கேயும் நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். மனிதன் இறக்கிறபோது கவலை இல்லாமல் போகிறது இந்த நாட்டில். மாடு இறந்தால் மிகப் பெரிய கவலை ஏற்படுகிறது. (குறுக்கீடுகள்) மாடு இறந்தால் கவலை ஏற்படுகிறது என்பதுகூட, அதுவும் முக்கியமான விஷயம்தான். ஆனால், என்னுடைய கருத்து என்னவென்றால், (குறுக்கீடுகள்) இராமேஸ்வரத்தில் 14 மாடுகள் இறந்துவிட்டன. அது யார் ஆட்சிக் காலத்தில் நடந்தது, எத்தனை எண்ணிக்கையில் மாடுகள் இறந்தன என்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், இந்த மாடுகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற முயற்சிகளை எடுக்க வேண்டும் என்பதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. இன்றுகூட ஆன்மீகப் பெரியவர் இராமகோபாலன்கூட பசு மடங்களை உருவாக்க வேண்டுமென்று ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். நான் இந்தச் செய்தியைச் சொல்வதற்குக் காரணம், இந்த அவையிலேயே நான் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறேன். பசு வதையைத் தடை செய்ய வேண்டும், வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று கருத்துகள் வருகிறபோது, அந்தப் பசுக்கள், மாடுகளை எந்த வகையில் பாதுகாக்க முடியும் என்பதைப்பற்றி நான் கருத்துச் சொல்கிறபோது, அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் பேசியிருக்கிறேன்; பழைய குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். இப்போதும் நான் சொல்வது, ஆன்மீகப் பெரியவர்களுடைய விருப்பம், பசுக்கள் பாதிக்கப்படக்கூடாது, இறக்கக்கூடாது என்பதிலே எனக்கும் உடன்பாடுதான். நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தப் பசுக்களையெல்லாம் கோயில்களிலே வைத்துப் பாதுகாப்பதற்கு, இது அரசாங்கத்தினுடைய வேலையாக இந்த வேலையைச் செய்வது என்பது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்பதையும் நாம் பரிவாகப்





பரிசீலிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இதற்கு ஒரு தனி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் அதற்கு மேலே அதற்கு ஒரு ஏற்பாடே செய்வார் என்றுதான் நான் கருதுகிறேன். என்னுடைய கருத்து என்பது இப்படி மாடுகளை, கோயில்களுக்காக, அவர்கள் வேண்டுதல் என்ற அடிப்படையில் விடுகிறார்கள் என்று சொன்னால், பல கோயில்களில், கிராமங்கள் இருக்கக்கூடிய நிகழ்விலே இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், அவற்றை ஏலம்விட்டு அந்தக் கோயிலுக்கு நிதியைச் சேர்க்கின்ற ஒரு முயற்சி இருக்கிறது. ஆகவே, அந்த மாதிரியான காரியத்தைச் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினை, பாதுகாப்பு இல்லை, கண்காணிப்பு இல்லை என்ற அந்தக் குறைபாடு வராது என்பது என்னுடைய பணிவான கருத்து. இதை ஆன்மீகப் பெரியவர்களே ஏற்றுக்கொள்வார்கள். இல்லை, இல்லை, இதைச் செய்யவே கூடாது என்றால், அந்த ஆன்மீகப் பெரியவர்களுடைய மடத்திற்கு, ஆயிரம் மாடுகள்வீதம் அவர்களிடம் ஒப்படைத்து அவற்றைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியை எடுக்கலாம். இதை எப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி சிந்தித்துச் செய்வது என்பதுதான் பொருத்தமாக இருக்கும். இல்லையென்றால் இது ஒரு அரசியலாக மாறுகிறது. வேறு சில பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லட்டும், எனக்கு ஆட்சேபனை இல்லை. மாடு செத்ததனாலேயே இராஜிநாமா பண்ண வேண்டுமென்றால் எப்படி அது? ஆட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்றால் எப்படி அது? மாடு செத்ததற்கு ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்றால் எப்படி? ஆனால், இந்த அவையிலேயே ஆதிச்சபுரம் பிரகாஷ் பட்டினியால் செத்துப் போனான் என்று சொன்னால், கூடப் பிறந்தவன் ஏன் சாகவில்லை என்று கேட்டீர்களே, நீங்கள் இப்படி வந்து சொல்லலாமா? (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் என்னுடைய கேள்வி. இதை நீங்கள் ஆழமாகப் பரிசீலிக்க வேண்டும் என்பதற்காக, உங்களுடைய சிந்தனைக்காக மட்டுமே நான் சொல்கிறேன். அரசியலை நாகரீகமாக நடத்தினால், தவறுகளைக் களையலாம், தமிழகம் எதிர்காலத்தில் முன்னேறும். அதற்கு எல்லோரும் முயற்சி எடுக்க வேண்டும். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் பேசுகிறபோது, இலங்கையில் அப்பாவித்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2008 ஜனவரி 24

தமிழர்கள்மீது நடத்தப்படுகின்ற யுத்தத்திற்கு, இலங்கை அரசுக்கு மத்திய அரசு ஆயுதங்களைக் கொடுப்பதைப்போன்ற ஒரு கருத்து தொனிக்கின்ற வகையில் ஒரு கருத்தை இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையிலே, அது மிகப் பெரிய தவறான தகவல் என்பதை நான் இந்த அவைக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சார்க் நாடுகளுடைய தலைவராக, இந்தப் பகுதிகளிலே இருக்கிற சிறிய நாடுகளுக்கு அரசியல் தலைமை ஏற்கின்ற வகையிலே, இந்தியப் பேரரசுக்கு, இந்திய நாட்டிற்கும் சில கடமைகள் இருக்கின்றன. அந்தக் கடமைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே சில ஒப்பந்தங்களின் அடிப்படையில் சில பயிற்சிகள் போன்றவைதான் சார்க் நாடுகளோடு நடத்தப்படுகிறதேயொழிய, அங்கே நடக்கின்ற யுத்தங்களுக்கு இலங்கை அரசுக்கு ஆயுதங்களைக் கொடுக்கின்ற அளவிற்கு மத்திய அரசு செயல்படுகிறது என்று சொல்வது மிகப் பெரிய தவறான தகவல்.

*நண்பகல் 12-00*

இலங்கை அரசிடம் ராஜ ரீதியாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பதை மத்திய அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. அதற்கான எல்லா உதவிகளையும் செய்து வருகின்றது. மத்திய அரசினுடைய பாதுகாப்புத் துறை ஆலோசகர் திரு. நாராயணன் அவர்கள்கூட, மத்திய அரசு இதில் என்ன முயற்சிகளை எடுத்து வருகின்றது என்பதை அவ்வப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அவர்களுக்கு அந்தத் தகவல்களைத் தெரிவித்து, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்ற பின்பே, மத்திய அரசு தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. காங்கிரஸ் கட்சி சார்பாகக்கூட இதன் அடிப்படையிலே பல சமயங்களிலே நாங்கள் சொல்லி வந்திருக்கிறோம். இந்த இலங்கைப் பிரச்சினைக்கான தீர்வை, நம்முடைய முதலமைச்சர் அவர்களையும், பிரதமர் அவர்களையும் நம்பி, அவர்கள் கையிலே கொடுத்து, நல்லதொரு அரசியல் தீர்வு உருவாக வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்தேயொழிய, அங்கே அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக ஆயுதங்களைக் கொடுக்கின்ற அளவுக்கு மத்திய அரசுக்கு இரக்கம் இல்லை என்பதைப்போல அல்லது தமிழர்களைப் பற்றி கவலையில்லை என்பதைப்போல ஒரு தொனி வருவது நல்லதல்ல. இப்பொழுதுகூட ஒரு பெரிய தேசிய விழாவுக்கு நம்முடைய பிரதமர் அவர்களை இலங்கை அரசு மிக வற்புறுத்தி அழைத்தது. ஆனால், நம்முடைய உணர்வுகளையெல்லாம் புரிந்துகொண்ட பிரதமர் அவர்கள், அந்த விழாவுக்குப் போகவில்லை என்பதையும் இந்த அவையிலே நாம்



2008 ஜனவரி 24] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

நன்றியோடு நினைவில் வைத்துக்கொள்ள ஆசைப்படுகின்றோம். ஆகவே அந்தக் கருத்தை பதிவு செய்ய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். *(குறுக்கீடு)*

**திரு. ஆர். சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அருமை நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் பேசும்போது, இந்த அவையிலே எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று ஆளுங்கட்சியினுடைய பாராட்டைப் பெறுவதற்காகப் பேசிக் கொண்டிருக்கின்றார். ஒரு கிலோ நெல் 16 ரூபாய்க்கு விற்பதாக அவர் இங்கே அவையிலே சொல்லியிருக்கிறார். ஒரு கிலோ நெல் 16 ரூபாய்க்கு விற்பதை அவர் நிரூபித்தால், நான் இந்த எம்.எல்.ஏ. பதவியை இராஜிநாமா செய்யத் தயார். இல்லையென்றால், அவர் தவறாகச் சொன்னதற்கு இந்த அவையிலே மன்னிப்பு கேட்கவேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று, நீங்கள் சொல்லக் கூடாது. *(குறுக்கீடு)* வருத்தம் தெரிவிக்கவேண்டுமென்று சொல்லலாம். மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று சொல்லக் கூடாது. மன்னிப்பு என்பது வேறு, வருத்தம் என்பது வேறு. *(குறுக்கீடு)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் மத்திய அரசு இரக்கமற்ற முறையில் செயல்படுகின்றது என்ற அர்த்தத்திலே குறிப்பிடவில்லை. தயவுசெய்து நான் அந்த அர்த்தத்திலே குறிப்பிடவில்லை. அவருடைய உணர்வுகளை நான் புரிந்துகொண்டிருக்கின்றேன். அண்டை நாடு என்ற முறையிலே இந்த விஷயங்கள் பெரிய அளவிலே பாதிக்கப்படுகின்றன. இன்னொரு விஷயத்தையும் பார்க்கவேண்டும். இங்கே தமிழ்நாட்டு முதலமைச்சருடைய தலையீட்டோடு காரியங்களைச் செய்யவேண்டுமென்று விரும்புகின்றார். அது எங்களுடைய விருப்பமும்கூட. ஆனால் அந்த விருப்பத்தை வெளிப்படுத்துகின்றபோது, என்ன நிலைமை வருகின்றதென்றால், புலிகளுக்கு ஆதரவு என்ற நிலையாக அது மாறிவிடுகின்றது. ஆகவே பிரச்சினையினுடைய தன்மை கீழே போய், வேறுவிதமான பிரச்சினை மேலே வருகின்றபோது, நிலைமையைக்கூட சொல்ல முடியாத ஓர் இக்கட்டான நிலை

[திரு. வை. சிவபுண்ணியம்] [2008 ஜனவரி 24

தமிழகத்திலே ஏற்படுகிறது. நான் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன், இதுதான் கருத்து.

அடுத்து நம்முடைய உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்னார், நெல் விலை 16 ரூபாய் என்றால், உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்வதாகச் சொன்னார். இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. குவிண்டால் நெல் 825 ரூபாய் என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. நான் சன்ன ரக, அதி சன்ன ரகத்திலிருந்து மோட்டா ரகம் வரையிலே உள்ள நெல்லை சாகுபடி செய்கின்ற பகுதியைச் சேர்ந்தவன். 16 ரூபாய்க்கு நெல் வேண்டுமென்றால் அவர் என்னுடன் வந்தால் வாங்கித் தருகின்றேன். வாங்கிய பிறகு இராஜிநாமா பண்ணப் போகிறாரா என்பதை உறுதி செய்துவிடுங்கள். அதிலுள்ள விஷயங்கள் என்னவென்று நாம் சொல்லிவிடலாம். அதாவது நெல் காய்க்கிற மரமே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தால் என்ன செய்ய முடியும்? நெல் உற்பத்தி செய்கின்ற மாவட்டத்தைச் சேர்ந்தவன் நான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் 16 ரூபாய் அளவுக்கு நெல் கொள்முதல் செய்யப்படுகின்றது என்று சொன்னார்கள். 16 ரூபாய் அளவுக்கு ஒரு கிலோ நெல் கொள்முதல் விலையாக இருந்தது. அதில் உமி 600 கிராம் போய்விடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 750 கிராம் வரும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கொள்முதல் செய்யப்படுகின்றது என்று சிவபுண்ணியம் சொன்னார், அதைத்தான் உறுப்பினர் திரும்பச் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற விவாதத்தில் பங்கேற்பதற்கு அனுமதி அளித்திருக்கின்ற தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற உரையில் ஏற்கெனவே இப்பொழுது பேரவைத் தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் என்னென்ன திட்டங்கள் இந்த அரசின்மூலமாக இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்ற பட்டியலைத் தந்தீர்கள். அந்தப் பட்டியலோடு நாலும் நிச்சயமாக அப்படிப்பட்ட திட்டங்களை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். கொடுக்கின்ற நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று சொல்லுவான் வள்ளுவன். ஆகவே, என்னென்ன இந்த ஆளுநர் உரையில் இருந்திருந்தால், விவாதிக்கப்பட்டிருந்தால், அறிவிக்கப்பட்டிருந்தால், இந்த ஆட்சி இன்னும் நல்ல பெயரைப் பெறும் என்கிற கருத்திற்கொப்ப சில குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்கிற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இவற்றை நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-05

முதலிலே, விடுதலைப் புலிகள் ஊடுருவல். கடந்த 2 ஆண்டுகளில் 102 பேர் தமிழகத்திற்குள்ளே அவர்கள் ஊடுருவியிருக்கிறார்கள். 102 பேரில், 40 பேர் மேல் National Security Act—தேசிய பாதுகாப்புச் சட்டம் அவர்கள்மீது போடப்பட்டு, அவர்கள் இன்று நடவடிக்கைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இப்போது, தினந்தோறும் பத்திரிகைகளைப் பார்ப்போம் என்று சொன்னால் 17 ஆம் தேதி தம்பிதுரை என்கிற விடுதலை புலிகளுடைய ஒரு பிரிவு தலைவராக இருக்கின்றவர் பல நாட்களாக சென்னை மடிப்பாக்கத்திலே இன்னும் ஏழு பேரோடு சேர்ந்து அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கடத்திய நிகழ்வுகள் எல்லாம் பட்டியலிடப்பட்டிருக்கின்றன.

அதேபோல திலீபன் என்பவர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதற்குப் பிறகு இங்கே செல்வராஜ் என்பவர் ஒருவரும் சென்னை எழும்பூர் இரயில் நிலையத்திற்குப் பக்கத்திலே கைது செய்யப்பட்டிருக்கிறார். விருகம்பட்டிலே ஒருவர் கைது

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஜனவரி 24

செய்யப்பட்டிருக்கிறார். இவ்வளவும், விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுத்து, கண்டுபிடித்திருக்கின்ற நம்முடைய தமிழக அரசினுடைய "Q" Branch-க்கு என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், "Q" Branch இந்த அளவிற்கு நடவடிக்கை எடுத்து அவர்களை கைது செய்கின்ற வரையில் தமிழகத்தினுடைய உளவுத் துறை என்ன செய்து கொண்டிருந்தது என்பதைத்தான் நான் இங்கே ஒரு வினாவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். உளவுத் துறை இந்த அளவிற்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளிலே 102 பேர் உள்ளே ஊடுருவி வந்து அவர்கள் இங்கே விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், பால்ரஸ் குண்டுகளையெல்லாம் வாங்கி கடத்தக்கூடிய நிகழ்வுகள் எல்லாம் இங்கே அரங்கேறுகின்றன என்று சொன்னால் அதற்கு உளவுத் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொஞ்சம் முடுக்கிவிட்டு விடுதலைப் புலிகளை முழுமையாக வேரறுக்கச் செய்ய வேண்டும். என்னுடைய அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களை தமிழ் மண்ணில் கொன்று குவித்த அந்தக் கூட்டத்திற்கு நீங்கள் நிச்சயமாக பாடத்தைப் புகட்ட வேண்டுமென்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இங்கே விண்ணப்பிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு அங்கே நாம் நிச்சயமாக அரசியல் தீர்வைக் காணவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே எங்களுடைய உறுப்பினர் பீட்டர் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். இதிலே மாறுபட்ட கருத்து காங்கிரஸ் கட்சிக்கோ, மத்திய அரசுக்கோ, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கோ கிடையாது. காரணம், அரசியல் தீர்வு அங்கே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதிலே எள்ளளவும் மாறுபட்ட கருத்து யாருக்கும் கிடையாது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதே அவையிலே சுட்டிக்காட்டியதுபோல் விடுதலைப் புலிகளுக்கு நாம் அளித்து வருகின்ற ஆதரவு என்பது ராஜீவ் காந்தி படுகொலைக்கு முன், ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின் என்று அவர்கள் ஒரு demarcate பண்ணி ஒரு இடத்தைக் குறிப்பிட்டார்கள். ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னாலே நடக்கக்கூடிய நிகழ்வுகளுக்கு காரணமாகத்தான் இன்று நாங்கள் விடுதலைப் புலிகளை—எங்கள் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் இதே மண்ணிலே 1991-இல் நாங்களெல்லாம் வேட்பாளர்களாக நின்றபோது எங்களுக்கெல்லாம் வாக்கு கேட்க வந்த அந்த சுதந்திரப் பறவை இந்தத்



2008 ஜனவரி 24] [திரு. சி. ஞானசேகரன்]

தமிழ் மண்ணிலே வெடிகுண்டு கலாசாரத்திற்கு பலியாக்கப்பட்ட காரணத்தினாலேதான்—அந்த வடு இன்னும் எங்களை விட்டு மறையவில்லை.

தொடர்ந்து நாங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கோருவதெல்லாம் அந்த முதல் குற்றவாளியாக இருக்கின்ற பிரபாகரன் அவர்கள் மீது இன்னும் N.B.W. pending அந்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. இப்போது இன்றைய பேப்பரை பார்த்தாலும்கூட இலங்கை அதிபர் அந்த பிரபாகரன் கிடைத்தவுடன் நான் இந்தியாவிடம் ஒப்படைத்துவிடுகிறேன் என்று சொன்னார்கள். ஆகவே, நாம் உடனடியாக அந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கக்கூடிய N.B.W. – Non Bailable Warrant-ல் உள்ள அந்த பிரபாகரனைக் கொண்டுவருவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–10*

தமிழர்கள், தமிழர்கள் என்று பேசிக்கொண்டிருக்கிறோம். தமிழர்களுக்காக ஆதரவு தெரிவிப்பதாகச் சொல்லி இன்று விடுதலைப் புலிகளுக்கு நிறைய அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், சில அமைப்புகள், வெளிப்படையாக தமிழகத்திலே இன்று அவர்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பது எங்களுக்கு உண்மையிலேயே வேதனை அளிக்கிறது. அப்படிப்பட்ட இயக்கங்களை முழுமையாக தடைசெய்ய வேண்டும், அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், அவர்கள் வெளிப்படையாக மாநாடு நடத்துகிறார்கள். சிலர் உரிமை மாநாடு என்று சொல்கிறார்கள். அதை வாழ்வுரிமை என்கிறார்கள். கருத்துரிமை என்கிறார்கள். இன்னும் சிலபேர், இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இப்படி விடுதலைப் புலிகளுக்கு—தமிழர்கள் இன்னும் சொல்லப்போனால் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டிருக்கிற தமிழர்கள் ஏராளம். அவர்களும் தமிழர்கள் தானே, தமிழர்களையே கொன்று குவிக்கக்கூடிய ஓர் இயக்கமாக விளங்கிக் கொண்டிருக்கிற அந்த விடுதலைப் புலிகளுக்கு நாம் ஏன் துணை போக வேண்டும்? அப்படிப்பட்ட இயக்கங்களுக்கு இங்கு இருக்கக்கூடியவர்கள், சில அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள், சில அமைப்பைச் சார்ந்தவர்கள் ஏன் அவர்களுக்கு அவர்கள் இன்னும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நான்

பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்படிப்பட்டவர்களை—ஏனென்றால் இப்படிப்பட்டவர்கள் சிலர் இருக்கின்ற காரணத்தினால்தான் அவர்கள் இங்கே ஆயுதங்களைக் கடத்துவதற்கு, உணவுப் பொருட்களைக் கடத்துவதற்கு அல்லது பால்ரஸ் குண்டுகளைத் தயாரிப்பதற்கு என்று பல பேர் இங்கே தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை—நீங்கள் உளவுத் துறைமூலமாகக் கண்டுபிடித்து அவர்களை முழுமையாக ஆரம்பக் கட்டத்திலேயே தடுத்து நிறுத்துவதற்கு முழு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிமெண்ட் பிரச்சினையில் ஒரு நல்ல தீர்வைக் கண்டிருக்கிறார்கள். பல பேருடைய கோரிக்கை, கட்டுமானத்தினுடைய விலைகள் எல்லாம் உயர்ந்து போய் 200 ரூபாய்க்கு ஒரு மூட்டை சிமெண்ட் என்பது 250, 260 ரூபாய்க்கும்கூட அது போய்விட்டது. இப்படி சிமெண்ட்டினுடைய விலை ஏறியவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு எச்சரிக்கை மணியைத் தந்தார்கள். எல்லா சிமெண்ட் ஆலைகளையும் நாட்டுடைமையாக்குவோம் என்று சொன்ன பிறகு எல்லோருமே பயந்து உங்களிடம் ஓடி வந்தார்கள். இன்று 200 ரூபாய் ஒரு மூட்டை என்று வைத்திருக்கிறீர்கள். அது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள் அல்லது 1,000 சதுர அடியில் வீடு கட்டுபவர்கள், அவர்களுக்கு 100 மூட்டை தான் maximum கொடுக்க முடியும் என்றெல்லாம் வகுத்து அதற்கு தாசில்தாரிடம் பெர்மிட் வாங்கி பிறகு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் சென்று வாங்க வேண்டும் என்று சொல்லக்கூடிய இந்த வழிமுறைகள் சரியானதல்ல. ஏனென்றால் தமிழகத்தில் வீடு கட்டுகிறவர்கள், வறியவர்களும் கட்டுகிறார்கள் அல்லது நடுத்தர மக்களும் கட்டுகிறார்கள், செல்வந்தர்களும் கட்டுகிறார்கள். இன்று ஆந்திராவிலே சிமெண்ட் 156 ரூபாய்க்கு மூட்டை என்று விற்கிறபோது தமிழகத்திலே பல சிமெண்ட் ஆலைகள் இங்கே இருக்கிறபோது ஏன் அவர்கள் 160 ரூபாய்க்கு இங்கே விற்கக் கூடாது? அப்படி விற்க மறுத்தால் அவர்களுடைய அத்துணை ஆலைகளும் நாட்டுடைமையாக்கப்படும் என்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆந்திராவிலே ஏதோ 156 ரூபாய்க்கு சிமெண்ட் விற்பதாகச் சொன்னார்கள். இந்தியாவிலேயே எங்கேயும் 235 ரூபாய்க்குக் கீழே சிமெண்ட் விற்கவில்லை. மும்பையிலே 300 ரூபாய்; டெல்லியிலே 290 ரூபாய்; கேரளாவிலே 285 ரூபாய்; இந்தியாவிலே யாரும் எடுக்காத ஒரு முயற்சியை தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எடுத்த காரணத்தால்தான் ஒரு மாதத்திற்கு 20 இலட்சம் சிமெண்ட் மூட்டைகளை 200 ரூபாய் வீதத்தில் கொடுக்கிறோம் என்று அவர்கள் முன்வந்து அதையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி ஏழைகளுக்குப் போய் விநியோகிக்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை எல்லாம் வகுத்து முறையாக அதை விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

மத்திய Commerce Minister கூட சிமெண்ட் உற்பத்தியாளர்களை எல்லாம் கூப்பிட்டுப் பேசி அது முடியாத ஒரு சூழ்நிலையில் அவர் வெளிப்படையாகப் பேட்டி கொடுத்து இருந்தார். சிமெண்ட் அதிபர்கள் கொள்ளை இலாபம் அடிக்கிறார்கள் என்று சொன்னாரே தவிர, அந்த மத்திய அரசு அந்த சிமெண்ட் அதிபர்களைக் கட்டுப்படுத்தி இவ்வளவுக்கு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. இந்தியாவிலேயே ஒரே ஒரு மாநிலம், தமிழ்நாட்டிலேதான் நம்முடைய முதலமைச்சர் தான், 200 ரூபாய்க்கு சிமெண்ட் விற்க ஏற்பாடு செய்திருக்கிறார். அதை நீங்கள் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக அவரைப் பாராட்டிவிட்டேன். நான் என்ன கூறுகிறேன் என்று சொன்னால் இந்த நடைமுறை இப்போது ஒத்து வரவில்லை. தயவுசெய்து காங்கிரஸ் கட்சி சார்பாக நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நாட்டுடைமையாக்குவோம் என்று சொன்னவுடன் அத்தனை பேரும் பதறிப் போய் ஓடி வருகிறார்கள். நீங்கள் அதே நிலையை எடுத்தீர்கள் என்று சொன்னால் எல்லோருக்குமே அதாவது, 1,000 சதுர அடி என்று கட்டுபவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஜனவரி 24

மட்டுமல்ல, தமிழகத்திலே open market–லே 200 ரூபாய்க்கு, 160 ரூபாய்க்கு என்றுகூட நான் கேட்கவில்லை. 200 ரூபாய்க்கு எல்லோருக்கும் விற்கப்படும் என்ற நிலையை நீங்கள் உருவாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வருடைய உத்தரவின்பேரில் நாங்கள் மத்தியிலே இருக்கிற வர்த்தகத் துறை அமைச்சரைப் பார்த்துப் பேசினோம். கமல்நாத்திடம் பேசுகிறபோது நாங்கள் அவரிடம் கேட்டது, Essential Commodities Act–ல் நீங்கள் இதை include பண்ணுங்கள் என்று கேட்டோம். அதில் நீங்கள் include பண்ணிவிட்டீர்கள் என்றால் நிச்சயமாக நாளைக்கு இந்தியா பூராவும் 200 ரூபாய்க்கு நாம் விற்கலாம். 150 ரூபாய்க்குகூட விற்கலாம். நாங்கள் அதைக் கேட்டோம். அது முடியவில்லை. அதிலும் சில சிக்கல்கள் இருக்கின்றன. இது Essential Commodities ஆக இருக்காது, அதனால் சேர்க்க முடியாது என்று சொன்னார்கள். அதற்குப் பிறகுதான் முதல்வர் அவர்கள் அழைத்துப் பேசி இந்த முயற்சிகளை மேற்கொண்டதன் விளைவாக 20 இலட்சம் மூட்டை மாதத்திற்குக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் Civil Supplies மூலமாக, 1,000 சதுர அடிக்குள்ளே கட்டுபவர்களுக்குக் கொடுக்கிறோம். இதிலே எந்தச் சிக்கலும் வராது. இன்னும் கேட்டீர்கள் என்றால், பெரிய பில்டர்ஸ்க்குகூட கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் import அதாவது இறக்குமதி செய்வதற்கான உத்தரவும் கொண்டு வரப்பட்டு, அதுவும் 160 ரூபாய்தான் விலை என்பதை சில பேர் தவறாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குத் தெரியும் F.O.B. என்றால் என்னவென்று. F.O.B. price–ல் எப்பொழுதுமே import–ஐ C & F பண்ணும்போது F.O.B. அதாவது Freight on Board என்று போடுவார்கள். கப்பலிலே 160 ரூபாய்க்கு கொடுத்துவிடுகிறார்கள். அந்த 160 ரூபாய்க்கு Builders போய் வாங்கினால் அவர்களுக்கு VAT–கூட கிடையாது. பெரிய கட்டடம் கட்டுகிறவர்கள் அல்லது காலேஜ் கட்டுகிறவர்கள் அந்த மாதிரி பெரிய Builders–போய் வாங்கினார்கள் என்றால் அவர்களுக்கு VAT–கூட வராது. அந்தக் கப்பலில் 160 ரூபாய்க்கு வாங்கிவிட்டு, அங்கு இருக்கிற இறக்குமதிச் செலவு, போக்குவரத்துச் செலவு முழுவதுமாக அவர் எடுத்தால், கிட்டத்தட்ட அவருக்கும் அந்த ரூ.200 rangeதான் வரும். அதை வாங்குவதற்காக அவர்களுக்கும் அனுமதி கொடுத்து, மத்திய அரசாங்கம்மூலமாகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.



2008 ஜனவரி 24] [டாக்டர் க. பொன்முடி]

ஆகவே, இருக்கிற Builders அல்லது மற்றவர்கள் முன்வருவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சிகளின்மூலமாகத்தான் இது நடைபெற்றிருக்கிறது.

*பிற்பகல் 12–15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருக்கு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும். திங்கட்கிழமைதான் பொதுமக்களுக்கு சிமெண்ட் கொடுப்பதாக ஏற்பாடு செய்தோம். நேற்றைய தினம் மாத்திரம் பார்த்தோம் என்று சொன்னால் 25 மாவட்டங்களில் ஒரு நாளைக்கு 140 மெட்ரிக் டன் சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டு இருக்கிறது. திங்கட்கிழமை முதல் routine-ஆக வாங்க ஆரம்பித்துவிட்டார்கள். Permit கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். நேரடியாக மக்கள் போய் வாங்குகிறார்கள். நேற்று ஒரு நாளைக்கு மட்டும் 140 மெட்ரிக் டன் சிமெண்ட் விற்பனையாகி இருக்கிறது. இன்றைக்குக் காலையில்கூட phone செய்தால் தொடர்ந்து பெர்மிட் வருகிறது, வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இது மக்களுக்கு நேரடியாகப் போய்ச் சேருகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னையில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கின்ற வகையில் இன்று அவர்கள் Elevated Express Way போன்றவற்றை இப்போது துறைமுகத்தில் இருந்து மதுரவாயில் வரை கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தை நேற்று ஆளுநர் உரையிலே கொண்டு வந்து இருக்கிறார்கள். இப்போது மதுரவாயில் வரைக்கும் வந்தால் மட்டும் போதாது. இப்போதெல்லாம் சென்னையில் எடுத்துக்கொண்டால், வேலூரில் இருந்து புறப்பட்டு பூந்தமல்லிக்கு 1 மணி நேரத்தில் வந்துவிடுகிறோம். ஆனால் பூந்தமல்லியில் இருந்து கோட்டைக்கு வருவதற்குக் கிட்டத்தட்ட 1¾ மணி நேரம் ஆகிறது.

அதேபோல Beach ரோடில் வந்தாலும்கூட அவ்வளவு கூட்டம். அதேபோல கிண்டியில் இருந்து வருவதாக இருந்தாலும் கூட்டம். ஆக, எல்லா இடங்களிலும் பொதுவாகக் கூட்டம் வரக்கூடிய

காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது எல்லா ரோடுகளுக்குமே Elevated Express Way போட்டால்தான் இனி சென்னைக்கு உள்ளே வர முடியும் என்ற நிலை எதிர்காலத்தில் வந்து விடும் என்கிற காரணத்தினாலே, நீங்கள் இப்போதே அதற்குத் திட்டமிட்டு போக்குவரத்து நெரிசலை கத்திபாரா ஜனார்த்தனா— அந்த கத்திப்பாராவிலிருந்து... *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சத்துவாச்சாரி வரையிலும் *(சிரிப்பு)*

**திரு. சி. ஞானசேகரன்:** கத்திப்பாரா அந்த ரவுண்டானா வந்தாலே அந்த இடத்தைக் cross செய்வதற்கே அரை மணி நேரம் ஆகிறது. அதேபோல போரூர் ரவுண்டானா வந்தால் அந்த இடத்தை cross செய்வதற்கே எங்களுக்குக் கிட்டத்தட்ட 20, 25 நிமிடங்கள் ஆகின்றன. ஆகவே இப்படிப்பட்ட இடைஞ்சல்கள், போக்குவரத்து நெரிசல்கள் அதிகமாக வரக்கூடிய காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்னை முழுக்க, முக்கியச் சாலைகள் அனைத்திற்கும் நீங்கள் Elevated Express Way கொண்டு வருவதற்கு நிச்சயமாக நடவடிக்கை இப்போதே எடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்தவரையில் நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 825 ரூபாய். நீங்கள் 50 ரூபாய் ஊக்கத் தொகை கொடுக்கிறீர்கள். மத்திய அரசு 100 ரூபாய். அது போதாது. குவிண்டாலுக்கு 1,000 ரூபாய் வந்தால்தான், அதுகூட உற்பத்திச் செலவிற்குக் கட்டுப்படியாகாது. கரும்புக்கு இப்போது பார்த்தோம் என்று சொன்னால், ரூ.1,034 வரை கிடைக்கிறது. இருந்தாலும்கூட 1,500 ரூபாய்க்கு மேல் இப்போது கரும்புக்கு உற்பத்திச் செலவாகிறது. நான் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம்கூட, வேலூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை விழாவில் கலந்துகொள்ளும்போது ஒரு கோரிக்கை வைத்தேன். இப்போது transport charges–ஐ எப்படி அரசு எடுத்துக்கொள்கிறதோ, அதேபோல வெட்டுக்கூலி. வெட்டுக்கூலி டன்னுக்கு ரூ.600 கேட்கிறார்கள். வாரம் ஆனால் அவர்களுக்குக் கடா வெட்டி சோறு போட வேண்டும் என்று சொல்கிறார்கள் வெட்டுக் கூலி செய்கிறவர்கள். எனவே, வெட்டுக்கூலியை மட்டுமாவது அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் மேலாக இருக்கும். இல்லையென்று சொன்னால் அதுவும் கரும்பு விவசாயிக்கு கடுமையாக இருக்கும்.





இப்போது ரூ.7,000 கோடிக்கு கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்தது உண்மையிலேயே விவசாயிகளுக்கு ஒரு நல்வாழ்வு கிடைத்திருக்கிறது. ஆனால் மீண்டும் அவர்களுக்கு அந்த சொசைட்டியில் பணம் முழுமையாக reimbursement செய்யாத காரணத்தினாலே, சில நேரங்களில் அந்தக் கடன் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதேபோல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் 5, 6 மாதங்களாக அங்கே இருக்கக்கூடிய Secretary, Salesman, Clerk–களுக்கு சம்பளம்கூட கொடுக்க இயலாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே உடனடியாக அந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குப் போதிய நிதியை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்து, உடனடியாக விவசாயிகளுக்கு அந்தக் கடன் கிடைப்பதற்கும், அதேபோல் உரம் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய் என்று வந்ததற்குப் பிறகு பார்த்தால், நிறைய அரிசி கடத்தல். வேலூரில் முந்தா நாள்கூட சேண்பாக்கத்தில் 12 டன் ஒரே இடத்தில். அதேபோல் கே.வி. குப்பத்தில் பார்த்தால் ஒரு புதரடியில் 300 கிலோ மண்ணெண்ணெய், 300 கிலோ அரிசி. இப்படி எங்கு பார்த்தாலும், கடத்த வேண்டும் என்ற உணர்வோடு சில பேர் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். அரிசி கிலோ 2 ரூபாய் என்று கொடுப்பதால்.

ரேஷன் கடைகளில் அவ்வப்போது மற்ற பொருட்களை விற்பனை செய்வதால் விலைவாசியைக் கட்டுப்படுத்தியிருக்கிறோம் என்று இப்போது ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்குக் கொடுக்கிறோம். ஆனால் ஒரு இட்லி 5 ரூபாய் என்று விற்கிறது. தோசை சரவணா ஓட்டல் போன்ற இடங்களில் ரூ.34 வரைக்கும் விற்கிறது. சில இடங்களில் 14 ரூபாய்க்கு தோசை விற்கிறது. கிலோ அரிசி 2 ரூபாய் என்று இருக்கிறபோது விலைவாசியை பொதுவாக ஓட்டல்களில் மற்ற இடங்களிலெல்லாம் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்னக எடுக்க வேண்டும். இப்போது மட்டன் விலை என்று பார்த்தால் கிலோ 200 ரூபாயைத் தாண்டி விட்டது. ஆகவே, முதல்வரும், நானும் இப்போது vegetarian ஆக இருப்பதால் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், non-vegetarian சாப்பிடுபவர்களுக்கு அது பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய கால்நடை பராமரிப்புத் துறைமூலம் எப்படியாவது நீங்கள் மட்டன்,

சிக்கன், ஆகியவற்றைக் குறைந்த விலையில் எப்படி மற்றவற்றையெல்லாம் ரேஷன் கடைகளில் கொடுக்கிறோமோ அதேபோல அதையும் நீங்கள் வளர்த்துக் கொடுப்பதற்கு ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–20*

**Pollution**-ஐப் பொறுத்த அளவில் எங்களுடைய மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய கழிவுநீர், அதேபோல திருப்பூர், ஈரோடுகளில் இருக்கக்கூடிய சாயப்பட்டறை நீரையெல்லாம் Zero discharge செய்ய வேண்டுமென்று சொன்னால் கடலில் கொண்டுபோய் சேர்த்தாக வேண்டும். திருப்பூரில் உள்ள ஒரத்தபாளையம் அணையைப் பார்த்தோம் என்று சொன்னால், நாம் கட்டிய அணை விவசாயிகளுக்குப் பயன்படாமல் கழிவுநீரைத் தேக்கி வைக்கக்கூடிய ஒரு இடமாகவே மாறிவிட்டது. ஆகவே, அங்கே 800 கோடி ரூபாயில் திருப்பூரிலிருந்து பைப் லைன்மூலமாக நாகைக்கு அதைக்கொண்டு போயும், அதேபோல வேலூர் மாவட்டத்தில் எங்களுடைய வாணியம்பாடி பகுதியிலிருந்து சென்னைக்கு Ocean discharge நீங்கள் பைப் லைன் மூலம் அந்த கழிவு நீரைக் கொண்டு வந்தால்தான், இனி எங்களுடைய மாவட்டத்தையும் காப்பாற்ற முடியும். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக—சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரிலேகூட திருப்பூருக்கு அறிவித்தார்கள். அதுபோல்—வேலூருக்கும் அறிவிப்புச் செய்து உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். சென்ற ஆளுநர் உரையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் எங்களுக்கு இருக்கிற வருத்தம் எல்லாம், கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டங்களுக்கு மட்டுமே ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ப்ளோரைடு அங்கே மட்டும் இல்லை. எங்களுடைய மாவட்டத்திலும் நிறைய ப்ளோரைடு வந்து, குடிப்பதற்கே லாயக்கில்லாத தண்ணீரை பல இடங்களில் நாங்கள் குடித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கும் அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் அதே ஜப்பான் வங்கியினுடைய நிதி உதவித் திட்டத்தின்மூலமோ அல்லது நபார்டு மூலமோ எப்படியாவது சேர்த்து





எடுத்து ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீங்கள் உடனடியாக வேலூர் மாவட்டத்திற்கு அறிவிக்கவில்லையென்று சொன்னால் எங்கள் மாவட்டத்தில் இனி குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் போகக்கூடிய ஒரு அபாய நிலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக அதை அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல... (மணியடிக்கப்பெற்றது) இப்போது பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கவர்னர் உரைக்கே வரவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆளுநர் உரைக்கு வந்து விடுகிறேன். நாமக்கல் மாவட்டத்தில் பார்த்தீர்கள் என்றால் காடையாம்பட்டி போன்ற பல இடங்களில் கோழிகள் இறந்திருக்கின்றன. அதேபோல காஞ்சிபுரம் மாவட்டத்ில்கூட காஞ்சிபுரம் டவுனில் 38–வது வார்டிலே ஒரே இடத்தில் 100 கோழிகளுக்குமேல் இறந்து கிடக்கின்றன. இப்போது நாமக்கல் மாவட்டத்திலே 400 கோழிகள் இறந்து கிடப்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே பறவைக் காய்ச்சல் நம்முடைய தமிழகத்தில் வராமல் பார்த்துக்கொள்வதற்கு நீங்கள் உடனடியாக போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அது எதனால் வருகிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதனால் ஒரு அச்சம் தமிழக மக்கள் மத்தியிலே வந்து விடக்கூடாது. நூற்றுக்கணக்கான கோழிகள் ஒரே இடத்திலே இறக்கின்றன என்று சொன்னால் அதிலே ஏதோ ஒரு பிரச்சினை இருக்கிறது என்று பொருள். ஆகவே, மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு எதுவும் கிடையாது. பறவைக் காய்ச்சல் நோய் இல்லை. துறைமூலம் முறையாக இரத்த மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு பெங்களூரில் உள்ள மத்திய அரசின் லெபாரட்டரிக்கு அனுப்பி பரிசோதனை செய்யப்படுகிறது. இதுவரைக்கும் பறவைக் காய்ச்சல் நோய் தாக்குதல் இருக்கிறது, பாதிப்பு இருக்கிறது என்று கண்டறியப்படவில்லை. ஆகவே, தமிழகத்தில் பாதிப்பு கிடையாது என்பதை நாம் உறுதியோடு சொல்ல முடியும். அதேபோல காஞ்சிபுரத்திலே அந்தப் பறவைகள் இறந்தன; கோழிக் கழிச்சல், அதாவது இரத்த கழிச்சல் நோயால்தான் பாதிக்கப்பட்டுள்ளன என்பது

அரசு ஆய்வகத்தில் பரிசோதனை செய்ததன்மூலம் முடிவு தெரியப்பட்டுள்ளது. ஆகவே, பறவைக் காய்ச்சல் பாதிப்பு கிடையாது. அதேபோல வேலூர் மாவட்டத்திலே ஒரே ஒரு கன்று மட்டும் இறந்தது. அதற்கு காரணம் Anthrax என்பது உறுதி செய்யப்பட்டது. ஆனால் மற்ற கால்நடைகளுக்கு எல்லாம் பாதிப்பு இல்லை. எல்லா கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லை. நாம் தைரியமாக இருக்கலாம். ஏனென்றால் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், தடுப்பு நடவடிக்கைகளும் அரசின்மூலம் எடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு மேற்கு வங்கத்தில் பறவைக் காய்ச்சலை 15 ஆம் தேதி உறுதி செய்தது. அன்றே எல்லா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுத்துள்ளது. அதனால் நமக்கு பாதிப்பு இல்லை. கடந்த 2007 ஆம் ஆண்டு மணிப்பூரில் பறவைக் காய்ச்சல் வந்தபோதுகூட நம்முடைய தமிழகத்தில் எந்த பாதிப்பும் இல்லை. அதனால் நாம் தைரியமாக இருக்கலாம். நிச்சயமாக வராது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் எங்கேயும் அந்தப் பறவைக் காய்ச்சல் இல்லை. எங்கேயும் இறக்கவில்லை என்று சொன்னார்கள். ஒரே கிராமத்தில் நாட்டுக் கோழிகள் 300 கோழிகள் இறந்து இருக்கின்றன. அது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா என்பதையும் கேட்டு, அதேபோல ஒரேயொரு மாடு Anthrax தாக்கி இறந்ததாகச் சொல்கிறார்கள். நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் கோமாரி நோய் தாக்கி நூற்றுக்கணக்கான மாடுகள் இறந்திருக்கின்றன. அதுவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோழியைப் பற்றிப் பேசுங்கள் என்றால், மாட்டைப் பற்றிப் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** இல்லை, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறோம். நம்முடைய துறையின் சார்பில் எந்த ஒரு நிகழ்வையும் நாங்கள் அறிந்துள்ளோம். குறிப்பாக, நாமக்கல் மாவட்டத்தில் புறக்கடைக் கோழிகள், அதாவது நாட்டுக் கோழிகள் 17 இறந்துள்ளன. அதுவும் கோழிக் கழிச்சல் நோயினால்தான். வேறு நோய்





இல்லை. உடனே நாங்கள் துறையின்மூலம் மாதிரி எடுத்து, பரிசோதனை செய்த போது, அதுவும் கோழிக் கழிச்சல் நோய்தான், என்று கண்டறியப்பட்டுள்ளது. எப்போதுமே இந்தக் காலங்களில் கோழிகளுக்கு இறப்பு என்பது சாதாரண நோய்களினால் வருவதுதான். அசாதாரணமான இறப்போ, நோயோ நம்முடைய தமிழகத்தில் இல்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, Foot and mouth -அதாவது கோமாரி நோய் நம்முடைய தமிழகத்தில் அதிகம் பரவி வருகிறது, இறப்பு உள்ளது என்பதனால் அரசின்மூலம் அதை நாங்கள் கணக்கெடுத்துள்ளோம். நம்முடைய முதலமைச்சரிடம் ஆலோசனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க உள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தைரியமாக கோழிக்கறி மற்றும் கோழி முட்டை சாப்பிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில், பொதுவாக இப்போது தருமபுரி மாவட்டத்தில் போதிய அளவுக்கு மருத்துவர்கள் இல்லாத காரணத்தினாலே, 14 பேர் விபத்துக்கு உள்ளாகியபோது தருமபுரி மருத்துவமனையில் அங்கு சரியாக மருத்துவம் பார்க்காமல் ஒருவர் இறந்துவிட்டார், தங்கராஜ் என்பவர். பிறகு இருக்கக்கூடிய மற்றவர்கள் எல்லாம்கூட, அந்த ஊர்க்காரர்கள், இந்த மருத்துவமனையில் நமக்கு சிகிச்சை வேண்டாம் என்று புறக்கணித்துவிட்டார்கள். ஆம்பூரிலே பார்த்தால் போதிய மருத்துவர்கள் இல்லை என்று சொல்லி, 3 நாட்களுக்கு முன்னால் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் அங்கு சென்று பஞ்சாயத்து செய்து, அங்கேகூட பிரச்சினை வந்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, எல்லா vacancy-களையும் fill up செய்தாலும்கூட, மருத்துவர் இல்லாத குறைகள் ஆங்காங்கே நேர்ந்துவிடக்கூடிய நிலையை கொஞ்சம் மாற்றியமைத்து—ஏனென்றால் இப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால், ஓமலூர் பகுதியிலே, காடையாம்பட்டி பகுதியிலே ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், Ministers interrupt செய்ய முடியாத அளவுக்கு நீங்கள் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த காலத்தில் குறை சொல்வதுபோல இப்போது சொல்கின்றார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது 45 சதவிகித மருத்துவமனைகளில் காலியிடங்கள் இருந்தன. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இப்போது 3,000 மருத்துவர்களை நியமனம் செய்து படிப்படியாக பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதேபோல, 4,400 Nurses–செவிலியர்களைப் பணியமர்த்தியுள்ளார்கள். இது பாராட்டக்கூடிய செய்தி. ஒரே நேரத்தில் நியமனம் செய்வதற்காக வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியலைப் பெற்று அவர்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தில் 1:1 என்ற அடிப்படையிலே தேர்வு செய்யும்போது, மருத்துவர்கள் சரியாக வரவில்லை. அதற்காக விதியைத் தளர்த்தி 1:5 என்ற அடிப்படையில் தேர்வு செய்யலாம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்ட பிறகு, இப்போது அதிகமான மருத்துவர்களை பணி நியமனம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 30 ஆம் தேதிகூட 594 மருத்துவர்களை நியமிப்பதற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற குறைகளை நேரடியாகக் கூறினாலே நாங்கள் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். அதனால் இதுபோன்ற சங்கடத்தை ஏற்படுத்த வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்கிறேன். வீண் பழியைச் சுமத்த வேண்டாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. 80 ஆண்டுகாலமாக வேலூரில் இயங்கி வந்த Government Pentland Hospital–ஐ மூடிவிட்டார்கள். பிறகு அங்கே பல போராட்டங்கள் நடைபெற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, அது உடனடியாகத் திறக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் இதே அவையில் அறிவித்தார்கள். அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் போதிய டாக்டர்களையும், செவிலியர்களையும் நியமித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூருக்கு 9 ஆம் தேதி வருகிறபோது, மூடப்பட்டுவிட்ட, அந்த 80 ஆண்டுகால அரசு மருத்துவமனையை அவர்கள் கையால் மீண்டும் திறந்து வைக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு வேண்டுகோள் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உரையை முடியுங்கள். 24 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று ஈரோட்டுக்கு முன்னாலே நான் கோரிக்கை வைத்தேன். ஆனால் எப்படியோ என்னுடைய கோரிக்கை பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர். எப்படியாவது அவர் அதற்கு நேசக்கரம் நீட்டி, எங்களுடைய வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு ஒப்புதலையும் தந்து, அவர் உடனிருந்து அதை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டும். அந்த அறிவிப்பை 9 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூரில் அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல வேலூருக்கு. . (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** திரு. ஞானசேகரன் வேலூருக்குக் கேட்கிறார். ஆனால் எங்கள் தொகுதி மக்கள் தனியாக முனிசிபாலிட்டி ஆக்க வேண்டுமென்றுதான் கேட்கிறார்களே தவிர, வேலூரை Corporation ஆக்குவதற்கு காட்பாடி வட்டாரத்து மக்கள் விரும்பவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இரண்டுபேருக்குள் இருக்கக்கூடிய சண்டையை மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் தீர்த்து வைக்க வேண்டும். எப்படியாவது அவரை convince செய்ய வேண்டும். காட்பாடியும், வேலூரும் சேர்ந்தால்தான் அது மாநகராட்சியாக வரும். திருநெல்வேலியை எடுத்துக்கொண்டால் தாமிரபரணியின் குறுக்கே அந்தப் பக்கம் பாளையங்கோட்டை இந்தப் பக்கம் திருநெல்வேலி ஒன்றாக்கப்பட்டிருக்கிறது.

ஒரேயொரு பாலாறு எங்களை, என்னையும் அருமை அண்ணன் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களையும் பிரிக்க வேண்டுமா? நாங்கள் இணைந்து இருப்பதற்கான ஒரு வாய்ப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி, உடனடியாக மாநகராட்சியாக வேலூரை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–30*

எங்களுடைய மாவட்டத்திலே நிறைய பொறியியல் கல்லூரிகள் வந்துவிட்டன. V.I.T. என்ற ஒரு கல்லூரியிலே 15,000 பேர்

[திரு. சி. ஞானசேகரன்] [2008 ஜனவரி 24

படித்துக்கொண்டிருக்கிறார்கள். நிறைய படித்த Computer Engineers இருக்கிறார்கள். ஆகவே, I.T. Park ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக இடத்தைத் தெரிந்தெடுத்து ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 2000 ஆவது வருடத்தில் இப்போதைய மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுடைய அப்பா அவர்கள் சட்டத் துறை அமைச்சராக இருக்கிறபோதே அரசு சட்டக் கல்லூரி வேலூரில் தொடங்கப்படும் என்கிற அறிவிப்பைத் தந்தார்கள். ஆனால் அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதேபோல சட்டத் துறை அமைச்சர், எங்களுடைய மண்ணின் மைந்தர் அவர்களும் நிச்சயமாக வருகிற கல்வி ஆண்டிலாவது வேலூரிலே அரசு சட்டக் கல்லூரியை உடனடியாகத் திறந்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இசைக் கல்லூரி ஒன்றையும், இசைப் பள்ளி ஒன்றையும் வேலூருக்குத் தர வேண்டும்.

நம்முடைய வேலூர் bus stand-க்கு இப்போது நானே என்னுடைய எம்.எல்.ஏ. தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து 4.5 இலட்சம் ரூபாயைக் கொடுத்திருக்கிறேன். கூரையே இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் புதிய பேருந்து நிலையத்தை இப்போது உள்ளூர்த் திட்டக் குழுமம் நடத்திக்கொண்டிருக்கிறது. அதை நகராட்சிக்கு உடனடியாக மாற்றி அதற்கு ஒரு 5 கோடி ரூபாயை நம்முடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Town and Country Planning Consolidated Fund–லேயிருந்து கொடுத்து அதனை உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.



2008 ஜனவரி 24]

***திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–வது சட்டப்பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரில் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் பேருரையின் விவாதத்தில் பேசுகின்ற நல் வாய்ப்பை நல்கிய தங்களுக்கும், எங்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் சமூக நீதிக் காவலர், தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், என் தொகுதியைச் சார்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், 15 நிமிடங்கள்தான், அதற்குள் உரையை முடியுங்கள்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** ஆளுநர் உரை மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களின் நீண்டநாள் கோரிக்கையாகவும், எங்கள் கட்சியின் நீண்டநாள் கோரிக்கையாகவும் இருந்த திருவள்ளுவர் பிறந்த தினத்தை தமிழர்களினுடைய புத்தாண்டு தினமாக அறிவித்து தமிழர்களினுடைய நெஞ்சங்களில் எல்லாம் மகிழ்ச்சியை உண்டாக்கியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசுக்கும் என்னுடைய இனிய பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேவேளையில் இன்றைக்கு தமிழுக்கு செம்மொழி அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறீர்கள். ஆனால், இன்னும் மத்தியிலே ஆட்சிமொழி அங்கீகாரம் என்கிற கனவு இன்றைக்கும் நனவாகாமல் இருப்பது வருத்தத்திற்குரிய ஒரு செய்தி. எனவே, தமிழாய்ந்த தமிழ் மகன் கலைஞர் அவர்கள் ஆளுகிற இந்தக் காலத்தில் தமிழுக்கு மேலும் மகுடம் சூட்டுகிற விதத்தில் மத்தியில் ஆட்சிமொழி என்கிற அங்கீகாரத்தையும நீங்கள் விரைவிலே பெற்றுத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேநேரத்தில் தமிழகத்தில் 1956–ல் கொண்டுவரப்பட்ட ஆட்சிமொழிச் சட்டம் அனைத்துத் துறையிலும் முழுமையாக

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2008 ஜனவரி 24

நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று சொன்னால், இல்லை. ஆனால், தங்கள் காலத்தில் அது முழுமையாக நிறைவேற்றப்படும். அதுவும் இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக அனைத்துத் துறைகளிலும் தமிழைக் கொண்டுவருகிற ஒரு பெரு முயற்சியை ஏற்படுத்தி நீங்கள் சாதனை படைக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஆளுநர் உரையில் அனைத்து சிறார்களுக்கும் 10 ஆண்டு கட்டாய இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்வோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறீர்கள். அதே வேளையில் நாங்கள் தெரிவிப்பதெல்லாம் ஓரே சீரான, தரமான, கட்டாயக் கல்வி தரப்பட வேண்டுமென்பதுதான். அப்படிப்பட்ட ஒரு கல்வியை வழங்கினால்தான் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஒரு சமநிலைக்குக் கொண்டுவர முடியும் என்பதை பாட்டாளி மக்கள் கட்சியானது தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. எனவே, சமச்சீர் கல்வியை இந்த ஆண்டிலேயே கொண்டுவரவேண்டுமென்று நாங்கள் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதற்கடுத்தபடியாக இப்போது இந்தியாவெங்கிலும் பேசப்படுகிற ஒரு செய்தி, தனியார் துறையில் இட ஒதுக்கீடு என்பது. அந்தத் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டைக் கொண்டுவர வேண்டுமென்று இந்தியாவிலேயே முதன் முதலாகக் குரல் கொடுத்துப் போராடிய ஒரேயொரு தலைவர் எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, சமூக நீதி காக்கிற இந்த மாநிலத்தில் நீங்கள் தனியார் துறையில் இட ஒதுக்கீட்டினை விரைவில் பின்பற்றுவோம் என்று அறிவித்திருக்கிற செய்தி மகிழ்ச்சிக்குரிய செய்தி என்றாலும்கூட, எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் இந்த ஆளுநர் உரையைப் பற்றி நேற்றைய தினம் தெரிவித்திருக்கிற செய்திகளிலே ஒன்றைத் தெரிவித்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–35*

இந்த ஆளுநர் உரை நடைபெறுகிற நேரத்திலே சமூக நீதி காக்கின்ற மாநிலமாக இருக்கின்ற இந்தத் தமிழகம், உத்திரப்பிரதேசம், மராட்டியம் போன்ற மாநிலங்களிலெல்லாம்கூட தனியார் துறையிலே இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருக்கிற இந்தவேளையிலே தமிழகத்திலேயும் இந்த ஆளுநர்



2008 ஜனவரி 24] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

உரையிலே தெரிவித்ததை நீங்கள் உத்தரவாகப் பிறப்பித்திட நடவடிக்கை எடுத்து ஆணை வழங்கவேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நீங்கள் நிறைவேற்றுவீர்கள் என்று மீண்டும் நான் உங்களுக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று கடந்த 25 ஆண்டுகாலமாக ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை தீராத ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. கடைசி தமிழினம் அங்கே காணாமல்போய்விடுவான் என்கின்ற ஒரு அவலக் குரல் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. தமிழாய்ந்த தமிழ் மகனாகிய நீங்கள் ஈழத் தமிழர்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் இருக்கின்ற தமிழ் மக்கள் எல்லாம் தங்களுடைய தார்மீக ஆதரவினை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கால் நூற்றாண்டு போராட்டத்திற்குப் பின்னாலும் அங்கே தமிழர்களுக்கு அரசியல் உரிமை கிடைக்கவில்லை என்று சொன்னால் இந்த உலக வரலாற்றிலே இதுவரைக்கும் இப்படிப்பட்ட நிலைமை எந்தவொரு இனத்திற்கும் ஏற்படவில்லை என்பதை இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். எனவே தங்கள் காலத்திலேயே இந்திய நாட்டிற்கு அரசியல் வழிகாட்டியாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் நீங்கள் அந்த 25 இலட்சம் தமிழர்கள் புலம்பெயராமல் அங்கே அவர்கள் வாழ்வதற்கு அரசியல் உரிமையை விரைவிலே பெற்றுத்தருவதற்கான முயற்சியினை மேற்கொள்ளவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இது 6½ கோடி தமிழ் மக்களுடைய உணர்வாக நீங்கள் ஒட்டுமொத்தமாக தெரிவித்து, விரைவிலே அதற்கான முயற்சியில் நீங்கள் இறங்கவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, அரசினுடைய திட்டமாக இரண்டு ரூபாய்க்கு கிலோ அரிசி திட்டம். ரேஷன் கடையில் வழங்கப்படுகிற உணவுப் பொருள்களான எண்ணெய், பருப்பு போன்றவற்றினுடைய விலைகள் இப்போது கட்டுபடியான விலையில் வழங்கப்படுகின்றன. ஆனால் தனியார் கடைகளிலே விற்கப்படுகிற பொருள்களின் விலை ஏழை மக்களைப் பாதிக்கிற அளவுக்கு இருக்கின்றது என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, அந்த அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விலையேற்றத்தை கட்டுக்குள் வைத்திருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

[திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்] [2008 ஜனவரி 24

அதேவேளையிலே இன்றைக்கு உணவை உற்பத்தி செய்துகொடுக்கின்ற விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை வழங்கப்படுகிறதா என்று சொன்னால், இல்லை. இடைத்தரகர்களால் கொள்ளை இலாபம் அடிக்கின்ற நிலை தமிழகத்தில் இருக்கிறது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை நீங்கள் எடுப்பதோடு விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய, அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கான தகுந்த கட்டுப்படியான விலையை நீங்கள் வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று தாங்களே ஆதரவு கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய நல்வழிகாட்டுதலோடுதான் இன்றைக்கு மத்திய அரசும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் நினைத்தால் விரைந்து அந்த விவசாயிகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் பெற்றுத்தர முடியும். அதைப் பெற்றுத்தர வேண்டும்.

அதேபோன்று, கரும்பு விவசாயிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்திலே சொல்லொணாத் துயரத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை தாங்கள் எல்லாம் அறிவீர்கள். நாங்கள் எல்லாம்கூட இதை கடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரிலே தெரிவித்திருந்தோம். எனவே, அந்தக் கரும்பு விவசாயிகளுடைய கண்ணீர்க் கதையைப் போக்கமுடியும் என்று சொன்னால் அதுவும் உங்களால்தான் முடியும். எனவே 1,500 ரூபாய் டன் ஒன்றுக்கு விரைவில் விரைந்து வழங்க நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுபோன்று விவசாயிகளுடைய துணைத் தொழிலாக இருக்கக்கூடியது பால் உற்பத்தி. அதில் உற்பத்திச் செலவைவிட பாலினுடைய விலை மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரின் விலை 12 ரூபாய் விற்கின்றபோது, பத்து ரூபாய் என்று ஒரு லிட்டர் பாலின் விலை கொள்முதல் செய்யப்படுகிறது. இது உற்பத்தி விலையைவிட மிக மிகக் குறைவு. எனவே பாலினுடைய விலையை உயர்த்தி, நீங்கள் உரிய விலையை விவசாயிகளுக்குப் பெற்றுத்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



2008 ஜனவரி 24] [திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்]

தமிழகம் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் முன்னணி வகிக்கிற மாநிலமாகத் திகழ வேண்டுமென்று நீங்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறீர்கள். அவற்றையெல்லாம் நாங்கள் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவிலே இன்னும் சில ஆண்டுகளுக்குள்ளாக அனைத்து வீடுகளிலும் வண்ணத் தொலைக்காட்சி இருக்கிற ஒரே ஒரு மாநிலம் தமிழகம் என்று நீங்கள் பெருமையோடு சொல்லியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதெல்லாம் போதாது.

இப்போது தமிழகத்திலே 55 இலட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்துவிட்டு, காத்திருப்போர் பட்டியலிலே இருந்துகொண்டு அவர்களது எதிர்காலம் கேள்விக்குறியாகி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு வாழ்வாதாரம் தேவை. எனவே, வீட்டிற்கு ஒருவருக்கு வேலை என்கிற திட்டத்தையும் நீங்கள் இணைத்து வழங்குவீர்களேயானால் வருங்கால இளைஞர் சமுதாயம் உங்களை வாழ்த்தும் என்பதை இந்த நேரத்திலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–40*

அடுத்து, இந்த அரசு சமூக நீதி என்ற குறிக்கோளைக்கொண்டு செயல்படுகிற அரசு என்று பெருமையோடு சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். நாங்களும் அதை வரவேற்கிறோம். ஆனால் சமூக நீதி இன்றைக்கு தமிழகத்தில் இருக்கின்ற பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடைகோடியில் வாழ்கின்ற குப்பனுக்கும், சுப்பனுக்கும் முழுமையாக போய்ச் சேர்கிறதா என்று சொன்னால் இல்லை. எனவேதான் நாங்கள் சொல்கிறோம், தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி வருகின்ற கொள்கை, தமிழகத்திலே சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை உடனே நீங்கள் ஒரு குழுவை நியமித்து எடுக்க வேண்டும். தந்தை பெரியார் சொன்ன அந்த எண்ணிக்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டினை, எல்லா சாதி மக்களுக்கும் அப்போதுதான் நீங்கள் முழுமையாக வழங்க முடியும். அது கடைக்கோடி தமிழனையும் சென்றடையும். அந்த ஒரு பொற்கால சமூக நீதிக் கொள்கையை நீங்கள் முழுமையாக உங்கள் ஆட்சியிலே நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கிற இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடாக, தனி ஒதுக்கீட்டினை அருந்ததியர் சமுதாயத்தினருக்கு அனைத்துக் கட்சிகளினுடைய கருத்தைக் கேட்டு அறிந்து செயல்படுத்த நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். தொடர்ந்து பாட்டாளி மக்கள் கட்சி உருவான காலத்திலிருந்து அருந்ததியர் சமுதாய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களிலே இன்னும் கடைக்கோடி நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், அந்தச் சமுதாய மக்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்து மாநாடுகளில் குரல் கொடுத்து வருகிறோம். எனவே, அந்த அடிப்படையிலேதான் எங்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளராக, இன்றைக்கு இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த திருமதி பாலசுந்தரி என்கிற ஒரு பெண்மணிக்கு பொதுச் செயலாளர் பதவி வழங்கி, இந்தியாவிலேயே ஒரு புரட்சியை எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து, தமிழகத்தில் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற கோரிக்கை பூரண மதுவிலக்கு. வருவாய் இழப்பு அதனால் ஏற்படும், திட்டங்களைச் செயல்படுத்த முடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இருந்தாலும்கூட, அந்த மதுவில் தங்களை மாய்த்துக்கொண்டு பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நடுத் தெருவில் இருப்பதை நாங்கள் உங்களுக்கு தினமும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் முழுமையாக அதை அமல்படுத்தவில்லை என்றாலும்கூட, கடந்த கால ஆட்சியிலே கிராமப்புறங்களிலே திறக்கப்பட்ட அந்த மதுக் கடைகளையாவது நீங்கள் படிப்படியாக மூடுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் அந்தக் கடை திறக்கும் நேரத்தையாவது நீங்கள் குறைத்து, எதிர்காலச் சமுதாயம் வாழ்வதற்கு வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நதிநீர்ப் பிரச்சினையில் நமது மாநிலம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். எனவேதான் இன்றைக்கு மழைக் காலங்களில் ஓடுகின்ற வெள்ளத்தை, ஆங்காங்கே தடுப்பணைகள் கட்டி அதற்கான ஒரு ஆக்கபூர்வமான முயற்சியிலே நீங்கள் இறங்கியிருக்கிறீர்கள். அதையும் நாங்கள் பாராட்டி வரவேற்கிறோம். எனவே,



மாநிலங்களுக்கிடையே ஓடுகின்ற நதியை இணைக்கின்ற விதத்தில், நீங்கள் வட தமிழ்நாட்டில் ஓடுகின்ற பாலாற்றையும், காவிரி ஆற்றையும் இணைத்து, எதிர்காலத்தில் தண்ணீர்த் தேவைகளை, வட தமிழ்நாட்டினுடைய தண்ணீர்த் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், இந்தத் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால், நிச்சயம் எதிர்காலத்தில் வட தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறையே ஏற்படாது என்பதை நான் இந்த நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சுய நிதியில் தமிழ் வழியில் துவங்கும் தாய்த் தமிழ்ப் பள்ளிகள் தமிழகத்திலே ஏராளமாக தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே அவற்றிக்கு எளிதாக அரசு அங்கீகாரம் கிடைக்கவும், அரசு இட வாய்ப்புள்ள இடத்தில் இடம் வழங்கவும், அப்பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மதிப்பூதியம் வழங்கவும், அதில் பயிலும் மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கவும், தொடங்கப்படும் பள்ளிகளுக்கான பாடத் திட்டக் குழுவில் தாய்த் தமிழ்ப் பள்ளி கருத்தாளர்களையும் இணைக்க அரசு முன்வர வேண்டும். தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கவும் அரசு முன்வர வேண்டும்.

அதற்கடுத்து, நாங்கள் மதிப்பீட்டுக் குழுவின் சார்பிலே தமிழகத்திலே ஏறக்குறைய 25 மாவட்டங்களுக்குப் போனோம். அங்கிருக்கிற உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக்கூடங்களை எல்லாம் நாங்கள் சுற்றிப் பார்த்தோம். அப்படிப் பார்க்கிறபோது, அரசின் சார்பிலே பள்ளிக்கூடங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கு மேசை, நாற்காலிகள் இல்லை. மின்சாரம் இல்லை. கணினி ஆசிரியர்கள் இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. அதையும் நீங்கள் கருத்திலே கொண்டு, இனி வருகின்ற காலங்களில் அந்தக் கணினிக்குத் தேவையான தளவாடச் சாமான்களை வழங்குவதோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோது, அரசுப் பள்ளிகளிலே பல இடங்களிலே மேசை, நாற்காலிகள் வழங்கப்படவில்லை என்ற குறையினை இப்போது சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். முதன்முறையாக தமிழகத்திலே நம்முடைய தலைவர்

கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்தான் அவருடைய மேலான அனுமதியோடுதான் நபார்டுமூலமாக ஏறத்தாழ 70 கோடி ரூபாய்க்கு நிதி உதவி பெறப்பட்டு, தமிழ்நாட்டிலே டான்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பல்வேறு மாவட்டங்களிலே இப்போது அவை முழுமையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல மாவட்டங்களில் நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு ஆய்விலும் நாங்கள் அதைக் கேட்கிறோம். இன்னும் மூன்று மாதங்களுக்குள் அனைத்துப் பள்ளிகளுக்குமே அவை வழங்கப்படும். எனவே, நபார்டு திட்டத்திலே 1 முதல் இப்போது 7-வது திட்ட காலத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிற அனைத்துப் பள்ளிகளுக்குமே அவை முழுமையாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கணினி ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலே, இப்போது இருக்கக்கூடிய அந்தக் கணினி ஆய்வகங்கள் 1,280 மேல்நிலைப் பள்ளிகளுக்கும், கணினி ஆசிரியர்கள் நியமிப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். பிரச்சினை என்னவென்று சொன்னால், வேலைவாய்ப்புத் துறையிலிருந்து நேரடியாக எடுக்க வேண்டுமென்று அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் தங்களுடைய பணியை நிரந்தரமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு அதற்கு ஒரு முடிவெடுத்து அவர்களின் பணியை நிரந்தரமாக்குகின்ற ஒரு முயற்சியை மேற்கொண்டபோது, நீதிமன்றத்திலே இப்போது வழக்கு நிலுவையிலே இருக்கிறது. அரசு அந்த வழக்கை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. விரைவிலே அந்தப் பணி முடிவுறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-45

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. (மணியடிக்கப்பெற்றது) வழங்கியிருந்தாலும்கூட. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செந்தமிழ்ச்செல்வன் சீக்கிரம் உரையை முடியுங்கள்.





**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இன்னும் சில பள்ளிக்கூடங்களிலேகூட அவை முறையாகப் போய்ச் சேரவில்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் இருக்கிற கல்லூரிகளிலே 300 கணினிப் பொறியாளர்கள் கணினி ஆசிரியர்களாகப் பணிபுரிந்து காலமுறை ஊதியம் இல்லாமல் வெறும் 4,000 ரூபாய் சம்பளத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்து காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இதுவரையில் வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின்மூலம் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்படாமல் இருக்கிறது. அதையும் விரைந்து வழங்க இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைச் சார்ந்த சில செய்திகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேல்மலையனூர் தொகுதி, விழுப்புரம் மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியில் இருக்கிற ஒரேயொரு நீர்ப்பாசன வாய்க்கால் திட்டம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட நந்தன் கால்வாய்த் திட்டம் இன்றுவரை செயல்படாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே நான் பலமுறை தெரிவித்திருக்கிறேன். அந்தக் கால்வாயை மீண்டும் நீங்கள் சீரமைக்க வேண்டும் என்று சொன்னால் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிற சாத்தனூர் அணையிலேயிருந்து கீரனூர் அணைக்கு என்று ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்து அதிலே நீரைத் தேக்கி அந்த நீரை திருவண்ணாமலை தொகுதியின் வழியாக என்னுடைய மேல்மலையனூர் தொகுதிக்கு விட்டு, அதன்பிறகு அது முகையூர் தொகுதி, கண்டமங்கலம் தொகுதி என்கிற நான்கு தொகுதிகளுக்கு நீராதாரத்தை உண்டாக்குகிற அந்த நந்தன் கால்வாய்த் திட்டத்திற்கு நீங்கள் உலக வங்கித் திட்டத்தின் மூலமாகவோ, நபார்டு வங்கித் திட்டத்தின் மூலமாகவோ நிறைவேற்றித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து. . .

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு) முடியுங்கள். முடியுங்கள் சார். நீங்கள் முடிப்பதற்கு இவ்வளவு நேரம் ஆகிவிட்டது.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்கூட எங்கள் மாவட்டத்தில் இருக்கிறார்கள். எங்களுடைய செஞ்சி வட்டத்தைப் பொறுத்த அளவிலே அங்கே எந்த ஒரு கல்லூரியும் கிடையாது. நானும், நம்முடைய செஞ்சி தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினரும் ஒரு பொறியியல் கல்லூரியாவது—இரண்டு கல்லூரிகள் அங்கே ஒதுக்கியிருக்கிறார்கள். ஒரு கல்லூரியாவது—எங்கள் செஞ்சி வட்டத்திலே கொண்டு வரவேண்டும் என்று அவரிடத்திலே தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம். அதற்கான இடம்கூட என்னுடைய தொகுதியிலே, மரக்காணம் ஊராட்சியிலே ஏறக்குறைய 80 ஏக்கர் நிலம் இருக்கிறது. அங்கே ஒரு கல்லூரி, அப்படி இல்லை என்று சொன்னால் ஒரு தொழில் மையமாவது அமைத்து அந்தப் பகுதி மேம்படுவதற்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு அடுத்து தொகுதிக்கு ஒரு தொழிற்சாலைத் திட்டத்தின்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும். அந்தத் திட்டத்தையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே இருக்கிற அனந்தபுரம், வளத்தி ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி (மணியடிக்கப்பெற்றது) உட்காருங்கள் செந்தமிழ்ச்செல்வன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது கருத்து சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மதிப்பிற்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சபையினுடைய பேரவை உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன். தமிழக ஆளுநர் அவர்களினுடைய உரையில் மக்களுக்கான நல்ல திட்டங்களை மார்க்சிய கம்யூனிஸ்ட்



2008 ஜனவரி 24] [செல்வி கே. பாலபாரதி]

கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன். விழுப்புரம், திண்டுக்கல் இரயில் அகலப் பாதை இருவழித்தடமாக மாற்றுவதற்கு மாநில அரசு எடுத்து வரக்கூடிய முயற்சிக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். போக்குவரத்து மட்டுமல்லாமல் தொழில் வளர்ச்சிக்கும் அது மிகப் பெரிய உதவியாக இருக்கும்.

அதேபோன்று அருந்ததியர் மக்களுக்கான உள் ஒதுக்கீடு குறித்து அரசினுடைய அறிவிப்பை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. கடந்த காலத்தில் தமிழகத்தினுடைய அருந்ததியர் மக்களினுடைய வாழ்வுரிமையை வலியுறுத்திய சென்னைப் பேரணியின்பொழுது தமிழக முதல்வர் அவர்கள் இந்தக் கோரிக்கையை அன்றைக்கு ஏற்றுக்கொண்டார்கள். அதுமட்டுமல்லாமல் அருந்ததியர் மக்களுக்கான உள் ஒதுக்கீடு குறித்த முடிவினைச் செய்வதற்கு பல்வேறு அரசியல் கட்சிகளோடு மட்டுமல்லாமல் அருந்ததியர் மக்களினுடைய மக்கள் தொகை, தற்போது அவர்களிடம் இருக்கக்கூடிய கல்வி நிலை, வேலை நிலைமைகள் குறித்து தெளிவான ஆய்வு என்பது செய்யப்பட வேண்டும். அந்த ஆய்விலிருந்து அருந்ததியர் மக்களுக்கான கல்வி, வேலை குறித்த உள் ஒதுக்கீடு, அனைத்து அரசியல் கட்சிகளோடு ஒருங்கிணைந்து ஏற்படுத்துவது என்ற முடிவு எடுப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–50*

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அருந்ததியர் மக்களுக்கான, தூய்மைப் பணியாளர்களுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டது. இதர நல வாரியங்களோடு ஒப்பிடுகிறபோது இந்த நல வாரியம் வேறுபட்டு இருக்கிறது. மற்ற தொழிலாளர்களுக்கான நல வாரியங்களில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உறுப்பினர்களாக ஆவதும், அவர்களுக்கான அடையாள அட்டை வழங்குவதும், அந்த நல வாரியத்திற்கு நிதியொதுக்கீடும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அரசு மருத்துவமனை, நகராட்சி, மாநகராட்சி, உள்ளாட்சி அமைப்புகள், இன்னும் இருக்கக்கூடிய பிற அரசு அலுவலகங்களில் எல்லாம் தூய்மைப் பணியைத் தொடர்ந்து செய்யக்கூடிய அருந்ததியர் தொழிலாளர்கள் பதிவு செய்வதற்கான நிருவாக ஏற்பாடுகள் செய்யப்படவில்லை; நிதியொதுக்கீடும், அதிகாரமும் அந்த நல வாரியத்திற்கு வழங்கப்படவில்லை. இதுபோன்ற விஷயத்தையும் நமது தமிழக அரசு கவனிக்க வே[illegible]தைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

[செல்வி கே. பாலபாரதி] [2008 ஜனவரி 24

இது தவிர, அருந்ததியர் மக்களுக்காக, மனித மலத்தை மனிதனே கையிலே அள்ளி, கொண்டு போய் கொட்டக்கூடிய அந்த நிகழ்வுகளை மாற்றுவதற்கும், மறு வாழ்வு வழங்குவதற்குமாக ரூபாய் 58 கோடி சென்ற ஆண்டினுடைய அரசினுடைய நிதி பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. ஆகவே, இந்த நிதி ஏன் பயன்படுத்தப்படவில்லை என்பது குறித்து அந்தத் துறையின்மூலமாக ஆய்வு செய்யப்பட வேண்டும். நிதியை கடைக்கோடியில் இருக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்களுடைய மறுவாழ்வுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது அரசு 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருக்கக்கூடிய மக்களுக்கான பட்டாவை வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் மாநகராட்சி, நகராட்சிகளில் அந்த நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் குடியிருக்கக்கூடிய துப்புரவுப் பணியாளர்களை அரசு ஊழியர் எனக் கருதி, அவர்களுக்கான பட்டாவைக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு ஊழியர்களாக சட்டரீதியாக இருந்தாலும், அவர்களுடைய அடிப்படைப் பணி என்பது துப்புரவுத் தொழிலாக இருக்கிறது. ஆகவே சமூகத்தினுடைய கடைத்தொழிலிலே இருக்கக்கூடிய அந்த அரசுப் பணியாளர்களுக்கு, குடியிருப்பு வீடுகளுக்கான பட்டா வழங்கலாம் என்ற விதிவிலக்கை அளித்து, அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே ஹுண்டாய் கார் கம்பெனியில் தொழிற்சங்கக் கொடி ஏற்றுவதற்கு மறுக்கப்பட்டு, தொழிற்சங்கத்தினுடைய தலைவர் தோழர் ஏ. சௌந்திரராஜன் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். தொழிற்சங்கக் கொடியை, தொழிற்சங்கத்தை, அந்தக் கம்பெனியினுடைய முதலாளி ஏற்ற வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்தவில்லை. அந்தக் கம்பெனியில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள், அவர்களுடைய விருப்பத்தின்பேரில் தொழிற்சங்கக் கொடியை ஏற்றுவதற்கு அனுமதி தரமாட்டோம் என்று தமிழகத்தினுடைய முதலாளி கூறுவது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே ஜனநாயக உரிமையை நிலைநாட்டுவதற்கு தொழிற்சங்கத் தலைவரை கைது செய்திருப்பதற்கு மாறாக, தொழிற்சங்க உரிமையைக் கொடுக்காத அந்தக் கம்பெனியினுடைய முதலாளி அல்லவா கைது செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆகவே ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு கூடுதல் தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று. . . (குறுக்கீடு)



2008 ஜனவரி 24] [செல்வி கே. பாலபாரதி]

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஸ்ரீபெரும்புதூரிலே இருக்கின்ற தொழிற்சாலைகள் அத்தனையும் வெளி நாடுகளிலேயிருந்து, தமிழகத்திலே பல வசதிகள் இருக்கின்ற காரணத்தினாலே, வெளி நாட்டு முதலீட்டை ஸ்ரீபெரும்புதூருக்குக் கொண்டு வந்து போட்டு, நிறையத் தொழிற்சாலைகளை நித்தம், மாதம் ஒரு தொழிற்சாலையாகத் தமிழக முதல்வர் அவர்கள் திறந்து கொண்டு வருகிறார்கள். அதுபோன்றதுதான் ஹுண்டாய் கம்பெனியும். அந்த கம்பெனிக்குள்ளே அவர்களே, தொழிலாளர்களுக்குள்ளேயே பணியாளர்கள் குழு என்ற ஒன்றை வைத்துக்கொண்டு அவர்களுக்குள்ளேயே தேர்தலை நடத்தி, அவர்களுக்குள்ளேயே 5 பேர், 6 பேர், 7 பேர் என்று ஒரு குழுவாக நியமித்துக்கொண்டு, உள்ளே இருக்கின்ற முதலாளிக்கு வேண்டிய, பொறுப்பிலே இருக்கின்றவர்களோடு தொடர்புகொண்டு அவர்களுக்கு வேண்டிய அனைத்து சலுகைகளையும் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக இதுதான் நடந்துகொண்டு வருகிறது. அந்த கம்பெனியிலேதான் வேலையிலே சேர்ந்தவர்களுக்கு இன்றைக்கு 25 ஆயிரம் ரூபாயிலிருந்து 27,500 ரூபாய் வரையிலும் சம்பளம் கொடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வருடத்திற்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு மேலே அங்கே போனஸ் கொடுக்கப்படுகிறது. அதுபோன்ற சலுகைகள் வேறு எந்தக் கம்பெனியிலும் இல்லையென்றாலும்கூட, நடைபெற்ற, உள்ளே நடைபெற்ற ஒரு தேர்தலிலே தோற்றவர்கள் வேண்டுமென்றே அங்கே தொழில் அமைதியைக் கெடுக்கும் முகத்தான் அவர்களுடைய பட்டா நிலத்திலேயே, அந்த கம்பெனிக்குச் சொந்தமான இடத்திலேயே அங்கே கொடியை நட்டு பிரச்சினைகளைச் செய்கின்றபோது, சுற்றியிருக்கிற பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனைபேரும் எதிர்க்கின்ற ஒரு காலகட்டம்தான் ஏற்பட்டதே தவிர, மற்றபடி அங்கே யாருக்கும் எந்தவிதமான குறைபாடுகளும் ஏற்படவில்லை என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**செல்வி கே. பாலபாரதி:** தொழிலாளர்களுக்கு குறைகள் இருப்பதன் காரணமாகத்தான் தொழிற்சங்கமும் தொழிற்சங்கத் தலைவர்களும் பேசுகிறார்கள்.

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹூண்டாய் தொழிற்சாலையைப் பொறுத்தவரையிலே அரசு தொழிற்சங்கம் அமைப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறது. இருந்தாலும் கொடியேற்றும் அந்தப் பிரச்சினையிலே, செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் அவர்கள் தடை உத்தரவு பெற்றதனால் பிரச்சினை வந்ததே தவிர வேறொன்றும் இல்லை. இதை தொழிலாளர் நலத் துறையினைச் சேர்ந்த அதிகாரிகள் இப்போது விசாரித்து தொழில் தாவா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை விரைவிலே முடிக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள்மூலமாக இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தமிழக அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது. இது மிகப் பெரிய நல்ல திட்டம் என்று எங்களது கட்சியினுடைய அகில இந்திய பொதுச் செயலாளர் திரு. பிரகாஷ் கரத் அவர்கள்கூட நேற்றையதினம் ஒரு பேட்டியிலே சொல்லியிருக்கிறார்கள்; தொடர்ந்தும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இடதுசாரிக் கட்சிகளினுடைய மாநிலங்களிலும், தமிழகத்திலும் இதுபோன்று பொது விநியோக முறையில் அடித்தட்டு மக்களுக்கு இரண்டு ரூபாய்க்கு அரிசி கிடைப்பதை உத்தரவாதம் செய்திருப்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாங்களும் அதை வரவேற்கிறோம். ஆனால் அதேசமயத்தில், கலர் டி.வி.யும், இலவச சமையல் எரிவாயு சிலிண்டரும் கொடுக்கக்கூடிய மகிழ்ச்சியை உயர்ந்து வரக்கூடிய விலைவாசி வேரோடு பறித்து விடுகிறது என்பதையும் தங்களது கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே அரிசியை இரண்டு ரூபாய்க்கு வாங்க முடிகிறதே தவிர, பருப்பு, புளி, எண்ணெய் இதுபோன்ற குடும்பத்திற்குத் தேவையான எந்தப் பொருளையும் வாங்க முடியவில்லை; கடுமையாக விலை உயர்ந்துகொண்டிருக்கிறது என்பதைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அ.தி.மு.க. நண்பர்கள் இந்த நேரத்தில் கைதட்டுகிறார்கள். அவர்களுடைய ஆட்சியிலேயும் விலை உயர்ந்துகொண்டே இருந்தது; இந்தச் சபையிலே நாங்களும் சொன்னோம் என்பதையும் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இந்த விலைவாசி உயர்வு என்பது விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டு இருக்கிறது. நியூட்டன் ஒரு பொருளை



2008 ஜனவரி 24] [செல்வி கே. பாலபாரதி]

மேலே எறிந்தால் கீழே வரும் என்று கண்டுபிடித்தார். ஆனால் நம்முடைய அரசியல் அமைப்புக்குள் எந்தப் பொருளுடைய விலை மேலே கூடுகிறதோ அந்தப் பொருளின் விலை கீழே வருவதே கிடையாது. அவ்வளவு விலைவாசி உயர்வு என்பது ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது தமிழக திராவிட முன்னேற்றக் கழக அரசு புரிந்துகொள்ளாத ஒரு விஷயமல்ல. போன வரவு–செலவுத் திட்ட அறிக்கையிலேகூட மத்திய அரசு கடைப்பிடிக்கக்கூடிய online வர்த்தகம், அதுதான் அந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று அழுத்தந்திருத்தமாக எழுதி வைத்திருக்கிறார்கள். ஆகவே மத்திய அரசு தற்போதும் கடைப்பிடித்துக்கொண்டிருக்கக்கூடிய இந்தத் தவறான புதிய பொருளாதாரக் கொள்கையும், பதுக்கல் சூழ்நிலையும், கள்ளச் சந்தையும்தான் இந்த விலை உயர்வுகளுக்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பிற்பகல் 1–00

அதேநேரத்தில் தமிழகத்தினுடைய அரசு இதைக் குறைப்பதற்காக, தடுப்பதற்காக சில பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருள்களை நியாய விலைக் கடைகள்மூலமாக வழங்குவது என்று முடிவு செய்து வழங்கினார்கள். ஆனால், உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், பல கடைகளுக்கு இந்தப் பருப்பும், சமையல் எண்ணெய்யும் வரவில்லை என்பதுதான் நேர்ந்திருக்கக்கூடிய மிகப் பெரிய சோகம். பல ரேஷன் கடைகளில் பருப்பு வழங்கப்படவில்லை; சமையல் எண்ணெய் வழங்கப்படவில்லை. ஆனால், இப்போது அறிக்கையிலே இருக்கிறது. ஆகவே இந்த விலைவாசி உயர்வு என்பது கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது; இது அரசின் சாதனை என்று சொல்வதற்குப் பதிலாக, கட்டுப்படுத்துவதற்குத் தொடர்ந்து தமிழக அரசு ஒரு பெரும் போராட்டத்தை நடத்துவதற்கு முன்வரவேண்டும். சமையல் எண்ணெய் மட்டுமல்லாமல், பருப்பு மட்டுமல்லாமல், புளி, மளிகை மற்றும் இதரச் சாமான்களை எல்லாம் pocket-களிலே அடைத்து, ரேஷன் கடைகளிலே வினியோகிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், காய்கறி விலை கடுமையாகக் கூடிவிட்டது. இதற்கும், online வர்த்தகத்திற்கும் சம்பந்தமில்லைதான். ஆனால், இந்தக் காய்கறிகளையும் கொள்முதல் செய்து, நம்முடைய ரேஷன் கடைகளிலே விற்பனை செய்ய அரசு முன்வரவேண்டும். அப்படியிருந்தால்தான், இந்த விலைவாசி உயர்வை நாம் கட்டுப்படுத்தமுடியும். இல்லையென்றால், விலைவாசி, அரசியலில் மிகப் பெரிய சுனாமி

என்பதை மத்தியிலேயும், சில மாநில அரசுகளிலேயும் இப்போது அரசியல் சம்பவங்கள் நமக்கு உணர்த்துகிறது. ஆகவே, அரசு கவனத்தோடு அதிலே செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

10 ஆண்டுகளுக்கும் மேல் குடியிருக்கக்கூடிய மக்களுக்குப் பட்டா வழங்கிய அரசினுடைய நடவடிக்கை மிகவும் பாராட்டுக்குரியது. பல நகரங்களிலே வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்; திண்டுக்கல்லிலேயும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், நீர்வழிப் புறம்போக்குகளில் இருக்கக்கூடிய வீடுகளுக்குப் பட்டா வழங்குவதற்குத் தடை என்று நீதிமன்றம் ஆணை வழங்கியிருக்கிறது. ஆனால், அவை நீர்வழிப் புறம்போக்காக record–களிலே இருக்கிறதே தவிர, குளங்களுக்குள் வீடுகள் இல்லை. ஆகவே, இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் கொடுத்து, அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய குழு, நகரத்திற்குள் சென்று, எது நீர் வழியில் இருக்கிறது என்பதைத் துல்லியமாக ஆய்வு செய்து, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். பட்டாவை ஒரு தனித் துறையின்மூலமாக வழங்கலாம். வருவாய்த் துறை நன்றாக கவனிக்கிறது. ஆனால், ஊழியர்கள் பற்றாக்குறை என்பது கடுமையாக இருக்கிறது. Chain man கூட பல இடங்களிலே இல்லை. ஆகவே, இதுபோன்றிருக்கும் ஊழியர் பற்றாக்குறையைத் தீர்த்தால்தான், பட்டாவை மிக விரைவில் வழங்குவதற்குச் சாத்தியம் உண்டு.

சேது சமுத்திரத் திட்டம், நம்முடைய 150 ஆண்டுக் காலக் கனவுத் திட்டம். மதவெறிச் சக்திகள் தமிழகத்தினுடைய முதலமைச்சருடைய தலையையே எடுத்துவிடுவோம் என்று சவால் விடக்கூடிய அளவிற்குத் தமிழகத்தில் மதவெறிச் சக்திகளினுடைய ஆபத்து இருக்கிறது. அந்த ஆபத்தான சக்திகளுக்கு 40 வகையான உணவை வழங்குவது, ஊட்டச்சத்து வழங்குவதாக இருக்கிறது. இவையெல்லாம் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களினுடைய திராவிட இயக்கக் கொள்கைக்குப் புறம்பானது என்பதை அதி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து பரிசீலிக்கவேண்டும். சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறுவதற்கு, அவர்கள் தரப்பிலே ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மூலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.



ஆனால், இப்போது என்ன சூழ்நிலை என்று சொன்னால், ஒரு மனிதன் 10 அடி நீளம், 5 அடி அகலம், 2 அடி ஆழத்தில் வெட்டினால்தான் 80 ரூபாய் தருகிறோம் என்று சொல்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய மண்ணினுடைய தன்மையில் இவ்வாறு வெட்டமுடியவில்லை. ஆகவே, இந்த measurement என்பதைக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று பல இடங்களிலே பொதுமக்கள் போராடி வருகிறார்கள். இதுவரையில் இந்தத் திட்டம் நன்றாகச் சென்று கொண்டிருந்தது. ஒரு வாரத்திற்குமுன் வந்த அரசாணையின் காரணமாக, ஆங்காங்கே பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஊரக வளர்ச்சித் திட்டம் சம்பந்தமாக அதிகாரிகள் உடனடியாகக் கவனித்து, எதார்த்தமான அளவில் எவ்வளவு வெட்டமுடியுமோ, அதை நிர்ணயித்து, ஊதியம் வழங்கவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திண்டுக்கல் மாவட்டம், தொழிலிலே 28-வது மாவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அருகில் இருக்கக்கூடிய திருப்பூர், கரூர், ஈரோடு போன்று, துணியை மையமாக வைத்து, நூலை மையமாக வைத்து சிறு, நடுத்தரத் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதின்மூன்றாவது சட்டப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரில், மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிற இந்த அரிய வாய்ப்பை எனக்கு உவந்தளித்த ஏழரை கோடி தமிழர்களின் ஒட்டுமொத்தத் தலைவர், ஏழைகளின் பங்காளர், தமிழினத்தினுடைய தலைவர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்திலே இளைஞர்களே இல்லை என்று ஒரு தவறான கூற்றைப் பரப்பிக் கொண்டிருந்த அந்த நிலையையெல்லாம் தவிடுபொடி ஆக்குகின்ற வகையிலே நெல்லையிலே 10 இலட்சம் இளைஞர்களைக் கூட்டி ஒரு மிகப்பெரிய மாநாட்டை பார் போற்றுகின்ற அளவிலே நடத்திக் காட்டிய, எங்களுடைய வருங்கால தமிழகம், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களுக்கும், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய

[திரு. டி. செங்குட்டுவன்] [2008 ஜனவரி 24

மனமார்ந்த நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1-05*

இங்கே இந்த ஆளுநர் உரை என்பது கடந்த காலங்களிலே ஏதோ சம்பிரதாய உரையாக இருந்தது. ஆனால், இப்போது ஆளுநர் உரை என்பது தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய, குக்கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்கள் எல்லாம்கூட உற்று நோக்கிக் கவனிக்கின்ற ஒரு மிகப்பெரிய ஈர்ப்பு விசையை உருவாக்கியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தையும், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களையும் பல்வேறு காலகட்டங்களிலே வயிற்றெரிச்சல் காரணமாக விமர்சனம் செய்துகொண்டிருக்கிற நம்முடைய தினமணி பத்திரிகைகூட நேற்றைக்கு நம்முடைய ஆளுநர் அவர்கள் உவந்தளித்த அந்த அறிக்கையினைப் பாராட்டி 'இனிப்பான ஆளுநர் உரை' என்று இன்றைக்குச் செய்தியை வெளியிட்டிருக்கிறது. ஆக, எங்களை விமர்சனம் செய்கின்றவர்களையும், தலைவர் கலைஞர் அவர்களை விமர்சனம் செய்கின்ற அந்தப் பத்திரிகையிலகூட நேற்றைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த அந்த அறிக்கையினை பாராட்டுகிறார்கள் என்று சொன்னால் அந்த ஆளுநர் உரையிலே இருக்கக்கூடிய அந்தத் திட்டங்கள் எல்லாம் இந்திய அளவிலே இருக்கக்கூடிய மக்கள் மத்தியிலே ஒரு ஈர்ப்பு சக்தியை, ஈர்க்கக்கூடிய அளவிற்கு அந்தத் திட்டங்கள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் உள்ளபடியே பெருமிதத்தோடு இந்த அவையிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு கடந்த இரண்டு முறை நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திட்ட அந்த உரையிலே சொல்லப்பட்ட திட்டங்களையெல்லாம் முழுவதுமாக நிறைவேற்றித் தந்திருக்கிற அந்தப் பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த ஆட்சியைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்காது என்பதை உள்ளபடியே நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலங்களிலே தேர்தல் அறிக்கை வரும். ஆளுநர் உரையும் வரும், தேர்தலுக்குப் பிறகு ஆளுநர் உரை வந்த பிறகு அவையெல்லாம்



2008 ஜனவரி 24] [திரு. டி. செங்குட்டுவன்]

மறந்துபோகும். ஆனால், கடந்த இரண்டாண்டு காலமாக, மூன்று முறையாகத் தந்துகொண்டிருக்கிற ஆளுநர் உரைகள் என்பது எல்லா மக்களாலும் பாராட்டப்படுகின்ற ஆளுநர் உரைகளாக இருக்கின்றன. அந்த உரைகளிலே சொல்லப்பட்டிருக்கின்ற அனைத்துத் திட்டங்களும் இப்போது நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன.

கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய அருமைக்குரிய கொறடா அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். "இந்த ஆளுநர் உரையிலே எங்கே புதிய திட்டங்களை நீங்கள் அறிவித்து விடுவீர்களோ என்று நான் பயந்துகொண்டே இருந்தேன். இந்த ஆளுநர் உரையிலே புதிய திட்டங்களை அறிவிப்பதற்குப் பதிலாக ஏற்கெனவே நீங்கள் தந்தீர்களே அந்தத் திட்டங்களின் பயன்கள் இந்த ஆண்டு முழுவதும் சரியான பயனீட்டாளர்களுக்குப் போய் சேர்ந்திருக்கின்றனவா என்பதை நீங்கள் சோதித்துப் பார்ப்பதற்காக இந்த ஆண்டை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அன்பிற்குரிய திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற, கடந்த காலத்திலே கொடுத்திருக்கிற அந்த பட்ஜெட்டிலே தந்திருக்கிற திட்டங்கள், ஆளுநர் உரையிலே தந்திருக்கிற திட்டங்கள் முழுவதுமாக மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றனவா என்பதை எண்ணிப்பார்க்கிறபோதுதான், தலைவர் கலைஞர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற திட்டங்கள், இந்த அரசால் தந்திருக்கிற அந்தத் திட்டங்கள் முழுவதும் பொதுமக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றன என்பதை நான் உள்ளபடியே பெருமிதத்தோடு இந்த அவையிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய அன்பிற்குரிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் பேசுகிறபோது எனக்கு ஒன்று நினைவுக்கு வந்தது. ஏன் இவர்கள் கண்ணாடி வீட்டிலிருந்துகொண்டு கல் எறிகிறார்கள் என்ற அந்த ஞாபகம்தான் எனக்கு வந்தது. சட்டம்-ஒழுங்கு எல்லாம் கெட்டுவிட்டது என்றும், இங்கே எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும், அவர்கள் கேட்கிறபோது, கடந்த காலத்தைப் பற்றி நீங்கள் மறந்துவிட்டுப் பேசுகிறீர்களே என்றுதான் நாங்கள் எண்ணிப்பார்க்க வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு வருகிறது. உலகத்திலே இருக்கக்கூடிய பெண்களை எல்லாம்விட ஓர் உயர்ந்த அந்தஸ்து இருக்கின்ற பெண்மணி நம்முடைய முன்னாள் முதல்வர்

[திரு. டி. செங்குட்டுவன்] [2008 ஜனவரி 24

என்று சொல்லுகின்ற உங்களைப் பார்த்து நான் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், உலகத்திலே இருக்கக்கூடிய பெண்ணினத்திற்கு முதல் பெண்மணி என்று அடைமொழி தந்துகொண்டிருக்கிற உங்களைப் பார்த்து பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், கோவை விவசாயப் பல்கலைக்கழகத்தினுடைய மாணவிகள் மூன்று பேர் தருமபுரிக்கு வந்தபோது, அன்றைக்கு அந்த மாணவிகளை நீங்கள் தீயிட்டுக் கொளுத்திய விவகாரம் ஏன் நடந்தது என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்த்திடவேண்டும். (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் ஒரே நேரத்தில் பேசக்கூடாது.

**திரு. டி. செங்குட்டுவன்:** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கோயம்புத்தூர் விவசாயப் பல்கலைக்கழகத்தினுடைய மாணவிகள் மூன்று பேரை நீங்கள் உயிரோடு கொளுத்திய காட்சி இன்றைக்கும் மக்கள் மனதிலே இடம்பெற்றிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராவது ஒருவர் மட்டும் பேசுங்கள். ஒருவர் மட்டும் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே, உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற வழக்கைப்பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசிக்கொண்டிருப்பது அவை மரபுக்கு சரியானதா? அவை இதை ஏற்றுக்கொள்கிறதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2008 ஜனவரி 24]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே இருக்கிற வழக்கைப்பற்றி அவர் ஒன்றும் பேசவில்லை. கடந்தகாலத்திலே ஆட்சியிலே நடைபெற்ற ஒரு குற்றத்தைச் சுட்டிக்காட்டினார், அதில் ஒன்றும் தப்பு கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுகின்ற அனைத்துக்கும் case இருக்கிறது. எதற்கு case இல்லை? பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சுட்டிக்காட்டிய பல நிகழ்ச்சிகளும் நீதிமன்றத்திலே இருக்கின்றன. அவர் யார் மீதும் குற்றம்சாட்டிச் சொல்லவில்லை. கடந்தகால ஆட்சியிலே சட்டம் ஒழுங்கு எப்படி இருந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அவ்வளவுதானே தவிர, இதிலே எந்தவிதமான தவறும் இருப்பதாகக் கருதவில்லை. அதில் என்ன தப்பு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபெற்ற ஒரு நிகழ்வைத்தான் அவர் குறிப்பிட்டுச் சொல்கிறார். நான் கேட்க விரும்புவது அப்படி ஒரு சம்பவம் நடக்கவே இல்லை என்று சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். திரு. செங்கோட்டையன் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே இருக்கிற ஒரு வழக்கைப்பற்றி ஓர் உறுப்பினர் (குறுக்கீடுகள்) இல்லை இல்லை (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை (குறுக்கீடுகள்) appeal இருக்கிறது. (குறுக்கீடுகள்) appeal already இருக்கிறது. எது வேண்டுமானாலும் வரலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தினகரன் ஆபீஸ் கொளுத்தப்பட்டது. தினகரன் ஆபீஸில் இருந்த மூன்று நபர்கள் பலியானது பற்றி நாங்கள் பேசலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், அந்த subject-க்கு பதில் சொல்லாமல், சம்பந்தமில்லாததைப்பற்றி பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) No, no. தேவையில்லாததை நீங்கள் இழுக்கிறீர்கள். அந்த subject சரியா தவறா என்பதைத்தான் பார்க்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு நீங்கள் தேவையில்லாததை

இழுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன இருக்கிறது அதிலே? கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தினகரன்' நாளிதழ் சம்பவம் குறித்து நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சபையிலே பேசப்பட்டது. உடனேயே முதலமைச்சர் அவர்கள் எழுந்து C.B.I. enquiry நடத்தப்படும். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவிகளைப் பற்றி குறிப்பிட்டார். அது வழக்கிலே இருக்கிறது என்று சொல்கிறீர்கள். எங்களுடைய தலைவரேகூட அவர்களுக்குத் தூக்கு தண்டனை கொடுத்தபோது அதுபற்றி நிருபர்கள் அவர்களிடத்திலே கேட்ட நேரத்தில் அவர் தெளிவாகச் சொன்னார். தூக்கு தண்டனை என்பது, எனக்கு அந்தக் கருத்திலே கருத்து வேறுபாடு இருக்கிறது. யாருக்கும் தூக்கு தண்டனை கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து என்று சொன்னார். அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திலே வழக்கு சென்ற நேரத்தில் அவர்களும் இடைக்காலத் தடை விதித்திருக்கிறார்கள். பஸ் எரிக்கப்பட்டது என்று சொல்லுகிறார். மூன்று மாணவிகள் இறந்துவிட்டார்கள் என்று சொல்லுகிறார். அது நடந்த சம்பவம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்லும்போது மாவட்டச் செயலாளர் கொலை செய்யப்பட்டது—அதுவும்தான் கோர்ட்டில் இருக்கிறது, case–லே இருக்கிறது, வழக்கு இருக்கிறது—அதை நீங்கள் பேசும்போது, உறுப்பினர் கடந்த ஆட்சியில் நடைபெற்றதை சொல்வதில் என்ன தப்பு? என்ன தப்பு? நீங்கள் ஒன்று பேசலாம், நாங்கள் பேசக்கூடாதா? எங்களுடைய வாதமே, உங்கள் ஆட்சியிலும் சட்டம் ஒழுங்கு கெட்டிருந்தது என்று நாங்கள் சொல்கிறோம். ஆகவே நீங்கள் இங்கே பேசுவது முழுவதும் நீதிமன்றத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும். யார் பேசினாலும் நீதிமன்றத்தில் இருக்கிற வழக்கை திசைதிருப்பாமல் பேச வேண்டும் என்பதுதான். நீங்கள் பேசும்போது



எப்படிப் பேசினீர்கள்? நீங்கள் பேசுகிறபோது அதையும் பேசினீர்கள். எனவே, தவறு ஒன்றுமில்லை. *(கூச்சல்–குழப்பம்)*

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். நான் அவை நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் அடுத்த சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) யாரும் அங்கேயிருந்து பேசக்கூடாது. அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், உங்கள் இடம் எது? (குறுக்கீடு) உங்கள் இடம் எது? உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிற அந்தத் திட்டங்களிலே மிக நல்ல அருமையான திட்டங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், நிறைவேற்றித் தந்திருக்கிற அந்தப் பாங்கைப் பார்க்கிறபோது, நம்முடைய மகாகவி பாரதியார் அவர்கள், ஒரு கவிதையைப் பாடினார்கள். என்ன கவிதை என்று சொன்னால்,

"காணி நிலம் வேண்டும். பராசக்தி
காணி நிலம் வேண்டும்;
பத்துப் பன்னிரண்டு தென்னைமரம்
பக்கத்திலே வேணும்"

என்று நம்முடைய மகாகவி பாரதியார் பாடினார். நம்முடைய மகாகவி பாரதியாரின் அந்தக் கனவு, மகாகவி பாரதியார் பாடிய அந்தப் பாட்டிற்குண்டான அர்த்தம், எந்தப் பராசக்தியிடம் மகாகவி பாரதியார் கேட்டாரோ, நமக்குத் தெரியாது; அந்தப் பராசக்தி தந்தாரோ, இல்லையோ என்பதும் எங்களுக்குத் தெரியாது. ஆனால், அந்தக் காணி நிலத்தைக்கூட எங்களுடைய இந்தப் பராசக்தி, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் என்ற வகையிலே, அந்தத் திட்டத்தையும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, நண்பர்களே! இலவசப் பட்டாக்கள். இலவசப் பட்டாக்களையும் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், இலக்கை மிஞ்சுகின்ற அளவிற்கு இப்போது வழங்கி, மிகப் பெரிய சிறப்பை இந்த நாட்டிற்குச் சேர்த்திருக்கிறார்கள்.

[திரு. டி. செங்குட்டுவன்] [2008 ஜனவரி 24

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று சொன்னார்கள். நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் கண்ட கனவு, 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, இன்றைக்குத்தான் அந்தக் கனவு முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். அன்பிற்குரிய நண்பர்களே, எதிர்க்கட்சி நண்பர்களே, வருத்தப்படாமல் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்பது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கூற்று. நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே இன்றைக்கு ஏழைகளெல்லாம், கிராமப் பகுதியிலே இருக்கிற ஏழைத் தாய்மார்களெல்லாம், இலவச கலர் டி.வி.-க்களை வாங்கிக் கொண்டு போகின்ற அந்தத் தாய்மார்களெல்லாம் எந்த அளவிற்குச் சந்தோஷப்படுகிறார்கள் என்பதை நீங்கள் தயவுசெய்து எண்ணிப் பார்த்திட வேண்டும்.

அதுமட்டுமல்ல நண்பர்களே, இப்போது ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குகிற இந்த நேரத்திலே, அந்த ஒரு கிலோ அரிசியை இரண்டு ரூபாய்க்குப் பெற்றுச் செல்கிற அந்தத் தாய்மார்களெல்லாம் எந்த அளவிற்குச் சந்தோஷப்படுகிறார்கள், மகிழ்ச்சியடைகிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். கேஸ் அடுப்பைப் பெறுகிற தாய்மார்கள், ஓய்வூதியத்தைப் பெறுகின்ற தாய்மார்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், இப்படி எண்ணற்ற அளவில்லாத சலுகைகளையெல்லாம் பெற்றுக்கொண்டிருக்கிற அரசு ஊழியர்களெல்லாம் இப்போது மிகவும் மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டிலே கிராமங்கள்தோறும் எல்லாப் பணிகளும் சிறப்பாக நடந்துகொண்டிருக்கிற நேரத்தில்தான், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவு, 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்ற கனவு நனவாக்கப்பட்டு, நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஆளுநர் பேருரையிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை வெகுவிரைவிலே கொண்டுவருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.



2008 ஜனவரி 24] [திரு. டி. செங்குட்டுவன்]

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கனவாக இருக்கிற ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், வெகுவிரைவிலே அறிவித்து, தலைவர் கலைஞர் அவர்களே நேரடியாக வந்து, அந்தத் திட்டத்தைத் தொடங்கிவைக்க வேண்டுமென்று நான் அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1–20*

அதுமட்டுமல்ல, இந்த ஆளுநர் உரையிலே தந்திருக்கிற அந்தத் திட்டங்களெல்லாம்—இன்றைக்கு அரசாங்கத்தினுடைய இந்திய வணிக சங்கம் என்று சொல்லக்கூடிய, அந்த இந்திய வணிக சங்கத்தினுடைய ஆய்வு மையம். . . *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்குட்டுவன், சீக்கிரம் பேசி முடியுங்கள். இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** இந்திய வணிகச் சங்க ஆய்வு மையம் ஓர் ஆய்வு நடத்தியிருக்கிறது. அந்த ஆய்வு என்ன சொல்லியிருக்கிறதென்று சொன்னால், இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களிலே தனிநபர் வருமானம் அதிகமாக இருக்கக்கூடிய மாநிலங்கள் இரண்டு மாநிலங்கள். கோவாவும், டெல்லியும்தான் தனிநபர் வருமானத்திலே அதிகமாக இருக்கக்கூடிய மாநிலங்கள் என்ற விவரத்தைச் சொல்லியிருந்தாலும் அந்த இரண்டு மாநிலங்களும் ஜனத்தொகையிலே மிகவும் குறைவாக இருக்கக்கூடிய மாநிலங்கள். அதற்கு அடுத்தபடியாகப் பார்ப்பீர்களேயானால், இன்றைக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கிறவகையில் ஒரு மிகச் சிறப்பான... (குறுக்கீடுகள்) *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்குட்டுவன் (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. செங்குட்டுவன், உட்காருங்கள். நன்றி சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சீக்கிரம் நன்றி சொல்லுங்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** ஆகவே, இவ்வளவு சிறப்பான நம்முடைய ஆளுநர் உரையைத் தந்திருக்கிற நமது தலைவர் கலைஞர் அவர்களை நான் மனமாரப் பாராட்டி, இந்த ஆளுநர் உரையைத் தமிழ்நாடு வரவேற்கிறது, இந்த மன்றமே வரவேற்கிறது என்று சொல்லி இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து, வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்ச்சிமிகு காகிதப் பூக்களைக் கொண்ட ஓர் ஆளுநர் அறிக்கையைப்பற்றி—இங்கே விமர்சனங்கள்—இங்கே நாங்கள் எதிர்த்துப் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆரம்பத்திலே நாம் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி இங்கே குறிப்பிட்டுக் கூறவேண்டும். அமெரிக்க உளவு நிறுவனம் இப்பொழுது தமிழ்நாட்டிலே—மற்ற மாநிலங்களைப்பற்றிச் சொல்லவில்லை—விடுதலைப் புலிகள் ஊடுருவல் நடந்திருக்கிறதென்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த நிறுவனம்தான் ராஜீவ் காந்தி உயிரோடு இருக்கிற காலத்தில் அவருடைய உயிருக்கு ஆபத்து இருக்கிறதென்று சுட்டிக்காட்டினார்கள். இதே நிறுவனம்தான் திருமதி பெனாசிர் பூட்டோ அவர்களுக்கு உயிருக்கு ஆபத்து இருக்கிறதென்று சுட்டிக்காட்டினார்கள். அந்த நிறுவனம் இப்போது விடுதலைப் புலிகள் தமிழகத்திலே ஊடுருவல் செய்திருக்கிறார்கள் என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், கார்கில் யுத்தத்தின்போது ஊடுருவல் காஷ்மீரிலிருந்து ஏற்படுகிறது, பாகிஸ்தானுடைய தீவிரவாதிகள் வருகிறார்கள் என்று சொன்னவுடன், அன்றைக்கு ஆளுங்கட்சியிலே நாங்கள் இல்லை, அன்றைக்கு மத்தியிலே ஆட்சியிலும் எங்களுடைய அம்மா இல்லை, இருந்தாலும், கார்கிலில் ஊடுருவல் என்று சொல்லி முன்னெச்சரிக்கையாக அந்த அரசாங்கத்திற்குக் குறிப்பிட்டார்கள். அன்றைக்குப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அப்படிப்பட்ட ஊடுருவலே இல்லையென்று சொன்னார். விளைவு, ஆறு மாதத்திலே மீண்டும் மிகப் பெரிய யுத்தம் நமக்கும் பாகிஸ்தானுக்கும் நடந்தது. அப்படி எதையும் தொலைநோக்குத் திட்டத்தோடு பார்த்துச் சொல்கிற எங்கள் அம்மா இப்பொழுது விடுதலைப் புலிகளால் இந்த நாட்டிற்கு ஆபத்து இருக்கிறதென்று சொல்கிறார். அதை இந்த அரசாங்கம் எந்த அளவுக்கு எடுத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் இங்கே கேட்க விரும்புகிறேன். 'புத்தன் பிறந்தான், போதனை பிறந்தது', 'மகாத்மா பிறந்தார், அகிம்சை பிறந்தது', 'அன்னை தெரசா பிறந்தார், கருணை பிறந்தது', 'எங்கள் அம்மா பிறந்தார், அனைத்தும் பிறந்தது' (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஆட்சிதான் அன்றைக்கு. அப்படிப்பட்ட ஒரு பெருமை மிக்க தலைமை தான் எங்கள் அம்மா.





இன்றைக்கு இங்கே பேசுகிறபோது நம்முடைய மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஜனாதிபதியாக ஒரு பெண் நிற்கிறபோது ஏன் ஆதரிக்கவில்லையென்று கேட்டார். பெண்களுக்கு 33 விழுக்காடு தர வேண்டுமென்று உறுதியாகக் கோரிக்கை வைப்பது எங்கள் அம்மாதான். அதைப்போல அதிக பெண் உறுப்பினர்களைச் சட்டமன்றத்திற்குத் தருவதும் எங்கள் அம்மாதான். இவர்கள் கேட்கிறார்கள், திருமதி பிரதீபா பாட்டீல் அவர்கள் ஜனாதிபதியாக நிற்கிறபோது ஏன் ஆதரிக்கவில்லையென்று. திருமதி பிரதீபா பாட்டீல் மீது எங்களுக்குத் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு இல்லை. திரு. அப்துல்கலாம் தமிழ்நாட்டினுடைய ஒரு தமிழன் இந்திய நாட்டின் ஜனாதிபதியாக. . . (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன், கேளுங்கள். Sitting President-ஐப் பற்றி we should not make any comment. (குறுக்கீடுகள்) No, no. You go to another subject. வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் பேசக்கூடாது. வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை ஏன் என்று நான் கேட்கவில்லை. ஆதரிப்பதும், ஆதரிக்காததும் அது உங்களுடைய தனிப்பட்ட உரிமை. நான் சொல்ல வந்தது, முதல் முதலாக இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஒரு பெண்மணியை வேட்பாளராக நிறுத்தும்போது கேலி செய்தார்களே, அதை ஏன் என்றுதான் கேட்டேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. கலைராஜன், அந்த சப்ஜெக்ட்டை விட்டு வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதற்கு முன்னாலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு பெண் உறுப்பினர் நிறுத்தப்பட்டார். இந்த வரலாறு தெரியுமா என்பது எனக்குத் தெரியவில்லை. புதிதாக நிறுத்தப்படவில்லை.

இப்பொழுது வெள்ள நிவாரணம் வழங்கப்படுகிறது. கடுமையான வெள்ளம் வந்தது. வெள்ளம் வந்த நேரத்தில், நீங்கள் எதிர்காலத்தினுடைய தமிழகம் என்றெல்லாம் சொல்கிறீர்கள்.

[திரு. வி.பி. கலைராஜன்] [2008 ஜனவரி 24

சென்னையே வெள்ளத்திலே மூழ்கியது. இதேபோன்ற நிலை எங்கள் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது நடைபெற்றது. அம்மா அவர்கள் அடுத்த நிமிடம் அந்தப் பகுதிகளுக்கெல்லாம் சென்று, அந்த மக்களைப் பார்த்து ஆறுதல் சொன்னார்கள். நீங்கள் சொல்கிற, வருங்காலத் தமிழகம் என்று சொல்கிற, உள்ளாட்சித் துறை அமைச்சர், வெள்ளம் வந்த நேரத்திலே எங்கேயிருந்தார், கேரளாவிலே, உல்லாசமாக இருந்தார். (குறுக்கீடுகள்) அப்படிப்பட்ட . . . (குறுக்கீடுகள்)

பிற்பகல் *1—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடுகள்) சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், சாமி.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கலைராஜன் அவர்கள் பேசும்போது உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கே இருந்தார் என்று கேட்டார்கள். அவர்கள், திருநெல்வேலி மாநாட்டை முடித்துக்கொண்டு ஒரு நாள் ஓய்வு எடுக்கலாம் என்று சென்றபோது மழை வந்தது. இருந்தாலும்கூட, டெல்லியிலேயிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தவுடனேயே, 84 வயதிலேயும், பாதிக்கப்பட்ட மக்களைப் பார்ப்பதற்காக உடனடியாக திருவள்ளூர் சென்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த நாள் கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களுக்குச் சென்றார். அந்தச் செய்தி தெரிந்தவுடனேயே அவர்களுடைய சுற்றுப் பயணத்தை இரத்து செய்துவிட்டு, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களுக்கு வந்து திரு. ஸ்டாலின் அவர்களும் ஆறுதல் சொன்னார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும்.

**திரு. வி.பி. கலைராஜன்:** விலைவாசி உயர்வைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விலைவாசியே ஏறவில்லை என்பதுபோல ஆளுநர் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அதைச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள். ஆக, இன்றைக்கு சாதாரணமாக டீ குடிப்பது என்று சொன்னால்,



2008 ஜனவரி 24] [திரு. வி.பி. கலைராஜன்]

இரண்டு ரூபாய்க்கு இருந்த டீ, கேஸ் விலை அதிகப்படுத்தப்பட்டதன் காரணத்தினால், இப்போது விலை அதிகமாகிற நிலை உள்ளது. அந்த வியாபாரிகள் எல்லாம் ஊர்வலம் போகிறார்கள். மத்திய அரசாங்கம் உங்களுடைய வழிகாட்டுதலின்படிதான் நடக்கிறது என்று நீங்கள் எல்லாம் குறிப்பிடுகிறீர்கள். உங்கள் வழிகாட்டுதலின்படி நடக்கிற அந்த மத்திய அரசாங்கத்திடம், இந்த கேஸ் விலையை இந்த அளவிற்கு உயர்த்தாமல் குறைக்க வேண்டும். குடிப்பதற்கு பன்னீர் கேட்கவில்லை, படுப்பதற்கு பஞ்சணை கேட்கவில்லை, இருப்பதற்கு ஒரு குடிசை, குடிப்பதற்கு டீ. அதுகூட இந்த ஆட்சியிலே சரியாக வழங்கப்படவில்லையென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேஸ் விலை உயர்த்தப்படும் என்று பத்திரிகைகளிலே செய்தி வந்தது. மத்திய அரசாங்கம் இதுவரையிலே இன்னமும் உயர்த்தவில்லை. பத்திரிகைகளிலே வந்த செய்தியை வைத்துக்கொண்டு, டீ கடைக்காரர்கள் ஒரு நாள் கடையை மூடினார்களேதவிர, திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சி, இன்னும் காங்கிரஸ் கட்சியிலே இருக்கக்கூடிய சிலர்கூட கேஸ் விலையை உயர்த்தாமல் பார்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோது மாடு இறந்தால்கூட இவர்கள் அம்மா கவலைப்படுவதாக என்று சொன்னார்கள். இவர்கள் ஆளுகிற கம்யூனிஸ்ட் மாநிலமான மேற்கு வங்கத்திலே, காக்கி உடைகளை அணிந்து, மக்கள் பல்லாயிரக்கணக்கிலே அங்கே சுட்டுத் தள்ளப்பட்டார்கள், அடித்து நொறுக்கப்பட்டார்கள். அந்த மனித உயிர்களை மதிக்கத் தெரியாதவர்கள்தான், எங்கள் அம்மா மாடு இறக்கிறது என்று சொல்லி அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டுகிறபோது ஆவேசப்பட்டு பேசுகிறார்கள்.

யானைகளையெல்லாம் ஒன்று திரட்டி, அந்த யானைகளுக்கு சிகிச்சையைத் தந்து, தீவனம் போட்டவர்கள், எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்து, சென்னை கடற்கரை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

[2008 ஜனவரி 24

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்கம் பற்றி நண்பர் மாண்புமிகு உறுப்பினர் பேசிய கருத்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். அது அவதூறான செய்தி என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். மரணமடைந்தவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி.பி. கலைராஜன்:** உலக அளவிலே கம்யூனிஸ்ட் நாடாக இருக்கிற சீனா கூட இன்றைக்கு மதத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது. வரலாறு எல்லாம் இன்றைக்கு மாறிக்கொண்டிருக்கிறது. சொன்னால் கோபித்துக்கொள்ளக் கூடாது. தவறைத் திருத்திக்கொள்ளுங்கள். அதைப்போல. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறைச் சுட்டிக்காட்டினால் அதனை மாற்றிக்கொள்வதில் என்றைக்கும் கம்யூனிஸ்ட்கள் தயங்கியதில்லை. ஆனால், தவறையே செய்துகொண்டிருப்பவர்கள் இதைச் சொல்வதற்கு எந்தத் தகுதியும் இல்லையென்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர்களுடைய கட்சி ஆட்சியைக் குறை சொன்னால் அவர்கள் பதில் சொல்லத்தானே செய்வார்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** சென்னை கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது பெரிய கடற்கரையாக இருக்கிறது. நம்முடைய தமிழகத்திற்கு மிகப் பெரிய பெருமை அந்தக் கடற்கரையால் இருக்கிறது. எங்கள் அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, அந்தக் கடற்கரை எந்த அளவிற்குத் தூய்மையாக இருந்தது என்பதையெல்லாம் நாடு நன்றாக அறியும். இப்போது அங்கேயிருக்கிற சிறு கடைகளையெல்லாம் தூக்கிவிட்டார்கள். அது போகட்டும். கடற்கரையை ஒழுங்குப்படுத்துகிறோம் என்று சொல்கிறபோது மாசு கட்டுபாடு வாரியம் அதிலே கவனம் செலுத்த வேண்டும். இதே சென்னை கடற்கரையில், லைட் ஹவுஸ் பக்கத்திலே மிகப் பெரிய தொழிற்சாலை, கற்கள் மற்றும் சிமென்ட்டை இணைக்கிற கலவைத் தொழிற்சாலை இப்போது அங்கே இருக்கிறது. அதன்மூலம் மாசு. . .



2008 ஜனவரி 24]

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கலைராஜன், ஒரு நிமிடத்தில் உங்களது உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதன்மூலம் மாசு பரவுகிறது. ஆக, அந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுத்தவர்கள் யார்? 500 மீட்டருக்குள் இருந்தால் எதற்கும் அனுமதி கொடுக்கக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. இப்போது மெரினா கடற்கரை அசுத்தப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கெல்லாம் நல்ல காற்று கிடைக்கவில்லை. மாசு நிறைந்த காற்று இருக்கிறது. இதற்கு இந்த அரசாங்கம் என்ன பதில் சொல்லப்போகிறது?

அதேபோல எங்களுடைய தி.நகர் பகுதியிலே இருக்கின்ற ஏழை மக்களுக்கெல்லாம், குடிசை மக்களுக்கெல்லாம் புதியதாக வீடு தரப்போவதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எங்களுடைய தொகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தந்தால் பரவாயில்லை. ஆயிரம் விளக்கிலிருந்து அழைத்துக்கொண்டு வந்து எங்கள் தொகுதியிலே இருக்கிற அந்த மக்களுடைய உரிமைகளை அவர்கள் பிடுங்கிக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு வருகிறது. எல்லாவற்றையும் விட, அதிகாரிகள் செய்வதைவிட, அந்தப் பகுதியிலே இருக்கிற ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அந்தத் திட்டங்களுக்கு, யார் யாருக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிற பொறுப்பிலே இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, தி.நகர் பேருந்து நிலையம் மிகப் பெரிய பேருந்து நிலையமாக மாற்றப்பட வேண்டுமென்று நான் கடந்த உரையிலும் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். அங்கே பலமாடி அடுக்குப் பேருந்து நிலையம் உருவாக்க வேண்டும்.

நீங்கள் பாலங்களையெல்லாம் கட்டிக்கொண்டிருக்கிறீர்கள். பாலங்களைக் கட்டுவதற்கு முன்னால், அதில் குடிநீர்க் குழாய்கள் எல்லாம் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, ஒழுங்காக மாற்று ஏற்பாடு செய்துவிட்டு நீங்கள் கட்டி இருக்கலாம். முக்கால்வாசி இடங்களிலே, பாலங்கள் கட்டுகிற இடங்களிலே குடிநீர் கிடைக்கவில்லை. Drainage குடிநீருக்கான குழாய்கள் தடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் சொல்கிற காரணம் தடுக்கப்பட்டிருக்கிறது.

[திரு. வி.பி. கலைராஜன்] [2008 ஜனவரி 24

என்னவென்றால், அதிகாரிகள் எல்லாம் மேம்பாலங்கள் கட்டுவதால் ஏற்பட்ட நிகழ்வுகள் என்று சொல்கிறார்கள். இதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல புத்தகக் கண்காட்சி. நம்முடைய துணை சபாநாயகர் சொன்னார். புத்தகக் கண்காட்சி நடத்தியதால் மிகப் பெரிய வருமானம் வந்தது என்று சொன்னார்கள். நாங்களும் அந்தப் புத்தகக் கண்காட்சியைப் பார்க்கச் சென்றோம். 12 கோடி ரூபாய் வருமானம் வர வேண்டுமென்று எதிர்பார்த்தார்களாம். ஆனால், 9 கோடி ரூபாய்தான் வருமானம் வந்ததாம். இதற்குக் காரணம் என்ன என்று சொன்னால், " (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** அதேபோல, கச்சத் தீவு (குறுக்கீடு) அதேபோல, இன்றைக்கு மலேசியாவிலே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மலேசியாவிலே பாதிக்கப்படுகிற அந்தத் தமிழர்களைப்பற்றி அந்த நாட்டிலே பிறந்த தமிழர்களைப்பற்றி அக்கறை இல்லை. வேண்டாம், அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் இங்கிருந்து வேலைக்குச் சென்று பிழைப்பு தேடிச் சென்றவர்கள் மலேசியாவிலே, சிங்கப்பூரிலே இன்று பலர் கடவுச் சீட்டு இல்லாத காரணத்தினாலே—குற்றம் செய்து அவர்கள் சிறையிலே இருந்தால் அந்த நாம் கேட்கவில்லை—கடவுச் சீட்டு, (Passport) இல்லாத காரணத்தினால் பல்லாயிரக்கணக்கானவர்கள் இன்றைக்கு அங்கே சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மீட்பதற்கு இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் பேசி, நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி வந்தவுடனேயே தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடனடியாக மத்திய அரசாங்கம் இதிலே தலையிட்டு மலேசியாவிலே இருக்கக்கூடிய தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதற்குக்கூட

**. மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 24] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மலேசியாவிலே இருக்கிற ஓர் அமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைக் கண்டித்துப் பேசிய செய்திகளும் பத்திரிகையிலே வந்திருக்கின்றன. இருந்தாலும்கூட, உலகத்திலே தமிழன் எங்கு பாதிக்கப்பட்டாலும், உடனடியாகக் குரல் கொடுக்கக்கூடிய ஒரு தலைவர் கலைஞர் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வி.பி. கலைராஜன்:** செம்மொழியைப்பற்றி தொல்காப்பியத்திலேகூட கூறப்பட்டிருக்கிறது. தொல்காப்பியத்தினுடைய வரலாற்றை நாம் 3 ஆயிரம் ஆண்டுகள் என்று சொல்கிறோம். இன்றைக்கு நீங்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்போர்ட் இல்லாமல் வெளிநாட்டுக்குப் போவது கண்டிப்பாக பெரிய குற்றம். பாஸ்போர்ட் இல்லாமல் வெளிநாட்டுக்குப் போனவர்களுடன் கூட்டணி வைத்திருக்கின்ற காரணத்தினால் இவர்களுக்கு இதுபோன்ற எண்ணம் வந்திருக்கிறதோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (குறுக்கீடு) சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன், இதில் என்ன clarification கேட்கிறீர்கள்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை, இல்லை. ஒன்றும் இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்போர்ட் இல்லாதவர்களுடன் கூட்டணி வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பாஸ்போர்ட் இல்லாமல் செல்பவர்களை, அதைப் பரிசீலிக்க வேண்டியது மத்திய அரசே தவிர, பாஸ்போர்ட் இல்லாமல் செல்வதற்கு அனுமதி தந்தால் அவர்தான் அதில் கூட்டு வைத்திருக்கிறாரே தவிர நாங்கள் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், சரி விடுங்கள், இன்னும் 2 நிமிடம் தருகிறேன். முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** இப்பொழுது புதிய மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க இருப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். திருமதி டி. யசோதா.

*பிற்பகல் 1-35*

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாஸ்போர்ட் இல்லாமல் போகின்றவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியது மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு என்பதை நாங்கள் மறுக்கவில்லை. கள்ளத் தோணியில் செல்கின்றவர்களை எப்படிக் கைது செய்வது என்பதைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த சப்ஜெக்ட் இப்போது தேவையில்லை. கலைராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** மருத்துவக் கல்லூரி. . . (குறுக்கீடு)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், கள்ளத் தோணி என்றால் நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (மேசையைத் தட்டும் ஒலி) உட்காருங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மருத்துவக் கல்லூரி இன்றைக்குத் திறக்கப்படுகிறது. (குறுக்கீடு) மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக இந்த அரசாங்கம் அறிவித்தது. 4 கல்லூரிகள் வரும் என்று அறிவித்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், கள்ளத் தோணி என்றால் உங்களைக் குறிக்கவில்லை. (குறுக்கீடு) உங்களுக்கு எதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்? (குறுக்கீடு) கலைராஜன், உரையை முடியுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** முடித்து விடுகிறேன். புதிதாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்குவதாக இந்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது. ஆனால், ஏற்கெனவே இருக்கிற மருத்துவக் கல்லூரிகளிலே பேராசிரியர்கள் இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. அதற்குக் காரணம் கேட்டால், U.G.C.-யினுடைய சம்பளம் அவர்களுக்குத் தரப்படவில்லை, அதனால்தான் மருத்துவக் கல்லூரிகளிலே பணியாற்றுவதற்கு ஆசிரியர்கள் வரவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கம் அதைக் கணக்கில் எடுத்து, அவர்களுக்கெல்லாம் U.G.C. scale-ஐத் தந்தால் மருத்துவக் கல்லூரி நடத்துவதற்கு நன்கு வாய்ப்பு இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோல, சென்னை மருத்துவமனையில் கட்டணத்திற்கு என்று ஒரு பிரிவு இருக்கிறது. பொதுவாக, அரசு மருத்துவமனை என்று சொன்னால், ஏழைகளுக்கும், ஓலைக் குடிசைகளிலே வாழ்பவர்களுக்கும்தான் உதவ வேண்டும் என்றிருக்கிறது. ஆனால், இங்கே பார்த்தால் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கட்டணம் வசூல் செய்வதால் நிச்சயமாக மீண்டும் தனியாருக்கு இந்த மருத்துவத் துறை போய் விடுமோ என்கிற அச்சம் இப்போது இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார்கள். கட்டண வார்டுக்கு தகுதியுள்ளவர்கள் போகலாம். தனியாக தங்கி வைத்தியம் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றவர்கள், பணம் கட்டுகின்ற தகுதியுடையவர்கள் போகலாம். Compulsory-ஆக யாரும் போக வேண்டுமென்று சொல்லவில்லை. அதற்கென்று தனியாகப் பிரிக்கப்பட்டு, 202 அறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஆக, இதுகுறித்து வீணாக குற்றத்தைச் சுமத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உட்காருங்கள், முடிந்தது. (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டணப் பகுதி, வார்டு என்பது உங்களுடைய காலத்திலே கட்டப்பட்டது. தலைவர் கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டண வார்டுக்கு என்று தனியாக கட்டடம் அமைத்தது என்பது உங்களுடைய ஆட்சிக் காலத்தில் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் கட்டியபோது—நாங்கள் கட்டுவதற்கு தொடங்கி வைத்தோம் ஆனால், நீங்கள்—அதை இரண்டு பிரிவாக, இலவசப் பிரிவு என்றும், கட்டணப் பகுதி என்றும் கட்டடத்திற்கான கட்டுமானம் நடைபெறும்போதே நீங்கள் தனியாகப் பிரித்து கட்டியதால்தான் அது தொடங்கப்பட்டிருக்கிறது. அதனால், யாரும் ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள். கண்டிப்பாக ஏழையெளிய மக்களுக்குச் சிறப்பு வசதிகள் உண்டு. அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். வீணாகக் குற்றம் சொல்லியே பிழைப்பு நடத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2008 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** குறித்து உறுப்பினர் வி.பி. கலைராஜன் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) பேசுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** திராவிட இயக்கம் பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதே, மாட மாளிகையிலும், கூட கோபுரத்தில் வாழ்கிறவர்களுக்கும், கோடீஸ்வரர்களுக்கும் அல்ல; பஞ்சைகளுக்கும், பராரிகளுக்கும், பாட்டாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும். அதனால்தான் சொல்கிறோம், கட்டண. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 28–1–2008 (திங்கட்கிழமை) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1–39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது (மொத்த விற்பனையில் வழங்கல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (8) துறையின் 22–8–2007 ஆம் நாளிட்ட 66 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

2. (i) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர் கோதுமை விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக குறைத்தது குறித்தும்; (iii) ஓட்டல்கள், உணவகங்கள், இனிப்பகங்கள், மன்றங்கள், உணவு வழங்குபவர்கள் மற்றும் ஏனைய யாதொரு உணவருந்தும் இடங்கள் ஆகியவற்றின் மூலமாக அவற்றின் உள்ளேயும், வெளியிடங்களிலும் வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை மீது விதிக்கத்தக்க விற்றுமுதலுக்கு, சுத்திகரிக்கப்பட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2008 ஜனவரி 24]

குடிநீரின் கொள்முதலின்போது வரி செலுத்தப்பட்டுள்ளது என்ற நிபந்தனைக்குட்பட்டு செலுத்தத்தக்க வரிவீதத்தில் இரண்டு சதவீதத்தை குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரிவீதத்தை நான்கு சதவீதமாக குறைத்தது குறித்தும்; (v) யாதொரு வணிகர் உயர்ரக மண்ணெண்ணெய் தயாரிப்பாளருக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றும் உள்ளீட்டு வரி வரவை பெற தகுதியில்லை என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட உயர்ரக மண்ணெண்ணெயின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தை இருபத்தைந்து சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக குறைத்தது குறித்தும் மற்றும் (vi) யாதொரு வணிகர் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இரசாயன தொழிற்சாலைகள் இம்மாநிலத்தில் இரசாயனப் பொருள் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதற்காக இரண்டாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கருப்பஞ்சாறுக்கசண்டு விற்பனை மீது வணிகர்கள் உள்ளீட்டு வரி வரவினை கோரமாட்டார்கள் என்ற நிபந்தனைக்குட்பட்டு செலுத்தத்தக்க வரி வீதத்தை முப்பது சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாக குறைத்தது குறித்தும் வணிகவரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 23–3–2007 ஆம் நாளிட்ட 79 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின் நடைமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 22–5–2007 ஆம் நாளிட்ட 177 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலுள்ள அனைத்து சத்துணவுத் திட்ட மையங்களுக்கு, தேவைப்படுகிற இரண்டுமுறை செறிவூட்டப்பட்ட உப்பு முழுவதையும் அரசு கொள்முதல் செய்து வழங்கும் பொருட்டு சென்னை, தமிழ்நாடு உப்பு நிறுவனத்தை அறிவிக்கையிட்டது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 12–6–2007 ஆம் நாளிட்ட 239 ஆம் எண்

[2008 ஜனவரி 24

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. அரசுத் துறைகள், பொதுத் துறை நிறுவனங்கள், குறிப்பிட்ட சட்டப்படிக்கான வாரியங்கள், உள்ளாட்சி மன்றங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பலகலைக்கழகங்கள் மற்றும் அரசு அமைத்த சங்கங்கள் ஆகியவை கணினி அறைகலன் உட்பட மரம் மற்றும் இரும்பினாலான அறைகலன்களை தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவேண்டும் என்பது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 29–8–2007 ஆம் நாளிட்ட 401 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகளின் நடைமுறைகளில் திருத்தங்கள் செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 30–9–2007 ஆம் நாளிட்ட 471 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. பெரம்பூர் மேம்பாலத்தின் மறுவடிவமைப்பு பணியை தகுந்த ஆலோசகரின் உதவியுடன் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 1–10–2007 ஆம் நாளிட்ட 472 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நடைமுறைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாணையத்தின் காலியாக உள்ள பணியிடங்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நீதித் துறை அலுவலர்களை கூடுதல் உறுப்பினர்களாக (நீதித் துறை) நியமித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (இ2)த் துறையின் 7–9–2007 ஆம் நாளிட்ட (2டி) 161 ஆம் எண் அரசாணையில்



2008 ஜனவரி 24]

வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 2007 ஆம் ஆண்டு மதிப்புக் கூட்டுவரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 4–6–2007 ஆம் நாளிட்ட 118 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. சென்னையில் உள்ள திருவாளர்கள் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசின் மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருந்துகள், மருந்துப்பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு செலுத்தத்தக்க வரியை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் 29–6–2007 ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் திருத்தம் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–6) துறையின் 19–9–2007 ஆம் நாளிட்ட 1355 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

13. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

[2008 ஜனவரி 24

14. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2007 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/2007)

2. 2007 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சி அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/2007)

3. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 8/2007)

4. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/2007).

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

6. 2008 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

7. மனுக்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை (2007–2008)

8. மனுக்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை (2007–2008)

9. மனுக்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை (2007–2008)

10. மனுக்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை (2007–2008)

11. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)



2008 ஜனவரி 24]

12. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

15. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

16. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

# இணைப்பு

*(433 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

Hon'ble Members of the Legislative Assembly,

Vanakkam. I take great pleasure in addressing you at the commencement of the seventh session of the Thirteenth Legislative Assembly in 2008. I convey my hearty new year greetings to all of you.

2. This Government, headed by the Hon'ble Chief Minister Kalaignar M.Karunanidhi, considers the promotion of welfare of the people of Tamil Nadu as its foremost duty. Within one and half years of assuming office, fulfilling its promises, this Government continues to rise up to the expectations of the people. You are well aware of the fact that all policies and programmes of this Government are formulated and implemented only with the object of promoting the uplift of the poor, destitutes, Adi-dravidars, Backward Classes, Most Backward Classes, Minorities and the disabled. I am proud of the tireless efforts taken by this Government to lead the State on the path of progress, adopting equity and social justice as its guiding vision.

3. Compared to the other states in the country, Tamil Nadu remains a peaceful state. This Government has been maintaining continuous vigil against any extremist activity. Efforts to spread extremism into Tamil Nadu from the neighbouring states have been successfully thwarted. The Government has also taken strict action against mercenary criminal gangs. This Government is of the firm conviction that equitable growth and elimination of poverty are the lasting solutions to extremism as well as caste conflicts.

4. This Government has always striven to realise federalism in its true spirit, as expounded by Arignar Anna's philosophy of State autonomy. In fact, even in 1969, when the Hon'ble Kalaignar assumed office as the Chief Minister for the first time, a Committee to study and give its recommendation on Centre-State relations was constituted under the Chairmanship of Justice Rajamannar, with Dr.Lakhmanaswami Mudaliar and Justice Chandra Reddy as members and its report was obtained. This Government is happy to note that the Union Government has constituted a Commission on Centre – State relations, headed by Justice Madan Mohan Punchhi, former Chief Justice of India. We hope this Commission will make necessary recommendations

paving the way for a truly federal governance in our country while at the same time preserving the unity and integrity of the nation.

5. Recommendations of successive Finance Commissions have not been favourable to Tamil Nadu. They have penalised performing States like Tamil Nadu, by repeatedly reducing their share in the devolution. We hope that the recently constituted 13th Finance Commission will correct this imbalance and provide adequate devolution, having regard to the exemplary performance of this State and its genuine development needs.

6. All of us are well aware of the strains in the inter-state relations due to inter-state river water disputes. Our nation has an established constitutional and legal framework for resolution of such disputes. Hence, in the interest of harmony among the States, this Government would urge that all such disputes are resolved through the existing laws of the land and all States honour and abide by the decisions of the competent authorities.

7. Linking our country's rivers is the only permanent solution to the problem of inter-state river water disputes. This Government has been repeatedly urging the Union Government for the expeditious implementation of this project and for taking up the inter-linking of the peninsular rivers in the first phase. However, no consensus has been arrived at among the states. It is for this reason that the Government of Tamil Nadu has requested the Union Government to provide financial assistance at least for the scheme of inter-linking of rivers within the State during the Eleventh Plan period. In so far as Tamil Nadu is concerned, without any further loss of time, this Government will expeditiously take up the preliminary works for this project. Further, this Government will set up a committee of experts to explore the possibility of preventing the surplus surface water draining wastefully into the sea during the monsoons and using this water to recharge the underground aquifers, benefiting drought prone areas. A major scheme will be implemented in the water deficit areas of our State from the ensuing financial year, for storing the unutilised water in rivers, rivulets and streams by means of check-dams and utilising it round the year for drinking water and agriculture.

8. The Sethusamudram project, the longstanding dream of the Tamil people, has been studied since 1860 even during the British rule and found feasible by engineering stalwarts and considered desirable by scholars and eminent men. This project has the potential to contribute to the strength and





development of our country by expanding international and maritime trade relations. This Government urges the Union Government not to go back from its endeavour to transform the future of the people of Tamil Nadu to one of progress and prosperity and to continue the implementation of this unique and constructive project, without paying heed to the untenable and contradictory arguments now raised by a few for political gains.

9. The heavy rain and floods witnessed by the State during the last month not only led to loss of lives but have also caused widespread damage to public properties like roads, tanks and buildings, and affected crops in several parts of the State. It is estimated that these damages are to the tune of Rs.1,510 crores. The Hon'ble Chief Minister and other Hon'ble Ministers have personally visited the affected areas and supervised the relief operations. This Government has allotted Rs.200 crores to undertake immediate flood relief works in these areas. A detailed memorandum regarding the flood damage has been submitted to the Union Government seeking financial assistance. The Central team deputed by the Union Government has visited the affected districts and assessed the flood damage. We urge the Union Government to immediately provide the required financial assistance to the State, based on the report of this team, so that comprehensive restoration works can be taken up in the affected areas.

10. By more than doubling the Tenth Plan outlay of Rs.40,000 crores, the State's outlay for the Eleventh plan has been approved for Rs.85,344 crores. During the Eleventh Plan period, developmental programmes will be implemented with the objectives of reviving the farm sector and ensuring social justice.

11. There is a need to entrust additional responsibilities and provide adequate powers to rural and urban local bodies in the State, to enable them to fulfill the needs of the public and to expeditiously implement development programmes. The High Level Committee under the Chairmanship of Hon'ble Minister for Rural Development and Local Administration, constituted to make recommendations to the Government regarding additional powers and functions to the Local bodies, has submitted its report. The recommendation of this Committee will be examined and an Action Taken Report would be laid in this House during the ensuing Budget Session.

12. Thanks to the sustained efforts taken by this Government, the Union Government has not only accorded the status of classical language to Tamil but also is establishing a Central Institute of Classical Tamil at Chennai. By

enacting a legislation making Tamil compulsory in schools in the State, this Government has ensured that all students will learn Tamil. This Government will leave no stone unturned for making Tamil one of the official languages of the Union Government and a language of transaction in the Madras High Court.

13. You are aware of this Government providing rice at a price of only Rs.2/- per kg., the lowest amongst all States in the country, in pursuance of its objective that all people must have access to good quality rice at a low price. In addition, with a view to containing prices of other essential commodities used by the public, like cooking oil and dhal, they are being provided through the fair price shops from last year. The fact that the prices of food commodities in our State have been contained by this measure is a major achievement of this Government.

14. This Government has been taking determined action to increase the income of farmers from agriculture and allied activities. This will be possible only by enhancing farm productivity and with supplemental income generation through animal husbandry and fisheries. The programmes of the Public Works, Agriculture, Animal Husbandry and Fisheries Departments are being implemented in an integrated manner under the World Bank aided IAMWARM Project. By waiving cooperative farm loans, farmers in Tamil Nadu have been enabled to access fresh crop loans. With a view to ensuring a good price to paddy farmers commensurate with the increased cost of production, this Government has provided an additional incentive of Rs.50, over and above the incentive of Rs.100 announced by the Union Government, thus increasing the procurement price of fine variety of paddy to Rs.825 per quintal.

15. The National Agriculture Development Programme, launched by the Government of India, will be implemented in this financial year with an allocation of Rs.185 crores. Under this programme, precision farming is being extended to all districts in the State. Agriculture department has been restructured so that the field officers at the block level are able to carry out extension activities and serve farmers more effectively. Horticulture and Micro irrigation programmes have been accorded priority and are implemented vigorously.

16. Under the scheme for reclaiming waste lands and distributing them free to poor landless agricultural families, one lakh thirty eight thousand





poor farmers have been provided with one lakh sixty one thousand acres of land, free of cost so far. In addition, the Government had fixed a target of providing Three lakh free house site pattas to the landless poor and has granted Three lakh pattas. This Government has also further relaxed the minimum number of years one must have resided in houses on government lands to be eligible for house site pattas, from ten years to five years and has also removed the income limit, thereby facilitating all those persons residing for more than five years in Government lands to benefit from the scheme.

17. Some difficulties arose in power supply recently, mainly due to shortfall in power supplied by the Central Power Stations. Neyveli Lignite Corporation was not able to supply the committed quantum of power due to shortage of lignite. Similarly, Kalpakkam and Kaiga Nuclear Power Stations have not been able to produce power at the rated capacity due to inadequate fuel. Government of Tamil Nadu has urged the concerned authorities to take immediate measures to improve the supply from Central Power Stations. Co-generation units will be established in all co-operative and public sector sugar mills in the State at a cost of Rs.925 crores, so as to generate 185 MW of power. They will be operational within 18 months. The Government has also taken several measures to increase the generation capacity of Tamil Nadu Electricity Board (TNEB). TNEB is in the process of establishing additional Thermal Power Stations in North Chennai, Mettur and Thoothukudi. In addition, accepting the request of the Hon'ble Chief Minister, the Union Government has been providing additional power to Tamil Nadu from the central pool.

18. After having successfully achieved universal primary education in our State, this Government will set Universal Secondary Education as the new goal so that every child will complete 10 years of schooling. We are happy to note that the Union Government has launched a new scheme for this purpose in the Eleventh Plan and this Government will extend its full support for its success.

19. It was during the previous tenure of the DMK government that computer education was introduced for the first time in Government Higher Secondary Schools in the year 1999-2000. During the past one and half years, 1,880 Government Higher Secondary Schools and 1,525 High Schools have been provided with computers. In the coming financial year, computers will be provided to the remaining 100 Government Higher Secondary Schools

and 606 Government High schools. Further, the Government will provide computers to 6,650 middle schools of the Government and Local bodies during the Eleventh Plan period. In addition, the Government will implement a scheme for providing computers as reward to 1,000 top ranking Tamil medium students in the X<sup>th</sup> standard public examination.

20. The Government of Tamil Nadu has requested the Government of India to establish an Indian Institute of Management at Coimbatore, an Indian Institute of Technology at Madurai and an Indian Institute of Science Education and Research at Trichy. The Government of Tamil Nadu has also requested the Union Government to establish a Central University in Tamil Nadu having regard to the fact that Tamil Nadu does not have any Central University at present. The Hon'ble Chief Minister has also met the Hon'ble Union Minister for Human Resources Development in this regard who has responded positively to the request of the Chief Minister. This Central University will be established in Tiruvarur district.

21. It is only the Government Health Care Institutions, the common man can have access to. Hence, this Government has been taking all necessary steps to make them adequately staffed and well equipped. In the last two years, this Government has filled 2,167 vacant posts of doctors and 2,341 vacant posts of nurses. In addition, 468 new posts of doctors and 1,059 new posts of nurses have been created and are being filled up. Three nurses have been provided in each of the 1,000 Primary Health Centres in the State on 24 hour basis, thereby ensuring round the clock availability of maternal health services to rural women. Apart from this, under the Tamil Nadu Health Systems Project funded by the World Bank with an outlay of Rs.597 crores, this Government is executing various works to upgrade the infrastructure of all taluk and district hospitals in the State. It is a matter of great satisfaction that due to the various initiatives of this Government, deliveries in Government institutions have gone up with a fall in the number of deliveries in private hospitals. Under the Varumun Kappom Thittam, 4,872 Health Camps have been conducted so far, benefiting about 51 lakh persons.

22. After this Government assumed charge, 12 Memoranda of Understanding have been signed with major companies like Motorola, Dell Computers, Samsung and Renault-Nissan for investments in the State to the tune of Rs.15,083 crores. Of them, four companies have already started their operations. These industries will create direct and indirect employment to 1,37,140 persons.





23. The new Industrial Policy announced by this Government recently, with a package of incentives for investors, has been widely welcomed by them. Thanks to this policy, about 20 lakh new employment opportunities will be generated in Tamil Nadu during the next four years.

24. Hyundai is in the process of expanding its existing production capacity to produce 6,30,000 cars annually, with an investment of Rs.4,000 crores. In addition, Ford has proposed to expand its present production facility to produce an additional two lakh cars per year with an investment of Rs.1,800 crores. The fact that these two existing car manufacturers in Tamil Nadu have again chosen to further expand their operations in our State itself, bears testimony to the success of the industrial policy of this Government.

25. As stated in the last Budget Speech, a shipyard will be established in Ennore near Chennai by Larsen and Toubro with an investment of Rs.3,068 crores. This will provide employment to about 10,000 persons. Preliminary works for the construction of another shipyard in Cuddalore district are underway.

26. Recognising the contribution of small industries in generating employment, this Government has decided to encourage small industries through various incentives. This package of incentives will be unveiled in the form of a Small Industries Policy shortly. This policy will provide special incentives to Agro Processing Industries. About 10 lakh persons will get employment from the large number of new small industrial units that are likely to be established due to this initiative.

27. As promised in the DMK election manifesto, the Government has been implementing the scheme for providing free colour televisions to all families who do not have them. As of now, 24,58,411 television sets have been distributed. In the third phase of this scheme, orders have been issued for procuring thirty four lakh and twenty five thousand colour televisions. The process by which these colour televisions have been procured in a transparent manner through a global tender, after obtaining the approval of a committee consisting of representatives of legislative parties and distributed without any discrimination to poor families in all parts of the State through committees consisting of peoples' representatives has earned the appreciation from all quarters. We will continue to implement the scheme and will very soon achieve the distinction of Tamil Nadu being the only State in the country with colour televisions in all houses.

28. Chennai Metropolitan area is continuing to grow at a fast pace and its transportation issues require quick and lasting solutions. Recognising this important issue, this Government is in the process of implementing the Chennai Metro Rail Project at an estimated cost of Rs.9,757 crores. The Detailed Project Report for this project, prepared by Delhi Metro Rail Corporation, has been sent to the Government of India for getting financial assistance from Japan Bank for International Co-operation (JBIC). The preliminary works for this project are currently underway.

29. In order to improve connectivity to the Chennai Port, an elevated express highway from Maduravoyal to Chennai Port at a cost of Rs.1,468 crores has been approved by Government of India and preliminary works are underway. With a view to reducing the traffic congestion in the city, this Government has decided to construct a circular high speed transportation corridor connecting the important roads in the city, as available in many cities abroad. A feasibility study is being undertaken for this project.

30. Tamil Nadu is the most urbanised state in the country. Therefore, improving basic infrastructure like roads and drinking water facilities in urban areas is vital for improving the living standards of a large section of the population in the State. To achieve this objective, various works being currently executed under Jawaharlal Nehru National Urban Renewal Mission and Tamil Nadu Urban Development Project at an unprecedented outlay of Rs.6,700 crores, will be expedited.

31. This Government will accord priority for providing housing to low-income and middle class families in urban areas. One lakh new houses are being constructed in urban areas in the State under the various urban development schemes. Having regard to the housing needs of people living in Municipal Corporations areas, housing schemes will be implemented in areas adjoining these Corporations through Public-Private Partnership. In addition, this Government will permit a higher floor space index (FSI) to builders who comply with the condition of earmarking a certain part of their housing projects for low-income groups.

32. Hogenakkal Combined Water Supply Scheme is the only permanent solution for the drinking water problems of Dharmapuri and Krishnagiri districts which have a high level of flouride in the ground water. Thanks to the determined efforts of this Government, the Union Government



recommended the scheme for financial assistance from Japan Bank for International Cooperation (JBIC). A team from JBIC has visited these districts and conducted studies about this scheme. The approval for the scheme will be obtained based on the final negotiations likely to take place shortly.

33. Air traffic has witnessed a phenomenal growth in our State. Hence, it is essential to expand and modernise the existing airports at Chennai, Coimbatore, Trichy, Madurai and Thoothukudi and establish new airports at Vellore and Salem. This Government would continue to urge the Government of India to accord high priority for these airports.

34. Chennai - Madurai rail link is a vital train connectivity for the people of the southern districts of Tamil Nadu. Only by doubling the crucial Villupuram – Dindigul segment, it will be possible to operate more trains to southern districts. Therefore, in the interests of the people and the industrial development of the southern districts, this Government would urge the Union Planning Commission and the Union Government to approve the doubling project at the earliest.

35. The National Rural Employment Guarantee Scheme, the flagship scheme of the Union Government, is currently being implemented in 10 districts of the State. The Social Audit Team, which has studied the implementation of this scheme in all states in the country, has concluded that the scheme is being admirably implemented in Tamil Nadu. The team has commended the facts that workers are getting a daily wage of Rs.80 and that unlike in any other State, 82% of the beneficiaries are women in Tamil Nadu. In pursuance of the Union Government's decision to extend this scheme to all districts in the country, this scheme will be implemented in all districts of the State from the next financial year.

36. The Leather and Textile industries in the State have sought central assistance to establish Zero Discharge Common Effluent Treatment Plants to prevent the pollution of rivers and water bodies. We request the Union Government for early sanction of central assistance for these schemes. The State Government will also extend necessary financial assistance for this scheme.

37. This Government is of the firm conviction that economic development of the southern districts alone can ease the social tensions in this region and has taken a number of initiatives for their industrial development. The

hurdles in the establishment of a Special Economic Zone in Nanguneri have been overcome and a Multi Product Special Economic Zone will be established soon in an area of 2,500 acres. Similarly, an IT Special Economic Zone is being established by ELCOT at Gangaikondan. ELCOT is also developing IT Parks in and around Madurai. Land has already been allotted to IT Companies both in Gangaikondan and Madurai. It is expected that these initiatives will generate large scale employment to the unemployed educated youth in this region and will contribute to the economic development of the region.

38. This Government has always supported women to get their rights in full and play their rightful role in our society. All are aware that it was this Government that secured the rights of women by according them equal property rights and reservation in Government jobs and Local Bodies. We hope the UPA Government, led by Dr.Manmohan Singh under the able guidance of Tmt.Sonia Gandhi, will soon be able to enact the legislation giving reservation for women in State Legislatures and the Parliament.

39. This Government is proud of the fact that Tamil Nadu has become the pioneer in the country by implementing the scheme of providing maternity assistance of Rs.6,000/- for pregnant women to enable them to get the much needed nutrition and as a compensation for the loss of income during pregnancy. Five lakh women have availed this assistance to the tune of Rs.300 crores so far. In addition, with a view to addressing the malnutrition suffered by children, this Government is implementing the scheme of providing three eggs a week to about 70 lakhs children in the age group of 2 to 15 years. This Government would urge the Union Government to adopt these model schemes as Central Schemes and implement them in all states in the country.

40. The Self Help Group scheme initiated by this Government in 1989 in Dharmapuri district has now become a mass movement for the economic empowerment of women in our State. For the first time, this Government has extended the Revolving Fund assistance, provided only to rural areas so far, to the Self Help Groups in urban areas also. About 3.6 lakh Self Help Groups are operating in this State covering 58 lakh women. These Self Help Groups have availed credit of Rs.2,566 crores from banks, in addition to their combined savings of Rs.1,639 crores.



41. The scheme for providing monthly assistance to unemployed youth has so far benefited 3,53,448 persons. Recognising the fact that only skill development can enhance the employability of these youth, this Government has been implementing a variety of training programmes for them. This Government will pay attention to improving their general knowledge, proficiency in computer and soft skills like spoken English and ability to face interviews. Taking into account the increasing need for trained heavy vehicle drivers, the Government will launch a massive programme for imparting training in heavy vehicle driving through the State Transport Undertakings.

42. In fulfillment of the promise made in the DMK manifesto, this Government had enhanced the monthly pension for the elderly, destitutes and widows from Rs.200/- to Rs.400/- during 2006-2007. Now the Government of India has launched the Indira Gandhi National Old Age Pension Scheme for all old aged persons below the poverty line. In our State, the Chief Minister launched this scheme on 19-11-2007, the birth anniversary of the former Prime Minister late Tmt.Indira Gandhi. Thanks to implementation of this scheme, about 10 lakh old aged persons above 65 years, living below the poverty line in our State will be benefited irrespective of whether they have support from male children or not.

43. During the previous year, this Government had increased the monthly assistance for disabled persons from Rs.200 to Rs.400 and from Rs.200 to Rs.500 in respect of severely disabled persons. In a gesture never done before, this Government had also sanctioned monthly assistance of Rs.500 for mentally challenged persons, who are not in a position to take care of themselves, without any restriction based on income limit or the number of beneficiaries. 30,000 such persons have benefited under this scheme so far. In addition, the Government has also taken necessary action to provide special education and vocational training to them.

44. This Government has always been concerned about the welfare of the transgenders, who have been shunned by the society and treated as a kind of handicapped. Recognising the various problems encountered by the transgenders, including that of social acceptance, this Government is implementing a number of beneficial measures like issue of ration cards and free surgeries in Government hospitals for them. As an expression of this Government's empathy towards the transgenders, a separate welfare board will be established for them.

45. As never witnessed before in our State, or for that matter in the entire country, this Government has been providing marriage and maternity assistance to women from poor families. This Government will not tolerate the wrongful acts of middlemen and some officials trying to make gains while disbursing these benefits. The Government will take strict action against such persons.

46. This Government has always accorded priority to the welfare of the workers in the unorganised sector. During 1996-2001, it was this Government which had constituted various unorganised labour welfare boards and granted various benefits to workers in the unorganised sector. Though these boards were abolished subsequently, this Government has revived them. During the last one and half years, 2,20,043 workers in the unorganised sector have received various welfare benefits to the tune of Rs.56 crores through these boards.

47. This Government has formed a separate welfare board for the socio-economic development of folk artists. The Tamil Mayyam – 'Chennai Sangamam' arts festival has been conducted successfully throughout Chennai city during the last two years, receiving great appreciation from the public. With a view to giving fillip to our folk arts, encouraging the folk artists and nurturing their zeal, this Government will provide its co-operation for the conduct of this festival all over the State, in a phased manner during the coming years.

48. The number of people from Tamil Nadu who go abroad for work has witnessed a sharp increase in the past few years. With a view to removing their hardships, a State High Level Advisory Committee chaired by the Hon'ble Chief Minister will be constituted.

49. Considering the continuing misery of Srilankan Tamils, this Government urges the Union Government that an amicable political solution should be found at the earliest to this long standing problem.

50. This Government has implemented a number of welfare measures for weavers such as enhanced pension and free power supply. With a view to providing them regular employment, this Government will continue to implement the scheme of supply of free dhotis and sarees to poor people numbering 3.28 crores in the State at a cost of Rs.256 crores per year.



51. Welfare of fishermen has always been accorded high priority by this Government. A separate welfare board for fishermen has been established. This Government is also implementing a scheme to assist the families of fishermen who had gone into the sea for fishing and were found missing. This Government will continue to take all efforts to remove the difficulties faced by our fishermen while fishing in the sea.

52. This Government will extend its full support for the socio-economic development of sanitary workers and those who were engaged in the abhorrent practice of manual scavenging. It is only in this context that this Government has established a separate welfare board for them. This Government will continue to implement schemes for their rehabilitation and alternative livelihood.

53. There is a need to give special concessions to Arundhatiars, as they are still at the lowest rung in terms of socio-economic status. This Government proposes to consult all political parties and arrive at a decision on the possibility of providing special reservation for them within the quota of reservation for Scheduled Castes.

54. This Government recognises the fact that securing high end employment opportunities in all sectors by Adi Dravidars and Tribal Communities is vital for their socio-economic development. With a view to enabling Adi Dravidar and Tribal youth to benefit from the current employment boom in the economy, the Government has earmarked the entire Special State Assistance of Rs.25 crores during 2007-2008, exclusively for the training programmes of Adi Dravidar and Tribal youth.

55. Having regard to the educational and social backwardness of minorities, this Government has provided separate reservation for them in education and employment. In addition, a separate Directorate has been created to pay special attention to welfare of minorities.

56. All policies and programmes of this Government are always centred around the objective of social justice. All are aware that the DMK Government, inheriting the great legacy of the Justice Party, has always been a champion of social justice. This Government would continue to strive for reservation in Central Government educational institutions and employment in private sector.

[2008 ஜனவரி 24

57. The Chief Minister has accepted the request of Thiru K. Veeramani, General Secretary, Dravidar Kazhagam that a 95 feet tall statue of Thanthai Periyar must be erected. However, considering the fact that an even better way of spreading Thanthai Periyar's message of social equality would be to establish another 95 Samathuvapurams in his name, each having his statue at the entrance of the residential area where all communities live in unity and brotherhood, this Government has now decided to commence work for the same. On completion, along with the 145 samathuvapurams already established by this Government, there will be 240 samathuvapurams with statues of Periyar in the State.

58. In 1921, over 500 scholars under the leadership of the great scholar and founder of 'Thani Tamil Iyakkam', Thiru Maraimalai Adigalar had met in Pachaiyappa's College at Chennai and had decided that Tamils need a separate calendar and a new calendar in the name of Saint Thiruvalluvar could be followed and this would constitute the 'Tamil Year'. They also determined that the birth year of Thiruvalluvar was 31 BC. This decision was accepted by Hon'ble Chief Minister Kalaignar even as early as 37 years ago and it was ordered to be followed in the Government Diary from 1971 and the Government Gazette from 1972. In view of the consensus amongst almost all Tamil Scholars that the first day of the month of Thai, is the first day of the Tamil year, this Government has decided to declare 1st Thai as the Tamil New Year day. Therefore, the people of Tamil Nadu, who now celebrate Pongal as the festival of Tamils, can now celebrate it as Tamil New Year day also with redoubled joy. On this day let the people of this State plant trees bearing the 'Mukkani' fruits of banana, mango and jackfruit; draw colourful Kolams; decorate their houses with array of lamps showing them in new splendour; wearing new clothes, sing and dance in praise of Tamil pride and self respect; spread the message of equality and shower their love and joy.

59. I have elaborated the policies, endeavours, achievements and future plans of this Government before you. This Government headed by the Hon'ble Chief Minister Kalaignar, is firmly determined to ensure that the fruits of the unprecedented growth witnessed by the State today reach all sections of the society and to promote the welfare of the marginalised, spread the spirit of democracy, strengthen communal harmony and secure social justice. I conclude this address, with the hope that you will extend your full co-operation in successfully achieving these goals. Vanakkam, Jai Hind.



2008 ஜனவரி 24]

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே,

வணக்கம். 2008 ஆம் ஆண்டில், பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். உங்கள் அனைவருக்கும் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. தமிழ்நாட்டு மக்களின் நலன் காப்பதையே தலையாயக் கடமையாகக் கொண்டு ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு, பதவியேற்று ஒன்றரை ஆண்டு காலத்திற்குள்ளேயே, தான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்து வருகிறது. ஏழை எளியோர், ஆதரவற்றோர், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், ஊனமுற்றோர் போன்ற சமுதாயத்தின் அடித்தளத்தில் உழலுவோரின் முன்னேற்றத்தை முன்னிறுத்தியே இந்த அரசின் அனைத்துக் கொள்கைகளும், திட்டங்களும் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். சமத்துவத்தையும், சமூக நீதியையும் இரு விழிகளாகக் கொண்டு, மாநிலத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும் நோக்கத்தோடு அயராது பாடுபட்டுவரும் இந்த அரசின் செயல்பாடுகள் குறித்து பெருமிதம் கொள்கிறேன்.

3. நமது நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு அமைதி தவழும் மாநிலமாக விளங்கி வருகிறது. மாநிலத்தில் தீவிரவாத நடவடிக்கைகள் எவையும் நடைபெறாவண்ணம் இந்த அரசு தொடர்ந்து விழிப்புடன் கண்காணித்து வருகிறது. அண்டை மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்குள் தீவிரவாதம் ஊடுருவதற்கான முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன. மேலும், குற்றச் செயல்களில் ஈடுபடும் கூலிப்படையினருக்கு எதிராக இந்த அரசு கடும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்றத்தாழ்வற்ற சமுதாய வளர்ச்சி காண்பதும், வறுமையை ஒழிப்பதுமே சாதிப் பூசல்களுக்கும் தீவிரவாதத்திற்கும், நிரந்தரத் தீர்வுகளாகும் என்று இந்த அரசு உறுதியாக நம்புகிறது.

4. அறிஞர் அண்ணா வகுத்தளித்த மாநில சுயாட்சிக் கொள்கையின்படி, உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிலைபெறச் செய்ய இந்த அரசு எப்போதுமே பாடுபட்டு வந்துள்ளது. 1969 ஆம் ஆண்டிலேயே, மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்றபோது, மத்திய

[2008 ஜனவரி 24

மாநில உறவுகள் பற்றி ஆய்ந்து பரிந்துரைக்க, நீதியரசர் இராஜமன்னார் அவர்கள் தலைமையில், டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் மற்றும் நீதியரசர் சந்திரா ரெட்டி ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, ஒரு குழு அமைக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. தற்போது, மத்திய மாநில உறவுகள் குறித்து ஆராய, நீதியரசர் மதன்மோகன் பூஞ்சி அவர்கள் தலைமையில் மத்திய அரசு புதிய குழு ஒன்றை அமைத்துள்ளது குறித்து இந்த அரசு தனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது. நமது நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும் அதே வேளையில், உண்மையான கூட்டாட்சி நடைமுறைப்படுத்தப்படத் தேவையான பரிந்துரைகளை இந்தக் குழு அளிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

5. கடந்த ஆண்டுகளில், மத்திய அரசு அமைத்த நிதிக் குழுக்களின் பரிந்துரைகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு நிறைவளிப்பதாக அமையவில்லை. தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு தொடர்ந்து குறைக்கப்பட்டு வந்துள்ளது. அண்மையில் அமைக்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது நிதிக் குழு, இந்நிலையை மாற்றி, நமது மாநிலத்தின் சிறந்த செயல்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டங்களுக்கான தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சரியான நிதிப் பகிர்வினை அளிக்கும் என நம்புகிறோம்.

6. நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினைகளால் மாநிலங்களுக்கு இடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் பற்றி நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்க, நமது நாட்டில் அரசியலமைப்பு மற்றும் சட்ட ரீதியான வழிமுறைகள் ஏற்கெனவே உள்ளன. எனவே, மாநிலங்களுக்கிடையே நல்லுறவு செழிக்க, தற்போதுள்ள சட்டங்களின் அடிப்படையில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அதிகாரம் பெற்ற அமைப்புகளின் முடிவுகளை மதித்து அவற்றின்படி அனைத்து மாநிலங்களும் நடக்க வேண்டும் என்றும் இந்த அரசு கேட்டுக் கொள்கிறது.

7. நதிநீர்ப் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வான தேசிய நதிகள் இணைப்புத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்த வேண்டுமென்றும்; அதன் முதற்கட்டமாக, தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்றும் இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தியும் கூட, மாநிலங்களிடையே ஒருமித்த கருத்து எதுவும் எட்டப்படாத நிலையே உள்ளது. எனவேதான், மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டத்தையாவது செயல்படுத்திட, மத்திய



2008 ஜனவரி 24]

அரசு பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிதியுதவி வழங்க வேண்டுமென்று தமிழக அரசு கோரியுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மேலும் தாமதமின்றி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான ஆரம்பக் கட்டப் பணிகளை இந்த அரசு விரைந்து மேற்கொள்ளும். மேலும், பருவ காலங்களில் தமிழக நதிகளின் உபரி நீர் கடலில் கலந்து வீணாவதைத் தடுத்து, வறட்சியான பகுதிகள் வளம் பெறும் வகையில் நிலத்தடியில் சேமித்துப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய, இந்த அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைக்கும். நமது மாநிலத்தின் நீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளில், ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளில் வீணாகும் நீரை தடுப்பணைகள் மூலமாகச் சேமித்து, ஆண்டு முழுவதும் வேளாண்மை மற்றும் குடிநீர் வசதிக்குப் பயன்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்று வரும் நிதியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

8. தமிழக மக்களின் நீண்ட காலக் கனவாக விளங்குவதும் – 1860 ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேயர் ஆட்சியிலேயே ஆய்வு நடத்திடத் தொடங்கப்பெற்று; – பொறியியல் மேதைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு; சாத்தியக்கூறுகள் கண்டறியப்பட்டு, சான்றோர்கள் ஆன்றோர்களால் வரவேற்கப்பட்டதுமான – உலகத் தொடர்புகள், வணிகத் தொடர்புகள் விரிவாக்கப்பட்டு நம் நாடு மேலும் வளமும் வலிவும் பெறுவதற்குப் பயன்படக்கூடியதுமான சேது கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றிடத் தொடங்கி; தற்போது அரசியல் ஆதாயத்திற்காக ஒரு சிலர் முன்னுக்குப்பின் முரணாக எழுப்புகிற வாதங்களுக்கு செவிசாய்த்து திட்டத்தின் செயலாக்கத்தை நிறுத்தி விடாமல் தமிழக மக்களின் எதிர்காலத்தை ஏற்றமும் வளமும்மிக்க காலமாக மாற்றிடுவதிலிருந்து பின்வாங்காமல் – அந்த அரிய ஆக்கப்பூர்வமான திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுமென்று மத்திய அரசினை இந்த அரசு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

9. கடந்த மாதம் பெய்த பெரு மழையினாலும், பெருகிய வெள்ளத்தினாலும் நமது மாநிலத்தின் பல பகுதிகளில் உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதோடு, சாலைகள், ஏரிகள், கட்டடங்கள் உள்ளிட்ட பொதுச் சொத்துக்களுக்கும், பயிர்களுக்கும் பரவலாகச் சேதம் ஏற்பட்டு அந்தச் சேதம் ரூபாய் 1,510 கோடி அளவிற்கு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் நேரில் சென்று பார்வையிட்டு, நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தார்கள். இப்பகுதிகளில் உடனடி நிவாரண நடவடிக்கைகளை

மேற்கொள்வதற்காக ரூபாய் 200 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. வெள்ளச் சேதம் குறித்த விரிவான அறிக்கை மத்திய அரசிடம் அளிக்கப்பட்டு, நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இது குறித்து ஆய்வதற்காக மத்திய அரசு அனுப்பிய ஆய்வுக் குழுவினர், பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நேரில் சென்று, ஏற்பட்டுள்ள சேதத்தினைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். அவர்களது அறிக்கையின்படி, பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாகச் சீரமைக்க தமிழக அரசிற்குத் தேவைப்படும் நிதியுதவியை உடனடியாக வழங்குமாறு மத்திய அரசை வலியுறுத்துகிறோம்.

10. கடந்த பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் திட்ட ஒதுக்கீடான ரூபாய் 40,000 கோடியை இரு மடங்குக்கும் மேலாக உயர்த்தி, ரூபாய் 85,344 கோடி அளவில், வரும் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டக் காலத்தில், வேளாண்மைத் துறைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டுவதோடு, சமூக நீதியை உறுதி செய்யும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

11. மக்களின் தேவைகளை நிறைவேற்றவும், வளர்ச்சிப் பணிகளை விரைவாகச் செயல்படுத்தவும், மாநிலத்தில் உள்ள கிராமங்கள் மற்றும் நகரங்களின் உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகளையும், அதிகாரங்களையும் வழங்க வேண்டியுள்ளது. இது குறித்து ஆய்ந்து, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர் நிலைக் குழு தனது அறிக்கையை அரசிடம் அளித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு, இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை (Action Taken Report), வரும் வரவு–செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது சட்டமன்றத்தில் அளிக்கப்படும்.

12. இந்த அரசின் இடைவிடாத முயற்சியின் காரணமாக மைய அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்துப் பெருமைப்படுத்தியது மட்டுமன்றி, மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தையும் சென்னையில் அமைத்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்குவதற்கான சட்டம் இயற்றப்பட்டு, அனைவரும் தமிழ் பயில இவ்வரசு வழிவகுத்துள்ளது. தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக அறிவிக்கச் செய்யவும், சென்னை உயர் நீதிமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழையும் வழக்கு மொழியாக்கவும், இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்.





13. அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்ற இவ்வரசின் குறிக்கோளை செயல்படுத்திடும் வகையில், நமது நாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத குறைந்த விலையில், 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தமிழகத்தில் இந்த அரசால் வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இதுமட்டுமன்றி, பொதுமக்கள் பயன்படுத்தும் சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயராமல் தடுக்கும் பொருட்டு, இந்த அரசு நியாய விலைக் கடைகள்மூலமாக பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை கடந்த ஆண்டு முதல் வழங்கி வருகிறது. இந்த நடவடிக்கையின்மூலமாக நமது மாநிலத்தில் உணவுப் பொருட்களின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதானது, இந்த அரசின் பெரும் சாதனையாகும்.

14. வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த தொழில்கள்மூலமாக, விவசாயிகளின் வருவாயைப் பெருக்க இவ்வரசு முனைப்பான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. வேளாண் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் கால்நடை மற்றும் மீனளம் வாயிலாகக் கூடுதல் வருவாயை ஈட்டுதல் ஆகியவை மூலமாகவே இது சாத்தியமாகும். உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், பொதுப் பணித் துறை, வேளாண் துறை, கால்நடைத் துறை, மீனளத் துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயக் கூட்டுறவுக் கடன்கள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதன் வாயிலாக, தமிழக விவசாயிகள் மீண்டும் கடன் பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. தற்போது அதிகரித்துள்ள உற்பத்திச் செலவுகளுக்கு ஏற்ப, விவசாயிகள் சாகுபடி செய்யும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில், மத்திய அரசு அறிவித்த 100 ரூபாய் ஊக்கத் தொகையோடு சேர்த்து, மாநில அரசின் கூடுதல் ஊக்கத் தொகையாக 50 ரூபாய் வழங்கி, இந்த அரசு சன்ன ரக நெல்லுக்கான கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 825 ஆக உயர்த்தியுள்ளது.

15. மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், இந்த நிதியாண்டில் ரூபாய் 185 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் துல்லியப் பண்ணை முறை விரிவுபடுத்தப்படும். வேளாண் அலுவலர்கள் வட்டார அளவில் விவசாயிகளுக்கு சிறந்த முறையில் விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், வேளாண்மைத் துறை சீரமைக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை மற்றும்

[2008 ஜனவரி 24

நுண்ணீர்ப் பாசனம் ஆகியவற்றிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டு முனைப்போடு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

16. தரிசு நிலங்களைப் பண்படுத்தி, அவற்றை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவசமாக அளிக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 1 இலட்சத்து 38 ஆயிரம் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 61 ஆயிரம் ஏக்கர் நிலத்தை இந்த அரசு இலவசமாக வழங்கியுள்ளது. மேலும், குடியிருக்க இடமற்ற ஏழை, எளியவர்களுக்கு 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அதன்படியே 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசுப் புறம்போக்கு நிலங்களில் பத்து ஆண்டுகளாக வீடுகள் கட்டிக் குடியிருப்போருக்குப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தளர்த்தி, வருமான வரம்பையும் விலக்கி, ஐந்தாண்டுகளுக்கு மேலாகக் குடியிருக்கும் அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா கிடைத்திட இந்த அரசு வழி வகுத்துள்ளது.

17. மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பெறப்படும் மின் சக்தியின் அளவு குறைந்ததால், நமது மாநிலத்தில் மின் விநியோகத்தில் அண்மையில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. பழுப்பு நிலக்கரித் தட்டுப்பாடு காரணமாக, நெய்வேலி மின் உற்பத்தி நிலையம் ஒப்புக்கொண்ட அளவிற்கு மின் சக்தியை அளிக்க இயலவில்லை. இதேபோன்று, கல்பாக்கம் மற்றும் கைகா அணுமின் உற்பத்தி நிலையங்களும் எரிபொருள் பற்றாக்குறையால் அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப மின் உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை உள்ளது. தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு, மத்திய மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தியை அதிகப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட துறைகளைத் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் 925 கோடி மதிப்பீட்டில் 185 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்கள் (co-generation) நிறுவப்படும். இவை 18 மாதங்களுக்குள் இயங்கத் தொடங்கும். இது தவிர, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் உற்பத்தித் திறனை அதிகரிக்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வட சென்னை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூடுதல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கான ஆயத்தப் பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்டு வருகிறது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மைய அரசு தமிழ்நாட்டிற்கு



2008 ஜனவரி 24]

மத்தியத் தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சாரத்தை ஒதுக்கீடு செய்து வழங்கி வருகிறது.

18. நமது மாநிலத்தில் அனைவருக்கும் ஐந்து வருட ஆரம்பக் கல்வி கிடைக்க வேண்டும் என்ற குறிக்கோளை வெற்றிகரமாக எய்தியுள்ள இந்த அரசு, சிறார் ஒவ்வொருவரும் பத்து வருடம் பள்ளிக் கல்வி பயிலும் வகையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி கிடைக்கச் செய்வதை புதிய இலக்காக நிர்ணயிக்கும். பதினொன்றாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இதற்காக மத்திய அரசு அறிவித்துள்ள புதிய திட்டம் வெற்றி பெற இந்த அரசு பேராதரவு தரும்.

19. தமிழ்நாட்டில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளில், கடந்த தி.மு.கழக ஆட்சிக் காலத்தின் போதுதான், 1999–2000 ஆம் ஆண்டில் கணினிப் பாடம் அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில், மாநிலத்தில் உள்ள 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் 1,525 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. வரும் நிதியாண்டில், எஞ்சியுள்ள 100 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 606 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்படும். மேலும், பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள், மாநிலத்தில் உள்ள 6,650 அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நடுநிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் அளிக்கப்பட இந்த அரசு ஆவன செய்யும். இதுமட்டுமன்றி, தமிழ்வழிக் கல்வியில் பயின்று 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 1,000 மாணவ மாணவியருக்கு ஊக்கப் பரிசாக கணினிகள் அளிப்பதற்கான திட்டம் ஒன்றையும் இந்த அரசு செயல்படுத்தும்.

20. கோயம்புத்தூரில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனம் (IIM) ஒன்றையும், மதுரையில் இந்தியத் தொழில்நுட்பவியல் நிறுவனம் (IIT) ஒன்றையும், திருச்சியில் இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (IISER) ஒன்றையும் அமைக்குமாறு, மத்திய அரசைத் தமிழக அரசு கோரியுள்ளது. தமிழ்நாட்டில் தற்போது ஒரு மத்தியப் பல்கலைக்கழகம்கூட இல்லாத குறையை நீக்க, மாநிலத்தில் மத்தியப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்குமாறும் மத்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் இது குறித்து சந்தித்துப் பேசியுள்ளார்கள். முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோள் குறித்து நம்பிக்கையூட்டும் வகையில் மத்திய அமைச்சர் அவர்கள்

உறுதியளித்துள்ளார்கள். இந்த மத்தியப் பல்கலைக்கழகம் திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்படும்.

21. அரசு மருத்துவமனைகளில் மட்டுமே சாமானிய மக்கள் மருத்துவ சிகிச்சை பெற இயலும். இதை மனதில் கொண்டு, அரசு மருத்துவமனைகளில் தேவையான பணியாளர்களும் அனைத்து வசதிகளும் கிடைக்கச் செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில், அரசு மருத்துவமனைகளில் காலியாக இருந்த பணியிடங்களில் 2,167 மருத்துவர்கள் மற்றும் 2,341 செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதோடு, 468 புதிய மருத்துவப் பணியிடங்களும் 1,059 புதிய செவிலியர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டு வருகின்றன. கிராமப்புரத்தில் உள்ள மகளிருக்கு 24 மணி நேரமும் மகப்பேறு சிகிச்சைக்கான வசதி கிடைக்கும் வகையில், 1,000 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் மூன்று செவிலியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதுமட்டுமன்றி, ரூபாய் 597 கோடி மதிப்பீட்டிலான உலக வங்கி உதவியுடன்கூடிய தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து வட்ட மற்றும் மாவட்ட மருத்துவமனைகளின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு நமது மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதற்குச் சான்றாக, தனியார் மருத்துவமனைகளில் நடைபெறும் பிள்ளைப்பேறுகளின் எண்ணிக்கை குறைந்து, அரசு மருத்துவமனைகளில் பிள்ளைப்பேறுகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் இதுவரை நடத்தப்பட்டுள்ள 4,872 முகாம்களில் 51 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

22. இந்த அரசு பொறுப்பேற்ற பின், மோட்டரோலா, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், ரெனோ–நிஸ்ஸான் போன்ற பல பெரும் தொழில் நிறுவனங்களுடன் ரூபாய் 15,083 கோடி மதிப்பீட்டிலான 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அவற்றில் நான்கு தொழிற்சாலைகள் செயல்படத் தொடங்கியுள்ளன. இதனால் 1,37,140 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

23. தொழில் முனைவோர்க்கு ஊக்கம் அளிக்கும் பல சலுகைகளோடு, அண்மையில் இந்த அரசால் வெளியிடப்பட்டுள்ள புதிய தொழில் கொள்கை, தொழில் முனைவோரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்தொழில் கொள்கையின்மூலம், வரும்





நான்கு ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்தம் சுமார் 20 இலட்சம் பேர் வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

24. ரூபாய் 4,000 கோடி மதிப்பீட்டில், ஹூண்டாய் கார்த் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 6 இலட்சத்து 30 ஆயிரம் கார்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு விரிவாக்கப்பட்டு வருகிறது. மேலும், ரூபாய் 1,800 கோடி மதிப்பீட்டில் போர்டு கார்த் தொழிற்சாலை ஆண்டொன்றுக்குக் கூடுதலாக இரண்டு இலட்சம் கார்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு விரிவாக்கம் செய்யப்படவுள்ளது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே அமைந்துள்ள இவ்விரு தொழிற்சாலைகளும், தங்களது பெரும் விரிவாக்கத்தையும் நமது மாநிலத்திலேயே மேற்கொள்வதானது, இந்த அரசின் தொழிற் கொள்கைக்கு கிடைத்த நற்சான்றிதழாகும்.

25. கடந்த வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது போன்று, சென்னையை அடுத்துள்ள எண்ணூரில் ரூபாய் 3,068 கோடி முதலீட்டில் லார்சன் அண்டு ட்யூப்ரோ நிறுவனம் கப்பல் கட்டும் தளம் ஒன்றினை அமைக்கும். இதன்மூலமாக சுமார் பத்தாயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். கடலூர் மாவட்டத்தில், இன்னொரு கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

26. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் சிறு தொழில் துறையின் முக்கியப் பங்கினை நன்கு உணர்ந்துள்ள இந்த அரசு, சிறு தொழில்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்து ஊக்கப்படுத்த, அதற்கான தனிக் கொள்கையை விரைவில் வெளியிடும். இக்கொள்கையில் வேளாண் சார்ந்த தொழில்களுக்கு சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும். இத்தகைய முயற்சியின் காரணமாக சிறு தொழில்கள் அதிக அளவில் தொடங்கப்பட்டு சுமார் 10 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

27. திமுக தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறே, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாதோர் அனைவருக்கும் அவற்றை வழங்கும் திட்டம் இவ்வரசால் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 24,58,411 பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாவது கட்டமாக, 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கான ஆணைகள் அளிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஒப்பந்தப்புள்ளி வாயிலாக சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் ஒப்புதல் பெற்று, ஒளிவு மறைவற்ற முறையில் கொள்முதல் செய்யப்பட்டு, எவ்விதப் பாகுபாடுமின்றி

[2008 ஜனவரி 24

மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்கள்மூலமாக, ஏழை எளிய குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டு வருவது அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, இந்தியாவிலேயே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து வீடுகளிலும் உள்ள ஒரே மாநிலம் தமிழகம்தான் என்ற சாதனையை விரைவில் எட்டுவோம்.

*28.* சென்னை மாநகர்ப் பகுதி தொடர்ந்து வேகமாக வளர்ந்து வருகின்றது. இப்பகுதியின் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு உடனடியான மற்றும் நிலையான தீர்வுகள் தேவைப்படுகின்றன. இந்த முக்கியப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு, ரூபாய் 9,757 கோடி செலவில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு முனைந்துள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை டெல்லி மெட்ரோ இரயில் கழகத்தால் தயாரிக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவி பெறுவதற்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

*29.* சென்னைத் துறைமுகத்திற்கான சாலை இணைப்பை மேம்படுத்துவதற்காக, ரூபாய் 1,468 கோடி மதிப்பீட்டில் மதுரவாயலிலிருந்து சென்னைத் துறைமுகத்திற்கு, உயர்த்தப்பட்ட வேக வழித்தடம் (Elevated Express Way) ஒன்றை அமைக்க மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதற்கான ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநகரத்திற்குள் போக்குவரத்து நெரிசலைப் போக்கும் வகையில், வெளிநாடுகளில் பல நகரங்களில் உள்ளது போல மாநகரின் முக்கியச் சாலைகளை இணைக்கும் அதிவேக வட்டச் சாலை (Circular High Speed Transportation Corridor) ஒன்றை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

*30.* நமது நாட்டிலேயே மிக அதிகமாக நகரமயமாக்கப்பட்ட (most urbanised) மாநிலம் தமிழ்நாடாகும். எனவே, நகரங்களில் சாலைகள், குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டால் மட்டுமே, மாநிலத்தின் பெரும் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும். இந்த நோக்கோடு, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ், முன்னர் எப்போதும் இருந்திராத வகையில், சுமார் ரூபாய் 6,700 கோடி அளவில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் முடுக்கி விடப்படும்.



2008 ஜனவரி 24]

*31.* குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்கள் மற்றும் நடுத்தர வகுப்பினர் ஆகியோருக்கு, நகர்ப்புரப் பகுதிகளில் வீட்டு வசதி அளிப்பதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும். பல்வேறு நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டங்களின்கீழ், மாநிலத்தில் உள்ள நகரங்களில் ஒரு இலட்சம் புதிய வீடுகள் கட்டப்படவுள்ளன. மாநகராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களின் வீட்டு வசதித் தேவையைக் கருத்தில் கொண்டு, பொதுத் துறை – தனியார் துறை கூட்டு முயற்சியின் வாயிலாக மாநகராட்சிகளுக்கு அருகில் உள்ள பகுதிகளில் வீட்டு வசதித் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதுமட்டுமன்றி, வீட்டு வசதித் திட்டங்களில் குறிப்பிட்ட ஒரு பகுதியை குறைந்த வருவாயுடைய மக்களுக்காக ஒதுக்கவேண்டும் என்ற நிபந்தனையின்படி திட்டங்களைச் செயல்படுத்தும் கட்டட அமைப்பாளர்களுக்கு, அதிக தரைப் பரப்புக் குறியீட்டளவிற்கு (FSI) இந்த அரசு அனுமதியளிக்கும்.

*32.* நிலத்தடி நீரில் ஃப்ளோரைடு அதிகம் உள்ள தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமே நிரந்தரத் தீர்வாகும். இந்த அரசின் தீவிர முயற்சியால், இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதி உதவிக்காக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டம் குறித்து, அந்த வங்கியின் ஆய்வுக் குழு அம்மாவட்டங்களுக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டது. விரைவில் நடைபெற உள்ள இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் இத்திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்படும்.

*33.* நமது மாநிலத்தில் விமானப் பயணம் மிக வேகமாக அதிகரித்து வருகிறது. எனவே, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்களில் தற்போதுள்ள விமான நிலையங்களை விரிவாக்கி மேம்படுத்துவதோடு, வேலூர் மற்றும் சேலத்தில் புதிய விமான நிலையங்களை நிறுவ வேண்டியது மிக்க அவசியமாகிறது. இந்த விமான நிலையங்களுக்கு உயர் முன்னுரிமை வழங்குமாறு மத்திய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

*34.* தென் மாவட்டங்களில் வாழும் மக்களுக்கு, சென்னை – மதுரை இரயில் பாதையே மிக முக்கியமான போக்குவரத்து இணைப்பாகும். விழுப்புரம் – திண்டுக்கல் இடையிலான அகலப்பாதையை இரு வழித்தடமாக மாற்றினால் மட்டுமே தென் மாவட்டங்களுக்குக் கூடுதல் இரயில்களை இயக்க முடியும். எனவே, தென் மாவட்ட மக்களின் நலன் கருதியும், இம்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கு வழிகோலும் வகையிலும் இந்த இருவழித்தடத் திட்டத்திற்கு உடனடியாக ஒப்புதல்

[2008 ஜனவரி 24

அளிக்குமாறு மத்திய அரசையும் மத்தியத் திட்டக் குழுவையும் இந்த அரசு வலியுறுத்துகிறது.

35. மத்திய அரசின் மிகப் பெரும் சாதனைத் திட்டமான தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தமிழகத்தில் தற்போது 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் இத்திட்டத்தின் செயல்பாட்டை சமூக ஆய்வு வாயிலாக ஆய்ந்துவரும் குழுவினர், தமிழகத்தில் இத்திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதாகவும், இத்திட்டத்தின்கீழ் பணிபுரிவோருக்கு நாளொன்றுக்கு எண்பது ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டு வருவதாகவும், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் தமிழகத்தில் இத்திட்டத்தின்கீழ் பெண்களே 82 சதவீதம் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுப் பாராட்டியுள்ளனர். இத்திட்டத்தை, மத்திய அரசு நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளதையொட்டி, தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வரும் நிதியாண்டுமுதல் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படும்.

36. ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் மாசுபடா வண்ணம் தடுக்க, கழிவுநீரை முற்றிலும் மாசற்றதாக சுத்திகரிக்கும் (Zero Discharge) பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மத்திய அரசு நிதியுதவி வழங்க வேண்டும் என்று தோல் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இவற்றுக்கான நிதியுதவியை விரைவில் வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம். மாநில அரசும் உரிய நிதி உதவியை இத்திட்டத்திற்கு அளிக்கும்.

37. தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சியே அப்பகுதியில் சமுதாயப் பூசல்கள் எழாமல் இருக்க உதவும் என்ற அடிப்படையில், இம்மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்கான பல முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதாரப் பகுதி அமைப்பதற்கு குறுக்கிட்ட தடைகள் நீக்கப்பட்டுள்ள நிலையில், 2,500 ஏக்கர் பரப்பளவில் பல்தொழில் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்று விரைவில் அமைக்கப்படும். இதைப் போன்றே, கங்கைகொண்டானில் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை ஏற்படுத்தவும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கவும் எல்காட் நிறுவனம் நடவடிக்கை எடுத்துவருகிறது. அண்மையில், கங்கைகொண்டான் மற்றும் மதுரையில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு நிலம்



2008 ஜனவரி 24]

ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் உள்ள படித்த வேலையற்ற இளைஞர்கள் பெருமளவில் வேலைவாய்ப்புப் பெறவும், இப்பகுதிகள் பொருளாதார வளர்ச்சி அடையவும் இந்த நடவடிக்கைகள் பெரிதும் உதவும் என நம்புகிறேன்.

38. நமது சமுதாயத்தில் பெண்கள் தமது முழு உரிமைகளைப் பெறவும், உரிய பங்கினை ஆற்றவும் இந்த அரசு எப்பொழுதுமே உறுதுணையாக இருந்துள்ளது. பெண்களுக்கு சமச் சொத்துரிமையையும், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் இட ஒதுக்கீட்டையும் வழங்கி பெண்ணுரிமை காத்தது இந்த அரசுதான் என்பதை அனைவரும் அறிவர். இந்த வகையில், சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வழிவகுக்கும் சட்டத்தை, திருமதி சோனியா காந்தி அவர்களின் சீரிய வழிகாட்டுதலுடன், மாண்புமிகு பிரதமர் திரு. மன்மோகன்சிங் அவர்கள் தலைமையில் நடைபெறும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு விரைவில் நிறைவேற்றிடும் என நம்புகிறோம்.

39. ஏழைத் தாய்மார்கள் கருவுற்றிருக்கும் காலத்தில், வேலைக்கு செல்ல இயலாததால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்யும் வகையிலும், அவர்களுக்கு ஊட்டச் சத்து நிறைந்த உணவு கிடைக்கச் செய்யும் வகையிலும், மகப்பேறு உதவியாக ரூபாய் 6,000 வழங்கும் மகப்பேறு உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி, தமிழகம் நாட்டுக்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருவது குறித்து இந்த அரசு பெருமிதம் கொள்கிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 300 கோடி அளவில் 5 இலட்சம் மகளிர் உதவி பெற்றுள்ளனர். மேலும், குழந்தைகளிடையே நிலவும் சத்துப் பற்றாக்குறையை நீக்கும் நோக்கத்தோடு, 2-லிருந்து 15 வயதிற்கு உட்பட்ட சுமார் 70 இலட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் வாரந்தோறும் 3 முட்டைகள் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னோடித் திட்டங்களை மத்திய அரசுத் திட்டங்களாக அறிவித்து, தேசிய அளவில் அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்திட வேண்டும் என்று மைய அரசை இந்த அரசு கேட்டுக் கொள்கிறது.

40. 1989 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் இந்த அரசால் தொடங்கப் பெற்ற சுய உதவிக் குழுத் திட்டம், இன்று நமது மாநிலத்தில் உள்ள மகளிருக்கு சமூகப் பொருளாதாரச் சுதந்திரம் அளிக்கும் மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. இதுவரை கிராமப் பகுதிகளில் மட்டுமே அளிக்கப்பட்டு வந்த சுழல் நிதி உதவியை,

முதன் முறையாக மாநிலத்தின் நகரப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த அரசு வழங்கத் தொடங்கியுள்ளது. தற்போது மாநிலத்தில் சுமார் 58 இலட்சம் உறுப்பினர்களைக் கொண்ட மூன்று இலட்சத்து அறுபதாயிரம் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் ரூபாய் 1,639 கோடி சேமித்துள்ளதோடு மட்டுமன்றி, ரூபாய் 2,566 கோடி வங்கிகளிடமிருந்து கடனுதவி பெற்றுள்ளன.

41. வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இதுவரை 3,53,418 இளைஞர்கள் பயன்பெற்றுள்ளனர். இவர்களுடைய திறனை மேம்படுத்தினால் மட்டுமே இவர்களால் வேலைவாய்ப்புகளைப் பெற இயலும் என்பதை உணர்ந்து, இந்த இளைஞர்களுக்கான பல்வேறு பயிற்சித் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும், பொது அறிவு, கணினி அறிவு, ஆங்கிலத்தில் நன்றாகப் பேசும் திறன் மற்றும் நேர்முகத் தேர்வுகளில் பங்கேற்கும் திறன் ஆகியவற்றை இளைஞர்கள் பெற இந்த அரசு ஆவன செய்யும். பயிற்சி பெற்ற கனரக வாகன ஓட்டுநர்கள் அதிக அளவில் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெருமளவில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்தும்.

42. தி.மு.க தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், 2006-2007ஆம் ஆண்டில் முதியோர், ஆதரவற்றோர் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு அளிக்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 400 ஆக இந்த அரசு உயர்த்தியது. தற்போது, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் அளிக்கும் இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தை மத்திய அரசு தொடங்கியுள்ளது. மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையாரின் பிறந்த நாளான 19-11-2007 அன்று இந்தத் திட்டம் நமது மாநிலத்தில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக, ஆண் வாரிசுகளின் ஆதரவுள்ளவர்கள், இல்லாதவர்கள் என்ற பாகுபாடின்றி, 65 வயதுக்கு மேற்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள சுமார் 10 இலட்சம் முதியோர்கள் பயன் அடைவார்கள்.

43. ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 400 ஆகவும், கடும் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும்





உதவித் தொகையை ரூபாய் 200-லிருந்து ரூபாய் 500 ஆகவும் இந்த அரசு கடந்த ஆண்டு உயர்த்தியுள்ளது. தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ளக்கூட இயலாத மன வளர்ச்சி குன்றியோருக்கு, முன் எப்போதும் இல்லாத வகையில், வருமான வரம்பு மற்றும் எண்ணிக்கை வரையறையின்றி, மாதாந்திர உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்க இந்த அரசு ஆணையிட்டது. இதன் அடிப்படையில், இதுவரை 30,000 பேருக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளதோடு, இவர்களுக்கு சிறப்புக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வசதிகளும் கிடைத்திட இந்த அரசு ஆவன செய்துள்ளது.

44. ஒரு வகையில் ஊனமுற்றோர் என்றே கருதப்பட்டு, சமுதாயத்தின் ஓரத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலனில் எப்பொழுதுமே இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. சமூக அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்வதைக் கருத்தில் கொண்டு, குடும்ப அட்டைகளை வழங்குதல், அரசு மருத்துவமனைகளில் இலவச அறுவை சிகிச்சை அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவர்களின்மீது இந்த அரசு கொண்டுள்ள பரிவின் காரணமாக இவர்களுக்கென புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

45. நமது மாநிலத்தில், ஏன் நமது நாட்டிலேயே, எங்கும் முன்னர் எப்போதும் வழங்கப்படாத அளவில், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்க்குலத்திற்கு திருமணம் மற்றும் மகப்பேறு உதவிகளை இந்த அரசு வழங்கி வருகிறது. இந்த உதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கும்போது, அதில் குறுக்கே புகுந்து ஆதாயம் தேடும் நோக்கத்தோடு, சில இடைத்தரகர்களும் அலுவலர்களும் தவறான செயல்களில் ஈடுபட இந்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது. இத்தகைய சுயவர்கள்மீது அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

46. அமைப்பு சாராத் தொழிலாளர்களின் நலனுக்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வந்துள்ளது. 1996-2001 ஆண்டு காலத்தில், இந்த அரசுதான் அமைப்பு சாராத் தொழிலாளர் நல வாரியங்களை அமைத்து நலத் திட்ட உதவிகளை வழங்கியது. இடையில் கலைக்கப்பட்ட இந்த வாரியங்களை இந்த அரசு மீண்டும் அமைத்துள்ளது. இந்த வாரியங்களின்மூலமாக கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில், 2,20,843 அமைப்பு சாராத் தொழிலாளர்கள் சுமார் ரூபாய் 56 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளைப் பெற்றுள்ளனர்.

[2008 ஜனவரி 24

47. நாட்டுப்புறக் கலைஞர்களின் (Folk Artists) சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக தனி நல வாரியம் ஒன்றை இந்த அரசு அமைத்துள்ளது. நமது தொன்மையான கலைகளை வாழவைக்கும் அரும்பணியாக; நாட்டுப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களின் ஆர்வத்திற்கு ஆதரவு நல்கிடும் வகையிலும், சென்னையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழ் மையம்—'சென்னை சங்கமம்' கலைவிழா, மாநகர் முழுவதும் வெற்றிகரமாகவும், மக்களின் பேராதரவுடனும் நடைபெற்றதையொட்டி; வரும் ஆண்டுகளிலும் படிப்படியாக தமிழகம் முழுவதும் இவ்விழாவை நடத்துவதற்கு இந்த அரசு ஒத்துழைப்பு வழங்கும்.

48. தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிவோரின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளில் வேகமாக உயர்ந்துள்ளது. இவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநில அளவிலான உயர் நிலை ஆலோசனைக் குழு ஒன்றை இந்த அரசு அமைக்கும்.

49. இலங்கைத் தமிழர்கள் சந்தித்துவரும் இன்னல்கள் தொடர்வதைக் கருத்தில் கொண்டு, பல ஆண்டுகளாக நிலவிவரும் இந்தப் பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்த அரசு மைய அரசைக் கேட்டுக்கொள்கிறது.

50. நெசவாளர்களின் நலன் காக்கும் வகையில், அவர்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தியும், இலவச மின்சாரம் அளித்தும் பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ரூபாய் 256 கோடி செலவில், மாநிலத்தில் உள்ள 3 கோடியே 28 இலட்சம் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் அளிக்கும் திட்டம், நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

51. என்றும் மீனவர் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்து, அவர்களுக்கென தனி நல வாரியம் அமைத்துள்ளதோடு, கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது காணாமல் போகும் மீனவர்களுடைய குடும்பங்களுக்கு உதவுவதற்கான திட்டம் ஒன்றையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது அவர்களுக்கு ஏற்பட்டுவரும் இன்னல்களைக் களையத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து எடுக்கும்.



2008 ஜனவரி 24]

52. துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் மனிதக் கழிவை எடுத்துச் செல்லும் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இந்த அரசு உறுதுணையாக இருக்கும். இந்த நோக்குடனேயே, இவர்களின் நலனுக்காக தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள உதவவும் தேவையான திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

53. அருந்ததியர் வகுப்பினர் சமூகப் பொருளாதார நிலையில் அடித்தளத்தில் இருப்பதால், அவர்தம் முன்னேற்றத்திற்குச் சிறப்புச் சலுகைகள் அளிப்பது அவசியம் எனக் கருதி, தற்போது ஆதி திராவிடருக்கு வழங்கப்பட்டு வரும் இடஒதுக்கீட்டில் இவர்களுக்குத் தனி உள்ஒதுக்கீடு வழங்குவது பற்றி, அனைத்துக் கட்சிகளையும் கலந்தாலோசித்து முடிவு செய்ய இந்த அரசு கருதியுள்ளது.

54. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் சமூகப் பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைவதற்கு, இப்பிரிவுகளைச் சேர்ந்தோர் அனைத்துத் துறைகளிலும் உயர் வேலைவாய்ப்புகளைப் பெறுவது அவசியம் என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதனையொட்டி, தற்போது மாநிலத்தில் பெருமளவில் உருவாகிவரும் வேலைவாய்ப்புகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் பெறும் வகையில், 2007-2008 ஆம் ஆண்டிற்கான சிறப்பு மாநில உதவி ரூபாய் 25 கோடி தொகையையும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்கே இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

55. கல்வி அறிவிலும், சமுதாய முன்னேற்றத்திலும் சிறுபான்மையினர் பின்தங்கியுள்ள நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இடஒதுக்கீடு கிடைத்திட இந்த அரசு வழி வகுத்துள்ளது. மேலும், அவர்களது முன்னேற்றத்தில் தனிக் கவனம் செலுத்துவதற்காக இந்த அரசு ஒரு தனி இயக்குநரகத்தையும் அமைத்துள்ளது.

56. இந்த அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அனைத்தும் எப்போதும் சமூக நீதி என்ற குறிக்கோளை மையப்படுத்தியே செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. நீதிக் கட்சியின் வழிவந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, சமூக நீதியை நிலைநாட்டுவதில் இந்த நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வந்துள்ளதை அனைவரும் அறிவர். இந்த வகையில், மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும்

[2008 ஜனவரி 24

தனியார் துறை வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும்.

57. தந்தை பெரியார் சிலை ஒன்றினை 95 அடி உயரத்தில் அமைக்க வேண்டும் என்ற திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், திரு. கி.வீரமணி அவர்களின் வேண்டுகோளினை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுள்ள நிலையில்; ஓரிடத்தில் சிலை அமைப்பதைக் காட்டிலும், பெரியார் பெயரால் மேலும் 95 சமத்துவப்புரங்களை அமைத்து; அனைத்து சமூகத்தினரும் சகோதர பாசத்துடன் ஒருமித்து வாழ்கின்ற அந்த ஒவ்வொரு சமத்துவபுர குடியிருப்பு முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையை அமைப்பதால், அவருடைய தலையாய கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரவுவதற்கு வழி ஏற்படும் என்பதற்காக அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே இவ்வரசு அமைத்துள்ள 145 சமத்துவபுரங்களுடன் சேர்த்து, இப்பணி முடிவுற்றபின் பெரியார் சிலையுடன்கூடிய 240 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமையும்.

58. பெரும்புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில், ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921 ஆம் ஆண்டு சென்னை-பச்சையப்பன் கல்லூரியில் ஒன்றுகூடி, தமிழர்களுக்கென்று ஒரு 'தனி ஆண்டு' தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே 'தமிழ் ஆண்டு' எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை, முப்பத்தியேழு ஆண்டுகளுக்கு முன்பே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார். திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடிவரும் தமிழ்நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி,



2008 ஜனவரி 24]

வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும் ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர்.

59. இந்த அரசின் கொள்கைகள், செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவற்றை உங்கள் முன் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். இன்று தமிழகம் கண்டுவரும் ஒப்பற்ற வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையச் செய்யவும், நலிவுற்றோர் நலம் பேணவும், ஜனநாயக ஒளி பரவிடவும், மத நல்லிணக்கம் வலுப்பெறவும், சமூக நீதியை நிலைநாட்டவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. இவை யாவும் செவ்வனே நிறைவேற, நீங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பை நல்குவீர்கள் என்ற எதிர்பார்ப்புடன் என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம், ஜெய்ஹிந்த்.

D 31'P08
V 211, P08.39.1
228094